# INDEX TO TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

FIFTY-NINTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLXXV (Nos. 1 to 6)

2nd, 5th to 7th, 9th and 10th March 1981.

©
GOVERNMENT OF TAMIL NADU
1982

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009.

PRICE Rupee : 1

122087

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

## FIFTY-NINTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA

2nd, 5th to 7th, 9th and 10th March 1981

VOLUME CLXXV (Nos. 1 to 6)

PAGES.

## TABLE OF CONTENTS

*Monday, the 2nd March 1981*


Personnel of the Government of Tamil Nadu ... ... i—v

Principal Officers of the Tamil Nadu Legislative Council ... vi

List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... vii—ix

1. Questions and Answers ... ... ... 1—16
2. Information re non-attendance of an elected Member in the House since his election ... 16—17
3. Announcement re Message from the Assembly ... 17—18
4. Call Attention Notices—
   (1) Hardship of students who failed in S.S.L.C. Examination held in October 1980 under XI-Year School Education Scheme (1969) in completing the course and prosecuting their further studies ... 18—20
   (2) Mass rally and fast undertaken by Tamil Nadu Agriculture Department staff pressing their 7-point Demand ... 20—22
5. Government Motion—
   Change in the order of business ... ... 22, 23
6. Government Bills—
   (1) The Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Bill, 1981 (L.A. Bill No. 9 of 1981) ... 23—33

PAGES.

*Monday, the 2nd March 1981—cont.*

6. Government Bills—*cont*.

(2) The Tamil Nadu Agricultural Produce Markets (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 17 of 1981) ... ... ... ... 33—40

(3) The Tamil Nadu Tax on Luxuries in Hotels and Lodging Houses Bill, 1981 (L.A. Bill No. 4 of 1981) ... ... ... ... 41—60

(4) The Tamil Nadu Sales Tax Laws (Amendment and Repeal) Bill, 1981 (L.A. Bill No. 1 of 1981) ... ... ... ... 60—76

7. Papers laid on the table of the House ... ... 77

*Thursday, the 5th March 1981*

1. Obituary reference *re* demise of Thiru S. C. Sengottu Velappan, former Member of the Council 101

2. Questions and Answers ... ... 102—115

3. Privilege issue *re* Orders of the Superintendent of Police, Special Branch, C.I.D. directing his subordinates to collect news about proceedings of the Legislature ... ... ... ... 116—118

4. Announcement re adjournment motion ... 118

5. Call Attention Notices—

(1) Hardship caused to Middle School teachers by shifting of Eighth Standard from Middle Schools to High Schools as per the steps taken by the Director of School Education ... ... ... 118—123

(2) Scarcity of protected drinking water in Vellore, North Arcot District and consequent hardship to the citizens ... ... ... ... ... 123—125

6. Government Resolution *re*—

Discussion on the Statement on Adverse Seasonal Conditions prevailing in Tamil Nadu ... ... 125—191

7. Papers laid on the table of the House ... ... 192



PAGES.

*Friday, the 6th March 1981*

1. Questions and Answers ... ... ... 213—229

2. Adjournment motion *re* spread of polio disease in Madras City ... ... ... ... 229—233

3. Announcements—

(1) Message from the Assembly ... ... ... 233

(2) Change in the order of business ... ... 238

4. Calling attention to non-payment of subsistence allowance to teaching and non-teaching staff under suspension in schools for many years under Act, 29 of 1973 ... ... 231—238

5. Government Bills—

(1) The Tamil Nadu Revenue Recovery (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 5 of 1981) 239—249

(2) The Registration (Tamil Nadu Amendment) Bill, 1981 (L.A. Bill No. 10 of 1981) ... 249—281

(3) The Tamil Nadu Cattle Disease (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 14 of 1981) ... 281—289

6. Papers laid on the table of the House ... ... 289

*Saturday, the 7th March 1981*

1. Questions and Answers ... ... ... 297—314

2. Adjournment motion re strike by students of Dr. Ambedkar Government Arts College pressing their 18-point Demand ... ... ... 314—318

3. Information *re*—

(1) Adjournment Motion ... ... 318—319

(2) Questions and Answers ... ... 319—320

4. Call Attention Notices—

(1) Teachers' agitation condemning removal of Thiru P. T. Arasu, a teacher in T. Nagar Higher Secondary School, Madras ... ... 320—323

(2) Shifting of Bharat Scouts Organisation from Wenlock Park, South Beach Road, Madras to some other place ... ... ... ... 324—325

PAGES.

*Saturday, the 7th March—1981—cont.*

5. Private Member's Resolution—
(1) Taking over of all Schools and Colleges by Government ... ... ... 325—353
(2) Celebration of Silver Jubilee at the end of 25th year of formation of Tamil Nadu as a separate State ... ... ... ... ... 353—357
(3) Co-operative Bank for Government servants and teachers in Panchayat Unions ... ... 358
(4) Voting rights of Primary School Teachers in elections to Legislative Council ... ... 358—377
6. Papers laid on the table of the House ... 377—378

*Monday, the 9th March 1981.*

1. Questions and Answers ... ... ... ... 381—392
2. Adjournment Motions—
(1) Fast of Workers in S. S. M. Processing Unit, Kumarapalayam, Salem District ... ... 393—395
(2) Non-supply of sufficient water and food to D. M. K. Prisoners in Tiruchirappalli Jail ...397—403
3. Announcements—
(1) Message from the Assembly ... ... 395—397
(2) Arrest and remand of Thiru R. D. Seethapathy M. L. C. ... ... ... ... ... 397
4. Call Attention Notices—
(1) Reported shortage of paddy and rice in large quantities from godowns of Chengalpattu district and action taken thereon ... ... 404—406
(2) Stoppage of Expensive Locality Allowance to Government servants and teachers in Mandapam Camp and Rameswaram, Ramanathapuram District ... ... ... ... 407—410
5. Statement under Rule 82 of the Council Rules *re* regulation of power consumption in respect of certain H. T. Industries ... ... ... 401—412



PAGES.

*Monday, the 9th March 1981—cont.*

6. Government Bills—
(1) The Tamil Nadu State Housing Board (Amendment) Bill, 1981 (L. A. Bill No. 15 of 1981) ... ... ... ... 412—425
(2) The Tamil Nadu Apartment Ownership Bill, 1981 (L. A. Bill No. 20 of 1981) ... ... 425—426
(3) The Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Amendment Bill, 1981 (L. A. Bill No. 23 of 1981) ... ... 427—464
(4) The Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1981 (L. A. Bill No. 24 of 1981) ... 464—467
(5) The Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1981 (L. A. Bill No. 25 of 1981) ... ... 467—469
(6) The Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1981 (L A. Bill No. 26 of 1981) ... 469—470
(7) The Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Amendment Bill, 1981 (L. A. Bill No. 27 of 1981) ... ... 471—472
(8) The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1981 (L. A. Bill No. 28 of 1981) ... ... ... ... 472—475
7. Papers laid on the table of the House ... ... 476

*Tuesday, the 10th March 1981*

1. Questions and Answers ... ... 493—512
2. Adjournment motion *re* death of 15 members of a marriage party of Pandamangalam near Paramathi—Velur, Salem District due to capsize of boat ... 513—515
3. Announcement *re* Message from the Assembly ... 515
4. Call Attention Notices—
(1) Mosquito nuisance in Cuddalore, South Arcot District ... ... ... 516—518

PAGES.

*Tuesday, the 10th March 1981—cont.*

(2) Hardship caused to agriculturists due to withering of crops in the lands situated in tail-end lands on account of paucity of water in dams in the Kanyakumari District ... ... 518—519

5. Government Bills—

(1) The Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1981 (L. A. Bill No. 2 of 1981) ... 519—524

(2) The Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Amendment Bill, 1981 (L. A. Bill No. 6 of 1981) ... ... ... 524—537

(3) The Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants Arrears of Rent (Relief) Amendment Bill, 1981 (L. A. Bill No. 7 of 1981) ... ... ... ... 537—538

(4) The Tamil Nadu Payment of Subsistence Allowance Bill, 1981 (L. A. Bill No. 12 of 1981) ... ... ... ... 538—557

6. Papers laid on the table of the House ... ... 559—602

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

Thiru SADIQ ALI.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption and Planning.

2. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. THIRU S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control.

4. THIRU K. A. KRISHNASWAMY, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registratin.

5. THIRU S. D. SOMASUNDARAM, Minister for Revenue, in charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. THIRU R. M. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona and Grant of Liquor Permits.

7. THIRU C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education including Technical Education and Official Language.

8. THIRU K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. THIRU C. PONNAIYAN, Minister for Co-operation and Law, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. THIRU P. U. KULANDAIVELU, Minister for Local Administration, in charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. THIRU S. RAGHAVANANDAM, Minister for Labour, in charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. DR. H. V. HANDE, Minister for Health, in charge of Health.

13. THIRU K. RAJA MOHAMED, Minister for Irrigation, in charge of Agro-Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. THIRU S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. THIRU S. THIRUNAVUKKARASU, Minister for Industries, in charge of Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. THIRU S. N. RAJENDRAN, Minister for Handlooms and Khadi, in charge of Handlooms, Khadi, Prohibition excluding grant of liquor permits and passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

17. THIRU M. VIJAYASARATHI, Minister for Harijan Welfare, in charge of Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuces and Correctional Administrttion.

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## தமிழ்நாடு ஆளுநர்

திரு. சாதிக் அலி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு மற்றும் திட்டம்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—

நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

மின்சாரம், மற்றும் இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

கிராம, குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்கத் திட்டம், மற்றும் ஆவணப் பதிவுத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வருவாய், வணிக வரிகள், ஆயத்துறை, மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டுநிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்—வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் —

மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.



14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

பெருந்தொழில்கள், சுரங்கமும்-கனிவளமும் மற்றும் நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. செ. நி. இராசேந்திரன் (கைத்தறி மற்றும் கதர் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

கைத்தறி, கதர், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) மற்றும் பயண இசைவுச் சீட்டு, பொதுப் பணித்துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

அரிசன நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் —

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள் வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மாண்புமிகு மேலவைத் தலைவர்.

டாக்டர் ம.பொ. சிவஞானம்.

மேலவைத் துணைத் தலைவர்.

புலவர் புலமைப்பித்தன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.*

1. திரு. க. இராமமூர்த்தி.
2. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்.
3. திரு. க. அருணாசலம்.
4. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி.

மேலவைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்.

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்ஸி., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

தலைமை நிருபர்.

திரு. ச. சுவாமிநாதன்.

---

* 23-1-1981 அன்று அறிவிக்கப்பட்டது.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்டது) பட்டியல்.

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1 அருணாசலம், திரு. க. .. | நியமனம். |
| 2 ஆறுமுகம், திரு. சோ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3 ஆற்காடு வீராசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 ஆனந்தம், திரு. வி.வி.வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 இராகவானந்தம், திரு எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 6 இராசா முகமது, திரு. கா. (பாசனத்துறை அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 இராமமூர்த்தி, திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 8 இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 இராதா, திரு. எஸ். ஆர். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 கண்ணப்பன், திரு. காடுவெட்டி | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11 சங்கரலிங்கம், திரு. ம. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 12 சண்முகம், திரு. ப. உ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 13 சந்தோஷம், திரு. த. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 14 சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 15 சிவஞானம், டாக்டர் ம.பொ. (மாண்புமிகு தலைவர்) | நியமனம். |
| 16 சீத்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 17 சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 18 சுவாமிநாதன், திரு. ஜி. | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 19 தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 20 தாமோதரன், திரு. ஏ. ஆர். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 21 தாரா செரியன், திருமதி. | நியமனம். |
| 22 தாஸ், திரு. எ. ஜே. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 துரைசாமி, திரு. ஒ. எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 24 நல்லசிவன், திரு. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 25 நீலநாராயணன், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 26 புலமைப்பித்தன், புலவர் (துணைத் தலைவர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 28 மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 29 மியாகான், திரு. ஜே. எம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 30 மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர் — திருச்சிராப்பள்ளி பதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 31 முத்து, திரு. எஸ். .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 32 முத்துசாமி, திரு. செ. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர் நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 33 முத்தையா செட்டியார், டாக்டர் எம். ஏ. | நியமனம். |
| 34 முனுசாமி, திரு. பி. .. | நியமனம். |
| 35 லீலாவதி, செல்வி. அ. | சென்னை—செங்கல்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 36 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வடஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 37 வசந்த பை, திரு. ஜி. | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 38 வள்ளிமுத்து, திரு ஈ.வெ.ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 39 வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |



| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 40 வெங்கடேசன், ஈ. எஸ். | நியமனம். |
| 41 ஹண்டே, டாக்டர் எச். வி. (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்). | சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதி. |
| 42 ஜேப்பியார், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 43 வெற்றிடம் .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44 ஷை | ஷை |
| 45 ஷை .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 ஷை .. | ஷை |
| 47 ஷை .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத்தொகுதி. |
| 48 ஷை .. | ஷை |
| 49 ஷை .. | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 ஷை .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 ஷை .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி, |
| 52 ஷை .. | ஷை |
| 53 ஷை .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 ஷை .. | ஷை |
| 55 ஷை .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 ஷை .. | ஷை |
| 57 ஷை .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 ஷை .. | ஷை |
| 59 ஷை .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 ஷை .. | ஷை |
| 61 ஷை .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 ஷை | ஷை |
| 63 ஷை .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

---

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட தமிழ் நாடு சட்ட மன்ற மேலவையின் ஐம்பத்தி ஒன்பதாவது கூட்டத்தொடர்.

திங்கட்கிழமை, 1981 மார்ச் 2.

மாசி 19, ரௌத்திரி, 2012 திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா 103 ஒத்தி வைக்கப்படுகிறது.

அறநிலையத் துறையில் தமிழாசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு

* 104 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதி லளிக்க வேண்டுகிறேன்—

(அ) அறநிலையத் துறையில், தமிழாசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிற செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) & (இ) வருமானமுள்ள ஆலயங்களில் முதற்கட்டமாக 76 தமிழ் ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டதாரி ஆசிரியர்களுடைய மாநாட்டிலே—கும்பகோணத்திலே—3 ஆயிரம் தமிழாசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று அறிவித்தார்கள். ஆனால், 76 பேர்கள்தான் தமிழாசிரியர்களாக நியமிக்கப்பட்டிருப்பதாக இங்கே தகவல் தரப்பட்டிருக்கிறது. அவர்கள்கூட 100 ரூபாய் தான் மாத-

ஊதியமாகப் பெறுகிறார்கள். இந்த 100 ரூபாய் ஊதியம் பெறுவதற்கே அங்கே இருக்கக்கூடிய எக்ஸிக்யூட்டிவ் ஆஃபீசர்களிடத்திலே அடிமை வேலை பார்க்கும் அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தது போன்று 3,000 தமிழாசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா? அவர்களுடைய ஊதியம் உயர்த்தப்படுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 3 ஆயிரம் தமிழாசிரியர்களுக்கு அறநிலையத் துறையின் மூலம் வேலைவாய்ப்பு அளிக்க இயலுமா என்பதை அரசு பரிசீலிக்கும் என்ற அளவிலே கருத்தறிவித்தார்கள். இறுதியாகத் தெரிவிக்கவில்லை. அந்தக் கருத்து அறநிலையத் துறைக்கு அனுப்பி பரிசீலிக்கப்பட்டது. பொருளாதாரச் சூழ்நிலையையொட்டி 3 ஆயிரம் தமிழாசிரியர்களுக்கு ஊதியம் அளிக்கும் நிலையில் இல்லை என்று கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டித்தான் லட்சம் ரூபாய்க்கு அதிக வருமானம் இருக்கிற ஆலயங்களில் முதலில் இப்படிப்பட்ட தமிழாசிரியர்களைப் பணியமர்த்துகின்ற முயற்சிகளில் ஈடுபட்டு இப்போது 76 தமிழாசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 100 ரூபாயிலிருந்து 150 ரூபாய்வரையில்—அவர்கள் பகுதி நேர அலுவலர்களாக இருப்பதால், இந்தச் சம்பளம் தரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே ஆசிரியர்கள் அடிமைகளைப் போல நடத்தப்படுகிறார்கள் என்று தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருப்பதாக எங்களுக்குத் தகவல் இல்லை. இந்தக் கருத்தையொட்டி அப்படி எங்கேயாவது நடைபெறுகிறது என்று திட்டவட்டமாகக் குறிப்புகளைத் தந்தால், தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** 3 ஆயிரம் தமிழாசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்று ஆளுநர் அவர்கள் உரையின் மீது பேசியபோது நான் சொன்னதற்குக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தச் செயற்குறிப்பு இப்போது பரிசீலனையில் இருக்கிறது, பிற்காலத்திலே செயல்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அதை ஏற்று 3 ஆயிரம் தமிழாசிரியர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியளிப்பார்களா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலிலே தெரிவித்த கருத்தை இப்போது அவர்களே மாற்றிக்கொண்டதற்காக நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் இருப்பதாக இந்த அவையிலே தெரிவித்தார்கள் என்று





குறிப்பிட்டார்கள். அந்தச் செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது. எவ்வளவு பேரை நியமிக்க முடியும் என்பதுதான் அந்தப் பரிசீலனையினுடைய முடிவாக இருக்கும்.

**திரு. செ. முத்துசாமி :** தமிழை மேம்படுத்த வேண்டும், கௌரவிக்க வேண்டும் என்று தமிழுக்காக இந்த அரசு நல்லமுறையிலே உலகத் தமிழ் மாநாடு நடத்தியிருக்கிறது. அதற்காக இவ்வளவு தொகை செலவழிக்கும் நல்லெண்ணத்தில் நாம் இருக்கும்போது, 3 ஆயிரம் தமிழாசிரியர்களுக்கு வேலைவாய்ப்பளிப்போம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொள்கையாக அறிவித்ததை ஏற்று, பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லாமல், பொருளாதாரச் செலவைப் பார்க்காமல், 3 ஆயிரம் தமிழாசிரியர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் திட்டத்தைச் செயற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** பரிசீலனையிலே இருக்கிறது என்று சொல்லாமல், பொருளாதாரச் செலவைப் பார்க்காமல், இதிலே ஈடுபட வேண்டும், ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். சம்பளம், ஊதியம் கொடுக்க வேண்டுமென்று வருகிறபோது; பொருளாதாரச் செலவைப் பார்க்காமல் எப்படி முடிவெடுக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** வருவாய் உள்ள கோயில்களாகப் பார்த்து தமிழாசிரியர்களை நியமிப்பதைக் காட்டிலும், வருவாய் இல்லாத கோயில்களுக்கு தமிழாசிரியர்களை நியமிப்பதன் மூலம் ஸ்தல புராணங்களையெல்லாம் நல்ல முறையில் சொல்லிக்கொடுத்து, அதன் மூலம் அந்தக் கோயில்களுக்கு வருவாய் அதிகமாக வர வழி ஏற்படும் என்பதால், வருவாய் குறைந்த கோயில்களுக்கு தமிழாசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** வருவாய் இல்லாத கோயில்களுக்கு தமிழாசிரியர்களை நியமித்தால், அவர்களுக்கு உள்ள ஊதியத்தை எங்கேயிருந்து எடுத்துக் கொடுப்பது என்பதுதான் இப்போது உள்ள பிரச்சினை.

## ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கட்கு கல்விக்கடன்.

*** 105 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்லூரிகளில் மற்றும் பல் தொழில்நுட்பப் பயிலகங்களில் படிக்கும் அரசு ஊழியர்களின் பிள்ளைகளின் கல்விச் செலவுக்காக கடன் வழங்க வகை செய்யும் அரசாணை எண் 1954, உள்ளாட்சித்துறை, நாள் 13—12—1979

மற்றும் அரசாணை எண் 821, நிதி (ஊதியம்) நாள் 13—6—1979 ஆகியவை களில், நகராட்சி, டவுன்ஷிப், மாநகராட்சி என்பவை மட்டுமே குறிப்பிடப் பட்டிருப்பதால், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கட்கு அக்கடன் சலுகை கிடைக்கப் பெறவில்லை என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கட்கும் அச்சலுகை பொருந்தும் வகையில் ஆணை பிறப்பிக்க, நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) & (இ) ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் (ஆசிரியர்கள் உட்பட) பிள்ளைகள், கல்லூரிகள் மற்றும் பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் படிப்பதற்கு கல்விச் செலவுக்கு கடன் வழங்க 28—6—1980 நாளிட்ட ஊர்வளர்ச்சி உள்ளாட்சித்துறை அரசாணை எண் 995-ல் உத்திரவு வெளியாகியுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்முடைய பதிலிலே கூட 'ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள்' என்று குறிப்பிட்டிருக்கி றார்கள். ஆசிரியர்களும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் என்றாலும், ஆசிரியர்களுக்கென்று தனியான முறையிலே, அவர்களுக்கும் இது பொருந் தும் என்ற முறையிலே, ஆணை இருந்தால்தான், அவர்களுக்கு இந்தச் சலுகை அமுல்படுத்தப்படும் என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்த வகையிலே, அவர் களுக்கும் இது பொருந்தும் என்ற வகையிலே, ஆணை பிறப்பிக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இந்த ஆணை ஆசிரியர்களுக்கும் பொருந்தும்.

### *Family Planning Operations*

*106 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that, as per G.O. Ms. No. 3134, Health and Family Welfare Department, dated 14th December 1976, Government Servants who have undergone the Sterilization/Tubectomy operations are eligible for incentive increment, if they have got only three children; and

(*b*) if so, the reason for not extending this privilege to teachers under Panchayat Unions who have undergone such an operation in 1978?



### *Family Planning Operations.*

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(இ) மேற்படி அரசு ஆணையில் உள்ள சலுகைகள் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வினா எழ இட மில்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** இந்த அறுவை சிகிச்சை முறையினாலே ஆசிரியர் கள் பெறும் சலுகை, புதிய ஊதிய விகிதம் அமுலாக்கப்பட்ட பிறகு, தடை செய்யப்பட்டிருக்கிறது. 1—4—1978 தேதியிலிருந்து புதிய ஊதிய விகிதம் வந்தபோது, 400 ரூபாய் அடிப்படை ஊதியம் என்பது 600 ரூபாய் என்று உயர்த்தப்பட்டது. ஏற்கெனவே உள்ள அரசாணையில் 400 ரூபாய்க்குக் குறைவாகச் சம்பளம் வாங்குபவர்களுக்குத்தான் இந்தச் சலுகை என்றிருந்தது. எனவே, இந்தச் சம்பள விகிதத்தை மாற்றி அடிப்படைச் சம்பளம் 600 ரூபாய் வரையில் பெறுபவர்களுக்கும் ஊக்க ஊதிய உயர்வு அளிக்கும் விதத்தில் இதை விரிவாக்கும்படி அரசு ஆணை பிறப்பிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஏற்கெனவே பெற்றுவந்த சலுகை 1—1—1980-லேயிருந்து நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தக் கேள்வி எழ நியாயம் இல்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** 31—3—1978 வரையிலும் 400 ரூபாய் வரை சம்பளம் வாங்கிய ஆசிரியர்கள் அறுவை சிகிச்சை செய்துகொண்டால், இந்த ஊதியத்தைப் பெறலாம். ஆனால் 1—4—1978 அன்று புதிய ஊதிய விகிதம் அமுலாக்கப்பட்டபோது, இந்த அடிப்படை ஊதியத்தோடு அகவிலைப்படி சேர்க்கப்பட்டதால், அவர்களது அடிப்படை ஊதியம் 400 ரூபாய்க்கு மேலாக வருகிறது. அதற்கு ஈடாக 'ஃபிட்மென்ட் டேபிள்' படி பார்த்தால் 400 ரூபாய் என்றிருந்ததை 600 ரூபாய் என்று தீர்மானித்திருக்க வேண்டும். ஆகவே, அந்த அடிப்படையிலே அவர்களுக்குச் சலுகையளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** புதிய ஆணை பிறப்பிக்கப்பட்ட தற்கு முன்னாலே ஏதாவது புகார்கள் வந்து, அல்லது மனுக்கள் வந்து, அந்த மனுக்கள் அரசினிடத்திலே இருந்தால், அவைகள் பரிசீலிக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்தக் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஆசிரியர்களுக்கு 1—1—1980 முதல் சிறப்பூதியம் வழங்குவது நிறுத்தப்பட்டுவிட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பெரும்பாலும் சட்டபூர்வமாக இல்லாவிட்டாலும்கூட, கிராமப் புறங்களிலே ஆசிரியர்கள் தாம் பொதுமக்களிலே பலரை சிகிச்சைக்கு அழைத்து வருகிறார்கள். எந்த அரசும் ஏற்கெனவே இருந்த சலுகையைப் பறிக்கும் வகையிலே ஆணை பிறப்பிப்பது மரபல்ல. ஆகவே, ஏற்கெனவே இருந்த சலுகையை மீண்டும் வழங்கத் தக்க ஒரு நடைமுறையிலே மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களுடைய பரிந்துரையோடு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தை ஏற்று அமுல்படுத்த ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அறுவை சிகிச்சை செய்து கொள்வது என்பதை, அதுவும் குறிப்பாகக் குடும்பநலத் திட்டமே ஒரு தேசிய இயக்கமாக இருப்பதால், பொதுமக்களும் செய்து கொள்கிறார்கள். அரசுப் பணியிலே இருப்பவர்களும் செய்துகொள்கிறார்கள். யார் யார் அறுவை சிகிச்சை செய்து கொள்கிறார்களோ அவர்கள் ஆணாக இருந்தால் 75 ரூபாயும், பெண்ணாக இருந்தால் 85 ரூபாயும் என்று உதவிப் பணம் கொடுக்கப்படுகிறது. ஆகவே, இந்த அறுவை சிகிச்சையைச் செய்துகொள்ளும் அனைவரும் சமமாகக் கருதப்படவேண்டும் என்ற காரணத்தால்தான், இப்போது 1—1—1980-லே யிருந்து இதுபோன்ற தடையுத்தரவு வந்திருக்கிறது.

(முற்பகல் 10-40)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : பொதுமக்கள் ஊதியம் வாங்குவதில்லை என்ற காரணத்தால், அவர்களுக்கு 'இன்சென்ட்டிவ்' கொடுக்கும் பிரச்சினையே எழவில்லை. ஆனால், ஊதியம் வாங்கும் ஊழியர்கள் அரசுக்கு உதவுகிறார்கள். எனவே உழைப்புக்கேற்றவாறு 'இன்சென்ட்டிவ்' கேட்கிறார்கள். எனவே, பொதுமக்களையும் உழைக்கும் ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களையும் இணைத்துக் காட்டுவது சரியில்லை என்பதால்; ஆசிரியர்களின் இக்கோரிக்கையை அரசு மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பொதுமக்களும் வெளியில் உழைக்கிறார்கள். அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் அரசுத் துறையில் உழைக்கிறார்கள். எனவே எல்லோரும் உழைக்கிறார்கள் என்பது தான் அரசின் கருத்து.



திரு. பா. ரா. தாமஸ் : ஊக்க ஊதிய உயர்வு வழங்க முடியாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருப்பதால், அறுவை சிகிச்சை செய்து கொண்ட நபர்களுக்காவது தற்போது கொடுக்கப்படும் தொகையை அதிகரிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதுபோன்ற உத்தேசம் தற்போது இல்லை.

*Teachers of Municipal Higher Secondary School, Karur.*

*107 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the allowance paid to the Inducted Teachers, for handling Higher Secondary Classes in the Municipal Higher Secondary School, Karur, has been stopped from November 1979 ; and

(b) if so, the reasons for such stoppage?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மருத்துவப் பிரிவையும், நல்வாழ்வுப் பிரிவையும் சீரமைத்தல்

*108 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஒவ்வொரு வருவாய் மாவட்டத்தையும் இரு மருத்துவ மாவட்டமாகப் பிரித்து, மருத்துவப் பிரிவிலும், நல்வாழ்வுப் பிரிவிலும் நிபுணர்களை நியமனம் செய்து சீரமைக்க வேண்டுமென்று, அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இது சம்பந்தமாக அரசுக்கு முறையீடு ஏதும் வரவில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: நிபுணர்களை அமைக்கும் கருத்து அரசுக்கு இல்லையென்றாலும், தற்போதுள்ள மாவட்ட மருத்துவ அதிகாரிகளுக்கு நிறைய பணி இருப்பதைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள மாவட்டங்களையெல்லாம் சிறிய சிறிய மாவட்டங்களாகப் பிரித்து அங்கெல்லாம் அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரித்து, அவர்களின் பணியை வரன்முறைப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மூலக் கேள்வி வருவாய் மாவட்டங்களை இரு மருத்துவ மாவட்டங்களாகப் பிரிப்பது பற்றியதாகும். அதாவது மெடிக்கல் டிபார்ட்மெண்ட்பற்றிக் கேட்டிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் கேட்பது பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்ட் பற்றியதாகும். அதைப் பொறுத்தவரையில், கீழ்க்காணும் பதிலை அளிக்க விரும்புகிறேன்.

According to the reorganized pattern, the State will be divided into 7 Regions and 29 Health Unit Districts. A Regional Assistant Director will be in charge of two or three Revenue Districts.

அதாவது நமது மாநிலம் 7 மண்டலங்களாக ஆக்கப்பட்டு அவைகள் 29 மாவட்ட ஹெல்த் யூனிட் டிஸ்ட்ரிக்ட்களாகப் பிரிக்கப்பட இருக்கின்றன. இந்த 7 மண்டல அதிகாரிகளின் கீழ் 29 ஹெல்த் யூனிட் டிஸ்ட்ரிக்ட் அதிகாரிகளைப் போட்டு ரியார்கனைஸ் செய்ய இருக்கிறோம். தற்போது 15 டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசர்கள் இருக்கிறார்கள். இந்த 15 மாவட்டச் சுகாதார அதிகாரிகளோடு இன்னும் 14 பேர்களை அதிகமாக நியமித்து அவர்களின் கீழ் ஒவ்வொரு ஹெல்த் யூனிட் டிஸ்ட்ரிக்ட் விடப்படும். இதன் காரணமாக அவர்களின் பணிகள் துரிதப்படுத்தப்படும். அதோடு அவர்களின் பணியும் சிறப்பாக அமையும் என்ற அடிப்படையில் அரசு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

திரு. த. சந்தோஷம்: அரசாங்கத்தின் சேவை பரவலாக்கப்படும் என்ற கொள்கையின் அடிப்படையில் இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை, அங்கே காவல் துறையைப் பொறுத்தவரை. அம்மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு கிழக்கு இராமநாதபுரம் என்றும் மேற்கு இராமநாதபுரம் மாவட்டம் என்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில், இராமநாதபுரம் நகரத்தில் தான் தலைமை மருத்துவ மனை இருக்கிறது. மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராஜபாளையம் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற பகுதிகளிலிருந்து இராமநாதபுரம் தலைமை மருத்துவ மனைக்கு வருவதற்கு 100 அல்



லது 120 மைல் பயணம்செய்ய வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக கொடிய நோய்களால் அவதிப்படுகிறவர்கள் சிறந்த மருத்துவச் சிகிச்சை பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். எனவே, காவல் துறையையும் நீதித்துறையையும் இரண்டாகப் பிரித்ததுபோல் மருத்துவத் துறையையும் இரண்டாகப் பிரித்து ஒரு மாவட்டத் தலைமை மருத்துவ மனையை மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: நான் முதலில் பதில் சொல்லும் போதே, இம்மாநிலத்தில் 29 பப்ளிக் ஹெல்த் யூனிட் டிஸ்ட்ரிக்ட்களாகப் பிரிக்க இருக்கிறோம் என்று குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் முகவை மாவட்டத்தைக் கிழக்கு முகவை என்றும் மேற்கு முகவை என்றும் இரண்டாகப் பிரிக்கலாம் என்றும் கூறி, மேற்கு முகவையில் ஒரு தலைமை மருத்துவ மனையை அமைக்கலாம் என்று கூறினார்கள். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், அரசு எப்படிப்பட்ட பரிகாரத்தைத் தேடியிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மேற்கு முகவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், விருதுநகர் மற்றும் சிவகாசி ஆகிய இடங்களிலும் உள்ள தாலுக்கா மருத்துவ மனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்திட இருக்கிறோம். அதாவது ஒவ்வொரு தாலுக்கா மருத்துவ மனையும் மாவட்டத் தலைமை மருத்துவ மனையின் அந்தஸ்தைப் பெறுவதற்கு ஒப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. எனவே மேற்கு முகவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரே பகுதியில் இரண்டு தலைமை மாவட்ட மருத்துவ மனைகள் இருந்தால், எந்த அளவுக்கு மருத்துவ சுகாதார வசதிகள் கிடைக்குமோ அந்த அளவிற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

கிழக்கு முகவையைப் பொறுத்த வரையில், இராமநாதபுரத்தில், வேறு பல மாவட்டங்களில் உள்ள தலைமை மருத்துவ மனையைவிட மிக அருமையான, வசதியான மருத்துவ மனை இருக்கிறது. சுமார் 500 படுக்கைகளுக்கு மேலாக வசதியுள்ளதாக அதை ஏற்பாடு செய்திருக்கிறோம். இவ்வாறு முகவை மாவட்டத்திற்கு எந்த விதமான குந்தகமும் வராமல் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு மேல் பெரிய நோய்கள் வந்தாலும், மதுரை இராஜாஜி (எர்ஸ்கின்) மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லும் வாய்ப்பும் இருக்கிறது. அங்கே எல்லாவிதமான வாய்ப்பும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முகவை மாவட்டம் பற்றி விரிவாக விளக்கியிருக்கிறார்கள். மாநிலம் முழுவதும் 29 ஹெல்த் யூனிட் மாவட்டங்கள் அமைக்கப்படவிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அதில் அனைத்து மாவட்டங்களும் அடங்குமா? சில மாவட்டங்கள் எப்போதோ இருந்த ஜனத்தொகையின் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இப்போது அங்கெல்லாம் மக்கள் வளர்ச்சி அதிகரித்துள்ளது. இதன் காரணமாக அதிகமான மருத்துவ வசதிகள் தேவைப்படுகின்றன. மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளுக்கு இணையான மருத்துவ வசதிகள் அங்கெல்லாம் தேவைப்படுகின்றன. தென்னாற்காடு மாவட்டம் அப்படிப்பட்ட ஒரு மாவட்டம். அதைப்போலவே வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர் அரசினர் தலைமை மருத்துவ மனை இருந்தாலும், செங்கம், வந்தவாசி, போளூர் போன்ற பகுதிகளுக்கு அருகில் உள்ள திருவண்ணாமலையிலும் ஒரு மாவட்டத் தலைமை மருத்துவமனை அளவுக்கு ஒரு மருத்துவ மனை தேவைப்படுகிறது. எனவே இது குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: ஏற்கெனவே இருக்கும் வருவாய் மாவட்டங்கள் சிறிய மருத்துவ மாவட்டங்களாகப் பிரிக்கப்படுமா என்பது தான் மூலக் கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்களுடைய வினாவிற்குப் பதிலளிக்கும்போது, இனி எவ்வாறு மாநிலம் முழுவதும் 7 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மென்டின் சிறிய மருத்துவ மாவட்டங்கள் அமைக்கப்படும் என்பதுபற்றிக் கூறினேன். திருத்தியமைக்கப்பட்ட திட்டப்படி, மாநிலத்தில் 7 ரீஜன்கள் இருக்கும். அதில் வேலூரில் ஒன்று இருக்கும். இப்போதுள்ள ரீஜனில் செங்கை மாவட்டமும், வட ஆற்காடு மாவட்டமும் இருக்கின்றன. நான் இங்கே குறிப்பிடுவது பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்ட் பற்றியது மெடிகல் டிபார்ட்மெண்ட் அல்ல. திருத்தப்பட்ட நிலையில் அவைகள் கீழ்க்கண்டவாறு அமையும்.

வடாற்காடு மாவட்டம்—தலைமையிடம் வேலூர்.

வடாற்காடு மாவட்டம்—1.—வேலூர்.

வடாற்காடு மாவட்டம்—2.—திருவண்ணாமலை.

வடாற்காடு மாவட்டம்—3.—செய்யாறு.

தற்போது தென்னாற்காடு ரீஜனில் தென்னாற்காடு மாவட்டமும், தஞ்சை மாவட்டமும் இருக்கின்றன. இனி திருத்தியமைக்கப்படும்போது, அது கீழ்க்கண்டவாறு இருக்கும். தலைமையிடம் கடலூரில் இருக்கும்.





South Arcot I—Cuddalore.

South Arcot II—Villuppuram.

South Arcot III—Kallakurichi.

Thanjavur I—Thanjavur.

Thanjavur II—Thiruvarur.

இப்படி 2 மாவட்டங்கள் அடங்கிய 5 இடங்களாகத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு இடத்திலும் ஒரு டிஸ்ட்டிரிக்ட் ஹெல்த் ஆபீசரைப் போட்டிருக்கிறோம். ஒரு மாவட்டச் சுகாதார அதிகாரி இதுவரை 30 ஆரம்பச் சுகாதார நிலையங்களை மேற்பார்வையிட வேண்டியிருந்தது. இப்போது மாற்றியமைக்கப்பட்ட முறைப்படி ஒவ்வொரு மாவட்டச் சுகாதார அதிகாரியும் 17 அல்லது 18 ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பார்க்க வேண்டியிருக்கும். அதாவது மாதத்திற்கு இருமுறை ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்தைப் பார்வையிடக் கூடிய வாய்ப்பு இனி இருக்கும். இவ்வாறு மாவட்டங்கள் அனைத்திலும் சுகாதாரச் சேவைகள் அதிகரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## பொதுப் பணித் துறையில் தினக்கூலி ஊழியர்கள்

*109 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கதர்-கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஐந்து ஆண்டுகளுக்கு மேல் தினக்கூலியாகப் பணிபுரியும் பொதுப் பணித்துறை ஊழியர்களை, பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என, கூவம், பக்கிங்காம் கால்வாய் தேசியத் தொழிலாளர் சங்கம், 1979-ல் நடத்திய போராட்டத்தின் முடிவில் அளிக்கப்பட்ட உறுதிமொழிக்கேற்ப, 31—7—1980-ஆம் நாள் வரை அவ்வூழியர்கள் நிரந்தரமாக்கப்படாததை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அது தொடர்பாக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : (அ) & (இ) தினக்கூலியாக பணிபுரியும் பணியாட்களின் பணியினை மாநில சேவையாக்குவது பற்றி அரசு ஆய்வு செய்து 1—4—1975-ந் தேதியன்று பத்து ஆண்டுகளுக்கு மேலாக பணியில் உள்ள பணியாட்களின் பணி 1—10—1976 முதல் சம்பள ஏற்ற முறை மற்றும் இதர பலன்களுடன் மாநில சேவையாக்கப்பட்டு, மாநில சேவையாக்கப்பட்ட வேலை நிதி அமைப்பின் கீழ் கொண்டுவருவதற்கு 14—7—1976 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி 303 தினக்கூலியாளர்களின் பணிகள் மாநில சேவையாக்கப்பட்டு நிரந்தரப்படுத்த உத்திரவு இடப்

பட்டுள்ளது. இதன் பின்னர் 31—12—1979 முடிய பத்து ஆண்டுகளும் அதற்கு மேலும் பணிபுரிந்த 453 தினக்கூலி ஊழியர்களின் பணிகளை மாநில சேவையாக்கி பணி நிரந்தரம் செய்ய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

தினக்கூலி ஊழியர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் அவர்களுடைய பணியை நிரந்தரமாக்க பணிக்காலம் 10 ஆண்டு என்றிருப்பதை 5 ஆண்டு என்று குறைக்க அரசு தீவிரமாக ஆய்வு செய்து வருகிறது.

(முற்பகல் 10-50)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : 1979-ல் அரசு உறுதிமொழி தந்ததற்கிணங்க 31—7—1980 முடிய அந்த ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை என்பது தான் கேள்வி. அந்த ஊழியர்களை நிரந்தரமாக்க ஆணை பிறப்பித்துள்ள தாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். 31—12—1979-க்குப் பின்னே எந்தத் தேதியில் அறிவிக்கப்பட்டது என்பதை அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : 2—5—1980 நாளிட்ட, பொதுப் பணித் துறை ஆணை எண் 911-ல் 1—4—1975 லிருந்து 1—4—1977 வரை 10 ஆண்டுகள் பணி முடித்த 208 தினக்கூலிகள் பணியை மாநிலச் சேவை யாக்கி நிரந்தரப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

2—4—1977 முதல் 31—12—1979 முடிய அதற்குமேல் பணியாற்றியுள்ள 242 தினக்கூலிகள் பணியை மாநிலச் சேவையாக்கி நிரந்தரப்படுத்தும் செயற் குறிப்பின் மீது ஆணைகள் 3—2—1891 நாளிட்ட பொதுப் பணித் துறை அரசாணை எண் 140-ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அரசு உறுதிமொழி தந்ததை ஆணையாகப் பிறப்பிப்பதில் ஓராண்டுக்கு மேலாக காலதாமதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரி கிறது. உறுதிமொழிகளை அவ்வப்போது நிறைவேற்றுகிற வகையில் அதிகாரி களைத் தீவிரப்படுத்தி அமைச்சர்கள் அளிக்கக்கூடிய உறுதிமொழிகளை யொட்டி உடனடியாக ஆணைகள் பிறப்பிக்க இந்தத் துறை அமைச்சர் அவர் கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : உறுதிமொழியை அளித்த பின்னர் ஆக்க பூர்வமான வேலைகளை முடக்கிவிட்டு முடிவு பெறுவதற்குச் சிறிது காலதாமதம் ஆகும். துரிதமாக இப்படிப்பட்ட உறுதி மொழிகளைச் செயலாக்க அரசு பரிசீலனை செய்யும்.



## Prohibition Cases.

* 110 Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Handlooms and Khadi be pleased to state—

(a) the number of cases registered against illicit distillers of arrack and alcohol in the State, from 3rd October 1978 to 30th June 1980; and

(b) the number of cases registered during the above period, for transport and consumption of the prohibited drinks?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : (அ) 3—10—1978 முதல் 0—6—1980 வரை கள்ளத்தனமாக சாராயம் மற்றும் ஆல்கஹால் முதலிய ற்றைத் தயாரித்தவர்களின் மீது தொடரப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை—57,569.

(இ) 3—10—1978 முதல் 30—6—1980 வரை கள்ளச் சாராயம் கடத் தியவர்களின் மீது தொடரப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை—50,108.

3—10—1978 முதல் 30—6—1980 வரை கள்ளச்சாராயம் குடித்ததற் காக தொடரப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை—1,16,236.

திரு க. இராமமூர்த்தி : கள்ளச் சாராயம் காய்ச்சியவர்களின் மீது தொட ரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 57 ஆயிரம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த அனுபவத்தின் அடிப்படையில் அரசாங்கம் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? கள்ளச் சாராயம் குடித்தவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் 1,16,236 என்று தகவலைத் தெரிவித்திருக்கிறார்கள். இதிலே அதிகாரிகள் அளவிலே கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ? எத்தனை மாநில அரசு அதிகாரிகள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன ? எத்தனை மத்திய அரசு அதிகாரிகள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : இந்த எண்ணிக்கையைப் பார்த்து மேலும் சட்டத்தைச் செயலாக்குவதற்கு மதுவிலக்குச் சட்டத்தை அரசு மீண்டும் தீவிரப்படுத்திக் கொண்டிருக்கிறது. மற்றும் தனிப்பட்ட முறையில் அரசு அதிகாரிகள், மத்திய அரசு அதிகாரிகள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை என்ற குறிப்புகள் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : நம்முடைய மாநிலத்தில் மிகக் கடுமையான சட்டத்தை வைத்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் இந்த அளவிற்கு மதுவிலக்குச் சட்ட மீறல்கள் நடைபெற்றிருக்கின்றன என்றால், மதுவிலக்குச் சட்டம் சரியாக அமுல்படுத்தப்படவில்லை என்பது உண்மையா அல்லது மதுவிலக்குக் கொள்கையிலே அரசு தாராளத் தன்மையைக் காட்டிக் கொண்டிருக்கிறது என்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : சட்டத்தைக் கடுமையாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. சந்தோஷம் : கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காக கிட்டத்தட்ட 57 ஆயிரம் பேர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். உண்மையில் கள்ளச் சாராயம் காய்ச்சியவர்களில் பத்தில் ஒரு பங்கு கூட இது இருக்காது என்று நினைக்கிறேன். அந்த அளவிற்குப் பரவலாக கள்ளச் சாராயம் காய்ச்சுவது நடந்து வருகிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இப்படிக் காய்ச்சுபவர்கள், காவல் நிலையங்களுக்கு மாமூல் கொடுத்துவிட்டு, இந்தச் செயலில் ஈடுபடுகிறார்கள் என்ற ஒரு பொதுவான கருத்து பொது மக்களிடையே நிலவுகிறது. இந்தக் கருததை அரசு கண்காணித்து வருகிறதா ? எந்த முறையில் கண்காணித்து வருகிறது? அப்படியானால் அதன் விளைவு என்ன ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : பொதுவான கருத்து பற்றி பதில் சொல்லத் தேவையில்லை என்று நினைக்கிறேன். குறிப்பாக நடந்த குற்றங்களைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால், நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : தொடரப்பட்ட வழக்குகளில் முடிவு பெற்றது எத்தனை ? எவ்வளவு பேர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : மூலக் கேள்வியில் எத்தனை வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன என்றுதான் கேட்டிருக்கிறார்கள். முடிவு பற்றித் தெரியாததால், தனிக் கேள்வியாகப் போட்டால், பதில் தர முடியும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மூலக் கேள்வியில் இல்லை என்பதற்காகத்தானே துணைக் கேள்வியைக் கேட்கிறார்கள்.



டாக்டர் இரா. சனார்த்தனம் : இந்த மாதிரி குற்றங்களைச் செய்பவர்களின் எண்ணிக்கை, 1947 ஆம் ஆண்டிலிருந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அதிகமாகிக் கொண்டு வருகிறதா அல்லது குறைந்து கொண்டு வருகிறதா ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : இடையிலே ஏற்பட்ட சறுக்கலின் காரணமாக இது ஓரளவிற்குப் பெருகி வந்திருக்கிறது. அதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இந்த அரசு தீவிர நடவடிக்கையை எடுத்து வருகிறது.

திரு. க. இராமமூர்த்தி : அரசாங்கம் எதிர்பார்க்கிற அளவிற்கு இதில் வெற்றி அடையாததற்குக் காரணம், கள்ளச் சாராயம் காய்ச்சி விற்பனை செய்வதில் அரசியல் செல்வாக்குப் படைத்தவர்கள் ஈடுபட்டிருப்பதுதான் என்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படியானால் அதைத் தடுக்க காவல் துறையினருக்கு எந்த அளவிற்குக் கடுமையான உத்தரவை இட்டிருக்கிறது இந்த அரசு ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : எந்த அரசியல் கட்சி ஈடுபட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் கூறவில்லை. அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. இராமமூர்த்தி : எந்தக் கட்சி ஈடுபட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும்.

திரு. ஆ. நல்லசிவன் : இவ்வளவு அதிகமான வழக்குகள் போடப்பட்டும் மதுவிலக்கைச் சரியாக அமுல்படுத்த முடியவில்லை என்று தெரிவதாலும், ஏற்கெனவே ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் எதிர்க் கட்சியினர் அபிப்பிராயத்தைத் தெரிவித்திருப்பதாலும், மதுவிலக்கு ரத்து செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : தனிக் கேள்வி போடவும்

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி, எந்தக் கட்சி இதில் ஈடுபட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும் என்று சொல்லியிருப்பது ஒரு கட்சியை மனதிலே வைத்துச் சொல்லியதைப் போலத் தெரிகிறது. அது அவைக் குறிப்பில் இருப்பது சரிதானா ?

[1981 மார்ச் 2

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எந்தக் கட்சியைப் பற்றியும் அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** நம் மாநிலத்தில் மதுவைக் குடிப்பதற்கு பெர்மிட்டுகள் தாராளமாக வழங்கப்படும் இந்தக் காலத்திலே கூட கள்ளச் சாராயத்தை மக்கள் மோகமாக விரும்பிக் குடிப்பதற்குக் காரணம் அதிலே போதை அதிகமாக இருக்கிறது என்பதுதான் என்று சொல்லுகிறார்கள். அதுபற்றி அமைச்சர் அவர்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** அனுபவம் இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் அவைக்கு வாராதது குறித்து.

***திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, I rise on a poin of order. இந்த அவையினுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை, தவிர்க்க முடியாத காரணத்தால் தேர்தல்கள் நடைபெறாத சூழ்நிலையில், குறைந்து வந்ததுபற்றி நாம் மிகுந்த கவலை கொண்டிருக்கிறோம். அது நம்மை மீறிய செயல் என்பதால், நடவடிக்கை எடுக்க இயலாமல் இருக்கிறோம். ஆனால் இடையில் ஏற்பட்ட காலியிடத்தை நிரப்ப அரசு நடவடிக்கை எடுத்து, அதிகார பூர்வமாக ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஏறத்தாழ ஒரு மாத காலம் ஆகியும் கூட, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இந்த அவைக்கு வரவில்லை. அவர் இன்னும் பதவிப் பிரமாணம்கூட எடுத்துக்கொள்ளவில்லை என்று தகவல். இந்த அவையில் நாம் இப்போது, வறட்சி நிலை பற்றியும், நிதிநிலை அறிக்கை பற்றியும், பல அவசரச் சட்டங்களைப் பற்றியும் இப்படித் தமிழகத்தோடு ஒட்டிய பல்வேறு முக்கியமான பிரச்சினைகளைப்பற்றியும் விவாதித்துக் கொண்டிருக்கும்போது, அவை விவாதங்களில் பங்கேற்று தமிழகத்திற்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்யாமல் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இருப்பது இந்த அவையைப் புறக்கணிக்கிற செயலாக இருக்கிறது. இந்த அவையின் முக்கியத்துவம் கருதி இது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



1981 மார்ச் 2]

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, இந்த அவைக்கு வந்து பதவிப் பிரமாணம் எடுத்து உறுப்பினராகச் செயல்பட வேண்டிய உறுப்பினரைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர் எத்தனை நாட்களுக்குள் வந்து பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று விதிகள் இருக்கின்றன. அதற்கேற்ப பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளுவது என்பது அவருக்குள்ள உரிமை. அதை உள்நோக்கோடு, வேறுவிதமாகக் கருதிப் பேசுவது தவறு. ஆகவே அவர் வாராததால் இந்த அவையை அவமதிக்கிற மாதிரி சொல்லுவது தவறு. உறுப்பினருக்குள்ள உரிமையின்படி அவர் அந்தக் காலத்திற்குள் வந்து பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வார். திடீரென்று மாண்புமிகு உறுப்பினர் திரு இராமமூர்த்தி அவர்கள் ஒரு நாள் வரவில்லை என்றால், பிறகு முக்கியமான பிரச்சினை நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்ல வேண்டிய நிலை வரலாம். ஆகவே இது ஒரு ஒழுங்குப் பிரச்சினையாக வராது. அது உறுப்பினருக்குள்ள உரிமை. அந்தக் காலத்திற்குள் அவர் வந்து பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் இந்தப் பிரச்சினையை எழுப்பியது எனக்கு வியப்பாக இருக்கிறது. ஒருவர் இந்த அவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், இவ்வளவு நாட்களுக்குள் வந்து பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று விதி முறை இருக்கிறது. அதற்குள் அவர் வராவிட்டால் இயற்கையாகவே அவருடைய பதவி காலாவதியாகிறது. அவ்வளவுதான் அவைத் தலைவரும், இந்த அவையும் அக்கறையைச் செலுத்த முடியும். அவர் எத்தனை நாள் கழித்து வருகிறார் என்பதைப்பற்றி அவைக்கு அக்கறையில்லை.

(முற்பகல் 11.00)

## 3. அறிவிப்பு.

### பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள, கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் படிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :

1. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 9/1981).

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 17/1981).

4. கவன ஈர்ப்பு.

(1) பதினோராண்டு பள்ளிப் படிப்புத் திட்டத்தின் கீழ் (1969 திட்டம்) 1980 ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் (எஸ்.எஸ்.எல்.சி.) தேர்ச்சி பெறாத மாணவர்கள் இனி அப் படிப்பை முடித்து மேற்கொண்டு படிப்பைத் தொடர முடியாமல் உள்ள அவல நிலை குறித்து.

திரு. க. சந்தோஷம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பதினோராண்டு பள்ளிப் படிப்புத் திட்டத்தின் கீழ் (1969 திட்டம்) 1980 ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் (எஸ்.எஸ்.எல்.சி.) தேர்ச்சி பெறாத மாணவர்கள் இனி அப்படிப்பை முடித்து மேற்கொண்டு படிப்பைத் தொடர முடியாமல் உள்ள அவல நிலை குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன்வைக்கப்பட்டுள்ளது.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த 1969 ஆம் ஆண்டுத் திட்டத்தின் கீழ் தேர்வில் தோல்வி அடைந்த மாணவர்கள் வருகின்ற ஆண்டு 1981 மார்ச்சு தேர்வு எழுத முடியாத நிலையில் இருக்கின்ற காரணத்தினால், ஒருவேளை அந்த இடைக்கால நாட்களுக்குள் அவர்கள் வயது வரம்பை மீறுவார்கள் என்ற நிலைமைகள் ஏற்படும். அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படிப்புத் தகுதியுடன் வேலை வாய்ப்புக்கு என்று செல்லும் போது, அந்த வாய்ப்புக்கள் அவர்களுக்கு நழுவக்கூடிய நிலை இருக்கிறது.

@ 77-79 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.





ஆகவே இதைப்பற்றி அரசு மீண்டும் பரிசீலனை செய்து; அவர்கள் 1981 ஆம் ஆண்டு மார்ச்சு தேர்வினை நடத்துவதற்கு ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு புதிய திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று அவர்கள் தேர்ச்சி பெறாமல் இருக்கின்றார்கள். இப்போதுள்ள நிலையில் அவர்களை எழுத அனுமதிக்க முடியாது. அவர்களுக்குப் பரீட்சை நடத்துவதற்குப் பல்வேறு முன்னேற்பாடுகளைச் செய்துதான் நடத்த வேண்டும். அப்படிப்பட்ட முன்னேற்பாடுகள் இல்லாத நிலைமையில், அந்தப் பரீட்சையை நடத்தும் நிலையில் நிர்வாகம் இல்லை என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக வேலை வாய்ப்பு என்று ஒரு நிலை வரும்போதுதான், இவர்கள் அந்த வாய்ப்பை இழக்கக்கூடிய அளவுக் "ஃபெயில்" ஆகியிருப்பவர்கள், ஆகிறார்கள். ஆனால் மற்றவர்களெல்லாம் இருக்கின்றார்கள். அவர்கள் அந்தப் பயனை அடைந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள அறிக்கையிலே, விருப்பப் பாடம் தவிர மற்ற 5 பாடங்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த 5 பாடங்கள் என்று கணக்கிடும் போது, அவர்கள் விருப்பப்பட்ட பாடங்களில் மதிப்பெண்கள் குறைந்திருந்தாலும், அவர்கள் எழுத வேண்டிய அவசியம் இல்லையா? அப்படிக் கணக்கிடும்போது கூடுதல் மதிப்பெண்கள் 500-க்குக் கணக்கிடப்படுமா அல்லது 600-க்குக் கணக்கிடப்படுமா என்பதைப்பற்றி விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: விருப்பப் பாடங்கள் கணக்கெடுக்கப்படாது என்ற விவரம்தான் தரப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு விவரங்கள் அங்கத்தினர்களுக்குத் தேவைப்பட்டால், தனியாக ஒரு வினா போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## பதினோராண்டு பள்ளிப்படிப்புத் திட்டத்தின்கீழ் (1969 திட்டம்) 1980 ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் (எஸ்.எஸ்.எல்.சி.) தேர்ச்சி பெறாத மாணவர்கள் இனி அப்படிப்பை முடித்து மேற்கொண்டு படிப்பைத் தொடர முடியாமல் உள்ள அவல நிலை குறித்து



செல்வி அ. லீலாவதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மாணவர்களுக்கு 10 ஆம் ஆண்டுப் பரீட்சைத் தாள்களையே கொடுத்தால், நன்றாக இருக்கும். ஏனென்றால், அவர்களை மார்ச் மாதம் பரீட்சை எழுத முடியாமல் செய்து, அவர்கள் அக்டோபர் மாதம் பரீட்சை எழுதக்கூடிய நிலை ஏற்படுமானால், அவர்களுக்கு வயதாகிவிடும் நிலைமையும் ஏற்பட்டுவிடும். வேலை வாய்ப்புக்குத் தடை ஏற்படும். ஆகவே கால தாமதம் இல்லாமலிருக்கும் பொருட்டு இந்த 10 ஆம் ஆண்டு பரீட்சைத் தாள்களையே கொடுப்பதால், மாணவர்களுக்கும் பாதகமில்லை, அரசுக்கும் பாதகமில்லை. அவர்கள் அந்த பரீட்சைத் தாள்களையே எழுதலாம் என்று நினைக்கிறேன். அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 10வது ஆண்டு பரீட்சைத் தாள்களை வைத்து எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் பரீட்சையை மார்ச்சில் எழுத முடியாது. அவர்கள் அக்டோபரில்தான் பரீட்சை எழுத முடியும். இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. அவர்கள் புதிய புத்தகங்களைப் படிக்க வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. இன்னொரு காரணம், பரீட்சை நிறுவனத்தில் திடீரென்று நாம் எந்த மாறுதலையும் செய்ய முடியாது. அதற்கு வேண்டிய முன்னேற்பாடுகள் சிலவற்றைச் செய்ய வேண்டியிருக்கிறது. இப்போது கம்ப்யூட்டர் முறைகள் பயன்படுத்தப்படுவதால், இடையிலே எந்தவிதமான மாறுதலையும் செய்ய முடியாது. குறுகிய காலத்தில் அவைகளைச் செய்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(2) தமிழ்நாடு வேளாண்மைத் துறை ஊழியர்கள் தங்கள் 7 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி பேரணி நடத்தியும், உண்ணா நோன்பிருந்தும் பலன் இல்லாமை குறித்து.**

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைத் துறை ஊழியர்கள் தங்கள் 7 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி 23-1-1981 அன்று பேரணி நடத்தியும், 24-1-1981 அன்று சென்னை அண்ணா சதுக்கத்துக்கருகே உண்ணா நோன்பிருந்தும் பலன்



இல்லாததால் அவர்கள் அதிருப்தியடைந்து மனவருத்தத்துடன் அல்லல்படும் நிலை குறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, பதவி உயர்வு பெற்ற துணை வேளாண்மை அலுவலர்களுக்கும் பட்டம் பெற்று நேரடியாக அமர்த்தப்படும் துணை வேளாண்மை அலுவலர்களுக்கும், அவர்கள் சம வேலை பார்ப்பதால், சம ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்று சொல்வது நியாயமானது என்றும், ஊதியக் குழு இதை முறையாக ஆய்வு செய்யவில்லை என்றும், எனினும் இவர்களுடைய கோரிக்கை இறுதியாக நிறைவேற்றப்படும் என்றும் தமிழ்நாடு உதவி வேளாண்மைத் துறை அலுவலர்கள் சங்க விழாக்களிலே முன்பிருந்த வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்கூடக் கூறியிருக்கிறார்கள். இப்போதிருக்கின்ற வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் 29-10-1980 அன்று திருச்சியிலே அவ்வாறு கூறியிருக்கிறார்கள். அது நிறைவேற்றப்படுமா என்றும் அதற்கு உத்தரவிடப்படுமா என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஒரு நபர் குழுவினுடைய அறிக்கை வந்த பிறகு முடிவு செய்யப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே 1-வது, 2-வது, 3-வது, 4-வது கோரிக்கைகள்பற்றி ஒரு நபர்க் குழுவினுடைய அறிக்கையை எதிர்பார்ப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்போலவே வேறு துறைகளிலேயும் எந்தப் பிரச்சினைகளை எழுப்பினாலும், சம்பந்தப்பட்ட அமைச்சர் ஒரு நபர்க் குழு அறிக்கை, ஒரு நபர்க் குழு அறிக்கை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு நபர்க் குழு அறிக்கை அரசுக்கு வந்து பல மாதங்கள் ஆகின்றன என்று நாங்கள் கேள்விப்படுகிறோம். அது எப்போது வெளியிடப்படும்? அது எப்போது ஆராயப்படும்? ஆராய்ந்தறிந்து அரசு ஏற்பதாக எப்போது அறிவிக்கும்? அந்த அறிவிப்பை எப்போது செய்யும் கேட்டுக்கொள்கிறேன்.

---

@ 80-82 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது

22 தமிழ்நாடு வேளாண்மைத் துறை ஊழியர்கள் தங்கள் 7 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி பேரணி நடத்தியும், உண்ணா நோன்பிருந்தும் பலன் இல்லாமை குறித்து

[1981 மார்ச் 2

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஒரு நபர்க் குழு அறிக்கை அளித்ததற்குப் பிறகு அதை நிதித் துறை ஆராய்ந்து அதன் மீது முடிவு எடுக்கப்படும். நிதித் துறை எப்போது முடிவு வெளியிடுகிறதோ அப்போது அறிவிக்கப்படும்.

5. அரசின் தீர்மானம்.

அலுவல் வரிசையில் மாற்றம் குறித்து.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"மேலவை விதி 23(1)-ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள அரசின் சட்ட முன்வடிவுகளில் 3-வது இனமான, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1981) முதல் இனமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

'மேலவை விதி 23(1)-ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள அரசின் சட்ட முன்வடிவுகளில் 3-வது இனமான, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1981) முதல் இனமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.





6. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1981.)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அங்கத்தினர்கள் யாரும் பெயர்கள் தரவில்லை. ஆகவே முடிவு கட்டிவிடலாமா என்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற ஜெனரல் டிஸ்கஷன் போன்றவற்றில் பேசுகிறபோது தெரிவித்துக்கொள்ளலாம். ஆனால், சட்ட முன்வடிவுகள் விவாதத்திற்கு வருகிறபோது, முன்னதாக உறுப்பினர்கள் பெயர் கொடுத்தால்தான் நல்லது. இதுவரையிலும் யாரும் பெயர் கொடுக்கவில்லை, அதனால்தான் சொல்கிறேன். இதற்கு நமது அரசாங்கக் கோரமாவைக் கலந்துகொள்ள வேண்டும்.

முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

* திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, அவர்களும் எங்களைக் கலந்துகொள்வதில்லை.

இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையிலும், 6 மாதத்திற்கான அவகாச நீடிப்பைக் கேட்டு இந்த அரசு இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது. புதியதாக சட்டம் முழுமையாக உருவாகிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையிலே, இந்த அவகாச நீடிப்பு தவிர்க்க முடியாத ஒன்று என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல. இந்தக் கூட்டுறவுச் சட்டம் ஒரு ஒட்டுமொத்தமான முழுமையான சட்டமாக வந்துகொண்டிருக்கின்ற சூழ்நிலையிலே, இன்றைக்கு இடையிலே பதவியிழப்பவர்களுக்கு அல்லது முடிவடைகின்ற பதவிகளுக்குக் கால நீடிப்பு தேவையான ஒன்றுதான்; ஆனாலும் இதிலே ஒரேயொரு வேண்டுகோள். அரசுக்கு

@ 82-83 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக வைக்கப்பட்டுள்ளது.

[திரு. க. இராமமூர்த்தி] [1981 மார்ச் 2

நான் சொல்ல விரும்புவது, இன்றைக்குத் தமிழகத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் தவிர, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தவிர, ஜனநாயக அமைப்பிலே வேறு எந்தத் துறையிலும், அக்ரிகல்சுரல் புராடெக்ட்ஸ் மார்க்கெட்டிலே தொடங்கி உள்ளாட்சியிலிருந்து மற்ற எல்லாத் துறைகளிலும் இந்தச் சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இன்றைக்கு தமிழகத்தினுடைய கிராமப் பொருளாதாரத்தை, ஏழையெளிய மக்களுடைய பொருளாதாரத்தைச் சீரமைக்கின்ற மிகப் பெரிய பொறுப்பை ஏற்றிருக்கின்ற கூட்டுறவுத் துறை ஜனநாயக ரீதியிலே இயங்குவதற்கும், நேரடியாக பாதிக்கப்படக்கூடிய மக்கள், தேவைப்படுகின்ற மக்கள், இந்த அமைப்பினுடைய முழுப் பலனையும் அடைகின்ற வகையிலே, இந்த அமைப்பை விரைவிலே உருவாக்கியாக வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவுச் சட்டம்

(முற்பகல் 11.10)

உருவானாலும்கூட, முழுமைப்படுத்தப்பட்டாலும்கூட, அதற்குப் பிறகு அது தொடர்பான பல்வேறு நடவடிக்கைகள் எடுத்தல், விதிகளை அமைத்தல் ஆகியவற்றுக்காக கொஞ்சம் கொஞ்சமாகக் காலத்தை நீட்டித்துக்கொண்டு போகின்ற நிலைமை ஏற்பட்டுவிடும். இப்போது கேட்கப்பட்டிருக்கின்ற கால நீட்டிப்பு, சட்டம் இயற்றிய பிறகுகூட, ஏறக்குறைய ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகள் நீட்டிப்பதற்கு இது ஒரு வாய்ப்பாக இது தொடர்கதையாக ஆகிவிடுமோ என்ற அச்ச உணர்வு நியாயமாகவும், சில நேரங்களில் நியாயத்தைத் தாண்டி அனுபவத்தின் காரணமாகவும் ஏற்படுகிறது. ஆக இந்தக் கால நீட்டிப்பு கோருகின்ற அதே நேரத்தில், இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றும் அதே நேரத்தில், முழுமையான கூட்டுறவுச் சட்டத்தைக் கொண்டு வரும்போது ஒரு வரையறைக்குள்ளாக, 6 அல்லது 9 மாதங்களுக்குள்ளாக நிச்சயமாகத் தேர்தல் நடக்கும் என்ற உறுதியை அமைச்சரவர்கள் தர வேண்டுமென்று கோரி, என்னுடைய கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தி அமைகிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, this amendment seeks to extend the life of Special Officers by another six months. While I fully appreciate the Hon. Minister's plea that elections cannot be held because a comprehensive amendment Bill is on the anvil and a Select Committe is considering it, may I point out, Sir, that if we are to wait for the comprehensive Bill, as my Hon. Friend Thiru K. Ramamoorthy pointed out, I am fairly certain it may be difficult for us to have elections for another $1\frac{1}{2}$ or 2 years because



1981 மார்ச் 2] (Thiru A. R. Damodaran)

Rules have to be framed and I think the Select Committee will go into various provisions regarding membership, new members to be admitted, etc. Therefore, I would like to appeal to the Government that in case it is likely to ttke some time, we would even welcome an amendment of the Act providing that the office-bearers to be elected will hold office only for one year or only till the comprehensive Bill is passed. I do not speak with any sense of accusation that politics has entered the field. I am anxious that our local administrative units in Co-operative Societies should function properly, especially when Tamil Nadu is facing severe drought because we can understand the strain on co-operative societies, the need for the public being associated with drought relief works, etc. In fact, there has been a report that in many of our districts, when the District Development Council meetings are held, we do not even have a quorum to attend these Council meetings, because the Panchayat Union Chairmen and Municipal Chairmen are not there and we have only two or three M.L.A.'s attending such meetings and it has become very much a show run by the District Officials. While we all appreciate the work of the officials, nonetheless the absence of election to all these bodies is causing severe set-back in development work. I would, therefore, plead with the Government that if this is likely to be delayed because of the Select Committee considering the Bill, the Government may even come forward with an amendment of the Act saying that the office-bearers now elected will hold office for one year only until the comprehensive Bill is enacted into a law, or it can be implemented, so that these organisations may be revived. For five years, many of these co-operative institutions are not able to function at all. In certain societies where the directors have already retired, we are unable to have elections to fill up these posts of directors. In some cases, even the Board of Management continues. In fact, in the only one society with which I am concerned, a House Mortgage Society, we can have about seven directors. But, one has died, two have retired and we are operating only with four directors at present. We are unable to fill even the vacancies that have arisen. My request to the Government is that they may see whether, at least in such societies where a Board of Management exists, it would be possible for the Government to say that elections can be held and that such people will hold office for one year or two years. At

least if this is done, the existing societies may be able to operate with the full complement of directors. I fully realise that the comprehensive Bill is likely to make many changes and certainly the Government are entitled to have fresh elections once the Bill is passed. I would plead that, in the interests of making these organisations more live and more development-oriented, the Government may consider our plea because it is in the real interests of the functioning of these co-operative societies. At least where Boards of Management exist—and there are a few societies where they have not yet been superseded or dissolved—at least the existing vacancies could be filled up by election, until the Bill is passed. That is all, Sir. Thank you.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர வர்களே, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத் திருத்தச் சட்டமுன் வடிவின் மீது சுருக்கமாகச் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தச் சட்டம் மேற்கொண்டும் தனி அதிகாரிகளுக்குப் பதவி நீட்டிப்பு தருகின்ற வகையில் வழிவகை செய்கின்ற சட்டத் திருத்தமாக இருக்கிறது. ஆளும் கட்சியில் இருப்பவர்களும் சரி எதிர்க் கட்சியில் இருப்பவர்களும் சரி தனி அதிகாரிகளுக்கு மேலும் மேலும் அதிகாரங்களைக் கொடுத்து, பதவிக் காலத்தை நீட்டிப்பதை விரும்பமாட்டார்கள் என்பதிலே யாருக்கும் சந்தேகம் கிடையாது. ஏனென்றால் ஏராளமான அதிகாரங்களைக் கொடுத்து, தற்போது சர்வாதிகாரிகளைப் போல அவர்கள் நடக்கும் சூழ்நிலையை **ஏற்படுத்தியிருக்கிறது. முழுமையான சட்டத்தைக் கொண்டுவருவதில்** ஏற்படும் காலதாமதத்தால், அவர்களுக்கு மேலும் பதவி நீட்டிப்பு என்று வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. இது தவிர்க்க முடியாதென்றாலும்கூட, இடைக் காலத்திலே அந்தச் சட்டம் நிறைவேறுகின்ற வரையில், அது அமலாக்கப் படுகின்ற வரையில், அவர்கள் எந்தவிதத் தவறும் செய்யாமல் இருக்க நடவடிக்கை தேவை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். காரணம், பல தனி அதிகாரிகள் தன்னிச்சையாக, சுயேச்சையாக, மக்களுடைய உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ளாமல் நடந்துகொள்ளுகிறார்கள். Non-officials அந்தப் பொறுப்பில் இருந்தபோது எந்த அளவிற்குச் **செயல்பட்டார்களோ** அந்த அளவிற்கு இல்லாமல் இவர்கள் **வேறொரு** கண்ணோட்டத்தில் செயல்படுவதாகப் புகார்கள் வருகின்றன. அது அமைச்சரவர்களுக்கே தெரியும். எனவே தன்னிச்சையாக நடந்துகொள்ளும் அவர்கள்மீது இடைக்காலத்தில் ஒரு கண்காணிப்பு கட்டாயம் தேவை.



அவர்களுடைய நிர்வாகம் சரியாக இருக்கும் முறையில், அவர்களுக்கும் பொது மக்களுக்கும் நல்ல தொடர்பு, ஜனநாயக ரீதியான தொடர்பு இருக்கும் வகையில் நடவடிக்கை தேவை. அப்படிப்பட்ட நடவடிக்கைகளை அமைச் சரவர்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் முழுமையான சட்டம் நடப்புக் கூட்டத் தொடரிலே கொண்டுவரப்படுமா என்றும், அது குறித்து மாண்புமிகு அமைச்சரவர்கள் அரசின் சார்பாக ஒரு வாக்குறுதி தர இயலுமா என்றும் அறிந்துகொள்ள விரும்புகிறேன். கூட்டாய்வுக் குழுவைப் பொறுத்தவரையில், அதனுடைய உறுப்பினர்கள் விரைவாக இந்தச் சட்டத்தை நிறைவேற்ற ஒத்துழைப்பு தருவதாக வாக்குறுதி தந்திருக்கிறார்கள். எனவே நடப்புக் கூட்டத் தொடரிலே சட்டமாகக் கொண்டுவர, மாண்புமிகு அமைச் சரவர்கள் நல்லதொரு உறுதிமொழியைத் தர வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, Non-officials இந்தப் பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த காலத்தில் கடன் கொடுப்பதிலும், கடனை வசூலிப் பதிலும் அவர்கள் கையாண்ட அணுகுமுறைக்கும், தற்போது தனி அதிகாரிகள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு செயல்படும்போது, அவர்கள் கையாளும் அணுகுமுறைக்கும் வேறுபாடு இருக்கிறதென்பதைச் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன். கடன் வசூலைப் பொறுத்தவரையிலும் அந்தக் காலத்திற்கும், இந்தக் காலத்திற்கும் வேறுபாடு இருக்கிறதா. ஏதாவது முன்னேற்றம் காணப்பட்டிருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த மன்றத்தில் சொன்னால், நாங்கள் அது குறித்து திருப்திகரமான விளக்கம் பெற வாய்ப்பாக இருக்குமென்று சொல்லிக்கொள்கிறேன். முழுமையான கூட்டுறவுச் சட்டத்தை அமைச்சரவர்கள் விரைவாகக் கொண்டுவர உறுதி கொண்டிருக்கிறார்களென்ற நம்பிக்கையின் அடிப்படையிலே, அவர்களுக்கு உறுதுணையாக இருந்து, ஒத்துழைப்பு கொடுத்து, சட்டத்தை நிறைவேற்ற உதவுவோம் என்று சொல்லி, வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.20)

திரு. நீலநாராயணன் : தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுடைய தனி அலுவலர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில், அவர்களுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவின் மீது நான் சார்ந்துள்ள கட்சியின் சார்பில் ஒருசில வார்த்தைகளைச் சொல்ல வாய்ப்பு தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டம்

ஏற்கெனவே ஆளுநர் அவர்களால் ஒரு அவசரச் சட்டமாகப் பிறப்பிக்கப்பட்டு, பின்னாலே இது சட்ட முன்வடிவாக இன்றையதினம் இந்த அவையின் முன்னே வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசைப் பொறுத்தவரையிலே பல அவசரச் சட்டங்கள் அவசரமாக அறிவிக்கப்படுவதும், அவ்வாறு உடனுக்குடன் அறிவிக்கப்படுவதுடன் அதற்குப் பின்னாலே சட்ட முன்வடிவு என்ற முறையிலே இந்த அவைகளிலே அவை நிறைவேற்றப்படுவதுமான நிலைமைகள் எப்போதும் தொடர்ந்து இந்தத் தொடரிலேயும் நடைபெற்றுக் கொண்டிருப்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், இந்தச் சட்டங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் எதிர்க்க வேண்டுமென்ற சூழ் நிலையில் இல்லையென்றாலும்கூட, இதுபோன்று வருங்காலத்தில் கால தாமதப்படுத்துகிற சூழ்நிலை, இந்த அரசைப் பொறுத்தவரையில், ஏற்படக் கூடாது என்பதையும் நாங்கள் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். காரணம், இன்றையதினம் அதிகாரிகள் கூட்டுறவுத் துறையிலே அதிகாரம் செலுத்துகின்ற நிலை இருக்கிறது. கூட்டுறவுத் துறை ஏழையெளிய மக்களுடைய நல்வாழ்வுக்காக ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பு. அந்த நல்ல நோக்கம் நிறைவேற வேண்டுமானால், தங்களுடைய குறைகளை நேரடியாக எடுத்துச் சொல்ல அங்கே மக்களுடைய பிரதிநிதிகள் இருக்க வேண்டும். அதிகாரிகளை சந்தித்துப் பேசி தங்களுடைய காரியங்களைச் சாதித்துக்கொள் வதிலே ஏழையெளியவர்களுக்கு இன்றையதினம் இன்னல்கள் ஏற்படுகின்ற நிலையில் அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் இருப்பது பெரிதும் அவசியம் என்பதை இதற்கு முன்னாலேயிருந்த பல நிலவரங்கள் நமக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றன. இருந்தாலும், அதற்கான சில சட்ட திட்டங்களை உருவாக்க வேண்டுமென்ற நிலைமை இப்போது இருப்பதால் இந்தப் புதிய சட்டத்தை இங்கே மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது இங்கே கேட்கப்பட்டுள்ள கால அளவோடு இந்த அதிகாரிகளுக்கு காலக்கெடு நீட்டிப்பு கேட்கின்ற நிலை முற்றுப் பெற்று விடுமா அல்லது மேலும் மேலும் கால நீட்டிப்பு வேண்டுமென்று இந்த அரசு கேட்குமா என்பது இந்த அரசு செயல்படுவதைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். எத்தனையோ விஷயங்களுக்கு அவசர அவசரமாக அவசரச் சட்டங்களைப் பிறப்பித்து, பிறகு இங்கே சட்ட முன்வடிவாக நிறைவேற்ற கொண்டு வந்திருக் கிறார்கள். இந்த விஷயத்திலும் மேலும் மேலும் காலதாமதத்தை ஏற்படுத்தி, காலந் தாழ்த்திக் கொண்டிருப்பது உண்மையிலேயே இந்தத் துறை மூலம்



பெற வேண்டிய பல நன்மைகளை நாட்டிலுள்ள ஏழையெளிய மக்கள் துய்க்க முடியாத ஒரு சூழ்நிலைக்கு உள்ளாக்கி விடும், அத்தகைய ஒரு நிலைக்கு ஏழையெளிய மக்கள் உந்தப்படுவார்கள், அந்த நிலைக்குத் தள்ளப்படு வார்கள் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டுகிறேன். அந்த நிலைமையைத் தவிர்க்க எவ்வளவு விரைவிலே தேர்தலை நடத்த அரசால் முடியுமோ அவ்வளவு விரைவிலே அரசு தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென்று வலியுறுத்தி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களினுடைய தேர்தலைப் பொறுத்தவரைக்கும், 1976-ல் 25/76 என்ற சட்டம் நிறைவேறிய பிறகு தமிழகத்தில் குறிப்பாக 'அப்பக்ஸ் பாடி' என்ற அளவில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் இருந்த சுமார் 300 'அப்பக்ஸ் பாடிகள்' கலைக்கப்பட்டதும் அவற்றின் நிர்வாகத்தை நடத்த ஸ்பெஷல் ஆபீசர்ஸ் போடப்பட்டதும் இந்த நாடு அறிந்த ஒன்று. இங்கே கூட்டுறவுத் துறையில், கூட்டுறவு அமைப்புகளில் நாடுபூராவிலும் உள்ள அமைப்புகளில் முழுமையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே இல்லையென்ற தவறான எண்ணம் பரவலாகப் பரப்பப்பட்டிருக்கிறது. அந்த எண்ணம் மிகத் தவறானது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக பல்வேறு கூட்டுறவு அமைப் புகள் இருக்கின்றன. கூட்டுறவு அமைப்புகள் என்று சொல்லும் போது, விவசாயத்தைச் சார்ந்த 'புரடியூசர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட் டிஸ்' என்ற அளவில் இருந்தாலும் சரி அல்லது கைத்தறித் துறையிலே இருக் கின்ற கூட்டுறவு அமைப்புகள் என்ற அளவில் இருந்தாலும் சரி, 'கன்ஸ்யூ மர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட்டீஸ்' என்ற அளவில் இருந்தாலும் சரி, பல்வேறு துறைகளிலே இருக்கின்ற கூட்டுறவு அமைப்புகள் என்ற அளவில் இருந்தாலும் சரி, மாநிலம் பூராவும் கிட்டத்தட்ட 20,000 கூட்டுறவு அமைப்பு கள், கூட்டுறவுச் சங்கங்கள் கீழ் மட்டத்தில் மாநிலம் தழுவிய நிலையில் இருக் கின்றன. அங்கெல்லாம் ஏற்கெனவே ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தப் பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், முந்தைய ஆட்சிக் காலத்தில் தேர்ந்தெடுக் கப்பட்டவர்கள், அந்தக் குழுக்கள் அப்படியே இருக்கின்றன என்பதையும், அந்தக் குழுக்கள் கலைக்கப்படவில்லை என்பதையும் நான் இங்கே அவைக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். சுமார் 300 'அப்பக்ஸ் பாடிகள்' தான் 1976 ஆம் ஆண்டு ஆளுநர் ஆட்சிக் காலத்தில் கலைக்கப் பட்டன. இந்த 300 அமைப்புகளுக்கு மட்டும் தான் மக்களுடைய பிரதி

[திரு. சி. பொன்னையன்] [1981 மார்ச் 2

நிதிகளுக்குப் பதிலாக நிர்வாகத்தைக் கவனிக்க ஸ்பெஷல் ஆபீசர்ஸ் நியமிக்கப் பட்டார்கள். தமிழகத்தில் இருக்கின்ற சுமார் 20,000 கூட்டுறவு அமைப்பு களில் இருக்கின்றவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான். அந்தக் குழுவிலே இருக்கின்ற உறுப்பினர்களுடைய பதவிக் காலம் முடிவடைந்த பிறகு கூட, 'பாரோடு லைப்' ஆன பிறகு கூட, மீண்டும் அவர்கள் அந்தந்தக் குழுக்களிலே உறுப்பினர்களாக இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள். 3 ஆண்டுகள் அல்லது 4 ஆண்டுகள் அவ்வாறு இருக்கலாம். அதிகப்படியாக 5 ஆண்டுகளுக்கு மேல் அவர்கள் அவ்வாறு இருக்க விதிமுறைகளில் இடம் இல்லையென்றாலும்கூட, மீண்டும் அங்கெல்லாம் தேர்தல் நடத்தப்படாததால், அவர்கள் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறார்கள். இப்படி இருப்பது தவறுகளுக்கெல்லாம் இடமளிக்கிறது என்று 1976 ஆம் ஆண்டிலேயே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. உடனடியாக இந்த 20 ஆயிரம் அமைப்புகளையும் கலைத்து விட்டு, தேர்தலை வைக்கலாம் என்றால், 20 ஆயிரம் ஸ்பெஷல் ஆபீசர்ஸ் போடுவதெல்லாம் நடைமுறையில் சாத்தியமில்லாதது. அதனால் தான் அவைகளையெல்லாம் கலைக்காமல் அவற்றுக்கு மேலாக இருக்கக் கூடிய இந்த 300 அப்பக்ஸ் பாடீசைக் கலைத்து விட்டு அவற்றின் நிர்வாகத்தைக் கவனிக்க ஸ்பெஷல் ஆபீசர்ஸ் போட்டிருக்கிறோம். இந்த அமைப்புகளின் மூலம் கீழ்மட்டத்தில் இருக்கிற கூட்டுறவு அமைப்புகளை ஒழுங்குபடுத்தி வருகிறோம். அதற்கிடையிலே தமிழகத்தில் இருக்கின்ற 1961 ஆம் வருடக் கூட்டுறவுச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும், அதில் பல மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய சட்டமாக அது இருந்த காரணத்தாலும், அந்தச் சட்டத்திலே இருக்கின்ற சில சந்து பொந்துகளை சில வசதி படைத்தவர்கள், குறிப்பிட்ட குடும்பத்தவர்கள் தொடர்ந்து பன்னெடுங்காலமாகத் தங்களுடைய குடும்பச் சொத்தாகப் பயன்படுத்தியதாலும், இத்தகையவர்கள் இருப்பதால் நாட்டிலுள்ள ஏழையெளிய நலிந்த பிரிவினருக்கு எந்தவிதமான நன்மையும் இல்லையென்கிற விஷயம் அரசுக்குத் தெரிந்ததால், இந்தச் சட்டத்தை மாற்ற வேண்டுமென்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கிராமப்புறத்தை எடுத்துக்கொண்டால், சிறிய விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் கூட பலர் இத்தகைய விவசாய அமைப்புகளில் உறுப்பினர்களாக இல்லை. 40 சதவிகித மக்கள் தான் கூட்டுறவு அமைப்புகளில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இத்தகைய போக்கையெல்லாம் மாற்ற நடவடிக்கை எடுத்து வருகிறோம். கூட்டுறவு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டபோது, 1948ஆம் ஆண்டு நாக்பூர் ரெசல்யூஷனில் பண்டித நேரு தெளிவாக இதுபற்றிக் கூறியிருக்கிறார். " கூட்டுறவு இயக்கம் வலுவுள்ள ஓர் அமைப்பாக இருக்க வேண்டுமென்றால்,



1981 மார்ச் 2] [திரு. சி. பொன்னையன்]

மத்திய அரசு மூலம் பல கோடி ரூபாய்ப் பணத்தைச் செலவு செய்ய நாம் தயாராக இருக்க வேண்டும். நலிந்த பிரிவினருக்கு நன்மை செய்யக் கூடிய தோர் அமைப்பாகவும் அது இருக்க வேண்டும்" என்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அன்றைக்குச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆனால், அந்த அடிப்படையில் அது நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்றால், பல ஆய்வுக் குழுக்கள் போடப்பட்டபோதும், அந்த ஆய்வுக் குழுக்கள் எல்லாம் நலிந்த பிரிவினருக்கு ஒரு நன்மையும் செய்யவில்லையென்று சுட்டிக்காட்டியிருக் கின்றன. அரசியல் தலையீடு கூட்டுறவு இயக்கத்திலே சிறிதும் இருக்கக் கூடாது என்பதிலே நான் திட்டவட்டமாக இருக்கிறேன். உறுப்பினர்கள் இங்கே அதுபற்றிக் குறிப்பிட்டார்கள். கிட்டத்தட்ட பன்னெடும் ஆண்டு காலமாக தெரிந்தோ தெரியாமலோ, வேண்டுமென்றோ அல்லது வேறு விதத் திலோ அரசியல் தலையீடு கூட்டுறவுத் துறையிலே அதிகமாக இருந்து வந்தது. இந்தத் துறை கட்சித் தலையீட்டுக்கு அப்பாற்பட்டு மக்களுக்கு நன்மை செய் யக் கூடியதோர் அமைப்பாக இயங்குகிறதா என்கிற சந்தேகம் பலருக்கு எழுந்தது. இதையெல்லாம் மனதில் கொண்டு, இந்த ஆட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு, மீண்டும் ஒரு பொதுக்குக் கமிட்டிக்கு இதுபற்றிய அபிப்பிராயங்களைத் தெரிவிக்க அனுப்பி, உறுப்பினர்களுடைய கருத்துக்களை எல்லாம் கேட்டு, இந்த இயக்கத்தைப் பொறுத்தவரையில், அடித்தளத்தி லுள்ள மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும். அரசியல் தலையீடற்ற ஒரு கூட்டுறவு அமைப்பாக இதைக் கொண்டு வர வேண்டும், வசதி படைத்தவர் களுடைய ஆதிக்கத்திலிருந்து விடுதலை தந்து ஏழையெளிய அடித்தளத்து மக்களுக்கு உதவி செய்ய வேண்டும், அதற்கு சட்டரீதியாகப் பாதுகாப்பு கொண்டு வர வேண்டுமென்று ஆய்வு செய்து வருகிறோம். வருகிற 12ஆம் தேதிக்குப் பிறகு மீண்டும் கூடி, இந்தக் கூட்டத்தொடரிலேயே இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணி முனைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி இந்தச்

(முற்பகல் 11-30)

சட்டத்தை நிறைவேற்றும்போது, சட்டத்தை நிறைவேற்றி விட்டுத் தேர்தல் நேரத்தில், அதற்குக் கொஞ்சம் காலதாமதம் ஆகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களும், திரு. தாமோதரன் அவர்களும் சுட்டிக்காட்டினார்கள். நான் கூட ஒத்துக்கொள்கிறேன். சட்டத்தை நிறைவேற்றி விட்டாலும்கூட, மீண்டும் விதிமுறைகளில் சில மாற்றங்களைக்

கொண்டுவந்து நடைமுறைப்படுத்த சற்று காலதாமதமாகும். ஆனாலும், இது குறித்து யோசித்துப் பார்க்க வேண்டும். நாம் தீவிரமாக நடவடிக்கை எடுத்தால், சட்டத்தை நிறைவேற்றி 6 மாத காலத்திற்குள் தேர்தலை நடத்த முடியும். 12 ஆண்டுக் காலமாக தேர்தலே இல்லாமலிருக்கும் இந்த அமைப்பிற்குத் தேர்தலை நடத்த வேண்டும். சட்டம் நிறைவேற்றப்பட்டு 6 மாத காலத்திற்குள் தேர்தல் நடத்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதியை நான் சொல்கிறேன். கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல் நடைபெற்றால் தான், அந்த அமைப்பு மக்களின் அமைப்பாக இயங்க முடியும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருப்பதால் இதிலே சற்றும் பின்வாங்காமல் இந்தச் சட்டத்திலே இருக்கும் சந்துபொந்துகளை அடைத்து, நலிந்த பிரிவினருக்குப் பாதுகாப்பளித்து, விரைவிலே தேர்தல் நடத்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லி, பேரவையில் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவை அவை ஏற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. அரசின் தீர்மானம்—தொடர்ச்சி.

அலுவல் வரிசையில் மாற்றம் குறித்து—தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது** : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் 'அரசின் சட்டமுன்வடிவுகள்' என்ற இனத்தின் கீழ் 4-வது வரிசையில் இருக்கும் தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/1981) இப்போது எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்",

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்சினை—

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் 'அரசின் சட்ட முன்வடிவுகள்' என்ற இனத்தின் கீழ் 4-வது வரிசையில் இருக்கும் தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1981) இப்போது எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

6. அரசின் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(2) தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1981)

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து** : மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981ஆம் ஆண்டு, வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு

@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

* **திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு மிக மிகச் சுலபமான ஒரு சட்டமுன்வடிவாக இங்கே வைக்கப் பட்டாலும்கூட, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மட்டும் என்ற அளவிலே இது வந்திருந்தாலும் கூட, இதனுடைய பின்னணியைப் பார்க்கும்போது, இனிமேல் வரப்போகின்றவைகளுக்கு இது முன்னோடியாக வந்திருக்கிறதோ என்று எண்ணவேண்டியிருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவிலே, 3 வது பிரிவிலே இந்தக் குழுவைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

"...... shall continue to hold office and function as members of the Market Committee for such period or periods as the Government may specify under clause (ii) of the proviso to sub-section (5) of section 8 as amended by this Act ......"

ஆறு மாத காலத்திற்கு நீட்டிப்பு என்பதோடு மட்டுமல்ல; அதற்குப் பிறகு விதிகளின்படி எவ்வளவு காலமானாலும் நீட்டித்துக்கொள்ள முடியும். இதனுடைய கெடுவை நீட்டிக்கொண்டே போகலாம் என்பதற்கான வாய்ப்பினைக் கொண்டு இந்தச் சட்டமுன்வடிவு வந்திருக்கிறது. பொதுவாக, விவசாய விளைபொருட்கள் விற்பனை அங்காடிகளைப் பொறுத்தவரையில், இவை சம்பந்தமான பிரச்சினை ஒன்று உயர்நீதிமன்றத்திற்குச் சென்றதன் காரணமாக, பல ஆண்டுக் காலமாக இவைகளுக்குத் தேர்தல் நடைபெறாமல் இருக்கிறது. இடையிலே பல புதிய சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த அங்காடியினிடத்திலே, இடையிலே பல்வேறு புதிய விளை பொருள்களையும் கொண்டு வந்து சேர்த்ததன் விளைவாக விவசாயிகளுக்கு அந்த அங்காடிகள் துணையாக இருக்கின்றன என்பதிலே சந்தேகமில்லை. வெறும் மணிலாவாக, பருத்தியாக மட்டும் விற்றுக்கொண்டிருந்த நிலைமை மாறி, இன்றைக்கு விவசாயிகள் உற்பத்தி செய்யும் அத்தனை பொருட்களையும் அந்த அங்காடிகளிலே விற்பனை செய்யலாம் என்ற நிலைமைகள் இருக்கின்றன, இந்தக் காரணத்தாலே, வாக்களிப்பவர்கள் யார் யார் என்ற புதிய சிக்கல் இப்போது உருவாகியிருக்கிறது. வாக்காளர் பட்டியலைப் பார்க்

---

@ 83—84 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



கின்றபோது, வெறும் மணிலா, பருத்தி பயிரிட்டவர்களின் பெயர்கள்தான் அந்தப் பட்டியலில் இடம்பெற்றிருக்கின்றன. இன்றைக்கு மணிலாவும் பருத்தியும் மட்டும் விற்பனை செய்யும் சூழ்நிலை இல்லை. இதற்கு முன்னரே, எப்படி இந்த அமைப்புகளை நடத்துவது என்ற ஒரு முடிவுக்கு அரசு வந்திருக்க வேண்டும். தேர்தல் வேண்டாம் என்று சொன்னால், வேறு எந்த முறையிலே இவைகளை அமைப்பது என்ற முடிவுக்கு அரசு வந்திருக்க வேண்டும். இப்போது இந்த அங்காடிகள் செயல்படுவதிலே அவைகளின் நடவடிக்கைகள் பல்வேறு வகையிலே முன்னேறியிருக்கின்றன. இவைகளை நிர்வாகம் செய்வதற்கு, பெரிய அளவிலே நிர்வகிப்பதற்கு, அல்லது நிர்வகிக்க ஒரு குழு அமைப்பதற்குத் தாமதம் ஆகிறது என்பது மட்டுமல்ல, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. நான் அதிகாரிகள் மீது கோபமோ, வருத்தமோ, விரோதமோ கொண்டவன் அல்ல. ஆனால் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஆட்சியினர் எவ்வளவு தான் நல்லவர்களாக இருந்தாலும், எவ்வளவுதான் நல்லாட்சியைத் தருகின்ற வல்லவர்களாக இருந்தாலும், வெறும் அதிகாரிகளைக் கொண்டு மட்டும் ஆட்சியை நடத்துவார்களானால், அவர்களுடைய நல்ல பெயர் அடிபட்டுப் போகும். என்ன காரணத்தினாலே இந்த ஆட்சியின் போக்கு அந்த அளவிலே வந்திருக்கிறது? எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், அப்படித் தான் இருக்கிறது. இந்த விற்பனைக் கூடங்களைப் பொறுத்தவரையில், அன்றாடம் விளைபொருள்களை விற்கும் விவசாயிகளுக்கு பல்வேறு ஆதரவு களை இந்த அங்காடிகள் தருகின்றன. இடைத் தரகர்களிடத்திலேயிருந்து பெருமளவுக்கு விவசாயிகளைக் காப்பாற்றியது இந்த அங்காடிகள். அவர் களுடைய விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க துணை புரிந்தன இந்த அங்காடிகள். இன்னும் அவர்கள் இந்தமாதிரி விற்பனைக் கூடங்களுக்கு வரும்போது, மேலும் பல்வேறு வசதிகளை அவர்களை விட்டு நாம் செய்து கொடுக்க வேண்டும். வெறும் அதிகாரிகளை மட்டும் நம்பி அவர்கள் செயல்பட முடியாது. விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட் களை விற்ற பிறகு, அவர்களுடைய பணத்தை வாங்கிக்கொண்டு போவதற்கு அவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும். காவல் துறை இல்லையா என்பது வேறு. முன்பெல்லாம் விற்பனைக் கூடங்களிலே பல்வேறு முறைகளிலே அவர்களுக்குப் பாதுகாப்பு தந்திருக்கிறார்கள். முன்பெல்லாம் விற்பனை அங்காடிகளிலே பொருட்களை விற்பனை செய்தவுடன் அதற்கான பணத்தைக் கொடுப்பதில்லை. பின்னர்தான் கொடுத்தார்கள். இன்றைக்கு அங்கேயே அந்தப் பணம் கொடுக்க வேண்டும் என்ற நிலை வந்திருக்கிறது. பிறகு வங்கிகளின் மூலமாகக் கொடுக்கலாம் என்ற நிலைமை வந்தது. இப்படி

படிப்படியாக வளர்ந்துகொண்டு வருவதற்குக் காரணம் அந்த விற்பனைக் கூடங்களுடைய நடவடிக்கைகள் கடந்த காலத்தில் நிர்வகிக்கப்பட்ட முறையே யாகும். அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கும்போது, வெறும் ஒன்றிரண்டு அதிகாரிகள் மட்டும் இருந்து இதனுடைய நிர்வாகத்தை நடத்த முடியாது. சில இடங்களில் சில பொருட்கள் விளைகின்றன. அந்தப் பொருட்கள் வேறுசில இடங்களில் கிடையாது. தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அங்கே நிலக்கடலை அதிகமாக விளைகிறது. வேறு சில மாவட்டங்களிலே பருத்தி அதிகமாக விளைகிறது. கோவை, ஈரோடு மாவட்டங்களில் மஞ்சள் அதிகமாக விளைகிறது. குறிப்பாக தென்மாவட்டங்களை எடுத்துக்கொண்டால், மிளகாய் போன்ற பயிர்கள் விளைகின்ற இந்தத் தன்மைகளை யோசித்து அதற்கேற்றாற்போல நடவடிக்கை எடுத்துச் செயல்பட வேண்டும். உள்ளூரிலே இருப்பவர்கள்தான் இந்த நிலைமைகளைப் புரிந்துகொள்ள முடியும். தென்னாற்காடு மாவட்டத்திலே உள்ளவரை அழைத்துக்கொண்டு போய் கோவை மாவட்டத்திலே போட்டு, இந்த விற்பனை நிலையத்திற்கு நீங்கள்தான் சூப்பரிண்டன்ட் என்று உத்தரவிட்டால், அவரால் சரியாக வேலை செய்ய முடியாது. விவசாயிகளுக்கு அவரால் உதவ முடியாது.

(முற்பகல் 11-40)

இது ஏதோ புதுக்கோட்டை மாவட்டக் கமிட்டியின் ஆயுட்கால நீட்டிப்பு மசோதாவாக இருந்தாலும் கூட, இம்மசோதாவில் காலவரையறையின்றி அதன் ஆயுள் காலத்தை நீடிக்கத் தக்க வகையில் ஒரு பிரிவைப் புகுத்தியிருப்பதால், இப்படிப்பட்ட நிலைமை இனி உங்கள் மாவட்டங்களுக்கெல்லாம்கூட வரவிருக்கிறது என்ற வகையில் ஒரு எச்சரிக்கைபோல் இருக்கிறது என்றுதான் நான் கருதுகிறேன். இளைஞர்கள் அமைச்சர்களாக இருக்கும்போதுதான், வேகமாக நடவடிக்கைகளை எடுக்க முடியும். இன்றைக்கு இத்துறையைப் பொறுத்தவரையில், இளைஞர் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார். எனினும் இதில் வேகமாகச் செயல்பட என்ன தடை என்றுதான் எனக்குப் புரியவில்லை. எனவே இதுபோன்ற சட்டங்களை அடிக்கடி கொண்டு வருவதை விடுத்து, ஒரு முழுமையான சட்ட முன்வடிவைக் கொண்டு வர வேண்டும் என்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டபடி, இச்சட்டமுன்வடிவு புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய வேளாண் விளைபொருள் அங்



காடியைப் பொறுத்துத்தான் ஒரு சட்ட முன்வடிவாகும். புதுக்கோட்டை மாவட்டம் புதிதாக அமைந்த மாவட்டம் என்பதால், அதற்கென்று தனியாக ஒரு வேளாண் விளைபொருள் அங்காடிக்குழு இல்லாமல் இருந்து, 1978 ஆம் ஆண்டிலிருந்து அத்தகைய அங்காடிக்குழு அங்கே உருவாக்கப்பட்டது.

இப்போது, புதுக்கோட்டை வேளாண் விளைபொருள் அங்காடிக்குழுவின் பதவிக்கால நீட்டிப்பைக் கோருகிறோம். இப்படி கால நீட்டிப்புக்கான அவசியம் என்ன என்றால், இந்த அங்காடியின் பயனை மிக அதிகமான அளவில் உணருகிற சூழ்நிலை இப்போதுதான் உருவாகியிருக்கிறது. அதோடு விவசாயிகளுக்கு நியாயமான விலையைப் பெற்றுத் தருவதற்கும் இத்தகைய அங்காடிகள் பெருமளவில் பணியாற்ற வேண்டும் என்ற நிலையும் இப்போதுதான் அதிகமாக உணரப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில்தான் இதற்கான சட்டத்திற்கு விரிவான திருத்தங்களைச் செய்ய அரசு கருதியிருக்கிறது. இந்த நிலையில் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மட்டும் இப்போது கால நீட்டிப்பு கேட்பதற்கான காரணம், அந்த அங்காடி மட்டும் தனியாக அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அது மற்ற மாவட்ட வேளாண் விளைபொருள் அங்காடிகளோடு, அவற்றின் கால நீட்டிப்போடு பொருந்துகிற வகையில், ஒத்து வருகிற வகையில் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இப்போது கால நீட்டிப்பு கேட்கப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டம் ஒன்றில்தான் விவசாய, வாணிபப் பிரதிநிதிகள் வேளாண் விளைபொருள் அங்காடிக்குழுவின் பதவிப் பொறுப்பில் இருந்து கொண்டிருக்கிறார்கள். வரும் சட்டமன்றத் தொடர் கூட்டத்திலேயே மிக விரிவான அளவில் சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு, மாட்டிய மாநிலத்தில் உள்ளதைப்போல் விரிவான அளவில் நமது மாநில வேளாண் விளைபொருள் அங்காடிகள் செயல்படச் செய்யும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, உலக வங்கியின் உதவியோடு வேளாண் விளைபொருள் அங்காடிகளை, இன்னும் பெரிய அளவில் அமைப்பதற்கான ஏற்பாடுகளையும் அரசு மேற்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு வேளாண் விளைபொருள் அங்காடி இருக்கிற பகுதியிலும் வங்கியின் கிளை இருக்க வேண்டும், அவர்களுடைய விளைபொருள்களைச் சேமித்து வைக்கத் தக்க வசதிகள் இருக்க வேண்டும் என்கின்ற வகையில் உலக வங்கியின் நிதி உதவியை முழுமையாகப் பயன்படுத்துவதற்குரிய வகையில் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

[திரு. கா. காளிமுத்து] [1981 மார்ச் 2

இப்போது கேட்கப்படும் கால நீட்டிப்பு என்பது கமிட்டியின் பதவிக் காலத்தை அதிகமாக்கிக் கொண்டே போக வேண்டும் என்ற அடிப்படையில் அல்ல. உரிய சட்டத் திருத்தத்தைச் செய்வதற்குத் தேவையான கால அவகாசத்திற்காகத்தான் கால நீட்டிப்பு கேட்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அங்காடிகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு நான் நன்றிகூற கடமைப்பட்டிருக்கிறேன். உழவர் பெருமக்களுடைய பல்வேறு வகையான துன்பங்களுக்கு மூல வேராக இருப்பதே அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நியாய விலை கிடைக்காமல் இருப்பதுதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெளிவாக அறிவார்கள். விவசாயிகளுக்கு இக்கட்டான சூழ்நிலை ஏற்படும்போது அல்லது விவசாயிகளின் குடும்பத்தில் ஏதாவது ஒரு இன்றியமையா செலவு ஏற்படும்போது, வணிகப் பெருமக்கள் கடன் கொடுத்து அதன் மூலம் விவசாயிகளைத் தன்வசப்படுத்திக் கொண்டு அதற்குப் பிறகு அந்த விவசாயிகள் உற்பத்தி செய்யும் வேளாண் விளை பொருள்களைக் குறைந்த விலையில் வாங்குகிற நிலை இருக்கிறது. இந்த நிலைமைகளை மாற்றியமைப்பது என்பதுதான் இத்தகைய அங்காடிகளின் முக்கியமான நோக்கம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட ஒருமுறை "முடிந்தால் நிதியாதாரங்களை இன்னும் பெருக்கிக் கொண்டு, விவசாயிகள் தங்களின் உழவுத் தொழிலை மேற்கொண்டு பொருள்களை உற்பத்தி செய்வதற்காகக் கொஞ்சம் முன் பணத்தைக்கூட்டிக் கொடுக்கலாம்; பிறகு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களையும் வாங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்" என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு விரிவான அளவிலும் முழுமையான அளவிலும் சட்டத்திற்குத் திருத்தங்களைக் கொண்டு வர வேண்டிய அவசியம் இருப்பதால்தான் இத்தகைய கால நீட்டிப்பு தேவைப்படுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கேதான் கடலை அதிகமாக உற்பத்தியாகிறது. ஆனால் மற்ற விவசாய விளை பொருள்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை இருப்பதைப்போல் இன்றைக்குக் கடலைக்கு ஒரு நிர்ணயிக்கப்பட்ட விலை விவசாயிக்குக் கிடைப்பதில்லை. அதாவது நெல்லுக்கு இருப்பதைப்போல் அல்லது கரும்புக்கு இருப்பதைப் போல், ஒரு நிர்ணயிக்கப்பட்ட விலை கடலைக்கு இல்லாத காரணத்தால், கடலை உற்பத்தி செய்யும் விவசாயப் பெருமக்கள் அவ்வப்போது உண்டாகும்



1981 மார்ச் 2] [திரு. கா. காளிமுத்து]

வர்த்தகச் சூதாட்டத்தில் அகப்பட்டு அவர்களின் பொருளுக்கு நியாய விலை கிடைக்காமல் துன்பப்படுகிறார்கள். அதற்காகத்தான் எண்ணெய் வித்துக்களுக்காகத் தனியானதோர் துறையைத் தோற்றுவித்து அதில் விவசாயப் பெருமக்கள் அங்கம் வகிக்கும்படி செய்து, அவர்கள் உற்பத்தி செய்யும் கடலையைக் கொண்டு எண்ணெய் உற்பத்தி செய்யும் ஆலையை நிறுவி, அதன் மூலமாக விவசாயிகளுக்கு அதிகமான நன்மை கிடைக்கும் வகையில் அரசு திட்டமிட்டு செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

இந்த அங்காடிகளைப் பொறுத்தவரையில், அதுபோன்ற முன்னேற்ற ஏற்பாடுகளை விவசாயிகளுக்குச் செய்து கொடுத்து, அதே நேரத்தில் வியாபாரிகளுக்கும் அவர்களுடைய வியாபாரம் சீர்குலைந்து போகாமல் அவர்களையும் இதில் பங்கேற்க வாய்ப்புக் கொடுத்து இத்தகைய காரியங்களை நடத்த வேண்டும் என்பதுதான் இந்த அரசின் முக்கிய நோக்கமாகும். இதன் காரணமாகத்தான் இத்தகைய கால நீட்டிப்பு தேவைப்படுகிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எப்படியும் வருகிற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே ஒரு விரிவான சட்டத் திருத்தத்தைச் செய்து இவைகளுக்கெல்லாம் ஒரு முடிவு காணலாம் என்ற அடிப்படையில்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களையெல்லாம் மனதில் கொண்டு பரிசீலனை செய்து வருகிறோம். இந்த வகையில் அனைத்துப் பிரச்சினைகளையும் பரிசீலனை செய்து உரிய வகையிலே இத்தகைய அங்காடிகளுக்குத் தேர்தலை நடத்தி ஒவ்வொரு வேளாண் விளைபொருள் அங்காடியும் முழுமையாகச் செயல்படத் தக்க வாய்ப்பு அப்போதுதான் கிடைக்கும். இந்த அங்காடிகளைப் பொறுத்தவரையில், தமிழகமெங்கும் ஒரே மாதிரியான சூழ்நிலை இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இவ்வாறு ஒவ்வொரு பகுதியிலும் விளைகிற விவசாயப் பொருள்கள் வெவ்வேறாக இருக்கிற காரணத்தால், உள்ளூர் நிலைமைகளையும் கருத்தில் கொண்டு ஆங்காங்கே இருக்கிற குழுக்கள் செயல்படுத் தீர வேண்டும். அந்தப் பொருள்களுக்கு எந்த அளவுக்கு மார்க்கெட் இருக்கிறது என்று பார்த்துச் செயல்பட வேண்டும். எனவே அந்தந்த வட்டாரத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களின் பிரதிநிதிகளும், வியாபாரப் பெருமக்களின் பிரதிநிதிகளும் அங்கம் பெறுகிற போதுதான் இத்தகைய அங்காடிகள் முழுமையான அளவில் சிறப்பாகச் செயல்பட முடியும் என்பதை இந்த அரசு நன்கு உணர்ந்திருக்கிறது. அதற்கான வகையில் சட்டத்தினைத் திருத்துவதற்காகத்தான் இந்தக் கால நீட்டிப்பு இன்றையதினம் கேட்கப்படு

கிறது என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களின் கருத்துக்கும் நன்றி கூறி, மேலவை இச்சட்ட முன்வடிவை ஏற்க வேண்டும் என்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



**(3) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1981).**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அவை முன் வைக்கப்பட்டுள்ள சட்ட முன்வடிவு சாதாரண நியாயங்களைக் கடந்து வந்திருக்கிறது என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதை விதிகள் அடிப்படையிலோ சட்டப் பூர்வமாகவோ என்னால் தடை செய்ய முடியவில்லை என்றாலும்கூட, (under moral obligation) இந்தச் சட்ட முன்வடிவை இந்த அரசு கொண்டு வந்திருக்கக்கூடாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் சட்டமன்றத்திற்குத்தான் வரி விதிப்பு போன்ற சட்ட முன்வடிவுகளைப்

(முற்பகல் 11-50)

பரிசீலனை செய்கிற முன்னுரிமை தந்தாக வேண்டும். நிச்சயமாக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைத் தரப் போகிறோம் என்ற நிலை இருக்கிற போது, அதற்கென்று ஒரு நாளைக் குறிப்பிட்ட பிறகும் வரி விதிப்பு என்ற

@ 84-95 ஆம் பக்கங்களில் இணைப்புV ஆக அச்சட்டிக்கப்பட்டுள்ளது.

அளவிலே ஒரு சட்டத்தை, அதுவும் அவசரச் சட்டத்தைக் கொண்டு வருவ தென்பது ஒரு ஜனநாயக அரசு செய்யத்தகாத காரியமாகும். இந்தச் சட்ட முன்வடிவின் மூலமாக இந்த அரசு என்ன எதிர்பார்க்கிறது? எந்த அளவிற்கு வருவாய் எதிர்பார்க்கிறது? இந்தப் புதிய வரி விதிப்பின் மூலமாக அரசு எதிர்பார்க்கின்ற வருவாய் என்ன, அதற்காக அரசாங்கம் எதிர்பார்த்துச் செல விடுகிற செலவு என்ன என்பதையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்களா என்றால், இல்லை. வெறும் வருவாயை மாத்திரம் மனதிலே கொண்டு இந்த அரசு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருந்தால், எந்த அளவிற்கு வருவாய் கிடைக்கும் என்ற தகவலைத் தந்திருக்க வேண்டும். இல்லையென்றால், என்ன காரணத்திற்காக இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக் கிறது? அரசாங்கம் இதில் என்ன கருதுகிறது என்று தெரியவில்லை. ஒருவேளை அரசாங்கம் இதை ஒரு சமுதாயப் பிரச்சினையாகக் கருதி, அதற்காக வரி விதிக்க முன் வந்திருந்தால், அந்த முறையிலாவது விளக் கத்தைக் கொடுத்திருக்க வேண்டும். இந்த இரண்டுமே இல்லாமல், ஏதோ வரி விதிப்பதற்குப் பல வழிகள் இருக்கின்றன, அந்தப் பல வழிகளில் இதுவும் ஒன்று, ஆகவே இதைச் செய்கிறோம் என்ற முறையில் கொண்டு வந்திருந்தால், நல்லதாக இருக்காது. இந்த அரசு பல அவசரச் சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. வரி விதிப்புக்குக் கூட அவசரச் சட்டத்தை இந்த அரசு கொண்டு வருகிறது என்றால், சட்ட மன்றங்களை, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டிருக்கிற இந்த அவைகளை இரண்டாந்தரமாக ஆக்கி விடுகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. அதிகாரிகளைப் பார்த்து வரி விதிப்புச் சட்டத்தை இயற்றுவதை, அது அவசரச் சட்டம் என்பதால், கொஞ்சம்கூட மாற்றம் இல்லாமல் அப்படியே நிறைவேற்றுகிற பணியைச் செய்கிற காரியமாக ஆகிவிடுகிறது. அமைச்சரவை, சட்டமன்றப் பிரதிநிதிகள் இந்த அவையின் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், அரசியல் சார்பற்ற பிரதிநிதிகள் ஆகியவர்களைக் கலந்து கொண்டு பேசி, அதன் தொடர்பாக வரி விதிப்புச் சட்டம் வந்திருந்தால், அதை நியாயம் என்று ஏற்றுக்கொள்ளலாம். அப்படி இல்லாமல் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டத்தின் மூலமாக ஜனநாயகத்தையே தலைகீழாக மாற்றியமைத்துக் கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்படித்தான் ஜனநாயகம் இருக்க வேண்டும் என்று நாடு முழுக்க ஒரு மரபு இருக்கிறது. ஆனால் ஜனநாயகத்தை இப்படியும் தலைகீழாக மாற்ற முடியும் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இந்தச் சட்ட முன்வடிவு தெளிவாக்கியிருக்கிறது. ஆகவே இந்தப் போக்கு முதலிலே மாற வேண்டும்.



இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், சொகுசு ஓட்டல்களுக்கு, அவர்கள் வசூலிக்கும் கட்டணத்தின் அடிப்படையிலே வரி விதிப்புத் தரத்தை வைத்திருக்கிறார்கள்.

In clause 4, " ...... where the rate of charges for accommodation, ftr residence including charge for aid-conditioning, television, radio, music, extra-beds and the like, but excluding charges for food, drink and telephone-calls is Rupees twenty or more but is less than Rupees fifty per person per day...... " அவர்களுக்கு ஐந்து சதவீதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது.

" ...... where such rate is Rupees fifty or more per person per day....... அவர்களுக்கு பத்து சதவீதம் என்ற அளவிலே வரி விதிப்பு வந்திருக்கிறது. இது குறித்து நான் ஒன்றை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அவையில் இல்லையென்றாலும்கூட, சட்ட அமைச்சர் அவர்கள் நிச்சயமாக அது குறித்து அவருக்குத் தெரிவிப்பார்கள் என்று எண்ணிச் சொல்ல விரும்பு கிறேன். சமீப காலங்களில், கமர்ஷியல் டேக்ஸ் துறையும், சேல்ஸ் டேக்ஸ் துறையும் மிகப் பெரிய அளவிலே வியாபாரிகளை, தொழிலதிபர்களை மிரட்டிக் கொண்டிருக்கிற அமைப்புகளாக இருந்து கொண்டிருக்கின்றன என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஆங்காங்கே திடீரென்று சென்று கணக்குகளை எடு என்று சொல்லி, அவற்றில் உள்ள தவறுகளைக் கண்டுபிடித்து அரசாங் கத்திற்கு வர வேண்டிய நிதியைப் பெற்றால், நாம் மகிழ்ச்சி அடையலாம். இது குறித்து என் சொந்த அனுபவம் ஒன்றையே சொல்ல விரும்புகிறேன். ஒரு வாரத்திற்கு முன்னதாக ஏற்பட்ட அனுபவம். கணக்குப் புத்தகத்தை எடு, சேல்ஸ் டாக்ஸ் ஆபீசர் வருகிறார், நாளைக்கு வா என்று சொல்லி, அதற்குப் பிறகு பணத்தை லஞ்சமாகப் பெற்றுக்கொண்டு, அதன் அடிப்படை யிலே கணக்குகளைத் திருப்பி அனுப்பி விடுகிறார்கள். இந்தத் துறையில் இதை யாருமே தடுக்க முடியாது என்ற அளவிற்கு இது வளர்ந்து போயிருக் கிறது. அப்படி இயங்கிக் கொண்டிருக்கிற துறைக்கு இந்தச் சட்ட முன் வடிவையும் நிறைவேற்றி அவர்கள் கையிலே மேலும் அதிகாரத்தைக் கொடுக்கி றார்கள். ஏற்கனவே சினிமாத் துறையிலும், வியாபாரத் துறையிலும், இன்னும் மற்ற துறைகளிலும் நடப்பது ஓட்டல்களுக்கும் இப்போது வந்திருக் கிறது. ஒருவர் விருந்தளிக்க எண்ணினால், அவர் செல்வாக்கு உள்ளவராக இருந்தால், இந்தத் துறையின் மூலமாக ஏற்பாடு செய்ய வேண்டி வரும். ஒரு ஆய்வுக்கு முன்னதாக ஒரு அதிகாரியை அனுப்பி நாளை அவர் வருகிறார் என்று மிரட்டி விட்டு வந்தால், இரண்டு நாளைக்குப் பிறகு அங்கே ஒரு விருந்தையே நடத்தலாம். இப்படி இந்தச் சட்டத்தின் மூலமாக அதிகாரி

[திரு. க. இராமமூர்த்தி] [1981 மார்ச் .

களிடம் அதிகாரத்தை ஒப்படைத்து அவர்கள் முறையாகச் செயல்படாமல் சீரழிக்கின்ற நிலையை வளர்க்கப் போகிறோம். அதிகாரிகளை இப்படி பாழடிக்கப் போகிறோம். சட்டத்திற்குப் பயந்து நடக்கிற வியாபாரிகளை சட்ட மீறல்களுக்கு உடந்தையாக ஆக்கப் போகிறோம்.

ஓட்டல்களைப் பொறுத்தவரையில், ஒரு அறையில் தங்குபவர்களுக்கு இவ்வளவு வரி என்று தெரிவித்திருக்கிறார்கள். இப்படி வைப்பதைவிடச் சுலபமான முறையிலே "கம்பவுண்டிங் சிஸ்டமாக" ஏன் மாற்றியமைக்கக் கூடாது? யார் தங்கினாலும் அந்த அறைக்கு வாடகையாக 30 ரூபாயை வாங்குகிறார்கள் என்றால், மேலும் 5 ரூபாயை வரியாக வாங்கி அரசாங்கத்திற்குத் தரலாமே! ஒவ்வொரு ஓட்டலிலும் எவ்வளவு அறைகள் என்று வைத்துக்கொண்டு அதற்கேற்ப "கம்பவுண்டிங் முறையில்" வரியை விதிக்கலாமே. ஒரே அறையில் ஒரு நாளைக்கு மூன்று நான்கு பேர் மாற்றி மாற்றி தங்கி ஒவ்வொருவரும் முழு வாடகை தருவதுண்டு. இதை எப்படிக் கண்டுபிடிக்கப் போகிறோம்? இவர்களுக்கு வரியை எப்படிப் போடப் போகிறோம்? இதனால் அதிகாரிகளுக்கும், வியாபாரிகளுக்கும் இடையிலே சிக்கல்கள் ஏற்படும். ஆகவேதான் "கம்பவுண்டிங் முறையை" வைக்க வேண்டும். பம்பாயிலிருந்து வியாபாரிகள் இங்கு வரும்போது ஒரு இரண்டு மணி நேரம் ஓர் ஓட்டல் அறையில் தங்குகிறார்கள்; பிறகு போய்விடுகிறார்கள். இப்படி ஒரு நாளைக்கு நான்கைந்து பேர்கள் வந்து தங்குவார்கள். அதையெல்லாம் கணக்கிலே எடுத்து வரி விதிக்க வேண்டும். அப்படியில்லாமல் இந்த அதிகாரத்தை அதிகாரிகள் கையில் ஒப்படைப்பதன் மூலமாக அதிகாரிகள், சர்வாதிகாரிகளாக நடந்துகொள்கிற சூழ்நிலை உருவாகப் போகிறது என்று சொல்லி, ஓட்டல்களுக்கு வரி விதிக்கும் இந்தச் சட்டம் இந்த நேரத்திற்குத் தேவையற்றது, நிதிநிலை அறிக்கையோடு வந்திருக்கலாம் என்று சொல்லி, அதையும் அவசரச் சட்டமாகக் கொண்டு வந்தது சரியல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். ஓட்டல்காரர்கள் எல்லாம் ஊரை விட்டு ஓடிவிடுவார்கள் என்று இவ்வளவு அவசரமாகச் சட்டத்தைக் கொண்டு வந்தார்களா? அவசரச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு நேரம், காலம் கிடையாதா? அவசரச் சட்டமாக இதைக் கொண்டு வருவதற்கு என்ன நியாயம் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. சமுதாய நாணயத்தைச் சீர்குலைக்கிற ஒரு சட்டம் இது என்று கூறி, இது குறித்த அவசரச் சட்டம் இன்னும் கொஞ்ச நாட்களில் காலாவதியாகிறது, அதுவரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை நிறைவேற்றுவதைத் தள்ளிப் போட்டு, நிதிநிலை அறிக்கை வருகிறபோது ஒரு புதிய சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று சொல்லி, அமர்கிறேன்.



1981 மார்ச் 2]

(நண்பகல் 12-00)

* THIRU A. R. DAMODARAN : Sir, I wish to assure the Hon. Minister that I welcome this Bill in some respects. But, I would like to echo the sentiments expressed by the hon. Member Thiru Ramamoorthy because the Legislature does not like taxation by Ordinance and I must join issue with the Hon. the Minister for Revenue for having issued an Ordinance levying a new tax on rooms in hotels, and that too in the month of October. The Hon. Minister has, in a recent speech, mentioned in a district that the sales tax revenue is going to cross Rs. 400 crores this year. In an inflationary period, sales tax revenues have a buoyancy. I would, therefore, like to say that although I approve, in principle, of a tax on luxuries in hotels for reasons which I shall explain, I certainly agree with my Hon. Friend Thiru Ramamoorthy when he says that taxation by Ordinance by a Revenue Minister is not going to be welcomed by any Legislature. We are all anxious that revenue should be improved but I only mention this because I would not like the Hon. the Revenue Minister to repeat these things in future. Especially, when the Budget was near, it was hardly necessary for him to have come with an Ordinance.

Having said that, I would like to mention one or two points in connection with this Bill for the consideration of the Government. The first point is that, whereas in the Sales Tax Amendment Bill which we shall be considering shortly, a 10 per cent sales tax is levied on food that is given in three-star, four-star and five-star hotels, in this Bill, unfortunately, he has sought to levy a luxury tax on hotels where the room rent is as low as Rs. 20. Sir, I would have welcomed it if he could have kept the limit a little higher because even in ordinary towns, today, the room rent is Rs. 20 or 25. Not only in the City of Madras, but even in ordinary mofussil towns the room rent is Rs. 20. I do not want the Hon. Minister to carry the impression that most of us like to stay in hotels merely for the pleasure of staying in hotels that may exist in certain tourist resorts or in certain tourist stations. Staying in a hotel has become a necessity because of the work involved for businessmen, executives, etc. Therefore, I would have welcomed it if he had raised the limit from Rs. 20 to something a little higher. Unfortunately, all these Bills, being Money Bills, are placed before the Hon. the Lower House and when they come to the Upper House, we have

hardly any time even to give suggestions which could be considered by Government and this is one unfortunate aspect of our legislation. The Hon. Minister has fixed 5 per cent as the rate of tax for hotels where the room rent is Rs. 20 and 10 per cent where the charge is Rs. 50 and above. As far as the Rs. 50 limit is concerned, it will touch only the very high upper middle class bracket. It will touch Government officers who go on Government expense for various committee meetings, etc. I have no objection, in principle, to the levy of a tax on room rent because this is being done all over the world. Even in the U.S.A. and in other countries, there is a hotel tax. Therefore, the Government, if they want revenue, are quite reasonable in levying this tax. The only point is that in clause 5, in the mode of collection of tax, in sub-clause (3), it has been stated "where luxury provided in a hotel to any person is not charged at all, or is charged at a concessional rate, then, the tax on such luxury shall be levied and collected as if full charges for such luxury were paid to the proprietor of the hotel." In other words, it means that if a hotel has a conference—it may be a political conference, political seminar or it may be a conference of the businessmen or it may even be a Sports organisation—it may give a rebate in the charges but this will not be recognised by the Tax authorities. I remember some of these hotels, when we had cricket matches, gave special rebate to the cricketers staying in their hotels. The normal charges may be Rs. 100 and for Sports organisation and business conferences, it may be reduced to Rs. 80. Unfortunately, according to this clause, if the Hotel gives a rebate to those staying in their rooms in connection with a conference attended by 500 or 600 people who come to stay in that hotel for three days, the Sales Tax authorities will not recognise such rebates but will collect sales tax on the amount that would have been normally charged by the hotel. This I consider to be a harsh provision and it is not merely affecting the very rich class but can affect any class which may conduct a conference. The teachers may decide to have a conference in Madras or Madurai and they may have a hotel where the room rent is above Rs. 20. The Hotel may give a rebate of Rs. 10. It is because they have a big conference for three days and food will be sold. It is a matter of business prudence for the Hotel to give such rebate, but the





Tax authorities would not recognise the rebate and would insist on sales tax being collected on what the Sales Tax authority considers to be the normal rate in such a hotel. I consider this to be a very harsh provision. I would, therefore, request the Government to consider—now it is too late for us to meddle with the Act, but detailed rules will have to be framed and if necessary, they may even bring an amendment to the Act in the next session—whether any such rebate given by the hotels could not be recognised by the Tax authorities. I am talking of hotels which actually give rebates and not about bogus rebates. I would request the Government to consider this.

The other point is that, I would echo the plea of my hon. Friend Thiru Ramamoorthy—we do not have to explain the harassment involved in the collection of sales tax. The Government have now levied a tax on luxury hotels and on food supplied in those luxury hotels. In a way I welcome this, because the officials of the Sales Tax Department need not hunt for food and they will be supplied food free of charge and they would get accommodation also free of charge and on that ground, the Government may not increase the salaries of these unfortunate people. It may help the Government in this way. Being a member of the trading and business community, we know where the shoe pinches. As my hon. Friend Thiru Ramamoorthy said, I am not saying that all officials will do that. A small percentage will do it. This is where the unfortunate harshness of the Sales Tax Act comes in. I would echo his plea that Government can easily take the occupancy ratio of these big hotels for the year 1980 and it may be about 75 or 60 per cent and the Government may allow these hotels to pay tax on compounded basis. The Hon. Minister has already introduced it in Cinemas and there is no reason for him not to introduce it on the very same principle in the case of hotels also. I would request the Hon. Minister to allow them to pay compounded tax on the basis of occupancy particulars given by them. Under section 6, every proprietor liable to pay tax shall furnish a monthly return in the prescribed form to the assessing authority within eight days after the expiry of the month to which the return relates and every such return shall show the number of rooms or other accommodation in the hotel, which is intended

to be occupied, the number of persons who occupy such rooms or accommodation, the periods of their stay, the dates of their arrival and departure, the amount of charges recovered, etc., etc. The

(பிற்பகல் 12-10)

filling up of these colossal returns is an unnecessary waste of money for these hotels because, for filling up of these returns, they have to employ a couple of clerks. This, in my opinion, is unproductive labour and waste of labour which can be gainfully and productively employed. Therefore, I would plead that where hotels are able to pay at a compounded rate of tax, the Hon. Minister may consider it. From the point of view of revenue, he must collect the revenue and I have no doubt that he will do it. But, in the case of these middle class hotels, instead of plaguing them for returns in this manner, he may consider collecting taxes from them on a compounded basis, on some accounting basis, which they can furnish for the previous year.

Sir, I now come to section 23 relating to the power to alter the rates of tax. This is one provision where the Legislature is certainly not going to welcome giving the power to a Minister to alter the rates of tax as he pleases. Here, we have a gentleman who issues Ordinances for taxation. What will be the greater danger in giving this section 23 power to the Minister ? Today, he says that it is 5 per cent, tomorrow he will say that it should be $7\frac{1}{2}$ per cent, day-after-tomorrow he will make it $14\frac{1}{2}$ per cent and he will do it all by Ordinances and then come to us for ratification. We are now saying that the Income-tax Act should continue for three years without alteration of rates. The time has come for the Government to have some mercy for tax-payers and to have the rates without alteration at least for one year. The Hon. Miniser is quite welcome to raise the rates in every Budget. Why should he have this extraordinary power under section 23 to alter the rates of taxes ? In the Sales Tax Act, under section 17, we have given the power to the Government only to reduce the rate of tax and not to increase the rate of tax. If the Hon. Minister wants a similar power in this measure, he will be certainly given that power. When in the Sales Tax Act he is not empowered to alter the rate of tax, I think it will be very wrong on the part of the Legislature to approve the giving of power to a Government to alter the rate of tax as it pleases, when it pleases and where





it pleases. I think it is a very dangerous provision. As I said, if we had time to move an amendment, we could have moved an amendment. Unfortunately, the discussion on Government Bills is being arranged in such a manner that we do not even know what Bills are going to be taken up at 10 O' Clock and 11 O' Clock and therefore, we do not have time to give notices of amendments. I hope that the Hon. Minister will consider and drop clause 23 which relates to the power to alter the rates of tax. Even if he should have the power, I would request him not to exercise it, in the interests of maintaining a certain amount of legislative procedure which should be normally maintained in such matters.

Sir, I have made my comments in general. I welcome the Bill but I condemn the Ordinance. I welcome the rate of tax for hotels charging a rent of Rs. 50 and above, but I certainly do not think that it should be made applicable to hotels which charge rents of Rs. 20 and Rs. 25. In these days of inflation, even in small towns like Vridhdhachalam, etc., you cannot get rooms for Rs. 20. I would plead with him to consider this matter and to have the power to reduce the tax, which we will give him with all pleasure, and not the power to increase the tax. Thank you.

*Thirumathi TARA CHERIAN : Mr Deputy Chairman, Sir, I thank you for giving me this opportunity to say a few words on this Bill.

Sir, taxation by Ordinance is, in my opinion, most unhealthy. Compared to other States, it is only recently that many five-star hotels are coming into existence in our State, through investment by big concerns like the India Tobacco Company, etc. In the hotel business, every year there is a period called the lean months, when the hotel management will not be able to recover what they spend. Moreover, a hotel cannot make any profit in the first five or six years of its existence because huge sums would have been spent on building the hotel, recruiting the staff, training them, etc. Therefore, to introduce this measure suddenly will not be very feasible, especially in Tamil Nadu. By this measure, many people will feel shy to open more hotels here.

With all due respect to officials and others, I would say that corruption is prevalent in many departments. The collection of tax as envisaged in this Bill is only going to lead to more corruption. If I have any voice in the matter, I would rather have this Bill shelved. But, now that it has been passed by the Assembly, I may not have any chance whatsoever to do it. Now, having taken the television and the radio to the rural areas, how can we term these facilities in a hotel as luxuries ? Especially, businessmen and others who could afford to stay in a hotel have to have television, radio, etc. Therefore, I feel that if at all Government could exclude radio and television from being classified as luxuries, it will be of great help.

By and large, there are very many things in this Bill that have to be gone into and taken into consideration. Of course, the hon. Members of the Assembly would have gone into them. Anyhow, I would only say that I would rather have waited for a few more years to have a Bill like this than at the present time. Thank you.

*திரு. எஸ். ஆர். இராதா:* மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே. இந்த வரி விதிப்புபற்றி பல்வேறுவிதமான கருத்துக்கள் இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறதென்றாலும், இந்தச் சட்டத்தின் மூலமாக ஆடம்பர வசதிகள் உள்ள விடுதிகளுக்கெல்லாம் வரி விதிக்கும் வகையில் இந்தச் சட்டத் திருத்தம் வந்திருக்கிறதென்றும், இதன் மூலமாகப் பலன் கிடைக்கின்றதென்ற வகையில் அரசுக்குச் சில கோடி ரூபாய் வருவாய் வரவிருக்கிறதென்றும் அறிகின்ற நேரத்தில், இந்தச் சட்டத் திருத்தம் எந்த அளவிற்கு அவசியமானது என்பதை இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பொதுவாக இன்றைக்கு பல்வேறு வசதிகளைப் படைத்திருக்கின்றவர்கள் தங்குகின்ற மிகப் பெரிய ஓட்டல்கள் அரசாங்கத்தின் கண்காணிப்பில் இருக்கின்றனவா இல்லையா என்று நினைக்கும் அளவிற்கு பல ஓட்டல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. விடுதிகள் என்று சொல்கிற நேரத்தில் சாதாரண கிராமங்களில், சிற்றூர்களில், நகராட்சிகளில் இருக்கின்ற விடுதிகளையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு நாம் பார்க்க வேண்டியதில்லை. பெரிய நகரங்களில் இருக்கின்ற பெரிய ஓட்டல்கள் என்று சொல்லப்படுகிற விடுதிகளில் நடைபெறுகிற நிலைமைகளைப் பார்க்கும்போது, அதை அரசாங்கம் கவனிக்கிறதா, இல்லையா என்று நினைத்துக்கொண்டிருக்கும் நேரத்தில், அவைகளைக் கண்காணிக்கும் வகையில் இப்படிப்பட்ட



திருத்தம் வருகிறது. இந்த நேரத்திலே, ஒரேயொரு கருத்தை மட்டும் இங்கே வலியுறுத்திச் சொன்னார்கள். இப்படி அவசரச் சட்டத்தின் மூலமாக வரி விதிப்பதற்கு அவசியம் இருக்கிறதா என்று கேட்டார்கள். எனக்குக்கூட ஆச்சரியமாக இருந்தது. இன்றுதான் நடக்கிறதா, இப்போதுதான் இப்படி நடக்கிறதா, வேறு எந்த ஆட்சியிலும் நடக்கவில்லையா, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் இவ்வாறு வரி விதிக்கப்படுகிறதோ என்ற அச்சம் எனக்கு ஏற்படுகிறது. பல்வேறு ஆட்சிக் காலங்களிலும் அவசரச் சட்டத்தின் மூலமாக வரி விதிப்புகள் நடைபெற்றிருக்கின்றன. அந்த வரி விதிப்புகளின்போது, அவர்கள் ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்கிறார்கள் என்று நினைக்க முடியவில்லை. உட்கார்ந்துள்ள இடத்திற்கேற்ப அது மாறுபடுகிறது. இடத்தைப் பொறுத்துத்தான் மாறுகிறது. காலத்தின் நிலைமை அப்படி அமைந்திருக்கிறது. எந்தப் பக்கத்தில் உட்காருகிறார்களோ, அந்தப் பக்கத்திற்காகப் பேச வேண்டி இருக்கிறதே தவிர, ஜனநாயகம் என்ற அளவில் புதிய தத்துவங்களை உருவாக்குகிற காரியம் நடைபெறுகிறதா என்றால், அதிகாரிகளைப் பொறுத்தவரையில், எந்த ஆட்சியாக இருந்தாலும் அனுமதிக்க மாட்டார்கள். அவர்கள் சில நடைமுறைகளை வைத்திருக்கிறார்கள். ஏதாவது முன் உதாரணங்கள் இருந்தால்தான், அதை அனுமதிப்பார்கள். திடீரென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் அவசரச் சட்டத்தின் மூலமாக வரி விதிக்கப்படுகிறதா ? காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அவசரச் சட்டத்தின் மூலம் வரி விதிப்புகள் வரவில்லையா? மத்திய அரசு அவசரச் சட்டத்தின் மூலம் எந்த வரியையும் விதிக்கவில்லை என்று சொல்ல முடியுமா என்றால், அப்படிச் சொல்ல முடியாது. ஒரு அவசரம் வரும்போது, அவசியம் தேவை என்று கருதும்போது, அந்த வகையில் வரி விதிக்க வேண்டுமென்றால், வந்துதான் ஆக வேண்டும். இதற்கு அவசரச் சட்டம் தேவையா, அவசரம் அவசரமாக விதிக்கலாமா, சட்ட மன்றத்தைக் கலக்க வேண்டாமா, வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்க வேண்டாமா என்று சொன்னால், நிச்சயமாக, கால மாறுபாடுகளால் அப்படிப்பட்ட சூழ்நிலைகள் உருவாகின்றன என்று சொல்ல விரும்புகிறேன். காலம் மாறுவதால் நாமும் கொஞ்சம் மாற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் ஒரே நிலையில் எல்லாவற்றையும் பார்க்கிறவர்கள். அவர்கள் சொல்வதில் தவறு இருக்குமென்று நான் கருதவில்லை. அவர்கள் சொல்ல வேண்டிய கடமையில் இருக்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கு ஆலோசனையாகத்தான் எல்லாவற்றையும் சொல்லுகிறார்கள். இந்த ஆட்சியை, இந்தச் சட்டத்தைத் தாக்க வேண்டுமென்று அவர்கள் பேசுவ

தில்லை. அவர்கள் சொல்லுகிற நேரத்தில் அது இனிமையாகக்கூடத் தெரி கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள், ஜனநாயகத் திற்கு விரோதமானது என்று சொல்லும்போது, ஜனநாயகம் செத்துவிட்டதோ என்று எனக்குத் தோன்றுகிறது. இப்படி முன்னாடி நடைபெறவில்லைபோல இருக்கிறது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் நடக்கிறது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெறவில்லை, காங்கிரஸ் ஆட்சியில் நடைபெறவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது என்பதற்காகத் தான் சொல்லுகிறேன். அவசரச் சட்டத்தின் மூலமாகத்தான் எல்லாம் நடை பெறவேண்டும், அதுதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்

(பிற்பகல் 12-20)

கொள்கை என்று நான் சொல்ல மாட்டேன். சில அவசர நிலைமைகளைக் கருதி, அவசரத்தைக் கருதித்தான் அவசரச் சட்டம் வருகிறது. ஆடம்பர ஓட்டல்களில், 5 நட்சத்திர, 4 நட்சத்திர, 3 நட்சத்திர ஓட்டல்களில் என்ன நடைபெறுகிறது என்பதை நாம் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அங்கிருக்கின்ற உழைக்கின்ற தொழிலாளர் வர்க்கத்துக்கு என்ன சம்பளம் தருகிறார்கள், அவர்களிடம் எவ்வளவு வேலை வாங்குகிறார்கள், எவ்வளவு நேரம் வேலை வாங்குகிறார்கள் என்பதெல்லாம் பலருக்குத் தெரிவதில்லை. அத்தனை கொடுமைகள் அங்கெல்லாம் நடைபெறுகின்றன. அங்கே வந்து தங்குகின்றவர்கள்கூட எதற்காக இவ்வளவு அதிகமான கட்டணத்தை தாங்கள் கட்டுகிறார்கள் என்பதுகூடத் தெரியாமல்தான் கட்டிச் செல்கிறார்கள். ஒரு சாதாரண அறைக்குக்கூட ஒரு நாளைக்கு 100 ரூபாய்க்கு மேல் வாடகை வாங்குகிறார்கள். அங்கு தங்குகிறவர்களிடம் வாடகை விதிக்கும்போது சில வேடிக்கையான, விநோதமான வாடகையைக் கூட விதிக்கிறார்கள்.

* **திரு. க. இராமமூர்த்தி:** நான் சொல்லப்போவதையும் மாண்புமிகு உறுப்பினர் ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'மினிமம் வேஜஸ் ஆக்ட்'-படி அங்கு பணியாற்றுகின்ற, உழைக்கின்ற தொழிலாளர் வர்க்கத்துக்கு ஆவன செய்ய வழிவகை இருக்கிறது. அப்படி இருக்கும்போது, அதைப்பற்றி உறுப்பினர் இங்கே குறை கூறுகிறார் என்றால், இந்த ஆட்சி மீது அவருக்கு என்ன கோபமோ எனக்குத் தெரியவில்லை. இதைக்கூட நிறைவேற்ற வில்லையே என்ற ஆதங்கத்தில் உறுப்பினர் பேசுகிறார் என்று நினைக்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி மினிமம் வேஜஸ் ஆக்ட்க்கு திடீரென்று போவார் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. (சிரிப்பு) என்ன காரணத்திற்காக நான் இந்த ஆட்சி மீது கோபம் கொண்டிருக்கிறேன் என்று நினைத்து அவர் சொன்னார் என்று எனக்குத்



தெரியாது. அவருக்கு அதனால் ஏதாவது அரசியல் லாபம் கிடைக்குமோ என்னவோ எனக்குத் தெரியாது. எந்தச் சமயத்திலும் கோபத்திற்கு ஆளாகுமாறு நான் இருக்கமாட்டேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் திரு. இராம மூர்த்தி அவர்கள் மீது எனக்குக் கோபம் வருமே தவிர, இந்த ஆட்சி மீது கோபம் வருகின்ற நிலைமையில் நான் எப்போதுமே இல்லை. எனக்கிருக்கிற ஆசையெல்லாம் இந்த ஆட்சியைப் பற்றித் தெரியாமல் மாண்புமிகு உறுப்பினர் விமர்சிக்கிறாரே என்ற அன்பின் காரணமாகத்தான் மாண்புமிகு உறுப்பினர் மீது நான் அன்பாகக் கோபப்படுகிறேன். இந்த ஆட்சிக்கு முழு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டியவர் அவர். ஆனால் பாதை மாறிச் செல்கிறாரே, 'அப்படிப் பாதை மாறிச் செல்லாதிருங்கள்' என்பதற்காகத்தான் சொல்கிறேன். ஆட்சி மீதுள்ள கோபத்தில் நான் சொல்லவில்லை என்பதை உறுப்பினர் உணர வேண்டும். அவர் அவசரத்தில் இப்படி ஒரு முடிவை எடுக்கக்கூடாது. இது நீண்ட நாளைக்கு நிற்காது. கொஞ்ச நாளைக்கு வேண்டுமானால் பயன் படும். இப்படி ஒருவரைப்பற்றி ஒருவர் சொல்லிக்கொண்டே இருந்தால் காரியங்கள் நடக்கத் துணை நிற்காது. சில நாட்களுக்குத்தான் அது வரும். பத்திரிகையில்தான் பெரிதாக அது வரும். அப்படியே பத்திரிகையில் வந்தாலும் கூட, பலர் அதை மறந்துவிடுவார்கள். கிராம அதிகாரிகளை ஒழிப்பதைவிட அரசியலில் சில கிராம அதிகாரிகள் இருக்கிறார்கள், அவர்களை முதலில் ஒழிக்க வேண்டுமென்று என்னுடைய நண்பர் ஒருவர் சொன்னார். அது உண்மைதான். அரசியல் கட்சிகளில் இன்றைக்குச் சில கிராமங்களில் அரசியல் கிராம அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களையும் ஒழிக்க வேண்டும். அதனால்தான் கிராமங்கள் உருப்படவில்லை.

**திரு. ப. மாணிக்கம்:** கிராம அதிகாரிகளை அவசரச் சட்டத்தின் மூலம் ஒழிக்க முடியுமா ?

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் இதை என்னிடம் கேட்டிருக்கக் கூடாது. அவசரச் சட்டத்தின் மூலம் ஒழிக்க முடியுமா என்று கேட்கிறார். நான் சொல்லுவதெல்லாம் கட்சிச் சட்டத்தின் மூலம் ஒழிக்க வேண்டும் என்பதுதான். கம்யூனிஸ்ட் கட்சியின் மூலம் அத்தகையவர்களை ஒழிக்க முடியும். ஆனால் மற்ற கட்சிகளில் உள்ள நிலைமைகள் என்ன என்பதைத்தான் நான் இங்கே சொன்னேன். அவசரச் சட்டம் பற்றிப் பேசும்போது, நான் பெரிய சொகுசு ஓட்டல்களில் பணியாற்று கின்ற தொழிலாளர்களுக்கு மினிமம் வேஜஸ் ஆக்டைச் செயல்படுத்துகிறார்களா இல்லையா என்பதுகூடத் தெரியவில்லை என்றுதான் சொன்னேன். அதைப் பற்றி உறுப்பினர் சொல்லியிருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்பேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** நான் இதுவரை ஓட்டல்களில் மினிமம் வேஜஸ் ஆக்டைக் கம்பல்சரியாக இம்பிளிமென்ட் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் இப்போது சொல்வதிலிருந்துதான் அங்கேயெல்லாம் மினிமம் வேஜஸ் ஆக்டை இம்பிளிமென்ட் பண்ணவில்லையென்கிற பயங்கர உண்மையைத் தெரிந்து கொண்டேன்.

**திரு. எஸ். ஆர். இராதா:** உறுப்பினருக்கு நான் உண்மையைச் சொல்லி அதை அவர் புரிந்துகொண்டதற்காக உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைகிறேன். அவருக்கு பல உண்மைகள், பல நேரங்களில் தெரிவதில்லை. அதனால் நான் உண்மைகளை அவருக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய தேவை இருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** அது உங்களைப் பற்றிய உண்மையாக இருக்கிறதே!

**திரு. எஸ். ஆர். இராதா:** யாரைப் பற்றியதாக இருந்தாலும், உண்மை என்றால், அதை உண்மையாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். எனக்கா அல்லது அவருக்கா என்பதல்ல பிரச்சினை. அங்குள்ள தொழிலாளர்களுடைய நிலைமைகளை நான் எடுத்துச் சொல்கிறேன். அப்படி நான். சொல்லும்போது, அரசாங்கச் சட்டத்தை அங்கே அமுல்படுத்துகிறார்களா இல்லையா என்று என்னை உறுப்பினர் கேட்கக் கூடாது. சட்டத்தையும் மீறி இன்றைக்கு நாட்டிலே பல பேர் காரியங்களைச் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். அதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரும்போது. உறுப்பினர் இப்படிப் பேசக் கூடாது. "உங்களுடைய ஆட்சியின்போது நடைபெறுகிறதைச் சொல்கிறீர்களே" என்று சொன்னால், இந்த ஆட்சியில் நாங்கள் போடுகிற சட்டங்கள் எல்லாம் நூற்றுக்கு நூறு அப்படியே அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அல்லது, உரியவர்களால் பின்பற்றப்படுகின்றன என்று சொல்லி, என்னை நானே ஏமாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை. அப்படியானால், சட்டத்திற்கு எதிராகப் பேசுகிறீர்களா என்று உறுப்பினர் திரு. இராமமூர்த்தி கேட்கலாம். என்னுடைய உணர்வுகளைச் சொல்லுகிறேன். அரசாங்கம் போடுகிற சட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று அதிகாரிகளைப் போடுகிறோம். எத்தனையோ குறைகளை இங்கே உறுப்பினர்கள் சொல்லுகிறார்கள். அத்தனையும் சரியாகத்தான் நடைபெறுகின்றன என்று சொல்லுவதற்கு புராட்சித் தலைவரிடமிருந்து வந்துள்ள நாங்கள் பழக்கப்படவில்லை. அந்தப் பழக்கம் எங்களிடம் இல்லாத



தால் உண்மைகளைச் சொல்கிறோம். மாண்புமிகு உறுப்பினருடைய கட்சிக்கு அப்படிச் சொல்வது முறையாக இருக்கலாம். ஆம் என்றால் ஆம் என்று சொல்வதும், இல்லையென்று சொன்னால் இல்லையென்று சொல்வதும் அவர்களுக்கு அது முறையாக இருக்கலாம்.

**திரு. க. இராமமூர்த்தி:** உறுப்பினர் ரொம்பக் கோபப்பட்டுக்கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே உறுப்பினர் மீது அவருக்கு ஏதாவது கோபமா?

**திரு. க. இராமமூர்த்தி:** அப்படி ஒன்றுமில்லை. மாண்புமிகு அமைச்சர் எப்படி இந்த அவசரச் சட்டம் வந்தது என்று சொன்னார். எப்போது இந்த அவசரச் சட்டம் வந்தது என்பதுதான் இப்போதைய பிரச்சினை. உறுப்பினர் சப்ஜெக்டுக்கு வர வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்ல முற்படுகிறேன். பட்ஜெட் வரப் போகிறது. 21 அல்லது 22 ஆம் தேதி பட்ஜெட் வரப் போகிறது. அதற்குள் ஆர்டினன்ஸ் போட்டிருக்கிறார்கள். அவசரச் சட்டத்தின் மூலம் வரி விதிப்புக்குச் சட்டம் கொண்டு வரத் தேவையில்லை. ஜனநாயக உணர்வுக்கு மதிப்பளிக்க வேண்டும். அதைத்தான் நான் சொன்னேன். அதை விட்டுவிட்டு காங்கிரஸ் ஆட்சியில் இதுபோல் உண்டா இல்லையா என்ற வாதம் தேவையில்லாதது.

**திரு. எஸ். ஆர். இராதா:** உறுப்பினர் தம்முடைய எண்ணத்தைத் தெளிவுபடுத்தியமைக்கு நன்றி. பட்ஜெட் வரும்போது இப்படிப்பட்ட சட்டம் தேவையா என்று கேட்டதோடு உறுப்பினர் நின்று விட்டார். அவசரச் சட்டத்தின் மூலம் ஒரு வரி விதிப்பைக் கொண்டு வருகிறோம் என்றால். வரி விதிப்பின் மூலம் தமிழ் நாட்டு மக்களுக்கு நன்மை கிடைக்கப் போகிறது, வளர்ச்சித் திட்டங்களுக்கு அது பயன்படப் போகிறது என்கிற நல்லெண்ணத்தில்தான் கொண்டு வருகிறோம். ஆகவே அதில் தவறு ஒன்றுமில்லை. அதிகாரிகளுக்கு இதன் மூலம் அதிகாரங்கள் கிடைத்து விடுவதன் மூலம் மிகப் பெரிய தவறு நடைபெற இடமளித்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டார். இப்போதுகூட கமர்சியல் டாக்சைப் பொறுத்தவரையில், அவர்கள் நிறைய அதிகாரங்களை வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதில் பணியாற்றுகிற அதிகாரிகள் எல்லாம் நூற்றுக்கு நூறு சரியாகத்தான் நடக்கிறார்கள் என்று நான் வாதாடவும் தயாராக இல்லை; அதுபோல் நூற்றுக்கு நூறு தவறுதலாகத்தான் நடக்கிறார்கள் என்கிற வாதத்தை ஏற்றுக்கொள்ளவும் தயாராக இல்லை. அதிகாரிகளை மட்டும்

குறை சொல்லிக்கொண்டிருக்கிறார்களே, எத்தனையோ வியாபாரிகளை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். வசதி மிகுந்த எத்தனையோ வியாபாரிகள் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரியைத் தராமல் இருக்கிறார்கள்.

* திரு. க. இராமமூர்த்தி: இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் வரி விதிப்பைப் பற்றித்தான் இதில் வருகிறது. அதிகாரிகள் எப்படிச் செயல்படப் போகிறார்கள் என்பதைப்பற்றி நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்லும்போது, கமர்சியல் டாக்ஸ் துறையையோ, சேல்ஸ் டாக்ஸ் துறையையோ எடுத்துவிட வேண்டுமென்று சொல்லவில்லை. என்ன தவறு அங்கெல்லாம் நடைபெறுகிறது என்பதைத்தான் நான் சுட்டிக் காட்டினேன். உறுப்பினர் கூட நட்சத்திர ஓட்டல்களில் நடைபெறுகின்ற தவறுகளை இங்கே சுட்டிக் காட்டினார். அதுவும் ஒரு ஆளும் கட்சி உறுப்பினர் அங்கே தவறுகள் நடைபெறுவதாகவும் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தை அமுல்படுத்தவில்லை என்றும் தெளிவாகச் சுட்டிக் காட்டினார். ஆகவே இந்தத் துறையையே ஒழிக்க வேண்டும். ஒருவரும் இந்தத் துறையில் இல்லாமல் இருக்க வேண்டுமென்கிற பொருளில் நான் சொல்லவில்லை. ஆனால் நடவடிக்கைகள் முறையாக அமுல்படுத்தப்படுவதில்லை என்பதில் எனக்கும் மாண்புமிகு உறுப்பினருக்கும் மாறுபாடில்லை என்பது தெளிவாகியுள்ளது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விரைவில் முடிக்க வேண்டும். விடுதி என்றால் விட்டு விடவேண்டும் என்றுதான் அர்த்தம். இரண்டு பேரும் பிரச்சினைகளை விட்டுவிட வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா: விளக்கத்தை உறுப்பினர் கூறியதற்குப் பிறகு, விடுதியைப் பொறுத்தவரையில் விட்டுவிடலாம் என்று நினைக்கின்றேன். இன்றைக்கு அதிகாரிகளைப் பொறுத்தவரையில், தவறுகள் நடைபெறுகின்றன என்று இங்கே பேசுகிறார்கள். ஆனால் ஆளும் கட்சியில் உள்ளவர்கள் ஏதாவது சொன்னால், உடனே அதை நிரூபிக்க வேண்டுமென்று எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் சொல்லுகிறார்கள். நூற்றுக்கு நூறு தவறு நடக்கவில்லையென்று நான் இங்கே சொல்கிறேன். எந்த அளவுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு வருவாய் அதிகரித்திருக்கிறது என்பதை உறுப்பினர்கள் படித்துப் பார்த்தால் தெரியும். அதே நேரத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமையையும் இப்போதைய நிலைமையையும் நான் ஒப்பிட்டுப் பேசினால், அதுவே ஒரு பெரிய விவாதத்திற்குரியதாக ஆகிவிடும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கட்மைப்பட்டிருக்கிறேன். அந்த விவகாரம் வரவேண்டாம் என்பதற்காகத்தான் நான் குறிப்



(பிற்பகல் 12-30)

பிட்டுக் கூறினேன் இன்றைக்கு இந்தத் துறையைப் பொறுத்தவரையில், அதிகமான வருமானம் வருகிறது. நான் அப்படிச் சொல்வதற்குக் காரணம் இன்றைக்கு இருக்கிற வியாபாரிகள் எந்த அளவிற்கு நடந்து கொள்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் அப்படிப் பேசினால்தான், அதிகாரிகள் இன்னும் துரிதமாக நடவடிக்கை எடுத்து தவறு செய்யும் வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுப்பார்கள் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அப்படி நடவடிக்கை எடுத்தால் நல்லதுதான். அதன் மூலம் அதிகமான வருமானம் வரும். இந்தச் சட்டத்தின் மூலம் அதிகாரிகளுக்கு வாய்ப்பு கிடைக்கிறது என்று சொன்னால், கற்பனையாகச் சொல்லலாம், நாளைக்கு அதிகாரிகள் அந்த ஹோட்டல்களுக்குப் போய் கெடுபிடி செய்யலாம் என்று சொல்லலாம். இன்றைக்கு ஹோட்டல்கள் ஒழுங்காக அரசுக்கு வரி கொடுப்பதில்லை. ஆகவே, அந்தப் பெரிய ஹோட்டல்களை சரியாகக் கண்காணிப்பதன் மூலம் கோடிக்கணக்கான ரூபாய் அரசுக்கு வரியாக வரும் என்பதால், இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு ஹோட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்காக வரி விதிக்கும் சட்ட முன்வடிவின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தாமோதரன் அவர்களும், திரு. இராமமூர்த்தி அவர்களும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். தமிழகத்தில் சமீப காலம் வரை, ஹோட்டல்களில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்களுக்கு ஏற்கெனவே விற்பனை வரி விதிக்கப்பட்டு வந்தது. ஆனால் பிறகு ஒரு வழக்கு உச்சநீதிமன்றம் வரை சென்று—இந்தியா கேட்டரர்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தின் வழக்கு—நீதிமன்றத்திற்குச் சென்று வந்து நிறுத்தப்பட்ட விவரம் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். ஆனால், அரசு மேல் முறையீடு செய்ததன் அடிப்படையில், ஹோட்டல்களில் வழங்கப்படும் உணவு மற்றும் பானங்கள் போன்றவற்றிற்கு வரி விதிப்பு கூடாது என்ற முறையில் இருந்த பிறகும், பிரத்தியேகமாக ஆடம்பர வசதி செய்து கொடுக்கப்படுமானால், விற்பனைக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இவ்வாறு ஆடம்பர வசதி செய்து கொடுக்கும் நிலை இருந்தால், விற்பனை வரி விதிக்கலாம் என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. விற்பனையை ஊக்கப்படுத்தும் முறையின்

கீழ், இந்தச் சிறப்பு ஆடம்பர வசதிகள் செய்து கொடுக்கும்போது, வரி விதிப்பு செய்யலாம், ஆனால், ஒட்டுமொத்தமாக வரி விதிப்பு கூடாது என்று அவர்கள் சொன்னார்கள். அதன் அடிப்படையில்தான் இந்த அவசரச் சட்டம் வந்தது. இதற்கு அவசரச் சட்டம் என்று ஒன்று வர வேண்டுமா, அதற்குரிய அவசியம் என்ன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். இந்தச் சட்டத்தின் நோக்கம் என்னவென்று, தெளிவாக Statement of Objects and Reasons-லே சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசு குறிப்பாக நலிந்த பிரிவினருக்கு நன்மை செய்யக்கூடிய அளவிற்கு பல ஆக்கபூர்வமான திட்டங்களை நிறைவேற்றும்போது, நிதி அதிகமாக அரசுக்குத் தேவைப்படுவதால், எந்தெந்த வழிகளில் ஏழைகளின் தலையில் பளுவினைச் சுமத்தினால் நிதியைச் சேர்க்க முடியும் என்ற அடிப்படையில் பிரச்சினைகளை அணுகும்போது, அப்படிப்பட்ட ஹோட்டல் களில், அந்தவிதமான வசதிகளை அனுபவிக்க வசதி படைத்தவர்கள்தான் வந்து தங்குவதால், இந்த வரி விதிப்புச் செய்யலாம் என்ற அடிப்படையிலே தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு மூன்று மாத காலத்தில் மட்டும் அக்டோபர் 13-ம் தேதியிலிருந்து டிசம்பர் வரையில் 17 லட்சத்து 99 ஆயிரம் ரூபாய் அரசுக்கு வரியாகக் கிடைத் திருக்கிறது. 'நிதியின் அவசரம்' என்ற அடிப்படையிலேதான் இந்த அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதிலே இன்னொரு முக்கியமான பிரச்சினை சிறிய ஹோட்டல், உணவகங்கள், தங்கும் விடுதிகள் போன்றவற்றிற்கு வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்ற அடிப் படையில் அந்த விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நட்சத்திர ஹோட்டல்கள் தவிர ஏனைய சிறிய ஹோட்டல்களுக்கு அவர்கள் விற்பனை செய்யும் உணவு, பானங்கள் போன்றவைகளுக்கு இந்தச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நட்சத்திர ஹோட்டல்களில் பரிமாறப்படும் உணவு மற்றும் பானங் களுக்கு 10 சதவித வரி விதிக்கப்பட வேண்டும் என்றும், இடவசதிக்கென்று விதிக்கப்படும் கட்டணங்களில், சிறப்பாகச் செய்து கொடுக்கப்படும் ஆடம்பர வசதிகளுக்காக வரி விதிக்க வேண்டும் என்றும் இது கொண்டு வரப்பட்டிருக் கிறது. அதிகாரிகள் பலர் தவறு செய்கிறார்கள், இது அவர்களுடைய harassment-க்கு வித்திடாதா என்று கேட்டார்கள். சட்டத்தைப் பயன்படுத்தி முறைகேடுகளில் அதிகாரிகள் ஈடுபட்டால், இந்த அரசு அதை யெல்லாம் நிவர்த்தி செய்யும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது கூட 'கம்பவுண்டிங்' என்ற ஒரு முறை கொண்டு வந்திருந்தால், வரி ஏய்ப்பும் இராது, அதிகாரிகளுடைய தவறும் தடுக்கப்படும் என்ற பொருள்படப் பேசி



னார்கள், அதை அரசு வரவேற்கிறது. இந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தும்போது, நடைமுறையில் அரசு அறிந்துகொள்ளும் பிரச்சினைகளைப் பொறுத்து மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்று அரசு பரிசீ லிக்கும். செக்ஷன் 5, கிளாஸ் 3-ஐப் பொறுத்தவரையில், சில ஆடம்பர வசதி களை கன்செஷன் ரேட்டிலே கொடுக்கும்போது, அவற்றுக்கும் முழு அளவு கட்டணப்படி டாக்ஸ் என்று இருக்கிறது, அதைப் போக்க வேண்டும் என்று சொன்னார்கள். உள்நோக்கத்தைப் பொறுத்தவரையில், பலர் நல்லவர்களாக இருந்தபோதும், ஆங்காங்கே பல தவறுகளிலே ஈடுபட்டு, 'கன்செஷன்' என்று சொல்லி பல ஆடம்பர வசதிகளைச் செய்து கொடுத்து வரியை ஏமாற்று வார்கள் என்ற காரணத்தால்தான், இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது நடைமுறையிலே வரும்போது, என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்பதைப் பார்த்து, அந்தப் பிரச்சினைகளின் அடிப்படையிலே இதை அரசு பரிசீலிக்கும். "Power to alter the rate of tax" என்ற வகையில் அரசு இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியதற்குப் பிறகு இதிலே ஏற்படும் பிரச்சினைகளைப் பரிசீலிக்கும் என்று கூறி, இந்த அவை இதை ஏற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச் சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

நிர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை எதுமில்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே.

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதி களுக்கு வரி விதித்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 4/1981) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1981) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 12-40)

**(4) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1981).**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு, விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு, விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவைத் தொடர்ந்து இப்போது அவையின்முன் இந்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறது. இதில் வேடிக்கை எனக்குக் கொஞ்சம் சங்கடமாக இருந்தாலும்கூட, நகைச்சுவையாக இதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

---

@ 95-100 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சடிக்கப்பட்டுள்ளது.



இதுவரை அமைந்த அமைச்சரவைகளிலே, தற்போதைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்தான் மிக அதிகமான அளவுக்கு "ரிட்ராஸ்பெக்டிவ் விதிமுறைகளைக் கொண்ட" சட்ட முன்வடிவுகளை அவையில் அறிமுகப்படுத்தியிருக்கிறார். அந்த அளவுக்கு எதிர்காலத்தைச் சீர்திருத்துவதோடு அமையாமல் கடந்த காலத்தையும்கூட சீர்செய்யும் முயற்சியில் மிகுந்த முனைப்பைக் காட்டிக்கொண்டிருப்பவர் நமது வருவாய்த் துறை அமைச்சர் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(ஒரு குரல்—ரிட்ராஸ்பெக்டிவ் ரெவின்யூ மினிஸ்டர்)

அந்த அளவுக்கு இந்தச் சட்ட முன்வடிவில் பல்வேறு பிரிவுகள் 'ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' கொண்டிருக்கின்றன. இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், மிக விரைவிலேயே நாம் நிதிநிலை அறிக்கையைச் சந்திக்க இருக்கிற நேரத்தில் இத்தகைய வரிவிதிப்பைக் கொண்ட ஒரு அவசரச் சட்டத்தை நிறைவேற்றுவது சரிதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதை நான் கேட்டபோது, உரிமை கலந்த கோபத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் வெளிக்காட்டினார்கள். அதைத் தொடர்ந்து வரும் இந்தச் சட்ட முன்வடிவு, ஒரு வரிவிதிப்புச் சட்ட முன்வடிவு என்ற பெயரில் இல்லாமல் வந்திருக்கிறது. இதைப் பொறுத்தவரையில், இது "லெஜிஸ்லேஷன் ஃபார் ரீஸ்ட்ரக்ச்சர்" என்ற அளவில் வந்திருக்கிறது. ஏற்கெனவே இருந்த விதிகளை அல்லது சில அமைப்புகளை முறைப்படுத்த ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்து அதனை இப்போது சட்டமாக்க ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இப்போது சீரமைப்பு செய்யும்போது, ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவை உறுப்பினர்களுக்கு அறிவித்திருக்க வேண்டும். ஏற்கெனவே இருந்த முறையின் அடிப்படையில் அரசுக்கு எவ்வளவு வருவாய் வந்தது, இப்போது சீரமைப்பு செய்த பிறகும் அதே அளவுக்குத்தான் வருவாய் வர இருக்கிறதா அல்லது வருவாய் மாறுபாடுகிறதா என்பதோடு, மாறுபடுகிறது என்றால், எந்த அளவுக்கு இருக்கும் என்பதுபோன்ற விவரங்களை இந்த அவைக்குத் தந்திருக்க வேண்டும். சீரமைப்பு என்று சொல்லும்போது, நிர்வாக ஒழுங்கிற்காக சிலவற்றைச் சீர்படுத்துகிறோம், அதற்கான நடவடிக்கையை மேற்கொள்கிறோம் என்றால், அதில் தவறு இல்லை. அப்படிப்பட்ட மாற்றம் செய்யும்போதுகூட, அதனால் வருவாயில் மாற்றம் ஏற்படுகிறதா இல்லையா என்பது பற்றிய விவரத்தை வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தந்திருக்க வேண்டும். அல்லது குறைந்தபட்சம் இந்த மாற்றத்தின் மூலமாக அரசுக்கு அதிகமான வருவாய் இருக்காது, இது ஒரு புதிய வரிவிதிப்பாக

இருக்காது என்றாவது சொல்லியிருக்க வேண்டும். அப்படி அவர் சொல்லாத காரணத்தால், இது ஒரு புதிய வரி விதிப்புச் சட்ட முன்வடிவுதான் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. அல்லது இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கங்கள் மிகவும் அவசியமானவை என்று சொல்லப்படுமானால், அவைகளைப்பற்றி இந்தத் துறையும், இத்துறைக்குப் பொறுப்பேற்றுள்ள அமைச்சர் அவர்களும் தொடக்கத்திலேயே கவனித்திருக்க வேண்டும். ஏற்கெனவே ஒருமுறை ஆட்சியில் இருந்த அனுபவமும், இதைக் கண்டறியும் அவகாசமும், சக்தியும் இருந்தும்கூட இவற்றைப்பற்றி முழுமையாக, சரியாக ஆராயாமல் அப்போது சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிவிட்டு, இப்போது இவ்வளவு காலத்திற்குப் பிறகு அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்திருக்கிறார்கள் என்பதிலிருந்தே, இதில் ஏதோ ஒரு சிக்கல் இருக்கிறது என்பது தெளிவாகிறது. எனவேதான் அண்ணா தி.மு.க. அரசு இத்தகைய சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதன் மூலம் வரிவிதிப்பு அதிகாரத்தை மறைமுகமாகச் செயல்படுத்துகிறது, இது தவறானது என்பதைக் கூற விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவின் மூலம் அரசுக்கு எவ்வளவு கூடுதல் வருவாய் வரும் என்பதை அமைச்சர் அவர்கள் கணக்கிட்டிருந்தால், அதை அவைக்குத் தெரிவித்திருக்க வேண்டும். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், ஏழை எளிய மக்களுக்கு நன்மை செய்யவும், அவர்களுடைய நல்வாழ்வை உறுதி செய்யவும் வரிவிதிப்பு தேவைப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, இச்சட்ட முன்வடிவிற்கே கூட திருத்தம் செய்யும் அவசியம் ஏற்படலாம். இந்த வரி விதிப்பையே உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்படலாம். எனவே இத்தகைய விவரங்களையெல்லாம் இந்த அவையின் நம்பிக்கைக்கு எடுத்துக் கொண்டு இங்கே சொல்லியிருக்க வேண்டும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

* திரு. சி. இராமலிங்கம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். வரிவிதிப்பு முறையில் மாற்றங்கள் செய்து வரிவிதித்தால்தான், வருவாயைப் பெருக்கி நாட்டிற்கு நல்ல காரியங்கள் செய்ய முடியும் என்பது அனைவருக்கும் தெரியும். மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் மில் துணிகள்மீது செஸ் வரியினை 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக உயர்த்தி அதன் மூலம் நெசவாளர்களுக்குப் பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்த வழிவகை செய்திருக்கிறார். அதோடு நெசவாளர்களுக்காக என்று ஒரு ஆறு கோடி ரூபாய் ஒதுக்கி நல்ல காரியங்களைச் செய்ய இருக்கிறார். அன்றைய பிரதமர் நேரு அவர்களால் 1954 ஆம் ஆண்டு மில் துணிகளுக்கு செஸ் வரி விதிக்கப்பட்டது போல் மேற்கொண்டு ஐந்து சதவீதம்



அதிகப்படுத்தியிருக்கிறார்கள். இதையெல்லாம் நாங்கள் வரவேற்கிறோம். அதைப்போல நமது மாநில அரசும் விற்பனை வரியின் மூலம் பல தரத்தில் வசூல் செய்து வருகிறது. ஆனால் எந்த வியாபாரியும் முழுமையாக வரியைக் கட்டுவதில்லை. அத்தகைய வியாபாரிகளுக்கு அரசியல்வாதிகளான நாம் உடந்தையாக இருக்கிறோம்.

திரு. ப. மாணிக்கம் : எல்லா உறுப்பினர்களையும் குற்றஞ்சாட்டுவதுபோல் பேசுவது முறைதானா என்று தலைவர் அவர்கள் கூற வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி : அத்தகைய வியாபாரிகளுக்கு எங்கள் பக்கத்திலே இருப்பவர்கள் உடந்தையாக இருக்க முடியாது. அவர்கள் எங்களைக் கூப்பிடவும் மாட்டார்கள். காரணம் அதுவே அவர்களுக்குச் சங்கடமாகப் போய்விடும்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் : இப்படிப் பொதுவாகச் சொல்லாமல், எந்த வியாபாரி, எந்த ஊழல் செய்தார் என்று சொல்ல வேண்டும். அவர் யாருக்கு வேண்டியவர் என்ற விவரத்தையும் சொன்னால் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.

திரு. சி. இராமலிங்கம் : நான் உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்களைச் சொல்லவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : மற்ற மாண்புமிகு உறுப்பினர்களை அவமதிக்கிற வகையில் ஒரு உறுப்பினரின் பெயரை மட்டும் சொல்வது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. இராமலிங்கம் : திரு. இராமமூர்த்தி அவர்களைப்பற்றி தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை. அவர்களின் ஆட்சிக் காலத்தில் அவருடைய கட்சியைச் சார்ந்த எம்.எல்.ஏ-க்கள், வக்கீல்கள் ஆகியோர் வழக்காடியிருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, இவ்வாறு பேசுவது அவைக் குறிப்பில் ஏறுவது சரியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் எந்த வியாபாரிக்கு யார் துணை போனார்கள் என்பதுபற்றி தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டினால்கூடப் பரவாயில்லை. பொதுவாகவே கடந்த காலத்தில் இருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் துணை போனார்கள் என்று சொல்வது தவறு. அண்ணா தி.மு.க. வில் இருக்கும் தற்போதைய எம்.எல்.ஏ.-க்கள் அதைத்தான் இப்போது செய்கிறார்கள் என்று நான் சொல்ல முடியும். அது நன்றாக இருக்காது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

**திரு. சி. இராமலிங்கம் :** அப்படிப் பலர் போயிருக்கிறார்கள். இல்லை என்று யாரும் மறுக்க முடியாது. நான் கடந்த கால வரலாற்றைத்தான் சொன்னேன். தனித்தனியாக இவர் இல்லை, இவர் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசும்போது, அப்படிப்பட்ட வியாபாரிகளைப் பட்டியல் போட்டுக் காட்ட முடியுமா என்றார்கள். அந்தப் பட்டியல் என்னிடம் இல்லை. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அப்படிப்பட்டவர்கள் இருந்தார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** அதுபற்றிய ஆதாரம் இல்லாமல் இங்கே பேசுவது சரியல்ல.

**திரு. சி. இராமலிங்கம் :** இப்போது என்னிடம் பட்டியல் இல்லை. அவ்வளவுதான். ஆனால் பல பட்டியல்கள் ஏற்கெனவே விளம்பரப்படுத்தப் பட்டிருக்கின்றன. நான் என்ன சொல்ல வந்தேன் என்றால், வரி போட்டால் தான், பல நல்ல காரியங்கள் நடக்கும். தேங்காய்க்கு வரி தேவையில்லை என்று வியாபாரிகள் சொன்னார்கள். தேங்காய் மீது இருக்கும் வரியை எடுத்தால், விலை குறையும் என்று சொன்னார்கள். தி.மு.க. காலத்தில் அந்த வரியை ரத்து செய்தார்கள். அடுத்த நாளே தேங்காய் ¾ ரூபாய்க்கு விற்கும் என்று சொன்னார்கள். ஆனால் தேங்காய் விலை ஒரு ரூபாய்க்கும் இரண்டு ரூபாய்க்கும் உயர்ந்தது. அதைப் போலவே எங்கள் ஆட்சிக் காலத்திலும் தேங்காய் மீது வரி போட்டதும் அது கூடாது என்று கேட்டார்கள். சரி என்று நம்பி எடுத்தார்கள். இன்றைக்கு ஒரு தேங்காய் ஒன்றரை ரூபாய்க்கு விற்கிறது. பச்சைக் காய்கறிகள், மற்றும் அழுகும் பொருள்கள் மீது வரி கூடாது என்று சொல்கிறார்கள். இப்படி எல்லாவற்றின்மீதும் வரி போடக் கூடாது என்று சொன்னால், எப்படி மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்று தெரியவில்லை.

(பிற்பகல் 12-50)

**திரு. க. இராமமூர்த்தி :** வரி போடாமல் விட்டது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்தான். அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் வரி போடப் பட்டது, பிறகு எடுக்கப்பட்டது. அவர்களுடைய ஆட்சியில் மறுபடியும் வரி போட வேண்டுமென்று சொல்லுகிறார் மாண்புமிகு உறுப்பினர் என்று நினைக்கிறேன்.



**திரு. சி. இராமலிங்கம் :** அதனால் அரசுக்கு வர வேண்டிய வருமானம் போய்விட்டது. ஒருவேளை மீண்டும் அரசு அதைப் பரிசிலனை செய்யலாம் என்று சொல்லி, வரி போட வேண்டும் என்று நான் சொன்னதற்குக் காரணம் என்ன என்பதைச் சொல்ல விரும்புகிறேன். கைத்தறித் துணியின் மீது வரி போட வேண்டும் என்று நான் சொன்னதற்குக் காரணத்தை விளக்க விரும்புகிறேன். இந்தியாவிலிருந்து கைத்தறித் துணி 300 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று செய்திகள் பத்திரிகையில் வருகின்றன. புரட்சித் தலைவர் அவர்களுடைய அன்பாலும், உங்களுடைய ஆசியாலும் நான் கோவாப்டெக்ஸ் நிறுவனத்தில் பொறுப்பேற்றிருக்கிறேன். அங்கேயிருந்து வெளிநாடுகளுக்கு எவ்வளவு கைத்தறித் துணி ஏற்றுமதி செய்யப்படுகிறது என்ற கணக்கைப் பார்க்கிறபோது, அது இரண்டு கோடி ரூபாய் அளவிற்குக் கூட இல்லை. ஆனால் இந்தியாவிலிருந்து 300 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்ற தகவலைப் பத்திரிகையில் போடுகிறார்கள். எந்த மாநிலத்தில் அவ்வளவு அதிகமாக ஏற்றுமதி செய்கிறார்கள் என்று துருவித் துருவி விசாரித்ததில், எங்கேயும் அப்படி ஏற்றுமதி செய்வதாகத் தெரியவில்லை. கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்யாமல், விசைத் தறியில் நெய்த துணிகளைக் கைத்தறித் துணி என்று முத்திரையிட்டு அனுப்பப்படுவதாகத் தெரிகிறது. ஆகவே கைத்தறித் துணிக்கு ரூபாய்க்கு ஒரு பைசா என்றோ, ஆயிரம் ரூபாய்க்கு இவ்வளவு என்றோ வரி விதித்தால், கைத்தறித் துணிகள் அரசாங்கத்தின் கணக்கில் வரும்போது போலி கைத்தறித் துணிகளைக் கண்டுபிடிக்க முடியும் என்பது என்னுடைய அறிவுக்கு எட்டியது. வரி என்று வருகிறபோது, எத்தனை, எத்தனை தறி இருக்கிறது, எந்தெந்தத் தறியில் எவ்வளவு துணிகள் நெய்யப்பட்டன, எவ்வளவு நூல் வாங்கப்பட்டது என்ற கணக்குகள் வந்து சேரும். அல்லது மத்திய அரசு மில் துணிகளின் மீது செஸ் வரி போட்டதனால் மில் துணிகளின் விலை ஏறும், கைத்தறித் துணிகளின் விலை குறைந்த நிலையிலேயே இருக்கும். இப்போது கைத்தறித் துணியும், மில் துணியும் சமமான விலையில் இருக்கின்றன. கைத்தறியில் நெய்த பாலிஸ்டர் துணி 32 ரூபாய்க்குக் கொடுக்கிறோம் என்றால், மில்லில் நெய்யப்பட்ட பாலியஸ்டர் துணியை 33 ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள். கைத்தறித் துணியை 33 ரூபாய்க்குக் கொடுக்கும்போது, அதை வாங்க மக்கள் தயாராக இருக்கிறார்கள். ஆகவே மத்திய அரசு வரி போட்டதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். மில் துணிகளுக்கு அப்படி வரி போடுவதால் கைத்தறித் தொழில் நல்ல முறையில் வளரும்.

[திரு. சி. இராமலிங்கம்] [1981 மார்ச் 2

பிரதமர் அவர்களும், ஜனாதிபதி அவர்களும், புரட்சித் தலைவர் அவர்களும் கிராமங்களில் தொழில்கள் வளர வேண்டுமென்று சொல்லுகிறார்கள். கிராமங்களில் இயந்திரங்கள் சீக்கிரமாகப் பரவ முடியாது. ஆனால் கைத் தொழில் சீக்கிரமாக வளரும். அதனால் கிராம மக்களின் வேலையில்லாத் திண்டாட்டம் போகும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க மிகச் சிறந்த தொழிலாக, சிறந்த வழிகாட்டியாக, மக்களை வாழ்விப்பதாக அமைவது கைத்தொழில்தான்.

300 கோடி ரூபாய்க்கு மேல் உள்ள போலித் துணிகளை வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். இந்தியா முழுமைக்கும் 5 கோடி ரூபாய் அளவில் உள்ள கைத்தறித் துணிதான் ஏற்றுமதி ஆகின்றது என்று நினைக்கிறேன். மற்றவைகள் எல்லாம் போலியானவை. தென் ஆப்பிரிக்காவிற்கும், மேற்கு ஆப்பிரிக்காவிற்கும் "ரியல் மதராஸ் கர்சீப்" என்ற துணி பெங்களூரில் உள்ள விசைத் தறியில் நெய்யப்பட்டு, கைத்தறித் துணி என்று அனுப்பப்படுகிறது. சேலம் மாவட்டத்திலும் விசைத் தறியில் "ரியல் மதராஸ் கர்சீப்" என்ற துணி நெய்யப்பட்டு, கைத்தறித் துணி என்று சிலிட்டு அனுப்புகிறார்கள். இதைப் போக்க வேண்டும். அதற்காகத்தான் இந்த அரசு, விசைத் தறியில் உற்பத்தியாகின்ற துணிகளுக்கு மத்திய அரசு 15 சதவீதம் செஸ் வரியைப் போட்டிருப்பதைப்போல, விசைத்தறித் துணிகளுக்கு வரி போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வியாபாரிகள் விற்பனை வரி போட்டு விற்கும் பொருளை மக்கள் வாங்குகின்றார்கள்—வரிவசூலால் வரும் பணத்தை அரசுக்குச் செலுத்துவதில்லை—இது வியாபாரத் தந்திரம் என்பார்கள். ஒரு பிக்பாக்கெட்காரன் ஐந்து ரூபாய் எடுத்துவிட்டால், அதைத் திருடு என்று சொல்லுகிறோம். வியாபாரிகள், போடுகிற வரியைக் கட்டாமல் இருந்தால், அதை என்னவென்று சொல்லுவது? அதை அவர்களுடைய திறமை என்று சொல்லலாம். எப்படிச் செய்தாலும், எடுத்தாலும் அது திருடுதான். அதை மறைத்தால் என்ன பொருள்? எங்களுடைய நெசவாளர்களுக்கு நிறைய கூலி கிடைக்க வேண்டும் மற்றவர்களைப் போல. எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு எல்.டி.சி., யூ.டி.சி.யாகப் பணியாற்றுகிறவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அளவிற்கு எங்களுக்குக் கிடைக்க வேண்டும். ஒரு சமுதாயத்திடம் வரி வாங்கி மற்றொரு சமுதாயத்திற்கு சம்பளமாகக் கொடுத்துவிட்டு, மற்ற சமுதாயத்தினரை வறுமையில் விடுவது சரியல்ல. ஆகவே மில் துணிகளுக்கு மத்திய அரசாங்கம் வரி போட்டதைப்போல, விசைத் தறித் துணிகளுக்கு வரியைப் போட்டு ஏழை கைத்தறி நெசவாளர்களுக்கு வாழ்வு கொடுக்க வேண்டும் என்று கேட்டு இந்தச் சட்டத்தை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.



1981 மார்ச் 2]

THIRU A. R. DAMODARAN : The Hon. * * * has brought forth an amendment to the Sales Tax Act .........

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, * என்று சொல்லக் கூடாது. ஒரு அமைச்சருக்கு பல இலாக்காக்கள் இருந்தாலும், அவரை இப்படித்தான் அழைக்க வேண்டும் என்று அரசு அறிவித்திருக்கிறது. அதன்படி வருவாய்த் துறை அமைச்சர் என்றுதான் சொல்ல வேண்டும். * என்று சொல்வதால் வெளியே தாக்குறைவாகக் கருதுவார்கள். நான் அப்படிக் கருதவில்லை. மற்றவர்கள் அப்படிக் கருதுவார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : * என்பவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

THIRU A. R. DAMODARAN . I have no intention of offending the Hon. Minister. I am sorry. It is not an unparliamentary word. Since the Hon. Minister objects, I withdraw that word.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : * என்று அமைச்சர் யாரும் இல்லை. 18 அமைச்சர்கள்தான் இருக்கிறார்கள். காபினெட்டில் யாராவது ஒருத்தர் அப்படி இருந்தால் ஏற்றுக்கொள்கிறேன். இல்லா தவற்றைச் சொல்லுகிறார்கள். கவர்னர் இடத்திலே செல்லாமல், பதவிப் பிரமாணம் எடுக்காமல் * என்று ஒருவர் இருக்கிறாரோ என்று மக்கள் எண்ணுவார்கள். அதற்காகத்தான் சொல்லுகிறேன்.

THIRU A. R. DAMODARAN : I am sorry. I did not mean any offence to the Hon. Minister. It was mentioned in humour. Since he seems to feel offended, I shall refer to him as the Hon. Minister for Revenue.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் அதைப்பற்றி வருத்தப்படவில்லை. நாட்டு மக்கள் தவறாக எண்ணிவிடுவார்கள் என்பதுதான். * என்று 19-வது அமைச்சர் இருப்பதாக எண்ணிக்கொண்டு தேடுவார்கள். அது மட்டுமல்லாமல், கவர்னர் இடத்திலே போகவில்லையே, கவர்னர் இடத்திலே பதவிப் பிரமாணம் எடுக்கவில்லையே என்று தவறாக எண்ணுவார்கள். அத்தகைய தவறான எண்ணத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எல்லோருக்கும் இருப்பதைப் போல எனக்கும் இருக்கிறது.

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

(பிற்பகல் 1-00)

* THIRU A. R. DAMODARAN : Sir, the Hon. the Minister for Revenue has brought forth another Bill in replacement of an Ordinance that relates to his department. The Ordinance seeks to abolish the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939. That Act has been in existence for 41 years and I think it was introduced by the late Thiru C. Rajagopalachari, soon after the enactment of the General Sales Tax Act. It has been in existence for 41 years and there is no harm in the Hon. Minister repealing that Act because even in 1959, it became an out-dated Act. When Dr. Lokanathan made his recommendation that almost all petroleum products should be brought over to single point taxation, the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act became virtually dead. Since my hon. Friends Thiru Eradha and Thiru Ramalingam have chosen to accuse the trading and business community as being perpetual evaders, I would like to say for their information that as far as petroleum products are concerned, the tax collection is as high as 99.9 per cent and there is no evasion in petroleum tax because it has been made single point tax under Dr. Lokanathan's recommendation in 1959. We recognise that there are a few people who will evade taxation measure and every such Act will contain provisions for punishments and penalties, whether it is Income-tax Act, Excise Duty Act, Wealth Tax Act, or Estate Duty Act. In all these Acts there will be a few people who will evade the taxation and punishment has been prescribed. That is why the business community has pleaded that it would be wrong to say that all or the entire business community is involved in taxation fraud, as otherwise the Hon. the Minister for Revenue would not be able to get Rs. 410 crores out of sales tax. He has not mentioned anything while introducing the Bill in this House. I have to quote what he has mentioned in the Legislative Assembly while introducing this Bill. He seems to have informed that House that by reason of this Bill he has not increased the tax for any commodity under the Bill. I take it that represents the statement he has made in the Legislative Assembly. Since he has not contradicted, I will take it that he has mentioned it in this House also. I wish to point out to him that on November 1, 1980, when he introduced this Ordinance bringing the petroleum products into the First Schedule of the



General Sales Tax Act and when he changed the levy of tax from volumetric basis to percentage basis, I was not surprised because all the other Southern States have done this and for the past five years, I have been anticipating the introduction of this at some time or other. They could have done this in the last Budget itself. But he has brought in this amendment now. When the Ordinance in respect of hotel tax was proposed to be brought in, he must have asked his deparement, "What else can I do to bring in all the amendments ?" and he has been advised to bring forth this Bill. By this switching over to the percentage in the petroleum products, the Hon. Minister has increased the revenue from petroleum products by Rs. 3.86 crores in a full year. How does he inform the Members of the Legislature that by introducing this measure he has not increased the taxation on this product ? I would like to give him details; probably, these details may not have been brought to the notice of the Hon. Minister. The tax on High Speed Diesel, including the 5 per cent surcharge, prior to 1st November 1980, that is, prior to the Hon. Minister's Ordinance, was Rs. 178.50 per kilolitre. The day the Hon. Minister introduced the Ordinance, levying the tax at 9 per cent plus 5 per cent surcharge, the tax on High Speed Diesel per kilolitre went up to Rs. 192-14 which means slightly less than Rs. 14 per kilo litre of High Speed Diesel. Since the Sate is selling 70,000 kilolitres per month, the revenue accruing to the Government of Tamil Nadu by switching over to the percentage system was nearly Rs. 9.7 lakhs per month. Now, that is the first part of the story. This is where the Hon. Minister has not given us the correct position. He should have told us that he expected to get a revenue of one crore of rupees. But, since he has stated that this measure will not bring in taxation, I think there has been some error in facts. Again, referring to the principle, I do not know what State Governments did in the past, but taxation by Ordinance, by itself, especially in such measures, does not give us an opportunity to represent so many matters and that is why we object to it. Then, on January 13, when the Government of India increased the price of High Speed Diesel by 37 paise per litre, the tax on High Speed Diesel, because the Hon. the Revenue Minister put it on percentage basis, went up from Rs. 192.14 to Rs. 227.10. In other words, this very simple, innocent measure that the Hon. the Revenue Minister has introduced has raised the tax revenues of the Govern-

(Thiru A. R. Damodaran) [1981 மார்ச் 2

ment of Tamil Nadu by almost Rs. 49 per kilolitre on 70,000 kilolitres per month or Rs. 3.86 crores to Rs. 4 crores of revenue for the State in a full year. Now, this is where I have my arguments with the Hon. the Revenue Minister because I believe that taxation measures should only be introduced in a Budget and especially so in a State Budget where the annual taxation is likely to be less than Rs. 10 crores or Rs. 15 crores. We can never exceed that total figure because the resources of the State are limited. When such is the case, why was it necessary for the Hon. Minister to introduce an Ordinance in the month of October ? I mention this, although he may feel it, because he seems to have a very pronounced predilection for taxation Ordinances. National Security Ordinances, Essential Service Ordinance, even the Village Officers Ordinance which my hon. Friend Thiru Ramamoorthy must have criticised very severely yesterday, all these may be politically necessary at some stage or the other in the life of a State. But a taxation Ordinance is something that Members of the Legislature would not generally welcome because it does not give them an opportunity to make their representations about the harshness of a taxation measure. That is why I want to point out that both in motor spirit as well as in High Speed Diesel, the tax-rates have gone up, one when the Government of India increased the rates and another because even on the day the Hon. Minister introduced the Ordinance, the rates went up and we had to increase the rates the very next day by 2 paise per litre or 1.4 paise per litre, rounding off to the nearest kilolitre. I only want to point out that when he brought this measure, he should have also acquainted the Members of the Legislature with the amount of revenue that he would get from this measure so that the Members of the Legislature might be able to decide on the taxation-effort that might be required in the coming Budget. I have a very wholesome fear because I know the rates of tax in the other Southern States and the Hon. Minister certainly would be aware of it. It is 11 per cent in Andhra Pradesh. 10.5 per cent in Karnataka and is very high in Kerala. But there is one thing which I would like to inform him because in the coming Budget the temptation to increase the tax would be placed before him. Tamil Nadu is in a different position from Andhra Pradesh, Kerala and Karnataka as far as consumption of petroleum products is concerned. The consumption in Tamil Nadu is 70,000 kilolitres of High Speed Diesel,



1981 மார்ச் 2] (Thiru A. R. Damodaran)

whereas in Andhra Pradesh it is only 40,000 kilolitres and in Karnataka it is only 38,000 to 40,000 kilolitres. Tamil Nadu being industrially well-developed, it was consciously done even from the days of Thiru Venkataraman when he was the Industries Minister here when they wanted to keep a lower rate of tax on petroleum products because it was meant to give a fillip to indus-

(பிற்பகல் 1-10)

trial development in Tamil Nadu. I only wanted to mention this, because in the coming Budget, the Hon. Minister will be losing sleep on all the measures he is thinking about to raise revenues. I hope that petroleum products would not be subjected to further heavy doses of taxation and that he would consider that from the aspect of industrial development, there is very special plea for having a lower tax in Tamil Nadu.

The other point is that all over the world right from the year 1973 onwards, Governments have reduced excise duty and sales tax on petroleum products, because the price of petroleum products is being dictated by the Middle East producers and has gone up from 2 dollars a barrel to 36 dollars a barrel. If taxation is resorted to in addition to the high price which is being charged by the foreign suppliers, we would be creating terrific inflation in the country from which we have already suffered during the past two years because of increase in price of petroleum products. I would request the Hon. the Minister for Revenue to bear this in mind because any increase in the price of petroleum products would result in increase in the price of all commodities that are transported by diesel trucks, including such articles as milk, eggs, vegetables, fish, meat, etc., and all edible items. I would therefore plead with him to consider this aspect before he resorts to any further heavier taxation on petroleum products. I welcome this Bill on this point, namely, that he has done away with the 1939 Act which had become absolutely useless and that he has also introduced other measures in keeping with the recommendation of the Lokanathan Committee and that he has exempted the transactions between Oil Companies. The Madras Refinery was having some problems in this regard and I am glad that he had introduced this amendment and I, therefore, welcome this Bill as it has been introduced. I only wanted to mention that the

(Thiru A. R. Damodaran) [1981 மார்ச் 2

Hon. Minister should have taken us into confidence on the revenue yielding aspects of this not so very innocent measure which he had brought forward.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இதை முழுவதுமாக எதிர்க்கவில்லை என்பது நன்றாகத் தெரியும். கடைசியில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள், இதை வரவேற்றுத்தான் பேசியிருக்கிறார்கள் என்றாலும், முறைகளில் சில மாற்றங்கள் இருக்கலாமென்று தெரிவித்ததாகக் கருதுகிறேன். இந்தச் சட்ட முன்வடிவில் அதிகமாக எதையும் செய்யவில்லை என்பது உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இங்கே பேசுகிறபோது, அமைச்சரவர்கள் 'ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' கொடுத்து கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிக் கொண்டுவரவில்லை. என்றைக்கு இதைப் போடுகிறோமோ அன்றைக்குதான் இது சட்டமாக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'நோட்டிபிகேஷன்' எந்தத் தேதியில் போட்டிருக்கிறோமோ, அன்றைக்குத்தான் நடைமுறைப்படுத்தியிருக்கிறோம்.

THIRU K. RAMAMOORTHY : There are four things in clause 1, sub-clause (2). The first says "shall be deemed to have come into force on the 29th October 1980". The second says "shall be deemed to have come into force on the 1st November 1980". The third says "shall be deemed to have come into force on the 17th December 1980". The fourth says "shall be deemed to have come into force on the 31st December 1980". So, the dates differ and they go back. Anything that dates back is retrospective.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், வரிவிதிப்பு குறித்த சட்டங்களை ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்துக் கொண்டு வந்தால், இத்தனை நாட்களுக்குள் என்னை நீதிமன்றத்திற்குள் கொண்டு போய் நிறுத்தியிருப்பார்கள். இதை விளக்கமாகச் சொல்லத் தேவையில்லை. வரி விதிப்பில் மட்டும் என்றைக்குமே 'ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' கொடுத்து நடைமுறைப்படுத்த முடியாதென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல. பொதுவாக அவசரச் சட்டங்களை அதிகமாகக் கொண்டு வருகிற அமைச்சர் என்றும், ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுக்கிற அமைச்சர் என்றும் சொல்லும்போது, சில காரணங்களுக்காக



1981 மார்ச் 2] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அதை வரவேற்கிறேன். நாட்டின் நலன்கள் குறித்து அவசரச் சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. அவற்றுக்குச் சில நேரங்களில் 'ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' கொடுக்கப்படுகிறது. நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்கு அது மிக மிக அவசியமாக இருக்கிறது . . . .

திரு. க. இராமமூர்த்தி : 'டேட் ரிலீஃப் ஆக்டு'-க்கு 'ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்கு இது தேவைப்படுகிறதென்று சொன்னேன். அரசு 'ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' கொடுத்துப் போடும் சட்டங்களை வரிசைப்படுத்திச் சொல்லவில்லை. நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்கு இது தேவைப்படுகிறதென்றுதான் தெரிவித்தேன்.

இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், அதிகமாக எதையும் போடவில்லை என்பது அனைவருக்கும் தெரியும். இந்தச் சட்டத்திலே ஆர்ட் காட்டன் என்று சொல்கிறபோது, விளக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேறொரு இடத்திலே ரப்பர் பொருள்கள் என்று கூறியுள்ளதால் ஏற்படும் சங்கடங்களைப் போக்குவதற்கு ரப்பர் பாலால் செய்யப்படும் பொருள்களும் அடங்குமென்று சேர்க்கப்பட்டிருக்கிறது. வரி விதிப்பில் இருக்கும் சங்கடங்களைப் போக்குவதற்காகத்தான் அப்படிப் போட்டிருக்கிறோம். இன்னொரு இடத்தில் 'போல்ட் நட்ஸ்' என்பதில் 'ரிவிட்' என்று சேர்க்கப்பட்டிருக்கிறது. புதிதாக எதையும் செய்யவில்லை என்பது உறுப்பினர்களுக்கே தெரியும்.

நட்சத்திர ஓட்டல்களைப்பற்றி உறுப்பினர்களுக்குத் தெரியும். அதற்கு ஆர்டினன்ஸ் கொண்டு வந்தது பற்றித் தெரியும். பட்ஜெட் வருவதற்கு 6 மாதங்கள் இருக்கும்போது, 3, 4, 5 நட்சத்திர ஓட்டல்களுக்கு ஏன் வரி விதிக்கக்கூடாதென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதில் யாரும் சங்கடப்படப்போவதில்லை. அதன் மூலம் வரும் வருவாயை வைத்து வளர்ச்சித் திட்டங்களைச் செய்வதில் உள்ள தடைகளைப் போக்க முடியும். இவை தவிர, வேறு ஒன்றும் இதன் மூலம் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எ. ஆர். தாமோதரன், திரு. க. இராமமூர்த்தி, மற்றவர்கள் எல்லோரும் நட்சத்திர ஓட்டல்களில் வரி வசூலிப்பதைத் தவறாகக் கருத மாட்டார்களென்று கருதுகிறேன். எனவே இதில் புதியதாக ஒன்றையும் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 மார்ச் 2

எரி பொருள் குறித்து 40 வருடங்களுக்கு முன்னால் செய்யப்பட்ட ஒரு சட்டத்தை மாற்றியிருக்கிறேன் என்று வரவேற்றுச் சொன்னார்கள். 40 வருடங்களுக்கு முன்னால் இருந்ததை மாற்றி அமைத்திருக்கிறேன் என்று சொல்லும்போது, அதை இன்னும் 10 ஆண்டுகளுக்கு முன்னாலேயே செய்திருக்க வேண்டும். இந்த அமைச்சரவை வந்த உடனேயாவது அதை மாற்றியிருக்க வேண்டும். அந்த அளவிற்கு சட்டங்களை ஒன்றன்பின் ஒன்றாகத்தான் கொண்டு வருகிறோம். நான் இங்கேயும் கொண்டு வந்து, அங்கேயும் கொண்டுவர முடியாத நிலையில் இன்றைக்கு இருக்கிறேன். நான் 50, 60 சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறேன். இன்னும் 10 வர இருக்கிறது. தொடர்ந்து சட்டங்களைக் கொண்டு வந்ததால், கால தாமதம் ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிக வரியைப் போட்டு விட்டீர்களென்று சொன்னார்கள். இருந்தாலும் சொல்கிறேன், இன்றைக்கு இருக்கும் வரி விதிப்பைப் பார்க்க வேண்டும். பெட்ரோலைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டில் 5 சதவிகிதம்; ஆந்திராவில் 11 சதவிகிதம்; கர்நாடகத்தில் 12½ சதவிகிதம்; கேரளாவில் 15 சதவிகிதம்; மகாராட்டிரத்தில் 11 சதவிகிதம்; விமான எண்ணெயைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டில் 7.5 சதவிகிதம்; ஆந்திராவில் 10 சதவிகிதம்; கர்நாடகத்தில் 16 சதவிகிதம்; கேரளாவில் 8 சதவிகிதம்; மகாராட்டிரத்தில் 25 சதவிகிதம் வரி விதிப்பு இருக்கிறது. உயர் வேக டீசலைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டில் 9 சதவிகிதம்; ஆந்திராவில் 10 சதவிகிதம்; கர்நாடகத்தில் 16 சதவிகிதம்; கேரளாவில் 20 சதவிகிதம்; மகாராட்டிரத்தில் 9 சதவிகிதம் வரி விதிப்பு இருக்கிறது. டீசலைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டில் 9 சதவிகிதம்; ஆந்திராவில் 10 சதவிகிதம்; கர்நாடகத்தில் 16 சதவிகிதம்; கேரளாவில் 20 சதவிகிதம்; மகாராட்டிரத்தில் 5 சதவிகிதம் வரி விதிப்பு இருக்கிறது. ஆகையால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், சுற்றியுள்ள மாநிலங்களைவிடக் குறைவாக இருக்கிறதென்பது தெரியும். அது மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தச் சட்டத்தைக் கொண்டுவரும்போது, சம்பந்தப்பட்ட செயலாளரிடம், சட்டத்தை என்றைக்கு அமல்படுத்துகிறீர்களோ அன்றைக்கு—வால்யூம்—அதன் கொள்ளளவு அடிப்படையில் என்ன வரி வாங்குகிறோமோ அந்த வரிக்கும், அதற்குப் பிறகு விலை அடிப்படையில் என்ன வரி விதிக்கிறோமோ அதற்கும் எந்தவிதமான மாற்றமும் இருக்கக் கூடாதென்று சொல்லப்பட்டது. அன்றைக்கு ஒரு லிட்டர் என்ன விலையோ அந்த விலை அப்படியே இருக்க வேண்டுமென்று சொல்லி சட்டம் கொண்டு வரப்பட்டது. அதற்குப் பிறகு மாற்றங்கள் வரத்தான் செய்யும். பேரவையில் நான் சொல்கிறபோது, எண்ணெய்ப் பொருள்களின் மீதான வரி விதிப்பு அதிகமில்லை என்று கூறியிருக்கிறேன். விலை ஏறிக்கொண்டே இருக்கும் போது . . . .



1981 மார்ச் 2] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

**திரு. ஏ. ஆர். தாமோதரன்:** 14 ரூபாய் ஒரு கிலோ லிட்டருக்கு அன்றைக்கே ஏறியது என்பதுதான் நான் கூறுவது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** இப்படி விலையை ஏற்றுவார்களென்பது எனக்குத் தெரியாது . . . .

(பிற்பகல் 1-20)

மத்திய அரசு என்ன வரி போடுகிறது என்பதெல்லாம் நமக்குத் தெரியாது. அதைப் பார்த்து நாம் போடவும் முடியாது. ஆனால் 41 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து மாற்றப்பட வேண்டிய ஒன்றை இப்போது மாற்றியிருக்கிறோம். இதை மாற்றியது நல்லது என்று மாண்புமிகு உறுப்பினர்களே ஏற்றுக்கொள்வார்கள். முன்பு லிட்டர் கொள்ளளவு அடிப்படையில் வரி இருந்தது. இப்போது விலை அடிப்படையில் போடப்பட்டாலும் கூட, எந்தவித மாற்றமும் இருக்கக்கூடாது என்ற வகையில் தான் போட்டிருக்கிறோம். அப்படி இருந்தால்தான் நாட்டு மக்களும் ஏற்றுக் கொள்வார்கள். இல்லாவிட்டால் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் போன்றவர்கள் வழி சொல்வார்கள். நாட்டு மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்க வேண்டுமென்று தான் லிட்டர் அடிப்படையில் வரி என்பதை மாற்றி யிருக்கிறோம். வரியைப் போட்டுக் கொண்டே இருந்தாலும், நாட்டு மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்காது. மத்திய பட்ஜெட்டை நான் பார்க்கவில்லை. இருப்பதை அப்படியே நாட்டு மக்களுக்குப் பலனளிக்கும் வகையில் மாற்றியிருக்கிறோம், அவ்வளவுதான். அதிகமாகப் போடவே இல்லை. சில இடங்களில் ரப்பர் என்கிறபோது ரப்பர் பாலையும் சேர்த்திருக் கிறோம். அதுபோல் போல்ட், நட் என்கிற இடத்தில் ரிவிட்டையும் சேர்த்திருக் கிறோம். இதெல்லாம் அதிகாரிகளுக்குத் தெரியாமல் போகக்கூடாது என்பதற்காக அவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறோம். அதைத் தவிர புதிய மாற்றம் எதும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் 41 ஆண்டுகளுக்குப் பிறகாவது இதைக் கொண்டு வந்திருக்கிறீர்களே என்று மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் 'ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' வரி விதிப்பைப் பொறுத்தவரையிலே, போட மாட்டோம். அவ்வாறு போட்டாலும், அது நிற்காது. இந்தச் சட்ட முன்வடிவினால் நிச்சயமாக ஏழையெளிய மக்கள் எந்தவிதத்திலும் பாதிக்கப் படமாட்டார்கள். எனக்கிருக்கிற வருத்தமெல்லாம் தட்சத்திசாலுட்டல்களுக்கு 10 சதவிகித வரி போட்டதை இன்னும் கூடுதலாக்க வேண்டுமென்று ஒரு உறுப்பினர் கூடச் சொல்லவில்லையே என்பது தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவனாவது கூடுதலாக்க வேண்டுமென்று சொல்லுவார் என்று

நினைத்தேன். அவரும் சொல்லவில்லை. (சிரிப்பு) அது எனக்கு ஒரு ஏமாற்றம்தான். ஒரு உறுப்பினராவது நட்சத்திர ஓட்டல்களுக்கு 10 சதவிகித வரியைக் கூடுதலாக்க வேண்டுமென்று சொல்லுவார் என்று நினைத்து ஏமாற்றமடைந்தேன். மறுமுறை இதுமாதிரி சந்தர்ப்பம் வரும்போதாவது இதை உறுப்பினர்கள் சொல்ல வேண்டுமென்று கூறி சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன்உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு, விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை எதுமில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு, விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1981) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1981) திருப்பியனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் 5-3-1981 வியாழக் கிழமை காலை 10.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-25)

7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

204. Seventh Annual Report of the Cheran Engineering Corporation Limited for the year 1980. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

*B. Reports, Notifications and Other Papers.*

* 44. The Tamil Nadu Abolition of Posts of Part-time Village Officers Bill, 1981 (L.A. Bill No. 12 of 1981), as passed by the Assembly.

£ 45. The Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Bill, 1981 (L.A. Bill No. 9 of 1981), as passed by the Assembly.

£ 46. The Tamil Nadu Agricultural Produce Markets (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 17 of 1981), as passed by the Assembly.

இணைப்பு I.

[18 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

1968-69 முதல் 1976-77 முடிய உள்ள ஆண்டுகளில் பள்ளிகளில் 11-வது வகுப்பை படித்துவிட்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதியவர்கள் எழுதிய எஸ்.எஸ்.எல்.சி. தான் "1969 திட்ட எஸ்.எஸ்.எல்.சி." என்று அழைக்கப்படு

* Laid on the ttble of the home on 28th February 1981.
** Circulated to all MLC's on 28tr February 1981.

கிறது. இவர்களில் 1977 மார்ச்சுக்குள் எஸ்.எஸ்.எல்.சி. தேற முடியாதவர்கள் பயன் பெறுவதற்காக அவர்கள் தனிப்பட்ட முறையில் அக்டோபர் 1977, மார்ச் 1978, அக்டோபர் 1978, மார்ச் 1979, அக்டோபர் 1979 ஆகிய ஐந்து தடவை எஸ்.எஸ்.எல்.சி. எழுத வகை செய்ய "1969 திட்ட எஸ்.எஸ்.எல்.சி." 1979 அக்டோபர் முடிய நடத்தப்பட்டது.

2. நீட்டிக்கப்பட்ட (எலாங்கேட்ட்) பதினோராண்டு எஸ்.எஸ்.எல்.சி. என்பது பள்ளிகளில் 1977-78-ல் மட்டுமே நடந்த 11-ம் வகுப்பாகும். அந்த வகுப்பில் பயின்றவர்கள் புதிய பத்தாண்டு எஸ்.எஸ்.எல்.சி.-யில் 9, 10 வகுப்பு களில் (இரண்டு ஆண்டுகளில் பயில வேண்டிய பாடங்களை 1975-76 முதல் 1977-78 முடிய மூன்று ஆண்டுகளில் 9-11 வகுப்புகளில் பயின்றவர்கள் ஆவர். இவர்களில், 1978 மார்ச் எஸ்.எஸ்.எல்.சி. தேறாதவர்கள் நன்மைக்காக 1978 அக்டோபர், 1979 மார்ச், 1979 அக்டோபர்: 1980 மார்ச், 1980 அக்டோபர் ஆகிய ஐந்து தடவை தனிப்பட்ட எலாங்கேட்ட் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு நடத்தப்பட்டது.

3. முதல் பத்தியில் சொன்ன "1969 திட்ட எஸ்.எஸ்.எல்.சி."-யில் 1979 அக்டோபரிலும் தேறி முடிக்காதவர்கள், 1980 மார்ச்சிலும் 1980 அக்டோ பரிலும் எலாங்கேட்ட் எஸ்.எஸ்.எல்.சி. எழுத அனுமதிக்கப்பட்டனர்.

4. "1969 திட்ட எஸ்.எஸ்.எல்.சி." வகுப்பு, பள்ளிகளிலிருந்து நீங்கியபின் தனிப்பட்ட முறையில் எஸ்.எஸ்.எல்.சி. எழுதும் வாய்ப்பு அந்தந்த திட்ட மாணவர்களுக்கும் மொத்தம் ஏழு தடவை (1969 திட்டம் ஐந்து தடவை எலாங்கேட்ட் 2 தடவை) தரப்பட்டுள்ளது. எலாங்கேட்ட் எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பு, பள்ளிகளிலிருந்து நீங்கியபின் அந்தந்த திட்ட மாணவர்களுக்கு மொத்தம் ஐந்து தடவை தனியாக எழுதும் வாய்ப்பு தரப்பட்டுள்ளது.

5. 1978 மார்ச் எஸ்.எஸ்.எல்.சி.-யிலிருந்து, பாடம் பாடமாக எழுதி எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெறும் கம்பார்ட்மெண்டல் முறை அமுலுக்கு வந்துள்ளது. எலாங்கேட்ட் எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் புதிய பத்தாண்டு எஸ்.எஸ்.எல்.சி. ஆகியவற்றில் முதல் முதல் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வே மார்ச் 1978-லிருந்துதான் நடந்துள்ளதால் அவற்றிற்கு கம்பார்ட்மெண்டல் முறை அமல் நடத்துவது குறித்து யாதொரு சிக்கலும் இல்லை. "1969 திட்ட எஸ்.எஸ்.எல்.சி."-யைப் பொறுத்தவரை 1978-ல் அமுலாக்கப்பட்ட கம்பார்ட் மெண்டல் முறைச் சலுகையை பின்வருமாறு மேலும் தாராளமாக்கி 24-2-1981 நாளிட்ட அரசு ஆணை எண் 337 (கல்வி)-ல் வெளியிடப்பட்டுள்ளது.



1969 திட்ட எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் ஒரு மாணவன் தேற வேண்டி இருந்த

தமிழ் அல்லது தாய்மொழி

ஆங்கிலம்

கணிதம்

அறிவியல்

வரலாறு மற்றும் புவியியல்

விருப்பப் பாடமாக எடுத்த ஒரு பாடம்.

ஆகிய ஆறு பாடங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு தடவையில் ஆயினும்சரி பல தடவைகளில் ஆயினும்சரி (1978 மார்ச்சுக்கு முன்) 35%-க்கு குறையாமல் மதிப்பெண் பெற்றவர்கள் கம்பார்ட்மெண்டல் ஆணை அமலுக்கு வருமுன் உயர் படிப்புக்குத் தகுதி பெற எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்களாக கருதப்படாமல் இருந்தாலும் 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்களாக கருதப்படுவார்கள். 1979 அக்டோபருக்குப்பின் 1969 திட்ட எஸ்.எஸ்.எல்.சி. நடத்தப்படவில்லை. ஆகையால், 1979 அக்டோபருக்குள் விருப்பப் பாடத்தில் தேர்ச்சி பெறாத வர்கள், விருப்பப் பாடத்தை யாதொரு கணக்குக்கும் எடுக்காமல் (மற்ற ஐந்து பாடங்களில் ஒவ்வொன்றிலும் 35%-க்கு குறையாமல் மதிப்பெண்கள் பெற் றிருக்கும் பட்சத்தில்) 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்களாகக் கருதப் படுவர்.

6. மேற்சொன்ன தாராள விதிமுறைகளின்படி "1969 திட்ட எஸ்.எஸ் எல்.சி." தேர்வை இனியும் எழுதித் தேர்வு பெற வேண்டிய நிலையில் உள்ள வர்கள், விருப்பப் பாடம் தவிர்த்த மற்ற ஐந்து பாடங்களில் ஒவ்வொன்றிலும் 35 சதவிகிதத்திற்கு குறைந்த மதிப்பெண்கள் பெறாதவர்கள் மட்டுமே ஆவார்கள். இவர்களைப் பொறுத்தவரை, அவ்வாறு 35 சதவிகிதத்திற்குக் குறைந்த மதிப்பெண் பெற்ற பாடங்களை புதிய பத்தாண்டுப் பள்ளிப் படிப்புப் பாடத் திட்டத்தின்படி பயின்று புதிய 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வை 1981 அக்டோபர் முதல் எழுத அரசு 18—2—1981 நாளிட்ட ஆணை எண் 310-ல் (கல்வி) அனுமதி அளித்துள்ளது. புதிய பாடத் திட்டத்தின்படி பயில அவகாசம் கொடுப்பதற்காக இந்தச் சலுகை 1981 மார்ச்சிலிருந்து தருவதற்குப் பதிலாக 1981 அக்டோபரிலிருந்து தரப்படுகிறது. இவ்வாறு 1981 அக்டோபர் அல்லது அதற்குப்பின் ஒரு சில பாடங்களை முடிப்பவர்கள் முதற்கண் "1969 திட்ட எஸ்.எஸ்.எல்.சி."-யைச் சார்ந்தவர்களாக இருந்த போதிலும் அவர்கள் 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேறியதாகக் கருதப் படுவார்கள். இதனால் அவர்களுக்கு பெரும் பாதிப்பு எதுவும் இருக்காது.

காரணம் வேலை வாய்ப்பு போன்றவற்றிற்கு 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி., 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. ஆகிய இரண்டும் ஒன்றுதான். மேல்நிலைப்பள்ளி பொதுத் தேர்வை 18 வயது முடிந்தவர்கள் தனிப்பட்ட முறையில் எழுது வதற்கும் 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி., 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. இரண்டும் ஒன்றுதான்.

7. இதிலிருந்து "1969 திட்ட எஸ்.எஸ்.எல்.சி."-யை இன்னும் தேறாமல் இருப்பவர்கள் தேர்ச்சி பெற அரசு வழிவகை செய்துள்ளது.

## இணைப்பு II.

[2 ஆம் பக்கத்தில் இனம் 6 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

உதவி வேளாண்மை அலுவலர்கள் சங்கமும், வயல் விளக்க அலுவலர்கள் சங்கமும் கீழ்க்கண்ட ஏழு கோரிக்கைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் 23—1—1981 அன்று ஒரு அணியும், 24—1—1981 அன்று உண்ணா நோன்பும் இருந்தனர் :—

(1) சம பொறுப்பில் சம வேலை செய்துவரும் பதவி உயர்வு பெற்ற துணை வேளாண்மை அலுவலர்களுக்கு மீண்டும் சம ஊதியம், ஒரே பதவிப் பெயர், பணிதொகுதி முதலியவற்றை திரும்ப அளிக்கக் கோரல்.

(2) 10 ஆண்டு பணி முடித்து, அரசின் விதிமுறைப்படி எட்டாம் வகுப்பு தேர்ச்சி அடைந்த அனைத்து வயல் விளக்க அலுவலர்களை உதவி வேளாண்மை அலுவலர் நிலை II ஆக உயர்த்தக் (Upgrading) கோரல்.

(3) 10 ஆண்டு பணி முடித்த உதவி வேளாண்மை அலுவலர்கள் அனை வர்க்கும் ரூபாய் 450 அடிப்படை ஊதிய விகிதத்தில் "தேர்வு நிலைப்" பதவிகள் அளிக்கக் கோரல்.

(4) அனைத்து வயல் விளக்க அலுவலர்களின் அடிப்படை ஊதியத்தை ரூபாய் 250-இலிருந்து ரூபாய் 310 ஆக உயர்த்தி அளிக்கக் கோரல்.

(5) உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு வேளாண்மை அலுவலர் களாக பதவி உயர்வு விகிதாச்சாரம் 10 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாக உயர்த்தி அளிக்கக் கோரல்.

(6) 10 ஆண்டு பணி முடித்த வயல் விளக்க அலுவலர்களுக்கு அடிப் படை ஊதியம் ரூபாய் 350 நிலையில் தேர்வு நிலை பதவிகள் அளிக்கக் கோரல்.



(7) தங்கள் கூட்டமைப்புக் கோரிக்கைகளுக்கு தடையாக இருந்துவரும் மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர் திரு. மாணிக்கம் அவர்களை மாற்றி வேளாண்மைப் பட்டதாரி அல்லாத ஓர் அலுவலரை நேர்முக உதவியாளராக நியமிக்கக் கோரல்.

2. கோரிக்கைகளும் அவைகள் மேல் அரசு எடுத்த நடவடிக்கைகளும் பின் வருமாறு :—

**கோரிக்கை 1.**—பதவி உயர்வு பெற்ற துணை வேளாண்மை அலுவலர் களுக்கும், பட்டம் பெற்று நேரிடையாக அமர்த்தப்படும் துணை வேளாண்மை அலுவலர்களுக்கும் 1962 வரை ஒரே ஊதிய விகிதம் இருந்தது. முதல் சம்பளக் குழுவின் அறிக்கைக்குப் பிறகு இவ்விரு பணியாளர்களுக்கும் வேறான ஊதிய விகிதம் அளிக்கப்பட்டு, இவ்வேறான ஊதிய விகிதம் நியாயமானதே என்று இரண்டாவது மற்றும் மூன்றாவது சம்பளக் குழுவினால் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. மூன்றாவது சம்பளக் குழு, சங்கங்களின் கோரிக்கை களை ஆராய்ந்து, பதவி உயர்வு பெற்றவர்களைவிட வேளாண்மைக் கல்லூரியில் படித்து பட்டம் பெற்றவர்கள் அதிகத் திறமையும் அறிவும் பெற்றுள்ளவர்களாக இருப்பதால், இருவருக்கும் ஒரே ஊதிய விகிதம் இருக்க நியாயமில்லை எனக் கூறியுள்ளது. இக்கோரிக்கை மீண்டும் மூன்றாவது ஊதியக் குழுவிற்குப்பின் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழுவின் பரிசீலனைக்கு விடப்பட்டுள்ளது.

**ஒரே பதவிப் பெயர்.**—பட்டம் பெற்று நேரிடையாக வேலைக்கு அமர்த்தப்படுபவர்கள் அவர்களுடைய ஊதிய விகிதங்களின் அடிப்படையில் தற்போது ஸ்டேட் சர்வீஸில், 'B' பிரிவு அரசு ஊழியர்களாக உள்ளார்கள். பதவி உயர்வு பெற்றவர்கள் தற்போது சார்நிலை (Subordinate Service) பணித் தொகுதியில், 'C' பிரிவு அரசு ஊழியர்களாக உள்ளார்கள். தனித்தனி விதிகளின்கீழ் வருவதாலும், தனித்தனி சம்பள விகிதம் உள்ளதாலும், இரு வருக்கும் ஒரே பதவிப் பெயர் இருந்தால், இரு பிரிவினருக்கும் வேறுபாடு அறிய தடுமாற்றம் ஏற்படுமாதலால் நன்றாக ஆராய்ந்த பிறகு, பட்டம் பெற்று 'B' பிரிவில் உள்ளவர்களுக்கு "வேளாண்மை அலுவலர்" என்றும், பதவி உயர்வு பெற்றவர்களுக்கு 'துணை வேளாண்மை அலுவலர்' என்றும் பதவிப் பெயர்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஒரு நபர் குழு இவ்வலுவலர்களுக்கும் ஒரே ஊதிய விகிதத்தை ஏற்குமானால், பதவிப் பெயர் மாற்றம் மறுபரிசீலனை செய்யப்படும்.

**கோரிக்கை 2.**—வயல் விளக்க அலுவலர் பதவியில் நிலை I, நிலை II என இரண்டு நிலைகள் உள்ளன. இவ்விரு நிலைகளிலும் உள்ள வயல் விளக்க அலுவலர்கள், மொத்தமுள்ள உதவி வேளாண்மை அலுவலர் பதவி களின் 30 சதவிகிதம் வரை, உதவி வேளாண்மை அலுவலராக பதவி உயர்வு

பெறலாம். நிதித் துறையின் 5—10—1978 நாளிட்ட அரசாணை 1050-ல் குறிப்பிட்டுள்ள விதிகளின்படி, 10 ஆண்டுகள் பணிமுடித்த, வயல் விளக்க அலுவலர்கள் நிலை II-லிருந்து, நிலை I-க்கும், வயல் விளக்க அலுவலர் நிலை I-லிருந்து, உதவி வேளாண்மை அலுவலர் நிலை II -ற்கும், நிலை உயரலாம். வயல் விளக்க அலுவலர் பதவியிலிருந்து பதவி உயர்வு பெற, தற்போது இருக்கும் 30 சதவிகிதத்தினை அதிகமாக்கும் குறிப்பு ஒன்று அரசின் பரிசிலனையில் உள்ளது.

**கோரிக்கைகள் 3, 4.**—இக்கோரிக்கைகள் ஒரு நபர் குழுவிற்கு அனுப்பப் பட்டன. ஒரு நபர் குழுவின் அறிக்கை அரசு நிதித் துறையின் பரிசிலனை யில் உள்ளது. குழுவின் பரிந்துரைகள் தெரிந்தபின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**கோரிக்கை 5.**—இக்கோரிக்கை அரசின் பரிசிலனையில் உள்ளது.

**கோரிக்கை 6.**—வயல் விளக்க அலுவலர் நிலை I-ன் ஆரம்ப ஊதியம் ரூபாய் 280, உதவி வேளாண்மை அலுவலர் நிலை II-ன் ஆரம்ப ஊதியம் ரூபாய் 350. பத்து ஆண்டு பணிமுடித்த வயல் விளக்க அலுவலர்களே உதவி வேளாண்மை அலுவலர் நிலை II-க்கு உயரலாம். வயல் விளக்க அலுவலர் களுக்கு உதவி வேளாண்மை அலுவலர்களின் ஆரம்ப ஊதியம் அளிக்க இயலாது.

**கோரிக்கை 7.**—இது முழுவதும் நிர்வாக சம்பந்தமுள்ளது. எந்த சங்கமும் யாரை உதவியாளராக அமர்த்த வேண்டுமென அறிவுரை கூற முடியாது.

## இணைப்பு III

*[23 ஆம் பக்கத்தில் இனம் 6 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

### L.A. Bill No. 9 of 1981.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Act, 1976.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Act, 1981.



(2) It shall be deemed to have come into force on the 6th day of December 1980;

2. *Amendment of President's Act 25 of 1976.*—In the Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Act, 1976 (President's Act 25 of 1976), in section 4, in sub-section (1), for the words " four years and six months ", the words " five years " shall be substituted.

3. *Repeal and Saving.*—(1) The Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Second Amendment Ordinance, 1980 (Tamil Nadu Ordinance 13 of 1980), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the said Ordinance shall be deemed to have been done or taken under this Act as if this Act had come into force on the 6th day of December 1980.

## இணைப்பு IV

*[33 ஆம் பக்கத்தில் இனம் 6 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

### L.A. Bill No. 7 of 1981.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Agricultural Produce Markets (Amendment) Act, 1981.

(2) It shall be deemed to have come into force on the 5th day of December 1980.

2. *Amendment of section 8, Tamil Nadu Act 23 of 1959.*—In the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959) (hereinafter referred to as the principal Act), in section 8, in sub-section (5), in clause (ii) of the proviso, for the words " not exceeding one year ", the words " not exceeding three years " shall be substituted.

3. *Term of office of the members of certain market committees to continue.*—Notwithstanding the expiration of their term of office, the members of market committees appointed under the

proviso to sub-section (5) of section 8 and holding office immediately before the 5th day of December 1980, shall continue to hold office and function as members of the market committee for such period or periods as the Government may specify under clause (ii) of the proviso to sub-section (5) of section 8 as amended by this Act.

4. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Agricultural Produce Markets (Amendment) Ordinance, 1980 (Tamil Nadu Ordinance 12 of 1980), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act as amended by the said Ordinance shall be deemed to have been done or taken under the principal Act as amended by this Act.

இணைப்பு V 3.

[41 ஆம் பக்கத்தில் இனம் 6 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 4 of 1981.

(As passed by the Assembly.)

*A Bill to provide for the levy and collection of a tax on luxuries provided in hotels and lodging houses.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Tax on Luxuries in Hotels and Lodging Houses Act, 1981.

(2) It shall be deemed to have come into force on the 13th October 1980.

2. *Definitions.*—In this Act, unless the context otherwise requires,—

(*a*) "appellate authority" means an appellate authority appointed under sub-section (2) of section 3;

(*b*) "assessing authority" means an assessing authority appointed under sub-section (1) of section 3;

(*c*) "Commissioner of Commercial Taxes" means the Commissioner in charge of commercial taxes;

(*d*) "concessional rate" in relation to luxury provided in a hotel means a rate lower than the normal rate fixed for such luxury by the hotel or lower than that fixed by the Government or any other authority under any law for the time being in force;

(*e*) "Government" means the State Government ;



(*f*) "hotel" means a building or part of a building where residential accommodation with or without board is by way of business provided for a monetary consideration and includes a lodging house ;

(*g*) "luxury provided in a hotel" means accommodation for residence provided in a hotel, the rate of charges for which (including charges for air-conditioning, television, radio, music, extra beds and the like but excluding charges for food, drink and telephone calls) is twenty rupees or more per person per day;

(*h*) "proprietor" in relation to a hotel, includes the person who for the time being is in charge of the management of the hotel;

(*i*) "tax" means the luxury tax levied and collected under this Act.

3. *Authorities.*—(1) The Government may, by notification, appoint such officers as they think fit to be assessing authorities for the purposes of this Act and may assign to them such local limits as the Government may think fit.

(2) The Government may, by notification, appoint such officers as they think fit to be appellate authorities for the purposes of this Act and may assign to them such local limits as the Government may think fit.

4. *Levy and collection of luxury tax.*—(1) Subject to the provisions of this Act, there shall be levied and collected from every person residing in a hotel a tax (to be known as "luxury tax") in respect of any luxury provided in a hotel to him, at the following rates, namely :—

| | *Rate of tax.* |
|---|---|
| (*a*) Where the rate of charges for accommodation for residence (including charges for air conditioning, television, radio, music, extra beds and like but excluding charges for food, drink and telephone calls) is twenty rupees or more but is less than fifty rupees per person per day. | Five percentum of such rate. |
| (*b*) Where such rate is fifty rupees or more per person per day. | Ten percentum of such rate. |

Provided that where such charges are levied otherwise than on daily basis or per person, then, the charges for determining the liability to tax under this section shall be computed as for a day and per person, based on the period of occupation of the residence for which the charges are made and the number of persons actually occupying or permitted to occupy according to the rules or custom of the hotel.

(2) The tax payable under this section shall be collected by the proprietor and be paid into a Government treasury within the time and in the manner provided by or under this Act.

(3) In computing the amount of tax payable under this section, the amount shall, if it is not a multiple of five paise, be increased to the next higher multiple of five paise.

5. *Mode of collection of tax.*—(1) Where no separate charges for luxury provided in a hotel and for food or drink or telephone calls are specified, but a consolidated payment is required to be made both for luxury provided in a hotel and for food or drink or telephone calls, then, the assessing authority may, from time to time, after giving the proprietor an opportunity of being heard, fix separate rates of charges for such luxury and for food or drink or telephone calls for the purpose of calculating the tax under this Act.

(2) Where, in addition to the charges for luxury provided in a hotel, service charges are levied and appropriated to the proprietor and not paid to the staff, then, such charges shall be deemed to be part of the charges for luxury provided in the hotel.

(3) Where luxury provided in a hotel to any person (not being an employee of the hotel) is not charged at all, or is charged at a concessional rate, then, the tax on such luxury shall be levied and collected as if full charges for such luxury were paid to the proprietor of the hotel.

(4) Where luxury provided in a hotel for a specified number of persons is shared by more than the number specified, then in addition to the tax paid for the luxury provided to such specified number of persons, there shall also be levied and collected separately, the tax in respect of the charges made for the additional number of persons accommodated.



(5) Where any proprietor fails or neglects to collect the tax payable under this Act, the tax shall be paid by the proprietor as if the tax was collected by the proprietor from the person to whom the luxury was provided and who was accordingly liable to pay the same.

6. *Returns.*—(1) Every proprietor liable to pay tax under this Act shall furnish a monthly return in the prescribed form to the assessing authority within eight days after the expiry of the month to which the return relates.

(2) Every such return shall show the number of rooms or other accommodation, in the hotel, which is intended to be occupied, the number of persons who occupied such rooms or accommodation, the periods of their stay, the dates of their arrival and departure, the amount of charges recovered from them and such other information as may be prescribed.

(3) A proprietor furnishing a return as required by sub-section (1) shall first pay into a Government Treasury, in the manner prescribed, the whole amount of the tax due from him according to such return and enclose a receipt of such payment with the return.

(4) Every return shall be verified in the prescribed manner.

7. *Assessment and collection of tax.*—(1) If the assessing authority is satisfied that the return furnished under sub-section (1) of section 6 is complete and it has no reason to believe that it is incorrect, it shall assess the amount of tax due from the proprietor on the basis of such return.

(2) (*a*) If the assessing authority is not satisfied that the return furnished under sub-section (1) of section 6 is complete or it has reason to believe that it is incorrect and it considers it necessary to require the presence of the proprietor or the production of further evidence, it shall serve on such proprietor in the prescribed manner a notice requiring him on a date and at a place specified therein either to attend and produce or cause to be produced all evidence on which such proprietor relies in support of his return or to produce such evidence as is specified in the notice.

(b) On the date specified in the notice, or as soon as may be thereafter, the assessing authority shall, after considering all the evidence which may be produced, assess the amount of tax due from the proprietor.

(c) If the proprietor fails to comply with the terms of the notice issued to him under clause (a), the assessing authority shall assess to the best of its judgment, the amount of tax due from him.

(3) If a proprietor liable to pay tax under this Act fails to furnish a return in respect of any period within the period specified in sub-section (1) of section 6, the assessing authority shall, after giving the proprietor a reasonable opportunity of being heard, assess to the best of its judgment, the amount of tax if any, due from him.

(4) Any assessment made under this section shall be without prejudice to any penalty or prosecution for an offence under this Act.

8. *Imposition of penalty in certain cases.*—Where any proprietor liable to pay tax under this Act—

(a) fails without sufficient cause or neglects to furnish a return as required by sub-section (1) of section 6, or

(b) while furnishing a return under sub-section (1) of section 6 fails, without sufficient cause or neglects, to pay into Government treasury the whole amount of tax due from him according to such return as required by sub-section (3) of section 6, or

(c) fails without sufficient cause, to comply with the terms of notice issued to him under clause (a) of sub-section (2) of section 7, or

(d) conceals the particulars of any transaction or deliberately furnishes inaccurate particulars of any transaction liable to tax,

the assessing authority may impose upon such proprietor by way of penalty, in addition to any tax assessed under section 7, a sum not exceeding one and a haf times the amount of the tax.



9. *Payment of tax and penalty.*—(1) (a) The amount of tax—

(i) due where returns have been furnished without full payment therefor;

(ii) assessed for any period under section 7 less any sum already paid by the proprietor in respect of such period;

(b) the amount of penalty, if any, levied under section 8, shall be paid by the proprietor into a Government treasury by such date as may be specified in the notice issued by the assessing authority for this purpose, being a date not later than thirty days from the date of service of notice:

Provided that the assessing authority or the appellate authority in an appeal under section 10 may, in respect of any proprietor and for reasons to be recorded in writing, extend the date of payment, or allow him to pay the tax or penalty (if any) by instalments.

(2) Any tax or penalty which remains unpaid on the date specified in the notice of payment or after the extended date of payment, and any instalment not duly paid, shall be recoverable as an arrear of land revenue.

10. *Appeal.*—(1) Any proprietor aggrieved by the order of assessment made under section 7 or by an order imposing penalty under section 8 may within three months from the date of receipt of the order, make an appeal to the appellate authority.

(2) On receipt of an appeal under sub-section (1), the appellate authority shall, after giving to the appellant an opportunity of being heard, confirm, annul or modify the assessment or penalty.

11. *Revision.*—(1) The Commissioner of Commercial Taxes may *suo motu* or on an application made in that behalf, call for and examine the record of the proceeding of any order made by the assessing authority or, as the case may be, the appellate authority and pass such order thereon as he thinks just and proper.

(2) No application under sub-section (1) shall be entertained if it is not made within a period of four months from the date of the order

(3) No order which adversely affects any person shall be passed under this section, unless such person has been given a reasonable opportunity of being heard by the Commissioner of Commercial Taxes.

(4) Where an appeal lies under section 10 and no appeal is made, no proceedings in revision shall be entertained upon an application.

(5) Where the Commissioner of Commercial Taxes rejects any application for revision under this section, he shall record the reasons for such rejection.

12. *Court-fees on appeal and application for revision.*—Notwithstanding anything contained in the Tamil Nadu Court-fees and Suits Valuation Act, 1955 (Tamil Nadu Act XIV of 1955), an appeal made under section 10 and an application for revision made under section 11 shall bear a court-fee stamp of such value as may be prescribed.

13. *Refund of tax.*—(1) If any proprietor satisfies the assessing authority that on account of any clerical or arithmetical error in calculating the amount of tax, the amount of tax paid by him or recovered from him in respect of any period exceeds the amount with which he is properly chargeable, under this Act for that period, he shall be entitled to a refund of the excess so paid, or recovered.

(2) Where as a result of an order passed under section 10 or 11 the refund of any amount becomes due to a proprietor, the assessing authority shall refund such amount to him.

(3) The refund may be given either by cash payment or by deduction of such excess from the amount of tax due from such proprietor in respect of any other period.

14. *Offences.*—(1) Any person who, being a proprietor liable to pay tax under this Act,—

(a) furnishes or allows or causes to be furnished an incorrect or incomplete return or fails to submit the returns, as required by or under the provisions of this Act, or



(b) fraudulently evades or allows to be evaded the payment of any tax due from him, or

(c) fraudulently makes or causes or allows to be made any wrong entry in, or fraudulently omits or causes or allows to be omitted any entry from, any statement furnished or any accounts or register, or

(d) knowingly collects from any person any amount by way of tax in excess of the amount of tax payable by him under the provisions of this Act, or

(e) wilfully acts in contravention of any of the provisions of this Act or the rules made thereunder or any lawful orders passed in accordance therewith

shall, on conviction be punished with imprisonment for a term which may extend to six months or with fine not exceeding one thousand rupees or with both.

(2) No court shall take cognizance of any offence punishable under sub-section (1) except upon a report in writing of the facts constituting such offence made by the assessing authority.

15. *Offences by companies.*—(1) Where an offence under this Act has been committed by a company every person who, at the time when the offence was committed, was in-charge of, and was responsible to the company, for the conduct of the business of the company, as well as the company shall be deemed to be guilty of the offence and shall be liable to be proceeded against and punished accordingly:

Provided that nothing contained in this sub-section shall render any such person liable to any punishment, provided in this Act if he proves that the offence was committed without his knowledge or that he exercised all due diligence to prevent the commission of such offence.

(2) Notwithstanding anything contained in sub-section (1), where an offence under this Act has been committed by a company and it is proved that the offence has been committed with the consent or connivance of, or is attributable to any neglect on the part of, any director, manager, secretary or other officer of the company, such director, manager, secretary or other officer shall be liable to be proceeded against and punished accordingly.

*Explanation.*—For the purposes of this section—

(*a*) "company" means a body corporate, and includes a firm or other association of individuals; and

(*b*) "director" in relation to a firm means a partner in the firm.

16. *Compounding of offences.*—(1) Subject to such conditions as may be prescribed, the assessing authority may, either before or after the institution of proceedings for an offence under this Act, permit any person who has committed or is suspected to have committed the offence to compound the offence on payment of such sum, not exceeding double the amount of tax to which the offence relates as the assessing authority may determine.

(2) On payment of such sum as may be determined by the assessing authority under sub-section (1), no further proceedings shall be taken against the person in respect of the same offence.

17. *Powers to enforce attendance, etc.*—All authorities under this Act, shall for the purpose of this Act, have the same powers as are vested in a court under the Code of Civil Procedure, 1908 (Central Act V of 1908) while trying a suit, in respect of enforcing the attendance of and examining any person on oath or affirmation or for compelling the production of any document.

18. *Powers of inspection of accounts and documents and search of hotels.*—(1) The assessing authority may, subject to such conditions as may be prescribed, require any proprietor to produce before it the working records of accounts, registers or other documents or to furnish any information relating to the business of the hotel as may be necessary for the purposes of this Act.

(2) All working records of accounts, registers or other documents relating to the business of any hotel shall at all reasonable times be open to inspection by the assessing authority and the assessing authority may take or cause to be taken such copies or extracts of such records as may be necessary for the purpose of testing the accuracy of the charges for such luxury or for informing itself as to the particulars regarding which information is required for the purpose of this Act or any rules made thereunder as would appear to it necessary.



(3) If the assessing authority has reason to believe that any proprietor has evaded or is attempting to evade the payment of tax due from him, it may for reasons to be recorded in writing, seize such records of accounts, registers or other documents of the proprietor as may be necessary and shall grant a receipt for the same and shall retain the same so long only as may be necessary in connection with any proceeding under this Act or for a prosecution.

(4) For the purposes of this Act, the assessing authority or any other person authorised by it in this behalf, may enter and search any hotel or any place of business of the proprietor or any other place where the assessing authority has reason to believe that the proprietor keeps, or is for the time being keeping, any records of accounts, registers or other documents of his business in relation to the hotel.

19. *Certain provisions of Limitation Act to apply to appeal and revision applications.*—The provisions of sections 4, 5 and 12 of the Limitttion Act, 1961 (Central Act 36 of 1963) shall as far as may be, apply in computing the period for making an appeal under section 10 or an application for revision under section 11.

20. *Bar of proceedings.*—(1) No suit shall lie in any Civil Court to set aside or modify an assessment made or order passed under this Act.

(2) No suit, prosecution or other legal proceeding shall lie against the Government for anything which is in good faith done or intended to be done in pursuance of this Act or any rules made thereunder.

21. *Power to make rules.*—(1) The Government may make rules for securing the payment of the tax and generally for carrying into effect the provisions of this Act.

(2) (*a*) All rules made under this Act shall be published in the *Tamil Nadu Government Gazette* and, unless they are expressed to come into force on a particular day, shall come into force on the day on which they are so published:

(b) All notifications issued under this Act shall, unless they are expressed to come into force on a particular day, come into force on the day on which they are published.

(3) Every rule made or notification issued under this Act shall, as soon as possible, after it is made or issued, be placed on the table of both Houses of the Legislature, and if, before the expiry of the session in which it is so placed or the next session, both Houses agree in making any modification in any such rule or notification or both Houses agree that the rule or notification should not be made or issued, the rule or notification shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be, so however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule or notification.

22. *Power to remove difficulties.*—(1) If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Government may, by order, do anything not inconsistent with such provisions which appear to it to be necessary or expedient for the purpose of removing the difficulty.

(2) No order under sub-section (1) shall be made after the expiration of a period of two years from the date of publication of this Act in the *Tamil Nadu Government Gazette*.

23. *Power to alter the rates of tax.*—(1) The Government may, by notification, alter the rates of tax specified in sub-section (1) of section 4 and where a notification has been issued, there shall, unless the notification is in the meantime rescinded, be introduced in the Legislature, as soon as may be but in any case during the next session of the Legislature following the date of the issue of the notification, a Bill on behalf of the Government, to give effect to the alteration of tax specified in the notification, and the notification shall cease to have effect when such Bill becomes law, whether with or without modifications, but without prejudice to the validity of anything previously done thereunder:

Provided that if the notification is issued when the Legislature is in session, such a Bill shall be introduced in the Legislature during that session:



Provided further that where for any reason a Bill as aforesaid does not become law within six months from the date of its introduction in the Legislature, the notification shall cease to have effect on the expiration of the said period of six months.

(2) Any reference to the rate of tax made under this Act shall be considered as relating to the rate of tax as for the time being amended in exercise of the powers conferred by sub-section (1).

24. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Tax on Luxuries in Hotels and Lodging Houses Ordinance, 1980 (Tamil Nadu Ordinance 7 of 1980) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken (including any penalty imposed) under the said Ordinance, shall be deemed to have been done or taken under this Act.

I certify that this is a Money Bill.
Fort St. George, Madras
26th February 1981.

## இணைப்பு VI

[60 ஆம் பக்கத்தில் இனம் 6 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. Bill No. 1 of 1981.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Sales tax in force in the State of Tamil Nadu.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Sales Tax Laws (Amendment and Repeal) Act, 1981.

(2) (i) Sub-clause (a) of clause (1) of section 2 shall be deemed to have come into force on the 29th October 1980.

(ii) Sub-clause (b) of clause (1) of section 2 shall be deemed to have come into force on the 1st November 1980.

(iii) Sub-clauses (*d*) and (*f*) of clause (1) of section 2 shall be deemed to have come into force on the 17th December 1980.

(iv) Sub-clause (*e*) of clause (1) of section 2 shall be deemed to have come into force on the 31st December 1980.

(v) Sub-clause (*g*) of clause (1) of section 2 in so far as it relates to item 150, shall be deemed to have come into force on the 6th October 1980 and in so far as it relates to item 151 to 158 (both inclusive) shall be deemed to have come into force on the 1st November 1980.

(vi) Clause (2) of section 2 and the other sections of the Act shall be deemed to have come into force on the 1st November 1980.

2. *Amendment of Tamil Nadu Act* 1 *of* 1959.—In the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959),—

(1) in the First Schedule,—

(*a*) in item 6, for the entries in column (2), the following entries shall be substituted, namely :—

" Cinematographic equipment including cameras, projectors, sound recording and reproducing equipment, lenses, films, arc carbon or cinema carbon and parts and accessories required for use therewith. " ;

(*b*) items 35, 47, 47-A and 72 and the entries relating thereto shall be omitted;

(*c*) item 67 and the entries relating thereto shall be omitted;

(*d*) item 87 and the entries relating thereto shall be omitted;

(*e*) in the entries in column (2) against item 119 in column (1), for the expression " Bolts and nuts ", the expression " Bolts, rivets and nuts " shall be substituted;



(*f*) for item 126 and the entries relating thereto, the following items and entries shall be substituted, namely :—

"126 Rubber latex compound and rubber products, namely:— At the point of first sale in the State 9".
(*i*) Latex foam sponge.
(*ii*) Plates, sheets and strips unhardened, whether vulcanized or not and whether combined with any textile material or otherwise.
(*iii*) Piping and tubing of unhardened vulcanized rubber.
(*iv*) Transmission, conveyor or elevator belts or belting of vulcanized rubber, whether combined with any textile material or otherwise.

(*g*) After item 149 and the entries relating thereto, the following items and entries shall be added, namely:—

| | | | |
|---|---|---|---|
| "150 | Articles of food and drink, sold to customers in Three Star, Four Star and Five Star Hotels as recognised by Tourism Department, Government of India, whether such articles are meant to be consumed in the premises or outside. | At the point of first sale in the state | 10 |
| 151 | Petrol .. .. .. .. | Do. | 5 |
| 152 | Aviation Fuel .. .. .. | Do. | 7 |
| 153 | High Speed Diesel Oil .. | Do. | 9 |
| 154 | Light Diesel Oil .. .. | Do. | 9 |
| 155 | Kerosene .. .. .. | Do. | 8½ |
| 156 | Lubricating oils (not otherwise provided for in this Act), quenching oils and greases. | Do. | 8 |
| 157 | All kinds of mineral oils (other than those falling under item 156 of this Schedule and under item 3 A of the Second Schedule and not otherwise provided for in this Act) including furnance oil. | Do. | 8 |
| 158 | Asphalt (Bitumen) .. .. | Do. | 8 |
| 159 | Fuel gas including liquefied petroleum gas | Do. | [illegible] |

*Explanation I.*—For the purpose of items 151 to 159, a sale by one oil company to another oil company shall not be deemed to be the first sale in this State and accordingly any sale by one oil company to any other person (not being an oil company) shall be deemed to be the first sale in the State.

*Explanation II.*—For the purpose of Explanation I, "Oil company" means,—

"(a) the Madras Refineries Limited;

(b) the Indian Oil Corporation Limited;

(c) the Bharath Petroleum Corporation Limited;

(d) the Hindustan Petroleum Corporation Limited and includes any other oil company notified in this behalf by the Government in the *Tamil Nadu Government Gazette.*" ;

(2) in the Third Schedule, item 1 and the entries relating thereto shall be omitted.

3. *Amendment of Tamil Nadu Act* 14 *of* 1970.—In the Tamil Nadu Additional Sales Tax Act, 1970 (Tamil Nadu Act 14 of 1970),—

(1) section 3 shall be omitted;

(2) in section 3-A,—

(a) in the marginal heading, the words "importer or wholesale dealer" shall be omitted;

(b) the words "importer or wholesale dealer" in both the places where they occur shall be omitted;

(c) the expression "or sub-section (2) of section 3, as the case may be" shall be omitted;

(d) in the second proviso, the expression "or sub-section (3) of section 3" shall be omitted.

4. *Amendment of Tamil Nadu Act* 24 *of* 1971.—In the Tamil Nadu Sales Tax (Surcharge) Act, 1971 (Tamil Nadu Act 24 of 1971),—

(a) section 4 shall be omitted;

(b) in section 6, the expression "and the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939 (Tamil Nadu Act VI of 1939)" shall be omitted.



5. *Repeal of Tamil Nadu Act VI of* 1939.—The Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act, 1939 (Tamil Nadu Act VI of 1939) (hereinafter in this section referred to as the said Act), is hereby repealed.

(2) The repeal by sub-section (1) of the said Act shall not affect—

(i) the previous operation of the said Act or anything duly done or suffered thereunder; or

(ii) any right, privilege, obligation or liability acquired, accrued or incurred under the said Act; or

(iii) any fine, penalty, forfeiture or punishment incurred in respect of any offence committed against the said Act; or

(iv) any investigation, legal proceeding or remedy in respect of any such right, privilege, obligation, liability, fine, penalty, forfeiture or punishment as aforesaid;

and any such investigation, legal proceeding or remedy may be instituted, continued or enforced and any such fine, penalty, forfeiture or punishment may be imposed as if this Act had not been passed and as if the said Act and the rules made thereunder had continued in force.

(3) Notwithstanding anything contained in sub-section (1), any application, appeal or other proceeding made or preferred to any officer or authority under the said Act and pending on the commencement of this Act shall be disposed of by such officer or authority before whom such application, appeal or other proceeding is pending as if this Act had not been passed and as if the said Act and the rules made thereunder had continued in force.

6. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Sales Tax Laws (Amendment and Repeal) Ordinance, 1980 (Tamil Nadu Ordinance 8 of 1980), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the Sales Tax Laws as amended by the said Ordinance shall be deemed to have been done or taken under the Sales Tax Laws as amended by this Act.

I certify that this is a Money Bill.

Fort St. George,
Madras,
26th February 1981.

K. RAJARAM,
*Speaker*,
Tamil Nadu Legislative Assembly.

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

வியழாக்கிழமை, 1981 மார்ச் 5.

மாசி 22, ரௌத்திரி 2012, திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. இரங்கற் குறிப்பு.

### மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்பன் இயற்கை எய்தியது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தமிழ் நாடு சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்பன் அவர்கள் 26-2-1981 அன்று ஈரோட்டில் இயற்கையெய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் இந்த அவையில் ஏப்ரல் 1970 முதல் ஏப்ரல் 1976 வரை உறுப்பினராக இருந்தார். அவர் ஈரோடு ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும், வெள்ளாளர் கல்வி-அறக்கட்டளைச் செயலாளராகவும் இருந்திருக்கிறார்.

அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு மேலவையின் சார்பில் நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த பெரியவருக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(அவ்வாறே உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

[1981 மார்ச் 5

## 2. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### வத்தலக்குண்டு வெடி விபத்து.

* 111 வினா.—திரு. சோ. ஆறுமுகம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980 ஆகஸ்டில் மதுரை மாவட்டம், வத்தலகுண்டில் ஏற்பட்ட வெடி விபத்தில் இறந்தவர்கள் எத்தனை பேர்?

(இ) இறந்தவர்கள் குடும்பங்களுக்கு அரசு அளித்த உதவி யாது?

(உ) இறந்தவர்களுடைய உழைப்பால் வாழ்ந்து கொண்டிருந்த குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(எ) அத்தகைய குடும்பங்களுக்கு அரசு தனியாக உதவி ஏதும் அளித்ததா?

(ஐ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ஒரு விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

### துணைத் தாசில்தார் பதவிகள்.

* 112. வினா—திரு. சோ. ஆறுமுகம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பிற மாவட்டங்களிலுள்ள வட்ட அலுவலகங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள கூடுதல் துணைத் தாசில்தார் பதவிகள், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வட்ட அலுவலகங்களுக்கு அளிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அம்மாவட்டத்தில், அப்பதவிகளை ஏற்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அம்மாவட்ட ஆட்சித் தலைவரால், புள்ளி விவரத்தின் அடிப்படையில் கோரப்பட்ட, மூன்று துணை வட்டாட்சியர் பதவிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

---

@ 93-94 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது



1981 மார்ச் 5]

(இ) தற்போதுள்ள பணியாளர் நிலைக்கேற்ப மேலும் ஆறு கூடுதல் துணை வட்டாட்சியர் பதவிகள் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரால் கோரப்பட்டு அது அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் தக்க முடிவெடுக்கப்பட்டு ஆணை வெளியிடப்படும்.

திரு. க. இராமமூர்த்தி: இந்தக் கூடுதல் துணைத் தாசில்தார்கள் நியமனத்தை அரசு விரைவுபடுத்துமா? மற்ற மாவட்டங்களிலே இருக்கும் விகிதாச்சாரத்துக்கு (Ratio) ஏற்ப கன்னியாகுமரி மாவட்டத்திலும் தாசில்தார்கள் செயல்படும் அளவிற்கு நிலைமைகளை அரசு உறுதிப்படுத்துமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, 200 துணைத் தாசில்தார்கள் மாநிலம் பூராவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆங்காங்கே இருக்கின்ற தேவைக்கேற்றவாறு, ஜனத்தொகைக்கேற்றவாறு, இருக்கின்ற வேலைப்பளு, வரி வசூல், எல்லாவற்றையும் கணக்கெடுத்து தமிழ் நாடு முழுவதற்கும் ஒரேமாதிரியான முறைதான் பின்பற்றப்படுகிறது.

### உடற்பயிற்சி இயக்குநர்கள்.

* 113. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பி. பி. எட். பட்டம் பெற்ற உடற் பயிற்சி இயக்குநர்களை, மேல் உயர் நிலைப் பள்ளிகளில் நியமனம் செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) 1978-79, 1979-80 மற்றும் 1980-81 கல்வி ஆண்டுகளில், மேல் உயர் நிலைப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள உடற்பயிற்சி இயக்குநர் பதவிகள் எத்தனை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மேல்நிலைப் பள்ளி உடற்பயிற்சி இயக்குநர் பதவிக்கு பட்டப்படிப்போடு எம்.பி.எட். பயிற்சி பட்டம் B.A./B.Sc./B.Com. உடன் (M.P.Ed.) கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆதலின் பி.பி.எட். பட்டம் பெற்ற உடற்பயிற்சி இயக்குநர்களை மேல்நிலைப் பள்ளி உடற்பயிற்சி இயக்குநர்களாக நியமிப்பதற்கில்லை.

ஆனாலும், இவர்கள் மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் உடற்கல்வி பாடத்தை நடத்த அனுமதித்து அவர்களுக்கு தனி ஊதியமாக ரூ. 25 கொடுக்கப் படுகிறது.

(இ) 1979-80-ல் மேல்நிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சி இயக்குநர்களை அமர்த்தும் பொருட்டு, 400 உடற்பயிற்சி ஆசிரியர்/உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள் மேல்நிலைப் பள்ளி உடற்பயிற்சி இயக்குநர் பதவிகளாக உயர்த்தப்பட்டன. 1980-81-ம் ஆண்டில் 200 மேல்நிலைப் பள்ளி உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இந்த 200 உடற்பயிற்சி இயக்குநர் பதவி களில் பி. பி. எட். (B.P.Ed.) பட்டம் பெற்று ஆனால் சாதாரண உடற் பயிற்சி ஆசிரியர்களாகப் பணிபுரிந்தவர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்தி ருக்கிறார்கள். ஆனால், அதே உயர்நிலை—மேல்நிலைப் பள்ளிகளில் இடை நிலை ஆசிரியர்கள் பி. பி. எட். (B.P.Ed.) பட்டம் பெற்றவர்கள் மாநிலம் முழுவதும் 25 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். பி. பி.எட். (B.P.Ed.) பட்டம் பெற்று இடைநிலை ஆசிரியர்களாக இருப்பவர்களுக்கும் பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்று ஏற்கெனவே கேட்டிருக்கிறோம். இந்தக் கோரிக்கையை அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படிப்பட்டவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மற்றொன்று, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்ட இந்த 400 பணியிடங்களில் ஏற்கெனவே உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகிற உடற் கல்வி இயக்குநர்களில் எம்.பி.எட். (M.P.Ed.) பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர் களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படவில்லை. தற்போது பணியிலுள்ள எம். பி. எட். தகுதி படைத்தவர்களுக்கு அந்தப் பதவி உயர்வு அளிக்கப்பட வில்லை என்று உடற்பயிற்சி ஆசிரியர்கள் சங்கம் முறையீடு செய்திருக் கிறார்கள். அதுகுறித்தும் அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படிப்பட்ட நிலைமை இருக்கு மானால், அதுகுறித்து அரசு விசாரிக்கும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** இரண்டாம் நிலை உடற் பயிற்சி ஆசிரியர்கள் கூட பி.பி.எட். (B.P.Ed.) பட்டம் தேறியிருக்கிறார்கள். அதேபோல சிறப்பாசிரியர்கள் கூட பி. பி. எட். (B.P.Ed.) தகுதி பெற்று பள்ளிகளிலே



பணியாற்றுகிறார்கள். இப்போது இருக்கும் 400 பணியிடங்களுக்கும் முழுமையாக நிரப்பப்படும்போது, இவர்களுக்கும் சலுகையளித்து நியமிக்கப் படுவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது தரப்பட்டிருக்கின்ற இந்தப் பணியிடங்களில் நியமிக்கப்படுவதற்கு எம். பி. எட். (M.P.Ed.) பட்டம் படித்திருக்கவேண்டும் என்ற தகுதியை நிர்ணயம் செய்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே எம். பி. எட். பட்டம் படித்தவர்களை எடுத்தது போக மீதியுள்ள இடங்களுக்கு மேற்கொண்டு நாம் எடுக்கின்றபோது, இப்படிப்பட்டவர்களுடைய நிலைமைகளையெல்லாம் பரிசீலித்து அந்த இடங்களைப் பூர்த்தி செய்யலாம். அதுவும் பணியிடங்கள் இருப்பதைப் பொறுத்துதான் அந்த நிலைமை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அனைத்து மேல் நிலைப் பள்ளிகளிலும் உடற் கல்வி இயக்குநர்கள் நியமிக்கப்பட்டு விட்டார்களா ? அப்படி நியமிக்கப் படாமலிருந்தால் அதற்காகக் கூடுதல் இட ஒதுக்கீடு செய்து அரசு நியமிக்க ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** 1979-80-ல் 400 பேரையும் 1980-81-ல் 200 பேரையும் நாம் நியமித்திருக்கிறோம். மீதி தேவையாக இருந்தால், அடுத்த ஆண்டில் போடலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப் பிட்ட மேல் நிலைப் பள்ளி உடற் கல்வி ஆசிரியர்கள் நியமனத்தில் எம்.பி.எட். (M.P.Ed.) உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ரூ. 600 என்ற அடிப்படைச் சம்பள விதம் இருக்கிறது. ஆனால் அதே மேல் நிலைப் பள்ளிகளில் எம்.ஏ. பட்டம் பெற்று ஆசிரியர்களாக இருப்பவர்களுக்கு ரூ. 675 அடிப்படைச் சம்பளம் என்ற விதத்தில் இருக்கிறது. இப்படி முதுகலைப் பட்டம் பெற்ற வர்களிலேயே இரண்டுவிதமான பாகுபாடு இருக்கிறது. ஆகவே, எம்.பி.எட். (M.P.Ed.) பட்டம் பெற்ற உடற்பயிற்சி இயக்குநர்களுக்கும் ரூ. 675 அடிப்படைச் சம்பளம் கொடுக்க அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அவர்களுடைய தகுதியிலேயும், படிக்கின்ற கால அளவிலேயும் இருக்கின்ற வித்தியாசத்தின் அடிப்படை யிலேதான் இப்படி வைத்திருக்கிறோம். எம்.பி.எட். படிப்பு 1 வருடம், எம்.ஏ., எம்.எஸ்ஸி. படிப்பு இரண்டு வருடங்கள்.

## Grants for New Secondary Schools.

* 114 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that, for the Secondary Schools newly opened during 1978-79, non-teaching staff and equipment grants have not been sanctioned till 15th June 1980; and

(b) if so, the reasons for the delay in sanctioning them?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை. 1978-79 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட 32 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியரல்லாத ஊழியர்களின் பணியிடங்கள் 30—4—1980-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. விஞ்ஞான கருவிகளைப் பொறுத்தமட்டில், உயர்நிலைப் பள்ளியாக துவங்க அனுமதிக்கும்போது அந்தந்த பள்ளிக் கட்டிடக் குழு தேவையான விஞ்ஞானக் கருவிகள் முதலியவைகளை வழங்க ஒத்துக்கொள்கிறது. அரசைப் பொறுத்த மட்டில் முன்னுரிமை அடிப்படையில் விஞ்ஞானக் கருவிகள் வாங்க மான்யம்; நிதி நிலைமைக்கேற்ப வழங்கப்படுகிறது.

திரு. த. சந்தோஷம் : ஒரு உயர் நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக உயர்த்தும்போது, அதற்கான Non-teaching staff, equipment எல்லாம் சேர்த்து அனுமதி அளித்துவிட்டால், உதவியாக இருக்கும். இல்லாவிட்டால் பலவிதமான சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இனி மேலாவது இப்படி மேல்நிலைப் பள்ளிகளாக உயர்நிலைப் பள்ளிகள் உயர்த்தப்படும்போது, Non-teaching staff, equipment இவைகளுக்கெல்லாம் சேர்த்து அனுமதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தும்போது, அவற்றுக்குத் தேவையான ஆசிரியர் அல்லாத ஊழியர்கள் பணியிடங்களுக்கு உடனடியாக அனுமதி அளிக்க வேண்டும் என்ற கருத்து சரியான கருத்து. இதை அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. பா. ரா. தாமஸ் : பல அரசுப் பள்ளிகளில் ஆசிரியர் அல்லாத அலுவலர்கள் இல்லாத காரணத்தால், தலைமையாசிரியர்களுடைய நேரம் அந்த அலுவலகப் பணிகளிலே செலவிடப்படுகின்ற நிலைமை இருப்பதால், கல்விப் பணி சரியாக இல்லாமல் இருக்கிறது. ஆகவே, ஆசிரியர் அல்லாத ஊழியர்கள் எங்கெல்லாம் இல்லையோ அங்கெல்லாம் அந்தப் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா ?





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1978-79-ல் துவங்கப்பட்ட 32 அரசு உயர் நிலைப் பள்ளிகளுக்கு 30—4—1980-ல் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு துவக்கப்பட்ட பள்ளிகளுக்கு இன்னும், அனுமதிக்கப்படவில்லை. பள்ளிகளைத் துவக்கும்போதே அந்தப் பணியிடங்கள் அனுமதிக்கப்படும் என்ற கருத்து பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே, இந்தப் பிரச்சினைக்கு ஒரு பரிகாரம் அந்த முறையிலே காணலாம்.

## இன்டக்டட் ஆசிரியர்களின் சிறப்பூதியம்.

* 115. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேல் நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இன்டக்டட் ஆசிரியர்களின் சிறப்பூதியத்தை ரூ 25 லிருந்து ரூ. 50 ஆக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசுக்கு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

(முற்பகல் 10-40)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தொழிற் பிரிவு (மெக்கானிக்) ஆசிரியர்கள் 25 பாட வேளைகளை எடுத்த போதிலும், அவர்களுக்குச் சிறப்பு ஊதியமான ரூ. 25 வழங்கப்படாதிருப்பதை அரசு அறியுமா ? எனவே வருங்காலத்திலாவது அதை அவர்களுக்கு வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : அவர்களுக்கான சிறப்பு ஊதியத்தை உயர்த்தாவிட்டாலும்கூட, அத்தகைய ஆசிரியர்கள் தங்களின் படிப்புத் தகுதியை உயர்த்திக்கொள்ள—அதாவது மேற்படிப்புக்குத் தங்களைத் தயார் செய்து கொள்ள—அரசு உதவி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போதே ஆசிரியர்கள் எம்.ஏ. போன்ற பட்டங்களைப் பெறுவதற்கான வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. அதை ஆசிரியர்களும் அதிகமான அளவுக்குப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். ஆனால் சயன்ஸ் பாடங்களில் எம்.எஸ்ஸி பட்டம் பெறுவதற்கான வாய்ப்புகள் கடினமாக இருப்பதால், அதற்கான வகையில் சிறப்பு

நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று தமிழ் நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதன்படி அவர்களும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** உயர்நிலைப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு வரை இருந்தபோது பணியாற்றிய அதே அமைச்சுப் பணியாளர்கள்தான் இப்போது 12 ஆம் வகுப்புவரையுள்ள மேல் நிலைப் பள்ளிகளில் கூடுதல் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே ஆசிரியர்களுக்குக் கொடுக்கப் படும் இந்தச் சிறப்பு ஊதியத்தை அமைச்சுப் பணியாளர்களுக்கும் கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** 10 ஆம் வகுப்பு வரை பாடம் கற்பித்து வந்த ஆசிரியர்கள், 11 ஆம் வகுப்பிற்கும் சொல்லிக் கொடுப்பதால் உண்டாகிற சிரமத்திற்காகத்தான் ஆசிரியர்களுக்குச் சிறப்பு ஊதியம் கொடுக் கப்படுகிறது. ஆனால் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களும் இதன் காரணமாக அதிகமான வேலை செய்கிறார்கள் என்ற அடிப்படையில் இங்கே அவர்களுக்கும் சிறப்பு ஊதியம் கேட்கப்படுகிறது. அதை அரசு வேறு வகையில் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மேல்நிலைப் பள்ளிகள் தொடங்கிய பிறகு, 10 ஆம் வகுப்பு வரை கற்பித்து வந்த ஆசிரியர்கள் 12 ஆம் வகுப்பு வரை கற்பிக்கும் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு, அத்தகைய "இன்டக்டட் ஆசிரியர் களுக்கு" சிறப்பூதியமாக ரூ. 25 வழங்கி வருகிறோம். 12 ஆம் வகுப்பு வரை கற்பிப்பதற்கு, புதிய பாடங்களைப் படித்து, டிரெயினிங்கும் போய் கற்பிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு சிறப்பூதியமாக ரூபாய் 25 மட்டும் வழங்கப்படுவது போதுமானது என்று அரசு கருதுகிறதா ? அத்தகைய ஆசிரியர்கள் செய்யும் பணியின் அடிப்படையில் அந்தச் சிறப்பூதியத் தொகையை அதிகரிக்க அரசு முன்வருமா ? அல்லது அட்ஹாக் ரூல்சை முடிவுக்குக் கொண்டு வந்து விதிமுறைகளை ஒழுங்குபடுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இத்தகைய ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சிறப்பூதியம்—அதாவது ரூபாய் 25—குறைவாகப் பட்டாலும், இதில் உள்ள வேறொரு நிலையையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இவர்கள் அனைவரும் எப்போதும் இன்டக்டட் டீச்சர்களாகவே இருக்க வேண்டும், வெறும் பி.ஏ. பி.எஸ்சி. படித்தவர்களாக இருக்க வேண்டும் என்று அரசு விரும்பவில்லை. நாளடைவில் அவர்களும் எம்.ஏ., எம்.எஸ்சி. பட்டம் பெற்றவர்களாக மாற வேண்டும் என்றுதான் அரசு விரும்புகிறது.



எனவே வழங்கப்படும் சிறப்பூதியம் என்பது ஆசிரியர்கள் மேற்கொண்டும் படித்துப் பட்டம் பெறுவதற்குத் தூண்டுகோலாகத்தான் இருக்க வேண்டுமே தவிர, படிக்காமல் இருப்பதற்குத் தூண்டுகோலாக அமையக் கூடாது. இப்போது கிடைக்கிற சம்பளமே பரவாயில்லை என்று ஆசிரியர்கள் நினைத்துக்கொண்டு, மேற்கொண்டு பட்டப் படிப்பிற்குத் தங்களைத் தயார் படுத்திக் கொள்ளாமல் இருந்து விடுவதற்கு இது உதவக் கூடாது. தங்களின் தகுதியை மேற்கொண்டும் உயர்த்திக் கொள்ளாமல் இருப்பதற்கு இது உதவியாக இருக்கக்கூடாது. எனவே தகுதி பெற்ற ஆசிரியர்களை வெளியிலிருந்து கொண்டு வந்து இப்போது பணியாற்றும் ஆசிரியர்களை அந்தப் பதவிகளிலிருந்து இறக்க வேண்டும் என்று அரசு விரும்ப வில்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** தொழிற் பாடப் பிரிவுகளில் பணியாற்றும் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் 24 பாட வேளைகள் கற் பித்தால் மட்டுமே அவர்களுக்கு ரூபாய் 25 சிறப்பூதியமாக வழங்கப்படும் நிலை இருக்கிறது. ஆனால் வேறு சில பிரிவுகளில் பணியாற்றும் ஆசிரியர் களைப் பொறுத்தவரையில், 10 அல்லது 12 பாட வேளைகள் இருந்தால்கூட, இத்தகைய சிறப்பூதியம் பெறும் நிலை இருக்கிறது. எனவே தொழிற் பாடப் பிரிவுகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் 16 பாட வேளைகள் எடுத்தால் போதும், அவர்களுக்குச் சிறப்பூதியமான ரூபாய் 25 வழங்கப்படும் என்று அரசு உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இரண்டு நாட்களுக்கு முன் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது பதிலளிக்கும்போது தரப்பட்ட விவர அறிக்கை யில், மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள இன்டக்டட் ஆசிரியர்களுக்கு வழங்கப் படும் சிறப்பூதியத்தை உயர்த்துவது குறித்த பிரச்சினை அரசின் பரிசீலனை யில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று சொன்னார்கள். இந்த இரண் டில் எதைச் சரி என்று எடுத்துக் கொள்வது ? இது குறித்து அமைச்சர் அவர் கள் விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஒருவேளை அது பரிசீலனைக் கும், செயற்குறிப்புக்கும் இடையே இருக்கிற வித்தியாசமாக இருக்கலாம்.

## கன்னியாகுமரி மாவட்டத்தில் புயலினால் சேதம்.

@ * 95 வினா:—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1979, மே மாதம், கன்னியாகுமரி மாவட்டத்தில் வீசிய புயல் காற்றினால் சேதமடைந்த தென்னை மரங்கள், வாழைத் தோட்டங்களின் பரப்பளவு எவ்வளவு ?

(இ) கூரைகள் முறிக்கப்பட்டு அழிக்கப்பட்ட பள்ளிகள் எத்தனை ? வீடுகள் எத்தனை ?

(உ) பள்ளிகள் திறப்பதற்கு முன்னால் சேதமடைந்த பள்ளிகள் செப்பனிடப்பட்டனவா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) தென்னை மரங்களின் சேதம்—இல்லை.

சேதமடைந்த வாழைத் தோட்டங்களின் பரப்பளவு—52 ஹெக்டேர்.

(இ) கூரைகள் முறிக்கப்பட்ட பள்ளிகள்—20.

கூரைகள் முறிக்கப்பட்ட வீடுகள்—20.

(உ) 5 பள்ளிகள் அவை திறப்பதற்கு முன்பே செப்பனிடப்பட்டன. மற்ற 15 பள்ளிகள் பின்னர் செப்பனிடப்பட்டு விட்டன.

திரு. ம. சங்கரலிங்கம் : 1979 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் தேதி வீசிய புயல் காரணமாகச் சேதம் அடைந்த 15 பள்ளிகள் பிறகு செப்பனிடப்பட்டன என்று சொல்லப்பட்டது. மொத்தம் சேதமடைந்த 20 பள்ளிகளுக்கும் செப்பனிடுவதற்காக செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ? கூரை இடிந்து விழுந்த வீடுகளைத் திரும்பப் பழுது பார்க்க அரசு கொடுத்த உதவித் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : முதலில் சேதம் அடைந்த வீடு ஒவ்வொன்றிற்கும் ரூபாய் 100 அரசாங்கத்திலிருந்து வழங்கப்பட்டது. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிச் சிபாரிசின் பேரில் அந்தத் தொகை ரூபாய் 200 ஆக தீ விபத்துக்களுக்கு உயர்த்தப்பட்டது.

@ 28—2—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.



மொத்தமாகத்தான் இதற்கும் பணம் ஒதுக்கப்பட்டது. எனவே தனித் தனியாக பள்ளிகள் சீரமைப்புக்கு எவ்வளவு செலவானது என்பது போன்ற கணக்கு விவரம் என்னிடம் இல்லை.

## *Retired Officers of Commercial Taxes Department.*

@ * 96. Q.—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whetrer it is a fact that several retired Officers of the Commercial Taxes Department, are appearing for assessees before Assessing Officers and Appellate Authorities of the Commercial Taxes Department, by filing powers of attorney ;

(b) whether such Officers are allowed to collect fees for such appearance besides their pensions; and

(c) whether there is any proposal for stopping their pensions or for issuing appropriate orders to prevent them from such appearance ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஓய்வு பெற்ற வணிக வரித்துறை அலுவலர்கள், அதிகாரமளிக்கும் சான்றிதழ் தந்து வரி விதிப்பு அலுவலர்கள் முன்பும் மேல்முறையீட்டு அலுவலர்கள் முன்பும் வணிகரின் சார்பாக வழக்குரைக்கின்றார்கள். இதற்குத் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டமும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளும் இடமளிக்கின்றன.

(இ) ஆம்.

(உ) அவர்கள் அப்படி விற்பனை வரி வழக்குரைஞராகத் தொழில் புரிவது தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்திற்கும் அதன்கீழ் பிறப்பித்த விதிகளின் வரம்பிற்கும் உட்பட்டதனால் அவர்களுடைய ஓய்வு கால ஊதியத்தை நிறுத்துவதற்கோ அவர்களை அங்ஙனம் தொழில் புரியாது தடுப்பதற்கோ நடவடிக்கை தேவையில்லை.

திரு. த. சந்தோஷம் : ஓய்வு பெற்ற அதிகாரிகள் இவ்வாறு வரி விதிப்பு அதிகாரிகள் முன்பு வியாபாரிகளுக்காக ஆஜராகி வாதாடும்போது, வரி விதிப்பை நிர்ணயிக்கும் அதிகாரிகள் ஒன்று இவர்களின்கீழ் பணியாற்றியவர்களாகவோ அல்லது அவர்களோடு இணைந்து பணியாற்றியவர்களாகவோ இருப்பதன் காரணமாக பல தவறுகள் நடைபெறுவதற்கான சூழ்நிலைகள் உருவாகின்றன. அது மட்டுமல்ல. ஓய்வு பெற்ற அதிகாரிகள் வேறு பணி

@ 28—2—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

யில்—அரசாங்கப் பணியில் ஈடுபட்டுச் சம்பளம் வாங்கினால்—அதை அவர்களின் பென்ஷனிலிருந்து கழிக்கப்படும் நிலை இருக்கிறது. ஆனால், இவர்களோ அத்தகைய விதிகளை மீறுகிறார்கள் என்பதால் இதையெல்லாம் கருத்தில் கொண்டு சட்டத்திற்குரிய திருத்தத்தை அரசு கொண்டு வருவதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 50 (2) விதிப்படி, ஓய்வு பெற்ற வணிக வரித் துறை அலுவலர்கள் தாங்கள் ஓய்வு பெற்று 2 ஆண்டுகளான பிறகு இவ்வாறு வழக்குரைஞர்களாகத் தகுதியுடையவர்களாக உள்ளார்கள். ஆனால் விற்பனை வரிச் சட்ட மேல்முறையீட்டின் தீர்ப்புப்படி வருவாய் வாரியத்தின் முன்பும், மேலதிகாரிகள் முன்பும் அவர்கள் சென்று பேசுவதற்கான உரிமை இன்றைக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன என்றும், துறை அதிகாரிகளிடம் சலுகை பெற வாய்ப்புகள் இருக்கின்றன என்றும் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. த. சந்தோஷம்: நீதித் துறையைப் பொறுத்தவரையில், ஹைக்கோர்ட்டில் பணியாற்றிய நீதிபதிகள் அவர்களின் ஓய்வுக்குப் பிறகு அதே ஹைக்கோர்ட்டில் வழக்கறிஞர்களாகப் பதிவு செய்து கொண்டு பணியாற்றக் கூடாது என்று தடை இருக்கிறது. அதைப்போலவே பார் கவுன்சில் ஆக்டிலும், அட்வகேட்ஸ் ஆக்டிலும் இப்படி ஓய்வு பெற்ற மற்ற நீதிபதிகள் தாங்கள் பணியாற்றிய இடங்களில் வழக்கறிஞர்களாகப் பணியாற்றக்கூடாது என்று விதி இருக்கிறது. அப்படிப்பட்ட தடையை இந்தத் துறையிலும் கொண்டு வருவது நல்லதாக இருக்கும். எனவே இந்த அடிப்படையில் இப்பிரச்சினையை அரசு மறுபரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நீதித் துறையில் தடை இருப்பதால், அங்கே அவ்வாறு பணி புரியவில்லை. இங்கே அப்படி தடையேதும் இல்லாததால், பணி புரிகிறார்கள் என்பதை நான் ஏற்கெனவே சொன்னேன். இதை அரசு பரிசீலிக்கும் என்றும் சொன்னேன்.





## *Adjournment of Criminal Cases.*

@ * 101. *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state :

(*a*) whether it has been brought to the notice of the Government that several criminal cases pending in Magistrates' Courts get adjourned, solely because the Reserve Police Escorts intended to appear in the cases, are drafted for other duties; and

(*b*) if so, the action taken by the Government, to avoid such inconvenience to the Courts?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆமாம், ஐயா.

(இ) அமளி, கதவடைப்பு மற்றும் வேலை நிறுத்தம் ஆகிய பல காரணங்களுக்காக காவல்துறையினர் பந்தோபஸ்து அளிப்பதால், அவர்களின் பணிச்சுமை தற்போது அதிகரித்து உள்ளது. இருந்தபோதிலும், பாதுகாப்புக்காகச் செல்லும் காவலர் புறக்கணிக்கப்படாமலிருக்க தகுந்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 10-50)

திரு. த. சந்தோஷம் : 'ஜெயில் விசிட்டர்' என்ற முறையில் சமீபத்தில் மதுரை மத்திய சிறைச்சாலைக்கு நான் சென்றிருந்தபோது, 65 வயதடைந்த வயோதிகக் கைதியைச் சந்தித்தேன். சந்தேகக் கேசின் பேரில் பிடிக்கப்பட்ட அவர் 9 மாதங்களாகச் சிறையில் இருப்பதாகச் சொன்னார்கள். அவருடைய வழக்கு இன்னமும் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று சொன்னார். இதைப்பற்றி சிறை அதிகாரிகளை விசாரித்தபோது, அங்கு பணிபுரியக் கூடிய காவலர்கள் எஸ்கார்ட் ட்யூட்டிக்காகவும், திருவிழா பணிக்காகவும் போக வேண்டியிருப்பதால்தான், காலதாமதம் ஏற்படுவதாகச் சொன்னார்கள். ஆகவே மத்திய சிறைச்சாலையில் உள்ளவர்களை அது போன்ற பணிகளுக்கு அனுப்பாமல் மற்ற காவல் துறையைச் சேர்ந்தவர்களை அப்பணிகளுக்கு நியமிக்க அரசு முன்வருமா!

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சிறைச் சீர்திருத்தம் என்கிற வகையில் இதைப்பற்றியெல்லாம் அரசு சிந்தித்துக் கொண்டிருக்கிறது. அது விவரமாக வெளிப்படும்போது, இதற்குச் சரியான பதில் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

---

@ 28—2—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** திறந்தவெளி சிறைச்சாலையை அமைத்துச் சீர்திருத்தம் செய்யும்போது, நம்பிக்கைக்குரிய கைதிகள் அவர்களாகவே நீதிமன்றத்திற்கு வந்து போக அனுமதிக்கும் நிலை வருமா?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** சில சமயம் போராடுவதற்கு சிலர் தாங்களாகவே வேன்களில் ஏறுவதைப் பார்க்கின்றோம். அது போன்ற நிலைமைகளை எல்லா நேரங்களிலும் எதிர்பார்க்க முடியாது. அப்படிப்பட்டவர்களுடைய பட்டியலை மாண்புமிகு உறுப்பினர் தயார் செய்து கொடுத்தால் கவனிக்கலாம்.

**திரு. க. இராமமூர்த்தி :** சிறைச் சீர்திருத்த அறிக்கையை அரசு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது என்றும் அந்த அடிப்படையிலே சீர்திருத்தங்களையெல்லாம் நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'Justice delayed is justice denied' என்ற அளவிலே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நீண்ட காலமாக சிறையிலேயே இருந்து கொண்டு, நீதிமன்றத்திற்குப் போக முடியாத நிலை இருக்குமானால், எந்தெந்த சிறைச்சாலைகளில் அப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று கணக்கிட்டு அவர்களையெல்லாம் விரைவாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வழக்கைச் சந்திக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்த அரசு உறுதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு உறுப்பினரே ஒரு வழக்கறிஞர். பாரதம் தழுவிய அளவில் இந்தப் பிரச்சினை இருக்கிறது. குறிப்பாக அண்டர்-ட்ரையல் பிரிசனர்களைப் பொறுத்தவரையில், முசாபர்பூர் ஜெயிலில் உள்ளவர்கள் உச்ச நீதிமன்றத்தில் ரிட் மனுவைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். இது குறித்து உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். 1979 ஆம் ஆண்டு மைய அரசு, மாநிலத் தலைமைச் செயலாளர்களை வரவழைத்து இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று ஆய்வு செய்தது. பாரதம் தழுவிய அளவில் ஒட்டுமொத்தமாக 44 இலட்சம் கேஸ்கள் பெண்டிங்காக இருப்பதாக மைய அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரைக்கும், 6,472 வழக்குகள் இது போன்ற நிலையிலே இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். பாரதத்திலே இருக்கின்ற ஒட்டுமொத்த நிலையை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, தமிழகத்திலே உள்ள நிலைமை எவ்வளவோ பரவாயில்லை என்று இருக்கிறது. இருந்தபோதிலும் இந்தக் குறைபாடு இல்லாமல் இருக்க, காவல் துறையைச்





சேர்ந்த காவலர்கள் இல்லையென்ற காரணம் இருக்கிறதென்றாலும், தக்க ஆதாரமான காரணங்கள் இல்லாமல் இருந்தால் வாய்தாக்கள் கொடுக்கக் கூடாது என்ற முறையை ஏற்படுத்தி, குறிப்பிட்ட காலத்திற்குள் இத்தனை வழக்குகளை முடிக்க வேண்டும் என்ற வரையறையைக் கொண்டு வர வேண்டும் என்று உயர்நீதி மன்றத்தை மாநில அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. இவற்றை நடைமுறைப்படுத்தும்போது இந்தப் பிரச்சினை முழுவதும் தீரும் என்று நம்புகிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** விசாரணைக் கைதிகளாக இருப்பவர்களில் குறிப்பாக சந்தேகக் கேசாக இருந்தால், அவர்களை 9 மாதங்களுக்குச் சிறைச்சாலையில் வைத்திருக்க வேண்டியதில்லை என்று கருதி, இரண்டு வாய்தாக்களில் நிவாரணம் இல்லையென்றால், அவர்களை விடுதலை செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியதைப் போல, பீகார் மாநிலத்தில் உள்ள சிறைக் கைதிகள் குறித்து உச்ச நீதிமன்றத்தில் ரிட் மனுக்களை விசாரித்தபோது, 3 ஆண்டு காலம், 19 ஆண்டு காலம் வரை கூட அங்கே அண்டர்-ட்ரையல் பிரிசனர்கள் சிறையிலே இருப்பதாக உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, தமிழகத்திலே சிறையில் இருப்பவர்களின் கால அளவு மிகவும் குறைவாக இருக்கிறது. தற்போது இருக்கின்ற பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு 6 மாத காலத்திற்குள் முடிந்த அளவிற்கு இது போன்ற வழக்குகளைப் பரிசிலித்து முடிவு செய்ய வேண்டும் என்ற உச்சநீதிமன்றத்தின் அறிவுரையை மாநில அரசு உயர் நீதிமன்றத்திற்கும், மற்ற நீதிமன்றங்களுக்கும், துறைத் தலைமை அலுவலகங்களுக்கும் அனுப்பி நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப் போல ஒன்றிரண்டு இடங்களில் நிலைமை இருக்குமானால், அதை ஆய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. உரிமைப் பிரச்சினை.

### சட்டமன்ற நடவடிக்கைகளைப் பற்றிய செய்திகளைச் சேகரிக்குமாறு சி.ஐ.டி. துறையினருக்கு காவல் துறைக் கண்காணிப்பாளர் அனுப்பிய குறிப்பாணை குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்ற நடவடிக்கைகளைப் பற்றிய செய்திகளைச் சேகரிக்குமாறு சி.ஐ.டி. துறையினருக்கு காவல் துறைக் கண்காணிப்பாளர் அனுப்பிய குறிப்பாணை குறித்து, 26—2—1981 அன்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ம. சங்கரலிங்கம், திரு. க. இராமமூர்த்தி ஆகியோர் எழுப்பிய உரிமைப் பிரச்சினையைக் குறித்து அரசின் விளக்கத்தை மாண்புமிகு முன்னவர் அளிப்பார்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. இராமமூர்த்தி அவர்களும் எதிர்க் கட்சித் தலைவர் திரு. ம. சங்கரலிங்கம் அவர்களும் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினை மீது அரசு தரப்பில் விளக்கத்தை நான் தர விரும்புகிறேன்

சி.ஐ.டி. அடிஷனல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் அவர்கள் கீழ்க்கண்ட விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள் :—

"31—1—1981 அன்று சி.ஐ.டி. துறை அனுப்பிய இரகசியக் குறிப்பாணையில் இரு அவைகளிலும் விவாதிக்கப்படுகின்ற பிரச்சினைகளை உடனுக்குடன் தெரிந்து கொண்டு தேவையான முழுமையான தகவல்களை மாநிலத்தின் எந்த இடத்தோடும் தொடர்புகொண்டு பெற்று அரசுக்கு அவைகளை உண்மையில் உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் தான் பிறப்பிக்கப்பட்டது. எந்த ஒரு கட்சியையோ, அல்லது எந்த ஒரு மாண்புமிகு உறுப்பினரையோ தனிப்பட்ட முறையில் கண்காணிக்கும்படி உத்தரவிடப்படவில்லை.

அவையில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும், தகவல்களையும் சேகரிப்பதற்குக் காரணமாக இருக்கும் கருத்துக்களை உடனுக்குடன் தெரிவிக்குமாறு உரியவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. பல சமயங்களில் சேகரித்துத் தருவதற்கும் போதிய அவகாசம் கிடைக்காதது ஒரு பெரிய குறையாக இருந்துவிடுகிறது. குறிப்பாக, சட்டம், ஒழுங்கு போன்ற விஷயங்களில் உடனுக்குடன் சரியான விவரங்களை வேகமாகச் சேகரிப்பது அத்தியாவசியமாகின்றது. இந்த நடவடிக்கை அவையின் உரிமையை பாதிக்கக் கூடும் என்று சி.ஐ.டி. துறை நினைத்தும் எதிர்பார்க்கவில்லை. அப்படிப் பாதிக்கப்படுவதாகக் கருதக்கூடும் என்ற ஐயம் எழுந்ததுமே அந்தக்



குறிப்பாணை திரும்பப் பெறப்பட்டது. இனி இம்மாதிரி எதுவும் நிகழாது என்று துறை உறுதி கூறுகிறது. எதிர்பாராத விதமாக தவறான ஐயத்தை இந்தச் செயல் ஏற்படுத்தியதற்கு சி.ஐ.டி. துறை தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது."

என்று சி.ஐ.டி. அடிஷனல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் கூறியிருக்கிறார். உண்மையிலே யாரும் அவையின் அனுமதிச் சீட்டைப் பெறவில்லை; யாரும் அந்த ஆணையின்படி வந்திருந்து கவனிக்கவும் இல்லை. இனி இந்த மாதிரியாக நடைபெறக்கூடாது என்றும், நடைபெற்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என்றும் சி.ஐ.டி. துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இந்த விளக்கத்தை ஏற்றுக்கொண்டு இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிட மாண்புமிகு உறுப்பினர்களும், மேலவைத் தலைவராகிய தாங்களும் உதவுமாறு அரசின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இது குறித்து என்னுடைய தீர்ப்பைப் பின்னர் அறிவிக்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, தாங்கள் தீர்ப்பு கூறுவதற்கு முன்னால் இப்போது அரசு தந்திருக்கிற விளக்கத்தைப்பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். அந்த விளக்கம் அந்தக் குறிப்பாணையைவிட மோசமாக இருக்கிறது. அந்தக் குறிப்பாணையின் மூலமாக பறிக்கப்பட்ட உரிமையைவிட அதிகமான உரிமை இந்த விளக்கத்தின் மூலமாகப் பறிக்கப்படுகிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதை நாம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் இதை விவாதிக்க ஆரம்பிக்கக் கூடாது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** குறிப்பாணையின் மீது அளித்த விளக்கத்தின் பேரில் எங்களுடைய கருத்தை அறிய வாய்ப்புத் தர வேண்டும். இந்த விளக்கத்தின் மீது உரிமைப் பிரச்சினை எழுப்ப வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் ஓர் உரிமைப் பிரச்சினையை வழக்கப்படி கொடுத்திருக்கிறார். அதுபற்றி தம்முடைய கருத்தை அவர் தெரிவித்துவிட்டார். அதற்குப் பிறகு சர்க்காரின் கருத்தைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. எஞ்சியிருப்பது தலைவரின் தீர்ப்பு ஒன்று தான். ஆகவே மேற்கொண்டு விவாதம் ஆரம்பிப்பதன் மூலமாக புதிய முறையைக் கடைப்பிடித்தால், இதில் என்ன நியாயம் இருக்கிறது?

**சட்ட மன்ற நடவடிக்கைகளைப் பற்றிய செய்திகளைச் சேகரிக்குமாறு சி.ஐ.டி. துறையினருக்கு காவல்துறைக் கண்காணிப்பாளர் அனுப்பிய குறிப்பாணை குறித்து.**



**திரு. ம. சங்கரலிங்கம்:** புதிய மரபை நான் உருவாக்க விரும்பவில்லை. இதை நான் விவாதமாக்கவும் விரும்பவில்லை. ஆனால் உங்களுடைய தீர்ப்புக்குப் பிறகு நான் பேசக் கூடாது என்பதால், இப்போதே தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தமக்குள்ள குறையை ஏற்கெனவே சொல்லியாகிவிட்டது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** சொல்ல நேரம் தந்தால் சொல்ல முடியும். இல்லையென்றால் எழுதித் தருகிறேன்.

## 4. அறிவிப்பு.

### ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார். அது நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(முற்பகல் 11-00)

## 5. கவன ஈர்ப்பு.

(1) பள்ளிக் கல்வி இயக்குநர் நடுநிலைப் பள்ளிகளிலுள்ள எட்டாம் வகுப்பை நீக்கி உயர்நிலைப் பள்ளியில் வைக்க வேண்டும் என்று நடவடிக்கை எடுத்து வருவதால் நடுநிலைப் பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் எட்டாம் வகுப்பு சொல்லித் தரும் இடைநிலை ஆசிரியர்கள் பாதிக்கப் படுவது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. செ. முத்துசாமி, திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன், திரு. க. மீனாட்சிசுந்தரம் ஆகியோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வி இயக்குநர் நடுநிலைப் பள்ளிகளிலுள்ள எட்டாம் வகுப்பை நீக்கி உயர்நிலைப் பள்ளியில் வைக்க வேண்டும் என்று நடவடிக்கை எடுத்து வருவதால் 6,000 நடுநிலைப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும்





எட்டாம் வகுப்பு சொல்லித்தரும் 25,000-க்கு மேற்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் பாதிக்கப்படுவதால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன்வைக்கப்பட்டுள்ளது.

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்து குறித்து அரசு இறுதியாக முடிவெடுக்கவில்லை என்றாலும், இதுகுறித்து பல்வேறு ஆசிரியர்களுடைய கருத்தை அறிந்து வருவதாகவும், சம்பந்தப்பட்ட அனைவரையும் கலக்காமல் இது குறித்து அரசு முடிவெடுக்காது என்றும் இதில் குறிப்பிடப்பட்டிருப்பதை நான் வரவேற் கிறேன். இந்தக் கருத்தைச் செயல்படுத்துவது என்று முடிவு செய்தால், இடைநிலை ஆசிரியர்களின் நிலை என்னவாகும் என்பது பற்றிய நியாயமான சந்தேகங்களை என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள். அதனால், இடைநிலை ஆசிரியர்கள் உபரியாகக் கருதப்பட்டு பணியிழந்துவிடுவார்கள் என்று ஐயப் படுகிறார்கள் அல்லது உபரியாகக் கருதப்பட்டு ஆசிரியர் பணி, கல்வி போதிக்கின்ற பணியில்லாமல் அவர்களை Non-Academic பணிகளில் அமர்த்தி (அல்லது) மாறுதல்கள் செய்யக் கூடிய நிலைமைகள் எல்லாம் ஏற்படலாம் என்ற ஐயப்பாடு இருந்துகொண்டிருக்கிறது. புதிய இடைநிலை ஆசிரியர்கள் வேலை வாய்ப்பை இழந்து விடுவார்களோ என்ற சந்தேகமும் இருக்கின்றது. இப்படி மூன்றுவிதமான சந்தேகங்கள் இருந்து கொண்டிருக் கின்றன. கல்வித் தரத்தை உயர்த்த இந்த நடவடிக்கைகள் எடுப்பதாகக் குறிப்பிடப்படுகிற அதே நேரத்தில் இந்தக் கருத்துக்கள் குறித்தும் அரசு ஆய்வு செய்யுமா ?

(திரு. க. மீனாட்சிசுந்தரம் எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கம் கேட்கிறார்களா ?

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நுணுக்கமான பிரச்சினையாக இருக்கிறது. அதனால் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

---

@ 95 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சடிக்கப்பட்டுள்ளது.

கல்வியினுடைய தரத்தை உயர்த்துவதுபற்றி அரசு பரிசீலனை செய்வதாகக் கருத்து வந்திருக்கிறது. இடைநிலை ஆசிரியர்கள் சார்பாக இங்கே எழுப்பப்பட்ட இந்தச் சந்தேகங்களை அரசு சேர்த்து வைத்துப் பரிசீலனை செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 8-வது வகுப்பை உயர் நிலைப் பள்ளியோடு சேர்க்க வேண்டுமென்ற கருத்து பரவலாகப் பேசப்பட வேண்டுமென்று விரும்புகிற நிலையிலே, ஆங்காங்கே இந்தக் கருத்து சொல்லப்படுகிறது. இது குறித்து அரசு பரிசீலித்து எந்த முடிவும் எடுக்கவில்லை என்பதைத்தான் சொல்லியிருக்கிறேன். ஆனால், பேசப்பட வேண்டுமென்று விரும்புகிறோம் என்பதைவிட பேசப்பட்டிருக்க வேண்டும். அதற்கு முன்னர் பல பேர்களாலே இந்தக் கருத்து வரவேற்கப்பட வேண்டிய அளவில் அரசே வற்புறுத்தியிருக்க வேண்டும். அப்படிப்பட்ட கருத்து பேசப்படாமல் இருப்பதன் காரணமாக 11-வது வகுப்பு முடிய இருந்த படிப்பு 10 ஆண்டுக் குறுகிய காலப் படிப்பாக ஆகியிருக்கிறது. இந்தக் குறுகிய காலத்திற்குள் படிப்பின் தரம் உயர வேண்டும். அந்த 8-வது வகுப்பின் பாடத்தினுடைய தரம் உயர வேண்டும் என்பதால் அதைச் சொல்லித் தருகின்றவர்களுடைய தகுதி செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு இருக்கிறதா என்பதுதான் இதிலே உள்ள கருத்தாகும். அவர்களாலே அப்படி முடியாமல் இருக்குமானால், எட்டாவது வகுப்பில் அந்த ஓராண்டு கல்வித் தரம் இல்லாத நிலையாக வந்து விட்டால், நாம் அப்படி கல்வி தந்துவிட்டால், அதற்கு மேலே மிகப் பெரிய கேடு வந்துவிடும். இடையிலே ஒரு பலஹீனமான நிலைமையை உண்டாக்கிவிடும். அந்தக் கருத்திலே பேசப்பட வேண்டிய ஒன்றாக இது இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் கருத்துக்கள் பேசப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். எட்டாவது வகுப்பு உயர் நிலைப் பள்ளிக்குப் போகின்ற நேரத்தில், இந்த ஆசிரியர்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்படுவார்கள். இன்று எட்டாவது வகுப்பு தொடக்கப் பள்ளியிலே இருப்பது நல்லதா அல்லது உயர் நிலைப் பள்ளியிலே இருப்பது நல்லதா என்று பார்க்கின்றபோது, மாணவர்களுடைய நலனைப் பொறுத்து, நம் சமுதாயத்தினுடைய நன்மையைக் கருதி நாமே அந்தக் கருத்துக்களை வெளியிட வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசையாகும்.





**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இந்தக் கருத்து பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று என்று கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் சமீப காலத்தில் நடைபெற்ற ஆசிரியர்கள் நிகழ்ச்சி ஒன்றில் எட்டாவது வகுப்பு தொடக்கப் பள்ளியிலேயிருந்து நீக்கப்பட்டு உயர் நிலைப் பள்ளியிலே சேர்க்கப்படும் என்று திட்டவட்டமாக அறிவித்ததாக பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன. எனவே இப்போது குறிப்பில் சொல்லியிருப்பதுதான் சரியா அல்லது அங்கே அறிவித்த கருத்துதான் சரியா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே வந்த செய்தி தவறு. நான் கலந்து கொண்ட ஆசிரியர்களுடைய மகாநாட்டிலே நான் இந்தக் கருத்தைத் தெரிவித்தபோது, அவர்கள் முதலிலே என்னை வைத்துக்கொண்டே நான் சொன்ன கருத்தை எதிர்த்தார்கள். இப்படியெல்லாம் நிலைமைகள் இருக்கின்றன என்று சொல்லி, அந்த மேடையிலே ஆசிரியர்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றுதான் சொன்னேன். அதுதான் அந்த மகாநாட்டிலே நடைபெற்றது. அதிலே முடிவு எடுக்கப்பட்டதாகச் சொல்லவில்லை. பத்திரிகையிலே அந்தச் செய்தி வந்ததாகச் சொல்கிறார்கள். அந்தச் செய்தி தவறான ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. க. மீனாட்சிசுந்தரம் எழுந்தார்).

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஒருவர் இரண்டு முறை கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் விளக்கம் கேட்கலாம். இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் மூன்று பெயர்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் இரண்டு கேள்விகள் கேட்பது என்பது முடியாது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் ஒவ்வொரு உறுப்பினரும் இரண்டு முறைகள் விளக்கம் கேட்கலாம் என்று விதியிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் நான்கு, ஐந்து உறுப்பினர்களின் பெயர்களில் கொடுக்கப்பட்டிருந்தால், இரண்டு விளக்கங்கள் என்று கேட்டால், 10 விளக்கங்கள் என்று அதிகமாகிவிடும். எத்தனை பேர்கள் இருந்தாலும் ஒவ்வொருவருக்கும் இரண்டு கேள்விகள் என்பது அல்ல.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இப்போது ஒரேயொரு கேள்வி கேட்க வேண்டும். தயவுசெய்து ஒரேயொரு கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒவ்வொருவரும் இரண்டு முறைகள் கேட்பது என்பதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஒரேயொரு விளக்கம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்போது விசேஷமாக அனுமதிக்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கல்லூரிக் கல்வியைப் பரவலாக ஆக்க வேண்டுமென்ற நோக்கத் தோடு பிளஸ் 2 வகுப்பினை உயர் நிலைப் பள்ளிக்குக் கொண்டுவந்தார்கள். இப்போது அவர்கள் நடு நிலைப் பள்ளியில் இருக்கின்ற 8-வது வகுப்பினையும் உயர் நிலைப் பள்ளிக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்கின்றபோது, ஏழை மாணவர்கள் அந்தந்தப் பகுதியில் படிக்கின்ற நிலைமை மாறி, 8-வது வகுப்பு படிக்க உயர் நிலைப் பள்ளியைத் தேடிப் போகின்ற நிலைமைகள் ஏற்படும். அவர்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த ஏழை மக்கள் ஏழாவது வகுப்பிலேயே நிறுத்திக் கொள்ளும் நிலை ஏற்படும். இதனால் ஏழை மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இது குறித்து அரசு பரிசீலிக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இன்றைக்கு வேண்டியது கல்வியினுடைய தரம். தரம் கெட்டுவிட்டால், அதற்குப் பிறகு நாம் என்ன பயனையும் பெற முடியாது. அதைச் சரி செய்ய முடியாது. எட்டாவது வகுப்பை உயர் நிலைப் பள்ளிக்குக் கொண்டு வந்தால், அங்கு கணக்கு, சரித்திரம், தமிழ், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு என்று அந்தந்தத் துறையிலே சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்த ஏழை மாணவர்களுக்குச் சொல்லித் தருகின்ற வாய்ப்பை நாம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன். இதுதான் நாம் முக்கியமாகப் பார்க்கவேண்டிய ஒன்று. கல்வியின் தரத்தை, நம் சமுதாயத்தினுடைய தன்மை, இவைகளையெல்லாம் பார்க்க வேண்டும். ஆகவே இதை ஏற்றுக் கொண்டு நாம் கல்வியின் தரத்தை உயர்த்திக்கொள்ளப் பாடுபட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் மேலும் கேட்க விரும்புகிறார்களா? விளக்கம்தான் கேட்கலாம்.



* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** விளக்கம்தான் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தைப்பற்றி விவாதம் நடந்திருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதைப்பற்றி இந்த மேலவையிலேயே விவாதம் நடந்திருக்கிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசியபொழுது கல்வித் தரத்தின் அடிப் படையில் எட்டாம் வகுப்பிற்கு உயர்ந்த கல்வித் தகுதி பெற்ற ஆசிரியர்கள் இருக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இது குறித்து ஒட்டியும், வெட்டியும் இங்கே பேசப்பட்டுள்ளது. கல்வியின் தரம் உயர்வது என்ற கண்ணோட்டத்தின் அடிப்படையில் சொன்னால், அதை எதிர்த்து யாரும் கருத்து சொல்ல மாட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் சொன்னதுபோல, எட்டாவது வகுப்பில் ஏழை மாண வர்கள் அங்கங்கேயே படிக்கின்ற அளவுக்கு எட்டாம் வகுப்பு எங்கிருந்தாலும் உயர்கல்வி தகுதி படைத்த ஆசிரியர்களை நியமிக்கலாம். இந்தக் கருத்தை அரசு ஆலோசனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அந்தக் கருத்தும் பேசப்பட்டிருக்கிறது. உயர் தொடக்கப் பள்ளியிலே பட்டதாரி ஆசிரியர்களைப் போடுவது பற்றிப் பேசப்படவில்லை. அந்த அடிப்படையிலே பேசப்பட வேண்டும். அந்த மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள் மூலம், தகுதி பெற்ற வர்கள் மூலம் கல்வி தர வேண்டும். அந்த அடிப்படையிலேதான் இதை நாம் அணுக வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். கருத்துக்களை எப்போதும் சொல்லலாம். எல்லாவற்றையும் பார்த்துத்தான் எந்த முடிவையும் நாம் எடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (2) வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நகர மக்கள் படும் அவதிகள் குறித்து.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நகர மக்கள் படும் அவதிகள் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1981 மார்ச் 5

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

***திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையில் இந்த மாவட்டத் தலைநகரமான வேலூரினுடைய மொத்தத் தேவை 24 லட்சம் கேலன் குடிநீர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சுமார் 16.35 லட்சம் கேலன் குடிநீர்தான் இப்போது மக்களுக்குக் கிடைக்கக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. கோடைக்காலமானால், இன்னும் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேலூருக்குக் குடிநீர் தட்டுப்பாடு என்பது ஒவ்வொரு ஆண்டும் கவலை தரக்கூடிய ஒரு பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் எவ்வாறு சென்னை குடிநீர்ப் பிரச்சினை தீர ஒரு நிரந்தரமான திட்டத்தைச் செயல் படுத்த இருக்கிறோமோ அது போல் ஒரு பெரிய திட்டத்தை, வேலூருக்குள்ள குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க ஒரு நல்ல நிரந்தரமான திட்டம் தீட்டி ஒரு நிலையான பரிகாரம் காணுவது குறித்து அரசு பரிசீலிக்குமா? அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமா?

***மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது 129.27 ரூபாயில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு அந்தத் திட்டத்தின்கீழ் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. அந்தத் திட்டத்தின் வேலை முடிந்துவிட்டால், ஒரு நாளைக்கு 8.35 எம்.எல்.டி. தண்ணீர் கிடைப்பது என்று இருப்பது, 11.35 எம்.எல்.டி. அளவுக்கு அதிகமாகக் கிடைக்கும். இந்தப் பணி மார்ச் 31 தேதியில் முடிந்துவிடும் என்று எதிர் பார்த்தோம். இனியும் காலந்தாழ்த்தாது விரைவிலே செய்து முடிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அதைச் செய்து முடித்துவிட்டால், மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கவலைப்படத் தேவையிருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அமைச்சரவர்கள் அளித்த விவரங்களுக்காக என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அறிக்கையிலே தற்கால நடவடிக்கைகளாகச் சில குறிப்புகள் காணப்படுகின்றன. இந்த நேரத்தில் ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்பு

@ 96-97 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1981 மார்ச் 5] (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்)

கிறேன். மக்களுக்குக் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படும்போது, குறிப்பிட்ட இந்த நேரத்தில் தண்ணீர் கொடுக்கப்படும், அதற்காக இந்த முறையைப் பின் பற்றுகிறோமென்று மக்களுக்குத் தெளிவாக அறிவிக்க வேண்டும். தண்ணீர் கொடுப்பதில் இன்னின்ன கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன என்று முன்கூட்டி அறிவித்துவிட்டால், அவர்கள் முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை களை எடுத்துக்கொள்ள வழிவகை ஏற்படும். சென்னையிலே அப்படிப்பட்ட நடவடிக்கை முன்பு எடுக்கப்பட்டது. இந்த நேரத்தில் கிடைக்கும், இந்த நேரத்தில் கிடைக்காது, மாற்று ஏற்பாடுகள் என்ன என்பது தெளிவாக அறி விக்கப்பட வேண்டும். மக்கள் அதற்கேற்றவாறு தங்கள் தேவைகளைச் சரி செய்துகொள்ளக்கூடிய நிலைமைகள் உண்டாகும். எனவே வேலூரில் இப்படிப் பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** இது குறித்து நகராட்சியின் விசேட அதிகாரிக்குத் தகவல் தந்து, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தை மனதில் வைத்துச் செயல்பட ஆணையிடுகிறோம்.

6. அரசின் தீர்மானம்.

தமிழ் நாட்டில் பருவ மழை தவறியதன் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சி நிலை குறித்த அறிக்கைமீதான விவாதம்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"மேலவையில் 2—3—1981 ஆம் தேதியன்று வைக்கப்பட்ட தமிழ் நாட்டில் பருவமழை தவறியதன் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சி நிலை குறித்த @ அறிக்கை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"மேலவையில் 2—3—1981 ஆம் தேதியன்று வைக்கப்பட்ட தமிழ் நாட்டில் பருவமழை தவறியதன் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சி நிலை குறித்த அறிக்கை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

மாண்புமிகு உறுப்பினர்கள் 12 பேர்கள் இது குறித்துப் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆசிரியர் தொகுதி, நியமனத் தொகுதி உறுப்பினர்கள் நான்கு பேர்கள் இது குறித்துப் பேசுவதற்கு அக்கறை காட்டி

@ 98-112 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

யுள்ளது மகிழ்ச்சியைத் தருகிறது. எனவே உறுப்பினர்கள் 10 நிமிடங்களுக்கு அதிகப்படாமல் பேசினால்தான் எல்லோரும் பேச முடியும். எனவே ஒவ்வொரு வரும் 10 நிமிடங்களுக்குள் பேசி முடிக்குமாறு வேண்டுகிறேன்.

*திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இன்றைக்குத் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற வறட்சியின் விளைவுகளை முழுமையாகத் தமிழக அரசும், இந்த மாநிலத்து மக்களும் உணர்ந்திருக்கிறார்கள் என்பதையும், அரசு இதிலே ஆர்வம் காட்டி, வேகம் காட்டி, முனைப்பு காட்டி பல்வேறு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தை வெளிப்படுத்தியிருக்கிறது என்பதையும் மனநிறைவோடு காணுகின்றேன். அதற்காக தனியாக நாள் ஒதுக்கி இந்த விவாதத்தை மக்கள் மன்றத்திலும், இந்த மாமன்றத்திலும் நடத்துகிறது. இன்று அரசு கொடுத்திருக்கிற தகவல்களின் அடிப்படையிலே அந்த உணர்வுகளைக் காண முடிகிறது. தமிழகத்தினுடைய அரசியல் நிலைமைகள் எதுவாக இருந்தாலும், தமிழகத்தினுடைய பொது வாழ்க்கையை, பொருளாதாரத்தை, அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கவிருக்கின்ற பெரிய அவலத்தை எதிர் நோக்கிக்கொண்டிருக்கிற நிலையை இயற்கையின் விளைவுகள் ஏற்படுத்தியிருக்கின்றன. இதிலே நமக்கு இருக்கின்ற பெரிய பொறுப்பு, நாம் சந்திக்கவிருக்கின்ற வறட்சியின் சங்கடத்தை அதிக அளவிற்கு இல்லாமல் குறைந்த அளவுச் சங்கடத்தோடு சமாளிக்க வேண்டுமென்பதுதான். அது குறித்து அரசு வேகமாகத் திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் அரசும் மிகுந்த நம்பிக்கையோடு, பொறுப்புணர்வோடு இதிலே அத்தனை பேரையும் இணைந்து செயல்படச் செய்து, அந்தப் பலனை தமிழகம் முழுமையாகப் பெறச் செய்ய வேண்டியிருக்கிறது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நிவாரணப் பணிகளைப் பொறுத்தவரையில், நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்; வறட்சியை எதிர் நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கிறோம் என்ற உணர்வு இன்றைக்கல்ல, சில மாதங்களுக்கு முன்பாகவே தோன்றிவிட்ட ஒன்று. பருவ மழை பொய்த்துவிட்டதன் வாயிலாக, எதிர்காலத்திலே, கோடை காலத்திற்குள்ளாக, பயங்கரமான வறட்சியையும், அதன் விளைவாகக் கடுமையான பஞ்சத்தையும் சந்திக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலையைத் தமிழ் நாடு எதிர்நோக்கியுள்ளது என்ற உணர்வு சில மாதங்களுக்கு முன்பே வந்துவிட்டது. எனக்குச் சரியாக நினைவு இருக்குமானால், சில மாதங்களுக்கு முன்னதாகவே, இது போன்ற ஒட்டுமொத்தமான **கோரிக்கை**, ஒரே குரலாக எழும்புவதற்கு முன்னதாகவே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வட ஆற்காடு மாவட்டத்திற்கு வறட்சி நிலைமையை



நேரடியாகக் கண்டறிவதற்காகச் செல்ல இருந்தார்களென்ற செய்தி பத்திரிகையில் வந்திருந்தது. நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் இன்றைக்கல்ல, சில மாதங்களுக்கு முன்னதாகவே நாம் வறட்சியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வு நமக்கும், அரசுக்கும், அதிகாரிகளுக்கும் ஏற்பட்டுவிட்டதென்பதைச் சுட்டிக்காட்டுவதற்குத்தான். ஆனால் அந்த அடிப்படையிலே நாம் என்ன நடவடிக்கைகளை வேகமாக எடுத்திருக்கிறோம், எடுத்து வந்திருக்கிறோம், எடுக்கப் போகிறோமென்பதைப் பார்த்தாக வேண்டும். நான் உரிமையோடு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த காலத்திலே எடுத்த நடவடிக்கைகள் முழுமையாகவோ, வேகமாகவோ அமையவில்லை என்பதைச் சொல்லித்தான் தீர வேண்டும். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையிலும், எப்போது வறட்சி வந்தாலும், உடனடியாக நாம் செய்கின்ற முதல் ஏற்பாடு, நியாய விலையிலே அல்லது ஏழைகளுக்குச் சங்கடமில்லாத நிலையில் அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்கும் வகையிலே, உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு இல்லாமல், குறைந்த விலையிலே தேவையான அளவிற்குக் கொடுக்க ஏற்பாடு செய்வதாகும். ஆனால் இந்த முறையை என்ன காரணத்தாலோ அதில் அக்கறை செலுத்தாமல் விட்டிருக்கிறோமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மென்ட்டை விரிவாகச் செயல்படவைத்திருக்கிறோம். நமக்கு efficient machintry தகுதி வாய்ந்த அமைப்பு இருக்கிறது. இத்தனையும் வைத்துக்கொண்டு, இன்றைக்குத் தமிழகத்தின் அரிசிக் கையிருப்பு எவ்வளவு என்றால், 50,000 டன்தான் என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். எவ்வளவு பெரிய பயங்கரமான எதிர்காலத்தை நாம் நோக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். விளைந்த விளைச்சல் கதிர் இல்லாமல் சாவியாகியிருக்கிறது. முழு விளைச்சல் இல்லாமல் இன்றைக்குச் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தச் சூழ்நிலையிலே ஏற்கெனவே நம்முடைய (Department) டிப்பார்ட்மென்ட் மூலம் எவ்வளவு கையிருப்பு வைத்திருக்க வேண்டுமோ அது இல்லாத நிலை இருக்கிறது. சில சூழ்நிலைகளை நாம் எதிர்பார்த்தாக வேண்டும். என்ன காரணத்தாலோ எதிர்பார்க்கவில்லை. தமிழகத்தின் ஒரு நாள் தேவை ஏறத்தாழ 20,000 டன் அரிசி. ஆனால் இன்றைக்கு மொத்தக் கையிருப்பு 50,000 டன் அரிசிதான் என்பதைச் சொல்லும்போது, குறைந்தபட்சம் 5 லட்சம் டன் அரிசி கையிருப்பு சிவில் சப்ளைஸ் டிப்பார்ட்மென்டில் இருந்தாக வேண்டும், இருந்திருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கால கட்டத்தில் நாம் தயாராக இருந்திருக்க வேண்டும். ஏன் முனைப்பு காட்டவில்லை என்பது தெரியவில்லை. ஏன் மெத்தனமாக இருந்தார்களென்பது தெரியவில்லை. இந்த முனைப்புக் காட்டாததும், மெத்தனமும் எதைக் காட்டுகிறது என்றால்,

ஏழைகள் உணவுப் பொருள்களைச் சாதாரண விலைக்கு வாங்க முடியாத நிலையும், அதற்குப் பரிகாரம் காண வேண்டுமென்றால், அதைக் காண முடியாத நிலையும் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உணவுப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த முடியாது. மேலும் அரசு விவசாயிகளிடமிருந்து எந்த அளவிற்கு நெல்லைக் கொள்முதல் செய்திருக்க வேண்டுமோ அதைச் செய்யத் தவறியிருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஒன்றை உரிமையோடு குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன். ஏழை விவசாயிகளுக்கு நன்மை செய்வதாக அரசு சொல்லிக்கொண்டிருக்கிறது. ஆனால் ஏழை விவசாயிகள் குறுவை அறுவடை செய்யும்போது, குறுவை விளைச்சலை அறுத்தபோது, அரசாங்கம் அதனை கொள்முதல் செய்யவில்லை. விலையை உயர்த்தி, அவர்கள் அறுவடை செய்த குறுவை நெல்லைக் கொள்முதல் செய்யவில்லை. மாறாக சிறிய விவசாயிகள், ஏழை விவசாயிகள் தங்களுடைய மகசூலை விற்று முடிந்த பிறகு, யாரெல்லாம் கையிருப்பு வைத்திருந்தார்களோ—பெரிய விவசாயிகள், வியாபாரிகள் யாரெல்லாம் கையிருப்பு வைத்திருந்தார்களோ—அவர்களுக்கு உதவும் வகையிலே, அவர்கள் லாபம் பெறும் வகையிலே, குறுவை நெல்லின் விலையை உயர்த்தியிருக்கிறது என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். ஏழை விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்று சொல்லும் அரசு வறட்சிக் காலத்தில்கூட குறுவைக்கு விலையை உயர்த்தியதுகூட பெரும் பணக்காரர்கள், முதலாளிகள், வியாபாரிகள் ஆகியோர்கள் லாபம் பெறும் வகையில் தானே தவிர, சிறு விவசாயிகளுக்கு அதன் பலன் கிடைக்கும் வகையில் விலையை உரிய நேரத்தில் உயர்த்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

இன்னொன்று இந்த அரசு எப்படித் திட்டம் போடுகிறது, எப்படிச் செயல்படுகிறது என்பது எனக்குப் புரியவில்லை. நாம் வெளி மாநிலங்களிலேயிருந்து நெல்லை இங்கே கொண்டு வந்தாக வேண்டும். இங்கே நமக்குப் பற்றாக்குறை இருக்கிறது. அப்படி இருக்கும்போது, வெளி மாநிலங்களிலேயிருந்து இங்கே வருகின்ற நெல்லுக்கு லெவி போடுகின்ற நிலை இங்கே இருக்கிறது. வெளி மாநிலங்களிலிருந்து, குறிப்பாக ஆந்திராவிலிருந்து வருகிற நெல்லுக்கு லெவி விதித்து விட்டு இப்போதுதான் அதை நீக்கியிருக்கிறார்கள். சொல்லுகின்ற எண்ணத்திற்கும், வேகத்திற்கும், செயல்முறைக்கும் கொஞ்சம் கூடச் சம்பந்தம் இல்லாமல் இது இருக்கிறது. நான் என்ன கருதுகிறேன் என்றால் விவரம் தெரியாதவர்கள் யாரோ இந்த அரசுக்கு ஆலோசனை கூறிக் கொண்டிருக்கிறார்கள், வறட்சியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற ஒரு



மாநிலத்திற்கு வெளி மாநிலங்களிலேயிருந்து நெல் வந்தாக வேண்டுமென்ற நிலையில் அதைத் தடுக்க வேண்டுமென்று ஆலோசனை சொல்லுகின்ற அதிகாரிகளை அரசு இன்றைக்கு வைத்துக்கொண்டிருக்கிறது. இந்த அரசு வைத்துக்கொண்டிருக்கின்ற கூட்டுறவு அங்காடிகளும், நியாய விலைக் கடைகளும் தான் நாளைக்கு கிராமப்புற ஏழையெளிய மக்களுக்கு நிச்சயமாகத் துணை செய்யக் கூடியவை. நான் இந்த அரசாங்கத்தை ஒன்று கேட்கிறேன். இன்றைக்கு உங்களால் ஏற்படுத்தப்பட்ட கிராமங்களிலுள்ள நியாயவிலைக் கடைகள் இயங்குகின்றனவா? அங்கே ஆட்களை இந்த அரசு நியமிக்கும் போதே, முறையாகத் தேர்ந்தெடுத்து நியமியுங்கள் என்று சொன்னோம். அப்போது ஆத்திரப்பட்டார்கள். கட்சிப் பாகுபாடு ஒன்றும் இல்லாமல் அங்கே ஆட்களை நியமியுங்கள் என்று நாங்கள் சொன்னபோது எங்களிடம் கோபப்பட்டார்கள். இன்றைக்கு இந்த அரசினால் அமைக்கப்பட்ட கடைகள் சரியாகச் செயல்படவில்லை. எங்கள் கிராமத்திலே ஒரு கடையில் விற்ற பணத்தைக் கையில் எடுத்துக்கொண்டு எங்கோ ஓடிவிட்டார் ஒருவர். அதற்குப் பிறகு தொடர்ந்து சில மாதங்கள் கடை திறக்காமல் இருந்தது. இன்றைக்கு எங்களைப் போன்ற சில வாயாடிகள் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து முறையிட்டதன் பேரில், அது திரும்பித் திறக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களே தன்னை ஒரு வாயாடி என்று சொன்னதற்காகச் சந்தோஷப் படுகிறேன். (சிரிப்பு)

**திரு. க. இராமமூர்த்தி** : வேகமாகப் பேசும்போது அவ்வாறு சொல்லி விட்டேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : If the Member does not உறுப்பினர் வாபஸ் வாங்கிக் கொண்டால் நல்லது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : உறுப்பினர் வாய் திறந்தால் அவர் mistake me, உறுப்பினர் வாயாடுபவர் அல்ல. அந்த வார்த்தையை மூடுவது கஷ்டம். ஆகவே அதை நான் நினைவுபடுத்தினேன். (சிரிப்பு)

**திரு. க. இராமமூர்த்தி** : தலைவரவர்களே இங்கே எனக்கு நினைவுபடுத்தினார்கள். ஆனால் எனக்குள்ள அளவைத் தாண்ட மாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடையிலிருந்த பணத்தை ஒருவர் திருடிச் சென்று விட்டதால், அந்தக் கடை இடையில் திறக்கப்படாத நிலையும், பிறகு எங்களைப் போன்றவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையிட்டதால் திறக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. அதுபோல் பல்வேறு இடங்களில்

இந்தக் கடைகள் முறையாகச் செயல்படவில்லை. இந்த அரசைப் பொறுத்தவரையில் கொள்முதலைச் சரியாகச் செய்யவில்லை. வெளி மாநிலங்களிலிருந்து வர வேண்டிய நெல்லை லெவி போட்டுத் தடை செய்து விட்டார்கள். இன்றைக்கு இந்த அரசு திட்டமில்லாத செயல்முறைகளை வைத்துக்கொண்டிருக்கிறது. இதன் விளைவாக இந்த மாநிலத்தில் உணவுக்கு பயங்கரமான தட்டுப்பாடு வரப்போகிறது. நிவாரணப் பணிகளைப் பொறுத்தவரையிலும், ஒன்றிரண்டு கருத்துக்களை நான் இந்த அரசுக்குத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். குடிநீர்ப் பற்றாக்குறைபற்றி எல்லா மாவட்டங்களிலும் தகவல் கொடுத்திருக்கிறார்கள். இதற்காக அரசு செலவிடப் போவதாகச் சொல்லியிருக்கிற தொகை ரூபாய் 4½ கோடி. மிக மிகக் குறைவு. இது பற்றாது. தமிழகம் முழுவதற்குமான நிவாரண வேலைகளுக்கு இந்தத் தொகை கொஞ்சம் கூட ஈரம் வராது. வறட்சி நிலைமை என்பது வேறு. அதையும் தாண்டி இன்றைக்குத் தமிழகத்திலே வறட்சி நிலை, கடும் பஞ்சம் இருக்கிறது என்பதை அரசு தெளிவாக, திட்டவட்டமாக அறிவிக்கும்போது, முழுமையாக தமிழகம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எல்லாம் நிவாரணப் பணிகளில் ஈடுபட வேண்டும். ஒட்டு மொத்தமாக வறட்சி என்று சொன்னால், அதற்குரிய நடவடிக்கைகள் வேகமாக எடுக்கப்பட்டாக வேண்டும். அதை முழுமையாகச் செய்யாமல், ஏதோ ஓரளவு செய்து இதை திசை திருப்பிக் கொண்டிருக்கிறது இந்த அரசு என்பதை நான் இங்கே ஒரு குற்றச்சாட்டாகச் சொல்கிறேன். இன்றைக்கு அவையில் அது சம்பந்தமாக அறிக்கை கூட கொடுத்திருக்கிறார்கள். அதை யார் தயாரித்தது என்பது எனக்குத் தெரியவில்லை. அது விநோதமாக இருக்கிறது. நாங்கள் எல்லோரும் தமிழ் நாட்டில் வறட்சி பரவலாக இருக்கிறது என்று சொல்கிறோம். அதை இந்த அரசும் ஒத்துக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு மாவட்டங்களிலே குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆடுமாடுகளுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லை. மக்கள் குடி நீருக்காக தங்கள் பகுதியிலிருந்து தண்ணீர் கிடைக்கின்ற இன்னொரு பகுதிக்குச் செல்ல வேண்டிய நிலையும் அதன் காரணமாக தண்ணீர் கிடைத்துக்கொண்டிருந்த பகுதியிலும் பஞ்சம் ஏற்படும் நிலையும் இருக்கிறது. இதையெல்லாம் பார்க்காமல் ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்தனை சதவிகிதம் மழை பெய்திருக்கிறது அல்லது இத்தனை சதவிகிதம் பெய்யவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மழை பெய்ததா அல்லது பெய்யவில்லையா என்பதல்ல பிரச்சினை. முழுவதுமாக எந்தெந்தப் பகுதிகளில் எல்லாம் மழை பெய்யவில்லை, முழுமையாக எந்தெந்தப் பகுதிகளில் எல்லாம் மழை பெய்யாத காரணத்தால் வரக்கூடிய உணவுப் பயிர்களின் மகசூல் இல்லாமல் போய்விட்டது என்பதையெல்லாம் எனக்கெடுத்துப் பார்த்திருக்க வேண்டும்.



ஆற்று ஓரத்தில் தாலுகா அளவில், மழை பெய்ததாக பெயருக்கு ஓர் இடத்தில் கணக்கெடுத்து அதை வைத்துக்கொண்டு மாவட்டம் பூராவிற்கும் இது தான் நிலை என்று புள்ளிவிவரம் தருவது இந்த அரசுக்கு ஏற்புடையதாக இருக்கலாம். மேசைக்கு முன் உட்கார்ந்துகொண்டு அறிக்கை தருபவர்களுக்கு அது சுவையாக இருக்கும். ஆனால் இன்றைக்கு கிராமப்புறங்களில் ஆட்டையும், மாட்டையும் வைத்துக்கொண்டு குடிநீர்ப்பஞ்சம் காரணமாக மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் தருவதை விட்டு விட்டு இதுமாதிரி புள்ளிவிவரங்களைத் தருவது, கணக்கிடுவது நல்லதல்ல, முறையும் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிவாரணப் பணிகளைச் செய்ய இந்த அரசு முன்வரும்போது, ஒன்றிரண்டு விஷயங்களைச் சொல்லி இந்த அரசுக்கு நான் எச்சரிக்கையாக இருங்கள் என்று வேண்டுகோள் விடுக்கிறேன். சமுதாயத்தில் இன்றையதினம் வல்லூறுகள் அலைந்துகொண்டிருக்கின்றன. யார் பஞ்சத்தில் சாகிறார்கள், யார் குடிநீர் இல்லாமல் பாதிக்கப்படுகிறார்கள், எங்கு பட்டினிச் சாவு என்பதுபற்றியெல்லாம் அவர்களுக்குக் கவலையே இல்லை. அரசாங்கம் இப்படிப்பட்ட பணிகளுக்காக பணத்தைச் செலவிட முன்வரும்போது, எந்த காண்டிராக்டர் மூலம் பணத்தைச் சுருட்டுவது என்று வல்லூறுகள் வட்டமிடுகின்றன. முன்பு கூட நாம் பார்த்தோம். இந்த அரசு வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொண்டபோது, எந்த வேலையும் சரிவர நடைபெறவில்லை. அப்போது மிகப் பெரிய கொள்ளைக் கூட்டம் இந்தக் காரியத்தைச் செய்ய பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் லெவலிலேயே இருந்தது. மக்களுக்கு நிவாரணப் பணியின் காரணமாக அரசாங்கம் பணம் ஒதுக்குகிறது என்றால், உடனே அந்தப் பணத்தைக் கொள்ளையடிப்பதற்கென்றே பிணம் தின்னிக் கழுகுகளைப் போல் சிலர் தமிழகம் முழுமையும் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்கள் வளர்ந்துகொள்ள துணை நிற்கக் கூடாது. 'நாமினேடட் டென்டர்ஸ்' மூலம் காண்டிராக்ட் விடுகின்ற முறை முழுமையாக விடப்பட்டாக வேண்டும். முழுமையாக மாவட்ட, தாலுகா, நகர அளவிலே குழுக்களை அமைக்கின்றபோது, பெரும் அளவுக்கு என்று நான் சொல்ல மாட்டேன், ஓரளவுக்கு உணர்ச்சிகளை மதிக்கின்ற அளவிலே சிரத்தை உள்ளவர்களைக் குழுக்களிலே சேர்த்து அமைக்க வேண்டும். 5 பேரைப் போட்டால் 3 பேர் நம்மோடு வருவார்களா ? 6 பேர் வருகிற அளவிலே செய்யலாமா ? 12 பேரைப் போட்டால், 8 பேராவது நம்மவர்களாக வருவார்களா என்கின்ற வகையில் கணக்கெடுத்து இதைச் செய்யக்கூடாது. முழுமையாக மக்களுக்கு நிவாரணம் சென்றடைகின்ற வகையிலே அதற்குரிய குழுக்

களை இந்த அரசு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காண்டிராக்ட் விடுவது முறையல்ல. ரோடுகளில் பாதை போடுவதற்காக நிவாரணம் என்று நிதி ஒதுக்கி ஒரு ரூபாய் கூட அதற்காகச் செலவு செய்ய வில்லை. ரோடு போடாமல் பணம் வாங்கினார்கள். அல்லது போடப்பட்ட இடத்தில் பஸ் ஓட்டியவுடன் புழுதியாகிவிடுகிறது. கிராமங்களில் குளங்கள் வெட்டப்பட வேண்டும். அதுபோல் குளம், குட்டைகள் செப்பனிடப்பட வேண்டும். கிராமத்து மக்களுக்கு மொத்தமாக காண்டிராக்ட் விட வேண்டும். கிராமப் பொதுவில் மொத்தமாகப் பணத்தைக் கொடுத்து வேலைகளைச் செய்ய வேண்டும். அல்லது அந்தந்தக் கிராமத்தில் உள்ளவர்களைக் கூட்டி வைத்து, பேசி அவர்கள் நல்லமுறையில், முக்கியமான பணிகளைச் செயல் படுத்தும் முறையில் உத்தரவு போடவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அரசு எந்த ஒரு நடவடிக்கையை எடுத்தாலும், அது அரசியல் ரீதியாக கட்சியை வளர்ப்பதற்கு, ஆட்சியாளர்களுக்கு வேண்டியவர்களை வளர்ப்பதற்கு இந்த அரசு செயல்படுகிறது என்கிற குற்றச்சாட்டுக்கு ஆளாக வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய தினம் தமிழகம் மிகப் பெரிய பயங்கரமான வறட்சி நிலையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. இங்கே இருக்கின்ற நாம் அனைவரும் ஒட்டுமொத்தமாக ஒற்றுமையாக நின்றால்தான் காலா காலத்தில் மத்திய அரசிடமிருந்து பெறக் கூடிய பணத்தை, நிதியுதவியைப் பெற முடியும். அதை விட்டுவிட்டு, நாம் ஒருவரையொருவர் குற்றம் சாட்டி, நம்மிடத்தில் குறையை வைத்துக்கொண்டு மத்திய அரசிடத்தில் பணத்தை ஒதுக்குங்கள் என்று சொல்வதும், அந்தப் பணத்தைச் செலவிடுவதும் 'கிரிமினல் வேஸ்ட்' என்று சொல்லி அதற்கும் இடம் தராமல் தமிழகம் முழுமையும் ஏற்பட்டிருக்கின்ற அல்லது வறட்சி நிலையின் காரணமாக ஏற்படக்கூடிய பட்டினிச் சாவுகளைத் தடுத்து நிறுத்துகின்ற முறையில் இந்த அரசு முழுமையான நடவடிக்கையைத் துரிதமாக எடுக்க வேண்டுமென்று கேட்டு, அதற்கு நானும் என்னுடைய இந்திய தேசியக் காங்கிரசும் துணை நிற்போம் என்பதையும் சொல்லி அமைகின்றேன்.

(முற்பகல் 11-30)

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வறட்சி நிலைமை குறித்து விவாதிக்க வேண்டும் என்று ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தவர்களிலே நானும் ஒருவன். அரசு கொடுத்திருக்கும் விவர அறிக்கையிலே அரசுக்குள்ள செதியோடு சில கஷ்டங்களையும் சொல்லியிருக் கிறார்கள். கொடுக்கின்ற விவரங்களிலே, சில நேரங்களிலே சரியான



விவரங்கள் தரப்படுவதில்லை என்பது என்னுடைய குறைபாடு. இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற விவரங்களிலே உள்ள நிலைமைகளுக்கு மேலே அதிகமான அளவில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. வறட்சி என்று சொல்லும் போது, தர்மபுரி, இராமநாதபுரம், புதுக்கோட்டை என்ற மூன்று மாவட்டங் களும் வறட்சியிலே உச்ச நிலைக்கு வந்திருக்கின்றன. ஏப்ரல், மே மாதங் களிலே வறட்சி என்று சொல்லக்கூடிய நிலைமை மாறி, பஞ்சம் ஏற்படும் நிலைமை உருவாகும் அளவுக்கு நிலைமைகள் அங்கே இருக்கின்றன. இந்தக் கொடுமையைச் சொல்வதாக இருந்தால், மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே தர்மபுரி மாவட்டத்தில் வறட்சியின் காரணமாக அங்கே மாடுகளுக்கும் ஆடு களுக்கும் கூட கொடுப்பதற்குத் தீவனம் இல்லை என்று சொல்கிறார்கள். எப்போதுமே, கிராமப்புறங்களிலே மாடுகளுக்கும் ஆடுகளுக்கும் கூடத் தீவனம் இல்லை என்ற நிலைமை இருக்கிறது என்று சொன்னால், கிராமப் புறப் பொருளாதாரத்திற்கே மிகப் பெரிய ஆபத்து என்று அர்த்தம். தர்மபுரி மாவட்டத்தின் பிரதான பயிர் வேர்க்கடலை. அது இப்போது அங்கு விளைய வில்லை. அந்தப் பயிர் தீய்ந்து விட்டது. அதனால்தான், வேர்க்கடலைக்கு இப்போது அதிகமான விலை தரப்படுகிறது சாதாரணமாக உள்ள விலையைக் காட்டிலும் இப்போது குவிண்டாலுக்கு அதிகமான விலை இருக்கிறது. அதுபோல பஞ்சுக்கும் இப்போது அதிக விலை இருக்கிறது. இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் வறட்சி நிலைமை நிலவுவதால் அந்த மாவட்டங்களிலே முக்கியமாகப் பயிரிடப்படும் பருத்திப் பயிர் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதால், பஞ்சுக்கு இப்போது கூடுதல் விலை தரப்பட்டிருக் கிறது. இந்த மூன்று மாவட்டங்களிலேயும் மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டி ருக்கிறது. மொத்தமாகப் பார்த்தால், நெற்பயிர் கூட மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறது. நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், அதுதான் முதலாவது பயிர். இரண்டாவது பருத்தி. அதுவும் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறது. மூன்றாவது வேர்க்கடலை. அதுவும் பாதிக்கப்பட்டிருக் கிறது. எனவே, நெல், பருத்தி, வேர்க்கடலை என்ற முக்கியமாகப் பயிரிடப் படும் மூன்றும் பாதிக்கப்பட்டிருப்பதால், விவசாயிகளுடைய ஒட்டுமொத்த மான நிலைமை பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, தென்னாற்காடு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அது ஒரு உபரி மாவட்டம், 'சர்ப்ளஸ் மாவட்டம்'. வட ஆற்காடு, தென்னாற்காடு என்ற இரண்டு மாவட்டங்களும், திருச்சி, சேலம் போன்ற மாவட்டங்களும் கூட மிகவும் கடுமையாகப் பாதிக்கப் பட்டிருக்கின்றன. தென்னாற்காடு மாவட்டம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், கிராமப்புறங்களிலே பொருளாதாரத்திலே மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று அர்த்தம். இராமநாதபுரம், புதுக் கோட்டை போன்ற மாவட்டங்களிலேயிருந்து 'பஞ்சப் பிழைப்பு' என்ற

முறையிலே பிழைப்பு தேடி, ஏதாவது வேலை கிடைக்குமா என்று மக்கள் தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பக்கத்திலே உள்ள பெங்களூருக்குப் போகிறார்கள். நானே நேரடியாக இந்தப் பகுதி மக்கள் போவதைப் பார்த்திருக்கிறேன். "பஞ்சப் பிழைப்பு" என்று சொல்லும் முறையிலே அவர்கள் வேலை தேடி அலைகிறார்கள். கிராமப்புறங்களிலே கூலி வேலை செய்பவர்களுக்கு விளைச்சல் இருந்தால்தான், வேலை வாய்ப்பு. விளைச்சல் இல்லையென்றால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை.

பொதுவாக மனிதன் வாழ தண்ணீர் வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்திலே பல இடங்களிலே குடிப்பதற்கேகூடத் தண்ணீர் கிடைக்கவில்லை. குடிநீர் இல்லாத முறை இருக்கிறதே அது மிகவும் கடுமையானது. குடிநீர் கூடக் கிடைக்காமல் ஜனங்கள் 'எங்கே குடிநீர் கிடைக்கும்' என்று அலைந்து திரியும் நிலைமைகள் இருக்கின்றன. இவைகளைப் போக்குவதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இந்த விவரங்களையெல்லாம் பார்க்கும்போது, இதற்கு அடுத்தபடியாக பெரிய அளவிலே இல்லாவிட்டாலும், செங்கற்பட்டு, மதுரை போன்ற மாவட்டங்களிலே வறட்சியால் சிறிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களை எடுத்துக்கொண்டால், அங்கே கால்நடைத் தீவனம் போன்ற பொருட்கள் கூடக் கிடைப்பதில்லை. இராமநாதபுரம் மாவட்டத்திலே ஏற்கெனவே வெள்ளம் வந்தபோது உடைந்துபோன குளங்கள் கரை அடைக்கும் பணி கூட இன்றுவரை சரியான முறையில் நடைமுறைப் படுத்தப்படாமல் இருக்கின்றது. அந்தக் குளங்களை ஆழப்படுத்துவதற்குக் கூட எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதனால் வெள்ளம் வந்தபோது தண்ணீரைத் தேக்கிவைக்க முடியாததால், உடைக்கும் நிலைமைகள் ஏற்பட்டன. வறட்சி என்று பார்க்கும் போது இதற்குமேலும், இந்த அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கும் நிலைமைக்கு மேலும், இரட்டிப்பான நிலைமைகள் தான் இருக்கின்றன. நான்கைந்து மாவட்டங்களிலே மிகவும் கடுமையான முறையில் பஞ்ச நிலைமை ஏற்படும் அளவுக்கு விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் அடுத்த மழை பெய்தால்தான், விவசாயத்திலே அபிவிருத்தி காண முடியும். இந்த நிலைமைகளுக்கு ஏற்றவாறும் நாம் துரிதமாகச் செயல்பட வேண்டும். 'இவ்வளவு மழை குறைவு' என்பன போன்ற விவரங்கள் அரசுக்குத் தெரியும். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பே கூட நம்முடைய அரசு அதிகாரிகள் 'இவ்வளவு மழை குறைவு, கேச்மெண்ட் ஏரியாவிலே இவ்வளவு மழை குறைவு' என்ற விவரங்களையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். அதுவே ஒரு 'அபாய அறிவிப்பு' தான். அந்த விவரங்களை அதிகாரிகள் தெரிந்து வைத்திருந்தபோதும், அதனுடைய விளைவுபற்றி கிராமப்புறங்களிலே இருக்கும் நிர்வாகம் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இந்த நிலைமைகள் மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்பதே சந்தேகம். கொடுக்கப்பட்டிருக்கும் இந்த விவரங்களைப் பார்த்தால், மிகவும் சந்தேகமாக இருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கும் இந்த விவரங்களிலே முழு உண்மையும் இல்லை. இந்த விவரங்களுக்கு மேலே வறட்சி நிலைமை இருக்கிறது. ஆரம்ப காலத்திலேயே Dr. என்ற அளவிலே ஒரு மெத்தனம் ஏற்பட்டிருக்கிறது. ஆரம்ப காலத்திலே நடவடிக்கைகள் எடுக்கப்படாததன் காரணமாகத்தான் இன்றைக்கு இவ்வளவுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இராமநாதபுரம், தர்மபுரி, புதுக்கோட்டை, சேலம், திருச்சி, வட ஆற்காடு. தென்னாற்காடு போன்ற மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சேலம், தென்னாற்காடு போன்ற மாவட்டங்களிலே 'வறட்சி' என்று ரொம்ப நாளாகக் கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கிறார்கள். வறட்சி நேரத்திலே நாம் பல வேலைகளை மேற்கொள்ள வேண்டும். இந்தப் பணிகளையாற்றுவதற்கு அனுபவம் வாய்ந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். இந்த மாதிரி அவசர வேலைகளை அரசு செய்யும்போது, இந்த வேலைகளிலே எப்படி ஆதாயம் தேடுவது என்று பழக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் எப்படி ஆதாயம் தேடுவது என்பது தெரியும். அவர்கள் இடையிலே புகுந்து மோசடி செய்யாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாகச் சொன்னால், இத்தனை குழாய்கள் வேண்டும் என்ற புள்ளிவிவரங்களை மட்டும் போடுவதை விட்டு தண்ணீர் எத்தனை குழாய்களில் வருகிறது என்பதைப் பார்க்கும் நிலைமைகள் இருக்க வேண்டும். இந்தப் பணிகளை நடைமுறைப்படுத்தும் போது மக்களுடைய ஒத்துழைப்பைப் பெற வேண்டும். பல துறைகளிலே அனுபவம் பெற்றவர்கள் மாவட்டங்களிலே இருக்கிறார்கள். மக்களுடைய துன்பங்களைத் துடைக்க வேண்டும் என்றிருக்கின்ற சமூக ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களைக் கொண்ட ஒரு கண்காணிப்புக் குழு அமைத்து, இந்த நிவாரண வேலைகளைக் கண்காணித்தால், இந்தப் பணிகள் சரியாக நடக்கும். இல்லாவிட்டால், மக்கள் துன்பத்தை விலை பேசக்கூடிய கூட்டம் லாபம் சம்பாதிக்கும். துன்பத்தை விலைபேசி வாழக்கூடிய கூட்டத்தின் கைக்கு இந்தத் திட்டங்களின் பயன்கள் போகாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும். மற்ற நேரங்களிலே தவறு செய்கிறார்கள் என்று சொன்னாலும்கூட மன்னிக்கலாம்; வறட்சி நேரங்களிலே தவறு செய்தால் அது மன்னிக்க முடியாத குற்றம்.

[திரு. ப. மாணிக்கம்] [1981 மார்ச் 5

இறைச்சியின் விலையை எடுத்துக்கொண்டால், இங்கு 18 ரூபாய், 20 ரூபாய் என்று இருப்பது இராமநாதபுரம் மாவட்டத்திலே 10 ரூபாய், 12 ரூபாய் என்ற அளவில் கிடைக்கிறது. அவர்களால் கால்நடைகளைப் பராமரிக்க இயலவில்லை. பராமரிக்க முடியாத காரணத்தால், அவைகளைக் கொன்றுவிட வேண்டிய நிலைமைக்கு அல்லது விற்றுவிட வேண்டிய நிலைக்கு அவர்கள் வருகிறார்கள். விவசாயிகள் தங்களுடைய செல்வம் எது என்று நினைக்கிறார்களோ அதையே விற்கும் நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு வறட்சி இருக்கிறது. இனிமேல் அரசு தீவிர நிவாரண நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், வேலைவாய்ப்பு போன்ற நிலைமைகளில் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(முற்பகல் 11 40)

திருப்பத்தூரில் முன்பு ஒரு கிலோ சாதாரண அரிசி ரூ. 3.80 விற்றது. இப்போது அது ரூ. 4-க்கு விற்கிறது என்றும் அதற்கு மேலே போய்விட்டது என்றும் கேள்விப்படுகிறேன். இது சாதாரண அரிசி; நயமான அரிசிகூட அல்ல. எனவே இப்படிப்பட்ட நேரத்தில் அரசு அந்தப் பகுதி மக்களுக்கு மலிவு விலையில் உணவுத் தானியங்களை வழங்க வேண்டும்; அதோடு அங்கிருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பையும் வழங்க வேண்டும். இப்படிப்பட்ட நிவாரண வேலைகளை அரசு மட்டும் செய்துவிட முடியாது. சமூக ஸ்தாபனங்கள், மற்றும் மக்கள் கட்சிகள் இவைகளின் ஒத்துழைப்பைக் கோரிப் பெற்று, அரசு மக்களுக்கு நன்மை செய்ய முன்வரவேண்டும்.

அதுமட்டும் போதாது. இத்தகைய நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசிடம் மிகுந்த அளவுக்கு உதவி கேட்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது இதை மிகவும் வலியுறுத்துவார்கள் என்று நான் நம்புகிறேன். மத்திய அரசிடமிருந்து நிபுணர்களையும் அதிகாரிகளையும் இங்கே வரச் செய்து அவர்களை, நிலைமைகளை நேரில் பார்வையிடச் செய்து துரிதமாக மத்திய அரசிடமிருந்து நாம் உதவியைப்பெற்று நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். நாங்கள், எங்கள் கட்சியின் சாரில் மத்திய அரசின் அமைச்சரை அணுகி, ஒரு மகஜர் கொடுக்கச் சென்றபோது, "தமிழ் நாட்டில் அந்த அளவுக்கு வறட்சி இல்லை, வறட்சிபற்றிய அனுபவம் எங்களுக்கு நிறைய இருக்கிறது" என்று சொன்னார்கள். நமது மாநிலத்தில் அந்த அளவுக்கு வறட்சி இருப்பதாக அவர்கள் "கன்வின்ஸ்" ஆகவில்லை. அந்த அமைச்சரின் பெயரை நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை என்றாலும், அவர் குறிப்பிட்டதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். எனவே தான், நாம் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். அவர்களின் அதிகாரி



1981 மார்ச் 5]

களை இங்கே அனுப்பி நமது வறட்சி பற்றிய சரியான கணக்கை எடுத்து மத்திய அரசுக்குத் தெரிவிப்பது நமது கடமையாக இருக்க வேண்டும். மற்ற கட்சிகளின் ஒத்துழைப்பையும் அரசு பெற்று தமிழ் நாட்டில் உள்ள உண்மையான வறட்சி நிலைமை பற்றிய விவரத்தை மத்திய அரசுக்குத் தெரிவித்து, அவர்களிடமிருந்து அதிக நிதி உதவியைக் கோரி, நிவாரணப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அரசு தனது மெத்தனப் போக்கை உடனடியாகக் கைவிட்டு துரிதமாகச் செயல்பட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மீண்டும் கூறி அமைகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சமீப காலத்தில் தமிழ் நாடு பார்த்திராத அளவுக்கு ஒரு வறட்சி நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. வடகிழக்குப் பருவ மழையும், தென் மேற்குப் பருவ மழையும் இந்த ஆண்டு பொய்த்துவிட்டன. இந்த ஆண்டு மட்டுமல்லாமல் சென்ற ஆண்டும் இவைகள் பொய்த்துவிட்டன என்பதுதான் நமது அனுபவம். ஆனால், இங்கே அவையில் வைக்கப்பட்டிருக்கிற வறட்சி குறித்த அறிக்கையைப் பார்க்கும்போது, அது உண்மை நிலைமையைப் பிரதிபலிப்பதாக இல்லை. போன வருஷம் பெய்த மழையின் அளவில் சுமார் 35 அல்லது 40 சதவிதம்தான் குறைவாக இந்த ஆண்டு பெய்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிச் சொல்வதே நிலைமையைச் சரியாக நாம் புரிந்து கொள்ள உதவி செய்யவில்லை என்பதை நான் ஆரம்பத்திலேயே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் "நார்மல் ரெயின்ஸ்" அதாவது சாதாரணமாக கடந்த 10 வருஷங்களில் எவ்வளவு பெய்திருக்கிறது என்ற கணக்கைக் கொடுத்திருந்து, இந்த ஆண்டு எவ்வளவு மழை பெய்தது என்ற கணக்கைக் கொடுத்திருந்தால், ஓரளவு நாம் உண்மை நிலையைப் புரிந்துகொள்ள அது உதவியாக இருந்திருக்கும். அதைச் செய்யாமல் போன வருஷம் பெய்த மழையைவிட இந்த ஆண்டு 30 சதவிதம் குறைந்தது அல்லது 35 சதவிதம் குறைந்தது என்று சொல்வது சரியல்ல. ஒரு யதார்த்தமான நிலையை நாம் உணர்ந்து கொள்வதற்கு இந்த அறிக்கை உதவியாக இல்லை என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள வறட்சியைப் பொறுத்த வரையில், இது சமீப காலத்தில் எப்போதும் இல்லாத அளவுக்கு மிகப் பெரிய அளவில் இருக்கிறது. இது நமக்கு மிகவும் கவலை அளிப்பதாக இருக்கிறது. இதுதான் உண்மை. அதுமட்டுமல்ல. இப்போது மார்ச் மாதத்தில் வறட்சிபற்றிய அறிக்கையை அவைமுன் வைத்திருக்கிறார்கள். மாவட்டங்

[திரு. ஆ. நல்லசிவன்] [1981 மார்ச் 5

களில் உள்ள நிலைமைபற்றி முழுமையான விவரங்கள் அரசுக்கே வந்து சேர்ந்ததாகத் தெரியவில்லை. தமிழ் நாட்டில் தென் மேற்குப் பருவ மழை ஒழுங்காகப் பெய்தால்தான், மே மாதத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மழை இருக்கும். தமிழ் நாடு முழுவதும் ஜூலை-ஆகஸ்ட் மாதங்களில்தான் தென் மேற்குப் பருவ மழையின் முழுப் பயனும் கிடைக்கும். அப்படிப் பெய்தால், இந்த ஆண்டு செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில் தான் பயிரைப் பார்க்க முடியும். அதாவது இன்னும் 8 அல்லது 9 மாதங்களுக்கு விளைச்சலின் பயனைத் தமிழ் நாட்டு மக்கள் அனுபவிக்க முடியாது. அப்படி விளைச்சல் தள்ளிப் போகும்போது, விலைவாசியாவது உயராமல் இருக்கிறதா என்றால், அதுவுமில்லை. ஒழுங்காக விளைந்தாலே விலைவாசிகளின் உயர்வு அதிகமாக இருக்கிறது. இப்போது விளைச்சல் இல்லாத நேரத்தில் விலைவாசிகளின் உயர்வு மிகவும் அதிகமாகத்தான் இருக்கும். இதன் காரணமாக கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் உள்ள குடும்பங்கள் தாக்குப் பிடிக்க முடியாத நிலைமைதான் உருவாகும். வறட்சியும், விலை உயர்வும் ஒருமித்துச் சேரும்போது, தமிழ் நாட்டிலுள்ள ஏழை எளிய மக்கள் எந்த அளவுக்குப் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்பதை அரசு முழுமையாக உணர்ந்திருக்கிறதா என்பதும், அதன் விளைவைச் சந்திக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதுபற்றி சிந்தித்திருக்கிறதா என்பதும் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது.

திருநெல்வேலி, கோவை, மற்றும் நீலகிரி மாவட்டங்களில் வறட்சி நிலைமை பாதித்திருக்கிறதா என்ற தகவலே சர்க்காரிடம் இல்லை என்று தான் எனக்குத் தோன்றுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் நீர்ப்பாசன வசதி இல்லாத பிரதேசங்கள் நான்கு தாலுகாக்கள். அதாவது நாங்குநேரி, சங்கரன்கோயில், கோயில்பட்டி போன்ற இடங்களில் சாதாரணமான காலத்திலேயே எல்லாம் வானம் பார்த்த பூமியாகத்தான் இருக்கும். அப்படிப்பட்ட தாலுக்காக்களில் இப்போது என்ன நிலைமை இருக்கிறது என்பதை அரசு அறிந்துகொண்டிருப்பதாகத் தெரியவில்லை. பிப்ரவரி மாதக் கடைசி வரையில்கூட அரசு அதிகாரிகளிடமிருந்து அதுபற்றிய தகவல் வந்திருப்பதாக இந்த அறிக்கையிலிருந்து தெரியவில்லை. எனக்கு முன்னே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, இங்கேயிருந்து அரசு கேட்கும்வரை மாவட்டங்களிலுள்ள நிலைமையை அதிகாரிகள் அரசுக்குத் தெரிவிக்கத் தயாராக இல்லை என்ற நிலைதான் இருந்திருக்கிறது. இந்த அரசைப் பொறுத்தவரையில் நவம்பர் மாத மத்தியிலேயே தமிழ் நாட்டில் இந்த ஆண்டு வறட்சி ஏற்படப்போகிறது என்பது நன்கு தெரியும். அதாவது நவம்பர் மாதம் முடிந்து இப்போது 4 மாதங்கள் ஆகின்றன.



1981 மார்ச் 5] [திரு. ஆ. நல்லசிவன்]

இந்த 4 மாதங்களில் அதுபற்றி எந்தக் குறிப்பும் அரசுத் தரப்பிலிருந்து வரவில்லை. அண்மையில் தந்த ஆளுநர் உரையில்கூட அதுபற்றிய ஆபத்து இருக்கிறது என்று ஒரு வார்த்தைகூட குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஜனவரி மாதக் கடைசியில்தான் ஆளுநர் உரை அளிக்கப்பட்டது. அதில் மாவட்டங்களில் ஆழ் குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கு அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருந்தாலும், இத்தகைய வறட்சிபற்றிய அபாயம் குறித்து அரசு உணர்ந்திருந்ததாகக்கூட சொல்லப்படவில்லை. காரணம் அதுபற்றி ஆளுநர் உரையில் ஒரு வரிகூட இல்லை என்பதை நான் இங்கே தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். அரசியல் கட்சிகள் எல்லா மட்டங்களிலும் இந்தப் பிரச்சினையைக் கிளப்பிய பிறகு தான் அரசு கீழ்மட்டத்திலிருந்து அறிக்கைகள் கோரிப் பெற்றதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. வறட்சியை "நோட்டிபை" செய்யக்கூடிய அளவுக்கு இருப்பதாகக்கூட அரசு கருதவில்லை. காரணம் பேரவையில் அமைச்சர் அவர்கள் பேசும்போது, நாங்கள்தான் நிவாரணம் தருகிறோமே, எதற்காக வறட்சி என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்கிறமாதிரி பேசியதாக எனக்குத் தோன்றிற்று. சட்டபூர்வமாக வறட்சிப் பகுதிகள் என்று அறிவிக்காவிட்டாலும்கூட, இந்த அரசு என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்துகொண்டிருக்கிறது என்றுதான் குறிப்பிட்டார்கள். வெள்ளைக்காரன் நம்மை அடிமையாக ஆண்டு கொண்டிருந்த போதுகூட "ஃபேமின் கோடு" என்று ஒன்றை வைத்திருந்தான். அப்படி ஒரு பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்துவிட்டால், அங்கே உள்ள மக்களுக்கும் ஆடுமாடு போன்ற கால்நடைகளுக்கும் உணவும் நிவாரணமும் கொடுக்க வேண்டியது அரசின் கட்டாயமாகிவிடுகிறது. "ஃபேமின் கோடின்" அடிப்படையில் ஒரு பகுதி வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்டால், சட்ட பூர்வமான பொறுப்பு அரசுக்கு ஏற்பட்டுவிடும். எனவேதான் சுலபத்தில் அரசு எந்தப் பகுதியையும் வறட்சிப் பகுதியாக அறிவிப்பதில்லை. இது பழையகால அனுபவம்.

வறட்சிக் காலத்தில் சாகுபடியாளர்களுக்கு நிவாரணம் கொடுத்திருக்கிறார்கள். 1974-75 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சியைப்பற்றி நாம் 1980 வரை பேசிக் கொண்டிருக்கிறோம். காரணம் உரிய நேரத்தில் அரசு இதை அறிவித்து, நிவாரண நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளவில்லை. 1974-75 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பாதிப்புக்கு இப்போதும் நாம் சட்டம் போட்டுக் கொண்டிருக்கிறோம். 1981 ஆம் ஆண்டு ஜூலை மாதம்வரைகூட இதை நீட்டிக்கலாமா என்று பேசிக் கொண்டிருக்கிறோம். அப்படி வறட்சி நிலைமை ஏற்படும்போது அரசு அதை தீர்க்கமாக

அப்படியே ஒப்புக்கொள்வதில்லை. பகிரங்கமாக ஒப்புக்கொள்ள எப்போதும் தயங்கிக் கொண்டே வந்திருக்கிறது. காரணம் அவ்வாறு ஒப்புக் கொண்டால், சட்ட பூர்வமான பொறுப்பு தங்களுக்கு வந்துவிடும் என்று அரசு இதில் மெத்தனத்தைக் காட்டி வந்திருக்கிறது என்று கருத இடமிருக்கிறது.

வறட்சி நிவாரணத்திற்காக 4¾ கோடி ரூபாய் செலவு செய்ய இருக்கிறோம் என்று சொல்லுவது "உறை போடக்கூட காணாது". மதுரைக்கு ரூ. 35 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம் என்றால், அங்கே 12 தாலுக்காக்கள் இருக்கின்றன. ஒரு தாலுக்காவுக்கு 3 லட்சம் ஒதுக்கினால் அது 4 அல்லது 5 கிராமங்களில் ஆழ் குழாய்க் கிணறு போடத்தான் உதவியாக இருக்கும். உண்மையில் சரியான முறையில் வறட்சிப் பிரதேசம் என்று நாம் அறிவித்தால், நிவாரணப் பணிகளுக்காக மட்டும் ரூ. 100 கோடி தேவைப்படும் என்று மதிப்பிடப்படுகிறது. இதை நமது அரசு செய்ய முடியாது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். மத்திய அரசோ தாராளமாக உதவி தர முன்வராது. எனவே வறட்சிப் பிரதேசம் என்று அறிவித்துவிட்டு நாம்தான் பின்னாலே திண்டாடுவோம் என்று அரசு இப்படி மெத்தனமாக இருக்கிறதோ என்று நான் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

டெல்லி ராஜ்ய சபையில் ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் தமிழ் நாட்டில் வறட்சி மிகவும் மோசமாக இருக்கிறது, அங்கே மத்திய அரசு அதிகாரிகளை அனுப்பி, நிலைமையைச் சரியாகக் கணித்து உதவி செய்ய வேண்டும் என்று கேட்ட பிறகும், இங்கே உள்ள அரசு தமிழ் நாட்டில் உள்ள நிலைமையை பகிரங்கமாகத் தெரிவிக்கத் தயங்குவதும் மத்திய அரசிடம் அதிகமான உதவியை ஒதுக்கக் கோரி வற்புறுத்தாததும், இதுவரை காணாத நிலையாக இருக்கிறது. அரசியல் கட்சிகளின் நிர்ப்பந்தத்தின் காரணமாகத்தான் அரசு கொஞ்சம் கொஞ்சமாக இப்போது செயல்படுகிறது என்று எண்ண வேண்டியிருக்கிறது. எனவே நாட்டிலுள்ள நிலைமைகளைச் சரியாகக் கணக்கெடுத்து, ஆளும் கட்சி உறுப்பினர் ராஜ்ய சபையில் பிரஸ்தாபித்த அவசர உணர்வோடு இந்த அரசு பத்திரிகைகள் மூலமாகவும், சட்டமன்றம் மூலமாகவும், பொது மேடைகள் மூலமாகவும் பிரசாரம் செய்து மத்திய அரசுக்கு உண்மை நிலையைத் தெரிவித்து கணிசமான உதவியைப் பெற முன்வர வேண்டும். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள்கூட இவ்வளவு வேகமாகப் பேசினாரே அன்றி, அவருடைய கட்சியைச் சார்ந்த மத்திய அரசு என்ன செய்யப்போகிறது என்பது பற்றிக் குறிப்பிடவில்லை. ஏதோ இதற்கெல்லாம்





தமிழ் நாடு அரசுதான் பொறுப்பு என்ற அளவில் தமிழ் நாட்டு அரசின்மீது பழிபோட நினைப்பது சரியல்ல. பெரிய அளவில் நிதியுதவி மத்திய அரசிடமிருந்து கிடைத்தால்தான், நாம் இங்கே நிவாரணப்பணிகளை மேற்கொள்ள முடியும் என்ற அளவில் நாம் மத்திய அரசை இன்னும் வலியுறுத்திக் கேட்க வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** நான் வேகமாகப் பேசியதால், ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். மத்திய அரசிடம் அதிகமாக நிதியுதவி பெற வேண்டும், அதைக் கட்சிக் கண்ணோட்டமில்லாமல் பயன்படுத்த வேண்டும், அதற்கு நாங்கள் நிச்சயமாகத் துணை நிற்போம் என்று சொல்லியிருக்கிறேன். மத்திய அரசிடம் நாம் நிதி பெற வேண்டும், பெறுவோம்.

(முற்பகல் 11-50)

**திரு. ஆ. நல்லசிவன் :** வாங்கிக் கொடுக்கிறார்களோ இல்லையோ, அதைப் பற்றிப் பேசினால், எல்லோரும் பேசுகிறார்கள் என்று அவர்கள் கருத முடியும்.

**திரு. க. இராமமூர்த்தி :** நான் எவ்வளவு சொன்னாலும், மாண்புமிகு உறுப்பினர் காதில் விழமாட்டேன் என்கிறது.

**திரு. ஆ. நல்லசிவன் :** இந்த அரசு வற்புறுத்தவில்லை என்பதற்காகத்தான் நான் வற்புறுத்த விரும்புகிறேன். வறட்சிப் பணிக்காக ஆகும் பெரும் பகுதிச் செலவையும் மத்திய அரசுதான் ஏற்றுக் கொள்ள வேண்டும். மாநில அரசால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதில் மாநில அரசு மெத்தனமாக இருந்திருக்கிறது என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்காக ஆழ் குழாய்க் கிணறுகள் பல இடங்களில் போடப்பட்டிருக்கின்றன. அதில் 90 சதவிகித குழாய்கள் வேலை செய்யாமல் இருக்கின்றன. அதற்குக் காரணம், தண்ணீரை உறிஞ்சக் கூடிய "சக்ஷன் செக்ஷன்" கெட்டுப் போய்விடுவதுதான். இதைச் சரி செய்ய ஆங்காங்கே போதிய மெக்கானிக்குகள் கிடையாது. ஒரு தாலுக்காவில் இருக்கக் கூடிய ஒரேயொரு மெக்கானிக்தான் அங்கே இருக்கக் கூடிய 900 ஆழ்கிணறுகளையும் பார்க்க வேண்டுமென்றால், அவரால் முடியவில்லை. ஆகவே ஆழ்குழாய்க் கிணறுகள் சரியான முறையில் செயல்பட வேண்டுமென்றால், ஒவ்வொரு தாலுக்காவிலும் பத்து மெக்கானிக்குகளாவது தேவைப்படுகிறது. ஆழ்குழாய்க் கிணறுகளைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட

[திரு. ஆ. நல்லசிவன்] [1981 மார்ச் 5

நிலைமைகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, தம் நாட்டில் ஐ.ஐ.டி. படித்து வேலையில்லாமல் இருக்கக் கூடியவர்களை இதற்காகப் பயன்படுத்தி, எல்லா ஆழ்குழாய்க் கிணறுகளிலும் தண்ணீர் வர ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே போட்ட பம்புகளையெல்லாம் எடுத்துவிடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். வறட்சி நிலை உள்ள இந்தக் காலத்திலாவது இவற்றையெல்லாம் சீர் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சீனியையும், மண்ணெண்ணெயையும் கிராமப்புறங்களிலே கொடுக்கிறார்கள் மூன்று, நான்கு வறட்சிக்குப் பிறகும் கூட அவர்களுக்குச் சரியாகத் தரப்படவில்லை. நகர்ப்புறங்களில் உள்ளவர்களுக்கு ஒரு கார்டுக்கு 5 கிலோ என்ற விகிதத்தில் கொடுக்கிறார்கள். மதுரையில் இரண்டு கிலோதான் கொடுக்கிறார்கள். தேவையான மீதியை வெளி மார்க்கெட்டிலிருந்து அதிக விலை கொடுத்து வாங்கிக்கொள்கிறார்கள். கிராமங்களில் அரிசிக்கு எங்கே போவார்கள்? குறைந்தபட்சம் 2 இலட்சம் டன் அரிசியைத் தருவதாக மத்திய அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. நாம் மேலும் கேட்டு வருகிறோம். ஆனால் கிடைக்கவில்லை. இப்போதுள்ள வறட்சியைக் காரணமாகக் காட்டி, தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு அளிக்கப்படும் அரிசியைத் தவிர மேலும் இரண்டு இலட்சம் டன் அரிசியை வழங்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும்.

கிராமப்புறங்களில் ரேஷன் ஷாப்புகளில் புஞ்சைத் தானியங்களை எவ்வளவு அதிகமாகக் கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுக்க வேண்டும். இப்போது புஞ்சைப் பிரதேசங்களில் அது கூட கிடைக்க வழியில்லை. ஆகவே நியாய விலைக் கடைகளில் புஞ்சைத் தானியங்களையும் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிற போது உருப்படியான வேலைகளைச் செய்ய அரசு முன்வர வேண்டும். கரூர்-திண்டுக்கல் இரயில் பாதையை அமைக்க மத்திய அரசு ஒத்துக்கொண்டிருப்பதாக பத்திரிகைச் செய்தி இருக்கிறது. இதை இந்த கிராமப்புற வேலைத் திட்டத்தின் கீழ் ஆரம்பித்தால் பயன்படும். வெறும் மண்ணை வாரிப் போடும் திட்டம் என்றில்லாமல், கிராமப்புறங்களில் டிஸ்பென்சரிகளைக் கட்டுதல், இரயில்வேக்களைப் போடுதல் போன்ற வேலைகளுக்கு இந்த நேரத்தைப் பயன்படுத்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வேலைகளில் காண்ட்ராக்ட் கொடுக்கக் கூடாது. ஏனென்றால் காண்ட்ராக்டைப் பொறுத்த வரையில், நமக்கு நல்ல அனுபவம்



1981 மார்ச் 5] [திரு. ஆ. நல்லசிவன்]

ஏற்கெனவே இருக்கிறது. ரோடு போடுவதைப் பொறுத்த வரையில், ஒழுங்காகத் தான் போடுகிறார்கள். இருந்தாலும் சென்ற காலத்தில் நடந்ததைப் பார்க்கும் போது, அரசே நேரிடையாக மேற்பார்வை செய்யக் கூடிய அளவிற்கு அரசே பொறுப்பேற்று நடத்தினால் நல்லது என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, பயிர்க் கடனை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மின்சாரத்தைப் பொறுத்த வரையில், பழைய பாக்கியை 1 பிளஸ் 1 என்ற முறையில் கட்டுகிறார்கள். இப்போது இருக்கின்ற நிலையில் மின்சாரமும் இல்லை, தண்ணீரும் இல்லை, பயிரும் இல்லை. இப்படிப்பட்ட நிலையில் எப்படி பழைய பாக்கியைக் கட்டுவார்கள்? குறைந்தபட்ச வருவாய் கூட இல்லாமல் இருக்கிறது. ஆகவே அதை ஒத்திவைத்தாலொழிய வேறு வழியில்லை. ஆகவே 1 பிளஸ் 1 என்று கட்டுவதைப் பின்னால் கட்ட அனுமதி அளிக்க வேண்டும்.

கண்காணிப்புக் குழுக்களைப் போடுகிறபோது மைனாரிட்டி, மெஜாரிட்டி என்று பார்க்காமல் சர்வ கட்சிகளின் பிரதிநிதிகளை, அந்தந்த வட்டாரத்தில் உள்ள மக்கள் நலனில் அக்கறையுள்ளவர்களைப் போடுவதற்கு அரசு உத்திரவாதம் அளிக்க வேண்டும்.

வறட்சி உள்ள பகுதிகளை உள்ளபடி சொல்லி, பஞ்சம் உள்ள பகுதிகளை பஞ்சப் பகுதி என்று உள்ளபடி அறிவித்து, அதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும். இதை மத்திய அரசுதான் செய்ய வேண்டும் என்றால், தமிழக அரசுக்கு மக்கள் துணையாக இருப்பார்கள் என்று கூறி வறட்சியைச் சமாளிக்க தைரியமாக மாநில அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் பருவ மழை தவறியதால் ஏற்பட்டுள்ள வறட்சி நிலைமை குறித்த அறிக்கையின் மீது பேச வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பருவ மழை பொய்த்தது என்பது நேற்று, இன்று நடந்த விஷயமல்ல. கூர்ந்து பார்த்தால் மூன்று வருடங்களுக்குத் தொடர்ந்து மழை பெய்யும்; ஒரு வருடம் சரியாக மழை பெய்யாது என்பது தெரியும். இது வரலாறு. ஆகவே, முன்னேற்பாடாக, கிராமங்களில் உள்ளவர்கள் ஓரளவிற்கு சேமிப்பு செய்வார்கள். ஆறு வருஷத்திற்கு ஒரு முறை புயல் அடிக்கும். சுந்தரமூர்த்தி நாயனார் கதைகளில்கூட 12 வருடங்களுக்கு மழை பெய்யவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

[1981 மார்ச் 5

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவரை இழுத்திருப்பது சீக்கிரம் முடிப்பதற்காகவா?

திரு. சி. இராமலிங்கம்: நல்லதங்காள் கதைகளில் கூட நாம் அப்படிப் பார்க்கிறோம். மக்கள் அந்த அளவிற்கு முன்னேற்பாடாக சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத் தான் இதையெல்லாம் நான் ஞாபகப்படுத்துகிறேன். அதைப் போலவே அரசும் முன்னேற்பாடாக இருக்க வேண்டும் என்று கதைகளில் வருகிறது. பல ஆண்டுகளாகவே பருவ மழை பொய்த்திருக்கிறது என்பது வரலாற்று உண்மை.

பருவ மழை பொய்த்திருப்பதைக் காரணமாக வைத்துக்கொண்டு மத்திய அரசிடத்திலே இருந்து நாம் நிதியைப் பெற வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களே நம்மோடு ஒத்துழைத்து குரல் எழுப்பியிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் எவ்வளவு உதவித் தொகையைப் பெற வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லியிருந்தால், நன்றாக இருந்திருக்கும். அதை அவர்கள் சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

கடந்த காலங்களில் கூட வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்திருக்கிறார்கள். பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தில் உறுப்பினர் என்ற முறையில் நான் அறிவேன். அப்போது பல கை பம்புகளை அமைத்தார்கள். அப்போது 350 ரூபாய்க்கு விற்ற கை பம்பு திடீரென்று 650 ரூபாய் என்று விலை உயர்ந்துவிட்டது. அதற்குக் காரணம், பம்பாயிலிருந்து ஒரு கம்பெனிக்காரர் வந்து உயர்த்திவிட்டதுதான். அந்தக் காலத்திலே விலையை ஏற்றி காண்ட்ராக்டர்கள் சம்பாதித்தார்களா அல்லது வேறு யார் சம்பாதித்தார்கள் என்ற விவரத்திற்கு நான் போக விரும்பவில்லை. அதேபோன்ற நிலைமை இப்போது வரக்கூடாது என்று திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். டெண்டர்கள் 'கால் ஃபார்' செய்துதான் வேலைகளை ஒப்படைக்க வேண்டும், நியமன முறையில் செய்யக் கூடாது என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். நம் நாட்டிலே உள்ள காண்ட்ராக்டர்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் காண்ட்ராக்டர்களாக இல்லை. தி.மு.க.-வைச் சேர்ந்தவர்களும் காண்ட்ராக்டர்களாக இருப்பதாக என் கண்ணில் படவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இதுவரை ஒத்துழைப்பாகப் பேசினீர்.



1981 மார்ச் 5]

திரு. சி. இராமலிங்கம்: என்றைக்கும் அப்படிப் பேசத் தயாராக இருக்கிறோம். இப்போதுள்ளவர்களைப் பார்க்கிறபோது, ஒரு காலத்திலே காங்கிரஸ் கட்சியிலே இருந்தவர்களாக, காங்கிரஸ் கட்சிக்கு உடந்தையாக இருந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். காண்ட்ராக்டர்களாக இருப்பதைப் பார்க்கிறோம். அவர்கள்தான் டெண்டர் அனுப்பக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அது மட்டுமல்லாமல், புதியதாக ஒருவர் டெண்டர் போட்டால், ஒரு கிணறு வெட்ட ஆயிரம் ரூபாய் என்றால், அதற்காக 700 ரூபாய்க்கான இயந்திரங்களை வாங்க வேண்டியிருக்கும். தற்போது பெரும்புள்ளிகள்தான் ரோடு வேலைகளைச் செய்கிறார்கள். தளை போடுவது, கட்டிடம் கட்டுவது போன்ற வேலைகளுக்கு வேண்டிய இயந்திரங்களை அவர்கள்தான் வைத்திருக்கிறார்கள். ஆகவே எனக்குத் தெரிந்த வரையில் நியமன காண்ட்ராக்ட் கொடுக்கக் கூடாது என்பதல்ல, கொடுக்கலாம். ஆனால் நல்லவர்களாகப் பார்த்துக் கொடுத்தால் பழுது வராது. விஷயம் தெரிந்தவர்கள்தான் தவறு செய்வார்கள். விஷயம் தெரியாதவர்கள் தவறு செய்யமாட்டார்கள். ஆகவே அவசரக் காலத்தில் நியமன காண்ட்ராக்ட் கொடுக்கும் வாய்ப்பு இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களுக்கு நான் அடிக்கடி போய் வருவதுண்டு. கடந்த வாரம் கூட சென்றிருந்தேன். கடற்கரையோரம் தான் மழை பெய்திருக்கிறது. சாத்தனூர் அணைக்கட்டுப் பகுதியில் ஒரே வறட்சி. கடற்கரையோரத்திலிருந்து 30 மைல்களுக்கு அப்பால் மழை பெய்யவில்லை. கேரள மாநிலத்தில் கூட தென்மேற்குப் பருவ மழை சரியாகப் பெய்யவில்லை. பாலக்காட்டில் கூட இந்த வருடம் மழை பெய்யவில்லை. நான்கு வருடங்களுக்கு ஒருமுறை இப்படி நடைபெறுகிறது. கடற்கரையோரப் பகுதியைத் தவிர மற்ற பகுதிகளில் தண்ணீர் இல்லை. விதைத்த பயிர்கள் சாவியாகி விட்டன. மாடுகளுக்குக் கூட நீர் இல்லையென்று சொல்கிறார்கள். அதே நேரத்தில் மக்களும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே இந்த வறட்சி நிலையைப் பயன்படுத்திக் கொண்டு நந்தன் கால்வாயில் வேலைகளைச் செய்யலாம். அந்தக் கால்வாய் வேலையைத் துரிதப்படுத்திச் செய்யலாம்.

(நண்பகல் 12-00)

தூர்ந்த ஏரிகளை ஆழப்படுத்தும் வேலைகளையெல்லாம் அரசு செய்து வருகிறது. இதைப்பற்றி சட்டப்பேரவையிலேகூட அமைச்சர் சொன்னார்கள். அதை இன்னும் துரிதப்படுத்தி, அதற்கான ஆதாரங்களோடு வேலைசெய்து வருகிறார்கள். நெய்வேலிச் சுரங்கத்திலே தண்ணீர் எக்கச்சக்கமாக வருகிறது. அந்தத் தண்ணீர் கடலிலே வீணாகப்போகிறது. அதை தென்னாற்காடு

பகுதிக்கும் பயன்படுத்தலாம் என்றும் ஏற்கெனவே ஒரு திட்டத்தைப் போட்டிருந்தார்கள். அந்தத் திட்டம் செயல்படும் வகையிலே இந்த நேரத்திலாவது அதைப் பயன்படுத்தி, பொது மக்களுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கடைசியாக என்று ஆரம்பியுங்கள்.

திரு. சி. இராமலிங்கம் : கடைசியாக ஒன்றைச் சொல்கிறேன். கேரள அரசு நமக்குத் தண்ணீர் ஒரு சொட்டுக்கூட கொடுக்க முடியாது என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். நம்முடைய மேலவைத் தலைவர் அவர்கள் கூட ஒரு காலத்திலே எல்லைப் போராட்டம் நடத்தினார்கள். அவர்கள் நடத்தியபோது நாங்களும் அதிலே பங்கு கொண்டோம். திராவிட முன்னேற்றக் கழகம், அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இருந்த காலத்திலே, நாங்களும் பங்கு கொண்டோம். அந்தப் பகுதியை சமீபத்திலே சுற்றிவருகிற வாய்ப்பு கிடைத்தது. அந்த நேரத்திலே சமணச் சாமியார் ஒருவருக்குக் குரு பூஜை நடந்தது. அந்த நேரத்திலே கேரளத்திலுள்ள கோழிக்கோட்டில் உள்ள ஆல் இந்தியா ரேடியோவில் ஒலி பரப்பினார்கள். நான் அதை ஏன் பேசுகிறேன் என்றால், ஒரு ஆதாரத்திற்காகப் பேசுகிறேன். அதை வானொலியிலே ஒலி பரப்பினார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஏற்கெனவே ஐந்து நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. சி. இராமலிங்கம் : அதிலே என்ன சொன்னார்கள் என்றால், கொல்லம் பகுதியைப் பாண்டிய மன்னர்கள் ஆண்டபொழுது அங்கே சமண சமயத்தினுடைய சின்னங்கள் நிறுவப்பட்டன. அப்படி நிறுவப்பட்ட சமணக் கோயில்களும் ஸ்தூபிகளும் இன்றைக்கும் இருக்கின்றன என்று சொல்லி அந்த வானொலியிலே ஒலி பரப்பினார்கள். கொல்லம் பகுதியை பாண்டியர்கள் தலைநகரமாக வைத்து ஆண்டார்கள் என்றார்கள். அவர்கள் அப்படிச் சொன்னபோது, அது எந்த எந்தப் பகுதி என்று நான் புத்தகத்தைப் பார்த்தேன். தேவிகுளம், பீர்மேடு, இடுக்கி போன்ற தாலுக்காக்கள் எல்லாம் அதிலே வருகின்றன. அந்த எல்லைப் போராட்டத்தின்போது அந்தத் தாலுக்காக்களை நமக்குக் கொடுக்க வேண்டுமென்று நமது மேலவைத் தலைவர் அவர்கள் போராடிய நேரத்திலே, அரசியல் சூழ்நிலைகள் காரணத்தினாலே அந்தப் பக்கம் போய்விட்டது. அந்தப் பகுதியில் 100-க்கு 55 சதவிகிதம் பேர்கள் தமிழர்களாக இருக்கிறார்கள். மற்றவர்கள் மலையாளம் பேசுகின்ற மக்களாக இருக்கிறார்கள். அவர்களிடம் நான் கேட்டேன்.



எங்களுடைய அரசும் உங்களுடைய அரசும் தண்ணீர் பற்றிப் பேசுகின்றனவே, அதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன என்று கேட்டேன். அவர்கள் சொன்னார்கள். வீணாகப் போகின்ற வெள்ளம் எங்கே போனால் என்ன? எந்தப் புழாவில் போனால் என்ன? புழாவில் என்றால் அவர்கள் ஆறு என்று சொல்கிறார்கள். அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இன்றைக்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் பேச்சு வார்த்தைகள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஒரு சொட்டுத் தண்ணீர்கூட கொடுக்க முடியாது என்று இதற்கு முன்னால் இருந்த அரசு சொல்லியது. ஆனால் இன்றைய அரசு, மாண்புமிகு நாயனார் அவர்கள் தலைமையில் உள்ள அரசு பேச்சுவார்த்தைக்கு வந்திருக்கிறது. மேற்கே ஓடுகின்ற நதிகளை, கிழக்கே திருப்பிவிடுகின்ற ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்ற அளவில் அந்த அரசும் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் அரசும் பேச்சு வார்த்தை நடத்துகின்றன. அங்கே கேரள மக்களைப் பார்க்கின்றபோது, அவர்கள் அத்தனை பேர்களும் தமிழர்கள்தான், சேர நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று ரேடியோவில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை வைத்துச் சொல்கிறேன். கோழிக்கோடு ரேடியோவில் ஒலிபரப்பப்பட்டபோது அப்படிச் சொல்லப் பட்டது. இதைப்பற்றி சிலப்பதிகாரம் போன்ற நூலிலேகூட சொல்லப் பட்டிருக்கிறது. அதை இயற்றியவர் சேர மன்னனின் தம்பியான இளங்கோவடிகள் என்று கூறிற்று.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள், இலக்கியச் சொற்பொழிவே நடத்துகின்றார்கள்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : உறுப்பினர் அவர்கள் பாண்டிய மன்னர்களைப்பற்றிச் சொல்கிறார்கள். பேச விடலாம் என்று நினைக்கிறேன்.

திரு. சி. இராமலிங்கம் : அந்தக் கொல்லம் பகுதியில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்று வரலாறு இருக்கிறது. ஆகவே சேர நாட்டிலே இருக்கக் கூடிய அத்தனை மக்களும் தமிழர்களாக இருப்பதால், கேரள அரசும், தமிழ் நாடு அரசும் ஒன்றாக ஒரு காலத்திலே இணையும். அது நமக்கு நன்றாகத் தெரிகிறது. மக்களில் சிலர் சொல்லுகின்றார்கள். என்றைக்காவது இந்த இரண்டு நாடும் ஒரு காலத்தில் இணையும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று இந்த ஏற்பாட்டினை நம் புரட்சித் தலைவர் அவர்கள் சிறந்த முறையிலே செய்து வருகிறார்கள். அந்தப் பேச்சு மேலும் நீடித்து அந்த மேற்கே ஓடுகின்ற நதிகள் எல்லாம் கிழக்கே வந்தால், நம் நாட்டில் வறட்சியில்லாமல் செய்துவிடலாம். அதற்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் முனைப்பாக இருக்க

வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நல்லசிவன், மாணிக்கம் போன்றவர்கள் எல்லாம் அங்கே எடுத்துச் சொல்ல வேண்டும். அங்கே கிராமங்களில் பேசுகின்றபோது கூட்டத்திலே சொல்லலாம். இடதுசாரி கட்சியினர் மனம் மாறியிருக்கிறது. ஒரு சாராருடைய மனம் மாறவில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி கட்சியினருடைய மனம் மாறவில்லை. மேற்கே ஓடுகின்ற நதிகளைக் கிழக்கே மாற்றினால், தமிழ் நாடு என்றென்றைக்கும் சுபிட்சமாக இருக்க வாய்ப்பு இருக்கும். இந்தக் காரியத்தை முன் நின்று செய்கின்ற எம்.ஜி.ஆர். அவர்களுக்கு இந்த நாடும், இந்த நாட்டு மக்களும், மன்றமும் என்றைக்கும் கடமைப்பட்டிருக்கிறது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்களை வாழ்த்தி விடைபெறுகிறேன். வணக்கம்.

THIRUMATHI TARA CHERIAN: Hon. Chairman, I thank you for giving me an opportunity to say a few words on this occasion. Insignificant people like me have no particular section of people to support. As the late President Dr. Zakir Husain said "Bharath is mine", to me and people like me "Tamil Nadu is mine". I want to say a few things and I do not want to cover what the Members of the Legislature have already spoken, including the Members of the Legislative Assembly.

Sir, we seem to be waiting for a crisis to come for fighting on a war footing. During my younger days I had been to villages in connection with Nutrition programme and otherwise and I am speaking out of my own experience. When we tell them anything, the villagers also listen to us. They say like this:

"அம்மா கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள். சாப்பிடுவதற்குத் தண்ணீர் இல்லை என்றாலும், குடிக்கத் தண்ணீர் கொடுத்தால் போதும்"

We had droughts and drought prone areas.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: பசித்துக் கொண்டிருக்கிறவர்கள் குரலைத்தான் தமிழில் கேட்க முடியும் போல் இருக்கிறது.

திருமதி தாரா செரியன்: பத்து நிமிடங்கள் கொடுத்தால் நான் தமிழிலேயே பேசிவிடுவேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் ஆங்கிலத்திலேயே பேசிவிடலாம்.



THIRUMATHI TARA CHERIAN: I would like to say that we have always had drought prone areas in Tamil Nadu. We need not wait for a crisis to come. Government may come and Government may go. Men may come and men may go but the Government will have to remember that it should do certain things for ever. The people in the villages require one square meal a day, a little house and pure drinking water. Even there basic amenities we have not been able to provide them, in spite of 33 years of independence. I can also understand the difficulties like population explosion, money not being available and, therfore, I would like to say, without covering what has already been stated, that there is persisting drought in many of our villages. I happened to find one beautiful article by a Hyderabad Reporter in the main page of the Hindu on this problem. If we could get our reporters and give them a vivid picture and if we get the Press involved in this, we would be able to know where the drought area is, how we are not able to cover it., how many crores of rupees have been spent and how much more is necessary. I am happy about the Hon. Minister saying that there will be no problem about finding funds. But, the spending of funds, by itself, is not enough. We have to be careful to see how the funds are going to be spent. Wherever there are bottlenecks, a group of people can sit together and solve the problems. If one part of a machinery does not work, the whole work done by that machinery will come to a standstill. Therefore, the work has to be done in a co-ordinated way so that we may have better work done and also have quicker achievement of what we want to do. If we provide a deep well now, after some time a necessity may arise to deepen it further. Thus, a vicious circle will come into existence. Then, what is the use of going on deepening, because after a limit of depth, there will be only rocks. In that case, it will be the men who will be much more in trouble than the women. The hon. Members who have spoken have not referred to the work that is to be done by the Health Department. When our Government are trying to do their very best, let them do it in a co-ordinated manner so that the various departments like the Health Department, King Institute, etc., can take part in the work. For example, if a small bottle containing sample of water taken from a well is given to the King Institute, they should be able to say very quickly whether the water is potable or is fit for washing purposes only. Therefore, I suggest that there should be a co-ordinated team of various departments who could work together and approach the problems jointly so that the people for whom the works are undertaken may get the benefits.

(Thirumathi Tara Cherian) [1981 மார்ச் 5

Sir, I am happy to see reports in the newspapers that a people's panel will be formed to help in the relief work. I think that the Hon. the Revenue Minister is thinking of having people's committees at the district and taluk levels and, naturally, the M.L.A.'s belonging to the respective areas will take interest in the work. While commending it very much, I would like to know what is going to be done about the metropolitan City of Madras. In Madras, we have many industrialists, voluntary organisations and international organisations who have got many rigs. Even on previous occasions they spread the use of those rigs for drought-relief work. But, I am sorry to say—and I hope I will not be misunderstood—that not even a simple 'Thank you' is said publicly to those people. Now, we expect to get rigs from the Government of India. At the same time, if we try to find out the industrialists, etc. whether they could spare the use of some of their rigs and, if they are willing, how to transport the rigs, etc., it would be very helpful.

(பிற்பகல் 12-10)

Sir, in dealing with the drought problem a consistent effort is necessary. In a drought condition, distress to human beings and cattle is bound to happen. Therefore, Government have to think of having a group of people to take care of drought relief work, provision of water, fodder, etc. Finding ways and means of looking after the drought-prone areas well ahead of time is very necessary. There are many media through which publicity about the drought relief work could be given. Our Press has always been very helpful and has been co-operating with us. The All India Radio and the Television can also be used for giving publicity to the drought relief work. I am happy that the Hon. Minister has stated that about 150 units are going to take part in the drought relief work. But, how will the people know about the amount of work turned out by each unit? Only if due publicity is given to the work of each unit, the villagers will know where to go for help and what kind of help is available. The Central Social Welfare Board and the Social Welfare Directorate can look after the schools in the drought-affected areas. But, what is the use of sending children to schools in such areas, if there is no drinking water in the schools. It will be good if a small group of people could be entrusted with the responsibility of providing potable water to those school children. The Government have got very big policies for meeting the drought situation but small



1981 மார்ச் 5] (Thirumathi Tara Cherian)

things have not been taken care of. Therefore, the Government should have two policies—one a short-range policy and another a long-range policy. Besides, if proper publicity is given, people may know what is being done for them.

Sir, another thing is the conservation of forests and trees. This is one of the reasons for our seasonal difficulties and unless stringent action is taken by the Government and the people, conservation of forests will not be possible.

We talk of abolition of bonded labour. But still we have bonded labour in certain places. Still we have got Harijan colonies and still we have got the poorer sections of people in certain areas. We will have to see that Missions like the Ramakrishna Mission preach unity, national integration, community integration, etc., as the Gandhi Gram people are doing, so that water may be available for these people. Therefore, we will have to have these people working side by side to give spiritual inspiration and to have combined, united and co-ordinated work and I am sure we will be able to make the crisis not so badly felt. At the same time, the Government must come forward and give priority to this. By all means we can take part in all the schemes; but we have not got the priority system whereby at least the basic amenities will be immediately given to the people. Thank you.

திரு. வி. வி. வி. ஆனந்தம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழ் நாடு எங்கும் வடகிழக்கு, தென் மேற்குப் பருவ மழை தவறியதால், வறட்சி நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏறத்தாழ எல்லா மாவட்டங்களிலும் வறட்சி நிலை நிலவுகிறது. குறிப்பாக காவிரி பாயும் தஞ்சை மாவட்டத்தையும், தாமிரபரணி பாயும் சில தாலுக்காக்களையும் தவிர மற்ற எல்லா இடங்களிலும் கடுமையான வறட்சி நிலை ஏற்பட்டிருக்கிறது. சமீப காலங்களில் இல்லாத அளவிற்கு, மிகப் பெரிய அளவிற்கு மழை பொய்த்ததால், இத்தகைய வறட்சி நிலை ஏற்பட்டிருக்கிறது. வறட்சி காரணமாக கிராம மக்கள் குடிநீருக்கு மிகவும் அவதியுறுகிறார்கள். வறட்சி காரணமாக குடிநீர் பற்றாக்குறை, உற்பத்திக் குறைவு, அதுவும் குறிப்பாக உணவுப் பொருள்கள் உற்பத்திக் குறைவு, வேலை வாய்ப்புக் குறைவு ஆகிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. மே மாதத்தில் இன்னும் கடுமையான குடிநீர் பற்றாக்குறை ஏற்படலாம்.

ஆகவே முதற்கண் குடிநீர் பற்றாக்குறையை நீக்குவதற்கு உடனடியாக போர்க்கால துரிதத்தோடு அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு உணவுப் பொருள்களின் உற்பத்தி குறைந்திருக்கிறது. மத்திய அரசிடம் வலியுறுத்தி கோதுமை மற்றுமுள்ள உணவுப் பொருள்களை பெருமளவிற்கு நமது மாநிலத்திற்குத் தருவித்து, கிராமப் பகுதி மக்களுக்கு கோதுமைப் பண்டங்கள் மற்றும் கம்பு, கேப்பை போன்ற உணவு தானியங்களை விநியோகிக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மத்திய அரசிடம் கோதுமை கையிருப்பு அதிகமாக இருக்கிறதென்று அறிகிறோம். ஆகவே அரிசி கிடைக்காவிட்டாலும்கூட, கோதுமை மற்றும் புஞ்சைத் தானியங்களை விநியோகிக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்த ஆண்டு நமது மாநிலத்தில் உணவு உற்பத்தி குறைந்திருக்கிறது. எனவே விலைவாசிகள் கூடுதலாகியிருக்கின்றன. இந்த நிலையில் நெல்லுக்கு லெவி ஏற்படுத்தியிருக்கிறார்கள். லெவி காரணமாக நெல் விலை மேலும் அதிகரித்திருக்கிறது. உற்பத்தி சரியான அளவில் இல்லாதபோது, ஏக்கருக்கு சராசரி விளையக் கூடிய அளவிலிருந்து மிகவும் குறைந்துள்ளபோது, லெவிக்குக் குறைந்த விலையில் கொடுப்பதால், விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய நியாயமான கூடுதல் விலை கிடைக்காத அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டம் தவிர மற்ற மாவட்டங்களில் லெவி கொள்முதல் முறையை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வறட்சி காரணமாக கிராமப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வண்ணம், கிராமங்களிலுள்ள கண்மாய்கள், கால்வாய்களைத் தூர் எடுக்கும் பணியை உடனடியாகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் அடுத்து வரும் மழைக் காலங்களில் போதிய நீர் அங்கே தங்கும். அந்த அளவிற்கு கண்மாய்களை ஆழப்படுத்த வேண்டும். ஆழப்படுத்துவதன் காரணமாக போதிய அளவிற்கு நீர்ப் பிடிப்பு அந்தக் கண்மாய்கள் பெற வாய்ப்பாக இருக்கும்.

நதி நீர் பாசன வசதிகள் இல்லாத இடங்களில், அதாவது மழை நீரை உபயோகிக்கும் இடங்களில், வறட்சி அடிக்கடி ஏற்படுவதால், அந்த நிலையைப் போக்க நிரந்தரமான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். குறிப்பாக மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில், பாசன வசதிகளை அதிகப்படுத்த வேண்டும். மேற்கு நோக்கிப் பாயும் நதி நீரை கிழக்கு நோக்கிப் பாய்ச்சுவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் கேரள முதலமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள். அந்தப் பேச்சுவார்த்தையில் வெற்றியடைந்து, மேற்கு நோக்கிப் பாயும் நதிகள் கிழக்கு நோக்கிப் பாய, உரிய திட்டங்களை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



வறட்சிக் காலங்களில்தான் சில பெரிய வேலை வாய்ப்புத் திட்டங்கள் அந்தக் காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பக்கிங்ஹாம் கால்வாய் அந்த மாதிரி ஏற்பட்டதுதான். இப்போது மரக்காணம் வரையில் அந்தக் கால்வாய் இருக்கிறது. முன்பு வேதாரண்யம் வரை இருந்தது. இப்போது சென்னையிலிருந்து வேதாரண்யம் வரை தூர் எடுத்து, கால்வாய்ப் போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்தால், மிகவும் உதவியாக இருக்கும். இப்போது எரிபொருள்களின் பற்றாக்குறையால் மற்ற போக்குவரத்துக்களுக்கான கட்டணம் அதிகமான நிலையில், கால்வாய்ப் போக்குவரத்து ஏற்படுத்துவதால் கட்டணமும் குறையும், அதனால் பலருக்கு வேலை வாய்ப்பும் உண்டாகும். இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் சில தாலுக்காக்களில் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது. எனவே இராமநாதபுரம் மாவட்டத்தைப் பஞ்சப் பிரதேசமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சபை மத்திய அரசை வலியுறுத்தி, பெரிய அளவிற்கு நிதி ஒதுக்கம் கேட்க வேண்டும். யானைப் பசிக்குச் சோளப் பொரி என்பதுபோல வறட்சி நிவாரணத்திற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது குறைந்ததாகும். எனவே மத்திய அரசு அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்று இந்தச் சபை மத்திய அரசை வலியுறுத்திக் கேட்க வேண்டுமென்று சொல்லி, அமைகிறேன்.

(பிற்பகல் 12-20)

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு மேல்வைத் துணைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டில் பருவமழை தவறியதன் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சி நிலை குறித்த அறிக்கையை இங்கே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வைத்துள்ளார்கள். அதன் மீது நான் கழகத்தின் சார்பில் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு வறட்சி நிவாரணப் பணி சம்பந்தமாக இந்த அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கை ஆமை வேகத்தில் இருக்கிறது என்பதை மட்டும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்பது மாவட்டங்களில் தான் குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டிலே எல்லா மாவட்டங்களிலும் இன்றைக்கு குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. வறட்சியால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக மக்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். பெரியார் மாவட்டம் சேர்வையிலே சில பகுதிகள் போன்றவை

முழுமையாக இந்த வறட்சி நிவாரணப் பணியிலே சேர்க்கப்பட வேண்டும். ஆட்சியில் இருப்பவர்கள் அவசர அவசரமாக இதைத் தயாரித்திருப்பதால், சரியான நிலையைப் புரிந்துகொள்ள முடியவில்லையென்று நான் கருதுகிறேன். வட ஆற்காடு மாவட்டத்திலே நான் தெரிந்துகொண்ட வரையில் இன்றைக்கு மாடுகளுக்குத் தீவனம் இல்லாமல் அவைகள் எல்லாம் கேரளாவிற்கு விற்பனையாவதற்காக அடிமாடுகளாகச் சென்றுகொண்டிருக்கின்றன.

வேலையில்லாத மக்கள் இன்றையதினம் பெங்களூர் போன்ற பகுதிகளுக்குக் குடியேறியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைகளை எல்லாம் தடுத்து நிறுத்த வேண்டும். இதுசம்பந்தமாக ஆட்சியாளர்கள் தகுந்த நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்க வேண்டும். குடிநீர் வடிகால் வாரியம், விவசாயப் பொறியியல் துறை, நிலத்தடி நீர்ப்பிரிவு போன்றவற்றின் மூலம் 47 ரிக்குகளைக் கொண்டு குடிநீருக்காக ஆழ்கிணறுகளைத் தோண்டப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். தனியாரும் இன்றையதினம் இதுமாதிரி துளைபோடுகிற கருவிகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஒரே நாளில் 200 அடி ஆழம் கூடத் தோண்டிவிடுகிறார்கள். ஒரே நாளில் ஒரு குழாய்க் கிணற்றை அமைத்து விடுகிறார்கள். ஆனால் குடிநீர் வடிகால் வாரியம், விவசாயப் பொறியியல் துறை போன்றவற்றில் ஒரு குழாய்க் கிணற்றை மாதக் கணக்கிலேதான் அமைக்கிறார்கள். ஒரு நாளைக்கு 50 அடிக்கு மேல் அவர்கள் துளை போடுவதில்லை. இதற்கு என்ன காரணம் என்று கேட்டால், இத்துறையிலிருக்கும் அதிகாரிகள் ஒன்றைச் சொல்கிறார்கள். இதில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு 8 மணி நேரம் தான் வேலையாம். ஆனால் தனியார் 24 மணி நேரமும் இரண்டு ஷிப்ட் போட்டு வேகமாக வேலையைச் செய்து முடிக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். இந்த வறட்சிக் காலத்திலாவது நம்முடைய அரசுத் துறைகளும் இரண்டு ஷிப்ட் போட்டு பணியாற்றி, இந்த 47 ரிக்குகளையும் கொண்டு வேகமாகக் குழாய்க் கிணறுகளைத் தோண்டி, நாட்டு மக்களுடைய குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க வேண்டும், அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெளி மாநிலத்திலேயிருந்து ரிக்குகளை வரவழைக்க இருக்கிறார்கள் என்று நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு வேறொரு மாநிலத்திலிருந்து வரவழைக்கப்பட்ட ரிக்குகள் அரசாங்கத்திற்குச் சொந்தமானவையா அல்லது தனியாருடையதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனியாரிடத்திலிருந்து ரிக்குகளை வரவழைத்து நாம் குழாய்க் கிணறுகளை அமைப்பதை விட, நம்முடைய தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம், விவசாயப் பொறியியல் துறை



போன்றவற்றின் மூலம் அதிகமான ரிக்குகளை வாங்கி அவர்கள் மூலம் குழாய்க் கிணறுகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முயற்சி செய்தால் ஒரு நாளைக்கு ஒரு குழாய்க் கிணறு என்கிற வீதத்தில் அமைக்கலாம். குடிநீர்ப் பிரச்சினை மிகப் பயங்கரமானதாக இன்றைக்கு மாநிலம் பூராவும் இருக்கிறது. சேலம் மாவட்டம் ஆத்தூரிலே கடந்த ஆறு மாதங்களாக ஒரு குடம் தண்ணீர் 25 காசு, 40 காசு என்று விற்கப்படுகிறது. நகராட்சி எவ்வளவுதான் அதற்குரிய முயற்சியில் ஈடுபட்டாலும் கூட, குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க முடியவில்லை. அதுபோல் சேலத்தில் ராசிபுரம் பகுதியில் பல்வேறு இடங்களில் மக்கள் 2 மைல் 3 மைல் தூரத்திற்கு நடந்து சென்று குடங்களில் தண்ணீர் கொண்டு வருகிறார்கள். அப்படிக் குடத்தை ஏந்திக்கொண்டு செல்கின்ற தாய்மார்கள் தண்ணீர் எடுக்க கிணற்றுக்காரன் சம்மதித்தால் தான் எடுக்கவும் முடிகிறது. இவ்வளவு தொலைவிலிருந்து தாய்மார்கள் குடிநீர் எடுத்துவர மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் சாராயம் மட்டும் நாடு பூராவும் கிடைக்கிறது. குடிநீர்ப் பிரச்சினை மட்டும் தீர வழியைக் காணோம். தர்மபுரி மாவட்டத்திலும் கூட வறட்சி நிலை இருக்கிறது. வட ஆற்காடு மாவட்டம் எப்படி வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறதோ அதேபோல தர்மபுரி மாவட்டமும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே சேலம், தர்மபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களையும் வறட்சிப் பகுதிகள் என்று அறிவிக்க வேண்டும், பஞ்ச மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும், அதற்குரிய எல்லாச் சலுகைகளையும் இந்த அரசு கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வேலைவாய்ப்புத் திட்டத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். வறட்சி நிலையையொட்டி, அரசின் நிதியைக் கொண்டு என்னென்ன திட்டங்களை வேலைவாய்ப்பு சம்பந்தமாகச் செய்திருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். கிராமப்புற தேசிய வளர்ச்சித் திட்டத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இவையெல்லாம் ஏற்கெனவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற திட்டங்கள். மத்திய அரசு வேலைக்கு அரிசி கொடுக்கின்ற திட்டத்துக்கு அரிசி கொடுக்கிறது. நேற்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 30 ஆயிரம் டன் அரிசி கிடைத்தது என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த மாநிலம் அதைக் கொடுத்தது? மத்திய அரசு அதை வழங்கியதா? ஏற்கெனவே உணவுக்கு வேலைவாய்ப்பு என்ற திட்டத்தின் கீழ் உள்ள வேலைகள் எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதுசம்பந்தமாக அரசாணை அனுப்பப்பட்டிருக்கிறது. அதன்படி அவர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டம் இப்போது நடைபெறவில்லை. வேலை

வாய்ப்புத் திட்டத்தின்கீழ் அரசு நிதி ஒதுக்கி, கிராமங்களில் பாதைகள் அமைத்தல் போன்று இன்னும் ஏற்கெனவே இருக்கின்ற பல்வேறு திட்டப் பணிகளை நிறைவேற்ற வேண்டும். அதன்மூலம் அந்தந்தப் பகுதிகளிலுள்ளவர்களுக்கு வேலை கிடைக்கும். கிராமப்புறங்களில் மக்கள் பஞ்ச நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைத்தால், அவர்கள் பஞ்ச நிலையில் வாடுகின்ற நிலையில், கிடைக்கின்ற பணத்தைக் கொண்டு அங்கே கிடைக்கின்ற உணவை வாங்கி உயிர்வாழ முடியும். இந்த அரசு இதற்கென்று நிதி ஒதுக்குவதுடன், மத்திய அரசோடும் தொடர்பு கொண்டு இதற்கென அதிக நிதியை ஒதுக்கி, நல்லமுறையில் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட பணிகளையெல்லாம் நிறைவேற்ற அதிகாரிகளுக்குப் பூரண சுதந்திரம் கொடுக்க வேண்டும். அரசு விழாக்களை நடத்துங்கள், மந்திரிகளுக்கு வரவேற்பு கொடுங்கள். அதைப்பற்றி நான் குறை சொல்லவில்லை. ஆனால் அப்படி வரும்போது அதற்கு எங்கள் கட்சிக்காரர்கள் பொறுப்பேற்றுக் கொள்வார்கள், அவர்கள் பார்த்துக் கொள்வார்கள், அதிகாரிகள் வறட்சி நிவாரணப் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்கிற முறையில் ஒரு அறிவிப்பினை இந்த அரசு தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் அனுபவரீதியாகப் பார்த்துக்கொண்டிருப்பவன். ஓர் அமைச்சர் வருகிறார் என்றால், அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், அங்கே அதிகாரிகள் வருகிறார்கள். அப்படி வருவதால் அங்கே ஒரு காரியமும் நடைபெறுவதில்லை. இது எல்லா இடங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஒன்று. வறட்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்ற இந்த நேரத்திலாவது அதிகாரிகள் தங்களுடைய கடமையைச் செய்ய வேண்டும், யாரும் அமைச்சர்கள் வருகின்ற இடங்களுக்கு வரக்கூடாது என்று கண்டிப்பாக உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செல்வது போன்ற நேரங்களில் எல்லா அதிகாரிகளும் அங்கு வர வேண்டுமென்று நிச்சயமாக இந்த அரசு வற்புறுத்தியதில்லை. பொதுவாக அப்படிப்பட்ட சமயத்தில் அங்கிருக்கின்ற முக்கியமான எல்லா அதிகாரிகளும் வருவது நல்லது என்கிற அடிப்படையில்தான் நாங்கள் செயலாற்றிக்கொண்டு வருகிறோம். அப்படி வந்து அந்தந்த இலாகாக்களில் இருக்கக்கூடிய குறைகளை, சங்கடங்களை அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அதுபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த நேரத்தில் இன்னின்ன குறைகள் இன்னின்ன இடங்களில் இருக்கின்றன என்று சொல்லுகின்ற நேரத்தில், அதிகாரிகள் உடன் இருந்தால், உடனே





அங்கேயே உத்தரவு போடுகிறோம். ஆகவே அந்த அடிப்படையில் அதிகாரிகள் அங்கு வருவது உறுப்பினர்களுக்கும் நல்லது தான். அதிகாரிகள் அங்கு இருக்க வேண்டாமென்று இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். அதிகாரிகள் அங்கு வர வேண்டாமென்கிற முறையில் நாம் உத்தரவு போட்டோமென்றால், மாண்புமிகு உறுப்பினர்களே ஏன் அதிகாரிகள், அமைச்சர் சுற்றுப்பயணம் செய்கின்ற இடத்திற்கு வரவில்லையென்று குறை சொல்வார்கள். அதிகாரிகளை அடிக்கடி வரவழைக்காமல் அதே சமயத்தில் பொதுமக்கள் திருப்தி கொள்ளும் வகையில் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி. அந்த நிலைமைகள் இப்படிப்பட்ட நேரங்களில் வரக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். இதெல்லாம் புதிய அனுபவங்கள்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இப்படிப்பட்ட நேரங்களிலே கூட தேவைப்படுகிறது. அவர்கள் வருவதன் மூலமாக பல நன்மைகள் ஏற்படுகின்றன. அது இப்படிப்பட்ட நேரங்களில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கிறது. உதாரணத்திற்குச் சொன்னால், கிராமங்களிலே தண்ணீர்ப் பஞ்சம் இருக்கிறது என்ற நிலைமைகள் இருக்குமானால், நடவடிக்கைகள் உடனடியாக எடுக்க வசதியாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய அனுபவங்கள் என்று சொன்னார்கள். நான் சொல்வது, கூடிய வரையில் இதை நாம் 'எக்ஸ்கரேஜ்' பண்ணாமல், வரக் கூடிய அதிகாரிகளை மக்களுடைய நன்மைக்காகப் பயன்படுத்தலாம்......

திரு. சோ. ஆறுமுகம் : இதெல்லாம் புதிய அனுபவமாகத்தான் இருக்கின்றது. கலெக்டர் வருகிறார் என்று சொன்னால், அவர் மூலமாகவே இவைகளைச் செய்யலாமே !

டாக்டர் இரா. சனார்த்தனம் : புதிய அனுபவம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல, முன்பு அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இப்படி உத்தரவிட்டிருந்தார்களா ?

திரு. சோ. ஆறுமுகம் : அமைச்சர்கள் வரும்போது தேவையில்லாமல் அதிகாரிகள் வரக்கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டது. திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, அவைகள்

நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நிலைமை வருகிறபோது, அதிகாரிகள் சூழ்ந்து கொள்ளக்கூடாது என்ற அடிப்படையிலேதான் கருத்துக்களை வலியுறுத்துகிறேன். "இன்றைக்கு 'மக்கள் குழு' ஒன்று போட்டுக் கூட இதையெல்லாம் கவனிக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று நாங்கள் யோசித்துக்கொண்டிருக்கிறோம், சேரக்கூடியவர்கள் எல்லாம் சேரலாம்" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதாக நான் அறிந்தேன். யார் யார் சேர விரும்புகிறார்கள் என்று சொல்லி அவர்களை விண்ணப்பம் போடச் செய்து அரசு அவர்களைப் போடுவது என்பது கண்துடைப்பு வேலை என்று நான் சொல்லிக் கொள்கிறேன். அந்தந்த மாவட்டங்களிலே இருக்கின்ற முக்கியமானவர்களுடன் தொடர்பு கொண்டு யார் யாரைப் போடலாம் என்று கேட்டு, ஆராய்ந்து போட வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால், முன்பு பஞ்சாயத்துக்களிலே ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் எப்படிப் போடப்பட்டார்களோ அதுபோலத்தான் இருக்கும். முன்பெல்லாம் கையாலே நீர் அடிக்கும் குழாய்கள் எல்லாம் போடுவது பஞ்சாயத்து அளவிலேதான் இருந்தது. பிறகு அந்தப் பணி பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்றப்பட்டது. இப்போது அது குடிநீர் வாரியத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. இன்றைக்கு 100-க்கு 95 குழாய்கள் வேலை செய்யவில்லை, ஆகவே, புதியதாக இத்தகைய கிணறுகளை அமைப்பதைவிட்டு ஏற்கெனவே இருக்கும் கிணறுகளைப் பழுதுபார்த்து சீர்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது ஒரு பக்கம் விலைவாசிகள் எல்லாம் ஏறிக்கொண்டிருக்கின்றன. மறுபக்கம் வறட்சி நிலை இருக்கிறது. 30—5—1980-லே அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 2.70 என்று இருந்தது, இன்றைக்கு ரூ. 3.40 என்று உயர்ந்திருக்கிறது. கடலைப் பருப்பு கிலோ ஒன்றுக்கு ரூ. 4.90 ஆக இருந்தது இன்றைக்கு ரூ. 5-05 ஆக உயர்ந்திருக்கிறது. நல்லெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 11-00 ஆக இருந்தது, இன்றைய தினம் 13-00 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. கடலையெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 9-00 ஆக இருந்தது இப்போது 13-00 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. பொட்டுக்கடலை ஒரு கிலோ ரூ. 4-75 ஆக இருந்தது இப்போது ரூ. 7-80 என்று உயர்ந்திருக்கிறது. மிளகாய் 1 கிலோ ரூ. 7-00 என்று இருந்தது இப்போது ரூ. 10-00 என்ற அளவில் உயர்ந்திருக்கிறது. நல்ல வெல்லம் 1 கிலோ ரூ. 2-30 ஆக இருந்தது இன்றையதினம் ரூ. 4-00. ஆக உயர்ந்திருக்கிறது. அஸ்கா 1 கிலோ ரூ. 5-50 ஆக இருந்தது இப்போது ரூ. 7-10 ஆக உயர்ந்திருக்கிறது. தேங்காய் எண்ணெய் 1 லிட்டர் ரூ. 15-00 ஆக இருந்தது இப்போது ரூ. 19-50 என்ற அளவிலே உயர்ந்திருக்கிறது. காப்பித்தூள் 1 கிலோ ரூ. 15 என்று இருந்தது இப்போது ரூ. 18 என்று உயர்த்திருக்கிறது. வாஷிங்சோப் 1 பார் ரூ. 3 என்று இருந்தது இப்போது ரூ. 4-20



என்று உயர்ந்திருக்கிறது. இதுபோல எல்லாப் பொருட்களுடைய விலையும் 30—5—1980 லே இருந்ததைவிட 3—3—1981 லே உயர்ந்துவிட்டிருக்கிறது. இவ்வாறு விலைகள் உயர்ந்துகொண்டு போவதைக் கட்டுப்படுத்த இந்த அரசு என்ன நடவடிக்கையை எடுத்தது? 15 ஆயிரம் நியாய விலைக் கடைகளைக் கிராமப்புறங்களிலே ஏற்படுத்தி இந்தப் பொருட்களையெல்லாம் குறைந்த விலையிலே கொடுப்போம் என்று இந்த அரசு அறிவித்தது. இந்த விலைவாசிகளைக் கட்டுப்படுத்த இந்த அரசு அப்படிப்பட்ட சிறப்பு அங்காடிகள் மூலம் நடவடிக்கை எடுத்ததா என்றால் இல்லை. இன்றைக்கு அரசாங்க அலுவலர்கள் 'எங்களுக்கு மலிவு விலையில் உணவுப் பொருட்களை வழங்க வேண்டும்' என்று கேட்கிறார்கள். தற்போது வறட்சி நிலைமைகளைப் பார்க்கும்போது, ஏறிவருகின்ற விலைவாசிகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மின்சார நிதிநிலை அறிக்கை விவாதத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கூறியிருக்கிறார்கள். நூற்பாலைகளுக்கு மின்சாரம் சரியாகக் கிடைக்கவில்லை, விவசாயத்திற்கு, சிறு தொழில்களுக்கு, பவர்-லூம்களுக்கு மின்சாரம் சரியாகக் கிடைக்கவில்லை என்று சொன்னபோது, இன்னும் ஒரு வார காலத்திற்குள் எல்லாம் சரியாகிவிடும் என்று சொன்னார்கள். ஆனால், இந்த ஒரு வார காலத்திற்குள் நிலைமை இன்னும் மோசமாகப் போய்விட்டிருக்கிறது. இதனால் லட்சக்கணக்கான பேர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இருக்கின்ற மின் உற்பத்தித் திட்டங்கள் சரியாக வேலை செய்யும் அளவுக்கு இந்த வாரியம் நடவடிக்கைகளை எடுத்து, மின்சார உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம், இப்படிப்பட்ட தொழில்களுக்கு தேவையான அளவுக்கு மின்சாரம் வழங்கி, தட்டுப்பாடு இல்லாத ஒரு நிலைமை இருந்தால், இப்படிப்பட்ட வறட்சி காலத்திலே ஏற்படும் பிரச்சினைகளை நாம் தீர்க்க முடியும். அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து இவைகளையெல்லாம் செய்யாவிட்டல், தமிழ் நாட்டிலே இருக்கும் மக்கள் பட்டினியால் சாகும் நிலை ஏற்படும். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால், இந்த ஆட்சியாளர்கள் அதைச் சமாளிக்க முடியாது. பட்டினியால் பஞ்சத்தால் இறப்பவர்களுக்கு ஆறுதல் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை இங்கே இருக்க வைத்துவிட்டு கொஞ்சநேரம் வெளியே போய் வந்தார்கள். நான் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், எல்லா மருத்துவ மனைகளிலேயும் நல்ல டானிக்குகள் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் பஞ்சத்தால் வாடும் மக்களுக்கு உதவ முடியும். மக்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை, மழையில்லாமையால் பயிர்கள் வறட்சி,

(திரு. சோ. ஆறுமுகம்) [1981 மார்ச் 5

குடிப்பதற்குக் குடிநீர் இல்லை என்ற பிரச்சினைகளை யெல்லாம் தீர்க்க அரசு முனைப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகச் சொல்லி, முடித்துக்கொள்கிறேன்.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே பருவமழை தவறியதன் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற வறட்சி நிலைமை மீது நடைபெறும் விவாதத்தில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். பருவ மழை பொய்த்து விட்டதால், ஏரி குளங்கள் நீர்த் தேக்கங்கள் எல்லாம் வற்றிப் போய் இருக்கின்றன. காய்ந்து போய் இருக்கின்றன என்பதையும் பயிர்கள் எல்லாம் கருகிப் போயிருக்கின்றன என்பதையும், இந்த மன்றத்திலே அரசு அறிக்கையில் ஒப்புக்கொண்டிருப் பதன் மூலம் உண்மை நிலைமைகளை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருப் பதற்கு நான் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குடிநீர்த் தட்டுப் பாடும், வேலைவாய்ப்பு வசதிகள் குறைந்து வருவதும், கால்நடைகளுக்கு வேண்டிய தண்ணீர், தீவனத் தட்டுப்பாடு போன்ற நிலைமைகளின் விளைவாக வும் நமது தமிழகத்திலே இருக்கின்ற சூழ்நிலை ஓரளவுக்கு இந்த அறிக்கை யிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வறட்சி நிலைமைகள் ஏற்படும்போது, நகர்ப்புறங்களைவிட, நகர்ப்புறங்களிலே வாழும் மக்களை விட பாதிப்புகளுக்கு அதிகமாக ஆளாவது கிராமப்புறங்களும், அந்தக் கிராமப் புறங்களிலே வாழ்கின்ற ஏழையெளிய மக்களும். பொதுவாக நகர்ப்புறங் களைப் பொறுத்தவரையில், இந்தப் பாதிப்பு ஆரம்பத்தில் நமக்குச் சரி யாகத் தெரியவில்லை. காரணம், ஏதோ ஒருவகையில், எப்படியாவது நகர்ப் புறங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு வசதி வாய்ப்புக்களை அரசு ஏற்படுத்திக் கொடுப்பதேயாகும். இந்தமாதிரி நிலைமைகள் வரும் போது கிராமப்புறங்கள் உடனடியாகப் பாதிக்கப்படுகின்றன. மக்களுக்குத் தேவைப்படும் இந்த உணவுப் பொருட்களெல்லாம் உற்பத்தியாகக்கூடிய அந்தப் பகுதி புறக்கணிக்கப்பட்டு, அங்கிருக்கும் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள், தானியங்கள் கிடைக்கவில்லை என்ற நிலைமைகள் இந்த நாட் டிலே இருக்கின்றன. இந்திய நாட்டினுடைய பொருளாதாரத்தை நாம் சரியான முறையிலே அணுகாமல் திட்டங்கள் தீட்டப்படுவதன் அடிப்படைக் கோளாறுதான் இதற்குக் காரணம். இதை நாம் அனுபவபூர்வமாகப் பார்த்து வருகிறோம். இந்த வறட்சி நிலைமை காரணமாக வருகிற தொல்லைகளுக்குக்கூட நமது திட்டங்களின் அடிப்படைக் கோளாறுதான் காரணம். அண்ணல் காந்தியடிகளை மறந்துவிட்டதன் காரணமாகத்தான்



1981 மார்ச் 5] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக கிராமங்களிலே உள்ள மக்கள் இருக்கிறார்கள் என்று அவர்கள் சொன்னதை அலட்சியம் செய்துவிட்டதன் காரணமாகத்தான் இந்த அளவுக்கு இப்போது பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-40)

இப்படிப்பட்ட வறட்சி நிலைமைகளால் உடனடியான இன்னல்களுக்கு, பாதிப்புகளுக்குள்ளாவோர் கிராம மக்கள்தாம். எனவே இப்படி கிராமங் களும், கிராம மக்களும் பேரளவுக்குப் பாதிக்கப்படும்போது, அவர்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும்போது நாட்டின் தந்தை சொன்ன கருத்துக்களை அடிப்படையாக வைத்து, அத்தகைய நிவாரணப் பணிகளின் மூலம் கிராம மக்களுக்குச் சென்றடைய வேண்டிய பலன் உண்மையிலேயே சென்றடைகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும். இந்த வகையில் சில பத்திரிகைகள் நல்ல முறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு, நாட்டின் உண்மை நிலையை மக்களுக்கும், அரசுக்கும் தெரிவிக்கும் வகையில் கட்டுரை எழுதுவது, படங்களைப் பிரசுரிப்பது போன்ற பணிகளைச் செய்து வரு கின்றன. அத்தகைய பத்திரிகைகளை நான் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமங்களுக்கெல்லாம் தங்களின் நிருபர்களை அனுப்பி அங்கேயுள்ள நிலைமைகளைப் புகைப்படம் எடுத்து, விவரங்களைச் சேகரித்து, நாட்டுக்கும் அரசுக்கும் தெரிவிக்கும் அத்தகைய பத்திரிகைகளின் பணியை நான் மீண்டும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் கிராமப்புறங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் போது நன்மைகள் யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்கு உண்மையிலேயே போய்ச் சேருவதில்லை; அதுவும் முழுமையாகச் சேரவில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இதில் கட்சிக் கண்ணோட் டத்திற்கும், அரசியல் கண்ணோட்டத்திற்கும் இடமிருக்கக்கூடாது. நான் நேற்று பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, என்னுடைய மாவட் டத்தைச் சேர்ந்த ஒரு பெரியவர், மாவட்டக் கழகத்தில் முன்பு பொறுப்புமிக்க பெரிய பதவியில் இருந்தவர் ஒரு கருத்தைச் சொன்னார். அவர் பதவிப் பொறுப்பில் இருந்தபோதும் சரி, அதற்குப் பிறகு ஓய்வு பெற்ற பிறகும் பொது மக்களுக்குத் தொண்டு செய்து வரும் ஒரு கட்சி சார்பற்ற பெரியவர். அவர் ஒரு கருத்தைச் சொன்னார். அதாவது அரசாங்கம் எந்தத் திட்டத் தைக் கொண்டு வந்தாலும், அல்லது நிவாரணப் பணியை மேற்கொண்டாலும், அதன் பலன் முழுவதுமாகக் கிராம மக்களுக்குப் போய்ச் சேருவதில்லை என்று சொன்னார்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: உறுப்பினர் அந்தப் பெரியவரின் பெயரைச் சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அவர் பெயரைக் குறிப்பிடுவதை நான் தவிர்க்க விரும்புகிறேன். அவருடைய கருத்துதான் முக்கியம் என்பதால் அதை மட்டும் நான் இங்கே குறிப்பிடுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அவர் சொன்ன கருத்துதான் முக்கியம் என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். நான் எதற்காக அவருடைய பெயரைக் கேட்கிறேன் என்றால் அரசாங்கத்தால் போடப்படும் கமிட்டிகளில் அப்படிப்பட்டவர்களையும் இடம் பெறச் செய்வது நல்லதாக இருக்கும், அதன் மூலம் பொதுமக்களுக்கு நன்மை கிடைக்குமே என்ற காரணத்தால்தான் கேட்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : திரு. இராஜசுந்தர ரெட்டியார் என்பது அவர் பெயர். பண்ருட்டி பகுதியில் இருக்கிறார். முன்னாள் ஜில்லா போர்டில் முக்கிய பதவி வகித்தவர். அவர் மிகுந்த அனுபவ ரீதியாக அந்தக் கருத்தைச் சொன்னார். அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலையிலிருந்து அந்தக் கருத்தைச் சொன்னார். தற்போது மக்களுக்காக மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகளில் நாலில் ஒரு பகுதிகூட கிராம மக்களைச் சென்றடைவதில்லை. இடையிலே காண்ட்ராக்டர்கள் காரணமாகவும், அதிகாரிகள் செய்யும் தவறுகள் காரணமாகவும் அவை கிராம மக்களைச் சென்று எட்டுவதில்லை என்று குறிப்பிட்டார். அத்தகைய கோளாறுகளையெல்லாம் நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே அவையின் முன் வைக்கப்பட்டிருக்கும் வறட்சி பற்றிய அறிக்கையில், இன்று தமிழ் நாட்டில் நிலவுகிற வறட்சிபற்றியும், நமது தேவைகள் குறித்தும், மத்திய அரசு எந்த அளவுக்கு உதவி செய்ய வேண்டும் என்பது பற்றியும் மத்திய அரசுக்கு நமது அரசு ஏதேனும் அறிக்கை கொடுத்திருக்கிறதா என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை. விவரம் ஏதேனும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருந்தால் அவை என்ன என்பது பற்றியும், மத்திய அரசிடமிருந்து எவ்வளவு உதவியை அரசு கோரியிருக்கிறது என்ற விவரத்தையும் நான் அமைச்சர் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன். இதுவரை மத்திய அரசுக்கு நமது அரசு விவரம் ஏதும் அனுப்பவில்லையென்றால், இனியாவது அவற்றை அனுப்பி, பெரிய அளவில் நிதி உதவி பெறுவதற்கான



முயற்சியில் நாம் ஈடுபட வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கையாகும். தமிழ் நாட்டிலிருந்து சென்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த விவரங்களை அனுப்பி அவர்களின் ஒத்துழைப்போடு, அவர்களின் முயற்சிகளையும் பயன்படுத்தி, மத்திய அரசிடமிருந்து அதிகமான அளவுக்கு, நிதியுதவியைப் பெறுவதற்கு நமது அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல, மாவட்டங்களில் பெய்த மழை அளவு குறித்து கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளிவிவரங்கள் சரியான புள்ளிவிவரங்கள் அல்ல. 1979-ம் ஆண்டில் பெய்த மழையின் அளவோடு ஒப்பிட்டுப் புள்ளிவிவரம் கொடுப்பது என்பதை ஒரு சரியான அணுகுமுறையாக என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. இராமநாதபுரம், திருச்சி, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களைப் பொறுத்த வரையில், 1979 ஆம் ஆண்டில் பெய்த மழை அளவையும், 1980 ஆம் ஆண்டு பெய்த மழை அளவினையும் ஒப்பிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களைப் பொறுத்தவரையில், சரியான புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள் என்றுதான் கருதுகிறேன். இப்படிக் கொடுப்பதற்குப் பதிலாக, ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக அந்த மாவட்டத்தில் பெய்ய வேண்டிய மழை அளவையும், எந்த அளவுக்குக் குறைந்து பெய்திருக்கிறது என்ற அளவையும் கொடுப்பதுதான் சரியான முறையாக இருக்க முடியும். 1979 ஆம் ஆண்டைவிட 1980-ல் எவ்வளவு மழை குறைந்தது என்ற புள்ளி விவரத்தைக் கொடுப்பதை ஒரு சரியான அணுகுமுறையாகக் கொள்ள முடியாது.

நிவாரணப் பணிகளைப் பொறுத்தவரையில், இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். தொடர்ந்து இப்படியே இன்னும் சில ஆண்டுகளுக்குப் பருவ மழை பொய்த்தால், நம் நிலைமை என்ன என்பதையும் கணக்கில் கொண்டு செயல்பட வேண்டும். இனி இப்படிப்பட்ட நிலைமை வரக்கூடாது என்றுதான் விரும்புகிறோம். தொடர்ந்து மழை பெய்வதும் அல்லது பொய்ப்பதும் நம் கையிலே இல்லை. ஆனால், தொடர்ந்து இயற்கை பொய்த்து விட்டால்—பஞ்சமோ பஞ்சம்என்ற கொடிய நிலைமைக்கு ஆளானால்—நாம் எப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் நாம் சிந்தித்துச் செயல்பட வேண்டும். மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை நமது மாநிலம் பக்கம் திருப்பவும், கங்கை-காவேரி இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்தவும் இதுபோன்ற சமயத்தில் மத்திய அரசிடம் நாம் வற்புறுத்த வேண்டும். இப்படிப்பட்ட தொலைநோக்குத்

திட்டங்களை வலியுறுத்த வேண்டுமே தவிர, ஏதோ அந்தந்த நேரத்திற்கு நிவாரணத்திற்கான திட்டத்தைப் பற்றி மட்டும் சிந்தித்துக் கொண்டிருப்பது சரியாகாது. இதுவரை நாம் தொலைநோக்குத் திட்டத்தின் அடிப்படையில் செயல்படவில்லை. இதுபோன்ற நிலைமை இனி தமிழகத்திற்குத் தொடர்ந்து வரக்கூடாது என்பதில் நமக்கு அக்கறை இருக்குமானால், இதுபோன்ற தொலைநோக்குத் திட்டங்களை நாம் மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்த வேண்டும். வலியுறுத்துவதோடு நிற்காமல் இவற்றைச் செயல்படுத்துவதில் மாநில அரசின் பங்கு எவ்வளவு என்று அறிந்து அதைத் தருவதற்கு நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். இதையெல்லாம் அரசு தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும் என்பதே என்னுடைய கோரிக்கையாகும்.

அதுமட்டுமல்ல. முன்பு இவ்வாறு வறட்சி ஏற்பட்டபோது, செயற்கை முறையில் மழை பெய்விக்கும் முயற்சியை அப்போதிருந்த அரசு மேற்கொண்டது. அதன் பலன் என்ன என்பது எனக்குத் தெரியாது. ஆனால் ஏற்கெனவே அப்படிப்பட்ட முயற்சிகள் பலன் கொடுத்திருக்குமானால், இப்போதும் அப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்வதுபற்றி அரசு பரிசிலனை செய்ய வேண்டும். வறட்சி நிலையைப் பொறுத்தவரை, எந்த விதமான அரசியல் கண்ணோட்டத்திற்கும் இடமிருக்கக்கூடாது என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. அப்படிப் பொது நோக்கோடு செயல்பட்டு, உண்மையிலேயே அதிகமான வறட்சியுள்ள மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக, பஞ்சப் பகுதிகளாக அறிவித்து, மத்திய அரசிடமிருந்து எந்த அளவுக்கு அதிகமான நிதியுதவி பெற முடியுமோ அந்த அளவுக்கு உதவி பெற்று, நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்கக் கூடாது. இதில் பிரிஸ்டிஜுக்கு இடமில்லை. சுயகௌரவப் பிரச்சினை என்பது ஏதுமில்லை. அந்த அடிப்படையில் செயல்பட வேண்டும் என்று கூறி, குறிப்பாக தென்னாற்காடு மாவட்டம், வடாற்காடு மாவட்டம், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய பகுதிகளில் மிகவும் அதிகமான பாதிப்புக்கு மக்கள் ஆளாகியிருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அங்கெல்லாம் துயர் துடைப்புப் பணிகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்று கூறி விடை பெறுகிறேன்.

* திரு. க. அருணாசலம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்த அறிக்கை மீதான தங்கள் கருத்துக்களைக் கூறினார்கள். இந்த அறிக்கையைப் படித்தவர்கள், இது போதுமான அளவு தமிழ்நாட்டின





வறட்சி நிலைமையைப் பிரதிபலிப்பதாக இல்லை என்பதை உணருவார்கள். இப்போது ஏற்பட்டிருக்கிற நிலைமை வெறும் மனக்குறைவு என்பதால் மட்டும் ஏற்பட்டதல்ல. பல காரணங்களால் தமிழ் நாட்டில் வறட்சி நிலைமை அதிகரித்திருக்கிறது. சென்ற ஆண்டு பெய்த மழையளவைக் காட்டிலும் இந்த ஆண்டு குறைந்துவிட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் " வருஷ நாட்டு மலையில் மழையே " பெய்யவில்லை என்றால் பொதுவாகப் பஞ்சம் ஏற்படும். அங்கெல்லாம் கடலோரம் மழை பெய்தால் பிரயோசனமில்லை. அந்த மழையைக் கணக்கில் வைத்து அங்கே மழை பெய்தது என்றால், அது சரியல்ல. அந்தத் தண்ணீர் அவ்வளவும் கடலுக்குள் போய்விடும். அங்கே இருப்பவர்களுக்குக் குடிக்கக்கூட தண்ணீர் கிடைக்காது. எனவே இராமநாதபுரம் மாவட்டத்தை பஞ்சப் பிரதேசம் என்று அறிவிக்க வேண்டும். அப்போதுதான் அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை கிடைக்கும். இந்தக் கருத்தை நான் முற்றிலும் ஆதரிக்கிறேன். இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறது. அங்குள்ள மக்களெல்லாம் அங்கே தங்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்ற காரணத்தால், வெளி மாநிலங்களுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நாம் வசதி செய்து கொடுத்திருப்பதாகக் கூறுகிறோம். ஆனால் கிராமத்தில் இருப்பவர்கள் அனைவரும் விவசாயக் கூலிகள்.

(பிற்பகல் 12.50)

அவர்களுக்கு அன்றாடம் வேலை இடைத்து பண வருவாய் வந்தால் அதன் மூலம் அவர்கள் சாப்பிட முடியும். எத்தனை நியாய விலைக் கடைகள் இருந்தாலும், அவற்றிலிருந்து பொருளை வாங்கும் சக்தி மக்களுக்கு இல்லாவிட்டால், அந்தக் கடைகளை அவர்களால் பயன்படுத்திக்கொள்ள முடியாது. எனவே அப்படிப்பட்டவர்களுக்கு தினசரி அத்தியாவசியமான வேலையைக் கொடுத்தாக வேண்டும். நீண்டகால நோக்கில் வேறுபல திட்டங்களை நாம் போட்டாலும்கூட, அவர்களுடைய இன்றைய நிரந்தரப் பட்டினி பசியைப் போக்கிக்கொள்ளத் தகுந்த மாதிரி வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு ஒரு முறை இப்படிப் பஞ்சம் வந்தபோது, மாநிலக் கதர் வாரியத்தின் மூலம் ஏற்பாடு செய்து, 2 கோடி ரூபாயை பம்பாயிலுள்ள கதர் ஆணைக் குழுவிடமிருந்து பெற்று வந்து, ஏராளமான வேலை வாய்ப்பை ஏற்படுத்தினார்கள். ஆகவே பஞ்சக் காலத்தில் உள்ளூர் ஆசாரிகள்-தச்சர்கள்-கொல்லர்கள் செய்யக்கூடிய கருவிகளைக் கொடுத்து அதன் மூலம் நூல் உற்பத்தி செய்து, துணி உற்பத்தி செய்தால், பொது மக்களுக்கும் வேலை

வாய்ப்புக் கிடைக்கும், பஞ்சத்தையும் சமாளிக்க முடியும். அந்த வழியிலே கதர் வாரியத்தை பயன்படுத்திக்கொள்ளலாம். கதர் ஆணைக் குழுவினருக்கு இந்த மாதிரியான அறிக்கையைக் கொடுத்தால் பயன் இருக்காது. உண்மை நிலைமை என்னவென்று எடுத்துக்காட்டி ஒரு அறிக்கையைத் தயாரித்து அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அப்போது உதவி கிடைக்கலாம்.

எல்லா உறுப்பினர்களும், இப்போது செலவழித்திருப்பது போதாது, ஆகவே இன்னும் அதிகமான பணம் செலவழிக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். செலவழிப்பது என்பது நம்முடைய அரசின் கடமைகூட. இது ஒரு 'பொலிட்டிக்கல் ஆக்ஷன்'. பொது மக்களுக்கும் இதைச் செய்வதில் கடமை இருக்கிறது என்று உணர்த்த வேண்டும். வறட்சி, பஞ்சம் போன்ற காலங்களில் குற்றங்கள்கூட அதிகமாக வளரும். ஒன்றும் சாப்பிட வழி இல்லாவிட்டால், திருட்டு போன்ற குற்றங்கள் ஏற்படும். இவற்றைச் சமாளிக்க பொது மக்களுடைய கடமைகளைப்பற்றி அவர்களுக்கு உணர்த்த வேண்டும். அரசினுடைய முக்கியமான கடமை நிதியைக் கொடுப்பது. ஒவ்வொரு வட்டத்திற்கும் இவ்வளவு என்று ஒதுக்கிவிடுகிறார்கள். எவ்வளவு ஒதுக்குகிறார்கள் என்ற விவரம் பொது மக்களுக்குத் தெரிந்தால், "நம்முடைய வட்டாரத்திற்கு இவ்வளவு வந்திருக்கிறது. சரியாகச் செலவழிக்கிறார்களா?" என்று பார்க்கும் உணர்வு அவர்களுக்கு வரும். ஆகவே பொது மக்களுக்குத் தெரிகிற மாதிரி ஒவ்வொரு வட்டாரத்திற்கும் இவ்வளவு, இவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிவிக்க வேண்டும். அப்படி இருந்தால் பொது மக்கள் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். கிராமங்களில் உள்ள சில வசதி படைத்தவர்கள் அரசு அளிக்கும் பணத்தை, காண்ட்ராக்ட் மூலம் எடுத்துக்கொள்கிறார்கள் என்ற குறை சொல்லப்பட்டது. அவர்களுக்கு இரக்கச் சித்தம் உண்டாக்கக்கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். வறட்சி நிலைமையைச் சமாளிக்க பொது மக்களுடைய ஆதரவு வேண்டும் என்ற நிலைமையை உண்டாக்க வேண்டும். பொது மக்களுக்கும், இந்தச் சமூகத்திற்கும் பொறுப்புண்டு. அவ்வப்போது வசதி குறைந்தவர்களுக்கு உதவ வேண்டுமென்ற உணர்ச்சியை நாம் உண்டு பண்ண வேண்டும். வறட்சி வந்தால், அரசாங்கம் இருக்கிறது, அது அதைப் பார்த்துக் கொள்ளுகிறது என்று எண்ணி அதிக சௌகரியம் வாய்ந்தவர்கள் சௌகரியமாகவே இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், கிடைக்கிறபோது மேலும் அரசாங்கப் பணத்தையும் எடுத்துக்கொள்ளுகிற சுயநல மனப்பான்மை உள்ளவர்களும் இருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளைக் குறைத்து இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி நல்ல உணர்வுகளை வளர்க்க வேண்டிய சூழ்நிலையை நாம் உண்டுபண்ண வேண்டும். அந்தந்த வட்டாரங்களில் உள்ள



வசதி படைத்தவர்களைப் பார்த்து, "அரசு இவ்வளவு கொடுக்கிறது, நீங்களும் ஈடு செய்கிற அளவில் கொடுங்கள்" என்று கேட்டு இந்த வேலைகளைச் சமாளிக்க வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்திலும் உள்ள ஊழியர்கள் சிலர் ஊர் ஊராகச் சென்று புள்ளிவிவரங்களைத் தயாரித்து, "நீங்கள் வசதியாக இருக்கிறீர்கள், வசதியில்லாதவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு உதவுங்கள். உங்களிடம் தண்ணீர் இருக்கிறது. ஊர்க்காரர்களுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டும்" என்று சொல்லி பிரச்சாரம் செய்திருக்கிறார்கள். இதை மேலும் ஊக்கப்படுத்த வேண்டும். நகரங்களில் குடிநீர் கிடைக்கிறது. கிராமங்களில் அப்படியில்லை. ஆகவே, பொது மக்களுக்கு இருக்கிற சிரமத்தை வசதி படைத்தவர்கள் குறைப்பதற்கு முன்வர வேண்டும் என்று கேட்க, தலைவராக இருக்கிறவர்கள் புதிய உணர்வை உண்டாக்க வேண்டும். இது புதிய உணர்வுகூட அல்ல. பழைய உணர்வுதான். "ஈத்துவக்கும் இன்பம்" பற்றி முன்பே சொல்லியிருக்கிறார்கள். அதை மறுபடியும் வற்புறுத்த வேண்டும். விஞ்ஞானத்தை வளர்க்கிறோம் என்று சொல்லி எல்லாவற்றையும் அரசின் தலையில் போட்டுவிட்டு சுரண்டுகிற போக்கு இருப்பதை நாம் சமாளிக்க வேண்டும். பொதுவாக, சிறு தொழில்களை வளர்ச்சி பெறச் செய்ய முயற்சிக்க வேண்டும். வீட்டிலிருந்து கொண்டே செய்கிற தொழில்களை உண்டு பண்ணி யாரும் ஊரை விட்டு வெளியே போகாத நிலைமையை ஏற்படுத்த வேண்டும். மழை பெய்யாத போது வேலை தேடி ஊரை விட்டுப் போய்விட்டால், திரும்ப மழை பெய்கிறபோது அவர்கள் வந்து பணி செய்வது கஷ்டமாக இருக்கும். ஆகவே இந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாம் செய்யக் கூடிய அவ்வளவு செலவையும் மத்திய அரசு தர வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள வேண்டும். பொது மக்களுடைய உணர்வுகளைத் தூண்டிவிட்டு அவர்களும் இந்தப் பணியில் ஈடுபடுமாறு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, வறட்சி நிலைமைபற்றி இங்கே விவாதிக்கப்படுகின்ற நேரத்திலே நான் ஒரு சிலவற்றைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

நம் நாட்டை விட மிகக் குறைந்த அளவிலேதான் ஆந்திரா பகுதியில் வறட்சி பாதிப்பு இருந்தது, இருந்து கொண்டிருக்கிறது. என்றாலும்கூட ஆந்திர அரசு முன்கூட்டியே திட்டமிட்டு மத்திய அரசுக்குத் தெரிவித்து

வேண்டுகோள் தந்து, அங்கேயிருந்து நிபுணர் குழு வந்து நிலைமையை ஆய்வு செய்துவிட்டுச் சென்றிருக்கிறது. அதற்கு அடுத்த குழுவும் வரவிருப்பதாகச் செய்தி வந்துகொண்டிருக்கிறது. அந்த வகையிலே முன்கூட்டியே திட்டமிட்டுச் செயல்படுவதற்கு தமிழ்நாடு அரசு நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பது நாம் எல்லோரும் வருத்தப்படக்கூடிய ஒன்றாகும். மிகக் குறைந்த அளவிலே பாதிப்பு இருந்தபோதிலும், ஆந்திராவில் முனைப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறபோது நம்முடைய அரசு தாமதமாகச் செயல்படத் துவங்கியிருப்பது வருந்துதற்குரியது. அதைத் தவிர்க்கிற வகையிலே செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சி நிவாரணப் பணிக்காக 439 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக இந்த அறிக்கையிலே தரப்பட்டிருக்கிறது. 439 இலட்சம் ரூபாய் என்பது மிக மிகக் குறைந்த தொகை. ஏதோ செய்வோம் என்ற வகையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. பூரண உதவி கிடைக்கக் கூடிய வகையிலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் இரண்டு, மூன்று மாதங்கள் சென்றால், இப்போதிருக்கின்ற வறட்சியை விட மிகப் பெரிய வறட்சி ஏற்பட்டு பஞ்சமாகக் கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே 439 இலட்சம் என்று இல்லாமல் 439 கோடியாகச் செலவழிக்க நாம் திட்டமிட்டு, மத்திய அரசிடத்திலே தேவையான உதவியைப் பெறுவதற்குரிய நடவடிக்கையை அனைத்துத் தரப்பிலேயும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையிலே பல்வேறு மாவட்டங்கள் விடுபட்டிருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், எப்போதும் வறட்சியால் பாதிக்கப்படாத மாவட்டம் என்று கருதிய காரணத்தாலோ என்னவோ, அதிகாரிகள் மிக மிகத் துல்லியமாகக் கணக்கு எடுக்காமல் விட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரை, 16.23 இலட்சம் என்ற குறைந்த தொகையைத்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் உரிமை காரணமாக 16.23 இலட்சம் ரூபாய் போதுமென்று அவர் கருதியதாக மாண்புமிகு உறுப்பினர்கள் கருதினாலும்கூட, அதிலே அதிகாரிகளை மற்ற வகையிலே குற்றம் சாட்டுகிறேன். தஞ்சாவூர் மாவட்டத்திலே, பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, பேராவூரணி மட்டும்தானா பாதிக்கப்பட்டிருக்கின்றன? அமைச்சருடைய பகுதி மட்டும்தானா பாதிக்கப்பட்டிருக்கிறது? மற்ற பகுதிகளிலே பாதிப்பு இல்லையா? அல்லது சில பகுதிகளைச் சுற்றிப் பார்க்கக் கூடிய வாய்ப்பு இல்லை என்று தெரிந்தே விட்டுவிட்டார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.



கடற்கரைப் பகுதிகளைப் பொறுத்த வரையில், வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, திருவாரூர், நாகை பகுதி ஆகிய பகுதிகளில் சில பிரதேசங்கள் மானாவாரிப் பிரதேசங்களாக உள்ளன. புஞ்சைப் பயிர்கள் அங்கே எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது வேதாரண்யம், வேட்டைக்காரன் இருப்பு, விழுந்தமாயடி, கன்னிமேடு, அவுரிக்காடு, வண்டல் போன்ற பகுதிகளைப் பார்த்தால் தெரியும். எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் இருக்கக் கூடிய நேரத்தில்கூட அங்கே வறட்சி நிவாரணப் பணிகள் சரிவரச் செய்யப்படவில்லை என்றால், வேறு எப்போது செய்வார்கள்? அமைச்சர் அவர்களுடைய பகுதியை மட்டும் குறிப்பிட்டு, அமைச்சர் அவர்கள் மனம் குளிரச் செய்தால் போதும் என்று அதிகாரிகள் கருதிக்கொண்டு, அதற்காக 16.23 இலட்சம் ரூபாயை ஒதுக்கினார்களா என்று புரிந்துகொள்ள முடியவில்லை.

(பிற்பகல் 1.00)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுத்த கிராமங்களில் பட்டுக்கோட்டைப் பகுதியைப் பொறுத்தவரையில், ஒரு கிராமம்கூட சேர்க்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைஞாயிறு பகுதி ஏற்கெனவே தண்ணீர்ப் பஞ்சத்திலே அடிபட்டுக்கொண்டிருக்கின்ற பகுதியாகும். அந்தப் பகுதியிலே தண்ணீர்ப் பிரச்சினை அதிகமாக இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வறட்சி எல்லோருக்கும் பொது, மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தேர்ந்தெடுத்ததற்காக, பட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர்களுக்கு இந்த தண்டனையைக் கொடுக்க வேண்டுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அதற்காக தண்டனை என்பதில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, அமைச்சர் அவர்கள் மனம் குளிர வேண்டுமென்பதற்காக அமைச்சர் அவர்களுடைய பகுதியை அதிகாரிகள் சேர்த்துவிட்டார்கள் என்று அதிகாரிகள் மீது ஒரு உள்நோக்கம் கற்பிப்பதுபோல சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பதில் சொல்லவேண்டிய கடமை ஏற்பட்டதால், அந்தப் பகுதியிலே இருந்து எந்த கிராமமும் சேர்க்கப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: எந்த கிராமமும் சேர்க்கப்படவில்லை என்றாலும், பட்டுக்கோட்டை பகுதியிலே பஞ்சம் இருப்பதாகக் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. திருவாரூர் பகுதியிலே, வேதாரண்யம் பகுதியிலே, திருத்துறைப்பூண்டி, பகுதியிலேயும் அப்படிக் காட்டப்படவில்லை. ஆகவே தான் இதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். தலைஞாயிறைப் பொறுத்த வரையிலே, ஏற்கெனவே தண்ணீர்ப் பஞ்சம் மிகமிக அதிகம். மேல்நிலை நீர்த் தொட்டி மேலும் ஒன்று கட்ட வேண்டுமென்று, மாவட்ட ஆட்சி மன்றக் கூட்டத்திலே, அங்கேயுள்ள கலுங்குக்குழியிலே அமைக்க வேண்டுமென்று என்னால் விவாதிக்கப்பட்டது. அங்கே உடனடியாகக் கட்டப்படும் என்றும் வாக்குறுதி கொடுக்கப்பட்டது. ஆனால் அது செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. அந்தப் பணிகளிலே ஈடுபடுகின்றபோது, இந்தப் பணிகளையும் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்திலே லெவி வேண்டாம் என்று உறுப்பினர் ஒருவர் பேசினார். அது அங்கு குறுவை சாகுபடியாக இருந்தாலும், இந்தச் சம்பா சாகுபடியாக இருந்தாலும் எப்படி இருந்தது என்றால், திருவாரூர் பகுதியிலே, ஆமூர், வடகுடி, சோழங்கநல்லூர் பகுதிகளிலே பயிர்கள் எல்லாம் சூறையாகிவிட்டன. வயல்கள் எல்லாம் காய்ந்துபோகின்ற நிலைக்கு ஆகிவிட்டது. மிகவும் பாதிக்கப் பட்டிருக்கின்றது. ஆக இந்தப் பகுதிகளையெல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு அங்கெல்லாம் இந்த வறட்சிப் பணிகளைச் செய்யவேண்டும் என்றும், இவைகளைத் துரிதமாகச் செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். புதுக்கோட்டை மாவட்டமும் என்னுடைய தொகுதியாகும். அந்தப் பகுதியை வறட்சிப் பகுதி என்று சொல்வதை விட, பஞ்சப் பகுதி என்று அறிவித்து அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு வறட்சிப் பணிகளை விரைவாகச் செய்ய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அம்மாவட்டத்திலுள்ள, சேந்தக் குடி, பாலையூர், மாயனூர், கோவில்பட்டி முதலிய இடங்களிலே தண்ணீர் இல்லாமல், அவர்கள் வெளியிலே 3 மைல் 4 மைல் என்று நடந்து சென்று குடிநீர் கொண்டு வரக்கூடிய சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே பெரும் குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. வயல்களில் பயிர்கள் காய்ந்து கொண்டிருக்கின்றன. பம்பு செட்டுகளுக்கு டீசல் கிடைப்பதில்லை. கால்நடைத் தீவனங்கள் அங்கே கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட சூழ் நிலைகள் புதுக்கோட்டையிலே இருக்கின்றன. ஆகவே இந்த மாவட்டத்தையே பஞ்சப் பிரதேசமாக அறிவித்து அதற்கு வேண்டிய நிவாரண நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டும் என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன். கிராமங்கள் தோறும் நியாய விலைக் கடைகள் என்று வைத்திருக்கிறோம். 16 ஆயிரம் 17 ஆயிரம் நியாய விலைக் கடைகள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்



கின்றது. இந்த நேரத்திலேயாவது எல்லாக் கிராமங்களிலும் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்த வேண்டும். கால்நடைத் தீவனங்கள் கிடைக்க அவற்றை இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். ஏழைக் குழந்தைகள், முதி யோர்கள் போன்றவர்களுக்கு இலவச உணவு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். பஞ்சப் பகுதிகளிலே நிலவரியை ரத்து செய்ய வேண்டும். வறட்சிப் பகுதிகளிலே ஒத்திவைக்க வேண்டும். தனியார் வங்கி, அரசு வங்கி, கூட்டுறவு வங்கி ஆகிய வங்கிகளிலே வறட்சிப் பகுதியிலே உள்ளவர்கள் பெற்ற கடன்களை ஒத்திவைக்க வேண்டும். வறட்சிப் பகுதி என்று அறிவித்த இடங்களிலே ஒத்திவைப்பதும் பஞ்சப் பகுதி என்ற பகுதியிலே ரத்து செய்வதற்குமான நடவடிக்கைகளிலே அரசு ஈடுபடுவதும் அரசின் கடமை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கேகூட பஞ்சத்தைப் பற்றிப் பேசினார்கள். சென்னையைப் பொறுத்த வரையிலே கூட, குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது, குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டி ருக்கின்றது. இன்னும் இரண்டு மாத காலம் போனால், என்னவாகுமோ என்ற பயம்கூட ஏற்பட்டிருக்கிறது. காரணம் இப்போதே காலை 4 மணி முதல் 10 மணி வரை தண்ணீர் வந்துகொண்டிருந்த நிலை மாற்றப்பட்டு குழாய்களிலே, இப்போது 4 மணி முதல் 6 மணி வரைதான் என்ற அளவுக்குக் குறைக்கப் பட்டிருக்கிறது. அதுபோலவே காலை 4 மணியிலிருந்து 7 மணி வரை தண்ணீர் வந்திருந்த நிலை மாறி இப்போது 4 மணி முதல் 5 மணி வரைதான் வருகிறது. இனிமேல் இதுகூட வராத சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடும். இந்தக் கோட்டைக்குள்ளே வருகின்றவர்களுக்குத் தண்ணீர் கிடைத்துவிடுகிறது. ஆனால் கோட்டையைச் சுற்றிய பகுதியிலே வரும் ஆயிரக்கணக்கான பார்வையாளர்களுக்கு, காவல் துறையினருக்கு, ஊர்தி ஓட்டுநர்களுக்கு, ஊர்தி நடத்துநர்களுக்கு இவர்களுக்கெல்லாம் தண்ணீர் எங்கே கிடைக்கிறது? காவல் துறையினர் தண்ணீரின்றி மயங்கி விழுந்துவிடுவார்கள் போல் இருக்கிறது. அவர்களுக்குத் தண்ணீர் கிடைப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று இந்த நகரத்திலே அரிசி 5 ரூபாய் விற்கிறது. தஞ்சை மாவட்டத் திலேகூட ரூ. 3.40க்கு விற்கிறது. அந்த அளவுக்கு மிகவும் அதிகமாகப் பஞ்ச நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்பஞ்சம் இன்னும் அதிகமாக ஆகக்கூடும். ஆக இந்த நிலைமைகளையெல்லாம் கருத்திலே கொண்டு அதற்கான துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். திருச்சி மாவட்டத்திலே பெரம்பலூர் பகுதியிலேகூட கடுமையான வறட்சி இருக்கிறது. ஆசிரியர்கள்கூட இதிலே பேசுகிறார்களே என்று நம்முடைய தலைவர் அவர்கள் சொல்கிறார்கள்.

ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும்கூட வறட்சி பற்றிப் பேசத்தான் வேண்டியிருக்கிறது. பக்கத்திலிருப்பவர்களை எல்லாம் பாதிக்கிறது. ஆசிரியர்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல் ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் இப்போது மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மலிவு விலையில் எங்களுக்கும் உணவுப் பொருள் தாருங்கள் என்று சொல்வதற்கு இதை நான் வாய்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இந்த நேரத்தை அதற்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய அவசியம் மிகவும் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது ஒரு பெரிய காட்டிலே அநேக பட்ட மரங்கள் இருக்கின்றபோது, நடுவிலே ஒரு பச்சை மரம் இருந்தால், பட்ட மரங்கள் ஒன்றோடொன்று உராய்ந்து பற்றி எரிகிறபோது, பச்சை மரமும் எரியத்தானே வேண்டும். அந்த வகையிலே ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே துரித நிவாரண நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நிலவுகின்ற வறட்சி நிலையைப்பற்றி இந்த மாமன்றத்தில் பல்வேறு தரப்புகளிலிருந்தும் ஒவ்வொரு உறுப்பினரும் தம் தம் பகுதிகளிலே இருக்கின்ற நிலவரங்களை நேரில் அறிந்து இந்த அவையிலே அவைகளை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அரசினுடைய சார்பிலே தரப்பெற்ற அறிக்கை பூரா நிலைமைகளை எடுத்துச் சொல்லாமல், முழு விவரத்தையும் தராத அறிக்கையாக இருக்கின்றது என்பது வருந்தக்கூடியதுதான். அரசு சார்பிலே தருகின்ற அறிக்கையிலே முழு நிலைமைகளை எடுத்துச் சொல்லாதது ஒரு பெரும் குறையா என்றுகூட நினைக்கலாம். வறட்சி நிவாரணப் பணிகளை நல்ல முறையில் நிறைவேற்ற வேண்டிய அரசு, இயற்கைக் கோளாறின் காரணமாக ஏற்பட்ட வறட்சியிலிருந்து பெருமளவிலே மக்கள் பாதிக்கப்படாமல் பாதுகாக்கவேண்டிய அரசு அதன் முழு கோர நிலையைத் தெரிந்து கொள்ளவில்லையே என்பதுதான் என்னுடைய குறைபாடு. காரணம் பருவ மழை தவறியதன் காரணமாக வறட்சி ஏற்பட்டது. அதை நாம் உணர்கிறோம். அதை யாருடைய குறையாகவும் நாம் கொள்ளாமல், வறட்சி நிலையைத் தவிர்ப்பதற்கு அல்லது வந்துவிட்ட வறட்சியினால் மக்கள் பெருமளவில் பாதிக்கப்படாமலிருக்க நாம் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்ய வேண்டும். நிவாரணப் பணியிலே ஈடுபட வேண்டிய இந்த அரசு முழு அளவிலே விவரங்களைத் தெரிந்துகொள்ளவில்லையே என்பதைத்தான் நான் குறையாக எடுத்துச் சொல்லுகிறேன். இந்த அறிக்கையைப் பார்த்தால், இதில் 9 மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு





செய்யப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களை பொறுத்த வரையிலே, அவர்களுக்குச் சரியான புள்ளிவிவரங்கள் இல்லை என்று தெரிகிறது. திருநெல்வேலி, கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களில் பாதகமான நிலை நிலவுவதாக அறிக்கைகள் வரவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, அங்கே என்ன நிலவரங்கள் நிலவுகின்றன என்று அரசுக்குத் தெரியவில்லை. பல மாவட்டங்களைப்பற்றித் தெரியவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்து இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றதைப் பார்க்கிறேன். இந்த அறிக்கையில் எங்கள் மாவட்டத்தைப் பற்றி சரியாகத் தெரிவிக்காமல் இருக்கிறார்கள். அதற்கு நான் உதாரணத்தைச் சொல்கிறேன். இந்த அறிக்கையில் 10-வது பக்கத்திலே 6-வது பாராவில் இருக்கிறது. எத்தனை ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லவில்லை. சென்ற போகம், சென்ற ஆண்டிலே ஆயிரம் ஏக்கர் பயிர் ஏற்றப்படவில்லை. ஆயிரம் ஏக்கர் என்றால் மானாவாரி நிலம் அல்ல. கன்னியாகுமரி மாவட்டத்திலே பேச்சிப்பாறை, பெருஞ்சாணி என்ற இரண்டு அணைக்கட்டுகள் மூலம் பயிராகின்ற நிலங்கள் 10 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு பயிர் செய்யப்பட்டு தண்ணீர் இல்லாமல் காய்ந்துவிட்டது. அந்த ஆயிரம் ஏக்கரில் இப்போதும் பயிரிடப்படவில்லை. அங்குள்ள 55 ஆயிரம் ஏக்கரில் இப்படி 15 ஆயிரம் ஏக்கர் நிலம் ஆகியிருக்கிறது. சம்பா பயிர் 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் கதிரும் காயுமாக இருக்கக்கூடிய நிலங்கள் தண்ணீர் இல்லாமல் காய்ந்து அறுவடை செய்ய முடியாத நிலைக்கு ஆளாகிவிட்டன. இப்படி இருக்கக்கூடிய நிலையிலேயும் அதைப்பற்றி எல்லாம் ஒன்றும் தகவல் வரவில்லை என்றும் புள்ளிவிவரம் இல்லை என்றும் சொல்கிறார்கள். நிலவரியிலே ஏ பிரிவுக்கான நிலவரியை இந்த நிலங்களுக்கு சரியாக விதித்திருக்கிறார்கள். மானாவாரி நிலங்கள் பாதிக்கப்பட்டதைப்

(பிற்பகல் 1-10)

பற்றி நான் சொல்லவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் 'அஞ்சூர்ட் சப்ளை' இருக்கக்கூடிய 55,000 ஏக்கர் நிலங்களிலே 15,000 ஏக்கர் பாதித்திருக்கும் நிலையிருக்கிறதென்றால், நாலில் ஒரு பகுதி வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. ஆனால் அந்தப் புள்ளி விவரங்கள் அரசின் கையில் இல்லை. நாங்கள் சொன்ன பிறகு, மாவட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு விவரங்களைச் சேர்ப்பதாக இருந்தால், அதற்குப் பிறகு தான் வறட்சிப் பணிகளுக்குத் திட்டமிடும் நிலையில் அரசு இருக்கும். இதுபோலத்தான் எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். பிற மாவட்டங்களைப் பொறுத்த வரையில், மற்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்த நிலையில்

நான் முதலிலே வற்புறுத்த விரும்புவது, அரசு சூழ்நிலையைச் சரிவர பரிசீலனை செய்து தெரிந்து கொள்ளவில்லை என்பதுதான். எனவே நான் கேட்டுக்கொள்வது, உயர் மட்டத்திலுள்ள அதிகாரிகளை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அனுப்பி, நிலவரங்களை அறிய வேண்டும். இன்னும் மூன்று தினங்களுக்குள் 2 அல்லது 3 மாவட்டங்களுக்கு ஓர் அதிகாரியை அல்லது பெரிய மாவட்டமாக இருந்தால் ஒரு மாவட்டத்திற்கு ஓர் அதிகாரியை அனுப்பி—செக்ரட்டரி லெவலில் அனுப்பி, அங்குள்ள நிலவரங்களை அறிய வேண்டும். நாங்கள் தந்துள்ள விவரங்களும் முழு அளவிற்கில்லை. எல்லா உறுப்பினர்களும் தெளிவாகப் பேச வேண்டுமென்றால், ஒவ்வொருவருக்கும் அரை மணி நேரம் வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்கு விவாதத்தை வைத்துக்கொண்டிருக்கும்போது, அதற்குள்ளாக அதிகப் புள்ளி விவரங்களைக் கொடுக்க முடியாது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றி இன்னும் சொல்ல முடியும். திருநெல்வேலி மாவட்டத்தைப் பற்றி அதிக நேரத்திற்குச் சொல்லலாம். ஆனால் நானும் 10 நிமிடங்களுக்குள் முடித்து, அமைச்சரவர்கள் விளக்கம் சொல்ல வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற உணர்வோடு பேசுவதால், முழு அளவிற்குப் புள்ளி விவரங்களைத் தர முடியவில்லை. இனி அந்தந்தப் பகுதிகளில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பகுதி நிலவரங்களை அறிந்து, 3 தினங்களுக்குள் எழுத்து மூலம் தர வேண்டும். மேலும் அரசு, அதிகாரிகள் மூலமும் நிலவரங்களை அறிந்து, இந்த அவை முடிவதற்கு முன்னால் ஒரு வெள்ளை அறிக்கை மூலம் இந்த மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள், நிலங்கள், பயிர்கள், கன்றுகாலிகள் நிலையை அவை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குப் பிறகுதான் மத்திய அரசோடு தொடர்பு கொள்ள முடியும். நிதியாணைக் குழுகூட, இயற்கைக் கோளாறுகளால் வரக்கூடிய, அதாவது மழை மிகுதியால் அல்லது வறட்சியால் வரக்கூடிய இன்னல்களுக்கு நிவாரணமளிக்க மத்திய அரசு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அதையும் பயன்படுத்திக்கொண்டு, மத்திய அரசோடு தொடர்புகொள்ள வருவாய்த் துறை அமைச்சரவர்களே டெல்லிக்குச் செல்ல வேண்டும். அப்போது அவர்களிடம் முழு அளவிற்குப் புள்ளி விவரங்கள் இருக்க வேண்டும். இந்த அவையின் உணர்வு, பேரவையின் உணர்வு அவர்களுக்குத் துணையாக இருந்து, அதிக நிதிபெற்று வர அவர்கள் முயற்சி செய்ய வேண்டுமேயொழிய, இப்போது மாநில அரசு கொஞ்சம் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது போதுமானதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தண்ணீர் இல்லாததால் பயிர்கள் பாதிக்கப்பட்டு, அழிந்து போகின்றன. கன்று காலிகளுக்குக்கூட தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. மக்கள் குடி பெயரும் நிலை ஏற்பட்டிருக்கிற



நிலையில், வறட்சியின் கோர சொரூபத்தைப் படம் பிடித்து முழு அளவிற்குக் கொடுப்பதிலே தவறியுள்ள நிலையில், இன்னும் சில தினங்களில், யார் நினைத்தாலும் தடுக்க முடியாத அளவிற்கு ஒரு கோர நிலை உருவாகிவிடுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்த நிவாரணத்தை நாம் அளித்தாலும், அந்த நிவாரணங்களைப் பெற மக்கள் இருக்க மாட்டார்கள், வீடுகளில் ஆட்கள் இருக்க மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கன்று காலிகளை—டிஸ்டிரஸ் சேல்—பஞ்சத்தால் குறைந்த விலைக்கு விற்று விடுகிறார்கள். 12 ரூபாய்க்கு ஒரு கிலோ இறைச்சி விற்கப்படுகிறதென்றால், கன்று காலிகளை அச்சத்தின் காரணமாக விற்றுக் கொண்டிருக்கிறார்களென்பது பொருள். தங்கள் வீட்டிலே அவற்றை வைத்துக்கொண்டு, தண்ணீர் கொடுக்க முடியாமல் அவைகள் சாவதைவிட, 10 ரூபாய் குறைந்தாவது போகட்டுமென்று சொல்லும் நிலைக்கு நம்முடைய மாநிலம் வந்து கொண்டிருக்கிறது. இவற்றைத் தவிர்க்க அரசு போர்க்கால நடவடிக்கைகளின் அடிப்படையில், தன்னுடைய இயந்திரத்தை இயக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும்கூட உதாரணத்திற்கு ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். 'அஷ்யூர்ட் வாட்டர் சப்ளை' இருக்கக்கூடிய ஒரு பகுதியிலே ஒரு ஏக்கர் நிலம் தீய்ந்துவிட்டதென்றால், அதற்கு நில வரியை ரத்து செய்கிறார் மாவட்ட ஆட்சித் தலைவர். அதற்கு ஆணை இருக்கிறது. ஆனால், நிலவரிக்கு மேலுள்ள சர்சார்ஜ், லோகல் செஸ் ஆகியவற்றை ரத்து செய்யும் அதிகாரம் அவருக்கில்லை. அரசுக்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது. அரசுகூட ஒரு கிராமம் முழுவதற்கும் அவற்றை ரத்து செய்ய முடியுமே தவிர ஒரு பகுதிக்குச் செய்ய முடியாது. ஓர் அணையிலிருந்து தண்ணீர் வருகிறதென்றால், அப்பர் ரீஜனில் உள்ள பயிர்கள் பாதுகாக்கப்பட்டுவிடும். கடைவரம்பு நிலங்கள்தான் பாதிக்கப்படும். அப்படி ஒரு போகம் பொய்த்துவிட்டதென்றால், நில வரியை ரத்து செய்கிறார்கள். நில வரிக்குமேல் இரண்டு மடங்கு சர்சார்ஜ் இருக்கிறது, இரண்டரை மடங்கு லோகல் செஸ் இருக்கிறது. இதை ரத்து செய்வதற்கு அதிகாரமில்லை. ஒரு ரெவின்யூ வில்லேஜ் முழுவதற்கும் ரத்து செய்யத்தான் அரசுக்கு அதிகாரமிருக்கிறது. ஒரு பகுதிக்கு ரத்து செய்ய அதிகாரமில்லை. எனவே இந்த விதிகளை எல்லாம் தளர்த்த வேண்டும். எப்படி பஞ்சப் பிரதேசங்கள் என்று அறிவிக்க விதிகள் வைத்திருக்கிறோமோ—அதாவது கன்று காலிகள் சாக வேண்டும், எல்லாம் வனாந்திரமாக ஆக வேண்டும், ஆட்கள் சாக வேண்டும்—அப்படி, இதற்கும் விதிகளைத் தளர்த்த வேண்டும். வெள்ளைக்காரர்கள் எழுதிவைத்த விதிகளை அதிகாரிகள் எழுதி வைக்கிறார்கள். ரெவின்யூ அமைச்சரவர்கள், அவற்றை

வாய்ப்புதான பரிதாபமான நிலையை மாற்றி, இப்போதிருக்கும் சூழ்நிலைகளுக்கேற்ப முழு அதிகாரம் பெற்று, இருக்கும் வறட்சியைச் சமாளிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தி, செவ்வனே அமைச்சரவர்கள் செயல்பட வேண்டும், இந்த அமைச்சரவை செயல்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய ஆட்சி நிர்வாக இயந்திரத்தை அதற்கேற்ப இயக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மழைக் குறைவு வருவதற்குக் காரணம் என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் குறிப்பிடும்போது 'பிரசர்வேஷன் ஆஃப் டிரீஸ் & பாரஸ்ட்ஸ்' இல்லாததுதான் என்று குறிப்பிட்டார்கள். அது நீண்ட கால அடிப்படையிலே செய்ய வேண்டியதாகும். இப்போது காடுகள் மிக வேகமாக அழிக்கப்பட்டு வருவதை நாம் தடுத்து, அவற்றைப் பாதுகாக்க வேண்டும். ஒரு மாநிலத்தில் மூன்றில் ஒரு பங்கு காடுகளாக இருக்க வேண்டுமென்ற நியதி இருக்கிறது. அதையெல்லாம் நினைவில் கொண்டு, வறட்சி நிவாரணப் பணி தீர்ந்த பிறகு, அவற்றைப் பாதுகாப்பதில் நம்முடைய வேகத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சிப் பணிக்கு ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டில் என்னென்ன தவறுகள் ஏற்படுமென்பதை என்னுடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. ஆறுமுகம் அவர்கள் விளக்கமாகச் சொன்னதால், நான் அதற்குள் போய் நீண்ட நேரம் பேச விரும்பவில்லை. ஒவ்வொரு பகுதியிலும் பொது மக்கள் குழு ஏற்படுத்தப்படுமென்று சொல்லுகிறார்கள். அந்தக் குழுக்கள் கட்சி சார்பற்றவர்களையே உறுப்பினர்களாகக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு கட்சியிலிருந்தும் ஒரு ஆளுக்கு மேலே இடம் பெறும் சூழ்நிலை இருக்கக்கூடாது. செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்டத்திலே 5 பேர்களுக்கு நான் கலெக்டராக இருக்க முடியாது, எல்லோருக்கும்தான் கலெக்டராக இருக்க முடியுமென்று சொல்லும் அளவிற்கு ஒவ்வொரு செயலிலும், மாவட்டத்தின் நிர்வாகத்தில் தலையிடும் நிலை மிகப் பெரிய அளவிலே தாண்டவமாடும் இந்தக் கால கட்டத்தில் வறட்சிப் பணி சிறப்பாக அமைய, ஒதுக்கப்படும் நிதி அவர்களுடைய திருவிளையாடல்களுக்குப் பயன்படக் கூடாதென்று சொல்லி, உண்மையாக ஏற்பட்டுள்ள வறட்சியை மக்கள் அனுபவிக்காத நிலையில், அவர்களுக்கு நிவாரணப் பணிகள் அமைய வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் தமிழகத்தில் வறட்சி எப்படி இருக்கிறது, அதற்கு என்ன பணிகளைச் செய்ய





வேண்டுமென்பதைப் பற்றி இங்கே பேசியிருக்கிறார்கள். பொதுவாக அரசு இதிலே கவனக் குறைவாக இருக்கிறதென்று சிலரும், கொஞ்சம் வேகமாகத் தான் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சிலரும் சொன்னார்கள். நான் உங்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்வேன். அரசு மிக வேகமாக இருக்கிறது. அரசு மட்டும் இதில் தலையிட்டு, இதைச் செய்வது அவ்வளவு பொருத்தமாக இராதென்ற காரணத்தால், இன்றைக்குப் பேரவையிலும், மேலவையிலும் உள்ள உறுப்பினர்களின் அரிய யோசனைகளைக் கேட்பதற்கு அரசு முன் வந்திருக்கிறது என்ற அடிப்படை நோக்கத்திலிருந்து அரசு இதை எவ்வளவு தெளிவாகப் புரிந்துகொண்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். பேரவையிலே ஒரு நாள் இதற்காக ஒதுக்கியது போதுமா என்ற கேள்வி வந்து, ஒரு நாள் போதாது, இரண்டு நாட்கள் என்று ஒதுக்கி, அதற்குப் பிறகு மாலையும் நீட்டித்து, இரவுவரை நீட்டித்து, விவாதத்தை முடித்தது என்றால், அரசு எந்த அளவிற்குச் சங்கடங்களைக் கவனமாகக் கவனித்து, நிவாரணப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கிறது என்பதை உறுப்பினர்கள் அறிய முடியும்.

(பிற்பகல் 1.20)

அதுமட்டுமல்ல அங்கே ஏன் அவ்வளவு காலம் அதிகமாக ஒதுக்கப்பட்டது. இங்கே ஏன் குறைவாகக் காலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் இங்கே உள்ள உறுப்பினர்கள் எல்லாம் elder politicians சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிற ஆற்றல் பெற்றவர்கள். ஆதலால் தான் குறுகிய காலத்தை மாண்புமிகு தலைவர் ஒதுக்கியிருக்கிறார் என்று நான் கருதுகிறேன். ஆக, உறுப்பினர் பேரில் இருக்கிற நம்பிக்கையின் பேரில்தான், குறுகிய காலத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். ஏனோ தானோ என்று நாங்கள் செய்தோம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாகக் கருதக்கூடாது.

**திரு. ப. மாணிக்கம்:** நம்பிக்கைக்கு அறிகுறி காலத்தைக் குறைத்துக் கொள்வதுதானா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** நம்பிக்கைக்கு அறிகுறி காலத்தைக் குறைத்துக்கொள்வது என்பதல்ல, திறமைக்கு அறிகுறி நேரத்தைக் குறைப்பது. உறுப்பினர்கள் திறமையின் பேரில் நம்பிக்கை இருப்பதால் நேரம் குறைக்கப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன்.

இதற்குக் குறைவாகப் பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள் என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அறிக்கைகள் வந்ததும் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இதற்கு 4½ கோடி ரூபாய் முதலில் ஒதுக்கினார்கள். "ஒதுக்கிவிட்டு 'இது தான் முதல்; இது "கடைசி அல்ல"

என்றுதான் சொன்னார். ஆகவே இதைத் தொடர்ந்து கொடுப்போம், தொடர்ந்து ஒதுக்கப்படும் என்பதை மட்டும் தான் இங்கே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, நான் அறிக்கையிலே கொடுக்கிறபோதுகூட இது முதல் நிலை தான், கடைசி அல்ல என்பதைச் சொல்லியிருக்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது, அறிக்கை சுருக்கமாக இருக்கிறது, விளக்கமாக இல்லையென்று குறைபட்டுக் கொண்டார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னிடத்தில் இது சம்பந்தப்பட்ட விவரங்கள், கணக்குகள் எல்லாம் இருக்கின்றன. எந்தெந்தத் தொகுதிகளில், எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்த ஒன்றியங்களில், எந்தெந்தக் கிராமங்களில், எப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்பதைப்பற்றிய புள்ளிவிவரங்கள் எடுக்கப்பட்டு அதன் அடிப்படையில்தான் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி அறிக்கை வந்த பிறகுகூட நாங்கள் எப்படி கிராமங்களைப் பொறுத்தவரை, முறை வைத்திருக்கிறோம் என்பதையும் நான் இந்த அவைக்குச் சொல்லியாக வேண்டும். யார் வீட்டிலே ஒரு மரக்கால் நெல் வைத்திருக்கிறார்கள், யார் வீட்டில் ஒரு படி நெல் வைத்திருக்கிறார்கள், யார் வீட்டில் இரண்டு நாட்களாக நெல்லே இல்லை என்று பார்க்கிறோம்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற அளவைக் கணக்குகள் எல்லாம் எங்களுக்கு மறந்து போனவை. இப்போது நடைமுறையில் வேறு அளவை முறை இருக்கிறது. வேகமாக முன்னேற வேண்டுமென்று நாம் சொல்கிறோம். அதே சமயத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பழமையிலேயே இருக்கிறாரே. (சிரிப்பு.)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அப்படி நாங்கள் கிராமங்களில் கணக்கெடுக்கிறபோது, மிகக் குறைந்த அளவு உணவுப் பொருள் எந்த வீட்டில் இருக்கிறதோ அந்த வீட்டுக்கு முதலில் உதவி செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்கிற அடிப்படையில் எந்தெந்த கிராமத்திலே தண்ணீர்ப் பற்றாக்குறை மிக அதிகமாக, கடுமையாக இருக்கிறதோ அங்கேயெல்லாம் முதலில் நாங்கள் செய்கிறோம். இப்படிப்பட்ட விவரங்களை எல்லாம் நன்றாக ஆராய்ந்த பிறகு தான் இன்றைக்கு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விவரமாக அறிக்கை இருக்க வேண்டுமென்று எல்லோரும் சொன்னார்கள். விவரமாக அறிக்கை தராததாலேயே நாங்கள் அலட்சியப்படுத்திவிட்டோம் என்று ஒருவரும் கருதக் கூடாது. மேலவையிலும், பேரவையிலும் உள்ள அனைவரும் ஒத்துழைப்பும்



தேவை, ஆலோசனையும் தேவை, எது வேண்டுமானாலும் சொல்லுங்கள் என்றுதான் நாங்கள் அரசின் தீர்மானத்தைக் கொண்டு வருகிறோம். இது மக்களுடைய பிரச்சினை சம்பந்தப்பட்டது. மக்களுடைய பிரச்சினையாக இதை அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது என்று நாங்கள் சொல்லவில்லை. நாம்தான் மக்களுடைய பிரச்சினையாக இதை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதை அரசு செய்யவில்லையென்று சொல்லாமல் நாம் செய்யவில்லை என்று சொல்லும் அளவுக்கு நாம் இதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். இங்கே இன்றைக்கு வரையில் எங்கெங்கே வேலைகள் நடைபெற்றிருக்கின்றன என்கிற விளக்கத்தை நான் சொல்லாவிட்டாலும்கூட, ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு குடிநீர் சம்பந்தப்பட்ட வரையில், குடிநீர் வடிகால் வாரியம், விவசாயப் பொறியியல் துறை போன்ற துறைகள் எல்லாம் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றன. அவர்கள் தொடர்ந்து இந்த வேலைகளையெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதேபோல் இன்றைக்கு வரி வாய்தாவைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொல்லு கிறார்கள். வட ஆற்காடு, புதுக்கோட்டை, தென்னாற்காடு மாவட்டங்களில் இன்றைக்கு வரி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இங்கே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறபோது, வரிகளைத் தள்ளுபடி செய்வதில் சில சங்கடங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அந்தச் சங்கடங்கள் எங்களுக்குப் புரிகின்றன. அதனால்தான் இன்றைக்கு அரசு வரிகள் மட்டுமல்ல, பஞ்சாயத்து யூனியன் வரிகளையும் இவர்களுக்குத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அரசுக்கு ஒரு மாவட்டம் அல்லது ஒரு வட்டத்தைப் பொறுத்தவரையில்தான், பூரணமாக வரி தள்ளுபடி செய்கின்ற அதிகாரம் இருக்கிறது என்பதல்ல. ஒரே பகுதியில் ஒரே ஏரியாவில், ஒரே சர்வே நம்பருக்கு உட்பட்ட பகுதிக்கு மட்டும்கூட தள்ளுபடி செய்து கொடுப்பதற்கான அதிகாரமும், கொடுக்காமல் இருப்ப தற்கான அதிகாரமும் இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சங்கடப்படுகிறபோது எப்படியாவது வரியை வாங்கிவிட வேண்டுமென்று எப்படி எண்ண முடியும்? எப்படி அவர்கள் கொடுப்பார்கள்? இங்கே வரி வசூல் செய்வது என்பதல்ல பிரச்சினை. என்ன அவர்களுக்குச் செய்யப் போகிறோம் அல்லது செய்கிறோம் என்பது தான் இங்கே பிரச்சினை. அதிலே இந்த அரசு மிகக் கவனமாக இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சிப் பகுதிகளாக அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பி னர்கள் ஒரு கருத்தினைச் சொன்னார்கள். வறட்சிப் பகுதிகளாக இந்த அரசு அறிவித்தாலும் சரி, அறிவிக்காவிட்டாலும் சரி, நாட்டு மக்களுக்கு என்னென்ன

நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது. வறட்சிப் பகுதிகளாக இருக்கிறபோது என்னென்ன காரியங்களைச் செய்வோமோ அவைகளை இப்போதே செய்து கொண்டு தான் இருக்கிறோம். முதன் முதலாக தேசியக் கிராமப் பொருளாதாரத் திட்டத்தின் மூலமாக மொத்தமாக எல்லா மாவட்டங்களுக்கும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் சேர்த்து 32,750 மெட்ரிக் டன் அரிசி கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிற செய்தியை நான் இங்கே சொல்கிறேன். கன்னியாகுமரிக்கு இல்லையென்று சொல்லவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 500 மெட்ரிக் டன். தவிர தொடர்ந்து இந்த வேலைகளிலே ஈடுபடுவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம்: ஒரு விளக்கம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 32,750 மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டிருக்கிறது என்று இங்கே குறிப்பிட்டார்கள். இது எந்த மாதத்திலே வழங்கப்பட்டது? ஏற்கெனவே இதுபோல் கிராமப்புறத் திட்டங்கள், (Food for work) திட்டங்கள் எல்லாம் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தன. ஒரு மாதத்திற்கு முன்பு இந்த வேலைகளையெல்லாம் உடனே நிறுத்த வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டது. அவ்வாறு உத்தரவு போடப்பட்டதற்கு முன்பு இந்த 32,750 மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டதா அல்லது அதற்குப் பின்பு வழங்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இதற்கான பதிலை நான் உடனே இப்போது சொல்லாவிட்டாலும் கூட, நான் என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்பே என்னிடம் அதற்கான விவரங்களைத் தந்து விடுவார்கள். உத்தேசமாகச் சொல்ல வேண்டுமானால், பணம் ஒதுக்கப்பட்ட தேதியில் பணத்தோடு தான் இந்த அரிசியும் வழங்கப்பட்டது. ஆகவே பணம் வழங்கப்பட்ட தேதியில்தான் அரிசியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பணம் ஒதுக்கப்பட்ட பிறகு, சில மாவட்டங்களுக்கு அரிசி கொடுக்கப்பட்ட நிலையும் இருக்கிறது. ஆகவே தேதிக்கும் உறுப்பினர் கேட்பதற்கும் சம்பந்தமில்லை. இவ்வளவு விளக்கத்தை நான் சொல்லிய பிறகு உறுப்பினருக்கு விளக்கம் தேவையில்லையென்று கருதுகிறேன்.

அடுத்து, வேலைகளைத் துரிதப்படுத்துவதைப் பொறுத்தவரையிலும், சில கருத்துக்களைச் சொன்னார்கள். பல இடங்களில் இப்போதிருக்கிற தண்ணீர் கொடுக்கிற மேல்நிலைத் தொட்டி, கை பம்பு . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அமைச்சரின் பதில் உரை முடிகிற வரையில் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இதுபற்றிய விவரங்களையெல்லாம் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லாவிட்டாலும் கூட, இந்த வேலைகள் எல்லாம் இன்றைக்கு மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றன என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இதுசம்பந்தமான கருவிகள் எங்கெங்கெல்லாம் பழுதாகியிருக்கின்றனவோ அவைகளையெல்லாம் அது கிரவுன்ட் வாட்டர் செல்லாக இருந்தாலும் சரி, வாட்டர் போர்டாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்தத் துறையாக இருந்தாலும் சரி, இம்மாத இறுதிக்குள், அதாவது 31—3—1981-க்குள், சரி செய்ய வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டது என்று நான் சொல்வதை விட சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசி, அவர்களுக்கு இருக்கக்கூடிய சங்கடங்களைப் போக்கி, முழு அதிகாரத்தையும் அதிகாரிகளுக்குக் கொடுத்து, இருக்கிற சட்ட திட்டங்களை எல்லாம் நீக்கி அவர்களுக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுத்து, அரசு உத்தரவையும் போட்டு அதற்குரிய துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரப்படி, வறட்சி நிவாரணத்துக்காக தொகை ஒதுக்கப்பட்ட பிறகு, இந்த 32,750 மெட்ரிக் டன் அரிசி விநியோகிக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். அது சரிதானா? அரிசி எங்கள் மாவட்டத்துக்கு வரவே இல்லையென்று சொல்லி அங்கே இருக்கிற மக்கள் போராடுகிற நிலைக்கு வந்து இது பிரச்சினை ஆகக்கூடாது. Food for work -க்காக அரிசி அனுப்பப்பட்டது. பிறகு விநியோகிக்க அரிசி இல்லையென்று சொல்லி வேலையை நிறுத்திவிட்டார்கள். அரிசி வந்த பிறகு வேலையைத் தொடர்ந்து செய்தார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் சொல்லுகிற கருத்துக்கும் இதற்கும் முரண்பாடு உள்ளது. இது ஒருவேளை அப்படியே அறிக்கையாக பத்திரிகையில் வெளி வந்துவிட்டால், எங்கள் மாவட்டத்திற்கு வந்த அரிசி எங்கே போய்விட்டது என்று மக்கள் கேட்டு தகராறு பண்ணுவார்கள். தேவை என்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்முடைய அறிவிப்பைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: வறட்சிப் பகுதிகளில் இன்றைக்குப் பலவிதமான வேலைகள் செய்யப்படுகின்றன. தேசிய கிராமப்புற வேலைத் திட்டத்தின் கீழ் இன்றைக்குச் சில வேலைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. தேசிய கிராமப்புற வேலைத் திட்டத்தின் கீழ் தான்

இன்றைக்கு மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட அரிசி 32 ஆயிரம் டன் சொச்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRUMATHI TARA CHERIAN : Sir, the Hon. Minister said that the repairs to pumpsets, overhead tanks, etc. would be completed before the 31st March. Does that include other items of work that have been undertaken like digging new wells, deepening existing wells, putting up tube wells, etc.? Will all of them be completed by the 31st March? Is it possible to get them completed by 31st March? Generally, we speak of so many things but we are not able to do all of them. So, we can have a weekly or fortnightly bulletin which will give us a complete picture of our drought relief programme and our accomplishments. Secondly, will the Hon. the Health Minister state that in all the small dispensaries at the taluk level and district level he has got enough medicines to fight air-borne diseases like cholera and typhoid which are a corollary to a situation like this? Though the Report given by the Government is very nice, it does not contain all the statistics that we would like to have. Therefore, a Report with all the statistics may be given so that, on a cursory glance, we may know the amounts spent in each district and the amounts that are to be spent in each district.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வறட்சிப் பகுதியில் செய்கிறபோது எந்தெந்தப் பகுதிக்கு, எதைச் செய்து கொண்டிருக்கிறோமோ அதைத் துரிதப்படுத்த வேண்டும் என்று சொன்னேனே தவிர, எப்போதும் செய்து கொண்டிருக்கும் வேலையை நிறுத்திவிட வேண்டும் என்பது அல்ல. என்றைக்கும் வேலை செய்யும் மோட்டார்கள் வேலை செய்து கொண்டுதான் இருக்கும். அவைகளை வேலை செய்யக்கூடாது என்று சொல்லவில்லை. என்றைக்கும் அவைகள் வேலை செய்தால் கூட, வேலைகள் அதிகமாக இருக்கின்றன, அவைகள் போதாமல் அதிகமாக மோட்டார் தேவைப்படும் போது அதிகமாகப் போடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய பேச்சை முழுவதும் கேட்டுக்கொண்டு வந்தால் பின்னாலே புதிய மோட்டாரை எங்கே போடுவது என்பதைச் சொல்கிறேன்.

முதலிலே சொல்கிறபோது, 31 ஆம் தேதிக்குள் எந்தெந்த இடங்களில், அது ஓவர்-ஹெட் டாங்காக இருந்தாலும் சரி, கை-பம்பாக இருந்தாலும் சரி, மின் இணைப்பு கொடுக்கவில்லை என்று சொன்னாலும் சரி, அவைகளைச் செய்யவேண்டும் என்பதற்காக அரசு உத்தரவிட்டிருக்கிறது என்று



சொல்லும் அதே நேரத்தில் அந்த வேலைகள் துரிதமாக தீவிரமாக நடைபெற எல்லாவிதமான வசதி வாய்ப்புக்களும் இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அது போல எங்கேயாவது பம்புகள் கெட்டுவிட்டால், அதைக் கொண்டு வந்து ரிப்பேர் செய்துகொண்டு போகிறபோது காலதாமதம் ஏற்படுகிறது என்பதால், எந்தெந்த இடத்தில் எந்த அளவுக்கு வேண்டுமோ அந்த அளவுக்கு 10 பர்சென்ட் அதிகமாக ஸ்பேர்-பார்ட்ஸ் வாங்கி வைத்துக்கொண்டு, எங்கேயாவது ரிப்பேர் ஆகிவிட்டால் உடனடியாக அதைப் போடும் அளவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதைப்போல ஹேன்ட் பம்பாக இருந்தாலும் அதற்குத் தேவைப்படும் சிறு சிறு சாமான்கள் எல்லாம் தேவையான அளவுக்கு வாங்கி வைத்திருக்கிறோம். இன்றைக்கு இவைகளையெல்லாம் ஓடியாடிச் செய்வதற்கு 'மொபைல் வான்' இருக்கிறது. வண்டிகள், வாகனங்கள் எல்லாம் தேவையான அளவுக்கு 10, 20, 25 என்ற அளவிலே வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்து அவைகள் நடக்கின்றன. வாட்டர் போர்ட் இன்றைக்கு இருக்கிற நிலைமைகளுக்கேற்ப 15 சப்-டிவிஷனில் 1 டிவிஷன் ஏற்படுத்திக்கொள்ள அவர்களுக்கு உத்தரவிட்டு அவர்கள் நியமித்திருக்கிறார்கள். மின்சார வாரியத்திலே இன்றைக்கு எவ்வளவு சங்கடங்கள் இருந்தாலும், அவைகள் எல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டு, இந்தப் பணிகளையெல்லாம் துரிதமாக, தீவிரமாகச் செய்யவேண்டும் என்பதற்காக இன்றைக்கு இந்த வேலைகளைச் செய்வதற்கு மின் வாரியம் முன்வந்திருக்கிறது. அதற்கேற்றவாறு அவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப் போடப்படுகிறபோது—உங்களுக்கும் தெரியும்—மின்சாரம் என்று சொன்னால் மனுக்களைப் போட வேண்டும், அக்ரிமென்ட் போட வேண்டும், முன்பணம் கட்ட வேண்டும், சர்வீஸ் சார்ஜ், செக்யூரிட்டி டெப்பாசிட் கட்ட வேண்டும். இவைகள் எல்லாம் பார்மாலிட்டீஸ். இந்த பார்மாலிட்டீஸை எல்லாம் வைத்துக்கொண்டு 'டிலே' பண்ணக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம். இன்றைக்கு மக்களுக்கு உதவி செய்வது என்ற நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்த பார்மாலிட்டீஸையெல்லாம் பார்க்கக்கூடாது, உடனடியாகக் காரியங்கள் எல்லாம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டு, அவர்கள் செய்ய முன்வந்திருக்கிறார்கள். வேலைகளைப் பொறுத்தவரையில், இந்த அளவுக்கு வேகமாகச் செய்யப்படும், செய்யப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ஒரேயொரு விளக்கம் . . .

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் பேசி முடித்த பின்பு கடைசியில் விளக்கம் கேட்கலாம். இடையிலே கேட்பதால் தொடர்ச்சி விடுபட்டுப் போகிறது. கடைசியில் கேளுங்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் ஒருசில கருத்துக் களைச் சொன்னார்கள். குளங்களையெல்லாம் செப்பனிட வேண்டும் என்று சொன்னார்கள். அவைகளைச் செய்வதற்கு நிச்சயமாக இந்த அரசு தயங்காது. மேலும் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். அதுதான் எனக்கு வேதனையைத் தருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அனைவருக்கும் வேதனை தரக்கூடியதுதான் அது. மக்கள் துன்பத்தால் கஷ்டப்படுகிறபோது, பசியால், பட்டினியால் வாடுகிறபோது, பலர் இந்தச் சமயத்திலே கொள்ளை யடிக்கிறார்கள் என்று சொன்னார்கள். மக்கள் பசியால், பஞ்சத்தால் துன்பப்படுகிறபோது, வசதி படைத்தவர்கள் அவர்களுக்கு உதவ வேண்டும். உதவாவிட்டாலும் பாதகம் இல்லை. வருகின்ற உதவிகளைத் தடுக்காமல் இருக்க வேண்டும். ஒருவேளை அப்படித் தடுத்தாலும் பாதகம் இல்லை. ஆனால், அதற்கும் ஒருபடி மேலே சென்று, அந்த உதவிகளை எடுத்துக் கொண்டு போகிறார்கள், கொள்ளையடிக்கிறார்கள் என்று சொல்கிறபோது, அவர்கள் எல்லாம் சமுதாயத்திற்கு விரோதமானவர்கள். அப்படிப்பட்ட வல்லூறுகளை எல்லாம் கண்டுபிடிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அந்த வல்லூறுகளை வில்லால் அடிக்கக் கூடிய ஆற்றல்தான் எங்களுக்கு இன்றைக்கு இருக்கிறது வில்லால் அடிக்கிறபோது குறி தவறாமல் அடிக்க வேண்டும். ஆனால், மத்திய அரசைப் பொறுத்தவரையில், அவர்களிடம் பீரங்கி இருக்கிறது. அவர்கள் அந்தப் பீரங்கியால் அடிக்க வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி : நிவாரண வேலைகள் செய்யும்போது, காண்ட்ராக்டர்களாக, இடைத் தரகர்களாக இருப்பவர்கள் இந்த வல்லூறுகளாக இருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் பேசி முடிக்க விடுகிறேன். அதற்குப் பின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புவதைச் சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேச எழுந்தபோது, அவருக்கும் இடம் கொடுக்காமல், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு இடம் கொடுத்தால், இவர் வேகமாகக் கேட்பதால் இடம் கொடுக்கிறேன் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் நினைக்காவிட்டாலும், மற்றவர்கள் நினைப்பார்கள். அந்த வல்லூறுகள் இன்றைக்குத்தான் பறக்கவில்லை. பல்லாண்டு காலமாகப்



பறந்து வந்தது இன்றைக்கும் நன்றாகப் பறக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு இந்த ஆண்டுகளில் பறக்க ஆரம்பித்த தல்ல இந்த வல்லூறுகள். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பறந்து கொண்டிருந்த இந்த வல்லூறுகள் இன்றைக்கும் வந்திருக்கின்றன. இதை நானா சொல்கிறேன், இதை அன்றைக்கே சொன்னார்கள். அதை ஆசியாவின்

(பிற்பகல் 1-40)

ஜோதி பண்டித நேரு அவர்கள் சொன்னார். இப்படிப்பட்டவர்களையெல்லாம் நான் தூக்கில் போடுவேன் என்றும் சொன்னார். இவர்களைத் தூக்கில் போடுவேன் என்று சொல்லும்போது, அவர் எந்த அளவுக்கு வேதனைப்பட்டு இப்படிப்பட்டவர்களை ஒழிக்க வேண்டும், அல்லது தூக்கில் போட வேண்டும் என்று விரும்பினார் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அவரின் உணர்வுகளை நாம் மதிக்கிறோம். அப்படிச் சொன்னபடி அவர்களைத் தூக்கில் போடாததற்குக் காரணம் சூழ்நிலையும், ஜனநாயக முறைகளுமாகும். ஆக, பண்டித நேருவாலேயே செய்ய முடியவில்லை என்றால், இந்தச் சாதாரண வருவாய்த் துறை அமைச்சரால் எப்படி முடியும் என்று எதிர் பார்க்கிறார்கள் என்றுதான் எனக்குப் புரியவில்லை. (சிரிப்பு)

எனவேதான் இத்தகைய முயற்சிகளில் அனைவரின் ஒத்துழைப்பையும் நாங்கள் நாடுகிறோம். யார் யாருக்கு எங்கெங்கே வாய்ப்பிருக்கிறதோ அவர் களெல்லாம் சமுதாயத்தில் தவறு செய்கிறார்கள். கண்ட்ராக்ட்டர்களை மட்டும் நான் சொல்லவில்லை. கொள்ளையடிப்பவர்கள் யாரானாலும் சரி, எங்கே யானாலும் சரி அவர்களெல்லாம் தவறு செய்கிறவர்கள்தான். இத்தகைய தவறுகளைத் தடுப்பதற்குத்தான் நான் அனைவரின் ஒத்துழைப்பையும் உதவியையும் நாடி வந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நியாய விலைக் கடைகளைப் பொறுத்த வரையில், அங்கே தேவைப்படும் பொருள்களை அதிகமான அளவுக்கு சப்ளை செய்யவும், அதைப்போலவே அவைகளின் மூலம் தேவைப்படும் பொருள்களை விற்பனை செய்யவும் என்னென்ன நடவடிக்கைகள் உண்டோ அவ்வளவு நடவடிக்கை களையும் இந்த அரசு எடுப்பதற்குத் தயாராக இருக்கிறது.

நான் ஏற்கெனவே சொன்ன கருத்துக்களில், மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுக்குத் தேவையான பதில் இருக்கிறது. தமிழ் நாட்டிற்கு இன்னும் அதிகமான புஞ்சை தானியம் தேவை என்று கூறினார். அதை நான் மனதார ஒப்புக்கொள்ளுகிறேன். தமிழ் நாட்டிற்கு இன்னும் அதிகமான அளவில் புஞ்சை தானியத்தைப் பெறுவதற்கு இந்த அரசு

அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறது. ஒரு மரக்கால் நெல்
என்ன விலையோ அதைவிட நான்கு அல்லது ஐந்து மடங்கு அதிகமான
விலைக்கு 'கேப்பை' விற்கிறது. நெல்லை எத்தனை பேர் சாப்பிடு
கிறார்களோ அதைப்போன்று பத்து மடங்கு மக்கள் கேப்பை சாப்பிடு
கிறார்கள். அரிசி சாப்பிட்டவர்களுக்கு 4 மணிக்கு ஒரு முறை பசி எடுத்தால்,
கேப்பை சாப்பிடுகிறவர்களுக்கு 6 மணிக்கு ஒருமுறை தான் பசி எடுக்கும்.
இதை அரசு நன்கு உணர்ந்திருக்கிறது. இன்றைக்கு இங்கே வருவதற்கு
முன்னால்கூட சட்டமன்றப் பேரவை கூடுவதற்கு முன்னால் தமிழகத்தில்
மட்டுமல்லாமல் வேறு எந்தெந்த மாநிலங்களிலெல்லாம் புஞ்சைத் தானியங்கள்
கிடைக்கும் என்று ஆராய்ந்து பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்
டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் புஞ்சை
தானியங்கள் விளைச்சல் இங்கே மட்டும்தான் குறைந்திருக்கிறது என்பதல்ல.
எல்லா மாநிலங்களிலும் இதே நிலைமைதான் இருக்கிறது.

அடுத்து, "ரிக்ஸ்" பற்றிக் குறிப்பிட்டார்கள். தமிழ் நாட்டில் உள்ள
அனைத்து ரிக்ஸையும் நாம் உபயோகித்துக் கொண்டிருக்கிறோம். நமது
மாநிலத்தில் மட்டுமல்ல, வேறுபல மாநிலங்களிலும் மற்றும் தனியாரிடம் உள்ள
ரிக்ஸையும் வாடகைக்கு எடுக்க அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்
பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. மத்திய அரசுக்கும் 50 ரிக்ஸ் கேட்டு பல
தினங்களுக்கு முன்பே கடிதம் எழுதியிருக்கிறோம். அண்மையில் மேலும்
100 ரிக்ஸ் கேட்டு கடிதம் எழுதியிருக்கிறோம். உங்களிடமிருந்து கிடைத்தாலும்
சரி, அல்லது மற்ற மாநிலங்களிலிருந்து பெற்றுத் தந்தாலும் சரி என்று
சொல்லியிருக்கிறோம். இந்தத் தகவல்களையெல்லாம் நான் இங்கே சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அருணாசலம் அவர்கள் பேசும்போது, அரிசி
போதவில்லை என்றார்கள். அதற்கு நான் ஏற்கெனவே விளக்கம் சொல்லி
விட்டேன். அதோடு வசதி படைத்தவர்களை நாம் பயன்படுத்திக்கொள்ள
வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். அதை நான் அப்படியே ஏற்றுக்
கொள்கிறேன். இந்த அவையின் மூலமாக வெளியே உள்ள வசதி படைத்தவர்
களுக்கு ஒரு வேண்டுகோள் விட ஆசைப்படுகிறேன். "இந்த நாட்டின் ஏழை
எளிய மக்கள் பஞ்சத்தால் அவதிப்படுகிறபோது, நீங்கள் தனிப்பட்ட
முறையில் அவர்களுக்கு எந்தவிதமான உதவி செய்தாலும் இந்தச் சமுதாயம்
அதை வரவேற்கும்" என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





அதுமட்டுமல்லாமல், இப்படிப்பட்ட பஞ்ச காலங்களில் அதிகமான திருட்டு நடக்கும் என்றும் குறிப்பிட்டார்கள். திருட்டு என்பது நல்ல காலத்திலும் நடைபெறும். அதைச் செய்பவர்கள் எப்போதும் திருடியே பிழைப்பவர்கள். ஆனால் பட்டினியால் கஷ்டப்படுகிறபோது, எங்காவது கிடைத்ததை எடுத்துப்போய் திருடிச் சாப்பிடுவோம் என்று சிலர் அதில் ஈடுபடுவார்கள். அதற்கெல்லாம் எந்தெந்த வகையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அந்தந்த வகைகளிலெல்லாம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் முதலில் சொன்னபடி, அந்த அளவுக்கு அரிசியைக் கொடுத்தால்கூட, நமக்குப் போதாது. நவம்பர் மாத இறுதிவரை மத்திய அரசு நமக்குக் கொடுக்க வேண்டிய அரிசி மூன்று லட்சம் டன்களாகும். இப்போது ஆறு லட்சம் டன் அரிசி கேட்டு எழுதியிருக்கிறோம். அதோடு நிற்காது. அநேகமாக 10, 15 லட்சம் டன் வரைக்கும் நமது தேவை அதிகரிக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே கோதுமை மாதத்திற்கு 3,000 டன்தான் நமக்கு மத்திய அரசு தருகிறது. அதை மாதத்திற்கு 10,000 டன் என்ற அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று எழுதியிருக்கிறோம். இப்படி அரிசியானாலும் சரி, கோதுமையானாலும் சரி, ரிக்ஸ் ஆனாலும் சரி. முன்பே எழுதியிருக்கிறோம். இதிலெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் என்ன செய்தோம் என்பதை விளம்பரப்படுத்த வில்லையே தவிர, நாங்கள் பஞ்ச நிலைமையைப் பற்றி எண்ணிப் பார்க்காமல் சும்மா இருந்துவிட்டோம் என்று நினைப்பது தவறாகும். இவைகளுக்காகக் கடிதம் எழுதியதோடு மட்டும் நாங்கள் நின்றுவிடவில்லை. கூட்டுறவு இயக்கங்கள், மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவை, ஆந்திரம், பஞ்சாப் போன்ற மாநிலங்களுக்குச் சென்று அங்கேயிருந்து அரிசி வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதையெல்லாம்கூட நாங்கள் இதுவரை விளம்பரப்படுத்தவில்லை. அப்படியே அரிசி வாங்கிக்கொண்டு வரும்போதும், சில சங்கடங்கள் உண்டாகின்றன. நமக்கு வேண்டிய அளவுக்கு ரெயில்வே வேகன்கள் கிடைப்பதில்லை. லாரியில் அரிசியைக் கொண்டுவருவது என்றால், அதிகமான செலவு ஏற்படுகிறது. செலவு அதிகமானாலும் பரவாயில்லை வாங்கிக் கொண்டு வந்துவிடுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். இப்படிப் பல சங்கடங்கள் இருக்கின்றன. நான் முதலில் சொன்னமாதிரி வல்லூறுகளை வில்லை வைத்து ஒரு ஆளாக நாங்கள் அடித்தால், வல்லூறுகள் பறந்துதான் போய்விடும். வல்லூறுகளைப் பல பக்கங்களிலிருந்து நாம் அடிக்க வேண்டும் என்றுதான் உறுப்பினர்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் நான் வேண்டுகிறேன்.

குடிதண்ணீர் பற்றிக் குறிப்பிட்டார்கள். சில கிராமங்களில் குடிதண்ணீரே இருக்காது. என்ன செய்வது ? ஒரு தெருவில் தண்ணீர் இல்லை என்று கிணறு வெட்டினாலும் தண்ணீர் கிடைக்காத நிலையில் என்ன செய்வது ? இதற்கெல்லாம் அரசு தக்க முடிவுகளை எடுத்து அவற்றை நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கிறது. ஊரைவிட்டு ஊருக்குத் தண்ணீரைக் கொண்டு போக லாரிகளை உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது. மக்கள் கஷ்டப் படும்போது, குடம் குடமாகக் கொண்டு வருவதற்காவது ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குச் சொல்லியிருக்கிறோம். கம்பி போட்டு நான்கு குடம் தூக்கிக் கொண்டு போனாலும், பரவாயில்லை என்று சொல்லியிருக்கிறோம். இவைகளுக்கெல்லாம் தேசிய வேலை வாய்ப்புத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் மூலமாக எந்த அளவுக்கு வேகமாக நடவடிக்கை எடுக்க முடியுமோ அதைச் செய்ய வேண்டும் என்று சொல்லி யிருக்கிறோம்.

நான் முதலில் மத்திய அரசிடம் எவ்வளவு அரிசி கேட்டிருக்கிறோம், இன்னும் எவ்வளவு கேட்க இருக்கிறோம் என்பதைப்பற்றிச் சொன்னேன்.

(பிற்பகல் 1-50)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

அரிசி வருகிறதா இல்லையா என்று காத்துக் கொண்டிருக்கப் போவதில்லை. மத்திய அரசினுடைய நிபுணர் குழுவை வரவழைக்கவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் வராததால், எந்த வேலையும் தடைபடவில்லை. அவர்கள் வருவதற்கு முன்னாலேயே பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே முறையிலே இன்றைக்கு மத்திய அரசிடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். வருமென்ற நம்பிக்கை இருக்கிறது. அவர்கள் வருவதற்கு முன்னாலேயே அதற்கு வேண்டிய நிதியை அரசு ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆடு, மாடுகளையெல்லாம் மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லுகிறார்கள். இல்லாதவர்கள் அப்படிப் போகிறார்கள். அவர்களால் அங்கு இருக்க முடியவில்லை. அங்கே தண்ணீர் இல்லை. தண்ணீர் இருந்தாலும் வேலை இல்லை. அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் வேலை கொடுத்து, கூலி கொடுத்து வேலை வாங்க வேண்டுமென்று இந்த அரசு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதைச் செய்தாலும் காண்ட்ராக்ட் மூலம் செய்யவில்லை. அங்கேயுள்ள அரசு அதிகாரிகளோ, மற்றவர்களோ





செய்வார்கள். இந்த வேலைகளையெல்லாம் காண்ட்ராக்ட் மூலம் செய்யப் போவதில்லை என்ற செய்தியை இன்றைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இருக்கின்ற வேலையை இன்னும் தீவிரப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் பல பகுதிகளாகப் பிரித்து, ஏரியாவாகப் பிரித்து, அந்தந்த ஏரியாவில் எவ்வளவு அதிகமான வேலை நடக்கின்றதோ அதற்கேற்றவாறு வேலையைப் பிரித்துக்கொண்டு அங்கே இருக்கின்ற கோட்டாட்சித் தலைவர், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி ஆகியவர்கள் பார்வையிடுவார்கள். அவர்கள் பார்வையிடுகிறபோது, அவர்கள் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்கிறபோது, மற்ற இலாக்கா அலுவலர்கள் அவர்களுடன் ஒத்துழைப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இடத்திலேதான் மாண்புமிகு உறுப்பினர்களுடைய உதவி அதிகமாகத் தேவைப்படுகிறது. கோட்ட வளர்ச்சி அலுவலருக்கு உதவியாக இருக்க மக்கள் குழு அமைக்கப்படும். மெஜாரிட்டி, மைனாரிட்டி பார்க்கக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் கூறினார்கள். மைனாரிட்டியை நாங்கள் பார்க்க வில்லை. நாம் எல்லோரும் ஒத்துப்போகிறோம். இப்படிப்பட்ட பணிகளைச் செய்யும்போது, மெஜாரிட்டி, மைனாரிட்டி பார்க்கக்கூடிய நிலைமை நிச்சயமாக ஏற்படாது. அந்த அளவிற்கு, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் களானாலும், தங்களுடைய எண்ணத்தைத் தாழ்த்திக் கொள்ளவில்லை என்பதைப் பெருமையாக எண்ணிக்கொள்கிறேன். இந்த வேலையைச் செய்யும்போது மெஜாரிட்டி, மைனாரிட்டி பார்க்கப் போவதில்லை. இது தேவையில்லை. அந்தப் பிரச்சினையே இல்லை. யாரை வேண்டுமானாலும், எப்படிப்பட்டவரை வேண்டுமானாலும் போடலாம். கட்சி முக்கியமில்லை. மக்களுடைய பணிதான் முக்கியம் என்பதை ஒத்துக்கொள்ள நாம் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மாவட்ட ஆட்சி நிலையிலே கமிட்டிகளைப் போட்டு, அந்தக் கமிட்டிகளிலே பொது மக்களுடைய பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், எந்தக் கட்சியையும் சேராதவர்கள், பொதுத் தொண்டு செய்கிறவர்கள் ஆகியவர்கள் பங்கு கொண்டு தீவிரமாகப் பணியைச் செய்ய வேண்டுமென்று எண்ணுகின்றபோதுதான், மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பு தேவை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சிப் பணிகளை இந்த அரசு தீவிரப்படுத்தியிருக்கும்போது, முதல் தொகையாக இப்போது கொடுக்கப்பட்டிருந்தாலும், தொடர்ந்து பணம் கொடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது, அரிசி கொடுக்கத் தயாராக இருக்கிறது. அதே நேரத்தில் ஆங்காங்கே இருக்கின்ற மக்கள் குழு உறுப்பினர்கள் எந்தெந்த வேலைகளைச் செய்ய வேண்டுமோ அந்த

வேலைகளைச் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். என்றாலும் அது மட்டும் போதாது என்று கருதி, இந்தப் பிரச்சினையை தமிழக அரசு மட்டும் சமாளிக்க முடியாது என்ற எண்ணத்தின் காரணமாகத்தான் எல்லாக் கட்சிகளுடைய உறுப்பினர்களின் கருத்தையும் ஏற்று, என்னோடு சேர்த்து 76 பேர் சட்டமன்றப் பேரவையிலே பேசியிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்தையெல்லாம் கேட்டிருக்கிறோம். ஒரே கருத்தைச் சொன்னாலும் சொல்லட்டும், பத்து நிமிடம் பேசுகிறபோது ஏதாவது புது கருத்து வராதா என்று கருதி அங்கே கேட்டுவிட்டு இங்கே வந்து பேசுகிறேன். தமிழக அரசு மட்டுமல்ல, தமிழக மக்கள் மட்டுமல்ல, இந்தியப் பேரரசும் இதற்கு உறுதுணையாக, பெருந்துணையாக நிற்க வேண்டும் என்பதற்காகத்தான் இங்கே பேசுகிறோம். மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதிகமான நிதியை—அதிகமான நிதி அல்ல, தேவையான நிதியைக் கேட்க இருக்கிறோம் என்று சொல்லி மாண்புமிகு உறுப்பினர்களும் இதற்கு ஒத்துழைப்பு தர வேண்டும், அதுவும் அதிகமான ஒத்துழைப்பு தர வேண்டும் என்று கேட்டு, இது மக்களுடைய பிரச்சினை, நாட்டின் ஏழையெளியவர்களுடைய பிரச்சினை, ஆகவே இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். வறட்சிப் பகுதிகளை நிர்ணயிக்கின்ற முறையைப் பொறுத்தவரையில், முழுமையாகச் செய்வோம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஒரு கிராமத்திலேயே கூட ஒரு பகுதி வறட்சி என்றும், இன்னொரு பகுதியில் விளைச்சல் இருக்கிறது என்ற அளவிலும் நடவடிக்கை எடுக்க இருப்பதாகச் சொன்னார்கள். சங்கடம் அதுதான். வறட்சிப் பகுதி என்று அறிவிக்கும்போது, ரெவின்யூ டிவிஷனாக எடுத்துக் கொள்ளுவதுதான் முறையாக இருக்கும். பஞ்சாயத்து என்ற அளவிலே பார்க்கும்போது, கிராமங்கள் என்று பார்க்கும்போது, சில கிராமங்களில் விளைந்திருக்கலாம், அங்கே இருக்கின்ற நிலத்தடி தண்ணீர், மழை காரணமாக விளைந்திருக்கலாம். ஆனால் வறட்சிப் பாதிப்பு அந்தக் கிராமம் முழுவதும் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. தொடர்ந்து நிலங்களில் விளைந்திருக்கின்ற கணக்கை எடுக்கும்போது, ரெவின்யூ அதிகாரிகள் அதையே பெரும் பிரச்சினையாக ஆக்கி வறட்சிப் பணிகள் சரியாக நடைபெற முடியாத நிலைகள் வந்துவிடும். ஆகவே யூனிட் என்று வைக்கும்போது, பஞ்சாயத்து, தாலுக்கா அளவிலே கணக்கிட வேண்டும். கிராம அளவிலே வைக்காமல் இருக்க வேண்டும்.





மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அதே நேரத்தில் யாரும் பசியால் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாநிலத்தினுடைய வறட்சி நிலை குறித்து தெளிவாக மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பி அதற்காக எந்த அளவிற்கு நிதி கோரப்பட்டிருக்கிறது, அதனுடைய விவரம் என்ன, அப்படி அனுப்பவில்லையென்றால் இனிமேல் அரசு இதுகுறித்து நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டிருந்தேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அது குறித்து ஒன்றுமே குறிப்பிடவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான முதலில் சொல்லுகிற போதே சொன்னேன். மத்தியப் பேரசிடமிருந்து உதவிகள் வராவிட்டாலும் வேலைகள் நடந்திருக்கின்றன என்று தெரிவித்தேன். மத்திய அரசினுடைய உதவிகளை நாடிக் கொண்டிருக்கிறோம். அரிசிக்கு, கோதுமைக்கு மத்திய அரசின் உதவியை நாடியிருக்கிறோம். நிதிக்கு மத்திய அரசின் உதவியை நாடியிருக்கிறோம். அதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பு தேவையென்று சொல்லிவிட்டேன். வரியைத் தள்ளிவிடுகிறபோது யாருடைய நிலத்திலே விளைந்தது, யாருடைய நிலத்திலே விளையவில்லை என்று பார்க்கிறோம். மற்ற வறட்சிப் பணிகளைப் பார்க்கிறபோது, வீடு வீடாகப் பார்க்க முடியாது. ஒரு பஞ்சாயத்து என்றால் பூராவையும் எடுத்துக் கொள்கிறோம். வறட்சிப் பணியை நிறைவேற்ற ரெவின்யூ வில்லேஜ் என்று கூட எடுக்கவில்லை. ஒரு பஞ்சாயத்து என்று எடுக்கிறோம். ஒரு பஞ்சாயத்தில் மூன்று கிராமங்கள் இருக்கின்றன.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 2-00)

## 7. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

205. Third Annual Report of the Tamil Nadu Goods Transport Corporation Limited for the year 1978. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

206. Fourth Annual Report of the Thanthai Periyar Transport Corporation Limited for the year 1979. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

207. Fifth Annual Report of the Kattabomman Transport Corporation Limited for the year 1979. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

208. Seventh Annual Report of the Anna Transport Corporation Limited for the year 1979. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

209. Fifth Annual Report of the Anna Engineering Corporation Limited for the year 1979. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).].

### *B. Reports, Notifications and Other Papers.*

* 47. The Statement on the Adverse Seasonal conditions prevailing in Tamil Nadu. (Tamil).

& 48. The Tamil Nadu Revenue Recovery (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 5 of 1981), as passed by the Assembly.

& 49. The Registration (Tamil Nadu Amendment) Bill, 1981 (L.A. Bill No. 10 of 1981), as passed by the Assembly.

& 50. The Tamil Nadu Cattle Disease (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 14 of 1981), as passed by the Assembly.

& 51. The Tamil Nadu State Housing Board (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 15 of 1981), as passed by the Assembly.

---

* Laid on the table of the House on 2nd March 1981.
& Circulated to all M.L.Cs. on 2nd March 1981.



## இணைப்பு I.

(2 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா என் 111-க்கான அடிக் குறிப்பைக் காண்க.)

1980 ஆம் ஆண்டில் மதுரை மாவட்டம், வத்தலக்குண்டில் ஏற்பட்ட வெடி விபத்தில் 42 பேர் இறந்தனர். அவ்விதம் இறந்தவர்களில் 26 பேர் குடும்பத் தலைவர்கள். 11 பேர் வயது வந்தவர்கள். 5 பேர் குழந்தைகள். இறந்தவர்களுடைய உழைப்பால் வாழ்ந்து கொண்டிருந்த குடும்பங்களின் எண்ணிக்கை 26. ஒரு குடும்பத்தில் தகப்பனார், தாய் மற்றும் இரு குழந்தைகள் இறந்துவிட்டனர். ஆனால் இக்குடும்பத்தில் இரு குழந்தைகள் உயிர் தப்பியுள்ளனர். குடும்பத் தலைவரை இழந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 5,000 வீதமும், வயது வந்தோரை இழந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 2,000 வீதமும், குழந்தைகளை இழந்த குடும்பங்களுக்கு ரூ. 1,000 வீதமும், பெற்றோரை இழந்த ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ. 5,000 வீதமும் முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்பட்டது. அவ்விதம் வழங்கப்பட்ட மொத்த உதவித் தொகை ரூ. 1,60,000. இது தவிர பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து இறந்தவர்களின் குடும்பத்திற்கு ரூ. 1,000 விதம் ரூ. 42,000 உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. அவ்விதம் இரு நிதியிலிருந்தும் வழங்கப்பட்ட நிதியுதவியின் விவரம் பின்வருமாறு :—

(அ) முதல்வரின் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்ட தொகை:—

| வரிசை எண். | இறந்தவர்கள் விவரம். | எண்ணிக்கை. | ஒவ்வொருவருக்கும் வழங்கப் பட்ட நிதியுதவி. | மொத்தம் வழங்கப் பட்ட தொகை. |
|---|---|---|---|---|
| 1. | குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்கள். | 25 | ரூ. 5,000 | ரூ. 1,25,000 |
| ௨. | வயது வந்தோரை இழந்த குடும்பங்கள். | 10 | ரூ. 2,000 | ரூ. 20,000 |
| ௩. | குழந்தைகளை இழந்தோர் குடும்பங்கள். | 3 | ரூ. 1,000 | ரூ. 3,000 |

| வரிசை எண். | இறந்தவர்கள் விவரம். | எண்ணிக்கை. | ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட நிதியுதவி. | மொத்தம் வழங்கப்பட்ட தொகை. |
|---|---|---|---|---|
| 4. | ஒரு குடும்பத்தில் தகப்பனார், தாய், குழந்தைகளான ஒரு சகோதரனையும், ஒரு சகோதரியையும் இழந்து உயிருடன் இருக்கும் இரு குழந்தைகள். | 2 | | |
| | பெற்றோரை இழந்ததற்கு | | ரூ. 5,000 | ரூ. 10,000 |
| | சகோதர சகோதரியை இழந்ததற்கு | | ரூ. 1,000 | ரூ. 2,000 |
| | | | மொத்தம் | ரூ 1,60,000 |

(ஆ) பிரதமர் தேசிய நல நிதியிலிருந்து வழங்கப்பட்ட தொகை :—

| | | | |
|---|---|---|---|
| இறந்தவர் ஒவ்வொருநபரின் குடும்பம் | 42 | ரூ. 1,000 | ரூ. 42, |
| | | ஆக மொத்தம் | ரூ. 2,02, |



## இணைப்பு II

[ 18 ஆம் பக்கத்தில் இனம் 5(1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

நடுநிலைப் பள்ளிகளில் உள்ள எட்டாம் வகுப்பை நீக்கி உயர்நிலைப் பள்ளிகளில் மட்டும் அவ்வகுப்பை வைத்துக் கொள்ளவேண்டும் என்று அரசு இறுதி முடிவு எதுவும் எடுக்கவில்லை. எட்டாம் வகுப்பை உயர்நிலைப் பள்ளிகளில் சேர்த்தால் பி.டி. ஆசிரியர்களைக் கொண்டு அவ்வகுப்பு மாணவர்களுக்குப் பயிற்றுவிக்க இயலுமாகையால் கல்வித்தரம் உயரும் என்ற அடிப்படையில் இதுகுறித்து பல்வேறு ஆசிரியர்களுடைய கருத்து அறியப்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட அனைவரையும் கலக்காமல் அரசு இது குறித்து இறுதி முடிவு எதையும் எடுக்காது. இதனால் இடைநிலை ஆசிரியர்கள் எவரும் பாதிக்கப்படும் பிரச்னைக்கு இடமில்லை.

## இணைப்பு I

[23 ஆம் பக்கத்தில் இனம் 5(2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

வேலூர் நகராட்சியின் தற்போதைய மக்கட் தொகை 1,60,000-க்கு ஒரு நபருக்கு குறைந்த பட்சம் 15 காலன் தண்ணீர் வீதம் 24,00,000 காலன் குடி நீர் தினசரி தேவைப்படுகிறது. இந் நகராட்சியின் பாலாறு நீரேற்று நிலையத்திலிருந்து சாதாரண காலங்களில் 24,00,000 காலன் தண்ணீர் கிடைக்கப் பெற்று குறைந்த பட்ச விநியோகம் தட்டுப்பாடின்றி செய்யப் பட்டு வந்தது. ஓட்டேரி நீர்த் தேக்கத்திலிருந்து நீர் ஊற்றுகள் அடைப் பட்டு விட்டதால் தண்ணீர் வரத்து நின்று விட்டது. எனவே கிடைக்கப் பெற்ற பாலாற்று நீரையே நகரின் மொத்தப் பகுதிக்கும் தினசரி, காலை, மாலை என்று இரண்டு வேளைகளுக்கும் தட்டுப்பாடின்றி விநியோகம் செய்து வரப்பட்டது. இவ்வருடம் கோடைக் கால பருவ மழையும் பொய்த்ததின் காரணமாக எதிர் பாராத அளவு பாலாற்றில் நீர் மட்டம் ஜூன், ஜூலை மாதங்களிலேயே குறைய ஆரம்பித்து, பற்றாக்குறை ஏற்பட்ட போதிலும் தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டதன் காரணமாக தொடர்ந்து நகரின் குறைந்த பட்ச விநியோகமான 24,00,000 காலனை கொடுத்துவர முடிந்தது. செப்டம்பர், அக்டோபர் மாதங்களின் மழைக் கால பருவம் பொய்த்ததின் காரணமாகக் கிடைக்கும் நீரின் அளவு 21,00,000 காலன்களாகக் குறைய ஆரம்பித்த சமயம், 22—9—1980 முதல் நகரின் வட பகுதிக்கு காலையில் குடி நீர் விநியோகம் என்றும், மாலையில் தென் பகுதிக்கு குடி நீர் விநியோகம் என்றும் மாற்றி அமைத்து ஒரு வேளை முறையில் செயல் படுத்தப் பட்டு வருகின்றது. இவைகளைத் தவிர நகரின் எல்லைப்புற பகுதிகளின் தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்ய 28—10—1980 முதல் நகராட்சி மற்றும் தனியார் லாரியின் மூலம் நீர் கொண்டு சென்று விநியோகித்தும் வரப்படுகிறது. தொடர்ந்து பாலாற்றின் நீர் மட்டம் குறைந்து தண்ணீரின் வரத்து நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருவதால், நகரின் குறைந்த பட்ச அளவு குடி நீர் விநியோகம் பராமரிக்க பாலாற்றின் 6 மற்றும் 7-ம் கிணறுகளில் உள் கிணறுகள் அமைத்தும், சத்துவாச்சாரி கூட்டு குடிநீர் திட்டத்திலிருந்து கூடுதலாகக் கிடைக்க கூடுதல் பம்பு செட் பொருத்தியும், ஓட்டேரியில் பழைய திறந்த வெளி கிணற்றில் மோட்டார்களை பொருத்தி, அஸ்பெஸ்டாஸ் ரப்பர் (Canvas Rubber House) குழாய் மற்றும் 6 அங்குலம் இரும்பு குழாய்களைப் புதியதாக வாங்கி இணைத்து கூடுதல் அளவு தண்ணீர் பெற்றும்,





மேல் மணவூரில் நடைபெற்று வரும் குடி நீர் தலைமைப் பீட பணிகளில் விரைய மாகிய தண்ணீரை (Waste water while driving radial filter arms in collector well) தற்காலிக முறையில் நீரேற்று குழாய்கள் மூலம் கொண்டு வந்தும் கீழ்க்கண்ட அளவுகள் படி பெற்று பராமரிக்கப்பட்டு வருகின்றது :—

| | | |
|---|---|---|
| 1. நகராட்சியின் பாலாறு நீரேற்று நிலையத்திலிருந்து | 12,00,000 | காலன் |
| 2. நகராட்சியின் ஓட்டேரியிலிருந்து (25.11.1980 முதல) | 1,25,000 | ,, |
| 3. சத்துவாச்சாரி கூட்டு குடி நீர் திட்டத்திலிருந்து (15.4.1980) முதல் குடி நீா தொட்டி மூலம் | 2,25,000 | ,, |
| 4. மேல் மணவூர் தற்காலிக ஏற்பாட்டின் மூலம (12.12.1980 முதல) | 85,000 | ,, |
| மொத்த அளவு நீர் | 16,35,000 | ,, |

தற்பொழுது மேற்படி பெறப்படும் அளவு குடி நீர், குளிர் காலம் ஆனதால் ஓரளவு தன்னிறைவுடன் இருந்து வருகின்றது. ஆனால், வட ஆற்காடு மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக வேலூர் நகராட்சி குடி நீர் தட்டுப்பாட்டை நீக்கவும் பாலாறு நீரேற்று நிலையத்தை மேம்பாடு செய்யவும், நகராட்சியில் 75 குழாய்க் கிணறுகள் அமைக்கவும் ரூ. 20 இலட்சம், பாதி மான்யம்—பாதி கடன் முறையில் அரசு வழங்கியது. தமிழ் நாடு குடி நீர் வடிகால் வாரியம் குடி நீர்த் தட்டுப்பாடுகளை நிவர்த்திக்க, உடனடி ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளது. இந்நகராட்சியும் தொடர்ந்து, பாதுகாக்கப்பட்ட குடி நீர்த் தட்டுப்பாடுகள் எனப் பொது மக்கள் அறிவிக்கும் பகுதிகளை உடனுக்குடன் நேர் ஆய்வு செய்து நகராட்சி லாரி ஒன்றுடன் கூடுதலாக 3 தனியார் லாரிகளை அமர்த்தி தட்டுப் பாடு உள்ள பகுதிகளின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது. பருவ மழை இல்லாத காரணத்தால், இனி வரும் காலம் கோடை காலமாக இருப்பதனையும் கருத்தில் கொண்டு, கூடுதலாக மேலும் 4 இரும்புத் தொட்டிகளை திருவண்ணாமலை டான்ஸி மூலம் பெறவும், கூடுதலாக நகராட்சிக்கு குடி நீர் விநியோகத்திற்கு என ஒரு லாரி வழங்கவும், தமிழ் நாடு குடி நீர் வடிகால் வாரியம் மூலம் செயல் பட்டு வரும் மேல் மணவூர் தலைமைப் பீட வேலூர் உடனடி குடி நீர் திட்டத்தினை உடன் செயல் படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு IV

(25 ஆம் பக்கத்தில் இனம் 6-க்கான அடிக் குறிப்பைக் காண்க.)

தமிழ்நாட்டில் பருவமழை தவறியதன் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சி நிலை.

1980-81 ஆம் ஆண்டில் தென்மேற்கு, வடகிழக்குப் பருவ மழை பல இடங்களில் குறைவாகவே பெய்துள்ளது. வட ஆற்காடு, புதுக்கோட்டை, தருமபுரி, தென் ஆற்காடு, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர், மதுரை, செங்கல்பட்டு, பெரியார் மாவட்டங்கள் முழுமையாகவோ அல்லது பகுதிகளிலோ மழைக் குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளன. கிராமங்களில் குடி நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வேலை வாய்ப்புகள் குறைந்துள்ளன.

2. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசுக்கு நிலைமையை விளக்கி தங்கள் அறிக்கைகளை அனுப்பி, தேவையான நிவாரணப் பணிகளுக்கு நிதி அனுமதியைக் கோரியிருந்தார்கள். அரசும் அவற்றை உடனடியாகப் பரிசீலித்து ஆணைகளை அவ்வப்பொழுது வெளியிட்டுள்ளது. முக்கியமாக குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தீர்க்கும் பணி தலையாயப் பணியாகக் கருதப்பட்டது. புதிய ஆழ் கிணறுகள் தோண்டவும், ஏற்கனவே உள்ள கிணறுகளை ஆழப்படுத்தவும், நகராட்சி மன்றப் பகுதிகளில் தாற்காலிகத் திட்டங்களைப் போட்டு குடிநீர் வசதியைக் கூடுதலாக்கவும் முதற்கட்டமாக பல்வேறு மாவட்டங்களுக்கு ரூபாய் 439.77 இலட்சத்திற்கு அரசு பின்வருமாறு நிதி வழங்கியுள்ளது :—

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. வடஆற்காடு | .... | 115.00 |
| 2. இராமநாதபுரம் | .... | 80.00 |
| 3. தருமபுரி | .... | 30.00 |
| 4. திருச்சிராப்பள்ளி | .... | 50.00 |
| 5. தென் ஆற்காடு | .... | 30.00 |
| 6. தஞ்சாவூர் | .... | 16.23 |
| 7. புதுக்கோட்டை | .... | 63.54 |
| 8. சேலம் | .... | 50.00 |
| 9. மதுரை | .... | 35.00 |
| பொத்தம் | | 439.77 |



3. குடிநீர்ப் பணிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், விவசாயப் பொறியியல் துறை, பொதுப்பணித் துறை, மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மற்றும் ஏற்கனவே நிலத்தடி நீர்ப்பிரிவு அமைத்துள்ள ஆய்வு ஆழ்துளைக் கிணறுகளையும் குடிநீர் விநியோகத்திற்குப் பயன்படும் வகையில் குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைப்பதற்கும், அவற்றில் கைப்பம்புகள் அல்லது தகுதியான இடங்களில் மோட்டார் பம்புகள் அமைப்பதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

4. **வேலை வாய்ப்புத் திட்டங்கள்.**—வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ள வேலைகளை விரைவுபடுத்தவும், புதிய பணிகளை மேற்கொள்ளவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் அதிகப்படியாகத் தேவையான அரிசியை அவ்வப்போது ஒதுக்குவதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

5. மாவட்டங்கள் பற்றிய விவரமான தகவல்கள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளன :—

(அ) **வட ஆற்காடு மாவட்டம்.**—வட ஆற்காடு மாவட்டத்தில் 1980ஆம் ஆண்டு பெய்த மழையளவு சராசரி மழையளவைவிட பாதிக்கும் குறைவாக இருந்தது. காவேரிப்பாக்கம் ஏரி உட்பட 2,970 நீர்ப்பாசன நிலைகளும் வறண்டுவிட்டன. எல்லா வட்டங்களிலும், நிலக்கடலை, சோளப் பயிர்கள் காய்ந்துவிட்டன. அரக்கோணம், வந்தவாசி, செய்யார், திருவண்ணாமலை வட்டங்களில் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. விவசாய வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் வறட்சி நிலை பற்றி மாவட்ட ஆட்சியாளர், குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் ஆகியோருடன் வருவாய் நிர்வாக ஆணையர் கலந்து ஆலோசித்து அரசுக்கு அனுப்பிய பரிந்துரைகளை அரசு ஆய்வு செய்து குடிநீர் வசதிக்காக 5—1—1981 அன்று கீழ்க்கண்ட பணிகளை நிறைவேற்ற ஆணையிட்டுள்ளது :—

(அ) நகர மற்றும் ஊர்ப்புறங்களில் 700 குழாய்க் கிணறுகளை ரூ. 105 இலட்சம் செலவில் அமைக்க ;

(ஆ) பாலாறு தண்ணீர் விநியோக திட்ட மேம்பாட்டு வேலைக்காக ரூ. 10 இலட்சம் செலவிட ; இத்துடன்

(இ) தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் ஏற்கனவே நடைபெற்று வரும் வேலைகளை முடிக்கவும், புதிய வேலைகளை மேற்கொள்ளவும் 7,000 டன் அரிசியை ஒதுக்கியும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிர்களின் விளைச்சல் 37 பைசாவுக்கும் குறைவாக (50 சதவிதம்) விளைந்த நிலங்களுக்கு நிலவரி, உள்ளூர் வரி, தண்ணீர்த் தீர்வை, தனித் தண்ணீர்த் தீர்வை, பணப் பயிர் தீர்வை தள்ளுபடி செய்தும், ஒருவருக்குச் சொந்தமான நிலங்களில் பாதிக்கு மேல் (50 சதவிதம்) நிலவரித் தள்ளுபடி செய்யத் தகுதி உள்ளதாக இருந்தால் அவர்களுக்கு அரசுக் கடன், நிலவரி, உள்ளூர் வரி, நிலுவைகள் வசூலை அடுத்த ஆண்டிற்கு ஒத்திவைத்தும் 26—12—1980 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) தென்ஆற்காடு மாவட்டம்.—இம்மாவட்டத்தில் 1980 ஆம் ஆண்டில் பருவமழை சாதாரணமாக பெய்ய வேண்டிய அளவுக்கு 59 சதவிதமே பெய்துள்ளது. காவிரி-மேட்டூர் நீர்ப்பாசனப் பகுதிகளில் நிலவரம் திருப்திகரமாக உள்ளது. விருத்தாச்சலம் அணைக்கட்டு, மேமாத்தூர் அணைக்கட்டு, எல்லிஸ் அணைக்கட்டு, பேலான்துறை அணைக்கட்டு, திருக்கோயிலூர் அணைக்கட்டு, சொர்னாவூர் அணைக்கட்டு, மணிமுத்தா நதி, கோமுகி நதி, வீடூர் திட்டங்களிலும் போதுமான அளவு தண்ணீர் வரத்து இல்லாததால் விருத்தாச்சலம், கள்ளக்குறிச்சி, திருக்கோயிலூர், உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் வட்டங்களில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 2,093 மானாவாரி குளங்களும் தண்ணீர் இல்லாமல் வறண்டு விட்டன. ஆயினும் இம்மாவட்டத்தில் சுமார் 91,704 பாசனக் கிணறுகள் உள்ளதால் அவற்றைப் பயன்படுத்தி ஓரளவுக்குப் பாசன ஆயக்கட்டுகளிலும், புன்செய் நிலங்களிலும் விவசாயம் செய்யப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் மொத்தம் உள்ள 2,285 கிராமங்களில் 744 கிராமங்கள் பருவ மழை தவறியதால் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட 744 கிராமங்களிலும், விவசாயத்துக்குத் தகுதியுள்ள 1,29,745 ஏக்கரில் 66,430 ஏக்கர் தரிசாக விடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட இடங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளது.

நிவாரணப் பணிகள்.—பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிதண்ணீர் வசதி செய்வதற்காக தற்போது ரூ. 30 இலட்சம் செலவில் புதிய குழாய்க் கிணறுகளை அமைக்க 3—2—1981 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரி தள்ளுபடி செய்வதற்கும், அரசுக்குச் சேரவேண்டிய பாக்கி வசூலை ஒத்திப்போடவும், வடஆற்காடு மாவட்டத்திற்கு ஆணையிட்டதைப் போலவே இம்மாவட்டத்திற்கும் ஆணை, 3—2—1981-ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.



வேலை வாய்ப்புத் திட்டங்கள்.—தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழும், ஏற்கனவே எடுக்கப்பட்ட வேலைகளைத் துரிதப்படுத்துவதோடு பாதிக்கப்பட்ட பகுதிகளில் புதிய நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் ஆணையிடப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திற்கு தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 500 டன் அரிசி கூடுதலாக விடுவிக்கப்பட்டுள்ளது.

(இ) இராமநாதபுரம் மாவட்டம்.—இராமநாதபுரம் மாவட்டத்தில் பருவ மழை சென்ற ஆண்டை விட 30 சதவிதம் குறைவாகப் பெய்துள்ளது. இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டங்களில் சில ஏரி, குளங்கள் தவிர மற்றப் பகுதிகளில் பெரும்பாலும் குளங்களுக்கு தண்ணீர் வரவில்லை. மொத்தம் 7,332 குளங்களில் 3,603 குளங்களில் தண்ணீரே வரவில்லை. மீதமுள்ள குளங்களிலும் 216 குளங்கள் தவிர மற்ற குளங்களில் விவசாயத்துக்குப் போதுமான தண்ணீர் வரவில்லை. இதனால் விவசாய வேலைகள் மிகவும் பாதிக்கப்பட்டு பயிர்கள் காய்ந்துவிட்டன.

குடிதண்ணீர்.—கிராமங்களில் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. புதிய ஆழ் கிணறுகள் தோண்டவும், கிணறுகளை ஆழப்படுத்தவும் அரசு இம்மாவட்டத்திற்கு ரூ. 50 இலட்சத்துக்கு 27—1—1981 அன்று வெளியிட்ட ஆணையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரித் தள்ளுபடி செய்வதற்கும், அரசுக்குச் சேரவேண்டிய பாக்கி வசூலை ஒத்திப்போடவும், வடஆற்காடு மாவட்டத்திற்கு ஆணையிட்டதைப் போலவே இம்மாவட்டத்திற்கும் ஆணை, 27—1—1981-ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நடக்கும் பணிகளைத் துரிதப்படுத்தவும், பருவ மழை தவறியதால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புதிய பணிகளை ஆரம்பித்தும் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிப்பதற்கும் 2,000 டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) திருச்சிராப்பள்ளி மாவட்டம்.—இம்மாவட்டத்திலும் சென்ற ஆண்டை விட மழை 30 சதவிதம் குறைவு. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காவிரி நீர்ப்பாசன வசதி உள்ள இடங்களில் பயிர்களின் நிலைமை நன்றாக உள்ளது. மானாவாரி குளங்களில் பெரும்பாலும் தண்ணீர் இல்லை. ஆகவே மானாவாரி குளங்களில் ஆயக்கட்டுகளில் 95 சதவிதம் நிலங்கள் தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளன. கிணற்றுப் பாசன நிலங்களில் ஆங்காங்கே சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

குடிதண்ணீர்.—குடிதண்ணீர் பொறுத்தவரையில் தற்போது இது ஒரு பெரும் பிரச்சினையாக இல்லை என்றாலும், கிணறுகளில் நீர்மட்டத்தின் நிலை குறைந்து கொண்டே போவதால் இம்மாதக் கடைசிக்குப் பின் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உள்ளது.

நிவாரணங்கள்.—500 இடங்களில் ஆழ்கிணறுகள் தோண்டவும், 500 இடங்களில் கிணறுகளை ஆழப்படுத்தவும் ரூபாய் 50 இலட்சம் வழங்க 24—1—1981 அன்று அரசு ஆணையிட்டுள்ளது.

நிலவரித் தள்ளுபடி சம்பந்தமாக பொதுவான ஆணை பிறப்பிக்கப்படாவிட்டாலும், மானாவாரி குளங்கள் ஆயக்கட்டுகள் சம்பந்தப்பட்டவரை ஆங்காங்கே பயிர்கள் விளைச்சலைப் பார்வையிட்டு தகுதி வாய்ந்த நிலங்களுக்கு மட்டும் நிலவரித் தள்ளுபடி அளிக்க மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(உ) தருமபுரி மாவட்டம்.—தருமபுரி மாவட்டத்தில் பருவமழை வழக்கமாகப் பெய்வதைவிட பாதியளவுக்கும் குறைவாகப் பெய்துள்ளது. இதனால் இம்மாவட்டத்தில் மானாவாரி குளங்களில் தண்ணீர் போதுமான அளவு வரவில்லை. கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விட முடியாததால் மேற்படி நீர்த்தேக்க ஆயக்கட்டுப் பகுதிகளில் முதல் போகம் சுமார் 9,000 ஏக்கர்களில் விளையவில்லை. அதேபோல் சுமார் 4,000 ஏக்கர் ஆயக்கட்டை கொண்ட பாரூர் ஏரியில் தண்ணீர் வராததால் அதில் இரண்டாம் போகம் விளையவில்லை. இந்நிலையில் பயிர்கள் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

குடிதண்ணீர் பொறுத்தவரையில் குழாய்க் கிணறுகள் அமைக்க ரூ. 13 இலட்சமும், கிணறுகளை ஆழப்படுத்த ரூ. 15 இலட்சமும் செலவிட 24-1-1981 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. நிலத்தடி நீர்ப்பிரிவு அமைத்துள்ள 100 குழாய்களுக்கும் கைப்பம்புகள் பொருத்தி, உடனடியாகக் குடிதண்ணீருக்காகப் பயன்படுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்புப் பணிகள்.—கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வேலைகளைத் துரிதப்படுத்தவும், புதிய பணிகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கு 1950 டன் அரிசி அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ஊ) புதுக்கோட்டை மாவட்டம்.—புதுக்கோட்டை மாவட்டத்தில் பருவமழை வெகு குறைவாகவே பெய்துள்ளது. இதனால் மேட்டூர் நீர்ப்பாசனப் பகுதி நீங்கலாக மற்ற இடங்களில் பயிர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன.



குடிதண்ணீர்ப் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. குடிதண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக 64 புதிய குழாய்க் கிணறுகளைத் தோண்டவும், 201 கிணறுகளில் ஆழ் குழாய்களை அடிக்கவும், 267 கிணறுகளை ஆழப்படுத்தவும் ரூ. 17.54 இலட்சம் செலவினத்துக்கு அரசு 25-11-80 இல் அனுமதி அளித்துள்ளது. மேலும் 70 குடிநீர்த் திட்டத்திற்காகவும், 32 குழாய்க் கிணறுகள் அமைக்கவும் ரூ. 38 இலட்சமும், புதுக்கோட்டை நகராட்சிக்குக் குடிதண்ணீர் விநியோக வசதி செய்வதற்காக ரூ. 8 இலட்சமும் செலவிட 17—2—1981-ல் உத்திரவிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரித் தள்ளுபடி செய்வதற்கும், அரசுக்குச் சேரவேண்டிய பாக்கி வசூலை ஒத்திப்போடவும் வடஆற்காடு மாவட்டத்திற்கு ஆணையிட்டது போலவே ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(எ) தஞ்சாவூர் மாவட்டம்.—இவ்வாண்டில் மேட்டூர் நீர்த் தேக்கத்தில் போதுமான அளவு தண்ணீர் இருந்ததால், இம்மாவட்டத்தில் எல்லாப் பகுதிகளிலும் நல்ல மகசூலுடன் சுமார் 4-11 இலட்சம் ஏக்கராவில் குறுவை நெல் அறுவடை செய்யப்பட்டது. 1980 செப்டம்பர் முதல் வாரத்திலிருந்து சம்பா நடவு ஆரம்பமாயிற்று. மேட்டூர் தேக்கத்தில் தண்ணீர் போதுமான அளவில் இருந்ததால், விவசாயிகள் சாகுபடியை முழு வேகத்தில் செய்வதற்கு உதவியது. விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும் வடகிழக்குப் பருவமழை தேவையான அளவு பொழியாததாலும், கடந்த ஆண்டைவிட பருவமழை மிகக்குறைந்த அளவு இருந்ததாலும், குறிப்பாக பட்டுக்கோட்டை, பேராவூரணி, ஒரத்தநாடு மற்றும் தஞ்சாவூர் வட்டங்களில் காவிரி—மேட்டூர் பாசன பகுதி நீங்கலான, பிற நீர்ப்பாசனமில்லாத புன்செய் நிலங்களில் பயிரிடப்பட்ட பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மற்றும் ஒரத்தநாடு வட்டங்களில் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக தற்போதுள்ள கிணறுகளை ஆழப்படுத்தவும், புதிய கிணறுகளைத் தோண்டுவதற்கும் ரூ. 16.23 இலட்சம் செலவினத்துக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(ஏ) செங்கல்பட்டு மாவட்டம்.—செங்கல்பட்டு மாவட்டத்தில் 1980-ஆம் ஆண்டு பருவமழை குறைவாகவே பெய்தது. கடலோரப் பகுதியான செங்கல்பட்டு, மதுராந்தகம், பொன்னேரி வட்டங்களிலும், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் ஒரு பகுதியிலும் பருவ மழை காலதாமதமாக நவம்பரில்தான் பெய்துள்ளது. இம்மாவட்டத்தின் மேற்குப் பகுதியான காஞ்சிபுரம், திருவள்ளூர் கோட்டங்களில் பெய்த மழையளவு மிகவும் குறைவு. ஆகவே விளைச்சல் ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளது.

குடிதண்ணீர்.—திருத்தணி, பள்ளிப்பட்டு, ஸ்ரீபெரும்புதூர் வட்டங்களைப் பொறுத்தவரை குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் விரிவான குடிநீர் அபி விருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் நிதி அனுமதி கோரியுள்ளார். இதுபற்றி விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப் படும். குடிநீர் தட்டுப்பாடின்றி கிராமங்களில் கிடைக்க வழிவகைகள் செய்யப்படும்.

(ஐ) மதுரை மாவட்டம்.—மதுரை மாவட்டத்தில் சென்ற ஆண்டை விட மழையளவு 35 சதவீதம் குறைவாகவே பெய்துள்ளது. அதனால் பயிர்கள் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. பாதகமான பருவ நிலையினால் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய நிலை உள்ளது. எனவே வரும் மாதங்களில் ஏற்படக்கூடிய குடிநீர்த் தட்டுப்பாட்டை சமாளிப்பதற்கு புதிய குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு ரூ. 20 இலட்சமும், கிணறுகளை ஆழப்படுத்து வதற்கு ரூ. 15 இலட்சமும் அரசு அனுமதித்துள்ளது.

(ஓ) சேலம் மாவட்டம்.—மழைக் குறைவினால் இம்மாவட்டத்திலும் பயிர்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. குடிதண்ணீர் கிணறுகளில் தண்ணீர் மட்டம் இறங்கி வருவதால் வரும் மாதங்களில் ஏற்படக்கூடிய தண்ணீர்த் தட்டுப்பாட்டை சமாளிப்பதற்கும், புதிய ஆழ்கிணறுகளை அமைக்க ரூ. 40 இலட்சமும், ஏற்கனவே உள்ள கிணறுகளை ஆழப்படுத்த ரூபாய் 10 இலட்சமும், ஆக மொத்தம் ரூ. 50 இலட்சம் அனுமதித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பு தரக்கூடியப் பணிகளை தேசியக் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தீவிரப்படுத்துவதற்கு 8,000 டன் அரிசியும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஓ) பெரியார் மாவட்டம்.—இம்மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை 1980 ஆம் ஆண்டில் 34 சதவீதம் குறைவாகப் பெய்துள்ளது. மழை குறை வின் காரணமாக மானாவாரி பயிர்கள் விளைச்சல் சென்ற ஆண்டைவிட 40 முதல் 50 சதவீதம் குறைவாகவே எதிர்பார்க்கப்படுகிறது. மார்ச் கடைசி வரை மழை இல்லை என்றால் தாளவாடி, நம்பியூர், பெருந்துறை, ஊத்துக்குளி, அம்மாபேட்டை, அந்தியூர், மொடக்குறிச்சி, கொடுமுடி, சென்னிமலை, காங் கேயம், வெள்ளக்கோவில் மற்றும் தாராபுரம் ஒன்றியங்கள் மேலும் பாதிக்கப் படும். தண்ணீர்த் தட்டுப்பாட்டினைத் தவிர்க்க புதிய குழாய்க் கிணறுகள் அமைக்கவும், கிணறுகளை ஆழப்படுத்தவும் வேண்டிய நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

(ஔ) திருநெல்வேலி, கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள்.—இம்மாவட்டங்களில் பாதகமான நிலை நிலவுவதாக அறிக்கைகள் வரவில்லை



(அ.அ) கன்னியாகுமரி மாவட்டம்.—இம்மாவட்டத்தில், மழையளவு சராசரி மழை அளவைவிட 20 சதவீதம் குறைவாக உள்ளது. குடிநீர்த் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாக இல்லை. 18 இடங்களில் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி அளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

6. ஆகவே, வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரைத் தீர்க்கும் வகையில் அரசு எல்லாவித பணிகளையும் மேற்கொண்டுள்ளது. மேலும் பணிகளை விரைவுபடுத்தவும், நிர்வாக ரீதியில் தேவையான ஆணைகளை அவ்வப்பொழுது பிறப்பிப்பதற்கும், தலைமைச் செயலாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் 2—2—1981 அன்று ஒரு கூட்டத்தைக் கூட்டினார். அதையொட்டி அரசு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. வறட்சி நிவாரணப் பணிகளின் முன்னேற்றத்தை 23—2—1981 ஆம் தேதியன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடனும், அதிகாரிகளுடனும் கலந்து ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், துறைகளுக்கும் அறிவுரைகள் வழங்கப்படும்.

7. மாவட்டங்களின் வறட்சி நிலைமையை அரசு கூர்மையாகக் கவனித்து வருகிறது. ஆட்சித் தலைவர்களுடன் தொடர்புகொண்டு தேவையான நிதிக்கும், வேலை வாய்ப்புத் திட்டத்திற்கான அரிசிக்கும் அனுமதி வழங்கி வருகிறது. மேலும் தேவைப்படும் அளவிற்கு இப்பணிகளை விரிவாக்க அரசு என்றும் தயங்காது. மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் உள்ள வறட்சி நிலைமையைப் பற்றி தங்களின் கருத்தினை அரசுக்குத் தெரிவித்து, ஒத்துழைப்பு கொடுப்பதன் மூலம் அரசும் மக்களுக்குத் தேவையானவற்றை உடனுக்குடன் செய்திட இயலும். மாண்புமிகு உறுப்பினர்களுடைய பரிந்துரைகளைக் கேட்டு அரசு தனது பொறுப்பினை நிறைவேற்றத் தயாராக உள்ளது.

## DROUGHT CONDITION IN TAMIL NADU
## STATEMENT.

During the year 1980-81, there has been failure of the North—East and South-East monsoon and the rainfall has been inadeqcate in many parts of the State.

Due to inadequate rainfall, North Arcot, Pudukkottai, Dharmapuri, South Arcot, Ramanathapuram, Tiruchirappalli, Salem, Thanjavur, Madurai, Chengalpattu and Periyar Districts are either wholly or partly affected. Drinking Water scarcity is felt in villages. Employment opportunities are wanting.

2. The District Collectors sent proposals to the Government for taking up relief measures. The Government examined them and issued orders for the immediate relief measures then and there. Provision of drinking water in the scarcity areas was given priority and Government sanctioned a sum of Rs. 439.77 lakhs for sinking of new bore wells and deepening of existing wells in the Municipal areas and villages, as detailed below:—

| | Rs. IN LAKHS. |
|---|---|
| 1. North Arcot ... ... ... ... | 115.00 |
| 2. Ramanathapuram ... ... ... ... | 50.00 |
| 3. Dharmapuri ... ... ... ... | 30.00 |
| 4. Tiruchirappalli ... ... ... ... | 50.00 |
| 5. South Arcot ... ... ... ... | 30.00 |
| 6. Thanjavur ... ... ... ... | 16.23 |
| 7. Pudukkottai ... ... ... ... | 63.54 |
| 8. Salem ... ... ... ... | 50.00 |
| 9. Madurai ... ... ... ... | 35.00 |
| Total ... | 439.77 |

The drinking water supply works are taken by the Tamil Nadu Water Supply and Drainage Board, Agricultural Engineering Department, Public Works Department and Panchayat Unions. The Government also have arranged for the handing over of the experimental bore holes sunk by the Ground Water Cell, so as to use them as drinking water source after fixing hand pumps or motor pumps.

## EMPLOYMENT ORIENTED SCHEMES.

In order to provide employment to the people in the affected areas, orders have been issued to expedite the works taken up under the National Rural Employment Programme and to take new works according to needs under this scheme additional quantity of rice has been released to the districts.



The District-wise position as follows :

(i) *North Arcot district.*—The rain fall in North Arcot district during 1980 was less than half of the normal rainfall. Including Kaveripakkam Tank, 2,970 irrigation sources are dry. The crops have withered in all the areas. Drinking water scarcity is felt in Arakonam, Vandavasi, Cheyyar and Tiruvannamalai taluks. The Agricultural operations are affected. The Commissioner for Revenue Administration, after consulting the Collector of North Arcot and Managing Director, Tamil Nadu Water Supply and Drainage Board, sent proposals to Government for taking up relief programme. The Government on 5th January 1981 ordered for the following relief measures to ease the drinking water scarcity condition.

(*a*) for sinking of 700 bore wells in the Municipalities and Villages at a cost of Rs. 105 lakhs.

(*b*) to improve the Palar Head works at an estimated cost of Rs. 10 lakhs.

(*c*) 7,000 tonnes of rice have been released to take up new works and expedite on pending works under the National Rural Employment Programme.

The Government on 26th December 1980 ordered for the following :

Remission of Land Revenue Local cess, Local cess surcharge, water cess, Additional water cess, commercial crop assessment to be given where the crop yield is 37 paise (50 per cent) and below, In cases were remission has been given to an extent which is not less than 50 per cent of a ryot's holding in a village, the collection of arrears of land Revenue and loans to be postponed to the next fasli.

(ii) *South Arcot district.*—In this district rain fall during the year 1980 was only 50 per cent of the normal rain fall. The condition in areas under Cauveri Mettur project was satisfactory. The crops in Virudhachalam, Kallakurichi, Tirukoilur, Ulundurpet and Villupuram taluks were affected as there were no adequate supply of water in Virudachalam, Memathur Ellies, Polanthurai, Tirukoilur and Sornavur Anaicuts, Manimutha Nadhi, Komugi Nadhi and Vidur Schemes. 2,093 Manavari tanks are dry. In spite of this, crops have been cultivated in the Ayacuts by utiliring the 91,704 irrigation wells in the Districts.

Out of 2,235 villages in the district, 744 villages are affected due to adverse seasonal conditions. Out of 1,29,745 acres of cultivable lands in the 744 affected villages, cultivation has not been made in 66,403 acres. Drinking water scarcity is felt in the scarcity areas.

*Relief Measures.*—On 3rd February 1981 the Government sanctioned a sum of Rs. 30 lakhs for sinking of new bore wells in the scarcity areas. The Government also ordered for the remission of land revenue etc., same as in the case of North Arcot district.

*Employment oriented Schemes.*—The Government have ordered for taking up of new works and expediting the on-going works under the self sufficiency schemes and National Rural Employment programme. An additional quantity of 500 tonnes of rice was released to the district.

(iii) *Ramanathapuram district.*—The rain fall has been 30 per cent less compared with last year. Except a few tanks in Rajapalayam and Srivilliputhur taluks' in all other areas the tanks have not received water supply. Out of 7,332 tanks 3,603 tanks did not receive any water. Even out of the remaining tanks there was no adequate water supply except for 216 tanks. Consequently the agricultural operations are much affected.

*Drinking water.*—Water scarcity is felt in villages. Orders have been issued on 21st January 1981 alloting Rs. 50 lakhs for deepening of wells and sinking of new bore wells.

Orders have also been issued on 27th January 1981 for remission of land revenue and postponement of collection of arrears of Government loans and Land Revenue in respect of the affected areas same as in the case of North Arcot district.

(iv) *Tiruchirappalli district.*—In this district rainfall was 30 per cent less when compared to last years. The condition of crops is good in areas with irrigation facility from cauvery waters. But manavari tanks are mostly without water. Hence 95 per cent of the ayacut under these tanks are adversely affected as a result of paucity of water. However cultivation is being carried on in areas irrigated by well irrigation.

*Drinking water.*—At present scarcity of drinking water does not pose a problem; but with decrease in sub soil water level, there is likely to arise scarcity of drinking water by the end of this month.



*Relief measures.*—Government have issued orders for sinking of 500 deep bore wells and for deepening another 500 wells at an estimated expenditure of Rs. 50 lakhs.

Though general order for remission of land revenue has not been issued, in so far as lands in ayacut of manavari tanks and other dry lands, the Collector is taking action for grant of remission wherever necessary based on field inspection and assessment of out turn.

(v) *Dharmapuri district.*—Rain fall this year is less than 50 per cent of the usual amount of rain fall in the district. With the result the manavari tanks did not receive adequate supply. As water was not let out from Krishnagiri reservoir, first crop could not be raised in about 9,000 acres in the ayacut under this project. Similarly second crop could not be raised in the 4,000 acres ayacut of Parur tank. Consequently the yield of crops have been affected.

As regards drinking water, orders have been issued on 24th January 1981 sanctioning Rs. 15 lakhs for sinking of new bore wells and another Rs. 15 lakhs for the deepening of existing wells. Orders have also been issued for taking over the 100 exploratory tube wells sunk by the ground water division and use them for drinking water supply after fitting with hand pump.

*Employment oriented works.*—Orders have been issued to expedite the works already taken up under the National Rural Employment Programme and for undertaking new works in the affected areas to provide employment to the people. 1950 tonnes of rice has been allotted to this district under the same.

(vi) *Pudukkottai district.*—The monsoon rain has been much less in Pudukkottai district. Except the areas under the Cauvery Mettur Project there has been widespread failure of crops in other areas.

Scarcity of drinking water is felt in many places. Government sanctioned Rs. 17.54 lakhs on 25th November 1980 for deepening of 201 wells and sinking of 64 new bore wells as the first instalment A further sum of Rs. 46 lakhs has been sanctioned on 17th February 1981 for taking up 70 water supply works, 32 bore wells and for improvements to water supply to Pudukkottai Municipality.

Orders have also been issued for remission of land revenue and postponement of collection arrears of Government loans and land revenue arrears same as in the case of North Arcot.

(vii) *Thanjavur district.*—During this year there was sufficient water in Mettur Dam. As a result, the out turn of the Kurvai crop in 4.11 lakhs acres was fair. The Samba transplantation started in September 1980. The water level in Mettur Dam helped to complete the cultivation in full swing. But the North-East monsoon which would be helpful to the ryots was very poor compared to the previous year. As a result the crop in the non-Cauvery Mettur Project areas in Pattukottai, Peravurani, Orathanad and Thanjavur taluks were affected. The Government sanctioned Rs. 16.23 lakhs for deepening of existing wells and for sinking of new bore wells in the scarcity areas in Thanjavur and Orathanad taluks.

(viii) *Chengalpattu district.*—The rain fall during the year 1980 was less in Chengalpattu district. The monsoon rain fall in the coastal taluks of Chengalpattu, Maduranthagam, Ponneri and parts of Sriperumbudur was late in November. The western parts of the district viz. Kanch epuram, Tiruvallore and Tiruttani taluks received poor rain fall. Hence the cultivation in these areas has been affected.

*Drinking water*:—The comprehensive drinking water supply scheme is being executed by the Tamil Nadu Water Supply and Drainage Board in Tiruttani, Pallipattu and Sriperumbudur taluks. To take up drinking water supply schemes in the affected areas the Collector has requested for allotment of additional funds.

Orders allotting the funds will be issued shortly and arrangements made to provide drinking water in the affected areas.

(ix) *Madurai district.*—The rain fall in Madurai district was 35 per cent below the normal rain fall. The crops have been affected. Drinking water scarcity is expected in the coming month, In order to tackle the situations, the Government has sanctioned Rs. 20 lakhs for deepening of wells and Rs. 15 lakhs for sinking of bore wells.

(x) *Salem district.*—Due to inadequate rainfall the crops in this district were affected. It is reported that the water level in the wells is going down. In order to tackle the situation in the coming months, the Government sanctioned in total Rs. 50 lakhs i.e., Rs. 40 lakhs for sinking bore wells and Rs. 10 lakhs for



deepening of existing wells. The Government also released 3,000 tonnes of rice to the district under National Rural Employment Programme for taking up employment oriented works.

(xi) *Periyar district.*—The rain fall during 1980 in the district was 34 per cent below the normal. Due to poor rain fall the yield of crops has been only 40 to 50 per cent compared to the previous year. If there is not rain fall till the end of March, the areas in Thalavadi, Nambiyur-Anthiyur, Modakurichi, Kodumudi, Chennimalai, Kangeyam, Vellakoil and Dharapuram Panchayat Unions will be further affected. Action is being taken to sink bore wells and deepen the existing wells in the scarcity areas.

(xii) *Tirunelveli. Coimbatore and Nilgiris.*—No report was received about prevalance of adverse seasonal conditions in respect of these districts.

(xiii) *Kanniyakumari district.*—The rainfall in this district was 20 per cent below the normal. Drinking water is not a problem. The Collector has ordered for the deepening of wells in 18 places where there is fall in the ground water level.

The Government is taking all possible action to provide relief to the people affected by drought. The Chief Secretary convened a meeting on 2nd February 1981 and discussed with the officers concerned for speeding up of the relief measures. In the light of the discussions and decisions arrived at the meeting orders have been issued. The Chief Minister has reviewed the progress of the drought relief measures with the Ministers and officials concerned on 23rd February 1981. Based on this review orders will be issued to the District Collectors and concerned Departments.

The Government is closely watching the drought situation in the Districts. Allotment of funds and rice required under the National Rural Employment Programme is being made assessing the need in consultation with the Collectors. The Government is ready to expand the relief programme according to the needs. The Honourable members may kindly give their views and suggestions and help in the speedy execution of the relief works for the benefit of the people affected in adverse sessonal condition.

[5th March 1981

The Government will be happy to consider the suggestions made by the honourable members and are prepared to do everything possible.

Honourable members may kindly extend their co-operation by giving their views and suggestions so as to help the Government to bring the required and timely relief to the affected people.

---

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

வெள்ளிக்கிழமை, 1981 மார்ச் 6.

மாசி 23, ரௌத்திரி 2012, திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Teachers of Kallar Reclamation Schools.*

116. *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have arrived at any decision, regarding the regularisation of the services of a large number of teachers appointed under Half-a-Million Job Scheme in the Kallar Schools in Madurai District; and

(*b*) if so, when their services will be regularised ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஐந்து இலட்சம் பேர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மதுரை மாவட்டத்திலுள்ள கள்ளர் பள்ளிகளில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் பணியை முறைப்படுத்துமாறு 1980-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் ஆணையிடப்பட்டிருக்கிறது.

(இ) 16 பட்டதாரி ஆசிரியர்கள், 3 தமிழாசிரியர்கள் மற்றும் 2 இடைநிலை ஆசிரியர்கள் நீங்கலாக ஏனைய ஆசிரியர்களின் பணி முறைப்படுத்தப் பட்டுள்ளது. உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 15 பட்டதாரி ஆசிரியர்கள், 3 தமிழ் ஆசிரியர்கள் பணியை முறைப்படுத்த தமிழ் நாடு தேர்வாணைக் குழுவின் உடன் ஒப்புப்பெற கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது.

மீதியுள்ள ஒரு பட்டதாரி ஆசிரியர் மற்றும் 2 இடைநிலை ஆசிரியர்கள் யார் என்ற விபரம் தெரியாததால் அவர்கள் பணி முறைப்படுத்த முடியவில்லை. அவர்கள் யார் என்று அறிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

[1981 மார்ச் 6

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பல
ஆண்டுகளாக, ஏறத்தாழ 7, 8 ஆண்டுகளாக, இந்த ஆசிரியர்களுடைய பணி
வரன்முறைப்படுத்தப்படாததால் இந்த 15 பட்டதாரி ஆசிரியர்கள், 3 தமிழா
சிரியர்கள் பெரும் தொல்லைகளுக்குள்ளாகியிருக்கிறார்கள். அவர்கள் ஊதிய
உயர்வு பெற முடியவில்லை. இதுகாறும் பின் தங்கியோர் துறையிலேதான்
இதையெல்லாம் செய்து வந்திருக்கிறார்கள். வரன்முறைப்படுத்த நிதித்
துறை ஒப்புதல் பெறவில்லை என்ற காரணத்தினால், அவர்கள் வரன்முறைப்
படுத்தப்பெறாமல் இருந்திருக்கிறார்கள். எனவே துரிதமாக அரசு தேர்
வாணைக் குழுவிற்கு ஏதாவது குறிப்பு வழங்கியாவது அதைச் செய்ய
அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத்
தலைவர் அவர்களே, அரசளவில் செய்யப்படவேண்டிய காரியங்களைச்
செய்தது. அது தேர்வாணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டு அதனுடைய
முடிவு எதிர்பார்க்கப்படுகிறது. அதை விரைந்து செயல்படுத்தும் முயற்சியிலே
நாம் ஈடுபடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கருத்துக்கு
நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரையிலும் பின்தங்கியோர்
துறையே இவர்களை வரன்முறைப்படுத்தியிருந்தது. இப்போது மட்டும்
அது ஏன் தேர்வாணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்று அறிந்து
கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: உயர் நிலைப் பள்ளிகளில்
பணிபுரியும் 15 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 3 தமிழாசிரியர்கள் பணி,
தமிழ் நாடு தேர்வாணைக் குழுவின் உடன் ஒப்பு பெற்றபின் முறைப்படுத்தப்
பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டது. உயர் நிலைப் பள்ளியில் பணி
புரியும் இவ்வாசிரியர்கள் நியமனம் தேர்வாணைக் குழுவின் வரம்பிற்குள்
வருவதால் இந்த ஆணையிடப்பட வேண்டிய அவசியம் வந்தது.

திரு. ம. சங்கரலிங்கம்: அரசு சார்பில் நடத்தப்பட்டு வருகின்ற உயர்
நிலைப் பள்ளிகளில் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் போன்றவர்களை
பணி வரன்முறைப்படுத்துவதற்கு தேர்வாணைக் குழுவின் 'கன்கரன்ஸ்'
தேவை என்று சொல்கிறார்கள். இந்தப் பள்ளிகள் நலத்
துறையில் நடத்தப்படுவது. இந்த ஆசிரியர்களை, டி.ஈ.ஓ., போன்று கல்வித்
துறையிலே உள்ள மேல் பதவிகளுக்கு பதவி உயர்த்த முடியாது. ஆகவே
அவர்களுக்குத் தேர்வாணைக் குழுவின் ஒப்புதல், 'கன்கரன்ஸ்' தேவை



1981 மார்ச் 6]

யில்லை. தனியார் பள்ளிகளின் விதிகள்தாம் இவர்களுக்குப் பொருந்தும்.
ஏன் இப்படி தேர்வாணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தப் பள்ளிகள் அரசாங்
கத்தின் சார்பு உள்ளவை. அரசாங்கத்தினுடைய மேற்பார்வையில் நடக்
கின்றன. அரசாங்கத்தினுடைய நிதிகளைப் பெற்று வருகின்றன.
அவைகள் அரசாங்கத்தால் கண்காணிக்கப்படுகின்றன. இந்த நிலைமைகள்
காரணமாகத்தான் தேர்வாணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றது என்று
சொல்லப்பட்டிருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம்: இதுபோன்று மற்ற மாவட்டங்களிலேயும்
பிரச்சினைகள் இருப்பதால், தேர்வாணைக் குழுவிற்கு இதைத் துரிதப்படுத்த
ஒரு குறிப்பு அனுப்புகின்ற நோக்கம் அரசுக்குண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கான வழிவகைகள்
இருக்குமானால், அதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபடும் என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : இந்தக் கள்ளர் பள்ளிகள் என்பது 'கிரிமினல்ஸ்
ரிபார்ம் ஸ்கூல்ஸ்' என்று நினைக்கிறேன். இந்தப் பள்ளிகளுக்குக் கள்ளர்
பள்ளிகள் என்று ஜாதியின் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பெயர்
இருப்பதைவிட வேறு மாற்றுப் பெயர் வைக்க அரசு முன்வருமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதுவரையில் அதே பெய
ரில்தான் இருந்து வருகிறது. அதைப்பற்றி வேண்டுமானால் யோசிக்கலாம்.

திரு. ம. சங்கரலிங்கம்: இந்தப் பள்ளிகள் அரசால் நிர்வகிக்கப்படுவதாக
இருந்தாலும், நலத் துறையால் நிர்வகிக்கப்படுவது, மின்சாரத் துறையால்
நிர்வகிக்கப்படுவது என்பது போலத்தான் இருக்கிறது. இது தனியார்
பள்ளிகள் நிர்வகிப்பதுபோலத்தான் இருக்கின்றது. அந்த நிலைமைகள்தான்
இருந்து வருகின்றன. அரசு கல்வித் துறையால் நிர்வகிக்கப்படுகின்ற ஒன்று
தான் அரசுப் பள்ளி என்று சொல்லலாம். நலத் துறை ஒரு மேனேஜிங்
ஏஜென்சி போல நடத்தப்படுகிறது. எனவே இந்த விதி இதற்குப்
பொருந்தாது. இதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** என்னிடத்திலே கொடுத்திருக்கின்ற தகவல்படி, இத் தேர்வாணைக் குழுவின் வரம்புக்குள் வருவதால்தான், இந்த ஆணை இடப்பட்டிருக்கிறது. அந்த வரம்பிற்குள் இது வருகிறதா என்பதைப்பற்றி ஆராய வேண்டும். தனிக் கேள்வி போட்டால் அதைப்பற்றி ஆராய்ந்து சொல்லலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இது தேர்வாணைக் குழுவின் வரம்பிற்குள் வருவதால், இடைநிலை ஆசிரியர்கள் பணி வரன்முறை செய்வதற்கு அங்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொல்லுகின்றார்கள். ஆனால், இடைநிலை ஆசிரியர்கள் பணி வரன்முறை தேர்வாணைக் குழுவின் வரம்பிற்குள் வரவேண்டிய அவசியம் இல்லை. அதனால் இந்த ஆசிரியர்கள் நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதைப்பற்றி அரசு ஆராயும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, இந்த 5 இலட்சம் பேர்களை, வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நியமனம் நடந்தபொழுது, அதற்குரிய அந்த ஆணையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ் நியமிக்கப்படுகின்றவர்கள் பணியிலிருந்து நீக்கப்படக் கூடாது என்ற பணிப்பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவில் இது சர்வீஸ் கமிஷன் வரம்பிற்குள் வரக்கூடியதல்ல. அப்படியிருந்தும் இன்று 15 பட்டதாரி ஆசிரியர்கள், 3 தமிழாசிரியர்கள் ஆக மொத்தம் 18 பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய நியமனத்திற்கு ஒப்புதல் என்ற வகையிலாவது, சர்வீஸ் கமிஷனை அணுகி இந்த ஒப்புதலை மட்டும் நாம் பெறலாம். தேர்வாணைக் குழுவின் தேர்வு என்று இல்லாமல் concurrence அல்லது ஒப்புதல் என்ற ஒரு கண்ணோட்டத்தில் இதை அரசு செய்ய வேண்டும். அதை இந்த அரசு பரிசீலனை செய்து, அவர்களுடைய பணியை விரைவாக வரன்முறைப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** சர்வீஸ் கமிஷன் தேர்வு என்பதல்ல. நாம் சர்வீஸ் கமிஷனின் 'கன்கரன்ஸ்' தான் கேட்கிறோம். அதாவது உடன் ஒப்புதலைத்தான் எதிர்பார்க்கிறோம். அதை விரைவுபடுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.



**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதிலில் தேர்வாணைக் குழுவின் வரம்பிற்குட்பட்டதா இல்லையா என்பதைப்பற்றி அறிய வேண்டும், அதற்கென்று தனியாக ஒரு கேள்வி போட வேண்டும் என்று சொன்னார்கள். அதுவும் அங்கத்தினர் அவர்கள் கேட்ட கேள்வியோடு இணைந்ததாக இருப்பதால், இந்தக் கேள்வியிலேயே இணைத்து ஆராய்வதற்கு அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதைப்பற்றி ஆராயலாம். அதைப்பற்றிய முழு விவரம் இப்போது என்னிடம் இல்லாததால், அதைப் பற்றித் தெரிவிக்க முடியவில்லை. ஆராய்ந்து சொல்கிறேன். அதற்கு இடமிருக்குமானால், அதைப்பற்றி ஆராய்வோம்.

**திரு. பா. ரா. தாமஸ்:** இதுவரையிலே எந்தத் துறையிலும் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் தேர்வாணைக் குழுவிடம் ஒப்புதல் பெற வேண்டிய நிலை இருக்கிறது. இது புதிதாக வந்திருக்கின்ற நிலை என்று கருதுகிறேன். தேர்வாணைக் குழு வரன்முறைப்படுத்துவதை விட அவர்களுக்கு அரசே பதவி உயர்வு கொடுக்கக்கூடிய வகையில் ஆவன செய்யுமா? பாதிக்கப்பட்டிருக்கின்ற ஆசிரியர்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கக்கூடிய வகையிலே அரசு ஆணை பிறப்பிக்க முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அங்கத்தினர்களின் கருத்துக்களின் அடிப்படையிலே அதை ஆராய்ந்து என்ன முடிவு எடுக்க இயலுமோ அதை எடுக்க இந்தத் துறை முயலும்.

* 117 *Q*.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Finance be pleased to state:

(*a*) whether it is a fact that Selection Grade Scale of Pay is not awarded to the Teachers of Kallar Reclamation Schools in Madurai district; and

(*b*) if so, the reasons therefor?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) மற்றும் (இ) மதுரை மாவட்டம் கள்ளர் பள்ளிகளில், 1—1—1980 தேதியன்று, தேர்வு நிலை பதவி பெற தகுதி பெற்ற எல்லா ஆசிரியருக்கும் தேர்வு நிலைப் பணிகள் கொடுக்கப்பட்டுவிட்டன.

சில ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய ஊதிய நிலுவையை கொடுக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பா. ரா. தாமஸ்: முதன் முதலாக 1—1—1971 அன்றும், அடுத்து 1—4—1973 அன்றும், அடுத்து 1—4—1974 அன்றும், அடுத்து 1—4—1975 அன்றும் தேர்வு நிலை வழங்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் இன்னும் தேர்வு நிலை வழங்கப்படாமல் இருந்தால், அவைகளை உடனடியாக வழங்கக்கூடிய அளவில் ஆணை பிறப்பிக்க மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தேர்வு நிலை கொடுக்கப்பட்டுவிட்டது. அதிலே இடைநிலை ஆசிரியர்கள் 326, இளநிலை ஆசிரியர்கள் 343, பட்டதாரி ஆசிரியர்கள் 5, தொழில் ஆசிரியர்கள் 3, தமிழாசிரியர்கள் 3, உடற்பயிற்சி ஆசிரியர்கள் 5, ஓவிய ஆசிரியர் 1, ஆக மொத்தம் 686 ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை வழங்கப்பட்டுவிட்டது. சில ஆசிரியர்களுக்கு இன்னும் ஊதிய நிலுவை வழங்கப்படவில்லை. அதைக் கொடுப்பதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

பருவகாலப் படி.

* 118.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குற்றாலம் போன்ற சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பணிபுரிகிற ஆசிரியர், ஆசிரியர் அல்லாத இதர அரசு ஊழியர்களுக்கு அந்தந்த இடங்களில் உள்ள பருவகாலப்படி (Seasonal Allowance) கொடுக்கிற செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) வினா எழாது.

(முற்பகல் 10-40)

திரு. ம. சங்கரலிங்கம்: குற்றாலம் போன்ற பருவகால முக்கியத்துவம் வாய்ந்த, சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு, அதுவும் குறிப் பாகக் குற்றாலத்திற்கு ஜூன், ஜூலை மாதங்களில் பெருவாரியான மக்கள் வருவதால், அங்கு பணி புரியும் ஆசிரியர்கள், ஆசிரியர்களல்லாத அரசு ஊழியர்கள் அனைவரும் விலைவாசி ஏற்றத்தால் பாதிக்கப்படுகிறார்கள். எனவே குறிப்பாக அந்த இரண்டு மாத காலத்திற்கு அவர்களுக்குப் பருவ



காலப் படி கொடுப்பதுபற்றி அரசு மீண்டும் பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் 'இல்லை' என்று சொன்னாலும், இது குறித்து மீண்டும் பரிசிலனை செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பருவ காலப் படி என்பது தற்போது நடைமுறையில் இல்லை. உதகமண்டலத்தில் பணி புரியும் பணி யாளர்களுக்குப் பருவ காலப் படி அனுமதிக்குமாறு கேட்கப்பட்டது. அந்த வேண்டுகோள் விரிவாகப் பரிசீலிக்கப்பட்டு மூன்றாவது சம்பளக் குழு பருவ காலப் படி தர வேண்டாமென்று பரிந்துரை செய்தது. மூன்றாவது சம்பளக் குழு தன்னுடைய பரிந்துரையில், கோடை காலத்தில் உதகமண்ட லத்துக்குச் சுற்றுலாப் பயணிகள் அதிக எண்ணிக்கையில் வருவதால், இயல்புக்கு மீறி பொருட்களின் விலை அதிகரிக்கும் போக்கு இருப்பதால், அந்நகரில் பணியாற்றும் பணியாளர்கள் பருவ காலப் படி கேட்டுள்ளனர். இத்தன்மையதான வசதி சிம்லா, டார்ஜிலிங் போன்ற நகரங்களில் பணி யாற்றும் பணியாளர்களுக்குக் கிடைப்பதாகவும் அவர்கள் தெரிவித்திருக்கி றார்கள். இவர்கள் கூற்று சரிதானா என்பதை இமாசலப் பிரதேசம், மேற்கு வங்காள அரசுகளுக்கு எழுதிக் கேட்டோம். இவ்விடங்களில் இத்தகைய படி எதுவும் வழங்கப்படுவதில்லையென நாங்கள் அறிகிறோம். இவ்விடங்களில் கொடுக்கப்படும் மலைவாழிடப் படி வீதங்கள், தமிழ் நாட்டி லுள்ள படி வீதங்களைக் காட்டிலும் குறைவென்று நாங்கள் அறிகிறோம். ஆகவே பருவ காலப் படி வழங்குமாறு உதகமண்டலப் பணியாளர்கள் செய் துள்ள வேண்டுகோளை நாங்கள் ஏற்க இயலாது என்று மூன்றாம் சம்பளக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. உதகமண்டலத்திற்கே இந்த நிலை ஏற் படும்போது, புதிதாகக் கொடுக்கும் சூழ்நிலை ஏற்படவில்லை.

திரு. ம. சங்கரலிங்கம்: உதகை போன்ற இடங்களில் ஹில் அலவன்ஸ் இருக்கிறது. ஆனால் குற்றாலம் போன்ற இடங்களில் ஜூன், ஜூலை ஆகிய இரண்டு மாதங்களில் இருக்கும் விலைவாசி, சாதாரண மக்கள் அதன் கிட்டவே போக முடியாத அளவிற்கு இருக்கிறது. பிற மாநிலங்களில் இல்லையென்றாலும், நமது அரசு முன்மாதிரியாக பருவ காலங்களில் சுற்றுலாச் சிறப்பிடமாக உள்ள இடங்களுக்கு பருவ காலப் படி அளிப்பதுபற்றிப் பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஏற்கெனவே இவ்வாறு விண்ணப்பங்கள் தரப்பட்டு, பரிசீலிக்கப்பட்டதற்குப் பின்புதான், இது தேவையில்லை என்ற முடிவிற்கு வந்தோம். மீண்டும் வரும் சம்பளக் குழு அதைப்பற்றி ஆராயலாம்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: சிம்லா போன்ற இடங்களில் இத்தகைய படி வழங்கப்படுவதில்லை என்று கண்டறிந்ததாகச் சொன்னார்கள். இருந்தாலும், எல்லா மாநிலங்களுக்கும் முன்மாதிரியாக, நீலகிரியில் பணி புரிபவர்களுக்கு, இந்தப் படியை அளித்து, தமிழகம் நல்ல பெயரைப் பெறும் எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த வகையில் முன்மாதிரியாக இருக்க வேண்டியதில்லை என்று அரசு கருதுகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: வெளி மாநிலங்களில் வழங்காததை, இங்கே வழங்கி முன்மாதிரியாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்று சொன்னார்கள். ஆனால் இப்படிப்பட்ட பகுதிகளில் 'எக்ஸ்பென்சிவ் லொகாலிடி அலவன்ஸ்' என்று வழங்கப்பட்டதை இப்போது அரசு ரத்து செய்திருக்கிறது. எனவே ரத்து செய்வதற்கு முன்மாதிரியாக அரசு இருந்திடலாமா? அதைத் திரும்ப வழங்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நான் முதலிலே படித்துக் காட்டியபடி, ஏற்கெனவே கொடுத்ததுகூட மூன்றாவது சம்பளக் குழுவின் பரிந்துரையை முன்னிட்டுத்தான் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பரிந்துரையை ஏற்றுத்தான் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: சுற்றுலாத் தலங்களில் விலைவாசி உயர்ந்து காணப்படுவதால், மத்திய அரசு சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பணியாற்றுபவர்களுக்கு, cost compensatory allowance என்று கொடுத்து, விலைவாசி உயர்வை ஈடுகட்டுவதற்கான படி தருவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி மத்திய அரசு கொடுப்பது உண்மையென்றால், அந்த விவரங்களைச் சேகரித்து, அந்த அடிப்படையிலே நமது மாநிலத்திலும் அந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்க அரசு பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது போன்று, சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் மத்திய அரசு அத்தகைய படியைக் கொடுத்தால், அந்த இடங்களில் மாநில அரசு கொடுக்காமல் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்தை ஆராய்ந்து பார்க்கலாம்.



### *Sub-way near Central Bus Stand, Madurai.*

*119 Q.—THIRU E. S. VENKATESAN and THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether there is any proposal to construct a sub-way near the Central Bus Stand, Madurai, for the benefit of the pedestrians; and

(b) if so, the stage at which the matter now stands?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: அந்தப் பகுதி மிக முக்கியமான பகுதி. போக்குவரத்து அதிகமான, நெரிசல் மிகுந்த பகுதி. அமைச்சரவர்கள் நேரிலே சென்று பார்த்தால், தெரிந்துகொள்ள முடியும். எனவே அங்கே ஒரு சுரங்கப் பாதை அமைப்பது குறித்து மீண்டும் பரிசிலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அங்கே, மையப் பேருந்து நிலையத்திற்கு அருகில் பாதசாரிகளுக்குச் சுரங்கப் பாதை அமைக்க வேண்டுமென்ற செயற்குறிப்புதான் ஏற்கெனவே ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக, நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால் எந்தெந்த நகரங்கள் ஒரு லட்சம் ஜனத்தொகைக்கு மேலே இருக்கின்றனவோ, அவை ஒருங்கிணைக்கப்பட்ட நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வரவில்லை. அதன் காரணமாக 42 லட்சம் ரூபாய் செலவில் சுரங்கப் பாதை அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

திரு. பா. ரா. தாமஸ்: ஏற்கெனவே அந்தப் பகுதியில் சுரங்கப் பாதை அமைக்கப்படுமென்றும், கோரிப்பாளையத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலைக்குப் பக்கத்தில் சுரங்கப் பாதை அமைக்கப்படுமென்றும் சொல்லப்பட்டது. இப்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை யென்று சொல்லுகிறார்கள். எனவே இது குறித்து மறு பரிசிலனை செய்து, மக்களுடைய நலனுக்காக அந்த இரண்டு இடங்களிலும் சுரங்கப் பாதை அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மக்களுடைய மனோநிலையை அறிந்துதான் சில திட்டங்களைப் போடுகிறோம். ஆனால் நிதி நிலைமைகளுக்கேற்பவும் சில திட்டங்களைப் போட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். இவை குறித்து பின்னாலே காலத்திற்கேற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: பொதுவாக சுரங்கப் பாதை அமைப்பதில் சிரமம் இருக்கிறது. மதுரையை ஆண்ட மன்னர்கள் சுரங்கப் பாதை அமைத்து, அவை அடைபட்டிருந்தால், அவற்றைக் கண்டுபிடித்து, தூர் எடுக்கும் யோசனை அரசுக்குண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அப்படி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்படியே இருந்தாலும் தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் மூலமாக இப்படிப்பட்ட சுரங்கப் பாதைகள் திருமலை நாயக்கர் மகால் போன்ற இடங்களில் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அப்படி யிருந்தாலும் நம்முடைய பாதசாரிகள் செல்லத்தக்க அளவிற்குத் தகுதியான சுரங்கப் பாதையாக இருக்குமா என்பதைப் பார்த்துத்தான் செய்ய வேண்டும்.

திரு. ம. சங்கரலிங்கம்: மதுரையை ஆண்ட மன்னர்கள் ஒளிந்து ஓடுவதற்குக் கட்டிய சுரங்கப் பாதையை இப்போது கண்டுபிடிக்க, அரசு முயற்சி எடுக்குமா? அப்படிச் செய்ய தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தை, உள்ளாட்சித் துறை கேட்டுக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அதுபோன்ற உத்தேசமில்லை.

### *House-tax in Tindivanam Municipality.*

*120 *Q.*—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state the estimated loss of revenue to Tindivanam Municipality, because of the delay to assess House-tax in time ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இக்கேள்விக்கு இடமில்லை. திண்டிவனம் நகராட்சியில் வருமான இழப்பு இல்லாமல் கட்டிடங்கள் அனைத்துக்கும் உரிய காலத்தில் வரி நிர்ணயம் செய்யப்படுகின்றது.

திரு. க. இராமமூர்த்தி: வீடு கட்டி முடித்த பிறகு திண்டிவனம் நகராட்சியிலிருந்து 'கம்ப்ளிஷன் சர்ட்டிபிகேட்' ( (completion certificate) வாங்கிச் சென்று, அதற்குப் பிறகுதான் மின்சாரத் துறையிலே மின் இணைப்பு பெற்றிருக்கிறார்கள். அப்படி மின் இணைப்பு பெற்ற பெரிய வீடுகள் பல ஆண்டுக் காலமாக வரி விதிப்புக்கு ஆளாகாமல் இருக்கின்றன. 'கம்ப்ளீஷன் சர்ட்டிபிகேட்' அடிப்படையிலே மின் இணைப்பு பெற்ற பல வீடுகள் வரி விதிப்பிற்கு ஆளாகவில்லை. அப்படிப்பட்ட வீடுகள் பற்றிய தகவல்கள்



அரசிடம் இருக்கிறதா ? இல்லையென்றால், அதைப்பற்றிப் பரிசீலனை செய்யுமா ? அதற்கான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

THE HON. THIRU P. KOLANDAIVELU: If there is any particular case, that may be given to me so that I may take action separately. அதுமாதிரியான தகவல்கள் இருந்தால், என்னிடம் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன். பொதுவாக எல்லா வீடுகளுக்கும் வரி நிர்ணயித்து, வசூலிக்கப்படுகிறதென்ற குறிப்புதான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: நகராட்சி மன்றம் 'கம்ப்ளீஷன் சர்ட்டிபிகேட்' கொடுத்த பிறகுதான், மின் வாரியம் மின் இணைப்பு கொடுக்க முடியும். அப்படி 'கம்ப்ளீஷன் சர்ட்டிபிகேட்' கொடுத்த பிறகு, திண்டிவனத்தில் எத்தனை வீடுகள் எத்தனை மாதங்களாக வரி விதிப்புக்கு ஆளாகாமல் இருக்கின்றன என்ற தகவலை துறை மூலமாகச் சேகரிப்பது நலமாக இருக்கும். நான் அந்த விவரங்களைக் கொடுத்து, தனிப்பட்டவர்களை விரோதித்துக் கொள்வது சரியாக இராது. இப்படி நடந்திருக்கிறது என்பதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன். அரசு இது குறித்து பரிசீலனை செய்யுமா ?

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மூலக் கேள்வியில் இதுபற்றி குறிப்பாகக் கேட்கப்படவில்லை. எல்லா வீடுகளையும் பொறுத்தவரையில் தான் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அதனால் அதுபற்றிய வேறு குறிப்புகள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விகளைக் கவனத்தில் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: பலர் வழக்கு மன்றத்திற்குச் சென்றுதான் வீட்டு வரியை உரிய காலத்தில் மதிப்பிட முடியாமல் போனதற்குக் காரணமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தில் இதுசம்பந்தமாக ஒரு தீர்ப்பு இருக்கிறது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் நாம் வரி விதிப்பு போட்டால்கூட, உடனே உயர் நீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்கி வந்துவிடுகிறார்கள்.

ஓய்வு பெறும்பொழுது ரூ. 10,000 அளித்தல்.

@ * 69 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1977-78 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட ஓய்வு பெறும் அரசு ஊழியர்கட்கு ரூ. 10,000 அளிக்கும் திட்டம்; எந்த நிலையில் உள்ளது?

(இ) அத்திட்டம் எப்போது செயல் வடிவம் பெறும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இந்தத் திட்டம் அரசு அலுவலர் சங்கங்களால் ஏற்கப்படாததால் கைவிடப்பட்டது.

(இ) அரசு அலுவலர் சங்கங்களுடன் கலந்து ஆலோசித்து மாற்றுத் திட்டம் ஒன்று உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட வேண்டுமென்று எல்லாச் சங்கங்களும் கோரிக்கையை அரசுக்கு அனுப்பியுள்ளன. 7—1—1978 அன்று அடித்தள அரசு ஊழியர், ஆசிரியர் மற்றும் உள்ளாட்சி ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பு 50 ஆயிரம் பேர் கொண்ட ஒரு பேரணியை நடத்தி முதலமைச்சர் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தியபோது, ஒரு வாரத்திற்குள் இதுசம்பந்தமாக, சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி மொழியளித்தார்கள். அந்த உறுதிமொழி இதுவரை நிறைவேற்றப்படவில்லை. அதன்படி விரைவில் அனைத்துச் சங்கங்களைச் சார்ந்தவர்களை அழைத்துப் பேசி துரிதமாக முடிவு எடுக்கப்படுமா? முதலமைச்சரின் உறுதிமொழி நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சங்கங்களே இது சம்பந்தமாக முயற்சி செய்து தலைமைச் செயலாளரையும், நிதிச் செயலாளரையும் அணுகலாம். அல்லது சங்கங்களாகவே அதற்கான முயற்சிகளை மேற் கொள்ளலாம். இதுவரை அத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. சங்கங்களே தலைமைச் செயலாளரையும், நிதிச் செயலாளரையும் இது சம்பந்தமாக அணுகினால், அதை ஒரு படியாக எடுக்கலாம். அல்லது இவர்கள் மூலமாக விரைவில் முடிவு எடுப்பதற்கு முயலலாம்.

@ 27—2—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப் பட்டது.



திரு. க. மீனாட்சிசுந்தரம் : போராட்டக் காலத்திலே போராடியவர்களை அழைத்துப் பேசி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இது சம்பந்தமாக உறுதிமொழி தந்தார்கள். நான்கூட இதுபற்றி இந்த அவையில் பேசியிருக் கிறேன். அன்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இருந் தார்கள். ஆகவே, இந்நிலையில் அரசே பேச்சுவார்த்தைக்கு உரியவர்களை உடனே அழைத்துப் பேசி உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி கலந்து பேசி தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

## Motor Car Allowance.

* 70. Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Finance be pleased to state:

(a) the rate of Motor Car Allowance that is paid to Government Servants, who go on official tours in their own motor cars;

(b) the date on which this rate was fixed;

(c) whether, in view of the increased cost of petrol, tyres, battery, etc., there is any proposal to raise he same; and

(d) if so, the stage at which the matter now stands?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மோட்டார் காருக்கு அளிக்கப்படுகிற தற்போதைய பயணத் தொலைவுப்படி விதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

முதல் 100 கிலோ மீட்டருக்கு—கிலோ மீட்டருக்கு 1 ரூபாய் 10 காசு.

அடுத்த 100 கிலோ மீட்டருக்கு—கிலோ மீட்டருக்கு 96 காசு.

எஞ்சிய தொலைவுக்கு—கிலோ மீட்டருக்கு 85 காசு.

மாற்றல் காரணமாக பயணங்களுக்கு, தமிழ்நாடு பயணப்படி விதிகளைச் சேர்ந்த 72 (1) ( ) (2) விதியின்கீழ் அனுமதிக்கத்தக்க பயணத் தொலைவுப்படி கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1. நிலை I —கிலோ மீட்டருக்கு 1 ரூபாய் 10 காசு.
2. நிலை II —கிலோ மீட்டருக்கு 70 காசு.
3. நிலை III
4. நிலை IV—கிலோ மீட்டருக்கு 55 காசு.

(இ) 14—10—1980.

@ 27—2—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப் பட்டது.

(உ) பெட்ரோல், மண்ணெண்ணெய் முதலியவற்றின் விலை அண்மையில் உயர்ந்துள்ளது. அதைக் கருத்திற்கொண்டு, படியை மேற்கண்டவாறு உயர்த்தி, நிதித்துறையின் (படிகள்-1), 14—10—1980 ஆம் நாளிட்ட 962 ஆம் எண் அரசாணையில் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(ஊ) மேலே (இ) பகுதியிலே விடை கொடுக்கப்பட்டுள்ளதால், இவ்வினா எழாது.

THIRU A. R. DAMODARAN: Sir, in 1971, there was a Government Order authorising an imprest amount of Rs. 50 for purchase of petrol by these officers. But, since 1971 there has been no increase. In view of the increase in the price of petrol from Rs. 1.60 per litre to Rs. 5.40 may I know whether the Government have any proposal to increase the imprest amount given to officers for purchase of petlo when they go on tour.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றிய விவரக் குறிப்புகள் என்னிடம் இல்லை. தனியாக அதுபற்றிய விவரம் அளிக்கப்படும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** முதல் 100 கிலோ மீட்டருக்கு, ஒரு கிலோ மீட்டருக்கு 1 ரூபாய் 10 காசு என்றும், அடுத்த 100 கிலோ மீட்டருக்கு, ஒரு கிலோ மீட்டருக்கு 90 காசு என்றும், எஞ்சிய தொலைவுக்கு, ஒரு கிலோ மீட்டருக்கு 85 காசு என்றும் இருக்கிறது. இப்படி முதலில் அதிகமாகக் கொடுத்து விட்டு, அடுத்த கட்டணத்தைக் குறைத்துக் கொண்டே போவதைக் காட்டிலும் ஒரே அளவில் இதை அரசு ஊழியர்கள் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக அரசு முடிவு எடுக்குமா!

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** கிட்டத்தட்ட 100 கிலோ மீட்டருக்கு மேல் செல்கின்றவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கும். உறுப்பினர் சொல்வது மாதிரி வைத்தால், செலவு மிக அதிகமாக இருக்கும் என்பதால், அதிகாரிகளை எல்லாம் கலந்து பேசித்தான் இப்பொழுது முறையே மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டர் என்றால் 55 காசு, 45 காசு, 40 காசு என்றும் மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டர் என்றால் 55 காசு, 45 காசு 40 காசு என்றும் தீர்மானித்துள்ளோம்.



குளச்சல் படகு சங்கங்களிலிருந்து வேலை நீக்கம் பெற்றவர்கள்.

@ * 71 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மத்திய அரசினுடைய ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மீன்துறையைச் சார்ந்த, கன்னியாகுமரி மாவட்ட குளச்சல் படகு சங்கங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களில் எத்தனை பேர் 1—10—1980 நாளன்றுள்ளபடி வேலையின்றி இருக்கிறார்கள்?

(இ) அவர்களிடமிருந்து அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(உ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) எழுபத்தேழு நபர்கள் வேலையின்றி இருக்கிறார்கள்.

(இ) ஆம்.

(உ) அரசுக்கு வந்த முறையீடு தக்க நடவடிக்கைக்காக மீன் துறை இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. முறையீட்டில் தங்களுக்கு மீன் துறையிலோ அல்லது தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திலோ வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று அவர்கள் கோரியிருந்தார்கள். இக்கோரிக்கை ஏற்க இயலாதது என மீன் துறை இயக்குநர் அவர்களுக்குத் தெரிவித்து விட்டார். எனினும், குளச்சல் படகு கட்டும் கூட்டுறவு சங்கத்தில், ஒருங்கிணைந்த கிராமிய வளர்ச்சித் திட்டத்தின் மூலமும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவியுடனும் படகுகள் கட்ட உத்தரவுகள் பெற்று சில நபர்களுக்காவது வேலை வாய்ப்பு அளிக்க இயலுமா என்று ஆராயப்பட்டு வருகிறது. நாகர்கோவில் மீன்துறை உதவி இயக்குனர் இதுபற்றி நடவடிக்கை எடுத்து வருகிறார்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** ஐந்து லட்சம் பேர்களுக்கு வேலை கொடுக்கிற மத்திய அரசுத் திட்டத்தின் கீழ்தான் இவர்கள் அன்றைக்கு நியமிக்கப் பட்டார்கள். ஐந்து ஆண்டு நிதி உதவியை மத்திய அரசு கொடுக்கிறது. ஐந்து ஆண்டுகள் முடிந்த பிறகுகூட, மாநில அரசு தான் அவர்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் வேலையை விட்டுப் போகச் சொல்லாமல், தொடர்ந்து வேலையை நீட்டித்துக் கொடுக்க வேண்டும். வேலையிலிருந்து அவர்களை நீக்கக்கூடாது என்பது மாநில அரசுக்குள்ள பொறுப்பு. அதை ஒத்துக்கொண்டுதான் மாநில அரசும் உத்தரவு அன்றைக்கு

@ 27—2—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப் பட்டது.

பிறப்பித்திருக்கிறது. இருந்தாலும் 77 பேர்கள் குளச்சல் படகுச் சங்கங்களிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகுகூட அந்த மீன்துறையைச் சார்ந்த சங்கம் எத்தனையோ பேர்களை வேலைக்கு நியமித்திருக்கிறது. நீக்கப்பட்டவர்களில் கல்வித் தகுதியுடையவர்கள் இருந்தால், அவர்களுக்கும், அந்த வாய்ப்பினைக் கொடுத்திருக்கலாம். மீண்டும் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்வதுபற்றி இந்த அரசு புனர் பரிசிலனை செய்து, உத்தரவு வழங்க முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் மீனவர் கிராமத்தில் கீழ்க்கண்ட நான்கு சங்கங்கள் 1973-74ல் பதிவு செய்யப்பட்டன.

1. குளச்சல் மீன்வளக் கூட்டுறவுப் படகு கட்டும் சங்கம்.
2. குளச்சல் மீன்வளக் கூட்டுறவுப் படகு இயக்குநர் சங்கம்.
3. குளச்சல் மீன்வளக் கூட்டுறவு சேவைச் சங்கம்.
4. குளச்சல் மீன்வளக் கூட்டுறவுப் பதப்படுத்தும் சங்கம்.

குளச்சல் மீன்வளக் கூட்டுறவுப் படகு கட்டும் சங்கம் 54 உறுப்பினர்களைக் கொண்டது. அவர்களிடமிருந்து பெற்ற பங்குத் தொகை 1,37,100-ஐப் பெற்று 4—2—1974 அன்று துவங்கப்பட்டது. பங்குத் தொகையில் ரூபாய் 1,31,700 ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா உறுப்பினர்களுக்கு வழங்கிய கடனாகும். அரசிடமிருந்து ரூபாய் 4,11,000 நீண்டகாலக் கடன் பெற்று, சங்கம் 53 உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பளித்தது. ஐந்து 35 விசைப்படகுகளும், இரண்டு 30 விசைப் படகுகளும், ஒரு 25 விசைப்படகும் இச்சங்கத்தினால் சட்டப்பட்டு அவற்றில் ஒரு 32 விசைப்படகு தவிர, எல்லாப் படகுகளும் விற்பனை செய்யப்பட்டன. புதிய படகுகள் கட்ட யாரிடமிருந்தும் ஆர்டர்கள் வாராததால் சங்கம் தற்போது செயலிழந்த நிலையில் உள்ளதாகக் கூறப்படுகிறது. மேற்கண்ட சங்கங்களின் உறுப்பினர்கள், மீன்துறை அல்லது தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தில் தங்களுக்கு வேலைவாய்ப்பளிக்கக் கோரினர். தமிழ்நாடு பணியாளர் தேர்வாணைக் குழு தேர்ந்தெடுத்தவர்களோ அல்லது வேலை வாய்ப்பு நிறுவனங்கள் அனுப்பி வைக்கும் நபர்கள் மட்டுமே இத்துறைகளில் பணிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதால் இவர்களின் கோரிக்கையை ஏற்க இயலாது என்று மீன்துறை இயக்குநர் இவர்களுக்குத் தெரிவித்து விட்டார். குளச்சல் படகு கட்டும் கூட்டுறவுச் சங்கத்தில் ஒருங்கிணைந்த கிராமிய வளர்ச்சித் திட்டத்தின் மூலமும், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவி மூலமும் படகுகள் கட்ட உத்தரவுகள் பெற்று, சில அங்கத்தினர்களுக்காவது



வேலை வாய்ப்பளிக்க முடியுமா என்பதைப்பற்றி ஆராய்ந்து வருவதுடன், மீன் துறை உதவி இயக்குநரும் (நாகர்கோவில்) இது சம்பந்தமாக கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அவரிடமிருந்து அறிக்கை வந்தவுடன் தக்க நடவடிக்கை எடுப்பது பற்றி பரிசிலிக்கப்படும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 11-00)

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை நகரில் போலியோ நோய் பரவி வருவது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள், சென்னை நகரில் பல பகுதிகளில் குழந்தைகளை முடமாக்கும் போலியோ நோய் பரவி வருவது குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின்கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாகச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னை நகரிலே திருவல்லிக்கேணி, இராயப்பேட்டை, வியாசர்பாடி, பெரம்பூர் போன்ற பகுதிகளிலே இந்தப் போலியோ நோயினாலே அண்மைக் காலமாக சில நாட்களுக்குள் மருத்துவமனைகளிலே சேர்க்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை 400 என்றும் அந்த வியாதியால் பாதிக்கப்பட்டதனால் இறந்தவர்களின் எண்ணிக்கை 40 என்றும் செய்திகள் கிடைத்திருக்கின்றன. அது மட்டுமல்லாமல் 1980 ஆம் ஆண்டைவிட இப்போது 1981 ஆம் ஆண்டிலே கடந்த 2 மாத காலத்திலே இந்நோய் பரவியது 100 சதவிகிதத்திற்கும் அதிகமாக இருக்கிறது. இப்படி 100 சதவிகிதம் அதிகமாகி இருக்கும் இந்த நேரத்திலேகூட அதற்குரிய தடுப்பு நடவடிக்கையை மருத்துவத் துறை காலாகாலத்திலே எடுக்கவில்லை என்ற எண்ணம் மக்கள் மத்தியிலே இருக்கிறது. டாக்டர்கள், நர்சுகள் கூடப் போதிய அளவிலே மருத்துவமனைகளிலே இல்லை என்றும், அப்படியே இருப்பவர்கள்கூட குழந்தைகளைக் கொண்டுவந்து சேர்க்கும் போது, போதிய அக்கறை காட்டவில்லை என்ற குறைபாடும் இருக்கிறது. ஆகவே, சுகாதார வசதி இல்லாத குடிசைப் பகுதிகள், குடிநீரே இல்லாத பகுதிகளிலேதான் இந்த நோய் மிகவும் அதிகமாகக் காணப்படுவதாகச்

சொல்லப்படுகிறது. இவைகளையெல்லாம் சரிசெய்யவும், இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்துகள் உரிய பாதுகாப்பு இல்லாமல் பயன்படுத்தப்படுவதால் இந்த நோய் மேலும் பரவ ஏதுவாகிறது என்பதால், இதற்கெல்லாம் ஒரு முடிவு காணும் வகையிலும், மேலும் பொது மக்களிடையே இருக்கும் பீதியைப் போக்கும் வகையிலும், அரசு நடவடிக்கை எடுக்க என்னென்ன செய்யலாம் என்று விவாதிப்பதற்கு இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இளம்பிள்ளை வாதம் என்பது நுண் கிருமிகளால் ஏற்படும் ஒருவித நோய். இது குறிப்பாக, இளம் வயதினருக்கு ஏற்படுகிறது. சென்னை மாநகரில் ஒரு வருடத்திலே சராசரியாக 600 பேர் இந்த நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். இந்த ஆண்டு ஜனவரியில் 158 பேரும், பிப்ரவரியில் 192 பேரும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு, சென்னை எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். இதில் 46 குழந்தைகள் இறந்துவிட்டனர். இந்த இரண்டு மாதங்களிலும் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் நால்வரும், ஸ்டான்லி மருத்துவ மனையில் 30 பேரும், இந்த வியாதிக்காக சிகிச்சை பெற்றனர். சென்னை மாநகரில் பெரம்பூர், இராயப்பேட்டை, அயன்புரம், வியாசர்பாடி, திருவல்லிக்கேணி, மாம்பலம், வேப்பேரி பகுதிகளில் இந்த நோய் ஜாஸ்தியாக ஏற்பட்டுள்ளது. இவ்வியாதி வராமல் தடுக்க குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து கொடுக்க எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையிலும், மாநகராட்சி தாய் சேய் நல விடுதிகளிலும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு மார்ச் முதல் டிசம்பர் வரை சென்னை நகரில் 24,244 குழந்தைகளுக்கு 75,000 டோசஸ் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டுள்ளது. இந்த மருந்து கொடுத்த ஆறு வாரத்திற்குப் பிறகுதான் குழந்தைகள் உடலில் இவ்வியாதியை எதிர்க்கும் சக்தி (immunity) உருவாகும். மேலும் இம்மருந்தை எப்போதும் குளிர்ந்த நிலையில் 4 டிகிரி சென்டிகிரேடிலே வைக்க வேண்டும். இல்லாவிட்டால் அது தனது வலிமையை இழந்துவிடும்.

தற்போது பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு 12,000 டோஸ் மருந்து 3—3—1981 அன்று அனுப்பப்பட்டுள்ளது. சென்னை குழந்தைகள் மருத்துவ மனையும் (Children's Hospital) மாநகராட்சி தாய்சேய் நல விடுதிகளும் இவ்வியாதிக்கு எப்போதும் சிகிச்சை அளிக்கத் தயார் நிலையில் உள்ளன. மேலும் இந்தப் பணியைத் தீவிரமாக்கவும், சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பேணிக் காக்கவும் மாநகராட்சி சுகாதார அலுவலருக்கும், பொது சுகாதார



துறை இயக்குநருக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. தவிர தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம் 62 ஆம் பிரிவின்படி, இவ்வியாதி அறிவிக்கப்பட்ட ஒரு வியாதியாகக் கருதி ஏற்கெனவே ஆணையிடப்பட்டுள்ளது. Notifiable disease என்ற முறையிலே ஆணையிடப்பட்டுள்ளது. இதன்படி இவ்வியாதியால் பாதிக்கப்பட்ட எவருக்கும் எந்த மருத்துவ அலுவலரும் சிகிச்சை அளிக்க நேர்ந்தால் even private practitioner ஆக இருந்தால் கூட அம்மருத்துவர் அதைப்பற்றி பொது சுகாதாரத் துறைக்குத் தெரிவிக்க வேண்டும். அதனால் தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பது எளிதாகும். மேலும் 1981 ஆம் ஆண்டு ஊனமுற்றோர் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் தமிழ்நாட்டில் 1.70 லட்சம் குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து கொடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தீவிரமாகச் செயல் படுத்தப்படும். மேலும் இப் பணிகளைத் தீவிரப்படுத்தி தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும் என்றும் மக்கள் எந்தவிதமான பதட்டமும் அடையத் தேவையில்லை என்றும், தற்போது நிலைமை முழு கட்டுப்பாட்டில் உள்ளது. The situation is absolute under contro என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், இந்த நேரத்தில் இன்னொரு கருத்தையும் சொல்லலாம் என்று கருதுகிறேன். நாம் இந்தப் பிரச்சினையை இந்தச் சபையிலே எழுப்புவதன் மூலம், இந்த விவரங்கள் பத்திரிகைகளிலே வரக்கூடிய கருத்துக்கள் மூலமாக எல்லா private practitioners. -உம் இந்த முறையைக் கையாள வேண்டும் என்று சொல்கிறேன். தனியார் மருத்துவ மனைகளுக்கு இந்தமாதிரி கேஸ் வந்தால் உடனடியாக அவர்கள் Public Health Departmet -க்குத் தெரிவிக்க வேண்டும். சட்டத்தின் கீழ statutory-யாகத் தெரிவிக்க வேண்டும். தனியார் மருத்துவமனைகளிலே பல குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடுகிறார்கள்—ஊசி என்றல்ல—ஊசியால் மருந்து எடுத்து வாயிலே போடுவார்கள். போட்டுவிட்டவுடனேயே, குழந்தைகளுடைய பெற்றோர்கள் தனியார் மருத்துவ மனைகளுக்குச் சென்று அதற்கான Poliomyliti என்ற அந்த நோய்க்கு oral vaccine என்ற முறையில் சிகிச்சை அளிக்கும்போது, follow up இல்லாத அளவுக்குத்தான் தனியார் துறையிலே சிகிச்சை அளிக்கிறார்கள். ஆகவே, தனியார் துறையிலே சிகிச்சை அளிக்கும்போது நோயாளிகளுக்கு ஒரு அட்டை கொடுத்து first doe second doe என்று கொடுக்கப்பட்ட மருந்து பற்றி முறையாகத் தகவல் எடுத்து, அந்தத் தகவலை டிப்பார்ட்மென்ட்க்கு அனுப்பினால், நாம் ஒருங்கிணைந்த முறையிலே செயல்பட முடியும். பாதிக்கப்பட்ட பிரிவினரில் ஒரு செக்ஷன் தனியார் துறைக்கும், இன்னொரு செக்ஷன் அரசாங்க மருத்துவ மனைகளுக்கும் போவதால்தான் இந்தச் சங்கடங்கள் ஏற்படுகின்றன. இப்போது அதற்காக ஒரு கமிட்டியை அமைத்திருக்கிறோம்.

Director of Public Health, Deputy Director of Medical Education, Director, Institute of Child Health, Health Officer, Corporation of Madras, Additional Health Officer, மதுரையைப் பொறுத்தவரையில் Dean, Rajaji Hospital, District Medical Offices, District Health Officer இவர்களையெல்லாம் வைத்து கமிட்டி அமைத்து, ஒருங்கிணைந்த முறையிலே நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த ஆண்டு எல்லா ஆண்டைக்காட்டிலும் அதிகமாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று Identification of the disease; வியாதியைக் கண்டுபிடித்து உலகுக்குத் தெரிவிக்கும் முறை இப்போது தீவிரப் படுத்தப்பட்டிருக்கிறது We have more Scientific methods, by which we are able to ident' the disease. அந்தப் புள்ளிவிவரங்களை எடுத்துப் பார்த்தால், 1975 ஆம் ஆண்டு இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் இங்கே நம்முடைய சென்னையிலே மட்டும் Institute of Child Health ல மட்டும் 569 என்றும், 1976-லே 633 என்றும், 1980-லே 887 என்றும் படிப்படியாக ஆண்டுதோறும் 30—40 கேஸ்கள் அதிகமாகின்றன இந்தத் தடவை Sudden sport என்ற அளவிலே, ஜனவரி 1981-ஐ எடுத்துக்கொண்டால் 86 ஆக இருந்தது இந்த ஆண்டு 151 ஆகவும், பிப்ரவரி 1981-ஐ எடுத்துக்கொண்டால் 78 ஆக இருந்தது இந்த ஆண்டு 178 ஆகவும் இந்த இரண்டு மாத கால அளவிலே உயர்ந்திருக்கிறது. ஆகவே, இந்த விவரங்களையெல்லாம் கண்டுபிடித்து அதற்கு என்னென்ன செய்யவேண்டும் என்ற நடைமுறைகளை எல்லாம் நாம் முனைப்போடு முடுக்கிவிட்டு நடவடிக்கை எடுத்து வருகிறோம். குழந்தைகள் மருத்துவமனையிலே கவனிப்பு இல்லாமல் இருக்கிறது என்றுகூடச் சொல்ல முடியாது. எல்லாவிதமான நடவடிக்கைகளையும் நாம் துரிதமாக எடுப்பதாலும், மேலும் இந்தப் பிரச்சினை ஏற்கனவே அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்திருப்பதாலும், மீண்டும் இந்த அவையிலே இதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். The situation is absolutely under control நம்முடைய கட்டுக்கு அடங்கித்தான் நிலைமை இருக்கிறது. நாம் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் விரைவாக நடவடிக்கை எடுக்கும் அளவுக்குக் காரியங்கள் ஆற்றப்படுகின்றன.

டாக்டர்கள் போதவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எல்லாம் ஒரே மருத்துவமனையில் வருவதால்தான் இந்தப் பிரச்சினை. இப்போது எழும்பூர்





மருத்துவமனைக்கும், ராயப்பேட்டை மருத்துவமனைக்கும் கொஞ்சம் load shift செய்து அங்கிருக்கும் Paediatrics Wing -லே இந்த load கொஞ்சம் அவர்கள் எடுத்துக்கொண்டால், Children Hospital லே மட்டும் பெரிய load இருக்காது என்ற அளவிலே பகிர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் இந்த விளக்கத்திற்குப் பிறகு திருப்தியடைவார்கள் என்று நம்புகிறேன். ஆகவே, மேலவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து, இதை விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி என் அனுமதியை மறுக்கிறேன்.

(முற்பகல் 11-10)

## 3. அறிவிப்புகள்.

### பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்ட மன்ற மேலவையின் இசைவிற்காக, மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையெழுத்திடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை, மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :

(1) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு தீர்வை வசூல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1981).

(2) 1981 ஆம் ஆண்டு பத்திரப்பதிவு (தமிழ் நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1981).

(3) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு கால்நடை நோய்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1981).

(4) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு வீட்டு வசதி வாரிய (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1981).

## 4. கவன ஈர்ப்பு.

தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கும் பள்ளியாசிரியர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கு, அக்காலத்திற்கு 1973 ஆம் ஆண்டு 29 ஆம் சட்டத்தின்படி வழங்க வேண்டிய பிழைப்பு ஊதியம் பல ஆண்டுகளாக வழங்கப்படாதது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பா. ரா. தாமஸ், திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் மற்றும் செல்வி அ. லீலாவதி ஆகியோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பினைக் கொடுத்திருக்கிறார்கள். தற்போது திரு. பா. ரா. தாமஸ் அவர்கள் கல்வியமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்ப்பார்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன் :—

"தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கும் பள்ளி ஆசிரியர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கு, அக்காலத்திற்கு 1973 ஆம் ஆண்டு 29 ஆம் சட்டத்தின்படி வழங்க வேண்டிய பிழைப்பு ஊதியம் பல ஆண்டுகளாக வழங்கப்படாதது குறித்தும், அரசு வழங்கியுள்ள சலுகைகளை அளிக்காததால் அவர்தம் குடும்பங்கள் பட்டினியால் வாடும் அவல நிலை குறித்தும்".

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (மாண்புமிகு கல்வியமைச்சர் சார்பில்) : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. பா. ரா. தாமஸ் :** தற்காலிகப் பணி நீக்கம் செய்திருந்தால் மட்டுமே அத்தகைய ஆசிரியர்களுக்கும் மற்ற பணியாளர்களுக்கும் பிழைப்பு ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று தனியார் பள்ளிகளைக் கட்டுப்படுத்தும் சட்டத்தில் விதிமுறை இருக்கிறது. ஆனால், சம்பந்தப்பட்ட தனியார் திறுவனங்கள் அந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதில்லை. இது குறித்து கல்வித் துறையிலும், அத்தகைய ஆசிரியர்களுக்கு பிழைப்பு ஊதியம் தருவதற்கான எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படுவதில்லை. எனவே தனியார் பள்ளிகளில் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களைப் பொறுத்தவரையில், கல்வித் துறை அலுவலர்களே பிழைப்பு ஊதியத்தை, பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வழங்கலாம் என்ற வகையில் அரசு ஆணை பிறப்பிக்க முன்வருமா ?

@ 290 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.





**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** 1973 ஆம் ஆண்டு 29 ஆம் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்தில் "தற்காலிகமாகப் பணியிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு பிழைப்பு ஊதியம் கொடுக்கப்பட வேண்டும்" என்று இருக்கிறது. தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டவர்களில் பலருடைய கேஸ்கள் இன்னும் முழுமையாக முடிவடையாமல் இருக்கின்றன. அப்படிப்பட்ட கேஸ்களில் சரியான வகையில் பிழைப்பு ஊதியம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இது குறித்து விவர அறிக்கையின் இறுதியில் ஒரு தகவல் கொடுக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன். அதாவது "பாதிக்கப்பட்ட பணியாளர்களின் சிரமத்தினைப் போக்குவதற்காகவும் அவர்கள் பிழைப்பு ஊதியம் தவக்கமில்லாமல் பெறுவதற்கும் ஏற்ற முறையில் விதிகளை மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்று சொல்லப்பட்டிருப்பதால், இதற்கு மேல், இதில் விளக்கம் கேட்க அவசியமே இருக்காது என்றுதான் நான் நினைக்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** On a point of order மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் துறையைப் பற்றியதாகும் இந்தக் கவன ஈர்ப்பு. ஆனால், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அவையில் இல்லை. இங்கே அவர் இருந்திருந்தால் சில நுணுக்கமான கேள்விகளைக் கேட்டு அவரிடமிருந்து விளக்கங்களை உறுப்பினர்கள் பெற்றிருக்க வாய்ப்பு இருந்திருக்கும் . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் நீட்டிக் கொண்டே போக வேண்டாம். அமைச்சர் ஒருவர் அவையில் இல்லை என்றால், வேறு ஒரு அமைச்சர் அவருக்காகத் தகவல் கொடுக்க முடியும். இது நீண்ட காலமாக இருக்கும் முறை. தற்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அதுகுறித்த பைலைக் கையில் வைத்துக்கொண்டு பதில் அளித்துக் கொண்டிருக்கிறார். எனவே இதைப்பற்றி திரும்பத் திரும்பக் கேட்பது சரியல்ல.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இதே அவையில் முன்பொருமுறை சம்பந்தப்பட்ட அமைச்சர் இல்லை என்ற காரணத்திற்காக அவர் துறை சம்பந்தப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள முடியாமல் போய்விட்டது. அப்போது பேசிய மாண்புமிகு அவையின் முன்னவர் அவர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர் இருந்து அறிக்ை -- க் கொடுப்பதுதான் முறையாக இருக்கும், அதோடு பதிலளிக்கவும் வசதியாக இருக்கும் என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்போது அந்த அமைச்சரிடம் பைல் இருந்திருக்காது. பொதுவாக ஒரு அமைச்சருக்காக வேறொரு அமைச்சர் பொறுப்பெடுத்துக் கொண்டு பதில் அளிப்பது வழக்கமான முறையாக இருந்து வருகிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு கல்வியமைச்சர் சார்பாக ஒரு விளக்கத்தைத் தந்தார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கல்விபற்றி விவரமாகத்தான் அவர் விளக்கம் அளித்திருக்கிறார்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அவையில் வைக்கப்பட்ட விவா அறிக்கையில் ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. "பாதிக்கப்பட்ட பணி யாளர்களின் சிரமத்தினைப் போக்குவதற்காகவும் அவர்கள் பிழைப்பு ஊதியம் தயக்கமில்லாமல் பெறுவதற்கும் ஏற்ற முறையில் விதிகளை மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்று அதில் சொல்லப்பட்டிருக் கிறது. தனியார் பள்ளிகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் 1973 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. 1974 ஆம் ஆண்டில் அதற்கான விதிமுறைகள் வெளி யிடப்பட்டன. 1973-ல் நிறைவேற்றப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் இது சம்பந்தமாக எந்த ஒரு ஷரத்தும் இடம் பெறவில்லை என்பது ஒரு முக்கியமான குறையாகும். அதனால்தான் அதனையொட்டி வெளியிடப்பட்ட விதிமுறைகளைக் தனியார் பள்ளி நிருவாகங்கள் அவமதிக்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, அந்தச் சட்டத்தில் ஏற்ற திருத்தத்தைக் கொண்டு வருவதாகக் குறிப்பிடவில்லை. மாறாக விதிமுறைகளை மாற்றுவது குறித்துத் தான் சொல்லியிருக்கிறார். எனவே விதிமுறைகளில் மட்டும் திருத்தம் கொண்டு வந்தால், நாம் எதிர்பார்க்கிற பலனைப் பெற முடியாது. எனவே இந்த வகையில் உரிய சட்டத்தையே நாம் திருத்த வேண்டும். எனவே இந்த வகையில் உரிய முறையில் சட்டத்திற்குத் திருத்தத்தைக் கொண்டு வருவதுபற்றி அரசு பரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இந்தச் சட்டம் செலக்ட் கமிட்டியில் விவாதிக்கப்பட்டபோது, நானும் அக்கமிட்டியில் உறுப்பினராக இருந்திருக்கிறேன். எனவேதான் என்னால் இதைப்பற்றி விளக்கமாகப் பதில் அளிக்க முடிந்தது. செலக்ட் கமிட்டியில் இது 3, 4 மாதங்கள் வரை விவாதிக் கப்பட்ட பிறகே, 1973 ஆம் ஆண்டில் சட்டமாக இது நிறைவேற்றப்பட்டது.



பிழைப்பு ஊதியம் வழங்குவதுபற்றி சட்டத்திலேயே ஒரு ஷரத்தைச் சேர்க்க வேண்டுமா அல்லது சபார்டினேட் லெஜிஸ்லேஷன் மூலமாக இதைப் பெற முடியுமா என்று அப்போதே விவாதிக்கப்பட்டு, இந்தச் சட்டத்தின் அடிப் படையில் தயாரிக்கப்படும் விதிமுறைகளில் மட்டும் இதைப் போட்டால் போதும் என்று அப்போது எதிர்க் கட்சியில் இருந்த—என்னையும் உட்பட நான் சொல்கிறேன். அப்போது நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமி காந்தனைப்போல் இன்னும் தீவிரமாக வாதாடிக் கொண்டிருந்தேன்— அனைவரும் ஒப்புக்கொண்டார்கள். அதனால் சட்டத்தைத் திருத்துவது தேவையில்லை, ரூல்ஸை மட்டும் போட்டால் போதும் என்று முடிவெடுக்கப் பட்டது. இப்போது விதிமுறைகளில் தனியார் நிருவாகங்கள் அமைந்து கொண்டு செயல்படுத்தாமல் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டது உண்மை. எனவேதான் விதிமுறைகளையே இன்னும் விரிவுபடுத்தலாமா என்பதுபற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. இதன்மீது விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்பதை மட்டும் இப்போது தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி அ. லீலாவதி :** ஆசிரியர்களின் சட்ட விரோதமான பணி நீக்கத் திற்கு கல்வித் துறை அலுவலர்கள் அனுமதி வழங்காமல் இருந்தாலும்கூட, நிருவாகங்கள் கோர்ட்டுக்குப் போய் ஆசிரியர்களைப் பணி நீக்கம் செய்து விடுகின்றன. அப்படிப்பட்ட முறையில் பாதிக்கப்படும் ஆசிரியர்களுக்கு அரசு எந்த வகையான பாதுகாப்பைக் கொடுக்க முன்வரும் என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இது தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படும் ஆசிரியர்களுக்கும் பணியாளர்களுக்கும் பிழைப்பூதியம் வழங்கப் படும் பிரச்சினைபற்றியதாகும். மாண்புமிகு உறுப்பினர் தனியார் நிருவா கங்கள் கோர்ட் மூலமாக ஆசிரியர்களை வெளியேற்றினால், அவர்களுக்கு என்ன பாதுகாப்பு என்று கேட்கிறார்கள். அப்படிப்பட்ட சமயங்களில் யாரும் ஒன்றும் செய்ய முடியாது. அப்படிப்பட்ட துர்பாக்கியமான நிலையில்தான் நாம் இப்போது இருக்கிறோம். தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்படும் ஆசிரியர்களுக்கு தங்களின் வழக்குகளில் இறுதியான முடிவு தெரியும் வரை, பிழைப்பூதியம் வழங்கப்பட வேண்டும் என்பது மிகவும் தேவையான ஒன்று. ஆனால் அதைக் கொடுப்பதற்குச் சில தனியார் நிருவாகங்கள் சரியாக ஒத்துழைக்கவில்லை. இதைச் சரியான முறையில் கண்காணித்து, அத்தகைய பிழைப்பூதியம் வழங்குவதற்கு உரிய வகையில் விதிமுறைகள் உருவாக்கப்

படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்பதைத்தான் அறிக்கையில் சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சங்கரலிங்கம் அவர்கள் முன்னறிவிப்பு கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒத்தி வைக்கப்படுகிறது.

### 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (2) அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவை விதி 21 (3)-ன் கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள அரசு சட்ட முன்வடிவுகளில் 4-வதாக இடம் பெற்றுள்ள தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலவரி வசூல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1981) முதலில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்ற மேலவை விதி 21 (3)-ன்கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள அரசு சட்ட முன்வடிவுகளில் 4-வதாக இடம் பெற்றுள்ள தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நிலவரி வசூல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1981) முதலில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



### 5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

### (1) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நிலவரி வசூல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1981).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நிலவரி வசூல் (திருத்தச்) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நிலவரி வசூல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு நிருவாகச் சீர்திருத்தக் குழு செய்த சிபாரிசுகளின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டதாகும். அதாவது அரசாங்கக் கடன்கள் அல்லாத கூட்டுறவுக் கடன்கள் போன்றவைகளைக்கூட இனி ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின்படி கெடுபிடியாக வசூல் செய்வது என்ற அடிப்படையில் இது வந்திருக்கிறது. அரசாங்கக் கடன் பாக்கிகளைப் பொறுத்தவரையில், காலா காலமாக இருந்து வந்த மாபு ஒன்று உண்டு. அரசாங்கத்திற்கு நேரடியாகக் குடிமகன் செலுத்துகிற நிலவரி போன்ற வரிகளைத்தான் இதுவரை ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின்கீழ் வசூல் செய்து கொண்டிருந்தோம்.

(முற்பகல் 11-20)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆனால் அரசாங்கத்தினுடைய அல்லது அதனுடைய மற்ற துறைகளினுடைய நடவடிக்கைகள் விரிவடைந்திருக்கிற நிலையில், கூட்டுறவுச் சட்டத்தின் முழுப் பலனையும் மற்றவர்களுக்கு அளிக்க வேண்டுமென்றால், அதைக் காப்பாற்ற வேண்டும் என்ற நிலையில், அந்தக் கடன்களைக்கூட ரெவின்யூ ரெக்கவரி சட்டத்தின் கீழ் வசூலிக்க வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டது. ரெவின்யூ ரெக்கவரி சட்டத்தின் கீழ் வரிகளை, பழைய பாக்கிகளை வசூலிக்கும் முறையைப் பிற துறைகளுக்கும் விரிவுபடுத்துவதில் கருத்து வேறுபாடு இருந்தாலும்கூட கடைசியாக நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் ரெவின்யூ ரெக்கவரி சட்டம் இன்றைக்கு அமுலில் இருக்கிறது. ரெவின்யூ ரெக்கவரி சட்டத்தின் அடிப்படையிலே வரி

@ 290–293ஆம் பக்கங்களில் இணைப்புII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

வசூலிக்கும் பாக்கிகளை, மற்ற நிலுவைகளை அல்லது கடன் பாக்கிகளை கட்டாயம் வாங்க வேண்டிய தீர்ப்பு சென்று நீதிமன்றத்திற்குச் போது நடவடிக்கைகளை சூழ்நிலையில் இந்தச் அவசியமில்லை. கிடையாது, விதிக்கின்ற வட்டி நிலுவைகளுக்காக பாக்கிகளுக்காக, கடன் எடுக்கிறபோது. கட்ட கடன்களைக் வந்திருக்கிறது. இருந்து காலத்திலே கடந்த முறை வழக்குத் போய் நீதிமன்றத்திற்குப் மீது தவிக்கின்றவர்கள் முடியாமல் எடுக்கிறபோது, நடவடிக்கை சட்டத்தின்கீழ் ரெக்கவரி ரெவின்யூ தொடராமல் செலுத்த சேர்த்துச் வட்டியையும் பாக்கிக்காக கடன் வேண்டிய தர அவர்கள் இருந்து சட்டத்திலே இருந்த ஏற்கெனவே நிலை என்ற வேண்டும் முறையை இந்த அடிப்படையிலே நியாயத்தின் ஆனால் வந்திருக்கிறது. ஏற்ற மரபுக்கு விதிப்பது வட்டி குழுவினர், சீர்திருத்தக் நிர்வாகச் அலுவல விதிக்கத் வட்டி அடிப்படையிலே என்ற அவசியமல்ல நியாயமல்ல, தல்ல, அதன் தெரிவித்திருக்கிறார்கள். கருத்தைத் என்ற தேவையில்லை அவர்கள் அமைச்சர் மாண்புமிகு நம்முடைய இன்றைக்கு அடிப்படையில் வட்டி இதன்மூலம் வந்திருக்கிறார்கள். கொண்டு இந்தச் சட்டமுன்வடிவைக் வேறுவிதமாக நோக்கில் அதே தவிர்க்கப்பட்டிருக்கிறது. செய்வது வசூல் உள்ளவர்களுக்குக் கடனில் வந்திருக்கிறது. நிலை புதிய விதிக்கின்ற அபராதம் என்ற வேண்டாம் வட்டி என்பதற்காகத்தான் கூடாது இருக்கக் பளு சுமுதல் வசூலிக்கும் வட்டி பிறகு, ஏற்ற அரசு அதை வந்திருக்கிறது. ஆலோசனை கொண்டு முறையைக் விதிக்கும் அபராதம் இல்லாவிட்டாலும்கூட முறையில் என்று ஒன்று தேவையற்ற என்பது விதிப்பது அபராதம் வந்திருக்கிறது. நான் சொல்ல விரும்புகிறேன்.

ஆளாவோம் தாங்கள் வசூலிப்பதற்குத் கீழ் சட்டத்தின் ரெக்கவரி ரெவின்யூ செலுத்திவிடு திருப்பிச் பணத்தைத் பேர் சில வந்தவுடனே, பயம் என்ற பல இல்லாமல் வழி வேறு நிலையிலேதான், முடியாத அப்படியும் கிறார்கள். உள்ளாகிறார்கள். நடவடிக்கைக்கு எடுக்கும் கீழ் சட்டத்தின் இந்தச் பேர் மேல் அதற்கு நல்லது. விட்டுவிடுவது செய்வதோடு வசூல் பாக்கியை ஆகவே பிறகு, ஏற்றுக்கொண்ட பரிந்துரையை என்ற தேவையில்லை விதிக்கத் வட்டி என்பதை தேவையில்லை அபராதம் ஆகவே நல்லதல்ல. விதிப்பது அபராதம் நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

பரிந்துரையை குழுவின் சீர்திருத்தக் நிர்வாகச் சட்டத்தை, இந்தச் ஆண்டிலிருந்து, ஆம் 1974 அதாவது நாளிலிருந்து, ஏற்றுக்கொண்ட ஆண்டி- ஆம் 1974 தெரிவித்திருக்கிறார்கள். கொண்டுவருவதாகத் அமுலுக்குக் தொகையைத் வட்டித் வசூலித்த சட்டத்தின்கீழ் ரெக்கவரி ரெவின்யூ லிருந்து





திருப்பிக் கொடுக்காமல் 'அட்ஜஸ்ட்' செய்கிற அளவிலே கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே 'ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' கொடுத்து 1974 ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வந்ததாகக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அரசாங்கக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாமல் அவதிப்படுபவர்களைப் பற்றிய சட்டம் இது. ஆகவே அவர்களைப் பொறுத்த வரையில், வட்டி வசூலிக்க வேண்டாம் என்று நாம் ஏற்றுக்கொள்ளுவதால் அபராதமும் விதிக்க வேண்டாம் என்ற தாராள மனப்பான்மையோடு இருக்க நாம் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நில வரியை மட்டுமல்லாமல், கூட்டுறவுக் கடன்களையும், மின்சாரக் கட்டண பாக்கிகளையும் இந்தச் சட்டத்தின்கீழ் வசூலிக்கப் போகிறோம். ஆகவே அதிகப்படியான பணத்தைச் செலுத்த வேண்டிய கடன்காரர்கள் அதிகமாக இருப்பதால், ரெவின்யூ ரெக்கவரி சட்டத்தின் கடுமையை விரிவுபடுத்த வேண்டாம் என்று சொல்லி, அபராதம் தேவையில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் 1974 ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வர வேண்டும் என்பதைவிட, என்றைக்கு இந்தச் சட்டம் நிறைவேறுவதற்கு இசைவு தரப்படுகிறதோ அந்த நாளிலிருந்து அமுலுக்கு வருகிற வகையிலே அமுல் செய்ய வேண்டும். இதற்கிடையிலே சிலர் சலுகையைப் பெற்றாலும், அது ஒன்றும் பெரிய தவறில்லை. அதற்காக இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதைப் பின்நோக்கித் தள்ள வேண்டாம் என்று சொல்லி அமர்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு ஏற்பட்ட சட்டத்திற்கான திருத்தச் சட்டம். ஒரு நூற்றாண்டுக்கு முன்பு ஏற்பட்ட அந்தச் சட்டத்தில், இரண்டு வருடம், அல்லது ஆறு மாதம் தண்டனை கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு போடப்பட்டிருக்கிறது. அதே கண்ணோட்டத்தில் தண்டனை விதிக்கும் பிரிவும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி கூறிய மாதிரி, ஃபைன் என்று போட்டாலும் பரவாயில்லை. சாதாரணமாக தனி மனிதன் செலுத்தாமல் இருந்தால், இதிலிருந்து தப்ப முடியாது. ஆனால் ஒரு சமுதாயமே செலுத்தத் தேவையில்லை என்று முடிவு செய்தால், இந்த தண்டனை ஒன்றும் செய்யப் போவதில்லை. தண்டனையைக் கொடுத்தாலும், சர்க்காருக்குச் சேர வேண்டிய பணத்தை வசூலிக்கலாம் என்று இருக்கிறது. ஆகவே தண்டனை 6 மாதங்கள் என்பதை நீக்கி ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தில் உள்ள இரண்டு வருடங்கள் அல்லது 6 மாதம் தண்டனை என்பதை ரத்து செய்ய வேண்டும். இன்றைக்கு இல்லாவிட்டாலும் அடுத்தாவது செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1981 மார்ச் 6

யாராவது ஏற்கெனவே நிலம் வாங்கியவர்கள் விற்பனையை ரத்து
செய்கிறார்கள் என்றால், அவர்களுக்கு அவகாசம் கொடுக்க வேண்டுமென்ற
முறையிலே சொல்லப்பட்டிருக்கும் ஷரத்தை நான் வரவேற்கிறேன். உயர்
நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் ஏற்கெனவே விற்பனை செய்யப்
பட்ட நிலத்தின் விற்பனையை ரத்து செய்வதாயிருந்தால் வாங்கியவருக்கு
வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற ஷரத்தை நான் வரவேற்கிறேன்.

அபராதம் என்று போடுகிறபோது, முன்பு 6 சதவீதம் வட்டி என்று
இருந்ததை இப்போது 5 சதவீதம் என்று போட்டிருக்கிறார்கள். இது
அவசியமில்லை. தேவைப்பட்டால் ஒரு சதவிதம் என்று போட்டாலே
போதுமானது. ஆகவே அபராதம் 5 சதவீதம் என்பதை ஒரு சதவீதம் என்று
மாற்ற வேண்டும். அதுவும் 50 ரூபாய்க்குக் குறைவாக இருப்பவர்களிடம்
ஒரு சதவீதம் கூட வசூலிப்பது சரியாக இருக்காது. 50 ரூபாய்க்கு மேல்
வசூல் பண்ண வேண்டியிருந்தால் ஒரு சதவீதம் அபராதம் போட்டு, தண்டனை
அளிக்கும் பிரிவையும் ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்
கிறேன்.

திரு. ம. சங்காலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,
அவையில் கொண்டுவரப்பட்டிருக்கிற 1981 ஆம் ஆண்டு நிலவரி வசூல்
(திருத்தச்) சட்ட முன்வடிவைப் பற்றி எனது கருத்துக்களை எடுத்துச்
சொல்ல ஆசைப்படுகிறேன். நிலவரியைப் பொறுத்த அளவிலே நான் இந்த
அவையிலேயே இதற்கு முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். இந்த அரசு
புரட்சிகரமான எண்ணத்தை உருவாக்கி நிலவரி விதிக்கும் முறையிலே
மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். 1864 ஆம் வருடத்துச் சட்டத்தை
அடிப்படையாகக் கொண்டு இயங்கிக் கொண்டிருப்பது தவறு. 1864 ஆம்
ஆண்டு நிலவரி விதிக்கும் சட்டத்திற்குள்ளேயே இருந்து கொண்டு சுற்றிச்
சுற்றி வருவதை விடுத்து 1981 ஆம் ஆண்டு அமைப்பு முறை, வரி விதிப்பு
முறை, சமுதாய அமைப்பு முறை ஆகியவைகளை நோக்கத்திலே கொண்டு
வந்து, பழைய வட்டத்திலேயிருந்து விடுபட வேண்டுமென்று முதலிலே

(முற்பகல் 11-30)

வேண்டிக்கொள்கிறேன். ஏதோ இது திருத்தம். இந்தச் சட்டத்திலே இருக்கக்
கூடிய திருத்தத்தால் இப்போது நன்மை பயப்பதாக, பலன் இருப்பதாகச்
சொல்லப்படுகிறது. அதாவது ஒருவர் நிலவரி கொடுக்கவில்லை என்றால்,
அதற்கு அபராதம் போடலாம் என்பது. அந்த அபராதம் போடுகின்ற
முறையை இதற்கு முன்னால் இருந்த கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது.
இரண்டு ஆண்டுக்கு அபராதம் போடக் கூடாது. ஒரு பசலிக்கு வரி விதிக்கப்
பட்டால், அந்த பசலியின் வரி மற்றும் இரண்டு பசலிக்கும் சேர்த்து வரி



1981 மார்ச் 6] [திரு. ம. சங்காலிங்கம்]

செலுத்த அனுமதி அளிக்க வேண்டும். இரண்டு ஆண்டுகள் கழிந்திருந்தால், அதற்கு ஒரு அபராதம் அல்லது வட்டி கட்டுவது என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். 1974 ஆம் ஆண்டிலே நீங்களும் நாங்களும் சேர்ந்தே கொண்டு வந்த அரசாணை. அதிலே இப்போது ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து சட்டமாகச் செய்கிறார்கள். அதிலே நாங்கள் எங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் கொண்டுவந்தது, அரசாணை. அரசாணை என்று இருக்குமானால், சூழ்நிலைக்கு ஏற்ப அதை மாற்றிக்கொள்ள அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. அதைச் சட்டமாக்கி அதை இன்னும் கடுமையானதாக ஆக்குகிறோம். இரண்டு ஆண்டுகள் கழித்து வட்டி அல்லது அபராதம் விதிப்பது என்று இருப்பதிலே சில மாற்றங்களைச் செய்யப் போகிறோம். அது ஒரு அரசாணையாக இருந்தால், நல்லதாக இருக்கும். அரசாணை என்றிருப்பதை மாற்றிச் சட்டம் என்றால், அதிலே இன்னொரு திருத்தத்தைப் பேரவையிலே வைத்து, மேலவையிலே வைத்து ஆளுநருடைய ஒப்புதல் வாங்க வேண்டியதாக இருக்கும். அந்த அளவுக்கு இதைச் சட்டமாக்குகிறோம். இரண்டு ஆண்டுகள் கழித்து அபராதம் என்பதை 4 ஆண்டுகள் கழித்து என்று கொண்டு வந்தால் வரவேற்கலாம். நாங்கள் கொண்டு வந்ததை அரசினர் இப்போது கடுமைப்படுத்துகிறார்கள் என்பதைத் நான் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே நம்முடைய அரசு, குறிப்பாக நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் புரட்சிகரமான கருத்துக்களையெல்லாம் வெளியிலே பேசி வருகிறார்கள். நிலவரியைப் பொறுத்த வரையில் வரி விதிப்பு எப்படி இருக்கிறது என்று சொன்னால், நஞ்சைப் பயிர்களுக்கு வரி அதிகமாகவும், புஞ்சைப் பயிர்களுக்கு வரி குறைவாகவும் இருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. அதற்குமேல் தண்ணீர் வரி இருக்கிறது. அதற்குமேல் சர்சார்ஜ் இருக்கிறது. ஆனால் இன்றைக்கு வரியையே வாங்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் கட்ட முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். அதனால் அவர்கள் கிளர்ச்சிகளையும் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இது தேவைதானா என்பதைச் சிந்திக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அதை நிறுத்தி வைக்க அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. இந்த நிலையில் 1974 ஆம் ஆண்டு உருவாக்கியதை மாற்றி இன்று 1981 ஆம் ஆண்டு நிலவரிச் சட்டம் என்று ஒரு புதிய சட்டம் கொண்டு வந்து, அது இந்த அரசினுடைய சட்டம் என்று சொல்லி, ஒரு புகழ் பெறுகின்ற நிலையைப் உருவாக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். இது முதல் பகுதி.

இரண்டாவது பகுதியிலே, நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். தலைமை நீதி மன்றத்தினுடைய அறிவுரைக்கு ஏற்ப, இந்த மாதிரி நிலங்கள் மீது அபராதத் தொகை விதித்து, நிலங்களை எந்த உடைமையாளர்கள் வைத்திருக்

கிறார்களோ, அவர்கள் வேறு யாருக்காவது மாற்றிவிட்டால், யார் அப்போது நிலத்தினை உடைமையாக வைத்திருக்கின்றார்களோ அவர்களிடம் விளக்கம் கேட்கலாம். ரெவின்யூ ரெக்கவரி ஆக்டில் அவர்களுக்கு விளக்கம் கொடுக்க வாய்ப்பு அளிக்க வேண்டும். 'நேச்சுரல் ஜஸ்டிஸ்' என்ற அடிப்படையிலே செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் சுட்டிக் காட்டியது. வாங்கியவர்கள் விளக்கம் சொல்ல வாய்ப்பு கொடுக்கிறார்கள். அதை நாம் வரவேற்காமல் இருக்க முடியாது. அதையும் நான் பாராட்டுகிறேன். அந்தச் சிறப்பு நீதிமன்றத்திற்குத்தான் போகின்றது. அந்த அறிவுரையை ஏற்றுச் செய்தால், அதை நான் வரவேற்கிறேன். முந்திய பகுதியை அரசு சிந்திக்க வேண்டுமென்று சொல்லி நான் அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை இங்கே கொண்டு வந்திருக்கும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய ஆலோசனைகளைக் கொடுக்கின்ற போது, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்றிருக்கிறார்கள் என்றுதான் நான் குறிப்பிட வேண்டும். அப்படிச் சொல்கின்றபோது, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், 'நாங்கள் கொண்டு வந்தது' என்று உரிமையோடு பேசியிருக்கிறார்கள். அன்றைக்கு எக்சிகியூடிவ் ஆர்டராக, அரசு உத்தரவாக வந்தது. நாளாக நாளாக அரசு உத்தரவாக இருந்தது, இன்றைக்குச் சட்ட முன்வடிவாக வந்திருக்கிறது. அப்படிச் சட்டமாக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அதற்குப் பிறகு அதிலே இன்னும் சில சீர்திருத்தங்களைச் செய்யலாமே என்ற நல்லெண்ணத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். மக்களுடைய எண்ணங்களே மேலும் மேலும் நல்ல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்பதுதான். சீர்திருத்தங்கள் வேண்டும் என்று சொல்வதில் ஒன்றும் தவறில்லை. ஆனால் இன்றைக்கு வரி விதிப்பிலே எத்தனையோ முறைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். வரி விதிப்பிலே 56, 58 தரங்கள் இருக்கின்றன. அந்த முறையில் இன்றைக்கு வரி விதிப்பு செய்யப்படுகிறது. இதையெல்லாம் ஒழுங்கு முறைப்படுத்த அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது. விரைவிலே அந்தச் சட்டம் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக ரெவின்யூ ரெக்கவரி ஆக்டில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு இருக்கிற அதிகாரத்தைக் கொண்டு, இன்றைக்கு குறிப்பிட்ட நிலம் சம்பந்தமாக யார் பாதிக்கப்படுகிறார்களோ, அவர்களிடம் விளக்கம் கேட்டு வாய்ப்புத் தரலாம் என்று உயர்நீதி மன்றம் சொன்னதனாலே இதை கொண்டு வந்திருக்கிறோம் என்று நாங்கள் சொல்வதாகச் சொல்லி, அதனால் எங்களுக்கு மதிப்பு இல்லை, அதனால் வரக்கூடிய புகழ் எங்களுக்கு இல்லை



என்று சொன்னார்கள். எங்களுக்குப் புகழ் இல்லை என்று சொன்னார்கள். நான் ஒன்று அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணாவுக்கோ தம்பிக்கோ போகின்ற புகழை மறைத்து, எங்கோ இருக்கின்றவர்களுக்கு அந்தப் புகழ் போக வேண்டுமென்று, குடும்பப் பாசத்தோடு இருந்தவர்களுக்கு வரக்கூடாது, அது வராது என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். இதைச் சொல்லும்போது, அவர்கள் உள்ளபடியே மனதாரச் சொல்லவில்லை. உள்ள உணர்வோடு குடும்பப் பாசத்தோடு, அண்ணனுக்கு வந்தாலும் தம்பிக்கு வந்தாலும், அது நமக்கு வந்ததுதான் என்று நினைக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அப்படி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் வெளியிலே சொல்லும்போது அதைச் சொல்ல முடியாமல் இருக்கின்றார்கள். அந்தப் புகழ் நீதிமன்றங்களுக்குச் செல்லும் என்று சொன்னார்கள். நான் சொல்வது, அந்தப் புகழ் நமக்குத் தான் அண்ணனுக்குத்தான், தம்பிக்குத்தான் என்று நான் எடுத்துச் சொல்வேன்.

அதுபோலவே நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். 'ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' என்று சொன்னார்கள். இதுவரையிலே அதுதான் நடைமுறையிலே இருக்கிறது. அந்த முறை இருக்கிறபோது, இன்றைக்கு 6 சதவீதம், 5 சதவீதம் என்று வசூல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் 1974-லே இருந்து வந்த சலுகையை இன்றைக்குக் கொடுக்காவிட்டால் அந்தச் சலுகைகள் இல்லாமல் போய்விடும். இன்றைக்கு ஒரு எக்சிகியூடிவ் ஆர்டர் மூலமாக நடைமுறைப்படுத்தி வருகிறோம். இன்றைக்கு ரிட்ராஸ்பெக்டிவ் என்று போடாவிட்டால் இது வரைக்கும் நன்மையை அனுபவிப்பவர்கள் நம்மை அடையமுடியாமல் போகும். இதற்கு முன்னாலே அவர்களுக்கு ஒரு மாதம், 2 மாதம் என்று இருந்தது. ஒவ்வொரு மாவட்டத்திலேயும் வரி வசூல் செய்கின்ற காலம் மாறுபடுகிறது. சில மாவட்டங்களிலே ஜூன் மாதம் வரும். அதாவது அங்கங்கே இருக்கின்ற ஹார்வெஸ்டைப் பொறுத்து வருகிறது. அந்தந்த மாவட்டத்தில் இருக்கின்ற தேதி பிரகாரம், அந்த நாளைத் தவிர்த்து, கடைசி நாளிலிருந்து ஒரு மாதமாக இருந்தாலும், மூன்று மாதமாக இருந்தாலும் அந்த மாதங்களுக்குக் கூட்டி, பழைய சட்டப்படி கணக்கிட்டு அவர்களிடத்திலே 6 பர்செண்ட் வசூல் பண்ணுவதற்கு முன்னாலே இருந்த சட்டத்திலே இடமிருக்கிறது. 1976-லிருந்து அது குறைக்கப்பட்டு ஒரு மாதம், 2 மாதம் என்று கணக்கிடக் கூடாது என்றும், 2 வருடங்களுக்கு என்று கணக்கிடக் கூடாது என்றும், அவ்வளவு அதிகமான சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. 'ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' என்றால் இதுவரையிலே குறைத்துக் கொடுத்ததையும் சேர்த்து வசூல் செய்ய முடியாது, அது நன்மையாக இல்லை என்று தெரிவித்துக்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1981 மார்ச் 6

கொள்கிறேன். நடைமுறையிலே இருப்பதை நாம் அப்படியே அமுல் படுத்தியிருக்கிறோம். இல்லாவிட்டால் இன்றைக்கு மாதா மாதம் என்று கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். எத்தனை பேர்கள் எந்தப் பசலியில் இருந்து என்று பார்க்க வேண்டும். வசூல் பண்ணவேண்டிய தேதியிலிருந்து யார் யார் பணம் கொடுக்காமல் இருந்தார்களோ அத்தனைக்கும் போட்டு அதிகமான அளவுக்கு வாங்கவேண்டிய சங்கடம் வரும். அதைப் பார்க்க வேண்டிய கஷ்டம் இருக்கிறது. ஆகவே ரிட்ராஸ்பெக்டிவ்தான் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையால் இன்றைக்கு 'ரெட்ராஸ்பெக்டிவ்' என்று போட்டிருப்பதுதான் நல்லதென்று தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரை இருந்ததை இன்றைக்கு நடைமுறைப் படுத்தியிருக்கிறோம். இதில் வேறு எந்தவிதமான புதுமையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் இத்துடன் என்னுடைய விளக்கம் போதுமென்ற முறையில் நான் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு நிலவரி வசூல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

THIRU K. RAMAMOORTHY: Sir. I move the following amendment standing in my name:—

"In clause 2, for the word 'penalty' subsitute the word 'fine'"

THIRU A. J. DOSS: I second it..

* திரு. க. இராமமூர்த்தி: இதிலே வார்த்தை மாற்றம் என்பது மட்டுமல்ல, மனித உணர்வுகளை மதிக்க வேண்டுமென்றுதான் நான் திருத்தம் கொண்டு வந்திருக்கிறேன். (penalty) தண்டனை'க்கும் (fine) அபாரதத்திற்கும் வித்தியாசம் அதிகம் இல்லையென்றாலும், ஒன்று தண்டனை என்றும், ஒன்று அபாரதம் என்றும் பொருள்படுகிறது. தண்டனை என்று சொல்லும் போது, அது கெடுபிடியாக அமைந்துவிடுகிறது. அமைச்சரவர்களுடைய



1981 மார்ச் 6] [திரு. க. இராமமூர்த்தி]

கவனத்திற்கு இது முன்பே வந்திருந்தால், சட்ட முன்வடிவிலேயே மாற்றியிருப்பார்கள் என்று கருதுகிறேன். அதைத் தாண்டிவிட்ட நிலையிலே, இந்தத் தரப்பிலேயிருந்து எடுத்துக் காட்டுகிறோமென்ற உணர்வின் அடிப்படையிலே வேண்டாமென்று சொல்லாமல், மனித உணர்வை மதிக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, கடன் பட்டவர்கள் என்றாலும்கூட, அவர்களுடைய உணர்வுகளை மதிக்க வேண்டுமென்ற உன்னத உணர்வோடு (Penalty) என்பதை மாற்றி 'fine'. என்று போட வேண்டுமென்ற என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா?

THIRU K. RAMAMOORTHY: Sir, I insist on my amendment.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

" In clause 2, for the word 'penalty' substitute the word 'fine' ".

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3.

THIRU K. RAMAMOORTHY: Sir, I move the following amendment standing in my name:—

" In clause 3, for the figure and words '5 per cent' substitute the fiure and words '2 per cent' ".

THIRU A. J. DOSS: I second it.

திரு. க. இராமமூர்த்தி: வட்டி வேண்டாமென்ற அளவிலே அரசு அபாரதம் விதிக்கிறது. அதை 5 சதவிகிதமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள்கூட அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். 5 சதவிகிதம் என்பதை மாற்றி, நாமினல் என்ற அளவிற்கு அது இருக்க வேண்டுமென்ற அளவிலே 1 சதவிகிதமாக இருக்கலாமென்று சொன்னார்கள். அரசே முன்வந்து 1 சதவிகிதமாக்கினால், என்னுடைய திருத்தத்தைத் திரும்பப் பெற நான் தயாராக இருக்கிறேன். 5 சதவிகிதம் தேவையில்லை. 2 சதவிகிதமாக மாற்றினால் நல்லது. 1 சதவிகிதமாக மாற்றினால் ரொம்பவும் நல்லது. அந்த முறையிலே கடன் பட்டவர்களுக்குச் சலுகை இருக்க வேண்டும். அவர்கள் கட்ட முடியாத

[திரு. க. இராமமூர்த்தி] [1981, மார்ச் 6

தால்தான் ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட் வருகிறது. ஜப்திக்குத் தங்களை ஆட்
படுத்திக் கொள்கிறார்களென்றால், திருப்பிக் கட்ட முடியாத நிலையால்தான்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலைக்கு ஆளாகும்
போது, அவர்களைக் கடுமையாக நடத்த வேண்டாமென்ற அளவிலே 5 சத
விகிதம் என்பதை 2 சதவிகிதமாக மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நான் பேசுகிறபோது அதை
விளக்கமாகச் சொன்னேன். முதலிலே 6 சதவிகிதம் வாங்குகிறபோது,
ஒவ்வொரு மாதத்திற்கும் அது கணக்கிடப்பட்டது. ஆனால் இன்றைக்கு
ஒவ்வொரு மாதத்திற்கும் கணக்கிடப்படாமல், இரண்டு ஆண்டுகளே கணக்கிடப்
படாமல் விடப்பட்டிருக்கிறது. அப்படி இரண்டு ஆண்டுகள் தள்ளிப் போடப்
பட்டதே ஒரு சலுகை. அதற்குப் பிறகு 6 சதவிகிதம் என்பதை 5 சதவிகித
மாக்கியிருக்கிறோம். அது இரண்டாவது சலுகை. இப்படி இரண்டு
சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே இவைகளைப்பற்றியெல்லாம்
நன்றாக ஆராய்ந்து, யோசித்துத்தான் கொண்டு வந்திருக்கிறோம் என்று
சொல்லி, திருத்தத்தை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்
திருத்தத்தை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா?

திரு. க. இராமமூர்த்தி: நான் திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 3, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 4, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 5.

THIRU K. RAMAMOORTHY: Sir, I move the following amendment standing in my name:—

"In clause 5, for the figure and words 6 per cent' substitute the figure and words '2 per cent'".

THIRU A. J. DOSS: I second it.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்
திருத்தத்தை வலியுறுத்துகிறாரா, திரும்பப் பெறுகிறாரா?

திரு. க. இராமமூர்த்தி: நான் என்னுடைய திருத்தத்தை திரும்பப்
பெறுகிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.



1981 மார்ச் 6]

பிரிவுகள் 5 முதல் 12 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

திரு. க. இராமமூர்த்தி: துணைத் தலைவரவர்களே, பிரிவு 8-க்கான என்னுடைய திருத்தத்தை நான் முன்மொழியவில்லை.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நிலவரி வசூல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 5/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆம் ஆண்டு நிலவரி வசூல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 5/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(2) 1981 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு (தமிழ் நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1981).**

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1981 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு (தமிழ் நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 10/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1981 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு (தமிழ் நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 10/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

---

@ 293-294 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(முற்பகல் 11-50)

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்வர்களே, பத்திரப் பதிவுச் சட்டத்திலே திருத்தத்தைக் கொண்டு வந்து மாண்புமிகு வரகத் தொழில் அமைச்சர் அவர்களால் இங்கே வைக்கப்பட்டுள்ள இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்பதிலே பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஏற்கெனவே 1908 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மத்திய சட்டப்படி எந்தக் கல்வித் தகுதி இருந்தாலும், கல்வித் தகுதி இல்லாவிட்டாலும் யாரும், எவரும், எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால், அவர்கள் எல்லாம் பத்திரம் எழுதலாம் என்றி ருந்தது. அப்படி ஒரு வாய்ப்பினைத் தந்ததன் காரணமாக அது சமுதாயத் திலுள்ள பாமர மக்களுக்குப் பெரும் தொல்லைகளைக் கொடுத்தது. கேரளா விலே ஏற்கெனவே அதில் திருத்தம் கொண்டு வந்துள்ளார்கள். குறிப்பிட்ட கல்வித் தகுதியுடையவர்கள் யார் யார் இருக்கிறார்களோ, குறிப்பிட்ட உரிமம் பெறுகிறவர்கள் யார் யார் இருக்கிறார்களோ அவர்கள்தான் பத்திரம் எழுத லாம் என்கிற முறையில் சட்டத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த முன்னோடியைத் தமிழகத்திலும் பின்பற்றி குறிப்பிட்ட கல்வித் தகுதியுடையவர்களை, பத்திரம் எழுதுவதிலே, இன்னும் பல துறைகளிலே அனுபவம் மிக்கவர்களை, சட்டம் அறிந்தவர்களைப் பத்திரம் எழுதச் செய்ய லாம் என்கிற முறையில் ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும். அந்த முறையில் தான் கேரளாவிலும் கொண்டு வரப்பட்டது. அந்த முறையில் நான் இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்கிறேன். இதற்கு முன்பு பத்திரம் எழுதுகிற வர்கள் செய்த தவறுகளினால் மக்கள் பலவிதமான தொல்லைகளுக்கு உள்ளாகியிருந்திருக்கிறார்கள். பொதுவாக இத்தகைய பத்திரங்களை எழுது கிறவர்கள் நல்லவர்களாக, நல்ல திறமையுள்ளவர்களாகத்தான் இருக்கி றார்கள். ஆனால் திறமையில்லாதவர்கள் தங்களைத் திறமையுள்ளவர்கள் போல் பாவனை செய்து இந்தத் தொழிலில் இறங்கியதன் காரணமாக கள்ளம் கபடமற்ற பாமர மக்கள் இவர்களைத் திறமையானவர்கள் என்று நம்பியதன் காரணமாக, பல தொல்லைகளுக்கு ஆளானார்கள். பாமர மக்களை ஏமாற்றி அவர்களுடைய பத்திரங்களில் திறமையின்மையின் காரணமாக சிக்கல்களை உண்டாக்கி அவர்கள் நீதிமன்றங்களுக்குச் சென்று வீண் செலவு செய்யும்படி செய்து மக்களைப் பாழாக்கினார்கள். இப்படிப்பட்ட நிலையில், இத்தகைய போக்கினைத் தவிர்க்க இந்தச் சட்ட முன்வடிவு வருவதால், நான் இதை முழு மனதுடன் வரவேற்கிறேன். ஆகவே, இந்தச் சட்டத் திருத்தம் இப்போது தேவைப்படுகிறது. ஆற்றல் படைத்தவர்கள், நல்லவர்கள், திறமையானவர்கள் பத்திரம் எழுதுபவர்களாக இருக்கிறார்கள் என்றால், அவர்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலம் எந்தவிதத்திலும் அடிப் படையான அழிவு இல்லை. ஆனால், எதனால் இந்தப் பத்திரம் எழுதுபவர்



களால் அந்தந்தக் காலத்திற்கு ஏற்ப, அவ்வப்போது ஏற்படுகின்ற சட்டத் திருத்தங்களுக்கு ஏற்ப, பத்திரங்களை நல்ல முறையில் எழுத முடியாமல போயிற்று என்பதையும் நாம் பார்த்தாக வேண்டும். பொதுவாக சொத்து மாற்றங்களைப் பொறுத்தவரையில், இதை எழுதுகிறவர்களுக்கு அதுபற்றிய போதுமான அறிவும் ஆற்றலும் இல்லை. ஆனால், சட்டம் படித்த வழக்கறி ஞர்களுக்கு இது சம்பந்தமான பூரண அறிவும், ஆற்றலும், அனுபவமும் இருக்கின்றன. இப்படிப் பத்திரம் எழுதுபவர்கள் அண்மையில் ஏற்படுத்தப் பட்டுள்ள சில சட்டத் திருத்தங்களுக்கு உள்ளாகியிருக்கக்கூடிய சட்டங் களைப் பற்றிக்கூட அறியாமல் இருக்கிறார்கள். அண்மையில் ஏராளமான சட்டத் திருத்தங்கள் சொத்து உரிமையைப் பொறுத்தவரையில் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. முன்பு எழுதி வந்தபடி, அதை அப்படியே பின்பற்றி பத்திரம் எழுதுபவர்கள் எழுதுகிறார்கள். பொது மக்களை இவர்கள் ஏமாற்றுவதன் காரணமாக அவர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. குடும்பங்கள் ஒற்றுமையாக இருந்த நிலை மாறி, 'பிரஸ்டீஜ்' அடிப்படையில் குடும்பங்கள் இரண்டாகிற நிலைமையும், வழக்கு மன்றத்திற்குப் போய் ஏராளமான பணத்தை வீணாக அவர்கள் செலவு செய்கின்ற நிலைமையும் தவிர்க்கும் முறையில் இந்தச் சட்ட முன் வடிவு கொண்டுவரப்பட்டிருப்பதால், நான் இதை வரவேற்கிறேன்.

யாருக்கு உரிமங்கள் வழங்கப்பட வேண்டுமோ, யார் உரிய கல்வித் தகுதி பெற்றிருக்கிறார்களோ அவர்களுக்குத்தான் பத்திரம் எழுதுகின்ற உரிமை யைக் கொடுக்க வேண்டும். பொதுவாக இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், பத்திரம் எழுதுகின்ற உரிமை பல நாடுகளில் குறிப்பாக அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய நாடுகள், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வழக்கறிஞர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள்தான் பத்திரம் எழுதுகிறார்கள். அவர்களே எழுதி அவர்களே கையொப்பமிட்டு, அவர்களே பத்திரப் பதிவாளர்களிடம் சென்று பத்திரத்தைப் பதிவு செய்கின்ற நிலையும் அந்நாடுகளில் இருக்கிறது. இத்தகைய நிலையை நம் நாட்டில் ஏன் பின்பற்றக்கூடாது என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டும். இதற்காகத்தான் நான் ஒரு திருத்தம் கூடக் கொடுத் திருக்கிறேன். சட்டத்தை நன்கு அறிந்தவர்கள், வழக்கறிஞர்கள் பத்தி ரத்தை எழுதுவார்களானால், தவறுகள் நடப்பதும், பணம் வீண் விரய மாவதும், வழக்குமன்றங்களுக்குச் செல்கின்ற நிலையும் வராது.

சென்னை மாநிலம் கூட்டாக இருந்தபோது, ஒரே ஒரு சட்டக் கல்லூரி தான் இருந்தது. இன்றைக்கு தமிழகத்தை எடுத்துக்கொண்டால், பாண்டிச் சேரி உட்பட 6 சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. மதுரை, கோவை,

திருச்சி, அண்ணாமலை நகர், சென்னை, பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. இன்றையதினம் ஏராளமான சட்டம் படித்த வழக்கறிஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கி றார்கள். அவர்களுக்கு உற்சாகம் அளிக்கும் வகையில் சிக்கலான, சிரமமான, நுட்பமான பத்திரங்களை எழுதுகின்ற உரிமையையாவது வழக்கறிஞராகப் பதிவு பெற்றவர்களுக்கு வழங்கினால், அவர்களிடையே இருக்கின்ற வேலை வாய்ப்பின்மை என்கிற அவல நிலை போய்விடும். மக்கள் அநாவசியமாக வழக்குமன்றத்திற்குச் சென்று பணத்தை வீண் விரயம் செய்ய வேண்டிய அவசியமும் இராது. சிரமமான, சிக்கலான, நுட்பமான சில குறிப்பிட்ட பத்திரங்களைப் பொறுத்தவரையில் மட்டும் இதற்கான உரிமையை வழக்கறி ஞர்களுக்கு வழங்கலாம். அதற்கான சட்டத் திருத்தத்தை இந்தச் சட்டத் திலே கொண்டு வர வேண்டும். வழக்கறிஞர்களாலேயே டிராப்ட் செய்யப்பட வேண்டும், அவர்களாலேயே அட்டெஸ்ட் செய்யப்பட வேண்டும், அவர்களா லேயே பத்திரப் பதிவாளர் முன்பாக பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்கிற முறையில் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி. வணக்கம்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ ரவர்களே, மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்ற 1981 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு, திருத்தச் சட்ட முன்வடிவின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது 1908 ஆம் ஆண்டிலிருந்து இருந்து வருகிற ரெஜிஸ்ட்ரேசன் ஆக்டைப் பின் பற்றி வருகிறார்கள். பத்திரம் எழுதுபவர்களுக்குக் குறைந்தபட்சம் இருக்க வேண்டிய கல்வித் தகுதிகளும், இதுபற்றிய நல்லறிவும் இல்லாத காரணத் தால், பல தவறுகளும், பொதுமக்களுக்கு இடையூறுகளும் ஏற்பட்டன. இந் நிலையில் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இது அனைவரும் அறிந்த ஒன்று. படித்தவன் பாட்டைக் கெடுத்தான், எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான் என்பதைப்போல எதிர்காலத்தில் இதுமாதிரி எழுதிக் கெடுக் கின்ற நிலையும், பொதுமக்கள் இடையூறுக்கு ஆளாகும் நிலையும், நீதி மன்றத்திற்குச் செல்லுகின்ற நிலையும் தவிர்க்கப்பட வேண்டுமென்ற அடிப் படையில் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருப்பதால், நான் இதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் எப்போது பார்த்தாலும் கன்னியா குமரி மாவட்டம் பற்றிப் பேசுவது உண்டு. இப்போதும் நான் அதைப்பற்றி நினைத்துப் பார்க்கிறேன். கேரளாவிலே 1955 ஆம் ஆண்டிலே செய்யப் பட்ட மாற்றத்தின் அடிப்படையிலே செங்கோட்டையிலும், கன்னியாகுமரி



மாவட்டத்திலும் அமுல்படுத்தியிருக்கிறார்கள். அதேமாதிரி திட்டத்தை தமிழகம் முழுமைக்கும் கொண்டு வருவதை நான் வரவேற்கிறேன். பத்திரம் எழுதுபவர்களுக்கு இன்ன கல்வித் தகுதி இருக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்ய வேண்டும். கல்வித் தகுதியுடையவர்களுக்கு லைசன்ஸ் தருவதுடன் அவர்களாலேயேதான் பத்திரம் எழுதப்பட வேண்டும். அப்படிச் செய்வது பாமர மக்களுக்குத் துணை நிற்பதாக இருக்கும். பாமர மக்கள் ஏதோ ஒருவர் எழுதுகிறார், அவரிடம் விவரம் எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது என்று எண்ணி ஏமாந்து போகாமல் இருப்பதற்கு இந்தக் கல்வித் தகுதி நிர்ணயம் அவசியம் தேவை. கல்வித் தகுதி பெற்றவர்கள் இன்றைக்கு ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். கற்றவர்களுக்கு வாய்ப்பு தரப்பட வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவருடைய நல்ல உள்ளத்தினை இது போன்ற சந்தர்ப்பங்கள் வரும்போது அறிவார்ந்தவர்கள் பயன்படுத்திக் கொள்ள ஏற்ற வாய்ப்பினை இந்த அரசு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். ஏற்கெனவே பத்திரம் எழுதிக்கொண்டிருப்பவர்கள், இதில் அனுபவம் பெற்ற வர்கள், ஆற்றல் பெற்றவர்கள் இப்படிப்பட்டவர்களையும் நாம் இழந்து விடக்கூடாது. அவர்களுக்கும் ஒரு கல்வித் தகுதியை நிர்ணயித்து, ஐந்து வருடம் அல்லது பத்து வருடம் அனுபவம் என்கிற நிலையையும் நிர்ணயம் செய்ய வேண்டும். அப்படிச் செய்வது நல்ல முறையில் பத்திரம் எழுதப் படுவதோடு தகுதியுள்ளவர்களுக்கு நாம் வாய்ப்பினைத் தருவதோடு நல்ல அறிவுள்ளவர்களை வளர்க்கத் துணைபுரிவதாகவும் இருக்கும். இலங்கையில் வக்கீல் குமாஸ்தாவாக இருக்கக்கூடச் சட்டம் படித்தாக வேண்டும். சட்ட வல்லுநருக்குரிய அனைத்துத் தகுதிகளையும் அவர்களும் பெற்றிருக்கிறார்கள். ஆனால் வழக்காட மட்டும் முடியாது. அவ்வளவு அறிவு பெற்றவர்களாக அவர்கள் இருக்கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : வக்கீல் குமாஸ்தாவுக்குச் சட்டக் கல்வித் தகுதி இருக்க வேண்டுமென்று இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : அவர்கள் மூன்று ஆண்டு சட்டக் கல்வி படிக்க வேண்டும். நீதிமன்றத்தில் வாதாட முடியாது. அப்படிப்பட்டவர்கள் நிறைய பேர் இன்றையதினம் இலங்கையில் பணியாற்றுகிறார்கள். இது போன்ற பல விவரங்களை நான் தந்தால், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம மூர்த்தி போன்றவர்கள் பல வக்கீல் குமாஸ்தாக்களை உருவாக்க முடியும் என்று கருதுகிறேன். (சிரிப்பு) பத்திரம் பதிவு செய்யப்படும்போது அதற்கான கட்டணத்தை வாங்குகிறோம். அந்தக் கட்டணத்தை ஒவ்வொரு வகைப் பத்திரத்துக்கும் இவ்வளவு இவ்வளவு கட்டணம் என்று ஒரே அளவில்

முறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பத்திரம் எழுதுபவர்களுக்கு இவ்வளவு என்று நாம் நிர்ணயிப்பதுடன், ஒவ்வொரு பத்திரமும் இப்படி இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதையும் வரன்முறைப்படுத்த வேண்டும், அதற்கு விளக்கமாக ஏற்கெனவே இருந்த சட்டத்திலே தெளிவாக வழிவகை இருப்பதாக நான் கருதவில்லை. யாரும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய முறையிலே தெளிவாக, விவரமாக அது எழுதப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கேரளாவிலே 1957 ஆம் ஆண்டு திருத்தம் மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் நாமும் வழிமுறைகளை மேற்கொண்டால், ஒரு சிறந்த வழிமுறைக்கு நாம் அடிகோலியவர்கள் ஆவோம். அந்த முறையில் தேர்வாணைக் குழு மூலம் தகுதியுடையவர்களை பத்திரம் எழுதுகின்றவர்களைத் தேர்ந்தெடுத்தால் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

THIRU J. M. MIAKHAN: Sir, I think that prescribing a qualification for the people who write the documents is not necessary. Already, the people who sell their properties find it difficult to get their documents registered. As a matter of fact, the Registrar himself sees, before registering the document, whether the document is written properly or not. These people who are already in the trade know their business. They may not be Advocates or legal experts; but they know how the documents are to be written and they know very well the form in which a document is to be written. Therefore, we need not unnecessarily meddle with these things. If the Government want to prescribe some qualification and to ask the Public Service Commission to make the selections, as another hon. Member said, we would only be increasing the cumbersomeness of the procedure. I will give an example of what is being done in other countries. In Hongkong, where I had been, they do not even charge a registration fee. Here, we levy a registration fee at 16 per cent. In Hongkong, they charge only 50 dollars for each copy of document. They charge 150 dollars for three copies of a document—one copy to be with the Registrar, one to be with the buyer and the other copy to be with the seller. That is all what is required to be done in countries like Hongkong. Here, we are having all sorts of cumbersome procedures. Therefore, to insist on a qualification for the people who write the documents is not necessary. It is sufficient if they are registered. If the Government want, they may prescribe a fee for document-writing and they may insist that a receipt be given. That will be sufficient. With these words, I conclude my speech.





(நண்பகல் 12-00)

THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI: Mr. Deputy Chairman, Sir, I thank you for having given me this opportunity to speak on this Bill. I welcome it because it is a very forward step. But, at the same time, I would like to make certain suggestions.

I welcome it because I have had occasion, on a number of times, to visit the Sub-Registrar's Office to get copies of documents. I feel that along with the minimum qualification which the Government are going to prescribe, there may be a clause enabling the holding of an examination to try and see that the document-writers write legibly. Now, what happens very often is this. There is a saying in Urdu as "Kudh likely; Kudha Pahe" which means "You write and God only must read it." A number of documents are written so illegibly that we are not able even to read them. I hope that when the new set of document-writers are selected, this point will be kept in mind and that it will be seen that their hand writing is legible.

Another point which I would like to suggest is that, while making these selections, women should be inducted in at least 50 per cent of the posts. Now, the women-clients find it very difficult even to enter the Sub-Registrar's Office. There is no place for them to sit, even in the verandah. The verandah, the side-rooms and other places are always full with groups of people sitting there and the women find it very difficult to sit there.

Sir, I welcome this Bill very much. But, because document-writing is a kind of self-employment, we cannot think of having highly qualified people for this. But, at least we may choose the best among those who are available and who have got experience in this work. Thank you.

THIRU A. R. DAMODARAN: Sir, the Bill seeks to amend the Central Act. The amendment seeks to give Government powers to license document-writers. For my part, I do not agree with the principle of the Bill at all for reasons which I shall state.

My first point is this. A document written by a licensed document-writer will not necessary be accepted by the Registration authorities because the Registration authorities have their own rules of scrutinising documents. So, if the Government license

[Thiru A. R. Damodaran] [1981 மார்ச் 6

the document-writers, it does not mean that all documents written by these people are going to be accepted by the Registration authorities.

No. 2, Sir, even the best of documents written by the acutest legal authorities—the best legal brains in our country have been writing documents—are often the subject-matter of litigation in courts. Even if the best among the advocates writes a document, it does not mean that it will not be taken to Court on interpretation of some clause, etc.

No. 3, I dislike this provision of the Government entering the field and issuing licences to document-writers and prescribing qualifications for such pepole. If we analyse what has happened in our country and in our State, at present, we will find that 80 per cent of the documents written in our villages for the literate or illiterate ryots are written probably by the Village Karnams—Kanakku-pillai or the, Village Munsif—and these documents are registered and have passed muster. The moment the Government bring rules regarding licensing of document—writers, the Government will have to prescribed educational qualifications and that will disqualify the vast numbers of experienced people who, today are writing 75 per cent of these simple documents like sale documents, mortgage documents for which the standard form has already been prescribed, which most of these document-writers follow.

My hon. Friend Thiru Thomas has said that Advocates will be more competent in drafting the documents. Without meaning any disrespect to the legal profession, I may even point out that 60 per cent of the documents written by Advocates are written by the Advocate's Clerks themselves. This is what is happening in actual practice. Any Advocate tells him, "You write this mortgage deed or sale deed." The settled form is there and the Vakil Gumastha writes it in a very beautiful manner. I have had documents written by them and I have not been able to correct them, though I am a Graduate. I do not know why this reform has been brought forth. Nobody from this side has asked the Hon. Minister to introduce this reform and it has come like a brilliant idea at mid-night. Perhaps the idea came because it has been adopted in Kerala in 1955. I do not know the conditions in Kerala, why it was introduced, and what abuses had crept into the system. I certainly feel that licensing procedure for document-writers is totally



1981 மார்ச் 6] [Thiru A. R. Damodaran]

unnecessary, needlessly futile in the sense that we will be causing great hardship to all these persons. My hon Friend Thiru Janarthanam wants examination to be conducted for licensing document writers. We are already conducting examinations for selection of village officers. The Government would have to make 25,000 document writers to write examinations and all these papers will be centrally valued by examiners of which departments—I think probably in the Registration Department—and the examination will have to be conducted by the Service Commission. Sir, I have not been able to understand the real purpose of this Bill. If it is intended to reform the system of document writing, then this licensing procedure is not going to reform the process at all because documents written by licensed document writers can also be rejected by the Registration Department. What the Hon. Minister should have solved is the tremendous delay in registration of documents, the tremendous delay in getting copies of documents. In some of the Registration Offices where there is very heavy work, the Hon. Minister could have introduced the Xerox Machine for taking copies of documents within 24 hours and giving them to the general public. This is there in every public library and in every registering office in other countries. But this reform has not been thought of by the Hon. Minister. Now the document writers will have to obtain licence after payment of necessary fees and will have to get the same renewed periodically. There is the bigger danger in the proposal of the Government to fix the charges which the document writer will have to collect for writing a document. Who is going to see that these fees alone are levied? It will be the Registration Department, Sir. May I point out that even in the Registration Department, the State Government has fixed the fees for registering

(பிற்பகல் 12-10)

documents? Is there any person in the State who has registered a document, who has merely paid the fees to the State and has been able to get a document registered in the Registration Department?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

Does not the Hon. Minister know that there is a system of unofficial fees collected invariably by 90 per cent of the Registration Officers for registering documents? The Hon. Minister has fixed a fee which may be Rs. 25 but what we pay there is Rs. 50 to get the

document registered. Otherwise, they will say, "This 'and' should not be in this sentence and this 'but' need not be there; you correct these and bring it day after tomorrow". To eliminate all these delay, we naturally have to pay what is known as 'Speed-money' for registration.

Sir, a number of reforms are required in the Registration Department. I welcome the hon. Member Thirumathi Mandakini Krishnamurthi's plea that 50 per cent of the so-called licensed people should be women. We wait for such a long time in the Registration Offices that it would be a pleasure to have somebody to talk to at least while we wait for the documents to be registered. I plead that all these regulations are needless. Our Tamil Nadu is full of rules and regulations on every aspect of life. To bring it in the field of document writers also is to bring in an unnecessary provision in the Registration Act which is already extremely complicated. I hope that on reconsideration the Hon. Minister will certainly not give effect to this because we are merely empowering the Government to make rules. May I request that he may hold this in abeyance until we reach a stage where it really becomes necessary? I oppose this Bill in principle and think that it is totally unnecessary and that it will not improve the system of registration or the system of document-writing in the State. Thank you.

திரு. ஆ. நல்லசிவன்: தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் பொதுவாக வரவேற்கிறேன். ஏற்கெனவே எழுதப்பட்ட தஸ்தாவேஜு களில் குறைபாடுகள் இருப்பதால், பொதுமக்களுக்கு இதனால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று இந்தச் சட்ட முன்வடிவிற்கான நோக்கத்தில் சொல்லப்பட்டிருப்பது உண்மைதான்.

இப்போது டாக்குமெண்ட் ரைட்டர்கள் அனைவரும் லாயக்கற்றவர்கள் என்று நாம் சொல்லிவிட முடியாது. அவர்களிடமும் நல்ல தரம் இருக்கிறது. இனிமேல் டாக்குமெண்ட் ரைட்டர்களாக வருபவர்களுக்கு ஒரு தகுதியை வைப்பது என்பது ஒப்புக்கொள்ளக்கூடிய ஒன்றுதான். இதனால் ஏற்கெனவே இருக்கிற டாக்குமெண்ட் ரைட்டர்களையும் நாம் தெருக்களில் விட்டுவிடக்கூடாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தற்போது பத்தாயிரக் கணக்கானவர்கள் தமிழ் நாட்டில் டாக்குமெண்ட் ரைட்டர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எழுதிய தஸ்தா



வேஜுகளில் குறைபாடுகள் இருந்தால், அவைகளை 'ரிவோக்' செய்து கொள்ளும் அதிகாரம் இருக்கிறது. இதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். இனிமேல் இதில் புதிதாக வருகிறவர்களுக்கு ஒரு தேர்வு வைத்துக்கூட லைசென்ஸ் தரலாம்.

தமிழ் நாட்டில் ஏற்கெனவே வக்கில் குமாஸ்தாக்களைப் பொறுத்தவரை, ஆரம்பத்தில் ரெஜிஸ்டர் செய்யாமலேதான் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் ரெஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டும் என்று வந்தபோது, ஏற்கெனவே இருந்தவர்கள் அனைவரும் ரெஜிஸ்டர் செய்யப்பட்டனர். புதிதாக வருபவர்களுக்குத்தான் 'குவாலிபிகேஷன்கள்' பொருந்தும் என்று அப்போதே வழிமுறைகள் செய்யப்பட்டன. அதைப்போலத்தான் இப்போதும் நாம் செய்ய வேண்டும். ஏற்கெனவே இருப்பவர்கள் அனைவரும் பதிவு செய்யப்பட வேண்டும். புதிதாக வருகிறவர்களுக்கு மட்டும் தகுதிகளை நிர்ணயிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதோடு கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு தவறான முறை நடைபெறுவதாக அறிகிறேன். கேரளத்தில் 'ரெஜிஸ்டிரேஷன் ஃபீஸ்' குறைவாக இருப்பதால் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளவர்கள் தங்களின் சொத்துக்களை அங்கே போய் ரெஜிஸ்டர் செய்து கொள்கிறார்கள் என்று ஒரு தகவல் சொல்லப்படுகிறது. அது எந்த அளவுக்கு உண்மை என்று புரியவில்லை. அதோடு அது எப்படி நடைபெறும் என்பதும் எனக்குப் புரியவில்லை. எந்த ரெஜிஸ்ட்ராருக்கு 'ஜுரிஸ்டிக்ஷன்' இருக்கிறதோ அங்கேதான் ரிஜிஸ்ட்டிரேஷன் செய்ய முடியும். ஆனால் கேரளத்தில் போய் வேறு ஒரு சொத்துக்கு உரிமை சர்ட்டிபிகேட் வாங்கிக்கொண்டு வந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சொத்துக்களையும் ரெஜிஸ்டர் செய்து விடுகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். இது எப்படி முடியும் என்பது எனக்குப் புரியவில்லை. இருந்தாலும் பலர் இப்படிச் செய்வதாகச் சொல்கிறார்கள். அதாவது கேரளத்தில் ரெஜிஸ்ட்டிரேஷன் பீஸ் குறைவாக இருப்பதால் இப்படிச் செய்வதாகச் சொல்கிறார்கள். எனவே கேரளத்தில் இருக்கிற ரெஜிஸ்ட்டிரேஷன் பீசையும் இங்கே இருப்பதையும் ஒப்பிட்டுப் பார்த்து, தமிழ் நாட்டில் அது அதிகமாக இருக்குமானால், அதைக் குறைக்க வேண்டும் என்று கூறி, மசோதாவை ஆதரித்து அமைகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், நான் என்னுடைய முழுமையான எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது ஒரு தேவை

பிறகு, அவசியமற்ற சட்ட முன்வடிவு என்பது மட்டுமல்ல, புதிய பிரச்சினைகளை உருவாக்கும் சட்ட முன்வடிவுமாகும். இதன் மூலம் புதிதாக லைசென்ஸ் பெற்றவர்கள்தான் இனிமேல் பத்திரங்களை எழுதும் தகுதியையும் அதிகாரத்தையும் பெறுவார்கள் என்ற நிலை உருவாகிறது. இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றுவதன் மூலம் இதுவரை இருந்து வந்த பிரச்சினைகளுக்கு ஒரு முடிவு கட்டப்படுவதாக அரசாங்கத் தரப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. இனிமேல் லைசென்ஸ் பெற்றவர்களிடம் எழுதப்படும் தஸ்தாவேஜுகளைப் பொறுத்தவரையில், இதுபோன்ற காரணங்களுக்காக நீதிமன்றங்களுக்குப் போக வேண்டிய கட்டாயம் ஏற்படாது என்ற உத்தரவாதத்தை அரசுத் தரப்பில் வழங்குவார்களானால், நான் இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். சில சந்தர்ப்பங்களில் பத்திரங்களை யார் எழுதினாலும், இதுபோன்ற பிரச்சினைகள் நீதிமன்றம் வரை வரத்தான் செய்யும். அது தவிர்க்க முடியாத சூழ்நிலை என்பதை நாம் உணர வேண்டும். எனவே பத்திரங்களை பட்டம் பெற்றவர்களோ, வழக்கறிஞர்களோ எழுதவில்லை என்ற காரணத்திற்காகத்தான் நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது என்ற வாதம் சரியல்ல. இதைச் சொல்லும்போது, இதற்கு நேர் எதிரான வாதத்தையும் அரசு ஏற்கத் தயாராக இருக்க வேண்டும். படித்தவர்களும், வழக்கறிஞர்களும்கூட பத்திரங்கள் எழுதும்போது, இது நீதிமன்றத்திற்குப் போகிறபோதுகூட இவர்கள் நம்மிடத்தில்தான் வர வேண்டும் என்ற அடிப்படையில், சுற்றி வளைத்து எழுதுவதுகூட பழக்கமாக இருக்கிறது. எனவே இது நடைமுறையில் மனிதனின் மனதைப் பொறுத்ததே தவிர, சூழ்நிலையைப் பொறுத்ததே தவிர, வேறல்ல. அதோடு பத்திரங்களில் தவறு ஏற்பட்டு நீதிமன்றத்திற்குப் போகிற சூழ்நிலையேகூட எப்போதோ ஒரு முறை ஏற்படுவதே தவிர, அன்றாடம் நடைபெறுவதில்லை.

அநேகமாக 100-க்கு 90 கிராமங்களில் அங்கே பணியாற்றும் கிராமக் கர்ணம்தான் பத்திரங்களை எழுதுவது வழக்கமாக இருந்து வருகிறது. பழக்கத்தின் காரணமாகவும் அனுபவத்தின் காரணமாகவும் அவர்கள் எழுதுகிறார்கள். சில சொற்றொடர்களை உரிய முறையில் பயன்படுத்தத் தெரிந்திருப்பதால், அவர்கள் எழுதுகிறார்கள். சில பதப்பிரயோகங்களைக் குறித்தேகூட நீதிமன்றங்களுக்குப் போகிற நிலைமையும் உண்டு. கிராமக் கர்ணங்கள் போன்றவர்கள் அனுபவத்தின் அடிப்படையில் பதப்பிரயோகங்களைத் தெரிந்து எழுதுகிறார்கள். அதோடு பத்திரங்களை எழுதும்போது, தமிழில் கூட்டு எழுத்துக்களோடு எழுதுவது என்பது அவசியமான ஒன்றாக



இருக்கிறது. விட்டுவிட்டு ஒவ்வொரு எழுத்தாக எழுதுவதைவிட சங்கிலித் தொடர்போல எழுதுவதற்குக் காரணம், இடையிலே வேறு வார்த்தைகளையோ எழுத்துக்களையோ நுழைக்க முடியாத வகையில் எழுதுவது அவசியமாகிறது. சில நேரங்களில் ஒரு எழுத்தேகூட வார்த்தையின் அர்த்தத்தையே விபரீதமாக மாற்றி விடுவதுண்டு; பத்திரத்தின் நோக்கத்தையேகூட மாற்றி விடுவதுண்டு. எனவேதான் இப்படிக் கூட்டெழுத்துக்களை உபயோகிப்பது நடைமுறையாக இருக்கிறது. அதோடு அவைகள் தேவைகளாகவும் இருக்கின்றன. அப்படி எழுதக் கூடியவர்கள்தான் நின்று நிலைக்கிறார்கள். யார் வேண்டுமானாலும் எழுதுவது என்பதில்லை. சில குறிப்பிட்டவர்களுக்குத்தான் அந்த வாய்ப்பு இருக்கிறது. வாதத்திற்கு வேண்டுமானால் யார் வேண்டுமானலும் எழுதலாம் என்ற அடிப்படையில் நாம் பேசலாம். ஆனால் பல கிராமங்களில் பத்திரங்களை எழுதுவது என்பது சிலருக்குத்தான் அனுபவப்பட்ட ஒன்றாக இருக்கிறது. நான் இதைச் சொல்லும்போது, லைசென்ஸ் என்று சொல்லப்படும் சட்ட பூர்வமான தகுதியைப்பற்றிச் சொல்லவில்லை. அதைத் தாண்டி, மக்கள் சிலரை இந்தக் காரியத்தினைச் செய்வதற்குத் தகுதியுள்ளவர்களாக அங்கீகரிக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் மக்களே சிலரை அங்கீகரிக்கும்போது, அரசு எதற்காக அவர்களைத் தகுதியுள்ளவர்கள் என்றோ அல்லது இல்லாதவர்கள் என்றோ பிரிக்க வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை.

பெரிய சொத்துக்களைக் குறித்து பத்திரம் எழுதும்போது அல்லது செட்டில்மெண்ட் அல்லது உயில் எழுதும்போது கூடுமானவரை அது தொடர்பான வழக்கறிஞர்களை, சட்ட வல்லுநர்களைக் கலந்து ஆலோசித்து அவர்கள் மூலமாகத்தான் எழுதுகிறார்கள். தேவைப்பட்டால், அவர்களிடம் எழுதி வாங்கிக்கொண்டு வந்து தங்களுக்குப் பழக்கப்பட்ட பத்திரம் எழுதுகிறவர்கள் மூலமாக எழுதிக் கொள்கிறார்கள். இதில் கைராசிகூடப் பார்க்கிறார்கள். பம்பாயில் இருப்பவர் தஞ்சாவூரைச் சார்ந்தவரானால், அவருக்கு யாரிடத்தில் எழுதினால் கைராசி உண்டு என்று நினைக்கிறாரோ அவரிடம் தஞ்சாவூருக்கு வந்து எழுதி வாங்கிக்கொண்டு போகிற நிலைகூட இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் இப்போது இருக்கும் முறையை மாற்ற என்ன அவசியம் ஏற்பட்டது என்பது எனக்குப் புரியவில்லை. இந்த மாநிலத்தில் பட்டம் பெறாதவர்கள்தான் வக்கீல் குமாஸ்தாக்களாகப் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பட்டம் பெறாதவர்கள் இலங்கையில் வக்கீல்களாகப் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று ஆளும் கட்சியைச் சார்ந்த டாக்டர் சனார்த்தனம் தன் **பேச்சிலே** குறிப்

பிட்டார். இந்தியாவிலேகூட சட்டக் கல்வி பெறாமலேயே, பல்கலைக் கழகத்தின் பட்டப் படிப்பு மட்டும் பயின்று, வழக்கறிஞர்களாகத் தங்களை வக்கீல்களாகப் பதிவு செய்து கொண்டு மிகச் சிறப்பாகப் பணியாற்றியவர்கள் இருந்திருக்கிறார்கள். ஆகவே . . .

டாக்டர் இரா. சனார்த்தனம்: படித்தவர்கள் இலங்கையில் நிறைய இருக்கிறார்கள், அவர்களைப் பயன்படுத்திக்கொள்ளுகிற முறையில் அங்கே அப்படிச் செய்கிறார்கள் என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கைராசிபற்றிக் குறிப்பிட்டார்கள். டாக்டர்களைப் பொறுத்தவரையில்தான், கைராசிபற்றிப் பார்ப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், பத்திரங்களை எழுதுவதற்குக்கூட கைராசி பார்ப்பதை மாண்புமிகு உறுப்பினர்தான் இங்கே முதன் முறையாகத் தெரிவித்திருக்கிறார்.

(பிற்பகல் 12-20)

திரு. க. இராமமூர்த்தி: பத்திரத்தை எழுத எந்தக் கல்வித் தகுதியை மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறார் என்று எனக்குப் புரியவில்லை. சட்டக் கல்வியைக் குறிப்பிடுகிறாரா அல்லது எழுத்துக் கல்வி பயிற்சியைக் குறிப்பிடு கிறாரா என்று தெரியவில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம்: எழுதப் படிக்கிற அறிவு மட்டும் கொண்டு பத்திரத்தை எழுதும்போது சட்டப் பிரச்சினைகள் வருகின்றன. தவறாக எழுதுவதால் தவறு ஏற்படுகிறது. ஆகவே குறைந்தபட்ச அறிவு தேவை யென்று நினைக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அனுபவ ஞானம் வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறார்.

* திரு. க. இராமமூர்த்தி: அனுபவ ஞானம் வேண்டும் என்று நான் சொல்லுகிறேன். அது வேண்டாம் என்று அவர் சொல்லுகிறார். சட்டக் கல்வியறிவு பெற்றதால்தான் எழுத முடியும் என்ற நிலை வந்தால், நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். சட்டக் கல்வி பெற்றவர்கள் எழுதினால், அது வழக்குமன்றத்திற்குப் போகாது என்ற உத்தரவாதத்தைத் தர முடியுமா? பத்திரத்தை எழுதுகின்ற பணியிலே இப்போது இருக்கிறவர்களை வேண்டாம் என்று சொல்ல வேண்டிய அவசியம் என்னவென்று தெரியவில்லை. இவர்கள் எழுதுவதால் பிரச்சினைகள் வருகின்றன. அதனால் நீதிமன்றத்திற்குப்



போக வேண்டிய நிலை வருகிறதென்றால், லைசென்ஸ் பெற்ற எழுத்தாளர்களால் எழுதப்படும் பத்திரங்கள் வழக்குமன்றத்திற்குப் போகாது என்ற உத்தரவாதத்தைத் தரப் போகிறார்களா? அவர்கள் தவறு செய்யமாட்டார்கள் என்று எப்படிச் சொல்லுகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. அவசியம் இல்லாமல் அரசாங்கம் ஒவ்வொரு சட்டத்திலும் கை வைக்கிறது. நம்முடைய அரசாங்கம் எல்லாச் சட்டங்களிலும் கை வைக்க வேண்டும் என்று நினைக்கிறது. மனிதன் மூச்சு விட வேண்டும் என்றால்கூட, அரசாங்கத்தின் அனுமதியால்தான் நடக்கிறது என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டுமென்று நினைக்கிறது. அந்த அடிப்படையிலே எதையாவது செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள். பத்திரப் பதிவுத் துறையைப்பற்றி வெளியே அதிகமான பேச்சு இல்லாமல் இருந்தது. ஆகவே இப்படிப்பட்ட ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டுவந்து அந்தத் துறையைப்பற்றித் தெரிந்துகொள்ளுங்கள் என்று அறிவிக்கின்ற முறையிலே இந்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறதே தவிர, இதனால் உடனடியாக மாநிலத்திற்கு என்ன பலன் கிடைக்கப் போகிறது என்று தெரியவில்லை. இதனால் பலன் ஏற்படுவதைவிடச் சங்கடங்கள், கஷ்டங்கள்தான் அதிகம். ஏற்கெனவே, இருந்த கிராமக் கர்ணங்களை வேலையை விட்டு அனுப்பிவிட்டோம். அவர்கள்தான் பத்திரங்களை எழுதிக் கொண்டிருந்தார்கள். பத்திரம் எழுதுவதால் அவர்களுக்கு வருமானம் வர வாய்ப்பு இருந்தது. இப்போது அதிலேயும் மண்ணை அடித்திருக்கிறார்கள். இந்தச் சட்ட முன்வடிவால் என்ன இலாபத்தை நாம் அனுபவிக்கப் போகிறோம் என்று தெரியவில்லை. அவசியம் இல்லாமல், மக்களுக்குத் தொல்லை கொடுக்கிற, இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்க்காமல், புதிய பிரச்சினைகளை எழுப்புகின்ற சட்ட முன்வடிவாக இது இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அமைச்சர் அவர்களுக்கு உள்ள ஏகப்பட்ட வேலையில் இதைப் பார்க்க முடியவில்லை என்று நினைக்கிறேன். ஆகவே அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்கின்ற வகையிலே இந்தச் சட்ட முன்வடிவை திரும்பப் பெற வேண்டுமென்று கோருகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்ற பத்திரப் பதிவு திருத்த மசோதா மீது என்னுடைய கருத்தை எடுத்து வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்தத் திருத்த மசோதாவிற்கான காரணம் சொல்லப்பட்டிருப்பதில், தமிழ் மாநிலத்தில் கன்னியாகுமரி மாவட்டம், செங்கோட்டை தாலுக்கா ஆகியவற்றில், திருவிதாங்கூர்-கொச்சியில் இருக்கிறபோது இருந்து தொடர்ந்து இருந்து வருகிற

அந்த முறையை மாநிலம் முழுவதற்கும் கொண்டு வருகிறோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே தமிழகத்தோடு அந்த மாவட்டம் இணைந்து சுமார் 25 வருடங்கள் கழிந்த பிறகு, இரண்டு முறையையும் நடைமுறைப் படுத்தி அதில் சிறப்புகள் இருக்கின்றன என்பதை ஒப்புக்கொண்டு அதைக் கொண்டு வருவதாக இங்கே சொல்லப்படுகிறது. உண்மையில் பத்திரம் எழுதுவதில் சில ஒழுங்குமுறைகளைக் கொண்டு வருவது மிகவும் அவசியம் என்று நான் கருதுகிறேன். அதோடுகூட இன்னும் பல திருத்தங்களும் கொண்டு வரப்பட வேண்டும்.

பத்திரப் பதிவு நடைபெறுவது சம்பந்தமாக வருஷா வருஷம் அடிக்கடி சில அரசு ஆணைகளைப் பிறப்பித்து கட்டணங்களை உயர்த்திக் கொண்டே இருக்கிறோம். அதன் விளைவு என்ன என்பதைத்தான், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. நல்லசிவன் அவர்கள், "கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்படி நிலவுகிறது என்று நான் கேள்விப்படுகிறேன்" என்று சொன்னார்கள். நடைமுறையிலே இருப்பது அப்படித்தான். கன்னியாகுமரி மாவட்டத்தில் செங்கோட்டை தாலுக்காவில் உள்ளவர்களில் பெரும்பாலோர் கேரள மாநிலத்தோடு தொடர்பு கொண்டிருப்பதால், அவர்களுக்குரிய சொத்து தமிழகத்திலும் இருக்கும், கேரளத்தில் உள்ள கொல்லம், புனலூர் போன்ற பகுதிகளிலும் இருக்கும், இந்தச் சொத்தை அவர்கள் பங்கிடும் போது, கேரள மாநிலத்தில் இருக்கும் சொத்தையும், தமிழகத்தில் உள்ள சொத்தையும் சேர்த்துப் பங்கிட்டு பத்திரப் பதிவு செய்துகொள்ள கேரள மாநிலத்துச் சட்டம் அனுமதி அளிக்கிறது. ஆனால் அப்படிச் செய்ய நம்முடைய மாநிலச் சட்டம் அனுமதிக்கவில்லை. திருவனந்தபுரத்தில் உள்ள சொத்தைச் சேர்த்து நாகர்கோவிலில் உள்ள சொத்தையும் சேர்த்து பாகப் பத்திரம் எழுதி நாகர்கோவிலில் உள்ள சப்-ரிஜிஸ்ட்ராரிடம் கொடுத்தால், இப்போது இருக்கக்கூடிய சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது என்று மறுத்து விடுகிறார்கள். அதே சமயத்தில் கேரள மாநில அரசு மிக விசாலமாக, புத்திசாலித்தனமாக இரண்டு சொத்துக்களையும் சேர்த்துப் பங்கிட அனுமதி அளிக்கிறது. ஆகவே அந்த வகையிலும் நம்முடைய சட்டம் திருத்தப்பட வேண்டும்.

கேரளத்தில் பத்திரப் பதிவுக்கு இருக்கக்கூடிய கட்டணம் மிகக் குறைவு. இங்கே இருக்கக்கூடிய கட்டணம் மிகவும் உயர்வு. ஐம்பதினாயிரம் ரூபாய் உள்ள சொத்தைப் பதிவு செய்யும்போது இங்கே ஏழாயிரம், எட்டாயிரம் ரூபாய் செலவாகுமானால், அங்கே ஆயிரம் ரூபாயிலேயே செய்து விடலாம். சாதாரணமாக எங்கே போய் செய்தால், இலாபம் இருக்குமோ அங்கே போய்



செய்வது இயல்பு. இதனுடைய விளைவு என்னவென்றால், கேரளா மாநிலத்திலிருந்து தமிழகத்தின் எல்லைப் பகுதி அருகில் இருக்கக்கூடிய பாரசாலை, நெய்யாற்றங்கரை, கொல்லம், கோட்டையம் போன்ற பகுதிகளுக்கு சப்-ரிஜிஸ்ட்ராரை மாற்ற ஒரு இலட்சம் ரூபாய் கேட்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடத்தும் மாநிலத்திலா இப்படி ரேட் கூடியிருக்கிறது என்றால், கூடியிருப்பது உண்மைதான். அதிலே சந்தேகம் இல்லை. இது எல்லோருக்கும் பொது, கம்யூனிஸ்ட் கட்சியானாலும், காங்கிரஸ் ஆனாலும் இதிலே மாற்றம் கிடையாது. இப்படிப் பணம் கொடுத்து மாற்றல் வாங்கிய ரிஜிஸ்ட்ரார் சொல்லுகிறார், 'நாகர்கோவிலில் ஏழாயிரம் ரூபாய் கொடுத்துப் பதிவு செய்வதைவிட இங்கே கொண்டு வந்து ஒரு ஆயிரம் ரூபாய் கொடுத்தால் போதும், எனக்கு இரண்டாயிரம் ரூபாய் கொடுங்கள், நான் பதிவு செய்து தருகிறேன்" என்று சொல்லுகிறார்.

கேரளாவில் அரிசி விலை உயர்ந்தால், நம்முடைய மாநிலத்தில் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிசியின் விலையை உயர்த்துகிறோம் என்று சொல்லுகிறோம். திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அரிசி போகக் கூடாது, அப்படிப் போனால் அங்கேயிருந்து கேரளத்திற்கு அது போய்விடும் என்று சொல்லி அடிக்கடி சட்டம் போட்டு அமுல்படுத்துகிறோம். ஆனால் பத்திரப் பதிவுத் துறையைப் பற்றி இதுவரை அரசின் கவனத்திற்கு வரவில்லை என்று நான் அறிகிறேன். ஆகவே, இப்போது இதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். கேரள மாநிலத்தில் இருக்கக்கூடிய கட்டணத்திற்கொப்ப தமிழகத்திலே இருக்கக் கூடிய கட்டணத்தைக் குறைக்க வேண்டும். அதற்காக விரைவிலே சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரம் எழுதுகிறவர்களுக்கு ஒரு தகுதி, திறமை ஆகியவைகளை உருவாக்க அரசு எடுத்த முயற்சியை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்ன குறைபாடுகளும் இல்லாமல் இல்லை. அனுபவரீதியாகத் திறமையாகப் பத்திரம் எழுதுபவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சட்ட நுணுக்கம் தெரிகிறது. தமிழிலே சட்டம் படித்து நுணுக்கமாக, அனுபவ ரீதியாக எழுதுகிறார்கள். வில் ஆனாலும் சரி, செட்டில்மென்ட் ஆனாலும் சரி, பின்னாலே வழக்கு வராமல், தொல்லை வராமல் நுணுக்கமாக எழுதுகிறார்கள். லைசென்ஸ்காரரிடம் பதிவு செய்ய வேண்டும் என்றால், கன்னியாகுமரி மாவட்டத்தில் செங்கோட்டையில் இருக்கும் அனுபவம் உள்ள பத்திரம் எழுதுபவர்களிடம் எழுதி விட்டு, அனுபவம் இல்லாத லைசென்ஸ் வாங்கி வைத்துள்ளவர்களிடம்

15 ரூபாய், 20 ரூபாய் கொடுத்துவிட்டு கையெழுத்து வாங்கிவிடுகிறார்கள். அத்தகைய குறைபாடு இல்லாமல் இருக்கக்கூடிய வகையில், இனிமேல் லைசென்ஸ் கொடுக்கும்போது, திறமை குறைந்தவர்கள் லைசென்ஸ் பெறாத வகையில், அவர்களுக்கென்று தனியாக வகுப்பை நடத்த வேண்டும். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்வு நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். நான் சொல்லுவது தேர்வு அல்ல, வகுப்பையே நடத்த வேண்டுமென்று சொல்லுகிறேன். இதற்காக பல்கலைக் கழகத்தில் டிப்ளமா கோர்ஸ் வர வேண்டும்.

(பிற்பகல் 12-30)

ஏனெனில் அவர்களுக்கு சொத்துரிமை பற்றிய சட்டம் தெரிய வேண்டும். வாரிசு சட்டம் தெரிய வேண்டும். அது அஞ்சல் வழிக் கல்வி மூலம் ஒரு வருடம் டிப்ளமோ கோர்ஸ் என்று வைத்து அதிலே பி.ஏ. பாஸ் ஆனவர்கள் எழுதி, அதிலே அவர்கள் தேர்வு பெற்றவர்களாகத்தான் இருக்க வேண்டும். அவர்களுக்குத்தான் அந்த லைசென்ஸ் கொடுக்க வேண்டும் என்று விதி போடலாம். ஆகவே 3 பல்கலைக் கழகங்களோடும் இதுபற்றித் தொடர்பு கொண்டு பத்திரப் பதிவுக்கு என்று ஒரு டிப்ளமோ கோர்ஸ், சர்டிபிகேட் கோர்ஸ் கொண்டு வந்து, அதிலே வயது வரம்பைத் தளர்த்தி, இப்போது அந்தப் பணியிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கும் ஒரு வாய்ப்பு கொடுத்து செயல்படுத்த வேண்டும். புதிதாகப் பட்டம் பெற்றவர்களுக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கும்போது, அவர்களுக்கு கையெழுத்திலே தேர்வு முக்கியமாகக் கொடுக்க வேண்டும். கையெழுத்து சரியாக இல்லாவிட்டால், அதை முதலிலே ரத்து செய்யலாம். அப்படி அழகாக எழுதியும் அதில் இடைச்செருகல் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்த அளவுக்கு பரிசீலனை செய்து இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையிலே இப்போது ஒரு படி எடுத்து வைத்திருக்கிறது.

அடுத்து, நம்முடைய பதிவுத் துறையிலே கைக்கூலி எங்கேயும் தாண்டவமாடிக் கொண்டுதானிருக்கிறது. பத்திரம் பதிவு செய்வது என்ற உடனே அந்த அதிகாரிகள் என்ன நினைக்கிறார்கள்? "ஏதோ நீங்கள் எல்லாம் சொத்துக்கள் வாங்கி வைத்திருக்கிறீர்கள். உங்களுக்கு ஏதோ கிடைக்கும். எங்களுக்கு என்ன பங்கு?" என்று கேட்கிறார்கள். அந்தப் பாகம் என்று வைக்கிறபோது, இந்தத் துறையில் உள்ளவர்களும் ஒரு பங்காளி என்று கருதுகிறார்கள். அவர்களுக்கு அப்படித்தான் தோன்றுகிறது. இப்போது மத்திய அரசு ஒரு சட்டம் வைத்திருக்கிறது. எஸ்டேட் டியூட்டி என்றால் என்ன





அர்த்தம்? யாராவது சொத்து வைத்திருந்து, நிரம்ப சொத்து வைத்திருந்து, அவர்களுடைய சொத்தை அவருடைய வாரிசுகளுக்கு வைக்கிறபோது அவருடைய சொத்தில் ஒரு சதவிகிதம் அரசாங்கத்துக்கு என்று வைக்க வேண்டும். அதுதான் எஸ்டேட் டியூட்டி என்பதன் தத்துவம். அப்படி செட்டில்மெண்ட் செய்கின்றபோது, பாகம் வைக்கின்றபோது, நமக்கு ஒரு பங்கைத் தரலாமே என்பதுபோல அவர்கள் இருக்கின்றார்கள். அரசாங்கத்திலே சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கின்ற அதிகாரிகளுக்கு அப்படிக் கேட்கின்ற ஒரு மனநிலை அங்கே இருந்துகொண்டிருக்கிறது. அவர்கள் அதை உருவாக்கி, ஒழுங்குபடுத்தி, திறமையாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். முதலிலே 'ரிஜிஸ்ட்ரேஷன் பீஸ்' எவ்வளவு, ஆயிரம் ரூபாய்; அதற்குப் பத்திரச் செலவு எவ்வளவு, கைக்கூலி எவ்வளவு என்பதையெல்லாம் கணக்கிட்டு தயாராகவே வைத்துக்கொண்டு பத்திரம் பதிவு செய்யப் போகிறார்கள். அந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும் என்று நான் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு தொடக்கம். அரசு நல்ல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து பதிவுத் துறையில் இருக்கக்கூடிய எல்லா கேடுகளையும் நீக்க வேண்டும். அதற்கு காம்பிரிஹென்சிவ் பில் கொண்டுவர வேண்டுமென்று என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு மேல்வைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு பத்திரப் பதிவு திருத்தச் சட்ட முன்வடிவு பற்றி இதுவரையில் மாண்புமிகு அங்கத்தினர்களும், எல்லாத் தரப்பு அங்கத்தினர்களும் தங்களுடைய மேலான உணர்வுகளைச் சொல்லியிருக்கிறார்கள். முதற்கண் மாண்புமிகு அங்கத்தினர்கள் சொன்ன நல்ல ஆலோசனைகளையும் நல்ல கருத்துக்களையும் அரசு மனதிலே கொண்டு இதற்கான நியதிகளை உரிமைகளை வழங்குகின்றபோது, மேற்கொள்ளுகின்ற திருத்தங்களை உருவாக்குகின்றபோது தக்க வகையிலே ஆவன செய்யும் என்று முதலில் உறுதி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதற்கண் சில விவரங்களைச் சொல்வது என்னுடைய தார்மீகக் கடமை என்று கருதுகிறேன். மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவருடைய கருத்துக்களைச் சிறப்பாக நல்குகின்றபோது, ஒரு விவரத்தை இந்தக் கண்ணியமிக்க சபையிலே வைத்துள்ளார்கள். நல்ல பல கருத்துக்களைச் சொல்கின்ற நேரத்தில், கருத்துக்களினூடே இந்தச் சட்ட முன்வடிவைப்பற்றி அவர்கள் ஒரு உணர்வைச் சொன்னார்கள். அரசினுடைய அணுகுமுறை பற்றி, அரசு மேற்கொண்டிருக்கின்ற சட்ட முன்வடிவினுடைய தன்மைகளைப் பற்றி, அவர்கள் கருத்துக்களை நல்கினார்கள். அப்படிச்

[திரு. கே. எ. கிருஷ்ணசாமி] [1981 மார்ச் 6

சொல்கின்ற நோக்கிலே "ஏதாவது செய்ய வேண்டும். ஏதாவது செய்து பதிவுத் துறைக்குப் பெயர் வாங்கித் தர வேண்டும். இன்றைக்குப் பதிவுத் துறையைப்பற்றி அவனி அறியாமல் இருக்கிறது. உலகம் அறியாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல பணிகள் காரணமாக யோசனை செய்தாரோ இல்லையோ, ஆனால் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த பதிவுத் துறையினுடைய விவரங்களை உலகம் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள்" என்று அவர்களுடைய உணர்வை மனதாரச் சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு மிகவும் பணிவாகச் சொல்லிக்கொள்கிறேன். அவர்களும் நானும் காப்பாற்ற வேண்டிய அளவுக்கு, ஒரு பலஹீனமான துறையல்ல பதிவுத் துறை. அது இன்றைக்கு ஏறத்தாழ 100 ஆண்டுகளைக் கடந்து, இன்னும் சொல்லப்போனால் 117 ஆண்டுகளைக்கூட கடந்து, மக்களுக்கு இன்றும் தொடர்ந்து சேவை செய்து வரக்கூடிய ஒரு துறை. 1834 ஆம் ஆண்டு இந்த பதிவுத் துறை விரிவாக்கப்பட்டு 117 ஆண்டுகளாகப் பல மேடு பள்ளங்களைக் கடந்து எல்லாத் தரப்பு மக்களுக்கும் சேவை செய்கின்ற ஒரு சர்வீஸ் டிப்பார்ட்மெண்டாக இருந்துகொண்டு பணி புரிந்து வருகிறது. இதை இந்த நோக்கில் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அது மட்டுமல்ல. இன்றையதினம் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் இணைந்துள்ள துறைகள் அரசில் எத்தனையோ இருக்கின்றன. ஆனால் எந்தத் துறைக்கும் இல்லாத தனித்தன்மை இந்தப் பதிவுத் துறைக்கு உண்டு. பிறந்தது முதல், தொட்டில் முதல், கல்லறை வரை மனிதனுடைய நடவடிக்கைகளில் இந்தத் துறை பின்னிப் பிணைந்திருக்கிறது. அது எந்தத் துறை என்றால், இந்தத் துறைதான். தொட்டில் முதல் கல்லறை வரை மக்கள் எந்த நடவடிக்கை எடுத்தாலும், எந்தச் செயலை எடுத்தாலும், மக்களுக்குப் பணி புரிகின்ற வகையிலே இந்தத் துறை பணிகளை வகுத்துக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, வேறு எந்தத் துறையிலும் இல்லாத அளவுக்கு இன்றைக்கு இந்தத் துறை 11 சட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அப்படிச் செயல்படுத்திக்கொண்டிருக்கின்ற ஒரு துறை, பதிவுத் துறைதான். (1) இந்தியன் பார்ட்னர்சிப் ஆக்ட் Indian Partnership Act,

(2) சங்கங்களின் பதிவுச் சட்டம் (Societies Registration Act)

(3) பிறப்பு இறப்பு பதிவுச் சட்டம் (Briths and Deaths Registration Act)



1981 மார்ச் 6] [திரு. கே. எ. கிருஷ்ணசாமி]

(4) இந்திய பதிவுச் சட்டம் (Indian Registration Act, 1908)

(5) தமிழ் நாடு சிட்டு நிதிகள் சட்டம் (Tamil Nadu Chit Funds Act)

(6) தனித் திருமணச் சட்டம் (Special Marriages Act)

(7) இந்து திருமணச் சட்டம் (Hindu Marriages Act)

(8) வரதட்சிணை தடைச் சட்டம் (Dowry Prohibition)

(9) பார்சி திருமண, திருமண முறிவு சட்டம் (Parees Marriages & Divorce Act)

(10) திருவாங்கூர் சிட்ஸ் சட்டம் (Tiruvangore Chits Act)

(11) இந்திய முத்திரைச் சட்டத்தில் சில விதிகள் (Certain Provision of the Stamp Act) ஆகிய எல்லாவற்றையும் நிறைவேற்றிக் கொண்டு வருகிறது. இப்படிப் பல சட்டங்களைச் செயல்படுத்த வேண்டிய நிலை இருக்கிறது. காலத்தின் கட்டாயம் ஏற்பட்ட பிறகு இந்தச் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வருகிறோம். ஏதோ விளம்பரத்திற்காக அல்ல. தேவையைக் கருதி, அவசியம் கருதித்தான் செய்கிறோம். அதற்குக் காரண காரியங்களைக் கூறியிருக்கிறோம். 'ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்' என்பதில் தெளிவாகக் கொடுத்திருக்கிறோம். அதிலே கருத்து வேறுபடலாம். ஆனால் குழந்தை விளையாட்டாக இதை இந்த அரசாங்கம் கொண்டு வர இருக்கிறது என்று சொன்னார்கள். அதுவும் இதுபோன்ற கண்ணியமிக்க சபையில், உறுப்பினர்களைப் போன்ற விவரம் தெரிந்த பெருமக்கள் மத்தியிலே இதைக் கொண்டு வருகிறோம் என்றால், ஒரு முறை அல்ல, இரு முறைகள் அல்ல, மூன்று முறைகள் அல்ல, ஆயிரம் முறைகள் அதைப்பற்றி யோசனை செய்துதான் இந்தச் சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வருகிறோம். அதிலே கருத்து மாறுபடலாம், வேறுபடலாம். அவை ஜனநாயகம் அளித்திருக்கின்ற உரிமைகள். இன்றைக்கு மாறுபட்டிருக்கிறார்கள். வேறுபட்டிருக்கிறார்கள். அந்த நிலையில் நாங்கள் விளக்கம் சொல்வது எங்களுக்கு தார்மீகக் கடமை. பிறகு அந்தக் கருத்துக்களை உறுப்பினர்கள் மறுக்கின்ற நிலையில், அதைக் காலத்திற்கு விட்டுவிட்டு, எங்கள் கடமையைச் செய்ய வேண்டியதாக இருக்கின்றது. அந்த வகையிலேதான் உறுப்பினர்கள் எல்லாம் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சில விவரங்களைக்கூட கேட்டிருக்கி

(பிற்பகல் 12-40)

றார்கள். அந்த விவரங்களுக்குச் சில விளக்கங்களை அளிப்பது என்னுடைய கடமையென்று கருதுகிறேன். இன்றைக்குப் பொதுவாக இதனை வரவேற்ற நண்பர்களும் அல்லது சில நிலைமைகளில் மாற்றங்களைக் கொண்டுவரச்

சொன்ன உறுப்பினர்களும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இன்றைக்கு தகுதியுள்ளவர்கள் அங்கே இருக்கிறார்கள், புதிய முயற்சி காரணமாக அவர்களுக்கு வேலை வாய்ப்பின்மை ஏற்பட்டுவிடக் கூடாதென்ற விவாதத்தைச் சொன்னார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது, ஒரு கருத்தைச் சொன்னார்கள். இது அவசியமே இல்லை, இன்றைக்கு உள்ளவர்களாலே என்ன தவறுகள் நடந்துவிட்டன, படித்தவர்கள் எழுதுவதில்கூட தவறுகள் நடக்கின்றன, இன்றைக்கு எழுதுபவர்கள் என்ன தவறுகள் செய்துவிட்டார்கள், வழக்கறிஞர்கள் எழுதும் பத்திரங்களில்கூட குறைகள் இருக்கின்றன என்று இரண்டு விவரங்களைச் சொன்னார்கள். இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வந்ததற்குக் காரணம், அனுபவத்தில் அங்கே சில குறைபாடுகளைக் கண்டறிந்ததுதான். பொறுப்பு வாய்ந்த ஆடிட்டர் ஜெனரல் அவர்கள் கூட அவற்றைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு நடைமுறையில் சில பலஹீனங்கள் அங்கே இருக்கின்றன. குறிப்பாகக் கிராமங்களில் இருக்கிறவர்கள், விவரம் தெரியாதவர்கள், அறியாமையில் இருக்கிறவர்கள் பதிவு செய்ய வருகின்றபோது, சில பேர்கள், சட்டத்தில் பாதுகாப்பு இல்லாததால், சட்டத்திலுள்ள சந்து பொந்துகளை வைத்துக்கொண்டு, அவர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று ஆடிட்டர் ஜெனரல் அவர்களே சொன்னதாலும், நம்முடைய அனுபவத்தாலும், அந்தக் குறைகளைப் போக்குவதற்கு முயற்சி எடுத்திருக்கிறோம்.

திருச்சி மாவட்டத்தில், பெரம்பலூர் தாலுக்காவில், பூலம்பாடி என்ற கிராமம் இருக்கிறது. அங்கு சர்வே எண் 335/1-ல் 2.34 ஏக்கர் நிலத்தினை ரூ. 1,500-க்கு வரதம்மாள் என்பவர் விற்றார். தமக்கு உரிய நிலம் 1.34 ஏக்கரே என்றும் 2.34 எனக் கைத் தவறுதலாக கிரையப் பத்திரத்தில் எழுதப்பட்டுவிட்டது என்று கூறி, ஒரு பிழைத் திருத்தல் பத்திரம் ஒன்றினைப் பின்னர் எழுதினார். இப்பத்திரத்தின் தன்மை பற்றி வருவாய் வாரியக் கருத்து கோரப்பட்டது. முத்திரைச் சட்டத்தின்படிப் பிழைத் திருத்தல் பத்திரம் ரூ. 1,500-க்கு உரிய ஒரு கிரையப் பத்திரம் என்றும், அவ்வாறே முத்திரைத் தீர்வை வசூலிக்க வேண்டுமென்றும் வாரியம் தீர்ப்பளித்தது. பத்திரம் எழுதுபவரின் பிழை காரணமாக கிரயம் பெறுபவர் இருமுறை தீர்வை வழங்க வேண்டி நேர்ந்துள்ளது. இப்படிப்பட்ட குறைகள் இருக்கின்றன.

இதேபோல் விழுப்புரம் பதிவு மாவட்டத்தில் ஒருவர் உயில் பத்திரம் எழுதினார். பத்திரத்தின் இடையில் கீழ்கண்ட சொத்தினை இன்றே ஒப்படைத்துவிட்டேன் என்னும் வாசகம் கண்டிருந்தது. இறுதியில் உயிலுக்



குரிய வாசகங்களான "இந்த உயில் என் ஆயுளுக்குப் பின் அமுலுக்கு வர வேண்டியது; இதை மாற்றவும் ரத்து செய்யவும் எனக்கு அதிகாரமுண்டு" என்னும் வாசகங்கள் அமையப்பெற்றிருந்தன. இப்பொருள் குறித்து நீதிமன்றங்களின் தீர்ப்பின் அடிப்படையில் இப்பத்திரம் உயில் என முடிவு செய்யப்பட்டது என்றாலும், பத்திரம் எழுதியவரின் நோக்கு யாது என்பதைத் தெளிவாக அறிவது இயலவில்லை. செட்டில்மென்டுக்கும் உயிலுக்கும் வேறுபாடு அறியாததால் பத்திரம் எழுதுபவர் இவ்வாறு இடர்தரும் வகையில் பத்திரம் எழுதிவிட்டார். பத்திரம் எழுதுபவரின் நோக்கம் யாது என்று தெளிவாக அறிய முடியவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : அதுவே அவருடைய நோக்கமாக இருக்கலாம்

மாண்புமிகு திரு. கே. எ. கிருஷ்ணசாமி : It is a debatable point. அவர் ஒன்றைச் சொல்லியிருப்பார். எழுதுகிறவர் வேறு ஒன்றைப் புரிந்து கொண்டிருப்பார். அவருக்கு வழிகாட்ட அது வாய்ப்பாக அமைந்திராதென்பது என்னுடைய யூகம். இப்படி நடைமுறையிலே இருக்கிறது. பத்திரங்களை எழுதுகிறவர்களுக்கு அந்தச் சட்டத்தின் தன்மைகள், அந்த உணர்வுகளைப் புரிந்து எழுதும் தகுதி இருக்க வேண்டும். அவர்களுக்குக் குறைந்தபட்ச ஞானம் இல்லாத காரணத்தால், இப்படிப்பட்ட சிக்கல்கள் ஏற்பட்டு, நீதிமன்றங்களுக்குச் சென்று, பெருந்த பணச் சுமையை, மனச் சுமையை கிராமங்களிலே உள்ள மக்களுக்கு, அறியாத மக்களுக்கு ஏற்படுத்துகிறது. எனவே பத்திரங்களை எழுதுபவர்களுக்கு குறைந்தபட்சத் தகுதி இருக்க வேண்டும், குறைந்தபட்ச அனுபவம் இருக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில்தான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 10, 20 குறைபாடுகளை நான் நேற்றையதினம் தேடி எடுத்து வைத்துள்ளேன். இப்படிப்பட்ட குறைபாடுகள் இருந்துகொண்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் பேசுகின்றபோது வழக்கறிஞர்களுக்கு உரிமம் வழங்கிவிட்டால், பெருகி வரும் வழக்கறிஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கலாம், அவர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள் அவர்களுடைய பணியையும் தக்க முறையிலே பயன்படுத்திக் கொள்ள முடியுமென்ற விவரங்களைச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பக்கத்திலுள்ள வழக்கறிஞர் சொன்னாரோ என்னவோ, வாத்தியாருக்கு!

[1981 மார்ச் 6

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அது மட்டுமல்ல, அமெரிக்கா, மலேசியா போன்ற நாடுகளில் இது போன்ற வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உரிமம் வழங்கப்படுகிறதென்று சொன்னார்கள். அதையும் நான் கனநேரம் எண்ணிப் பார்த்தேன். தக்கவர்களிடத்தில் யோசனை செய்து பார்த்தேன். அப்படி யோசனை செய்து பார்க்கிறபோது, இன்றைக்கு அப்படிப்பட்ட ஒரு நடைமுறையை விரிவாக்குவோமானால், நான் ஏற்கெனவே சொன்னது போல, இன்றைக்குப் பத்திரப் பதிவில் பெரும்பகுதியினராக ஈடுபட்டுள்ள பத்திரம் எழுதுகிறவர்கள் நிலை என்னவாகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தக் காரியத்திலே ஈடுபட்டுள்ள எளியவர்கள் நிச்சயமாகப் பாதிக்கப்படுவார்களென்ற நிலைமைகள் இருக்கின்றன. அது மட்டுமல்ல, பெரிய அளவிற்குத் தொகை இருந்தால்தான் வழக்கறிஞர்கள் எழுதுவார்கள். பெரிய அளவிற்கு அவர்களுக்கு வரவு இருந்தால்தான், அதை ஏற்றுக்கொள்கிற சூழ்நிலை இருக்கிறது. இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஏற்பட்ட பிறகு, சிறு கிராமங்களில்கூட 8 கிலோ மீட்டர் தூரத்திற்குள் ஒரு துணைப் பதிவாளர் நிலையம் இருக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதன் மூலம் கிராம மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று, அந்தப் பணி விரைவுபடுத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில், அந்த சின்னஞ்சிறு கிராமங்களில் வழக்கறிஞர்களின் பணி கிடைக்குமா ? சேவை கிடைக்குமா என்றால், அது இயற்கையில் நடக்கக் கூடியதாக, மெய்யாக இருக்கக்கூடியதாக இல்லை. கிராமங்களில் அது கிடைக்காதென்று கருதுகிறேன். ஆனால் இதை பல வழக்கறிஞர்கள் பயன்படுத்தாமல் இருக்கிறார்களா என்றால், பயன்படுத்துகிறார்கள். பணக்காரர்கள், வசதிபடைத்தவர்கள் வழக்கறிஞர்களை வைத்துத் தான் பத்திரங்களை எழுதுகிறார்கள். அப்பட்டப்பட்டவர்களுக்கு மட்டுமே இந்த உரிமையை வழங்குவதென்ற நிலைமை ஏற்படுமானால், ஏழைகளும் இந்த வசதிகளைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆனால் ஏழைகளுடைய நிலைமை இப்படி பத்திரங்களை எழுதுவதற்கு உகந்ததாக இராதென்ற காரணத்தால், அந்தக் கருத்திற்கு உடன்பட முடியவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது, 50 விழுக்காடு பெண்களுக்குப் பத்திரப் பதிவிலே உரிமம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் கருத்தை ஆய்வில்



1981 மார்ச் 6] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

எடுத்துக்கொண்டு, விதிகளை விரிவாக்குகின்றபோது அனுதாபத்தோடு கவனிக்கப்படுமென்பதை இந்த நேரத்திலே நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குப் பணியாற்றிக்கொண்டிருப்பவர்கள் பணி பாதிக்கப்படாமல் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு கேரளாவிலே இருக்கின்ற அந்தச் சட்டத்தின்படியே குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் அதிலே பயிற்சி பெற்றவர்கள், 5 ஆண்டுகள் தொடர்ந்து பத்திரம் எழுதிக் கொண்டிருக்கிறவர்களுக்கு உரிமம் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-50)

அதனைப் போலவே கேரளத்தில் சட்டத்திலே பல விதிகளை உருவாக்கியிருக்கிறார்கள். 'தேர்ட் பாரம்' படித்தால் போதும் என்கிற முறையில் கல்வித் தகுதி வைத்திருக்கிறார்கள். 5 ஆண்டுகள் பத்திரம் எழுதுகின்ற தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். வழக்கறிஞர்களுக்கும், முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்று கேரளா சட்டத்திலே சொல்லியிருக்கிறார்கள். நல்ல, தேவைப்பட்ட, சிறந்த அம்சங்களை எடுத்துக்கொண்டு மேலும் நாம் எந்த அளவுக்கு வேண்டுமோ அந்த அளவுக்குச் சட்டத்தைச் செழுமைப்படுத்துவோம். எந்தக் காரணத்தைக் கொண்டும் இப்போது தகுதியுடன் இந்தப் பணியைச் செய்கின்றவர்களுக்கு வேலை வாய்ப்பின்மை ஏற்படாமல் இருக்குமாறு பார்ப்பதில் இந்த அரசு கவனமாக இருக்கும். 4 நாட்களுக்கு முன்பு நான் சட்டமன்றப் பேரவையில் பேசும்போது கூட இதுபற்றி ஒரு கருத்தைச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இராமமூர்த்தி அவர்களும், திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும் இதை எதற்காக அரசு கொண்டு வந்திருக்கிறது என்பதைப்பற்றிச் சொல்லும்போது, ஏதோ இந்த அரசு இதில் கவனம் செலுத்தாமல் கொண்டு வந்திருப்பதாகச் சொன்னார்கள். இதுபற்றி சென்ற ஆண்டு ஒரு ஆய்வு செய்து பார்த்தோம். டெபிசிட் ஸ்டாம்பு, குறைவாக முத்திரை மதிப்பிடப்பட்டு அதன் காரணமாக ஸ்டாம்பு குறைவாகச் செலுத்தப்பட்டு அதன் காரணமாக அரசுக்கு வரவேண்டிய வருவாய் குறைவாக வருகின்ற முறை பரவலாக இருந்திருக்கிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்களும் இருக்கின்ற நடைமுறை நிலவரங்களையெல்லாம் சொன்னார்கள். குறைந்த அளவு ஸ்டாம்பு செலுத்தப்பட்டதால், தமிழ் நாட்டில் மட்டும் 70 ஆயிரம் ஆவணங்களுக்கு சென்ற ஆண்டு குறைவாக ஸ்டாம்புக் கட்டணம் செலுத்தப்பட்டிருக்கிறது. பிறகு, அவையெல்லாம்

கண்டு பிடிக்கப்பட்டு, 49-வது விதியின்படி மீண்டும் அவையெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு, 3 கோடியே 23 லட்சம் ரூபாய் திரும்பப் பெறப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் பத்திரத்தை எழுதுபவர்கள் சொத்து மதிப்பைக் குறைவாக எழுதிப் பதிவு செய்து விடுகிறார்கள். அந்த டாக்குமென்ட் ரைட்டர்கள் மீது நடவடிக்கை எடுக்க இப்போது நமக்கு சட்டப் பாதுகாப்பு இல்லை. சட்டப்படி அது குற்றம். ஆனால் சட்டப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசுக்குச் சட்டப் பாதுகாப்பு இல்லை. அந்தச் சட்டப் பாதுகாப்புக்காகத்தான் இந்தச் சட்ட முன்வடிவு இப்போது அவையினுடைய அனுமதிக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல், கிராம மக்களிடையே இன்றைக்கு இருக்கிற சேவையை விரிவுபடுத்தவும், விரைவுபடுத்தவும், தகுதியில்லாதவர்கள் வேறு வேலை ஒன்றும் கிடைக்காவிட்டால் இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் காத்திருந்து விட்டு திடீரென்று இந்த வேலைக்கு வந்து விடுகிற நிலையைப் போக்கவும், 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் அனுபவம் பெற்று தகுதி பெற்றிருப்பவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவும், அரசின் வருமானத்தை எந்த விதத்திலும் ஊனம் ஆக்காமல் செய்கின்ற வகையிலும் இந்தச் சட்டத் திருத்தம் ஒரு முற்போக்குச் சட்டமாக, ஏழையெளியவர்களுக்குப் பயன்படுகின்ற சட்டமாக இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. பன்னெடுங்காலமாக இருந்து வருகிற சட்டத்தின் விதிகளைப் பயன்படுத்தி, இந்த ஆவணங்களை எல்லோரும் எழுதிவிடுகிறார்கள். ஒரு காலத்தில் நிலம் சம்பந்தப்பட்ட வரையில் மட்டும்தான் பத்திரம் எழுதினார்கள். ஆனால் காலம் மாறி வருகின்ற இன்றைய சூழ்நிலையில் திருமணம் சம்பந்தமாகப் பத்திரம் எழுத வேண்டியிருக்கிறது. வணிகர்கள், வியாபாரிகள் இப்படிப்பட்டவர்களுக்குப் பத்திரம் எழுத வேண்டியிருக்கிறது. காலம் செல்லச் செல்ல பணிகளின் தன்மை வளர்ந்து கொண்டே இருக்கிறது. அதற்கேற்ப சட்டத் திருத்தங்களைக் கொண்டு வர வேண்டியது இந்தத் துறையின் தார்மீகக் கடமை. தொட்டில் முதல் கல்லறை வரை இதனுடைய பணி பின்னிப் பிணைந்திருக்கிறது.

திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, சில நல்ல விவரங்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்கள் பேசும்போது, ஒரு விவரத்தைச் சொன்னார்கள். பத்திரம் எழுதுகிற முறையை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று சொன்னார்கள். குறிப்பிட்ட வடிவில் பத்திரங்கள் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்குப் பத்திரங்கள் ஒரு குறிப்பிட்ட வடிவில் இல்லை, ஆகவே பத்திரங்களை ஒரே 'ஸ்டாண்டர்ட்' ஆகக் கொண்டுவர ஏதாவது வழிவகை இருக்கிறதா



என்றும் கேட்டார்கள். இதை தமிழகம் முழுமைக்கும் ஒழுங்கு முறையில் ஒரே வடிவில் கொண்டுவர அரசு விரும்புகிறது. ஆவணம் எழுதுகிறவர்களை இந்த அரசு எப்படி ஒழுங்கு முறைக்கு உட்பட்டவர்களாகக் கொண்டு வர வேண்டுமென்று விரும்புகிறதோ அதே போல பத்திரம் எழுதுகிற முறையும் குறிப்பிட்ட ஒரே வடிவில் இருக்க வேண்டுமென்கிற கருத்தினை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இப்போது சொல்லிக் கொள்வேன். மலேசியா போன்ற நாடுகளில் ஆவணங்கள் அச்சடிக்கப்பட்டு, ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கின்றன, எல்லாம் ஒரே 'ஸ்டான்டர்ட்' ஆக இருக்கின்றன. கிரயம், ஈட்டு, பரிவர்த்தனை போன்றவைகள் அச்சடிக்கப்பட்டு அதற்கான மாதிரிப் படிவம்கூட இருக்கிறது. பத்திரங்களை ஆய்வு செய்த மாநிலக் கணக்காயர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் ஆவணங்களின் தன்மைகளை அறிந்தோ அறியாமலோ மாற்றம் செய்தல் போன்ற தன்மைகளின் காரணமாக அரசுக்கு வர வேண்டிய முத்திரைக் கட்டணம் குறைகிறது என்று சொல்லி, பத்திரங்கள் எல்லாம் ஒரே வடிவில் ஒழுங்குபடுத்தப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறார். இந்த அரசு அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு ஒழுங்கு படுத்துவதன் மூலம் அது ஏழையெளிய மக்களுக்குப் பயன்படும். அதற்குச் சட்டத் திருத்தம் தேவைப்படும். ஆவணங்களைத் தயாரிப்பதும் எளிதாகும். பதிவுக் கட்டணமும் எளிதாக்கப்படும். இந்த முறை காரணமாக ஒரு புதிய முறையை ஆவணங்கள் எழுதுபவர்கள் நடைமுறைக்குக் கொண்டு வருவார்கள். அப்படி உருவாக்கப்பட்டால், மக்களும் ஏமாற்றத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள். நடைமுறையில் அத்தகைய ஒரு சட்ட முன்வடிவினை உருவாக்க வேண்டிய நியாயமான நிலைக்கு அரசு வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன விரும்புகிறார்களோ அந்த எண்ணம் நிச்சயமாக ஈடேற எந்த நடவடிக்கையையும் எடுக்க, இந்த அரசு உறுதுணையாக இருக்கும் என்பதோடு, அது அரசின் ஆய்விலும் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பின்னால் அவையின் அனுமதிக்காக அதைக் கொண்டு வருகிறேன் என்பதைச் சொல்லி, அதற்கு முன்னதாக இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற பத்திரம் எழுதுபவர்களுக்கு உரிமம் வழங்கப்பட வேண்டுமென்று அதிகாரம் வழங்குகிற இந்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு உறுப்பினர்கள் அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, பத்திரப் பதிவு (தமிழ் நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

பிரிவு 2.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பிரிவு இரண்டுக்கான திருத்தத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ரா. தாமஸ் முன்மொழிவார்.

THIRU P. R. THOMAS: Sir, I move the following amendment:—

"In clause 2 add the following words at the end of the proposed section 89-B:—

"And such rules may also provide that certain special categories of documents should be drafted, attested and presented for Registration only by practising Advocates.".

THIRU A. R. DAMODARAN: I second it.

THIRU K. RAMAMOORTHY: Sir, I move the following amendment:

"In clause 2, add the followig sub-clause to the proposed new Section 89-B:

"Document writers in existence to-day with a minimum experience of one year before any of the Registration offices in the State shall be granted licences automatically on application in the prescribed form and on payment of the prescribed fees."

THIRU A. J. DOSS: I second it.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது ஏதோ நான் இந்தப் பத்திரம் எழுதுகின்ற தொழிலை முழுவதுமாக வழக்கறிஞர்களுக்குத்தான் வழங்க வேண்டுமென்று வேண்டு கோளாக நான் கொடுத்ததாகக் கூறினார்கள். நான் என்ன கருத்தில் சொன்னேன் என்றால், குறிப்பிட்ட சில நுட்பமான, சிக்கலான, சிரமமான பத்திரங்களை வழக்கறிஞர்கள் எழுதுவதற்கான உரிமங்களை வழங்கி பிரத்தி யேகமாக அவர்களுக்கு இந்தச் சலுகை அளிக்கப்பட வேண்டுமென்று



கூறினேனே தவிர, முழுமையாக இந்தப் பத்திரம் எழுதுகின்ற உரிமத்தை வழக்கறிஞர்களுக்கே அளிக்க வேண்டுமென்று கூறவில்லை. ஆகவே இதற்குத் திருத்தம் கொண்டுவரும்போது உரிய வழிவகை செய்ய வேண்டுமென்று சொல்லி முடிக்கிறேன்.

(பிற்பகல் 1-00)

*திரு. க. இராமமூர்த்தி : என்னுடைய திருத்தத்தையொட்டி ஒரு சில கருத்துக்களைச் சொல்கிறேன். பத்திரம் எழுதுகின்ற பணியிலே ஈடுபட்டிருப்பவர்கள், அவர்களுடைய தொழில், அல்லது அந்தப் பத்திரம் எழுதுவதையே தொழிலாக வைத்துக் கொண்டிருப்பவர்கள் எந்த விதத்திலேயும் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்ற உணர்வோடுதான் என்னுடைய திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சில தவறுகள் நடைபெற்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். சில பத்திரங்கள் எழுதப் படும்போது, அது உயிலா அல்லது செட்டில்மென்டா என்று தெரிந்துகொள்ள முடியாத அளவிலே இருக்கிறது என்று சொன்னார்கள். பத்திரம் எழுதுகின்றவர்களுடைய பணி என்னவென்றால், சொத்துக்கு உரியவர்களின் நோக்கத்தின் படியே எழுதுவதாகும். அப்படி எழுதச் செய்வது சொத்துக்கு உரியவர்களுக்கு இருக்கின்ற உரிமை என்பதோடு மட்டுமல்ல, அவர்கள் வேறு பல குடும்பச் சூழ்நிலைகளாலே, எழுதுகின்ற பத்திரங்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற அளவிலே ஒரு வரையறை இல்லாமல் அவர்கள் விருப்பப்படி எழுதச் சொல்லும்போது, அவர்களின் விருப்பப்படி எழுதுவதே ஒரு திறமை. அதை மறுப்பதாக இருக்கக்கூடாது. இந்தச் சட்டத்தின் நோக்கம், பத்திரத்திலே சில சமயங்களிலே சர்வே நம்பர் கூட விட்டுப் போகின்றது. வழக்கறிஞர் எழுதினால்கூட, இந்தத் தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. எப்படிப் பட்டவராக இருந்தாலும், இந்தவிதமான குறைகள் ஏற்படுகின்றன. திண்டிவனத்திலே இருக்கும் ஒருவர், பத்திரம் எழுத விரும்புபவர் திண்டிவனத்திலே இருக்கிற வக்கீலைத்தான் பார்க்க வேண்டும். அதைத்தாண்டி சென்னைக்கு வரும்போது, திண்டிவனத்திலே இருக்கும் வக்கில் சொன்னது தவறு என்று இவர்கள் சொல்கிறார்கள். கோர்ட்டிலே அப்பீலுக்கு வரும்போது என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், 'ஏனய்யா கீழ்க்கோர்ட்டிலே உன்னுடைய வக்கீல் சரியாகச் செய்யவில்லையே ?" என்று கேட்கிறார்கள். ஆகவே, எழுதுகின்ற எழுத்துக்களுக்கும் வார்த்தைகளுக்கும் பொருள் தெரிந்து எழுதுகின்ற முறைதான் வேண்டும். சில பத்திரங்கள் பதிவாகி இன்றைக்குத்தான் குறைகள் எல்லாம் தெரிய வந்தது என்று சொன்னார்கள். இதிலே

Registration Officer அவர்களுடைய பங்கு என்ன? அவரே பண்ணியிருக்கலாமே? ஏன் பண்ணவில்லை? அப்படியென்றால் அங்கே இருப்பவர்களுக்கு இதிலே பங்கு இருக்கிறது என்று அர்த்தமா? அல்லது அங்கே முடியவில்லை என்று அர்த்தமா? தகுதிபெற்று உத்தியோகத்திலே இருப்பவர்களால் இதையெல்லாம் தடுக்க முடியவில்லை. இந்தக் குறைகளை முதலில் போக்க வேண்டும். Under-estimate குறைத்து மதிப்பீடு போடுவதைப் பொறுத்தவரையில், பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதுவே முடிவல்ல, கோர்ட்டுக்குப் போகக்கூடியதாக இருக்கிறது. 'நான் சொன்ன மதிப்பு தான் சரி' என்று சொல்லி சொத்துக்குச் சொந்தக்காரர்கள் மீண்டும் நீதிமன்றத்திற்குப் போகும் வாய்ப்பு இருக்கிறது. Under-estimate என்பது Market Value மாறும்போது வருகிறது. அதிலே எப்போதும் difference of opinion கருத்து மாறுபாடு இருக்கிறது. 'இது அதிகமான மதிப்பு' என்று சில நேரங்களில் சொல்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், 'என்னுடைய சொத்துக்கு இவ்வளவு மதிப்பு இல்லை' என்று வாதிடும் உரிமை இருக்கிறது. அந்த அடிப்படையிலே சில தவறுகள் நடந்திருக்கலாம். அதனால், எல்லாமே தவறு என்றும் சொல்லிவிட முடியாது. வழக்கறிஞரே பல இடங்களிலே 'டிராப்ட்' பண்ணுகிறார். அப்படி வழக்கறிஞர் 'டிராப்ட்' பண்ணி எழுதிக் கொடுப்பதை பிறகு பத்திரம் எழுதுபவர் தான் எழுதுகிறார். "வழக்கறிஞர் எழுதிக்கொடுத்தாலும்", யார் Document Writer ரோ "அவரிடம் சென்று எழுதிக்கொண்டு வா" என்று சொல்கிறோம். ஆகவே, அவர்களுக்குச் சங்கடம் வராமல், இதற்கான விதிகளை நிர்ணயிக்கும் போது, பார்த்து விதிகளை வகுக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 5 ஆண்டுகள் அனுபவம் வேண்டும் என்று சொன்னார்கள். அந்தத் தொழிலை ஓராண்டுக் காலம் நடத்தியிருக்கிறார்கள் என்று சொன்னாலே அவர்களுக்கு அனுபவம் இருக்கிறது. அவர்களை வைத்து மக்கள் எழுதுகிறார்கள் என்று சொன்னால், அவர்களுடைய திறமையைச் சமுதாயம் அங்கீகரித்துவிட்டது என்றுதான் பொருள். ஆகவே, '1 ஆண்டுக் காலம்' என்பதை, எனது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்று சிபாரிசு செய்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதிகளிலே இவ்வாறு கொண்டு வரவேண்டும் என்பதை வலியுறுத்தும் அளவிலே என்னுடைய திருத்தத்தை முன்மொழிகிறேன்.

*THIRU A. R. DAMODARAN: Sir, I just want to make one or two observations. I appreciate the Hon. Minister's intention in bringing in this Bill. But, I would like to inform him that all these defects that he has pointed out about under-valuation of documents,



about the confusion between settlement and will, etc., will not be solved by having licensed document writers. As the hon. Member Thiru Ramamoorthy pointed out, it is because the intention of the testator itself was confused that the document had to go to the High Court. The main difficulty in this measure relates to those people who are already writing documents. The Hon. Minister has said that when he promulgates the rules, he will try to absorb all these people who are now writing documents. It can never be done because if the Government are going to prescribe a minimum qualification like S.S.L.C., certainly 10,000 pepole are going to be disqualified and the Government cannot say that they will take them. How are the Government going to judge the capacity of the document writers? They will have to have some objective test or prescribe a minimum qualification. So, this measure is going to deprive about 10,000 or 15,000 people of the little employment that they are having by writing documents sitting underneath the trees beside the Registration offices.

Regarding the standardsation of forms, the Government cannot undertake this responsibility because if anything goes wrong in the standard form, then, again the Government will have to give an amendment to it. I would like to inform the Hon. Minister that, in our libraries, there is a huge volume titled "Bhindra's Law of Draftsmanship" in which they have furnished specimen forms for various documents like sale deeds, mortgage deeds, partition deeds, agreements, etc. Probably, the Hon. Minister may advise the Tamil Research Department to go through the ready-made documents given in that printed book which is in use for the past 50 years. Many advocates refer to these documents when writing different documents. Very few advocates have got the time to draft original documents. This is no reflection on advocates at all. But, we have to go by precedents. I would request the Hon. Minister to ask the Tamil Research Department to go through the ready-made documents to prepare some such type of forms which can be printed by some non-official organisation because the Government could not undertake the responsibiliy of preparing documents as it will give rise to all sorts of legal objecions. If an analysis of the documents that have been registered is made one will find that nearly 80 per cent of them are very simple documens like usufructuary mortgage deeds, sale deeds, etc., which can be covered by proform Tamil document-forms. If this can be

[Thiru A. R. Damodaran] [1981 மார்ச் 6

provided, even the document writers may become unnecessary and we ourselves can write many of the documents. I want this suggestion to be considered by the Hon. Minister.

My other suggestion is that in the heavy Registraion officers in the Registration Department, the Hon. Minister can easily have "Xerox" copying machines for preparing copies of documents which now take 2 or 3 months. It can be done in the major Registration offices. I do not want the copying to be done free and the payment of a fee can be prescribed. But, a man who gets a document registered should be able to get immediately a copy of the document.

These are all the suggestions that I wanted to make. Thank you.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே. ஒரு விவரத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் இன்றைக்குப் பத்திரங்களைப் படிவங்கள் எடுப்பதில் சுணக்கமும், காலதாமதமும் ஆகிறது என்ற விவரங்களை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் காலதாமதத்தையும், சுணக்கத்தையும் போக்குவதற்கு சென்னை-மதுரை போன்ற பெரிய நகரங்களில் 'படிவங்கள் எடுக்கின்ற இயந்திரங்களை' வழங்க பரிட்சார்த்தமாக இன்றையதினம் ஏற்பாடு செய்து படிவங்களை விரைவிலே கொடுப்பதற்கு அரசு ஆவன செய்து வருகிறது. மேலும் படிவங்களைக் கேட்பவர்களுக்கு அந்த முறை காரணமாக நல்ல பணியைச் செய்ய முடியும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் திருத்தத்தை வற்புறுத்துகிறாரா !

திரு. பா. ரா. தாமஸ் : வற்புறுத்தவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் திருத்தத்தை வற்புறுத்துகிறாரா ?

திரு. க. இராமமூர்த்தி : என்னுடைய திருத்தத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றுமே சொல்லவில்லையே ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : ஓர் ஆண்டு பணியாற்றினாலும் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கேரளத்திலே இன்றைக்கு 5 ஆண்டுகள் என்று வரையறுத்திருக்கிறார்கள். அதேசமயத்தில், தமிழகத்தில் சட்டம் நிறைவேறி



1981 மார்ச் 6] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

சட்டத்தின் அடிப்படையில் விதிகள் வகுக்கப்படும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல யோசனையை ஆழ்ந்து பரிசீலிப்போம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் என்னுடைய திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறேன்.

திருத்தங்கள், அவையின் அனுமதியோடு, திரும்பப் பெறப்பட்டன.

பிரிவுகள் 2, 3, 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை— "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, கால்நடை நோய்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1981).

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு கால்நடை நோய்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

@ 294-296A ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு கால்நடை நோய்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில், சட்டவிதிகளை மீறுவோருக்கு ஏற்கெனவே அபராதம் ரூபாய் 10 என்றிருந்ததை தற்போது ரூபாய் 50 என்று உயர்த்தியிருப்பதையும் அதைப் போலவே தண்டனைக் காலம் 15 நாள் என்றிருந்ததை ஒரு மாதம் என்று உயர்த்தியிருப்பதையும் ஆட்சேபிக்கிறேன். விவசாயிகளுக்கு இந்த விதிகளைக் கடைப்பிடித்து நடக்க வேண்டிய அவசியத்தை எடுத்துச் சொல்லி அவர்களை "எஜுகேட்" செய்வதற்குப் பதில், அபராதத் தொகையையும் தண்டனையையும் அதிகரிப்பது என்பது சரியல்ல. எனவே பழைய முறையில் உள்ளதைப் போல் 15 நாள் தண்டனையும் 10 ரூபாய் அபராதமும் என்றே இருக்கலாமென்றும் இவை இரண்டையும் உயர்த்தியிருப்பது தேவையில்லை என்றும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் தி.மு.க. சார்பில் வரவேற்கிறேன். விதிமுறைகளை மீறினால், அதற்கான தண்டனைக் காலத்தை ஒரு மாதம் என்றும் அபராதத் தொகையை ரூபாய் 50 என்றும் உயர்த்தியிருப்பது பாராட்டுக்குரியதாகும். இன்னும் இதை அதிகப்படுத்தினால்கூட நல்லது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு சுகாதாரக் கேடுகள் இல்லாமல் பட்டி வைப்பதற்கு முன்பு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வருவாய் வாரியத்தின் அனுமதி பெற்றே நோட்டிபிகேஷன் செய்யும் முறை இருந்ததையும் இப்போது மாற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கே அத்தகைய அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பது வரவேற்புக்கும் பாராட்டுக்கும் உரியதாகும்.

உரிமங்கள் எதுமில்லாமல் நகரில் உள்ளவர்கள் சொந்தமாக மாடுகளை வைத்துக்கொண்டு அவைகளை வெளியே விட்டுவிடுகிறார்கள். அதனால் சுகாதாரக் கேடு மட்டுமல்லாமல், போக்குவரத்திற்கும் பெருத்த இடைஞ்சல்



ஏற்படுகின்றது. தற்போது நகரங்களில் நிறைய ஆடு, மாடுகள் உரிமங்கள் எதுமில்லாமலே திரிந்து கொண்டிருக்கின்றன. அவைகளைச் சரியாகக் கண்காணித்து தடுப்பதற்கான சட்டமில்லாமல் இருப்பதால், சுகாதாரக் கேடுகளும், விபத்துகளும் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. பட்டிகள் வைத்து நடத்தாமல் சட்டத்தை மீறுகிறவர்களுக்கு தண்டனை கொடுப்பதைப்போல், தனிப்பட்டவர்கள் நகர்ப்புறங்களில் ஆடு, மாடுகளை வைத்து அவைகளைப் பாதுகாப்பாக வளர்க்காமல் வீதிகளில் அலைய விடுவார்களானால், அவர்களும் தண்டிக்கப்படுவார்கள் என்ற வகையில் சட்டத்தைத் திருத்துவது நல்லதாக இருக்கும் என்று கூறி சட்ட முன்வடிவை ஆதரித்து அமர்கிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடைகளின் முக்கியத்துவம் கருதி, கால்நடைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடும், கால்நடைகளால் சமுதாயத்தில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தோடும், அவைகள் மூலம் நோய்நொடிகள் பரவாமல் இருப்பதற்கும்தான் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நல்லசிவன் அவர்களும் திரு. ஆறுமுகம் அவர்களும் இந்தத் திருத்தங்களைப் பொதுவாக வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும் போது, இந்தத் திருத்தத்தின் மூலம் அபராதத் தொகை ஏற்கெனவே ரூபாய் 10 என்றிருந்ததை ரூபாய் 50 ஆகவும், அதைப்போலவே தண்டனைக் காலம் ஏற்கெனவே 15 நாட்கள் என்றிருந்ததைத் தற்போது ஒரு மாதம் என்றும் உயர்த்தியிருப்பதைச் சுட்டிக்காட்டி, இது அதிகமானது என்றார்கள். அவர் எந்த அடிப்படையில் இதை அதிகம் என்று பேசினார் என்பது எனக்குப் புரியவில்லை. அபராதத் தொகை 10 ரூபாய் என்றால், சாதாரண ஏழை விவசாயிகூட அபராதம் ரூபாய் 10 தானே என்று கடன் வாங்கி அந்த அபராதத் தொகையைக் கட்டிவிடுவான். அதை ரூபாய் 50 என்று உயர்த்தினால், சாதாரணத் தொழிலாளியால் அதைக் கட்ட முடியாது, கடனும் வாங்க முடியாது என்ற அடிப்படையில் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். அதோடு தண்டனைக் காலத்தை அதிகரித்திருப்பதைப் பொறுத்த வரையில், ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சட்டத்தில் எவ்வளவு குறிப்பிட்டிருந்தாலும், மாஜிஸ்ட்ரேட் தன்னுடைய விருப்பப்படி அந்தக் காலத்தைக் குறைக்கும் வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இந்தத் திருத்தத்தை எதிர்க்கும் வகையில், அதாவது தண்டனைக் காலத்தை 7 நாட்களாகக் குறைக்கலாம் என்று சொல்லும் வகையில் திருத்தம் ஒன்றையும்

கொடுத்திருக்கிறார்கள். ஆக, ஒரு மாதம் தண்டனைக் காலம் என்று நாம் போட்டிருந்தாலும்கூட, மாஜிஸ்ட்டிரேட் தன் கருத்துப்படி தண்டனைக் காலத்தைக் குறைக்க வாய்ப்பு இருக்கிறது. அதை அவருடைய விருப்பத்திற்கே இந்த அரசு விட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தைக் குறிப்பிடும்போது, வருவாய் வாரியத்திற்கும் இந்த அதிகாரத்தைக் கொடுத்தால், நன்றாக இருக்கும் என்று குறிப்பிட்டார்கள். இப்போது வருவாய் வாரியத்தின் அனுமதி பெற்று. . .

திரு. சோ. ஆறுமுகம்: இப்போதே வருவாய் வாரியத்தின் அனுமதி பெற்றுதான் மாவட்ட ஆட்சியாளர்கள் 'நோட்டிபிகேஷன்' செய்கிறார்கள். அந்த முறையை மாற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கே இந்த அதிகாரத்தைக் கொடுத்திருப்பது பாராட்டுக்குரியது என்றுதான் நான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: அவ்வாறு அவர் பாராட்டியதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு வருவாய் வாரியத்தின் அனுமதி பெற்று, அரசாங்கத்தின் அனுமதி பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செயல்படுவதற்கு முன்பு கால தாமதம் ஏற்பட்டது. அதனால்தான் இந்த அதிகாரத்தை அவர்களுக்கே கொடுக்க வேண்டும் என்று இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்தோம்.

கால்நடைச் சந்தைகள், கேட்டில் ஷோ போன்றவைகளை அமைக்கும்போது, பலர் தங்களை அறியாமலேயே நோய் உள்ள கால்நடைகளைக் கொண்டு வந்துவிடுகிறார்கள். அதன் மூலம் மற்ற கால்நடைகளுக்கும் அந்த நோய் பரவ வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே இதைத் தடுக்கும் வகையில்தான் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை மட்டும் கூறி நான் அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு கால்நடை நோய்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".



(பிற்பகல் 1-20)

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2

THIRU K. RAMAMOORTHY: Sir, I move the following amendment:—

"In clause 2, sub-clause 1(*b*), after the words 'of a district' *insert* the words "or the Commissioner of the Municipal Corporation in the cities of Madras, Madurai and Coimbatore Corporations."

THIRU A. R. DAMODARAN: Sir, I second it.

* திரு. க. இராமமூர்த்தி: துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் துணை செய்கின்ற வகையிலே இருக்கிறது என்று கருதுகிறேன். மாநிலம் முழுக்க இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவருகிறபோது, சென்னையிலும், மதுரையிலும் மாநகராட்சிகள் இருப்பதால், "மாநகராட்சி ஆணையர்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்துவார்கள்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் ஒரு மாநகராட்சியை, கோவை மாநகராட்சியை உருவாக்க இருக்கிறோம். அதற்குரிய எல்லைகள் கூட வரையறுக்கப்பட்டுவிட்டன என்று நினைக்கிறேன். நகராட்சிப் பணிகள், மாநகராட்சிப் பணிகள் என்ற அளவிலே நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கு முழுமையான சட்ட அங்கீகாரம் தர எந்த அளவிலே ஏற்பாடுகள் இருக்கின்றன என்று தெரியவில்லை. ஒருவேளை ஏற்கெனவே முடிந்திருக்கலாம், அல்லது சில நாட்களில் முடியலாம். எப்படி இருந்தாலும், சட்ட முன்வடிவு நிறைவேறிய பிறகு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கோவை மாநகராட்சி என்று அறிவிக்கப்பட்டவுடனே, மீண்டும் ஒரு திருத்தம் கொண்டு வர வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாவார்கள். அத்தகைய சங்கடத்தைத் தவிர்க்கின்ற வகையிலே, மற்றொரு முறை ஒரு திருத்தச் சட்டம் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லாமல் இருக்க வேண்டும் என்ற வகையிலே அமைச்சர் அவர்களுக்குத் துணை செய்கின்ற வகையிலே நான் இந்தத் திருத்தத்தை முன்மொழிந்திருக்கிறேன். சட்ட நெருடல் காரணமாக "கோவை மாநகராட்சி ஆணையாளர்" என்ற வார்த்தை தேவையில்லை என்று கருதியிருக்கலாம். இருந்தாலும் இந்தச் சட்டத்தை நிறைவேற்று

வதற்கு முன் "கோவை மாநகராட்சி" என்பதை இந்தச் சட்டத்திலே சேர்க்க வேண்டும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, கோவை மாநகராட்சி ஆணையாளருக்கும் அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று கூறினார். மூலச் சட்டத்தின்படி இதுவரை மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த அதிகாரத்தைப் பெற்றிருந்தார். ஆனால் ஒரு பகுதியில் கால்நடை (நோய்கள்) சட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்றால் மாவட்ட ஆட்சித் தலைவர். வருவாய் வாரியத்தின் அல்லது அரசின் முன் அனுமதியைப் பெற வேண்டும். இதில் காலதாமதம் ஏற்படுவதால், தற்போது இந்த அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கே வழங்கியிருக்கிறோம். இனி ஒவ்வொரு முறையும் அரசின் முன் அனுமதி பெறத் தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர், "கோவை மாநகராட்சி ஆணையாளர்" என்பதையும் சேர்க்க வேண்டும் என்று கூறினார். அது தேவையில்லை என்று அரசு கருதுகிறது. ஆகவே இந்தத் தீர்மானத்தை ஏற்க இயலாது.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கடுமையாக ஏற்க இயலாது என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே நான் கொடுத்த திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறேன்.

As a mark of grace to the Hon. Lady Minister, I am withdrawing my amendment.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 6.

THIRU K. RAMAMOORTHY: Sir, I move the following amendment:—

"In clause 6, sub-clause (5), *for* the words 'one month' *substitute* the words "seven days".

THIRU A. R. DAMODARAN: I second it.



* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள். நான் கொடுத்திருந்த தீர்மானத்தின்மீது என்ன பேசப் போகிறேன் என்பதை யூகித்து முன்னதாகவே பதிலைச் சொல்லி விட்டார்கள். விதிக்கின்ற அபராதத்தைக் கட்டத் தவறினால் அதற்காக அளிக்கப்படும் சிறைவாசம், அந்த அபராதத் தொகைக்குச் சமமாக இருக்க வேண்டும். 50 ரூபாய் அல்லது ஒரு மாத சிறைத் தண்டனை என்று வைத்து இந்த அதிகாரத்தை நீதிபதிகளின் டிஸ்கிரஷனரி பவருக்கு விட்டு விடுவதால், அவர்கள் ஒரு மாதம் தண்டனை அளிக்கலாம், 15 நாள் தண்டனையும் அளிக்கலாம், சில நேரத்தில் கோர்ட் முடியும் வரையில் அளிக்கலாம், சில நேரங்களில் எச்சரித்துக்கூட விடலாம். ஆனால் உயர்ந்தபட்ச சிறைவாசத்திற்கு ஒரு எல்லை—லிமிட்—இருக்கவேண்டும். விதிக்கும் அபராதத் தொகைக்கும், அதைக் கட்டத் தவறினால் விதிக்கும் சிறைவாசத்திற்கும் ஒரு புரபோர்ஷன், சமத்தொடர் இருக்கவேண்டும். இந்தச் சட்டத்தின் மூலம் நீதிபதிகளுக்கு டிஸ்கிரஷனரி பவரைக் கொடுப்பதன் மூலமாக, யாராவது ஒரு நீதிபதி தன்னுடைய முழு அதிகாரத்தையும் பயன்படுத்த வேண்டுமென்று விரும்பினால், 30 நாள் தண்டனையை அளிப்பார். ஆகவே உயர்ந்தபட்சத் தண்டனையை நிர்ணயிப்பது தேவை. அவசியம் 50 ரூபாய் அபராதம் என்று வைக்கின்றபோது, அதைக் கட்டத் தவறினால் ஒரு மாத சிறைத் தண்டனை என்பது நடைமுறைக்கு ஒவ்வாதது, தேவையில்லாத ஒன்று, எந்தச் சட்டத்திலும் காணப்படாத ஒன்று. எனவே உயர்ந்தபட்ச சிறைத் தண்டனையை ஒரு வார காலமாகக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அமைச்சர் அவர்கள் என்னுடைய திருத்தத்தை ஏற்கக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் உயர்ந்தபட்ச தண்டனைக் காலத்தைக் குறைக்க வேண்டும் என்று கோரினார். நீதிபதிகள் மனம் வைத்தால், நாட்களைக் குறைக்கலாம். சில நீதிபதிகள் மனம் வைக்காமல் ஒரு மாதம்கூட தண்டனைக் காலத்தை நீட்டிக்கலாம் என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். சட்டத்தின் விதிகளை மீறுபவர்களுக்கு அபராதம் 50 ரூபாய்க்கு அதிகப்படாமலும், அவ்வாறு அபராதத் தொகையைக் கட்டத் தவறினால் ஒரு மாதத்திற்கு மேற்படாமல் சிறைத் தண்டனை விதிக்கவும் இந்தச் சட்டம் வகை செய்கிறது. இந்த தண்டனைக் காலத்தை எதற்காக விதித்திருக்கிறோம் என்றால், கால்நடைச் சொந்தக்காரர்கள் உஷாரா

(திருமதி கோமதி சீனிவாசன்)



வதற்காகத்தான், தண்டனைக் காலம் ஒரு மாதமாக இருக்கிறதே; நாம் சிறைக்குள் சென்றுவிட்டால் நம்முடைய குடும்பத்தைப் பார்க்க முடியாது, கால்நடைகளைப் பராமரிக்க முடியாது என்று அவர்கள் பயந்துகூட நடக்கலாம். சில நீதிபதிகள் காலத்தைக் குறைத்து தண்டனை கொடுக்கலாம். எல்லா நீதிபதிகளும் அவ்வாறு கடுமையாக இருப்பார்கள் என்று சொல்லுவது மிகக் கடினம். இரக்க மனப்பான்மை என்பது எல்லா மனிதர்களுக்கும் இயற்கையாகவே அமைந்திருக்கிறது. அதன் அடிப்படையிலே நீதிபதிகள் வசம் நாங்கள் இதை விட்டிருக்கிறோம். நீதிபதிகள் தண்டனைக் காலத்தை நல்ல முறையிலே பரிசீலிப்பார்கள் என்று கூறிவிட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுடைய திருத்தம் தேவையில்லை என்று கூறுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் அவருடைய திருத்தத்தைத் திரும்பப் பெறுகின்றாரா அல்லது வலியுறுத்துகின்றாரா?

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத்தைத் திரும்பப் பெறுவதற்கு நியாயம் இல்லை என்றாலும் கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்வளவு தூரம் வாதாடியிருக்கிறார்கள். அதற்காக நான் என்னுடைய திருத்தத்தை வலியுறுத்தாமல் விடுகிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவுகள் 6, 7 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை; அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு கால்நடை நோய்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1981) நிறைவேற்றப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு கால்நடை நோய்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் நாளை காலை 10.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-30)

### 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

210. Notification issued with G.O. Ms. No. 32, Commercial Taxes and Religious Endowments, dated the 7th January 1981, in regard to amendments to the Tamil Nadu Tax on Luxuries in Hotels and Lodging Houses Rules, 1980. [Laid on the table of the House under section 21(3) of the Tamil Nadu Tax on Luxuries in Hotels and Lodging Houses Ordinance, 1980 (Tamil Nadu Ordinance 7 of 1980)].

211. Notification issued with G.O. Ms. No. 648, Food and Co-operation, dated the 1st December 1980 in regard to amendments to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961)].

### B. Reports, Notifications and Other Papers.

Nil.

## இணைப்பு I

[239 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

தமிழ் நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளின் (வரன்முறைப் படுத்தப்பட்ட) விதிகள், 1974ல், விதி 17-ன் படி தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் அல்லது பிற பணியாளர்களை தற்காலிகப் பணி நீக்கம் செய்தால், தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்ட காலங்களுக்குப் பள்ளி நிர்வாகத்தினர் பிழைப்பு ஊதியம் கொடுக்க வகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் பிற பணியாளர்களை சில குற்றச் சாட்டுக்களின் பேரில் பள்ளி நிர்வாகத்தினர் விதிப்படி தற்காலிகப் பணி நீக்கம் செய்யும் பொழுது சரிவர பிழைப்பு ஊதியம் வழங்கப்படுவதில்லை எனவும் அதனால் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர் எனவும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

மேற்கண்ட நிலையில் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு பிழைப்பு ஊதியம் வழங்க வழிவகைகள் இருந்தும்கூட, அதில் சில நிர்வாகத்தினர் அவ்விதிகளை கடைபிடிக்காமல் இருப்பதாலும், அதன் தொடர்பாக பாதிக்கப்பட்ட பணியாளர்களின் சிரமத்தினைப் போக்குவதற்காகவும் அவர்கள் பிழைப்பு ஊதியம் தவக்கமில்லாமல் பெறுவதற்கும் ஏற்ற முறையில் விதிகளை மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மீது விரைவில் ஆணை வெளியிடப்படும்.

## இணைப்பு II

[239 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### L.A. BILL No. 5 OF 1981.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Revenue Recovery Act, 1864.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Revenue Recovery (Amendment) Act, 1981.

(2) Sections 2 to 9 and 11 shall be deemed to have come into force on the 1st day of July 1974.

2. *Amendment of sections* 5, 9, 10, 23, 27, 42, 44, 48 *and* 50 *Tamil Nadu Act II of* 1864.—In sections 5, 9, 10, 23, 27, 42, 44, 48 and 50 of the Tamil Nadu Revenue Recovery Act, 1864



(Tamil Nadu Act II of 1864) (hereinafter referred to as the principal Act), for the word "interest", the word "penalty" shall be substituted.

3. *Amendment of section* 7, *Tamil Nadu Act* II *of* 1864.—For section 7 of the principal Act, the following section shall be substituted, namely:—

"7. *Penalty on arrears.*—Penalty shall be charged on arrears of revenue at the rate of 5 per cent fasli year or part thereof:

Provided that no such penalty shall be charged for the fasli year in which the revenue falls due and for the next succeeding fasli year.".

4. *Amendment of section* 8, *Tamil Nadu Act II of* 1864.—In section 8 of the principal Act, in rule Second, for the word "interest", the word "penalty" shall be substituted.

5. *Amendment of section* 17, *Tamil Nadu Act II of* 1864.—In section 17 of the principal Act, for the word "interest" the words and figure "interest at the rate of 6 per cent per annum" shall be substituted.

6. *Amendment of section* 34, *Tamil Nadu Act* II *of* 1864.—In section 34 of the principal Act,—

(*a*) for the words "interest thereon at the rate of six per cent per annum", the words and figure "penalty chargeable under section 7" shall be substituted; and

(*b*) for the words "all arrears, interest", the words "all arrears, penalty" shall be substituted.

7. *Amendment of section* 35, *Tamil Nadu Act* II *of* 1864.—In section 35 of the principal Act, for the words "arrears, interest" the words "arrears, penalty" shall be substiuted.

8. *Amendment of section* 37, *Tamil Nadu Act II of* 1864.—In section 37 of the principal Act, for the words "interest thereon", the words "penalty thereon" shall be substituted.

9. *Amendment of section 37-A, Tamil Nadu Act II of 1864.*—In clause (*b*) of sub-section (1) of section 37-A of the principal Act, for the words "interest thereon", the words "penalty thereon" shall be substituted.

10. *Amendment of section 38, Tamil Nadu Act II of 1864.*—In section 38 of the principal Act, after sub-section (3), the following sub-section shall be instered namely:—

"(3-A) No sale shall be set aside by the Collector under sub-section (2), or sub-section (3) unless the purchaser has had a reasonable opportunity of making his representations."

11. *Amendment of section 54, Tamil Nadu Act II of 1864.*—In section 54 of the principal Act,—

(*a*) in the marginal heading, for the word "interest", the word "penalty" shall be substituted, and

(*b*) for the word "interest", the word "penalty" shall be substituted.

12. *Validation.*—Notwithstanding anything contained in any judgment, decree or order of any court or other authority any penalty charged or collected or purporting to have been charged or collected under the principal Act, after the 1st day of July 1974, and before the date of publication of this Act in the *Tamil Nadu Government Gazette* shall, for all purposes be deemed to be and to have always been validly charged or collected in accordance with law as if sections 2 to 4, 6 to 9 and 11 of this Act had been in force at all material times when such penalty was charged or collected and accordingly,—

(*a*) all acts, proceedings or things done or taken by any authority, officer or person in connection with the charge or collection of such penalty shall, for all purposes, be deemed to be and to have always been done or taken in accordance with law;



(*b*) no suit or other proceedings shall be maintained or continued in any court for the refund of any penalty so paid;

(*c*) no court shall enforce any decree or order directing the refund of any penalty so paid.

## இணைப்பு III

[249 ஆம் பக்கத்தில் இனம் 5 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 10 OF 1981

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Registration Act, 1908, in its application to the State of Tamil Nadu.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows:—

1. *Short title, extent and commencement.*—(1) This Act may be called the Registration (Tamil Nadu Amendment) Act, 1981.

(2) It extends to the whole of the State of Tamil Nadu.

(3) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Insertion of new section 89-B in Central Act XVI of 1908.*—After section 89-A of the Registration Act, 1908 (Central Act XVI of 1908), the following section shall be inserted, namely:—

"89-B. *Power to make rules regulating the writing of documents.*—The State Government may make rules providing for the grant of licences to document writers, the terms and conditions subject to which and the authority by whom such licences shall be

granted, the circumstances under which such licences may be revoked, and generally for all purposes connected with the writing of documents to be presented for registration.

3. *Repeal of corresponding provision of law in the transferred territory*—(1) If on the date of commencement of this Act there is any provision of law in force in the transferred territory corresponding to section 89-B of the Registration Act, 1908 (Central Act XVI of 1908) as inserted by section 2 of this Act (hereinafter in this section referred to as the corresponding provision of law) such corresponding provision of law in force in the transferred territory shall stand repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken or any rule made under the corresponding provision of law shall be deemed to have been done or taken or made under section 89-B of the Registration Act, 1908 (Central Act XVI of 1908) as inserted by section 2 of this Act.

*Explanation*.—For the purpose of this section, the expression "transferred territory" shall mean the Kanyakumari district and the Shencottah taluk of the Tirunelveli district.

## இணைப்பு IV

[281ஆம் பக்கத்தில் இனம் 5 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 14 OF 1981.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Cattle Disease Act*, 1866.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement*.—(1) This Act may be called the Tamil Nadu Cattle-Disease (Amendment) Act, 1981.



(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Substitution of new section for section* 1, *Tamil Nadu Act II of* 1866.—For section 1 of the Tamil Nadu Cattle-lisease Act, 1866 (Tamil Nadu Act II of 1866) (hereinafter referred to as the principal Act) and the marginal note thereto, the following section shall be substiuted, namely:—

"1. *Act to be brought into force by notification*.—(*a*) The State Government or subject to their control, the Commissioner of Revenue Administraion, may, from time to time, by a notification in the *Tamil Nadu Government Gazette*, bring this Act into force in such district or or to any part of such district, or

(*b*) the Collector a district, subject to the control of the State Government and the Commissioner of Revenue Administration, may, from time to time, by a noification in the *Tamil Nadu Government Gazette*, bring this Act into force in that district or any part of this district,

from such date and for such period as may be specified in the notification".

3. *Substitution of references to certain authorities in Tamil Nadu Act II of* 1866.—In the principal Act, for the words "Magistrate of the district, or, in the City of Madras, the Commissioner of the Corporation" wherever they occur, the words "Collector of the district, or, in the City of Madras or in the City of Madurai, the Commissioner of the Municipal Corporation concerned" shall be substiuted.

4. *Amendment of section* 3, *Tamil Nadu Act II of* 1866.—In section 3 of the principal Act,—

(1) in the first paragraph, for the words "the said Magistrate", the words "the said Collector" shall be substiuted;

(2) in the second paragraph, for the word "Magistrate" the words "said Collector or Commissioner, as the case may be" shall be substiuted.

5. *Amendment of section 10, Tamil Nadu Act II of 1866.*—In section 10 of the principal Act, in the second paragraph, for the words "six feet", the figures and word "1.8 metres" shall be substituted.

6. *Substitution of new section for section 18, Tamil Nadu Act II of 1866.*—For section 18 of the Principal Act and the marginal nate thereto, the following shall be substituted, namely:—

"18. *Power to make rules.*—(1) The State Government may make rules to carry out the purposes of this Act.

(2) All rules made under this Act shall be published in the *Tamil Nadu Govtrnment Gazette* and, unless they are expressed to come into force on a particular day, shall come into force on the day on which they are so published.

(3) All notifications issued under this Act shall, unless they are expressed to come into force on a particular day, come into force on the day on which they are published.

(4) Every rule made or notficaton issued under this Act shall, as soon as possible after is made or issued be placed on the table of both Houses of the Legislature, and if, before the expiry of the session in which it is so placed or the next session, both Houses agree in making any modification in any such rule or notification or both Houses agree that the rule or notification should not be made or issued, the rule or notification shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be, so howver, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule or noification.



(5) A breach of any rule shall render the party liable on conviction before a Magistrate, to a fine not exceeding rupees fifty and in default to simple imprisonment for a term not exceeding one month".

7. *Existing by-laws deemed to be rules.*—Any by-law made and prescribed by the State Government under the principal Act before the commencement of this Act and in force at such commencement, shall be deemed to be a rule made under the principal Act as amended by this Act and shall continue in force accordingly, unless and until rescinded, amended or varied under the principal Act as so amended.

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

---

சனிக்கிழமை, 1981 மார்ச் 7.

மாசி 24, ரௌத்திரி 2012—திருவள்ளுவராண்டு.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு சலவைப் படி.

* 121 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் மற்றும் செல்வி அ. லீலாவதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு, சீருடைகளை சலவை செய்து கொள்ள, சலவைப் படி (Washing allowance) வழங்கப்படுகிறதா ?

(இ) இல்லையெனில், அதனை வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இதுபற்றிய கோரிக்கை அரசுக்கு வந்தால் அரசு இதனைப் பரிசீலிக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இது சம்பந்தமான கோரிக்கை முன்பே அதிகாரிகளிடத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடங்களில் இருக்கிற என்.சி.சி. பயிற்சி ஆசிரியர்களுக்கு சீருடைகளைச் சலவை செய்துக் கொள்ள சலவைப் படி என்று வழங்கப்படுகிறது. அதனுடைய அவசியம் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே இந்த மன்றத்திலே இப்போது சொல்வதையே கோரிக்கையாக வைத்துக் கொண்டு, மாண்புமிகு அமைச்சரவர்கள் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு சீருடைகளைச் சலவை செய்துகொள்ள சலவைப் படி கொடுக்க நல்லதொரு முடிவு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு சீருடைகளை வழங்குவதற்காக பள்ளிக்கூட விளையாட்டு நிதியிலிருந்து பணம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பல பள்ளிகளில் விளையாட்டு நிதி குறைவாக இருக்கிறது. மாணவர்களின் நிதியிலிருந்து இதை எடுத்துக் கொள்ளும காரணத்தால், ஆசிரியர்கள் தங்கள் நிதியிலிருந்து உடை உடுத்துகிறார்களென்று மாணவர்கள் எண்ணும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது ஆசிரியர்களின் தன்மானத்தைப் பாதிக்கிறது. எனவே அரசு நிதியிலிருந்தே சீருடை வழங்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கேம்ஸ் ஃபண்ட்-ல் பணம் இல்லையென்றால், அமெனிட்டி ஃபண்ட்-லிருந்து எடுத்துக்கொள்ளலாமென்று குறைவாக விளையாட்டு நிதி உள்ள பள்ளிகளுக்கு அனுமதி தந்திருக்கிறோம்.

திரு. பா. ரா. தாமஸ் : சீருடைக்காக வழங்கப்படும் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அதாவது 50 ரூபாய் என்று இருக்கிறது. ஐம்பது ரூபாய்க்குச் சீருடை தைக்க இயலாத நிலையிலே, அதைச் சற்று உயர்த்தித் தர அமைச்சரவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது இதைப்பற்றிப் பரிசீலிக்கின்ற உத்தேசமில்லை.

## Law University

*122 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal to start a Law University similar to the Agricultural University, affiliating to itself, all the Law Colleges in the State; and

(b) if so, the stage at which the matter now stands ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைப் போல, மாநிலத்திலுள்ள அனைத்துச் சட்டக் கல்லூரிகளையும் இணைத்து ஒரு சட்டப் பல்கலைக் கழகம் நிறுவும் முனைவு தற்போது பரிசீலனையில் இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.



திரு. பா. ரா. தாமஸ் : தற்சமயம் பல்கலைக் கழகம் அமைக்கும் நோக்கமில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மதுரையிலே அதற்கு எல்லாத் தகுதிகளும், வசதிகளும் இருக்கிற காரணத்தால், மதுரை மேற்குத் தொகுதியில் இப்படிப்பட்ட பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு மீண்டும் பரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழகத்திலே இருக்கிற சட்டக் கல்லூரிகளிலே சென்னையில் இருக்கும் சட்டக் கல்லூரிதான் நீண்ட நாட்களாகப் பணியாற்றும் கல்லூரியாகும். அது தன்னாட்சி உரிமை பெறுகின்ற அளவிற்கு வரவில்லை என்று அரசு கருதுகிறது. முதலிலே அத்தகைய உரிமையை அந்தக் கல்லூரிக்கு வழங்குவதற்கான நிலைமைகளை ஏற்படுத்தியாக வேண்டும். அந்த உரிமையைத் தந்து, அதற்குப் பிறகு சட்டக் கல்லூரியிலே ஆராய்ச்சிப் பணிகள் நடைபெற வேண்டும். அப்படி ஆராய்ச்சிப் பணிகளைத் துவக்கிய பிறகுதான், பல்கலைக் கழகம் என்பது குறித்து பரிசீலிக்க முடியும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மதுரை சட்டக் கல்லூரியை பல்கலைக் கழகமாக்கவில்லை என்றாலும், இப்போது அங்கே மாணவர்களுக்கு விடுதிகளில்லை, பேருந்து வசதியில்லை என்கின்ற குறைபாடுகள் நீக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதுபோன்ற வசதிகள் எல்லாம் இல்லாத நிலையிலேதான் பல்கலைக் கழகம் வேண்டுமென்ற கேள்வி வந்திருக்கிறது என்பதை இப்போது நாம் உணர முடிகிறது. முதலிலே இந்த வசதிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. அப்படிச் செய்ததற்குப் பிறகு, பல்கலைக் கழகம் பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. ம. சங்கரலிங்கம் : சட்டக் கல்லூரிகள் எல்லாவற்றையும் இணைத்து ஒரு பல்கலைக் கழகமாக மாற்றி அமைப்பதால், சட்டக் கல்லூரிகளில் ஆராய்ச்சிகளைச் செய்வதற்கும், அவற்றை வளர்ப்பதற்கும் யு.ஜி.சி.-யிலிருந்து பணம் வர வாய்ப்பு இருக்கிறது. யு.ஜி.சி. பல்கலைக் கழகங்களுக்குத்தான் பணம் ஒதுக்குகிற சூழ்நிலை இருப்பதால், அதைப் பெற்று, சட்டக் கல்வி ஆராய்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும் துணையாக இருக்க முடியுமென்று உணர்ந்து, அதைப்பற்றி மீண்டும் அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சட்டப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கின்ற அடிப்படையில் பரிசீலனை ஏதும் இல்லையென்றாலும், நாம் முதலிலே அதைப்பற்றிச் சிந்திப்பதற்கு, அதாவது பல்கலைக் கழகமாக மாற்றுவது என்ற முடிவிற்கு வர, சில அடிப்படைத் தகுதிகளை அந்த

[1981 மார்ச் 7

நிர்வாகம் பெற்றாக வேண்டும். குறிப்பாக அந்தக் கல்லூரி தன்னாட்சி உரிமை பெற்றாக வேண்டும்; அங்கே ஆராய்ச்சிப் பணிகள் நடைபெற வேண்டும். நாம் இந்த இரண்டு நிலைகளும் முதலிலே ஏற்பட்டாக வேண்டும். எதிர்பார்ப்பது, சென்னை சட்டக் கல்லூரி அத்தகைய நிலையை விரைவிலே அடைய வேண்டுமென்பதுதான். அதற்கு எல்லாவிதமான ஒத்துழைப்பும் எல்லோரும் தருவார்களானால், நாம் அந்த நிலையை உருவாக்கலாம். அதற்குப் பிறகு பல்கலைக் கழகம் அமைப்பது பற்றிய பிரச்சினையை ஆய்வு செய்யலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தமிழ் நாட்டில் மேலும் சில இடங்களில் சட்டக் கல்லூரிகள் துவக்குவது குறித்து அரசு பரிசீலிக்கிறதா? அந்த விவரங்களை அறிய முடியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போதுதான் கோவையிலும், திருச்சியிலும் புதிதாக ஆரம்பித்திருக்கிறோம். அதற்கு முன்னாலே ஆரம்பிக்கப்பட்டதுதான் மதுரை சட்டக் கல்லூரி. இந்தக் கல்லூரிகளுக்கே போதுமான குறைந்தபட்ச வசதிகள் இன்னும் ஏற்படுத்தவில்லை என்ற புகார் தான் இப்போது அரசின்மீது சொல்லப்படுகிறது. அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். தக்க இடங்களைப் பார்த்து, கட்டிடங்கள் கட்டுவது போன்ற பணிகளைச் செய்கிறோம். அதற்குப் பிறகுதான் வேறு இடங்களில் சட்டக் கல்லூரி ஆரம்பிப்பதுபற்றிப் பார்க்க வேண்டும்.

சட்டக் கல்லூரி என்பது எல்லா இடங்களிலும் ஆரம்பிக்கக்கூடிய ஒன்றாக இருக்க வேண்டுமா என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டும். அதற்கடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டிய ஒன்றும் இருக்கிறது. ஐந்து ஆண்டுகள் சட்டப் படிப்பைக் கொண்டு வர வேண்டுமென்ற கருத்துருவும் இருக்கிறது. அதை ஐந்து ஆண்டுப் படிப்பாக ஆக்குகின்றபோது, நாம் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன அடிப்படையிலேகூட பார்க்கலாம்.

திரு. ம. சங்கரலிங்கம் : இந்த ஆண்டு, மாலை நேர சட்ட வகுப்புகள் திறக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மாலை நேர சட்ட வகுப்புகள், அரசுப் பணியில் இருப்பவர்கள், மற்றும் வேறு பணிகளில் இருப்பவர்கள் சேருவதற்கு வசதியாக இருக்கிறது. அவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு உள்ளாகிறார்கள் என்ற நிலைமையும் இல்லை. எனவே திரும்பவும் அடுத்த ஆண்டு மாலை நேர சட்டப் படிப்பைக் கொண்டு வருவது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா?



1981 மார்ச் 7]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கல்லூரியிலே அவர்கள் வந்து உட்கார்ந்து படித்து, பரீட்சை எழுதி, பட்டம் பெறுகின்ற நிலைமை என்று வைத்திருக்கும்போது, காலை நேரம் என்றாலும், மாலை நேரம் என்றாலும் ஒன்றாகத்தான் இருக்கிறது. மாலை நேரக் கல்லூரிகள் கூடாதென்று 'பார் கவுன்சில்' சொல்லுகிறது. அந்தச் சங்கம்தான் சட்டக் கல்வியைக் கட்டுப்படுத்தி வருகிறது. அவர்கள் விரும்பவில்லை. இன்று பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். பல்கலைக் கழக மானியக் குழு, சட்டம் போன்ற தொழிற் கல்வியைக்கூட 'கரெஸ்பான்டன்ஸ் கோர்ஸ்' மூலம் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அந்த கோர்ஸ் இப்போது பல்கலைக் கழகத்தில் இருக்கிறது. அப்படிப் படித்தவர்கள் வக்கீல்களாகப் பணியாற்ற முடியாது. அப்படிப் படித்தவர்கள் வக்கீல்களாகப் பணியாற்றுவதை வக்கீல்கள் சங்கம் எதிர்க்கிறது. எனவே பணி புரிபவர்கள் 'கரெஸ்பான்டன்ஸ் கோர்ஸ்' மூலமாகப் படிக்கலாம்.

திரு. சோ. ஆறுமுகம் : புதிதாகச் சட்டக் கல்லூரிகளை ஏற்படுத்த வேண்டுமென்று கோரிக்கை வரும் அதே நேரத்தில், இந்த ஆண்டு சட்டக் கல்லூரியில் சேருவதற்கான மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் நீண்ட கால தாமதம் ஏற்பட்டு, 6, 7 மாத காலம் அவர்களுடைய படிப்பு பாதிக்கப்பட்டது. இதுபோன்ற நிலைமைகள் ஏற்படாமலிருக்க அரசு தகுந்த நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த ஆண்டும், சென்ற ஆண்டும் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பது உண்மைதான். அது விரும்பத்தக்கதல்ல. அத்தகைய நிலைமைகள் ஏற்படக்கூடாதென்று சட்டக் கல்வித் துறை இயக்குநரைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இப்படி ஏற்பட இன்னொரு காரணம், இதற்குத் தகுதி பெறுகின்ற மாணவர்கள் படிக்கும் கல்லூரிகளில் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டு, அந்தத் தேர்வுகள் தள்ளி நடத்தப்பட்டு, அது 'செயின்-ரீஆக்ஷன்' ஆக இங்கும் வருகிறது. இப்போது ஒரு முடிவினை, சட்டக் கல்வித் துறை இயக்குநரைக் கலந்து எடுக்க இருக்கிறோம். மற்ற கல்லூரிகளில் எப்போது தேர்வு நடக்கிறதென்பதைப் பற்றிக் கவலைப்படாமல், இதற்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதுதான் அது. பி.எட்.-க்கு அப்படித்தான் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறோம். குறிப்பிட்ட தேதிக்குள் யார் விண்ணப்பிக்கிறார்களோ, அவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கிறோம். அந்த முறையில் பி.எல். படிப்புக்கும் செய்தால், இந்தப் பிரச்சினை வராது. ஏதாவது ஒரு வழியில் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வர வேண்டுமென்பதில் அபிப்பிராய பேதமில்லை. அப்படிக் கொண்டுவர வேண்டும்.

(முற்பகல் 10-40)

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கருத்து வரவேற்கத்தக்கது. அந்த அடிப்படையில் பார்க்கும்போது, மாநிலத்தில் உள்ள சட்டக் கல்லூரிகளை எல்லாம் சேர்த்து ஒரு பல்கலைக் கழகமாக அமைக்க வேண்டிய அவசியமில்லை. தனித் தனியாக அந்தந்த சட்டக் கல்லூரிகளுடைய தேர்வுகளை நடத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த அடிப்படையில் ஏற்பாடுகளைச் செய்தால், ஒரு சட்டக் கல்லூரியில் வேலை நிறுத்தங்கள் நடந்தாலும் கூட இன்னொரு சட்டக் கல்லூரி பாதிக்காமல் தவிர்க்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. இந்தக் கருத்தை அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு மேல்வைத் தலைவர் : என்ன சொல்கிறார்கள் ?

திரு. க. இராமமூர்த்தி : பல்கலைக் கழகமாக சட்டக் கல்லூரிகளை எல்லாம் இணைக்காமல் தனித் தனியாக தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனங்களாக, அட்டானமஸ் இன்ஸ்டிட்யூஷனாக சட்டக் கல்லூரிகள் இருக்க வேண்டும் என்கின்ற முறையில் அரசு சட்டக் கல்லூரிகளை ஏற்று செயல்படுத்துகின்ற நிலை வரும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, அந்தந்தக் கல்லூரிகள் ஆண்டுத் தேர்வுகளை தனித் தனியாக நடத்தக் கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. அப்படிச் செய்தால் தாமதம் இல்லாமல், அந்தந்தக் கல்லூரியினுடைய தேர்வு முறையாக நடக்கும் என்பதாலும், வேலை நிறுத்தம் ஏற்படாமல் இருக்கவும் வாய்ப்பு இருக்கிறதாலும், இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சட்டக் கல்லூரியில் பரீட்சை என்பது மாணவர்களை அனுமதித்த பிறகு நாம் நடத்துகின்ற ஒன்று. உறுப்பினர் இங்கே சொல்வது பரீட்சை தாமதமாக நடப்பது பற்றி. பொதுவாக ஜூன் மாதம் துவக்கத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அதற்கு இன்னின்ன தகுதிகள் இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கிறார்கள். பிறகுதான் இன்டர்வியூ நடக்கும். பி.எட். ஐப் பொறுத்தவரை, அப்படித்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தத் தாமதம் ஏற்படாமல் நாம் செய்து விடலாம். ஆனால் தன்னாட்சி உரிமை என்பது யு.ஜி.சி.-யிலிருந்து சிலர் வந்து பார்த்து, அவர்கள் சிபாரிசு செய்கின்ற அளவுக்கு அங்கே சூழ்நிலைகள் இருக்க வேண்டும். ஆசிரியர்களுடைய தகுதி, நிலைமை, நிலம், கல்லூரி நடைபெற்று வருகிற தன்மைகள் இப்படிப்பட்டவைகளை எல்லாம் ஆராய்ந்து தான் யு.ஜி.சி. தன்னாட்சி அந்தஸ்தைத் தரும். இப்போது நாம் தாமதத்தைத் தவிர்த்து, கல்லூரிகளை ஒழுங்காக நடத்தி, அதில் உள்ள சிக்கல்களைச் சரி செய்த பிறகு, தன்னாட்சி வழங்குகிற நிலைக்கு வரலாம்.



திரு. க. இராமமூர்த்தி : தொழில் கல்லூரிகளில் சட்டக் கல்லூரியை மட்டும் எடுத்துக்கொண்டால், இன்றைக்கு தமிழ் நாட்டில் ஐந்து சட்டக் கல்லூரிகள் இருப்பதால், ஒரு கல்லூரியின் கல்வி ஆண்டில் ஏதாவது காரணத்தால் ஏற்படுகின்ற தாமதம், வேலை நிறுத்தம் போன்றவை இன்னொரு சட்டக் கல்லூரியையும் பாதித்து விடுகிறது. அதனால் அந்தக் கல்லூரியும் வேலை நாட்களை நீட்டிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இப்போது தேர்வுகள் எல்லோருக்கும் பொதுவாக நடப்பதால், ஒரு கல்லூரியில் ஏற்படுகின்ற சிக்கல் இன்னொரு கல்லூரியையும் பாதிப்பதால், அப்படி பாதிக்காதவாறு பாதிப்பைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மதுரைப் பல்கலைக் கழகம் மதுரை சட்டக் கல்லூரித் தேர்வுகளை நடத்துகிறது. மற்ற மூன்று இடங்களில் சென்னைப் பல்கலைக் கழகம் தேர்வுகளை நடத்துகிறது. கோவை சட்டக் கல்லூரிக்குத் தேர்வுகளை, கோவை பல்கலைக் கழகம் நடத்தும். தன்னாட்சி என்பது அந்தந்தக் கல்லூரிக்கு இருக்க வேண்டிய சுதந்திரத்தால் அந்தந்தக் கல்லூரியே தேர்வை நடத்தும். அந்த வாய்ப்பினை நான்கு சட்டக் கல்லூரிகளுக்கும் தனித் தனியே தர முடியாது. அப்படியே தந்தாலும், அந்த வாய்ப்பினை சென்னை சட்டக் கல்லூரிக்குத்தான் முதலில் தர வேண்டும். முதலில் இதில் இருக்கிற சிக்கல்களை எல்லாம் சரி செய்த பிறகு, இதைத் தருவதுதான் பொருத்தமாக இருக்கும்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மற்ற கல்லூரிகளைவிட சட்டக் கல்லூரிகளில் வேலை நிறுத்தம் அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அங்கே மாணவர்கள் சட்டம் பயின்று கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு) அங்கே பயிலுபவர்கள் சட்டங்களைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். உயர் நீதிமன்றத்திற்குப் பக்கத்தில் இருக்கிறார்கள். இந்த ஒன்று தான் இவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இருக்கிற முக்கிய வேறுபாடு.

கல்வி வாரியம்.

* 123 வினா.—திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எல்லாப் பள்ளிகளையும் அரசே ஏற்று, கல்வி வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) இல்லையெனில், பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தமிழ் நாட்டிலே மின்வாரியம், வீட்டுவசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் முதலிய வாரியங்கள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் வாரியங்களாக இருக்கின்ற காரணத்தால், மக்களுக்கு விரைந்து செய்ய வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. கல்வித் துறையில் கூட காலதாமதம் மற்றும் ஏனைய சங்கடங்களை எல்லாம் தவிர்க்க அரசியல் தொடர்பு இல்லாத கல்வியாளர் களைக் கொண்ட குழு ஒன்றினை ஏற்படுத்தி அதனை அவர்களிடத்தில் ஒப்படைத்தால், எப்படி பல்கலைக் கழகங்களில் அரசு கூட தலையிட முடியாத ஒரு நிலை இருக்கிறதோ அது போல் இதிலும் ஒருவரும் தலையிட முடியாத நிலை ஏற்படும். பல்வேறு சீர்திருத்தங்கள், தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்கின்ற வாய்ப்புகள் எல்லாம் ஏற்படும். அந்த வகையில் இப்போது எல்லாப் பள்ளிகளையும் அரசே ஏற்று, கல்வி வாரியம் அமைக்கின்ற செயற்குறிப்பு தற்போது இல்லாவிட்டால் கூட வருங்காலத்திலாவது இதுபற்றிப் பரிசீலிக்கப் படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு உறுப்பினர் இரண்டு, மூன்று பிரச்சினைகளை தொடர்புபடுத்தி இங்கே பேசியிருக்கிறார். எல்லாப் பள்ளிகளையும் என்கிற பிரச்சினை வரும்போது, வீட்டு வசதி வாரியம் எல்லா வீடுகளையும் கட்டுவதே இல்லை. அவர்கள் குறிப்பிட்ட பணிகளைத்தான் செய்துகொண்டிருக்கிறார்கள். அதேசமயத்தில் கல்வி வாரியம் என்பதைப் பொறுத்தவரை கூட, நாம் சில பிரச்சினைகளை அணுகுவதற்குத் தேவையாகத் தான் இருக்கிறது என்பதையும் அரசு உணருகிறது. இப்போது நாம் எல்லாப் பள்ளிகளுக்கும் கட்டிடங்கள் கட்ட வேண்டுமென்று இருக்கிறோம். அதற்காக எல்.ஐ.சி. போன்ற நிறுவனங்களை அணுகுகிறோம் என்றால், அவர்கள் உடனே இப்படிப்பட்ட ஒரு வாரியத்தை அமைத்தால் தான் பணம் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இது தேவை என்று படுகிறது. அரசியல் சார்பு இல்லாமல், அரசு தலையிடாமல் ஒரு அமைப்பு அதுவும் தமிழ் நாட்டில் அமைய முடியும் என்கிற நம்பிக்கை நமக்கு இல்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அரசியல் வைத்துக் கொண்டு தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அரசியல் பற்று இல்லாதவர்கள் யார் என்பதுதான் நம்மால் கண்டுபிடிக்க முடியாத ஒன்று, அது மிகச் சிரமமான காரியம். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு பெரிய முயற்சியில் நாம் இறங்கத் தேவையில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அரசுப் பள்ளிக்கூடங்களிலேயே இப்போது பல குறைகள் இருக்கின்றன. கல்வியை எடுத்துக்கொண்டால், கல்வித் துறை, உள்ளாட்சித் துறை, வனத் துறை, வணிக வரித் துறை,



பிற்பட்டோர் நலத் துறை, அரிசன நலத் துறை இப்படி பல்வேறு துறைகள் பள்ளிக்கூடங்களை நடத்துகின்ற காரணத்தால், பலவிதமான நிர்வாகச் சிக்கல்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இப்போது உள்ளாட்சித் துறைப் பள்ளிகளைப் பொறுத்தவரை, அரசின் கல்வித் துறையினுடைய கட்டுப் பாட்டில் கொண்டுவர முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இப்போது பல்வேறு துறைகளில் இருக்கின்ற அரிசனப் பள்ளிகள், பிற்பட்டோர் நலத் துறைப் பள்ளிகள், வனத் துறைப் பள்ளிகள் இப்படிப்பட்ட பல்வேறு துறைகளில் நடத்தப்படுகின்ற பள்ளிகளை எல்லாம் அரசின் கல்வித் துறை யினுடைய நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்தால், இப்படிப்பட்ட சிக்கல்கள் ஏற்படாமல் நல்ல பலன் ஏற்பட வாய்ப்பாக இருக்கும். இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அரசே எல்லாப் பள்ளிகளையும் ஏற்று நடத்த வேண்டும் என்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் பிரச்சினைகள் வருகின்றபோது, இப்போது நாம் முழுமையாகத் தலையிட முடியாமல் இருக்கிறது. ஊராட்சி ஒன்றியத்தினுடைய நிர்வாகத்தில் இருக்கின்ற அனைத்துப் பள்ளிகளினுடைய ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று நாம் முனைந்தபோது, ஆசிரியர் களுடைய சங்கங்கள் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதோடு அந்தப் பள்ளிகளையும் அரசே எடுக்க வேண்டுமென்கிற கோரிக்கையையும் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையில் முடிவெடுத்தால், முதல் முறையாக ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் எல்லாம் அரசின் நிர்வாகத் திற்குள் வருகின்றன. இப்போதே கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற எல்லா தொடக்கப் பள்ளிகளும் அரசின் நிர்வாகத்தில் தான் இருக்கின்றன. வருங்காலத்தில் அந்த நிலைமை தமிழ் நாடு பூராவும் வரும். அப்படி வருகின்றபோது, அதற்குத் தேவையான, தனியான நிர்வாக அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் அரசுக்கு வரும். அது நிச்சயமாக ஏற்படுத்தப்படும். அதை ஏற்படுத்திய பிறகு பள்ளிகளை எல்லாம் எடுப்பது ஒன்றும் கடினமாக இருக்காது. ஆகவே அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற கருத்தினைப் பரிசிலனை செய்யலாம்.

**திரு. பா. ரா. தாமஸ் :** அனைத்துப் பள்ளிகளையும் அரசே ஏற்று நடத்தி வாரியம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தே தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லையென்ற காரணத்தால்தான் உருவானது. இப்போதிருக்கின்ற சட்டப்படி கூட முறையாக அவர்களுக்குப் பாதுகாப்பு தரப்படவில்லை. அந்த முறையில் இப்போது இருக்கக்கூடிய சட்டத்தை முழுமையாக ஆசிரியர்களுக்கு முழுப் பாதுகாப்பு

அளிக்கக்கூடிய முறையில் திருத்தி அமைத்து விட்டாலே வாரியம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை வராது. இது குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நமக்கு இருக்கிற முக்கியமான பிரச்சினைகள் இரண்டு. நல்ல கல்வியை, தரமான கல்வியை, எல்லோருக்கும் தர விரும்புகின்ற முயற்சி என்பது ஒன்று. ஆசிரியர்களுக்கு நல்ல பணிப் பாதுகாப்பு தருவது என்பது இன்னொன்று. இரண்டு கருத்துக்களையும் இணைத்து; அரசே இதைச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை இந்தக் கேள்வியை எழுப்பியிருப்பதன் மூலம், ஆசிரியர்களுடைய சங்கங்களெல்லாம், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இரண்டையும் பற்றி இப்போது நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு என்பதைப் பொறுத்தவரை, முழுமையாக அதைத் தர பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. அந்த நடவடிக்கை மூலம் நிச்சயம் அவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும். அதற்காக வேண்டி எல்லாப் பள்ளிகளையும் அரசே எடுக்க வேண்டிய சூழ்நிலை இப்போது இல்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இப்படி வாரியம் அமைத்து எல்லாப் பள்ளிகளையும் அரசே எடுக்க வேண்டுமென்கிற கோரிக்கையைப் பொறுத்த வரையில், மாணவர்கள், ஆசிரியர்கள் நலன் கருதி ஆசிரியர் வாரியம் என்றும் மாணவர் வாரியம் என்றும் இரண்டு வாரியங்களை அமைத்தால், இருவரும் ஒருவரையொருவர் வாரிவிடாமல் இருக்க அது வாய்ப்பாக இருக்கும். அந்த வகையில் அரசு இதைப்பற்றி யோசிக்குமா ? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஆசிரியர் நலன் கருதி, மாணவர் நலன் கருதி அரசு இப்போதே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பிரச்சினைக்கே இடமில்லை.

### நக்சலைட் கைதிகள்.

*** 124 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980, ஜூலை மாதம் முடிய தமிழ்நாட்டு சிறைகளில் எத்தனை நக்சலைட் கைதிகள் இருக்கிறார்கள் ?



(இ) அவர்களில் எத்தனை பேர் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் ?

(உ) அவர்களில் (1) மூன்று மாதங்களுக்குள் (2) மூன்று வருடங்களுக்கு முன் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(எ) அவர்கள்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளனவா ?

(ஐ) ஆம் எனில், அவ்வழக்குகளின் முடிவு என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) தண்டனை சிறைவாசிகள்—21. விசாரணை சிறைவாசிகள்—15.

(இ) அனைவரும் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள்.

(உ) (1) 8 விசாரணை சிறைவாசிகள்.

(2) 16 தண்டனை பெற்றவர்கள்.

(எ) ஆம்.

(ஐ) விசாரணையில் உள்ளவர்கள் மீதுள்ள வழக்குகள் பற்றி விசாரணை நடைபெற்று வருகின்றது. தண்டனைக் கைதிகள், நீதிமன்றங்களால் அளிக்கப்பட்ட தண்டனையை அனுபவித்து வருகிறார்கள்.

(முற்பகல் 10-50)

**திரு. ம. சங்கரலிங்கம் :** விசாரணைக் கைதிகள் 15, தண்டனைக் கைதிகள் 21 என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். இந்த விசாரணை எவ்வளவு காலமாக நடந்துகொண்டிருக்கிறது ? இவர்களிலே, கொலைக் குற்றத்திற்கும், கொள்ளைக் குற்றத்திற்கும் உரியவர்கள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ரிமான்ட் பிரிசனர்களைப் பொறுத்த வரையில், 8 பேரில் 31—5—1980-ல் செல்வன் என்பவரும், 30—5—1980-ல் காசி என்பவரும், 30—5—1980-ல் சுவாமிநாதன், 18—6—1980-ல் சின்னராஜ், 1—7—1980-ல் கிருஷ்ணன், 1—7—1980-ல் வரதன், 1—7—1980-ல் நெடுஞ்செழியன், 25—7—1980-ல் செல்வன் என இவர்கள் ரிமான்ட் செய்யப்பட்டு செக்ஷன் 302, 286 ஐ.பி.சி.-யின் கீழ் விசாரணை நடைபெற்று வருகிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நக்சலைட்டுகள் தமிழ் நாட்டில் எந்தச் சூழ்நிலையில் உருவாகிறார்கள் ? அதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது ? அந்தச் சூழ்நிலையைத் தவிர்க்க ஏதாவது ஆய்வு தனியாக, விஞ்ஞான ரீதியாகச் செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இதை ஒரு தனிப்பட்ட கேள்வியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போட வேண்டும். இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய போர்ட்ஃபோலியோவிலே வருகிறது. இதை ஒரு சமுதாயப் பிரச்சினையாகக் கருதி அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. க. இராமமூர்த்தி : இந்த நக்சலைட் கைதிகளில் எத்தனை பேர் மீது (charge sheet) சார்ஜ் ஷீட் போடப்பட்டிருக்கிறது ? எத்தனை பேர் மீது இதுவரை சார்ஜ் ஷீட் போடப்படவில்லை ? போடப்பட்டவர்கள் மீது (I.P.C.) எந்தெந்த செக்ஷன்களின்படி வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது ? எஃப்.ஐ.ஆர். (F.I.R.) என்ற அளவிலே இருந்துகொண்டிருக்கும் வழக்குகளிலே எந்தெந்தக் குற்றங்களுக்கு வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நான் முன்னரே கூறிய எட்டு விசாரணைக் கைதிகள் மீதும் சார்ஜ் ஷீட் போடப்பட்டு 302, 286 ஐ.பி.சி.-யின்படி வழக்கு நடைபெறுகிறது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : நக்சலைட்டுகள் என்பவர்கள் யார் ? அப்படி அவர்களுக்குப் பெயர் வரக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இந்தக் கேள்விக்குப் பதில் இல்லை.

திரு. சோ. ஆறுமுகம் : சென்ற ஆண்டு திருப்பத்தூரிலே நடைபெற்ற சம்பவம் ஒன்றில் ஒரு போலீஸ் அதிகாரியும், காவலர்களும் இறந்த பிறகு வட ஆற்காடு மாவட்டத்தில் போலீசார் எடுத்த நடவடிக்கையின்படி, எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் ? மேலும் நக்சலைட்டுகள் என்று கருதி கைது செய்து சிறையிலே வைத்த பிறகு, இரண்டு-மூன்று ஆண்டு காலம் சிறையிலே இருந்து, வழக்கு முடிந்து சிறைக்கு வெளியே வரும்போது, வேறு வழக்கு இருக்கிறது என்று சொல்லி மீண்டும் அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். இதனால் அவர்கள் தீவிரவாதிகளாகக் கூடிய சூழ்நிலைகள் உருவாகின்றன. ஆகவே, இரண்டு-மூன்று ஆண்டு காலம் அவர்கள் சிறையிலே இருக்கும்போதே அவர்கள் மீது வேறு வழக்கு ஏதாவது இருக்கிறதா என்று ஆராய்ந்து, அவர்கள் மீது இருக்கும் வழக்குகளை முடிக்க துரித நடவடிக்கை எடுக்கும் விதத்தில் இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : திருப்பத்தூர் நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்டவர்கள் பற்றிய தனிக் குறிப்பு என்னிடத்திலே இப்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல—சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே சென்றவர்கள் மீது மீண்டும் வழக்குகள்



தொடரப்படுகின்றன என்று சொன்ன கருத்து பற்றிய தகவல் இப்போது என்னிடத்திலே இல்லை. இருந்தாலும், நக்சலைட்டுகள் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இதை ஒரு 'சோஷியல் ப்ராபிள'-மாகக் கூட கருத்தில் கொண்டு இந்தப் பிரச்சினைக்கு ஒரு பரிகாரம் தேட வேண்டும் என்ற அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : "ஜெயிலுக்குப் போய் வந்த சிரேஷ்ட மக்களை சீர்திருத்த வேண்டும்" என்று கலைவாணர் அவர்கள் சொன்னார்கள். அதுபோல, இந்த நக்சலைட்டுகள் சீர்திருத்தம் அடைகிறார்களா ? அவர்களைச் சீர்திருத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அவர்களைச் சீர்திருத்த வேண்டும் என்ற அடிப்படையிலேதான் அரசின் அணுகுமுறை-நடவடிக்கைகள் இருக்கின்றன.

திரு. க. இராமமூர்த்தி : சிறையிலே இருப்பவர்களில் எட்டு பேர் மீதுதான் சார்ஜ் ஷீட் போடப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகவல் கொடுத்தார்கள். இதுவரை சார்ஜ் ஷீட் போடப்படாதவர்கள் உண்மையிலேயே நக்சலைட்டுகள்தானா ? அல்லது அவர்கள் நக்சலைட் கைதிகள் என்ற பெயரிலே வேறு காரணங்களுக்காக சிறையிலே வைக்கப்பட்டிருக்கிறார்களா ? இந்தக் காலதாமதத்திற்கு அதுவும் ஒரு காரணமா என அரசு பரிசீலித்ததா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நக்சலைட்டுகள் என்ற தீவிரவாதிகள் வரிசைக்கு வராதவர்கள் அந்தப் பிரிவுக்குப் போகக்கூடாது என்று அரசு எச்சரிக்கையாக இருக்கிறது. அதன் காரணமாகத்தான் இது குறித்துப் புலன் விசாரணை செய்யப்படுகிறது. அந்த அடிப்படையிலே வழக்குப் பதிவு செய்யப் படுவதால், இந்தக் காலதாமதம் ஏற்படுகிறது. நிரபராதிகள் யாரும் அத்தகைய பிரிவுக்கு உள்ளே வரக்கூடாது என்ற அடிப்படையிலேதான், அந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஆ. நல்லசிவன் : உள்ளே சென்ற பிறகு—குறிப்பாக எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர் கூட அங்கே இருக்கிறார்—அவர்கள் தாங்கள் நக்சலைட்டுகள் அல்லாதவர்கள் என்று அறிவித்தாலுங்கூட, அரசு 'நீங்கள் நக்சலைட்டுகள்' என்று சொல்லி தொடர்ந்து அவர்களைக் கண்காணிக்கும் நடவடிக்கையைக் கைவிடுமா ?

[1981 மார்ச் 7

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று கூட திருச்சி சிறையிலே இருப்பவர் ஒருவர் மனு கொடுத்து—ஆரம்பத்திலே அவர் நக்சலைட் என்று புலனாய்வுத் துறை கூறியபோதும்—பிறகு அவர் நக்சலைட் அல்ல, திருந்தி விட்டார் என்று அறிந்து, அந்தப் பிரிவிலே இருந்து நீக்கி அவருக்கு அந்த அடிப்படையிலே \ சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குரோம் லெதர் கம்பெனி.

* 125 வினா.—திரு. ப. மாணிக்கம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குரோம்பேட்டையில் உள்ள குரோம் லெதர் கம்பெனியைத் திறக்க, அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

(இ) அரசே எடுத்து நடத்தும் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : (அ) நிறுவனத்தை இயங்கச் செய்ய மாநில அரசு எடுத்த முயற்சிகள் பயனளிக்காததால், குரோம் லெதர் கம்பெனியின் நிர்வாகத்தை மேற்கொண்டு மீண்டும் இயங்கச் செய்யுமாறு மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டது. இதன் தொடர்பாக மைய அரசு தொழிலமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் மற்றும் இந்திய தோல் நிறுவனத்தின் தலைவர் ஆகியோர் தலைமையில் இந்திய மத்திய வங்கி, நிறுவனம், மையத் தோல் ஆராய்ச்சி நிறுவனம், மாநில அரசு அதிகாரிகள் ஆகியவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. ஆனால் மைய அரசு இந்நிறுவனத்தின் நிர்வாகத்தை தான் மேற்கொள்ள இயலாது என தற்போது தெரிவித்துள்ளது. ஆனாலும் மாநில அரசு இதுபற்றி மைய அரசிடம் வலியுறுத்தி வருகிறது.

(இ) இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : நம்முடைய மாநிலத்திலே மூடப்பட்டிருக்கிற எந்தெந்தத் தொழில்களையெல்லாம் மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நமது அரசு ஏதாவது கணக்கு எடுத்திருக்கிறதா ? அப்படி எந்தத் தொழிலை எடுக்க வேண்டும், அதற்கு எவ்வளவு முதலீட்டை மத்திய அரசு செய்ய வேண்டும் என்று நமது அரசு ஒவ்வொரு ஆண்டும் தகவல் ஏதும் தயாரித்துக் கொண்டிருக்கிறதா ?



1981 மார்ச் 7]

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : இந்த நிறுவனத்தைப் பொறுத்த வரையில், இது லாபகரமாக நடைபெற வேண்டும் என்று சொன்னால், அதற்கு ஒரு கோடி ரூபாய் வரையில் நடைமுறை மூலதனமாகக் கொடுத்தால் தான், அதை நடத்த முடியும் என்று மத்திய தோல் ஆராய்ச்சிக் கழகம் தெரிவித்திருக்கிறது. நம்முடைய நிதியாதாரத்தைக் கொண்டு மூடியிருக்கிற நிறுவனத்தை நடத்த முடியாது என்ற நிலை வரும்போதெல்லாம், மத்திய அரசை நாம் அணுகுகிறோம். இதற்கென்று ஒரு வரையறுக்கப்பட்ட நடைமுறை இல்லை. உச்சவரம்பும் இல்லை. நம்மாலே முடியாவிட்டால், மத்திய அரசைக் கேட்கிறோம்.

(முற்பகல் 11-00)

திரு. ஆ. நல்லசிவன் : அந்தத் தொழிற்சாலையில் 900 தொழிலாளர்கள் பணியாற்றி வந்தார்கள். ஆனால் கடந்த 3 ஆண்டுகளாக அத்தொழிற்சாலை மூடப்பட்ட நிலையிலிருக்கிறது. மூடப்பட்டதற்குக் காரணம் தொழிலில் ஏற்பட்ட நட்டமல்ல. அந்தத் தொழிலை நடத்துபவர் ஏற்றுமதி செய்வதாகச் சொன்ன பொருள்களைச் சரியான முறையில், சரியான தரத்தில் அனுப்பாததால் நட்டம் ஏற்பட்டு, தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையில் உள்ள மெஷினரிகள் நல்ல நிலையில் உள்ளன. அங்கே உற்பத்தியாகும் பொருள்களுக்கு சர்வதேச மார்க்கெட்டில் நல்ல டிமாண்டு இருக்கிறது. எனவே அந்தத் தொழிற்சாலையை மத்திய அரசு ஏற்று நடத்த முன்வராவிட்டாலும், மாநில அரசே அந்தத் தொழிற்சாலையை தன் பொறுப்பில் ஏற்று, 900 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன் உற்பத்தியாகும் பொருளை நல்ல லாபத்திற்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்பிருப்பதால், இது குறித்து அரசு மறுபரிசீலனை செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : நட்டம் எந்தக் காரணத்தால் ஏற்பட்டது என்பதல்ல பிரச்சினை. தற்போது மூடப்பட்டுள்ள நிலையில் உள்ள அந்தத் தொழிற்சாலையைத் திரும்பச் செயல்படச் செய்ய வேண்டுமென்றால், அதற்கு நடைமுறை மூலதனமாக சுமார் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்ய வேண்டியிருக்கிறது. அப்போதுதான் அந்தத் தொழிற்சாலையை லாபகரமாக நடத்த முடியும் என்ற நிலை இருக்கிறது. ஆனால் மாநில அரசைப் பொறுத்தவரையில், தன்னுடைய நிதியாதாரத்தில் இதைச் செய்ய முடியாது என்ற நிலையில்தான், மத்திய அரசிடம் நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். மத்திய தொழிலமைச்சர் அவர்களுக்கும், மத்திய நிதியமைச்சர் அவர்களுக்கும் கடிதங்கள் மூலமாக வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். அதிகாரிகள் மூலமாகவும் நாம் தொடர்ந்து

வலியுறுத்தி வருகிறோம். இன்னும் டெல்லிக்குப் போகிறபோது மத்திய அமைச்சர்களைச் சந்தித்து அவர்களின் உதவியை மேற்கொண்டும் நாட இருக்கிறோம்.

திரு க. இராமமூர்த்தி: ஏறத்தாழ 1000 தொழிலாளர்கள் பணியாற்றிய ஒரு பெரிய தொழிற்சாலை இன்றைக்கு மூடப்பட்டிருக்கிறது. இந்தத் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு முன்பு அந்தத் தொழிற்சாலையை நடத்த விண்ணப்பித்துக் கொண்டவருக்கு அதனை நடத்த தகுதி இருக்கிறதா, அவரால் நடத்த முடியுமா என்பதைப்பற்றி அரசு பரிசீலனை செய்ததா? அரசாங்கம் கடன் தருகிறபோதும், அல்லது கடனுக்குச் சிபாரிசு செய்யும் போதும், அத்தொழிலை நடத்துகிறவர்களைச் சரியாகக் கண்காணித்தது உண்டா? இப்படி Defective licensing and defective grant of loans. ஏதாவது இருந்திருக்கிறதா? பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மாற்று ஏற்பாடு ஏதாவது செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு சு. திருநாவுக்கரசு: அந்த நிறுவனம் மூடப்பட்டு 3 ஆண்டுகளாகிவிட்டன. அதற்கு எப்போது லைசென்ஸ் வழங்கப்பட்டது என்பது போன்ற விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்றே நானும் மனப்பூர்வமாக ஒன்றை நம்புகிறேன். அதாவது மத்திய அரசு இதில் விரைவில் தலையிட்டு வேலையிழந்திருக்கும் அந்தத் தொழிலாளர்கள் மீண்டும் பணியிலமர்த்தப்படும் அளவுக்கு உதவி செய்யும் என்றுதான் நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தமக்கு இருக்கிற செல்வாக்கை மத்திய அரசு அளவில் பயன்படுத்தி, வேலையிழந்துள்ள 1000 தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க உதவிட வேண்டுகிறேன்.

திரு. ஜே. எம். மியாகான்: அந்தத் தொழிற்சாலையை திரு நாகப்பச் செட்டியார் அவர்கள் ரூபாய் 38 லட்சத்திற்கு வாங்கும்போது அதில் நிறைய இயந்திரங்கள் இருந்தன. கடந்த 3 ஆண்டுகளாக அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டிருக்கின்றது. அந்தத் தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்கள் பழுதடைந்துவிட்டதால், அதைத் திரும்ப ஆரம்பிக்க முடியவில்லையா அல்லது இயந்திரங்களையே விற்றுவிட்டார்கள் என்பதால் ஆரம்பிக்க முடியவில்லையா அல்லது அந்தத் தொழிலதிபருக்கு ஏற்பட்ட கடன் சுமை காரணமாக ஆரம்பிக்கப்பட முடியவில்லையா? எந்தக் காரணத்தால் திரும்ப அந்தத் தொழிற்சாலையை நடத்த முடியவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு சு. திருநாவுக்கரசு: அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டதற்கான முக்கியமான காரணங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட காரணங்களும் உண்டு. அது மட்டுமல்ல. தவறான மானேஜ்



மெண்ட் காரணமாக அது மூடப்பட்டிருக்கிறது என்பதும் உண்மை. ஆனால் இப்போது நமக்கிருக்கிற பிரச்சினையெல்லாம் அதை மீண்டும் எப்படி எடுத்து நடத்துவது என்பதுதான். அதைப் பொறுத்த வரையில், மத்திய அரசு தலையிட்டு, அந்தப் புரமோட்டரை மாற்றிவிட்டு வேறு ஒருவரை வைத்து நடத்துவது நல்லது. மத்திய அரசு அதைச் செய்ய வேண்டும் என்றுதான் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: இந்தத் தொழிற்சாலையை திரும்ப நடத்துவது குறித்து மத்திய அரசுக்குழு ஆராய்ந்து எந்த அடிப்படையில் ஏற்று நடத்துவது சரியில்லை என்று சொல்லியிருக்கிறதா? பண முதலீட்டின் அடிப்படையில் மத்திய அரசு அதை மறுக்கிறதா? தொழிலாளர்களின் வேலை வாய்ப்பை முன்வைத்து மாநில அரசு தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்துமா? மத்திய அரசு இன்னின்ன தொழிற்சாலைகளை ஏற்று நடத்தலாம் என்று ஏதேனும் வரையறைகள் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு சு. திருநாவுக்கரசு: நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, இதற்கென்று மத்திய அரசின் தனிப்பட்ட வரைமுறைகள் ஏதுமில்லை. நம்மைப் பொறுத்தவரை, நாம் மத்திய அரசே இந்தத் தொழிற்சாலையை ஏற்று நடத்த வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். இனியும் தொடர்ந்து அதை வலியுறுத்துவோம்.

திரு க. இராமமூர்த்தி: இந்தத் தொழிற்சாலை மூடப்பட்ட பிறகு, இதிலிருந்து மெஷினரிகள் அப்புறப்படுத்தப்பட்டதாகத் தகவல் வெளியாகியிருக்கிறது . . .

மாண்புமிகு திரு சு. திருநாவுக்கரசு: இந்தக் கருத்து சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, இயந்திரங்களை ஏற்கெனவே விற்றுவிட்டார்கள் என்றுதான் குறிப்பிட்டார். மூடப்பட்ட பிறகு அந்தத் தொழிற்சாலையின் இயந்திரங்கள் விற்கப்பட்டதாகத் தகவலில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு இராமமூர்த்தி அவர்கள் தவறாக மாற்றிச் சொல்கிறார். அந்தத் தொழிற்சாலை மூடப்பட்ட பிறகு அங்குள்ள இயந்திரங்கள் கடத்தப்பட்டதாகவோ, விற்கப்பட்டதாகவோ எனக்கு எந்தத் தகவலும் இல்லை. அப்படி நடப்பதற்கும் நிச்சயமாக வழியில்லை. அதற்கு முன்பு வேண்டுமானால் நடந்திருக்கலாம். மானேஜ்மெண்ட் தரப்பில் தவறுகள் நடந்திருக்கின்ற காரணத்தால்தான், அந்தத் தொழிலை லாபகரமாக நடத்த முடியாமல் போய்விட்டது. லாபகரமாக நடத்தப்பட்டு வந்த தொழிற்சாலை மூடப்படும்

நிலைக்கும் வந்தது. ஆக அதன் அடிப்படையில் பார்க்கிறபோதுதான், அப்படி நடந்திருக்கலாம் என்ற யூகத்தின் அடிப்படையில் ஏற்றுக் கொள்கிறோமே தவிர, வேறு எந்த அடிப்படையிலும் அல்ல.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு —ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

டாக்டர் அம்பேத்கார் அரசினர் கலைக் கல்லூரி மாணவர்கள் 18 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தம் மேற்கொண்டிருப்பது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் சி. ரா. லெட்சுமிகாந்தன், பா. ரா. தாமஸ் மற்றும் செல்வி அ. லிலாவதி ஆகியோர், டாக்டர் அம்பேத்கார் அரசினர் கலைக் கல்லூரி மாணவர்கள் 18 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டமும், வேலை நிறுத்தமும் மேற்கொண்டிருப்பதைக் குறித்து ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத் திற்கான முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு ஒத்தி வைப்புத் தீர்மான விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு க. மீனாட்சிசுந்தரம் அவர்களும் இது குறித்து ஓர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். எனவே அவரும் இது குறித்து கருத்து தெரிவிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னை வியாசர்பாடியில் உள்ள டாக்டர் அம்பேத்கார் அரசினர் கலைக் கல்லூரியின் மாணவர்கள் தங்களின் 18 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி, கடந்த 10 நாட்களாக நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டிருக் கிறார்கள். கல்லூரி வளாகத்திற்குள் இருக்கும் காலியிடத்தைப் பொது மக்கள் பொது கழிப்பிடமாகப் பயன்படுத்துகிறார்கள். அங்கே குப்பை கொட்டு கிறார்கள், அசுத்த நீர் கல்லூரி வளாகத்திற்குள்ளேயே வருகிறது. இத்தகைய சூழ்நிலைகள் அதிருப்தியை உருவாக்குகின்றன. எனவே அந்தக் கல்லூரிக்கு ஒரு சுற்றுச் சுவர் கட்ட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

அதோடு கல்லூரிக்கு 28 ஏக்கர் நிலப்பரப்பு இருக்கிறது. அங்கே ஒரு விளையாட்டு மைதானம் கட்ட வசதியிருக்கிறது. அதை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். மேலும் அங்கே இருப்பதே ஓரே ஒரு



கட்டிடம்தான். அதில் வகுப்புகள் நடத்த வசதிகள் கிடையாது. ஆகவே, கல்விக்கு ஏற்ற சூழ்நிலை நிலவவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி முக்கியமான 6 கோரிக்கைகளின் அடிப்படையிலே இன்றையதினம் நேரடி நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொண்டிருக்கிறார்கள். அரசுக்கு மனுக்கள் அனுப்பியும் இவை குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. கல்லூரிக்குச் சொந்தமான விளையாட்டு மைதானம் கட்டுவதற்காக என்று இருந்த ரூ 2½ லட்சத்தை திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இது எந்த அளவுக்கு உண்மை என்பது எனக்குத் தெரியாது.

இவ்வாறு பல வகைகளிலும் அதிருப்தி ஏற்பட்டிருப்பதால், மாணவர்கள் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே மாணவர்கள் வைத்துள்ள கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கான முறையில் அவைகளைக் குறித்து இங்கே விரிவான முறையில் விவாதம் நடத்தி அவர்களின் பிரச்சினை களுக்கு ஓர் தீர்வு கண்டு, விரைவில் அந்தக் கல்லூரியைத் திறப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கு உதவியாக, சட்டமன்ற மேலவையின் இன்றைய நடவடிக்கைகளை ஒத்தி வைத்து, இப்பொருள் குறித்து விவாதிக்க அனுமதியளிக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

திரு க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கார் அரசினர் கலைக் கல்லூரியின் மாணவர்கள் ஏறத்தாழ 20-க்கும் மேற்பட்ட கோரிக்கைகளை முன்வைத்து நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கைகள் அனைத்தும் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக வைக்கப்பட்ட கோரிக்கைகளாகும். மாலை நேர வகுப்புகளை ஏற்படுத்த வேண்டும், நூலகம் தனிக் கட்டிட வசதியோடு இருக்க வேண்டும், கலையரங்கு வேண்டும், சிற்றுண்டிச் சாலை வேண்டும், ஆய்வகம் விரிவுபடுத்தப்பட வேண்டும், தாவர, விலங்கியல் காட்சிச்சாலை வேண்டும், மாணவர்களுக்கு என்.சி.சி. ஏற்படுத்த வேண்டும், அதோடு அந்தக் கல்லூரிக்கு வருகிற வழித்தடம்—மெயின் ரோடிலிருந்து தற்போது வரும் வழித்தடம் சரியாக இல்லை—சரியான பாதை வசதியோடு இருக்க வேண்டும். இப்படிப்பட்ட கோரிக்கைகளைக் குறித்து அரசு மெத்தனமாக இல்லாமல் உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தவும் அதற்கு என்னென்ன வழிவகைகள் இருக்கின்றன என்பதை ஆய்வு செய்வதற்கும் வசதியாக அவையின் இன்றைய அலுவல்களை ஒத்தி வைத்து, இப்பொருள் குறித்து விவாதிக்க அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## டாக்டர் அம்பேத்கார் அரசினர் கலைக் கல்லூரி மாணவர்கள் 18 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி வேலைநிறுத்தம் மேற்கொண்டிருப்பது குறித்து

[1981 மார்ச் 7

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அம்பேத்கார் கலைக் கல்லூரி மாணவர்கள் தங்கள் கல்லூரிக்குச் சுற்றுச் சுவர் இல்லாததால், கல்லூரிக்கு அருகில் குடியிருப்பவர்கள் இக் கல்லூரிப் பரப்பினை ஒரு பொதுவழியாக உபயோகப் படுத்துவதுடன், கழிப்பிடமாகவும், சலவைத் தொழிலாளர்கள் இக்கல்லூரியின் தாழ்வான நிலப் பரப்பில் தேங்கியுள்ள நீரில் துணிகளைத் துவைக்கவும், அவற்றை அதற்கு அருகிலேயே உலர வைக்கவும் உபயோகப்படுத்துகின்றனர் என்றும், மேலும் இக்கல்லூரியின் நிலப்பரப்பின் ஓரத்தில் அனுமதியின்றி குடிசைகளைப் போட்டுக்கொண்டு இக்கல்லூரி நிலத்தை ஆக்கிரமிக்கவும் செய்கின்றனர்; இதனால் இக்கல்லூரியின் சுற்றுப்புற சுகாதார நிலை பாதிக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்து கல்லூரிக்கும் சுற்றுச்சுவர் கட்டித் தர வேண்டும் என்று கோரியுள்ளார்கள். தவிர, விளையாட்டு மைதானம், நூலகம், கல்லூரி முகப்பில் பெயர் வளைவு, சைக்கிள் கொட்டகை, சிற்றுண்டிச்சாலை, குடிநீர் வசதி, கல்லூரியின் கட்டிடத்தை விரிவுபடுத்துதல், மேலும் சில வகுப்புகளை ஏற்படுத்துதல், கல்லூரிக்கருகில் பஸ் நிலையம் அமைத்தல், அண்ணாநகர், விவேகானந்தா இல்லம், சைதாப்பேட்டை போன்ற இடங்களுக்கு நேரடி பஸ் வசதி போன்ற வசதிகள் வேண்டுமென்று கோரியுள்ளார்கள்.

**கல்லூரிக்கு சுற்றுச்சுவர் கட்டுவது :** அந்தப் பகுதியில் உள்ள மக்கள் உட்புகுந்து ஆக்கிரமிப்பதையும், அசுத்தப்படுத்துவதையும் தடுக்க கல்லூரிக்குச் சுற்றுச் சுவர் கட்டுவது மிக அவசியமென்று கல்லூரி துணை இயக்குநர் தெரிவித்துள்ளார். ஆனால் பக்கச் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு பெருஞ் செலவாகும் என்பதால் கல்லூரிக்கு முன் நுழைவாயில் வளைவு, நுழைவுப் பாலம் ஆகியவை அமைக்கலாம் என்றும், மீதி பக்கங்களுக்கு பலமான முள் கம்பி வேலி போடலாம் என்றும், அதற்கான மதிப்பீட்டை பொதுப்பணித் துறையிடமிருந்து பெற்று உடனடியாக அரசுக்கு அனுப்பி வைப்பதாகவும் கூறியிருக்கிறார்.

கூடுதல் கட்டிடங்கள் கட்ட வேண்டுமென்றுள்ள கோரிக்கை மீது மாணவர் களின் குறைந்த எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது தற்போதைக்குத் தேவையில்லை என்று தோன்றுகிறது.

1981-82 ஆம் ஆண்டு புதிதாக ஆரம்பிக்கப்படும் கணக்கு வகுப்புகளுக்கு மூன்று வகுப்பறைகளும், அரங்கத்திற்குப் பயன்படும்படி ஒரு பெரிய அறையும் தேவைப்படும். இந்தக் கோரிக்கை அடுத்த ஆண்டில் கவனிக்கப்படும்.



**புதிய பாட வகுப்புகள் :** ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரே ஒரு புதிய பாடம் ஆரம்பிக்க அனுமதியளிக்க சென்னைப் பல்கலைக் கழகம் தீர்மானித்துள்ளது. இதன்படி பி. எஸ்ஸி. கணக்கு வகுப்புகள் ஆரம்பிக்கும் திட்டம் அனுப்பப் பட்டுள்ளது.

நூலகம், சோதனைக் கூடம், விலங்கியல் துறைக்கான மியூசியம் ஆகிய வற்றில் தற்போது உள்ள வசதிகளை மேம்படுத்த கூடுதல் நிதி 1981-82-ல் ஒதுக்கப்படும்.

இக்கல்லூரிக்கு குடிநீர் வசதி, சைக்கிள் கொட்டகை, சிற்றுண்டிச்சாலை போன்ற வசதிகளைச் செய்து தருவதற்கு விவரமான அறிக்கை ஒன்றை கல்லூரி முதல்வரிடம் கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுள்ளார்.

1981-82-ல் மேலும் கூடுதல் தொகை ஒதுக்கி ஆய்வகம், நூலகம் முதலிய வற்றில் சில வசதிகள் செய்து தர தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கூடுதலான பஸ் வசதிகளுக்காகப் பல்லவன் போக்குவரத்துக் கழக அதிகாரி களைக் கேட்குமாறு கல்லூரி முதல்வர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், சிற்றுண்டிச் சாலைக்குத் தனிக் கட்டிடம் தேவையில்லை என்றும் சிற்றுண்டிச் சாலையை ஒப்பந்தத் தில் ஏற்று நடத்த எவரும் முன்வரவில்லை என்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்திருக்கிறார்.

மாலை நேரக் கல்லூரி என்.சி.சி. முதலியவைகள் ஆரம்பிப்பதுபற்றி பின்னர் கவனிக்கலாம்.

மாணவர்களின் நியாயமான கோரிக்கைமீது மெத்தனமாயிராது துரித மாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென்பது மேற்கண்டவைகளின் மூலம் தெளிவாகும்.

இதிலே இன்னுமொன்றைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. குடிநீர் வசதி பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று எனக்கு விவரம் சொல்லியிருக்கிறார்கள். அதற்கடுத்து சுற்றுச்சுவர் கட்டுவதற்குப் பதிலாக முள் கம்பி வேலி போடுவதை மாற்ற வேண்டும் என்பது மாணவர் களுடைய முக்கியமான கோரிக்கை. இதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அது மட்டுமல்லாமல், கல்லூரிக்கென்று இருக்கும் 28 ஏக்கர் நிலப்பரப்பில் பொது மக்கள் சென்று பல்வேறு வகையாகப் பயன்படுத்தி கல்விச் சூழ் நிலையைக் கெடுக்கிறார்கள் என்பது ஒரு புறமிருக்க, கல்லூரியின் சொத்தாக

இருக்கும் 28 ஏக்கரில் ஆறு ஏக்கருக்கு மேல் ஆக்கிரமிப்பு இருக்கிறது. இதை இப்படியே விட்டால், நாளடைவில் கல்லூரிக்கே இடம் இல்லையென்ற நிலை வந்துவிடும். பொது நன்மையைப் பார்க்கும்போது, இதையெல்லாம் தடுக்க வேண்டும் என்பதில் அரசுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. சுற்றுச்சுவர் கட்டினால்தான் இதைத் தடுக்க முடியும் என்று மாணவர்கள் சொல்லும் கருத்தை உண்மை என்று எடுத்துக்கொள்ளுகிறோம். அந்த அடிப்படையிலே முள் வேலி என்பதை மாற்றி சுற்றுச்சுவர் கட்ட முடிவு எடுப்பதற்காக அரசு உடனடியாகப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இன்று தனி நபர் தீர்மானத்தை விவாதிக்க இருக்கிறோம். ஆகவே தனி உறுப்பினர் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். தனி நபர் தீர்மானத்தை ஒத்திவைக்கக் கூடாது. அது ஒரு முக்கியமான தீர்மானம். ஆகவே அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து விவாதிக்க அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கருதி என் அனுமதியை மறுக்கிறேன்.

3. தகவல் கோரல்.

(1) ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து.

**திரு. சோ. ஆறுமுகம் :** நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. சோ. ஆறுமுகம் :** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக இருப்பதால்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நிலைமை என்னவென்று மாண்புமிகு உறுப்பினருக்கும் தெரியும். ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்தால், அதற்குரிய பதிலை அளிக்க, தகவல்கள் சேகரிக்க வேண்டும். என்னுடைய கவனத்தில் இருக்கிறதென்றால், நிராகரிக்கப்பட்டதாக அர்த்தம் இல்லை, தகவல் சேகரிக்கப்படுகிறது என்றுதான் பொருள்.



**திரு. சோ. ஆறுமுகம் :** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால்தான், அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். அவை கூடுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகக் கொடுத்தால்கூட, அதுபற்றி முடிவு எடுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆனால், நான் நேற்றைய தினமே கொடுத்திருக்கிறேன். இது குறித்து தகவல்களைச் சேகரிப்பதில் அப்படி என்ன சிரமம் இருக்கிறது? இப்படி நாளைக் கடத்துவது என்பது, எங்களுடைய பணியைத் தடை செய்வது போலவும், பொது மக்களுடைய பிரச்சினைகளை அலட்சியப்படுத்துவதைப் போலவும் இருப்பதால், இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கு நீங்கள்தான் முடிவு கட்ட வேண்டும். ஆகவே உங்களுடைய தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதற்குத் தீர்ப்புத் தேவையில்லை. ஏற்கெனவே சொன்னதுதான் கருத்து.

(2) வினாக்கள்-விடைகள் குறித்து.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். தினந்தோறும் வரும் வினாப் பட்டியலில் இப்போது வினாக்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. நான் விசாரித்ததில், சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து பதில்கள் வரவில்லை என்று அறிந்தேன். அது சரியோ, தவறோ என்பது தெரியாது. கேள்விகள் முன்பே அனுமதிக்கப்பட்டு அது சேர்க்கப்பட்ட பிறகும்கூட, சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து பதில் வரவில்லை என்பது சரியல்ல. ஒவ்வொரு நாளும் 10 கேள்விகள் எடுத்துக்கொள்ளுவதற்குப் பதிலாக ஐந்து கேள்விகள்தான் இப்போது எடுத்துக்கொள்ளுகிறோம். இது குறித்து மாண்புமிகு தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும். உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளை அமைச்சர்கள் துறைகளுக்கு அனுப்புகிறார்கள்; அங்கிருந்து பதில் வந்தவுடனே ஒன்றையும் நிறுத்தாமல் எடுத்துக் கொள்ளுகிறோம். சில நேரங்களில் பத்துக் கேள்விகளுக்கு மேலாகக் கூட போடுகிறோம். குறைவாகப் போட்டது வேண்டுமென்றே போடவில்லை. பதில் வராததால்தான் சேர்க்கவில்லை. இனி துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, 40, 45 நாட்களுக்குள் பதில் தராவிட்டால், வினாக்களை வினாப் பட்டியலில் சேர்த்துவிட வேண்டும் என்று தாங்களே முன்னால் அறிவித்திருக்கிறீர்கள். அப்படியும் பல

கேள்விகளுக்குப் பதில் வராமல் இருக்கிறது. நீங்கள் ஆணை பிறப்பித்தும் பதில் வரவழைக்க முடியவில்லை. அதுபோலவே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தால், அதற்குரிய புள்ளிவிவரத்தோடு மறுநாளே எடுத்துக்கொள்ளா விட்டால், எந்த நோக்கத்தோடு அந்தத் தீர்மானத்தைக் கொடுத்தோமோ அந்த நோக்கமே தோல்வி அடைகிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** எல்லாக் கேள்விகளும் அப்படி அமைவ தில்லை. சில கேள்விகள் உடனடியாகப் பதில் சொல்வதாக இருக்கின்றன. சில கேள்விகள் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அனுப்பி தகவல் சேகரிக்க வேண்டியவைகளாக இருக்கின்றன. ஆகவே தகவல் சேகரிப்பதில் நின்றிருக் கின்றன என்று நினைக்கிறேன். நான் பரிசீலனை செய்து பார்க்கிறேன். அவசியம் இல்லாமல் நாட்கள் தள்ளப்படுவதில்லை.

**திரு. சோ. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானம் திங்கட்கிழமையாவது எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அப்படிச் சொல்ல முடியாது. தகவல் வந்தால் எடுத்துக்கொள்ள முடியும்.

## 4. கவன ஈர்ப்பு.

**(1) சென்னை, தி. நகர் மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றிய ஆசிரியர் திரு. பி. டி. அரசு என்பவர் பணி நீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்து ஆசிரியர்கள் நடத்திய போராட்டம் குறித்து.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்:

"சென்னை, தி. நகர் மேல்நிலைப் பள்ளியில் 22 ஆண்டு பணிக்காலம் உடைய ஆசிரியர் திரு. பி. டி. அரசு என்பவர் பணி நீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்து ஆசிரியர்கள் போராட்டம் நடத்தி வருவதால் அப்பகுதிவாழ் பெற்றோர் மாணவர்களிடையே தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து".

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே; விவர அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

---

@ 378-ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.





**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, தி. நகர் மேல்நிலைப் பள்ளியினுடைய நிர்வாகி திரு. எஸ். பி. நமசிவாயம் என்பவர் மாணவர்களிட மிருந்து நன்கொடை என்ற பெயரால் வசூலித்த பணத்தையும், ஒவ்வொரு ஆண்டும் டி.வி. கட்டணம் என்று வசூலித்ததையும், ஆடியோ விஷுவல் கட்டணம் என்று வசூலித்ததையும், மாணவர்களுக்குக் காலண்டர் வழங்குவ தற்காக வசூலித்த தொகையையும், ஆசிரியர் நலநிதியையும் தன் சொந்த நிதி யாகப் பயன்படுத்தினார் என்றும், ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய தேர்வு நிலையை வழங்காமலும், ஊக்க ஊதியத்தை வழங்காமலும் இருக்கிறார். இவை களையெல்லாம் எடுத்துச் சொல்லி விவாதிக்கின்ற பொறுப்பு ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த பி. டி. அரசினுடையதாக இருந்தது. அவர் அப்படி இருக்கின்ற காரணத்தால், அவரை ஒழித்துக் கட்ட வேண்டுமென்ற நோக்கில் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அந்த நிர்வாகி அரசாங்கம் நியமித்துள்ள ஒரு குழுவில் அங்கம் வகிப்பதால், "அரசுத் தரப்புக்கு மிகவும் வேண்டியவர் நான், என்னை யாரும் ஒன்றும் செய்ய முடியாது" என்று அச்சுறுத்திக் கொண்டிருக்கிறார் என்பதால், ஆசிரியர்கள் உண்ணாவிரதம் நடத்திருக்கிறது. இந்த உண்ணாவிரதத்தில் 35 ஆசிரியர்கள் கலந்து கொண் டிருக்கிறார்கள்; அதில் 18 பேர்கள் பெண்கள். இதில் உள்ள நியாயத்தை உணர்ந்து, ஆசிரியர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே, நிர்வாகியினுடைய அச்சுறுத்தலைத் தடுக்கின்ற வகையிலே நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தமிழ் நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் வரன்முறைப்படுத்தும் சட்டத்தின்படி விசாரணை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தின்கீழ் என்ன நடவடிக்கையை எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக் கையை எடுக்க ஆசிரியர்கள் ஒத்துழைப்பு தர வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். மற்றபடி நிர்வாகியின் மேல் சாட்டப்பட்ட குற்றச்சாட்டை அரசு தனியாக விசாரித்து ஆராய்ந்து தக்க நடவடிக்கையை எடுக்கும்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாக தனியார் கல்வி நிலையங்களில், வேண்டாத ஆசிரியர்களைப் பணியிலிருந்து நீக்குவதற்காக பல காரணங்களை அவர்களே உருவாக்கி, அதை ஆசிரியர்கள் மீது சுமத்திப் பணியிலிருந்து நீக்குகிறார்கள். அதுவும் முதலிலே இரண்டு மாத காலத்திற்குத் தற்காலிகப் பணி நீக்கம் என்று சொல்லி, பிறகு மீண்டும் தற்காலிகப் பணி நீக்கம் என்று சொல்லி, பணிநீக்கம் செய்கிறார்கள். இந்த

[திரு. பா. ரா. தாமஸ்] [1981 மார்ச் 7

முறையை ஒழித்து, ஒரு மாதத்திற்குத்தான் தற்காலிகப் பணிநீக்கம் செய்ய வேண்டும் என்றும், அதற்குள்ளாக விசாரணையை நடத்தி அது குறித்து திட்டவட்டமானதொரு முடிவை எடுக்க வேண்டும் என்றும் வற்புறுத்தும் வகையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சட்டத்தைத் திருத்த முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்கின்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அதற்காகத்தான் கருத்துக்களைச் சேகரித்துக் கொண்டிருக்கிறேன். அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் அதைப்பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

செல்வி அ. லீலாவதி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, திரு. பி. டி. அரசு என்பவரை 11—1—1981 முற்பகல் தற்காலிகப் பணி நீக்கம் செய்துள்ளார்கள். ஆனால் இதுநாள் வரை அவருக்கு எந்தவிதமான நியாயமான தீர்வும் அளிக்கவில்லை. அங்கே படிக்கின்ற மாணவர்கள் மார்ச் மாதப் பரிட்சைக்குப் போகவேண்டியதாக இருக்கின்றது. மூன்று மாத காலமாக அவர்கள் தீர்வு காணாமல் இருக்கின்றார்கள். வேண்டுமென்றே காலந்தாழ்த்துகிறார்கள். அப்படிக் காலந்தாழ்த்துவது நியாயம் தானா? அரசு அதற்குத் தீர்வு காணுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டப்படி அவர்கள் செய்கின்ற அந்தக் காரியங்களில் அரசு குறுக்கிடுவது அவர்களுக்குரிய உரிமைகளைக் கட்டுப்படுத்துவதாக இருக்கும். அப்படிக் கட்டுப்படுத்த முடியாது. அதை மீறி அவர்கள் செயல்படும்போது, அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். அதற்கான விசாரணைகள் வருகின்றபோது, அதற்கான உண்மைகள் தெரிகின்றபோது, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையில், விசாரணை குறித்த காலத்தில் முடியவில்லை என்றால், உரிய அதிகாரியிடம் மேலும் இரண்டு மாதத்திற்கு நீட்டிப்பு பெறலாம் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. தனியார் பள்ளி பாதுகாப்புச் சட்டத்தின்படி இந்த



1981 மார்ச் 7] [திரு. ரா. லெட்சுமிகாந்தன்]

விசாரணை இரண்டு மாதத்திற்குள் முடியவில்லை என்றால், மேலும் அனுமதி பெற சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

"provided that the competent authority may, for reasons to be recorded in writing, extend the said period of two months for a further period not exceeding two months if in the opinion of such competent authority the enquiry could not be completed within the said period of two months for reasons directly attributable to such teacher or other person"

என்ற அளவுக்குக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக இரண்டு மாத காலத்திற்குள் அந்த விசாரணை முடியவில்லை, நடத்தப்படவில்லை என்பதற்குத் தகுந்த காரணங்கள் கொடுத்தால்தான், கல்வித் துறை நீடிப்புக் கொடுக்கலாம். பெரும்பாலான பள்ளிகளில் சாக்குப்போக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதிகாரிகள் செல்வாக்கையும் பயன்படுத்திக் கொண்டு கால நீடிப்புப் பெற்று விடுகின்றார்கள். அதனால் ஆசிரியர்கள் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இந்த இரண்டு மாத கால அவகாசம் முடிவடைகிற போது, மேலும் அந்தக் கால நீடிப்புக் கொடுக்கப்படமாட்டாது என்ற உறுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கால நீடிப்புக் கேட்கக் கூடிய உரிமை அவர்களுக்கு சட்டப்படி இருக்கிறது. அப்படி அவர்கள் கேட்கின்ற போது தரமுடியாது என்று ஒரு உத்தரவு போட்டு, அதற்குப் பிறகு அவர்கள் கோர்ட்டிலே போய் ஒரு தடை உத்தரவு வாங்கிவிட்டால், பிறகு இரண்டு மாத காலம் என்பது பல மாத காலம் நீடிப்பு ஏற்பட்டு, அதுவே அவர்களுக்குப் பலம் கொடுக்கும் நிலை ஏற்பட்டுவிடும். அது இந்தப் பள்ளி நிர்வாகத்தினருக்குச் சாதகமான யோசனையாக மாறிவிடும். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அச்சப்படுவது போல், அதிகாரிகள் யாராவது தகுந்த காரணங்கள் இல்லாமல் கால நீடிப்புச் செய்திருந்தால், அது குறித்து தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

**(2) கடந்த 50 ஆண்டுகளாக சென்னை கடற்கரைச் சாலையில் வெல்லக் பூங்காவில் செயல்பட்டு வந்த பாரதச் சாரணர் அமைப்பு வேறு இடத்திற்கு மாற்றப்படும் என்று வெளியாகிய செய்தி குறித்து.**

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"கடந்த 50 ஆண்டுகளாக சென்னை கடற்கரைச் சாலையில் வெல்லக் பூங்காவில் செயல்பட்டு வந்த பாரதச் சாரணர் அமைப்பு வேறு இடத்திற்கு மாற்றப்படும் என்று வெளியாகிய செய்தி குறித்து சாரண-சாரணியர் இயக்கத்தில் உள்ளவர்களிடையே ஏற்பட்டுள்ள அதிருப்தி குறித்து"

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடத்திலேயே தொடர்ந்து இந்த சாரண-சாரணியர் இயக்க அலுவலகம் நீடிப்பதற்கான முயற்சிகளைக் கல்வித் துறை செய்ய மேற்கொண்டிருக்கின்றது என்று குறிப்பிட்டுள்ளது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். பொதுப் பணித் துறைக்கு மாற்றுக் கருத்துக்களை கல்வித் துறை கூறியிருக்கிறது. அந்த மாற்றுக் கருத்துக்களைப் பொறுத்து பொதுப் பணித் துறை பரிசீலனை செய்து என்ன முடிவு செய்திருக்கிறது? கல்வித் துறையினுடைய கருத்தை ஏற்றுக்கொண்டு செயல்படுத்துமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : என்னிடம் தரப்பட்டிருக்கின்ற விவரம் அவ்வளவுதான். இந்த வெல்லக் பூங்காதான் இந்த சாரண-சாரணியர் இயக்கத்திற்குத் தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற கருத்தைத்தான் கல்வித் துறை வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. பெரிய மகாநாடு, கூட்டம் இங்கே நடைபெற வேண்டுமென்பதற்காக, வேறு பணிகள் நடத்த அந்த இடம் தகுந்தது என்று கருதப்படுகிறது. ஆனால் இந்தச் சாரண-சாரணியர் இயக்கம் அங்கேதான் இருக்க வேண்டும் என்று கல்வித் துறை வற்புறுத்துகிறது. காரணம் பல ஆண்டு காலமாக சாரணர் இயக்கம் அங்கே இருந்து கொண்டிருக்கிறது. அதனால் அந்தப் பகுதியில் உள்ள கட்டிடம், அந்தப் பகுதியில் உள்ள குழந்தைகளுக்கும் நல்ல இடமாக இருப்பதாகக் கருதப்படுகிறது. அந்தக் காரணங்களுக்காக இந்த இடத்திலிருந்து சாரண-சாரணியர் இயக்க அலுவலகத்தை வெளியேற்றுகின்ற நடவடிக்கையை கல்வித்

---

@ 83 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.





துறை ஆதரிக்கவில்லை. அது அந்த இடத்திலேயே இருக்க வேண்டுமென்பதிலே எல்லாவிதமான முயற்சிகளையும் கல்வித் துறை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு, இந்தச் சாரண-சாரணியர் இயக்கத்திலே ஒரு நல்ல விழிப்புணர்ச்சி ஏற்பட்டு பள்ளிக் கூடங்களில் காரியங்கள் நல்ல முறையில் நடந்துகொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நேரத்தில் சிக்கல்களை நீக்க கல்வித் துறை நடவடிக்கை எடுத்திருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும்கூட, இந்தக் கட்டிடத்தையும் பொதுப் பணித் துறையிலிருந்து கல்வித் துறை வாங்கி, தனக்கே சொந்தமாக்குகின்ற வகையில் முயற்சிகள் எடுக்க வேண்டும். அப்படி எடுத்தால்தான், நிரந்தரமான தீர்வு பிறக்கும். அப்போதுதான் இந்தப் பணி முழுமையாக ஆகும். ஆகவே இந்தக் கட்டிடத்தை கல்வித் துறை தனக்கே சொந்தமாக்கிக்கொள்கின்ற வகையிலே முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட முயற்சியை அரசு எடுக்கும்.

## 5. தனி உறுப்பினர் தீர்மானங்கள்.

**(1) அனைத்துப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் அரசே ஏற்று நடத்துவது குறித்து—தொடர்ச்சி.**

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் 7—11—1979, 31—7—1980, 12—2—1981 அன்று முன்மொழிந்த தீர்மானத்தின் மீது தொடர்ந்து விவாதம்.

* திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தின் மீது நான் கழிந்த தனி நபர் தீர்மான நாளில் சொன்ன கருத்துக்களையொட்டி எனது எஞ்சிய கருத்தினைச் சொல்லி முடிக்க விழைகிறேன். அன்று இதைப் பற்றி நான் பேசுகின்றபோது, நம் நாட்டில் கல்வி எதிர்காலத்தில் சிறப்பாக அமைகின்ற அளவிலே, சீரான வளர்ச்சி கல்வித் துறையிலே ஏற்படுகின்ற

நிலையை உருவாக்குகின்ற ஒரு பணியிலே நாம் இருக்கிறோம். கட்சிச் சார்பற்ற முறையிலேயும் வேறு எந்தவிதமான மாச்சரியத்திற்கும் ஆட்படாமல் நாம் இதைப்பற்றி ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

ஒருவேளை இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, தமிழகம் கல்வித் துறையிலே பரவாயில்லை. மற்ற மாநிலங்களில் கல்வி பயிலுகின்ற மாணவர்கள் எண்ணிக்கையிலும் சரி, இங்குள்ள கல்வி முறைகளிலும் சரி, எஞ்சிய மாநிலங்களோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, இங்கு ஓரளவுக்குப் பரவாயில்லை என்று நாம் மன அமைதிப்பட்டு விடக்கூடாது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பிறநாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, நம் கல்வித் துறை மிகவும் பின்தங்கியிருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கல்வித் துறையில் ஒரு சீரான முறை ஏற்பட வேண்டும், தனியார் பள்ளிகளைப்பற்றி ஆராய வேண்டும் என்று நான் எடுத்துச் சொன்னேன். நம் முன்னால் வந்திருக்கின்ற தீர்மானம், எல்லாப் பள்ளிகளையும், தனியார் பள்ளிகளையும், ஊராட்சிப் பள்ளிகளையும் மற்ற பல துறைகள் நடத்துகின்ற பள்ளிகளையும், அத்தனையையும் அரசுப் பள்ளிகளாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பது. அப்படிச் செய்து கல்வித் துறையிலே ஒரு சீரான கல்வி வளருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த முயற்சிகளிலே நாம் ஈடுபட வேண்டும் என்ற கருத்து இருக்கிறது. இதிலே மாறுபட்ட கருத்து உடையவர்களும் உண்டு. மாறுபட்ட கருத்துடையவர்கள் உண்மையிலே அரசுத் துறையிலே நடைபெறுகின்ற பள்ளிகள் சீரான முறையிலே இல்லை என்ற எண்ணத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அரசுத் துறையில் யாரும் பொறுப்பேற்க மாட்டார்கள். அதிலே இருக்கின்ற பெரிய அதிகாரிகள் ஒரு துறையிலே இரண்டு ஆண்டுகள் செயலாளராக இருப்பார்கள், இன்னொரு துறைக்குப் பிறகு போய்விடுவார்கள். எனவே பொறுப்பேற்பவர்கள் சரியாக இருக்க முடியாது. அதனால் அதில் பல சிறப்பு அம்சங்கள் இருக்க முடியாது. அதை விட தனியார் துறை மிகச் சிறந்த முறையிலே இருக்கின்றது என்று கருதுகிறார்கள்.

(முற்பகல் 11-30)

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை).

இந்த நாட்டிலே பள்ளிகள், கல்லூரிகள் தொடங்கியபோது, ஒவ்வொரு பகுதியிலும் இருக்கக்கூடிய செல்வந்தர்கள், அற உணர்வு படைத்தவர்கள்,



அவர்களுடைய பெரும் முதல்களை எடுத்து, கல்வி அளிக்கும் நற்பணியில் ஈடுபட்டார்கள். அவர்களைப் பாராட்டுகிறோம். அவர்களுடைய அறக் குணம் காரணமாக, பல பள்ளிகள், பல கல்லூரிகள் தோன்றின. கல்வித் துறையும் சிறப்பாக இருந்தது. ஆனால் இப்போது அந்த நிலை சீரழிந்து கொண்டு வருவதைப் பார்க்கிறோம். இன்று நமது மாநிலத்தில் தனியார் பள்ளிகளை ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு ஆராய்ந்து பார்த்தால், ஏதாவது ஒரு குறை அங்கே நடைபெற்றுக்கொண்டு வருவது தெரியும். கல்வித் துறையிலே குறையற்ற நிலை உருவாக வேண்டும். கல்வித் துறையிலே, பயில்கிற பகுதியிலே அப்படிக் கருதுவதற்குக் காரணம், அங்கே பயிலும் இளைஞர்கள் என்ன சுற்றுச் சூழ்நிலை இருக்கிறதோ அதைத்தான் கற்றுக்கொள்கிறார்கள் என்பதை மறக்க முடியாது. மிக உயர்ந்த பள்ளிகள், கல்லூரிகள் என்று கணிக்கப்பட்டவைகள்கூட, இன்றைக்கு பல்வேறு தவறுகளுக்கு ஆட்பட்டு, அங்கே பயிலும் மாணவர்கள் அவைகளைப் புரிந்து, தெரிந்து, கோரிக்கைகள் எழுப்பப்பட்டு, அவை விளம்பரப்படுத்தப்பட்டு, போராட்டம் நடைபெறும் சூழ்நிலை ஆங்காங்கே ஏற்படுகிறது. அப்படிப்பட்ட கல்வி நிறுவனங்கள் எவையெவை என்று சுட்டிக் காட்ட வேண்டிய அளவிற்கு இல்லாமல், பெருகிக் கொண்டிருக்கிறதென்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முன்பு அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்த தவறுகள், இப்போது பரந்து காணப்படுகின்றன தனியார் துறையிலே. அரசு பள்ளிகளிலே இத்தகைய தவறுகள் இல்லையா என்று கேட்கலாம். அரசுப் பள்ளிகளிலே தவறுகள் இருந்தாலும். திருத்துவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. தனியார் துறையைப் பொறுத்த வரையில், அவர்களே திருந்தினாலன்றி, அந்த நிர்வாகமே திருந்தினாலன்றி, திருத்துவதற்கு வாய்ப்பு இல்லை. அரசுத் துறை என்று சொல்லும்போது, சமுதாயத்திற்கு நேரடியாகப் பொறுப்பு சொல்ல வேண்டிய நிலையிலும். சட்டமன்ற வழியாகவும், மக்கள் பிரதிநிதிகள் வழியாகவும் கட்டுப்படுத்த உரிமை இருக்கிறது. ஒரு பகுதியிலுள்ள அரசுப் பள்ளியோ அல்லது கல்லூரியோ ஒரு கால கட்டத்தில், அதனுடைய நிர்வாகப் பொறுப்பில் இருப்பவரின் திறமைக் குறைவால், மோசமானாலும், அவரை மாற்றி. வேறொருவரைப் போட்டு, மீண்டும் அந்தக் கல்லூரியை அல்லது பள்ளியை திறம்பட நடத்த முடிகிறது. அதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், இப்படி தனியார் பள்ளிகளில் செய்ய முடியாது. குறிப்பாக கிருத்துவ மிஷனரிகளால் நடத்தப்படும் தனியார் பள்ளிகளிலும். மைனாரிட்டி ரைட்ஸ் உடையவர்கள் நடத்தும் தனியார் பள்ளிகளிலும் அவர்கள் தங்களுக்குள்ள உரிமையை லைசன்ஸ் போன்று கருதுகிறார்கள். அவர்களைப் பெருந்தன்மையோடு கேட்டுக்கொள்வது, அப்படிப்பட்ட உணர்வுகளை வளர்த்துக் கொள்ளக்கூடாது என்பதுதான். அரசியல் அமைப்புச் சட்டத்தின் பாதுகாப்பு

[திரு. ம. சங்கரலிங்கம்] [1981 மார்ச் 7

இருக்கிறது, தங்களை யாரும் ஒன்றும் செய்ய முடியாதென்ற உணர்வு மேலிட்டு, அந்தப் பாதுகாப்பைப் பயன்படுத்திக்கொண்டு, அரசு போடுகிற சட்டங்களை அமல்படுத்த மாட்டோமென்று சொல்லுகிற அளவிற்கு அவர்கள் இருக்கிறார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்திலுள்ள பாதுகாப்பு, மைனாரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கல்லூரி ஏற்படுத்த உரிமை இருக்கிறது, பள்ளிகள் ஏற்படுத்த உரிமை இருக்கிறது என்பதுதான். ஆனால் அப்படி ஏற்படுத்தப்பட்ட பள்ளிகள், அந்த நாட்டின் சட்டத்தின் வழியில், அந்த நாட்டின் நிர்வாக அமைப்பின்கீழ், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு என்ன முறையில் கல்வி இருக்க வேண்டுமென்று கருதுகிறதோ, அந்த விதிக்குக் கீழ்ப்பட்டு நடக்க வேண்டுமென்ற உணர்வை வளர்த்துக்கொள்ளாதது மிகவும் துர்பாக்கியமானது. கல்வி நிறுவனத்தை அடைத்தாலும் அடைப்போம், இந்தச் சட்டத்தை அமல் நடத்த மாட்டோமென்று சொல்லுகிற அளவிற்குப் பிடிவாதம் பிடிக்கும் நிலை சென்னையிலிருந்து வேறு பல நகரங்கள் வழியாக எல்லாப் பகுதிகளிலும் அங்கெங்கெனாதபடி நாம் பார்க்கும் நிலை இருக்கிறது. எனவேதான் அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டிய சூழ்நிலைக்கு நாம் ஆளாக்கப்பட்டிருக்கிறோம். தமிழ்நாடு அரசு, தமிழ் நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகள், அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து, இந்தக் கருத்தை ஆதரிக்க வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டத்திலுள்ள பாதுகாப்பு இப்போது துஷ்பிரயோகப் படுத்தப்படுகிறது. வேறாகப் பயன்படுத்தப்படுகிறது. இது சீரான கல்வி வளர்ச்சிக்குத் தடைக்கல்லாக அமைகிறது. மைனாரிட்டியினர் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம். ஆனால் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டிய நிலையில் இல்லை. மைனாரிட்டி நிர்வாகத்தினரிடமிருந்து அவர்களது தவறுகளிலிருந்து நாட்டைப் பாதுகாக்கும் நிலைக்கு நாம் ஆட்படுத்தப்பட்டிருக்கிறோம். இதை ஒரு சம்பவத்தால் அல்ல, பல சம்பவங்களை வைத்து சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை அனுபவித்துக்கொண்டிருக்கிறோம், கல்வித் துறை அனுபவித்துக்கொண்டிருக்கிறது, நாடு அனுபவித்துக்கொண்டிருக்கிறது. மைனாரிட்டி சமூகத்தைச் சேர்ந்த பெரும் தலைவர்கள் இத்தகைய சூழ்நிலைகள் உருவாகாமல் பார்த்துக்கொண்டிருக்கலாம். ஆனால் உருவாகிவிட்டது. இன்று தனியார் கல்வி நிறுவனங்கள் விளம்பர நோக்கோடு ஆரம்பிக்கப்படுகின்றன. அந்தக் கல்வி நிறுவனங்களை ஆரம்பித்த மூதாதையர்கள் படிக்காதவர்களாக இருந்த காரணத்தால், நல்ல அற உணர்வு கொண்டு, இவற்றை ஆரம்பித்தார்கள். ஆனால் அவர்களுடைய வாரிசாக வந்தவர்கள் நல்ல கல்வி அறிவு பெற்று, சமுதாயத்தில் நல்ல செல்வாக்கு பெற்று, அதைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ள துணிவு பெறுகிறார்கள்.



1981 மார்ச் 7] [திரு. ம. சங்கரலிங்கம்]

அதைச் சுட்டிக் காட்டுகிறோம். அது போராட்டமாக மாறுகிறது. பிறகு அதைத் தீர்க்கும்படியாக இருக்கிறது. இன்றைக்கு இது பெரு நோயாக மாறிவிட்டது. அதைக் 'கேன்சர்' நோயாக்கி விடக்கூடாதென்பதுதான் தீர்மானத்தின் நோக்கம். தக்க நேரத்தில் அரசு தலையிட்டு, தனியார் பள்ளிகளை அரசுப் பள்ளிகளாக மாற்ற வேண்டுமென்று கருதுகிறோம். அதே நேரத்தில் தனியார் துறையில் நடக்கும் கல்வி நிறுவனங்கள் இதை விடச் சிறப்பாக நடக்கவில்லையா என்று கேட்கலாம். அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் அப்படி இருக்கிறது. சில வருடங்களுக்கு முன்பு 95 சதவிகிதம் சிறப்பாக நடந்தது. இப்போது ஐந்து சதவிகிதம் தான் அப்படி இருக்கிறது. வயலிலே பயிரிடுகிறோம். அதில் களை வருவது இயல்பு. கொஞ்சமாகக் களை இருந்தால் ஆளை விட்டு களையைப் பிடுங்கிவிடுவோம். பூராவும் களை இருந்து, கொஞ்சம் பயிர் இருந்தால், பயிரை மட்டும் பிடுங்கி விட்டு, பாக்கி எல்லாவற்றையும் திரும்ப உழுது, மீண்டும் பயிர் வைக்கும் சூழ்நிலை இருக்கிறது. இப்போது ஒருசில பள்ளிகள்தான் சிறப்பாக இருக்கின்றன. அங்கேயும் ஆய்ந்து பார்த்தால் ஒரு தவறு சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட நிலையில் இந்தக் கல்வி நிறுவனங்களை அப்படியே விட்டு விடுவோமானால் வருங்காலச் சமுதாயம், அந்தச் சூழ்நிலையில் படிக்கும் இளைஞர்கள் தங்களுடைய நல்ல உணர்வுகளை வளர்த்துக்கொள்வதற்குப் பதிலாக அந்தச் சூழ்நிலைகளுக்கேற்ப வளர்க்கப்பட்டு, அவர்கள் ஒரு தவறான சமூகமாக ஆக்கப்பட்டு விடுவார்களோ என்ற அச்சம் நமக்கு ஏற்படுகிறது. அதைக் கருத்தில் கொண்டு, சில உணர்வுகளை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒருவேளை அரசைப் பொறுத்த அளவிலே, சங்கடங்கள் இருக்கலாம், சட்டச் சிக்கல்கள் இருக்கலாம். இப்படிப்பட்ட பெரிய பள்ளிகளை ஏற்றுக்கொள்கிற பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ள முடியுமா என்று எண்ணலாம். அதை ஒரு 'பேஸ்டு ப்ரோகிராம்' ஆக, கொஞ்சம் கொஞ்சமாகச் செய்ய வேண்டும். முதலில் ஆரம்பக் கல்வியை எடுத்துக்கொள்ள வேண்டும். இப்போது ஆரம்பக் கல்வி ஊராட்சி ஒன்றியங்களிடமும், தனியார்களிடமும், அரசிடமும் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் என்பது அரசோடு ஒட்டிய நிர்வாகமாக இருந்தாலும், அதை விட அரசுத் துறையிலுள்ள பள்ளிகள் சிறப்பாக அமைகின்றன. இதில் இரண்டு கருத்து இருக்க முடியாது. கல்வி சிறப்பாக இருக்க வேண்டும், அந்தத் துறை நல்ல முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும், அதற்குள் தவறு நடக்கக்கூடாது. அந்தத் தவறுகளைப் பார்த்து மாணவர்கள் பின்பற்றும் சூழ்நிலை உருவாகக் கூடாது. இந்த அடிப்படையை ஏற்றுக்கொண்டால், அரசுத் துறையில் நடத்துவதுதான் இந்தக் குறைகளையெல்லாம் குறைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். தனியார் துறை ஒரு காலத்தில் சிறப்பாக இருந்தது. இப்போது

தவறு செய்யும் நிலையைப் பார்க்கிறோம். ஒரு தனி நபர் சிறப்பாக இயங்குவார் என்று அவர் வாழ்நாளில் சொல்லுவதற்கு இப்போது ஐயப்பாடு ஏற்படுகிறது. வாழ்நாள் முடிந்த பிறகுதான் அதைக் கணிக்க முடியும். அரசு என்பது சமுதாயத்தின் அமைப்பு, மக்களால் நடத்திக் கொண்டிருப்பது. நாட்டில் ஜனநாயக ரீதியாக அமையும் அரசு. இதில் தவறு செய்தால் திருத்தலாம். ஒழுங்காக, சீராக நடந்தால், ஊக்கம் கொடுத்து, சிறப்பு செய்வோம். எனவே நாட்டிலே கல்வித் துறை முதல் முதலிலே அரசுத் துறையாக மாற வேண்டுமென்று கருதுகிறோம். இப்போது போக்குவரத்தை நாட்டுடைமையாக்கி இருக்கிறோம். பல துறைகளை நாட்டுடைமையாக்கி இருக்கிறோம். அவைகளில் தவறு இல்லையா என்று கேட்கலாம். அவைகளை "நேஷனலைஸ்" பண்ணாவிட்டால் இன்று கட்டணங்கள் உயர்ந்திருக்கும். எவ்வளவு என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம் நாட்டில் போக்குவரத்தை நாட்டுடைமையாக்கியதால்தான் சிறப்பாக நடைபெறுகிறது. அது சீர்குலைந்திருப்பதாகக் கருதவில்லை. அந்தத் துறையில் அரசு ஈடுபடாமல் இருந்திருந்தால், தனியார் துறையில் டிரான்ஸ்போர்ட் முதலாளிகள் எத்தகைய ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருப்பார்களென்பதைக் கற்பனை செய்து பார்த்தால் புரியும். அரசுத் துறை எங்கெங்கு ஏற்படுத்தப்

(முற்பகல் 11-40)

படுகிறதோ அங்கெல்லாம் சிறப்பாக அவை அமையும். அரசுத் துறையாக அமைத்தால், அது சிறப்புக் குறைவாக அமையும் என்று அஞ்சவே தேவையில்லை. இந்த நிலையில் ஆரம்பக் கல்வி அனைத்தையும் நாம் அரசுடைமையாக்க வேண்டும். இப்போது பலவிதமாக ஆங்காங்கே கற்பித்துக் கொண்டிருக்கக் கூடிய நிலை இருக்கிறது. சர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் திருவாங்கூரில் அன்றையதினம் அனைத்து ஆரம்பக் கல்வியையும் தேசியமயமாக்கியதை இந்த அவையிலேயே நான் பலதடவை சுட்டிக்காட்டியிருக்கிறேன். இப்போதும் அதை நான் குறிப்பிடுவதில் பெருமைப்படுகிறேன். ஐந்து வயதில் பள்ளிக்குச் செல்லுகிற ஒரு மாணவன் நல்லறிவு நல்லுணர்வு பெறவேண்டும் அவனிடம் சமய உணர்வை புகுத்தவே கூடாது திருவாங்கூரில் அப்போதிருந்த அனைத்துப் பள்ளிகளிலும் அவரவர்க்குரிய சமயக் கல்வியை காலையில் 1 மணி நேரம் கட்டாயமாக மாணவர்களுக்குப் புகுத்தினார்கள். அதன்பிறகு தான் சர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் கட்டாயக் கல்வியைக் கொண்டு வந்து அனைத்து ஆரம்பப் பள்ளிகளையும் அரசுப் பள்ளிகளாக ஆக்கினார். அன்றைக்கு இருந்த சூழ்நிலையில் ஒரே ஒரு ஆணையின் மூலமாக அனைத்துப் பள்ளிகளையும் தேசியமயமாக்க அவரால் முடிந்தது. இன்றைக்கு அதுபோல் செய்வது சாத்தியமில்லை என்பதை நாம் ஒப்புக்



கொண்டு தான் ஆக வேண்டும். ஆனால் எல்லோருடைய நல்லாதரவையும் பெற்று கல்வியை அரசுத் துறையில் எடுக்க அரசால் முடியும். தனியார் வேண்டுமானால் கட்டடங்களைக் கட்டிக்கொடுத்து அவர்களுடைய பெயர்களைப் போட்டு சிறப்படையலாம். அவர்களுடைய ஆலோசனை என்கிற முறையில் அவர்களுடைய எண்ணங்களைத் தெரிவிக்கலாம், தந்து கொண்டிருக்கலாம். அந்த ஒரு முறையை அரசு உருவாக்க வேண்டும். அதற்குரிய முயற்சியை அரசு எடுக்க வேண்டும். அது தான் இந்தத் தீர்மானத்தின் முக்கிய நோக்கம். இன்றைக்குக் கூட நம்முடைய பள்ளிக் கல்வி இயக்குநருடைய அலுவலகத்திற்கு முன்னால் தனியார் பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதைத் தொடங்கி வைத்து விட்டு வந்ததாகவும் இங்கே சில மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலம் கூட சென்னை தியாகராயநகர் மேல் நிலைப் பள்ளியில் 22 ஆண்டு பணிக்காலம் உடைய ஆசிரியர் திரு. பி. டி. அரசு என்பவர் பணி நீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்து ஆசிரியர்கள் போராட்டம் நடத்தி வருவதால், அப்பகுதி வாழ் பெற்றோர் மாணவர்களிடையே பதட்ட நிலை தோன்றியுள்ளதாகச் சொன்னார்கள். ஆகவே எந்த விதத்தில் பார்த்தாலும், தனியார் பள்ளிகளில் தான் போராட்டம் அதிகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அது போல் இன்றையதினம் கன்னியாகுமரி மாவட்டத்தில் அம்சி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அதற்குப் பக்கத்தில் தேங்காப்பட்டணத்தில் அரசுப் பள்ளி ஆரம்பிக்கப் படுகிறபோது, இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டால் பக்கத்துப் பள்ளியில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆசிரியர்களுக்குப் பாதகம் ஏற்பட்டால், அரசுப் பள்ளிகளில் எடுத்துக்கொள்ளப்படுவார் என்று ஜி.ஓ.-விலேயே உறுதி கொடுத்திருந்தார்கள். ஆனால் இன்றைக்கு அப்படி அவர்கள் எடுக்கப்படவில்லை. அதோடு தனியார் பள்ளி நிர்வாகம் 'பிராவிடன்ட் ஃபண்ட்' இவைகளையெல்லாம் சரியாக நிர்வகிக்க வில்லையென்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இப்படி எங்கு பார்த்தாலும், தனியார் பள்ளிகளில் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிலைமையை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அங்கு பயிலுகிற மாணவர்களுடைய நிலைமை, சமுதாய நிலைமை இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டு அவர்களுடைய அறிவைக் குறையச் செய்து சமுதாயக் கேடு விளைவிக்கக் கூடிய நிலை, அச்சம் மிகுந்து இருக்கக்கூடிய தனியார் பள்ளிகளில் மிகுந்து காணப்படுகிறது. இவர்களும் இப்படிச் சொல்கிறார்களே என்று மாண்புமிகு உறுப்பினர்கள் நினைக்கலாம். நானும் ஒரு தனியார் கல்லூரியை நடத்திக்கொண்டிருப்பவன் தான் தோற்றுவித்

தவறும் நான் தான். அது 11 வருடமாக நல்லமுறையில் நடைபெறும் கொண்டிருக்கிறது. வந்து பார்த்திருக்கிறார்கள். நான் இந்த அவையில் இதற்கு முன்னால் கூடச் சொல்லியிருக்கிறேன். திரும்பவும் சொல்கிறேன். தமிழ் நாட்டிலுள்ள அனைத்துக் கல்லூரிகளையும் அரசு எடுத்துக்கொள்வதாக இருந்தால், முதல் கல்லூரியாக என்னுடைய கல்லூரியை அரசுக்குத் தந்து விடத் தயாராக இருக்கிறேன். எனக்கு இருக்கின்ற உணர்வு எனக்குப் பின்னால் வருகின்ற நிர்வாகிகளிடம் நான் எதிர்பார்க்க முடியுமா என்பது சந்தேகம். நான் நாகர்கோவில் இந்து கல்லூரியில் பேராசிரியராக இருந்து அந்த நிர்வாகத்தினுடைய கொடுமைக்கு ஆளானவன். அதன்பின் பயோனியர் கல்லூரியினுடைய முதல்வராக இருந்து அந்த நிர்வாகத்தினுடைய கொடுமைக்கு ஆளானவன். அதன் பிறகு கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட அனைவரையும் ஒன்று சேர்த்து ஆசிரியர் கூட்டுறவுக் கல்லூரி என்று ஆரம்பிக்க எண்ணி அப்படியே பதிவு செய்ய கூட்டுறவு ரெஜிஸ்ட்ராருக்கு அனுப்ப, அவர் அப்படி செய்ய இடம் இல்லையென்று சொல்லி விட்டார். அதன் பிறகு கன்னியாகுமரி மாவட்ட எஜுகேஷனல் சொசைட்டி என்று ஆரம்பித்தேன். எங்கெங்கு பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் இருந்தார்களோ, யார் யார் எல்லாம் நான் பாதிக்கப்பட்டபோது குரல் கொடுத்ததால் பாதிக்கப்பட்டார்களோ அவர்களையெல்லாம் தேர்த்து அதை அமைத்தேன். நாகர்கோவில் இந்து கல்லூரியில் நான் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். நான் ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு வேண்டுமென்று சொன்ன காரணத்தால், காரணமில்லாமல் பதவி இறக்கம் செய்யப்பட்டேன். அது தவறு என்று சுட்டிக் காட்டியவுடன், என்னை நிர்வாகம் நான் உறுப்பினராக இருந்துகொண்டிருக்கும்போதே 'சஸ்பென்ட்' செய்தது. பிறகு பல்கலைக் கழகம், நிர்வாகம் செய்தது தவறு என்று தீர்ப்பு அளித்தது. அதன் பிறகு நான் பயோனியர் கல்லூரியில் பிரின்சிபால் ஆகச் சேர்ந்தேன். அங்கே நான் உடந்தையாக இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றவுடன், இரண்டாவது ஆண்டிலேயே வெளியேறினேன். இப்படி நான் எந்த ஒரு தனியார் கல்லூரியிலும் பணியாற்றிக்கொண்டிருக்க முடியாது என்கிற சூழ்நிலை ஏற்பட்டவுடன் நானே பாதிக்கப்பட்டவர்களை, கொடுமைக்கு ஆளானவர்களை ஒன்று சேர்த்து ஒரு கல்லூரியை ஏற்படுத்திக்கொண்டேன், இன்றுவரை அது நல்லமுறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக ஏதாவது பெட்டிஷன் யாராவது போட்டாலும் கூட, உடனே அதிகாரிகள் வந்து பார்த்து திருப்தியடைந்து இந்தக் கல்லூரி நல்லமுறையில் தான் இயங்கிக்கொண்டிருக்கிறது என்று அறிக்கை கொடுக்கிறார்கள். நல்ல முறையில் இயங்கிக்கொண்டிருக்கும் இதே தன்மையில் அந்தக் கல்லூரியை அரசிட





ஒப்படைக்க வேண்டுமென்கிற உணர்வு நாளுக்கு நாள் எனக்கு அதிகரித்துக் கொண்டு வருகிறது. நான் நல்லமுறையில் அதனுடைய பெயரைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறேன். எனக்குப் பின்னால் வருகிறவர்கள் அதை எப்படி நிர்வகிப்பார்களோ என்கிற அச்சம் என்னிடம் இருப்பதால், அதை அரசிடம் ஒப்படைப்பதே மேல் என்கிற உணர்வு என்னிடம் இருக்கிறது. இன்றைக்கு எல்லா தனியார் கல்லூரிகளிலும் அத்தகைய ஒரு சூழ்நிலை தான் இருந்து கொண்டிருக்கிறது. அரசு இதைத் தக்க சமயத்தில் எடுக்க வேண்டும். அதற்குரிய சூழ்நிலையில் இப்போது நாம் வந்திருக்கிறோம்.

இப்போது இருக்கிற கல்வித் துறையை இன்னும் நல்ல முறையில் சீர்திருத்தம் செய்ய வேண்டும். வாரியம் என்கிற ஒரு அமைப்பைக் கட்டடம் கட்டுவதற்கான நிதி உதவி போன்றவற்றைப் பெறுவதற்காக அமைக்க வேண்டுமே தவிர, தலைமைப் பீடங்களிலுள்ளவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கக் கூடாது. அப்படிச் செய்வது நிர்வாகப் பளுவை அதிகமாக்குவதாக ஆகிவிடும். ஆனால் அதே நேரத்தில் நிர்வாகத்தின் கீழ்மட்டத்தில் இருக்கிற பதவிகளை அதிகப்படுத்திச் சிறப்பாகச் செய்ய வேண்டும். மேலே இருக்கிற அதிகாரிகளின் எண்ணிக்கையைக் கூட்டி அதிகாரிகளுடைய சாம்ராஜ்யத்தை அவர்களுடைய நலனுக்காகவே உருவாக்கிவிடக்கூடாது. நான் கூட பெரிய அதிகாரிகளைக் காணும்போது, இயக்குநருக்கு அடுத்த ரேங்கில் உள்ளவர்கள் இன்னும் இரண்டு டைரக்டர்ஸ் போட்டால் நன்றாக இருக்கும் என்று சொல்லுவார்கள். அப்போது நான் "ஒரே டைரக்டர் தான் இருக்க வேண்டுமென்ற கொள்கையை உடையவன் நான்" என்று சொல்லுவேன். நிர்வாகச் சிக்கனம் ஏற்பட வேண்டும். இன்னும் எத்தனையோ சி.இ.ஓ., டி.இ.ஓ. போன்ற பதவிகளை ஏற்படுத்தலாம். அப்படிப்பட்ட கீழ்மட்டத்தில் இருக்கிற அதிகாரிகளுடைய பதவிகளை ஏற்படுத்தினால், கண்காணிப்பு முறை பரவலாக வாய்ப்பு இருக்கிறது. மேலேயுள்ள பதவிகளை அதிகமாக ஏற்படுத்தக்கூடாது. கீழ்மட்டத்தில் இப்படிப்பட்ட பதவிகள் ஏற்படுத்தப்பட்டாக வேண்டும். காரணம் அதற்கு மாபெரும் பொறுப்பு இருக்கிறது. இன்றைக்கு நாட்டிலே இருக்கிற அனைத்துத் துறைகளையும் எடுத்துக்கொள்வோமானால், முதன் முதலாக தேசியமயமாக்கப்பட வேண்டிய துறை கல்வித் துறை தான் என்று நான் சொல்வேன். எத்தனையோ துறைகளை அரசு தேசியமயமாக்கியிருக்கலாம். ஆனால் முதலிலேயே தேசியமயமாக்கப்பட வேண்டிய கல்வித் துறையில் கை வைக்கவே பயப்படுகிறோம். அப்படிக் கை வைத்தால், அதன் விளைவாக சிக்கல்கள் வருமோ என்று பயப்படுகிறோம். அப்படி அரசு எந்தக் காரணத்தைக் கொண்டும் பயப்படத் தேவையே இல்லை. காரணம், இன்றைக்கு நூற்றுக்கு நூறு ஆசிரியர்களுக்கு

[திரு. ம. சங்கரலிங்கம்] [1981 மார்ச் 7

அலுவலர்களுக்கான சம்பளத்தையும் அரசே கொடுக்கிறது. அங்கு ஏற்படுகிற செலவுத் தொகை முழுவதையும் அரசே கொடுக்கிறது. அவர்களுடைய வேலை கட்டிடம் கட்டுவது என்ற ஒன்று மட்டும்தான். முழுக்க முழுக்க முழு உதவியையும் அரசே கொடுப்பதால், பயப்படவே தேவையில்லை. 30 ஆம் தேதி சம்பளம் என்றால் 20 ஆம் தேதியிலிருந்தே நிர்வாகம் முன்பெல்லாம் உறங்க முடியாது. அப்போதெல்லாம் மூன்றில் இரண்டு பாகம் தான் அரசு கொடுத்து வந்தது. இப்போது செண்ட் பெர்சன்ட்டும் அரசே அதுவும் நேரடியாகக் கொடுக்கிறது. அதுவும் ஆசிரியர்களிடத்திலேயே பாதுகாப்புடன் கொடுக்கப்படுகிறது. 1 ஆம் தேதியன்று ஆசிரியர்களுடைய பாஸ் புக்கிலே அந்தப் பணம் போய்ச் சேர்ந்து விடுகிறது. நிர்வாகிகளுக்கு இப்போது இருக்கிற வேலை 'பில் பிரிப்பேர்' பண்ணுவது, ஒப்பமிடுவது போன்ற பணிகள் மட்டும் தான். அப்படி இருக்கும்போது, இத்தனை செலவையும் அரசே ஏற்றுக்கொண்ட பிறகு, ஒரு நிர்வாகி எதற்கு? ஆசிரியர்களை நியமனம் செய்வது அவர்களின் கையிலே இருக்கக்கூடாது. நியமனம் பப்ளிக் தேர்வாணைக் குழு மூலம் நியமித்தால் போதும். இப்போது நிர்வாகிகள் அவர்களுக்குச் சொந்தக்காரர்களாய் இருப்பவர்களை, அவர்களுடைய சாதிக்காரர்களை, அவர்களுடைய சமயக்காரர்களைத் தான் நியமிக்கிறார்கள். இன்னும் சில இடங்களில் பணம் வாங்கிக்கொண்டு நியமிக்கிறார்கள். இப்போது எப்படி இருக்கிறது என்று சொன்னால், அந்தப் பள்ளிக்கூடத்தை

(முற்பகல் 11-50)

யார் நடத்துகிறார்கள், என்ன ஜாதிக்காரர்கள் அவர்கள் என்று பார்த்து அவர்களுடைய ஜாதிக்காரர்கள் யார் இருக்கிறார்கள் என்று பார்த்துப் போடும் நிலைமைதான் இருக்கின்றது. அவர்களுடைய ஜாதிக்காரர்களுக்கு அந்தப் பதவிகளைக் கொடுப்பது தான் தர்மமானது, நியாயமானது என்ற உணர்வு இப்போது வந்திருக்கிறது. கல்லூரியைப் பொறுத்தவரையில், ஒரு பதவிக்கு 80 பர்செண்ட் மார்க் வாங்கிய ஒருவர் வருகிறார், அதே பதவிக்கு எம். ஃபில். படித்த ஒருவரும் வருகிறார், டாக்டரேட் படித்த ஒருவரும் வருகிறார் என்று சொன்னால், அந்தப் பதவியில் 50 பர்செண்ட் வாங்கிய ஒருவர் நியமிக்கப் படுகிறார் என்று சொன்னால், இந்த நாடு எப்படி முன்னேறும்? ஆகவே, நியமனம் செய்ய வேண்டுமென்றால் கூட, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம், சர்வீஸ் கமிஷன் மூலமாகத்தான் இருக்க வேண்டும். எந்தக் கல்லூரியானாலும் சரி அல்லது பள்ளிக்கூடமானாலும் சரி இப்படித்தான் நியமனங்கள் இருக்க வேண்டும். எந்த வட்டாரத்தில் அந்தப் பள்ளிக்கூடங்கள் அல்லது கல்லூரிகள் இருக்கின்றனவோ, வேண்டுமானால் அந்த வட்டாரத்திலே உள்ளவர்களுக்கு



1981 மார்ச் 7] [திரு. செ. அரங்கநாயகம்]

1979-80-ல் தமிழ் நாட்டிலே உள்ள பள்ளிகளிலே பணியாற்றிவந்த மொத்தம் 2,58,462 ஆசிரியர்களின் நிர்வாக வாரி விவரங்கள் வருமாறு. தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள்—அரசு 7,381, ஊராட்சி ஒன்றியம் 67,358, நகராட்சி-மாநகராட்சி 9,169; தனியார் 28,627—மொத்தம் 1,12,535. உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள்—அரசு 3,227, ஊராட்சி ஒன்றியம் 27,617, நகராட்சி-மாநகராட்சி 6,360, தனியார் 29,364—மொத்தம் 66,568. உயர்நிலை; மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள்—அரசு 42,479, ஊராட்சி ஒன்றியம் இல்லை, நகராட்சி-மாநகராட்சி 4,274, தனியார் 32,606—மொத்தம் 79,359.

ஆகவே மொத்தம் 2,58,462 ஆசிரியர்களில் 90,597 ஆசிரியர்கள் தனியார் பள்ளிகளிலே பணியாற்றுகிறார்கள். மீதி ஆசிரியர்கள் அரசுப் பள்ளிகளிலேயும், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலேயும், நகராட்சி/மாநகராட்சிப் பள்ளிகளிலேயும் பணியாற்றுகிறார்கள். ஊராட்சி ஒன்றியத்திலே ஏறக்குறைய 95 ஆயிரம் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களை அரசுப் பணியாளர்களாக ஆக்குவது என்ற ஒரு முடிவை நாம் எடுத்திருக்கிறோம். அது தேர்தலிலே நின்றபோது. தேர்தல் வாக்குறுதியாகத் தரப்பட்டது. அந்த அடிப்படையிலே தான் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இம்முடிவை முழுமையாக அமுல்படுத்தவும், அதற்கான வழிவகைகளை ஆராய்ந்து அரசுக்கு அறிவிக்கவும் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. கல்விச் செயலாளர் அவர்களைத் தலைவராகவும், நிதிச் செயலாளர், ஊரக உள்ளாட்சித் துறைச் செயலாளர், கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களை உறுப்பினர்களாகவும், பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களை உறுப்பினர்/செயலாளராகவும் கொண்டு அந்தக் குழு அமைக்கப்பட்டு, ஆசிரியர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து விவரங்களைச் சேகரிக்கும். ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவது என்ற முடிவின் அடிப்படையிலேதான் அந்தக் குழு அமைக்கப்பட்டது. பொதுவாக ஆசிரியர்கள் விரும்புவது பள்ளிகளையும் சேர்த்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்று. ஆகவே, ஆசிரியர்களை மட்டும் எடுத்துக்கொள்ளும் நிலைமையிலே தான் நாம் அந்தக் குழுவை அமைத்தாலும் கூட, அந்தக் குழு விவாதம் நடத்திய பிறகு, அந்தப் பள்ளிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் நாம், இப்போது இந்த முடிவு எடுக்க வேண்டும் என்று சொன்னால், எடுக்க வேண்டும்.

(நண்பகல் 12-00)

அடுத்து, நகராட்சி, மாநகராட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் சுமார் 19,000-க்கும் மேற்பட்டவர்கள்

இருக்கிறார்கள். அவர்களைப் பற்றிய முடிவெடுப்பதில் எந்தச் சிரமமும் இருக்காது. அரசு எல்லாப் பள்ளிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று வாதிட்ட அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் தமிழ் நாட்டிலுள்ள அனைத்துத் தனியார் பள்ளிகளையும் மனதில் கொண்டுதான், தங்களின் கருத்துக்களை வெளியிட்டார்களே தவிர, உள்ளாட்சி மன்றங்களின்கீழ் இயங்கும் பள்ளிகளை மனதில் கொண்டு அல்ல என்றுதான் நான் நினைக்கிறேன். ஆக, இவைகளை அரசு ஏற்றுக்கொள்வதில் எந்தச் சிரமமும் இல்லை. அதுபற்றிய குறைபாடுகளும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டதாகவும் நான் நினைக்கவில்லை.

தனியார் பள்ளிகளில் பணியாற்றும் 90,597 பேர்களைக் குறித்தும், மற்றும் தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் அந்த ஆசிரியர்களைப் பொறுத்தும்தான் நாம் முடிவெடுக்க வேண்டும். இவைகள் அனைத்தையும் அரசே மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் வலியுறுத்தினார்கள். இந்தக் கருத்து விரும்பத்தக்கதாக இருந்தாலும், இதை நடைமுறைப் படுத்துவதிலுள்ள சிக்கல்களை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக் கிறோம். தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தையுமே அரசு தன் பொறுப்பில் மேற்கொள்ள வேண்டுமென்றால், முதலில் அவர்களுக்கெல்லாம் நட்ட ஈடு தந்தாக வேண்டும். அதுவே ஒரு பெரும் தொகையாக இருக்கும் என்ற நிலை இருக்கிறது.

இரண்டாவது, தனியார் பள்ளிகளை அரசுடைமையாக்குவது என்று கோரும்போது, உண்மையில் அது பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர் களின் பள்ளிகளை மட்டுமே அரசுடைமையாக்குவதாகும் என்பதுதான் பொருளாகும். தனியார் பள்ளிகளை அரசுடைமையாக்குவது என்றால், நாட்டிலுள்ள அனைத்துத் தனியார் பள்ளிகளையும் அரசுடைமையாக்குவ தாகாது. நாம் இங்கே என்னதான் தீர்மானங்கள் போட்டாலும் சரி, அல்லது சட்டங்கள் இயற்றினாலும் சரி, அவைகளெல்லாம் சிறுபான்மை வகுப்பினரால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களை எந்த வகையிலும் கட்டுப்படுத்த முடியாது. எனவேதான் நான் சொல்லுகிறேன், இன்றைக்கு எந்தத் தீர்மானம் போட்டாலும், அனைத்துப் பள்ளிகளையும் அரசுடைமையாக்குகிற தீர்மானமாக இருக்காது. இதை மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து தெரிந்துகொள்ள வேண்டும். ஆக, அனைத்துப் பள்ளிகளையும் அரசுடைமை யாக்க வேண்டும் என்று சட்ட பூர்வமாக ஒரு முயற்சியை நாம் எடுத்தாலும் கூட, அது பெரும்பான்மையான வகுப்பைச் சார்ந்த மக்களால் நடத்தப்படும் பள்ளிகளை மட்டுமே எடுத்துக் கொள்ளும் முயற்சியாக இருக்குமே தவிர





முன்னுரிமை என்று வைக்கலாம். இப்படி நியமனம் செய்யும் அதிகாரத்தை ஏன் அவர்களிடத்திலே கொடுக்க வேண்டும்? இந்தத் தத்துவம் ஒத்துக் கொள்ள முடியாத ஒன்று. சூழ்நிலையிலே இருக்கும் தவறுகளைப் பார்க்கின்ற போது, இதை இப்போது செய்யாமல் போனால், நிலைமை சீரழியும். ஆசிரியர் களுடைய பதவிப் பாதுகாப்பு கடந்த 10 வருஷமாக பாதுகாக்கப்பட்டிருப்பது போல் கடந்த 20 வருஷங்களுக்கு முன்னாலே கொடுக்கப்பட்டிருந்தால், நாங்கள் சட்டசபைக்கு வந்திருக்கமாட்டோம். எங்களுக்கு இந்த வேலை இருந்திருக்காது. 'இவ்வளவு குழப்பம் இங்கே இருக்கிறது, நீங்கள் சட்ட சபைக்குப் போங்கள்' என்று ஆசிரியர்கள் சொல்லித்தான் நாங்கள் இங்கே வந்திருக்கிறோம். இன்னும் காலம் தாழ்த்தினால் இன்னும் பெரிய அளவிலே இந்த பிரச்சினை கிளம்பி விடும். நாம் சம்பாதிக்கின்ற சம்பாத்தியம், பெயர், புகழ் எல்லாம் நம்முடைய பிள்ளைகளுக்குப் பயன்பட வேண்டும். நம் முடைய, நமது பிள்ளைகளுடைய எதிர்காலத்தைப் பாதிக்கும் ஒரு பிரச்சினை இது என்று கருதி, இந்தத் தீர்மானத்தினுடைய நோக்கத்திற்கு மதிப்பளித்து தக்க நேரத்தில் சரியான முறையில் நடவடிக்கை எடுக்கும் முறையில் ஈடுபட வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தனியார் கல்வி நிலையங்கள், உள்ளாட்சிக் கல்வி நிலையங்கள், மாநகராட்சிக் கல்வி நிலையங்களில் ஆசிரியர்கள், ஊழியர்களாகப் பணிபுரிபவர்களின் பணிக்குப் பாதுகாப்பு அளிக்க, கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் அரசே ஏற்க வேண்டும் என்கிற சட்டத் திருத்தத்திற்கான பரிந்துரையை இந்த மேலவை செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் முன்மொழிந்து பல கருத்துக்களைச் சொன்னார்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்களும் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக் கிறார்கள். தனியார் கல்வி நிலையங்களை அரசு எடுத்து நடத்த வேண்டும் என்ற தீர்மானத்தின் கீழ் பேசி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அவரே ஒரு தனியார் கல்லூரியின் முதல்வராகவும், நிர்வாகியாகவும் இருந்து இந்தத் தீர்மானத்தை ஆதரித்து தன்னுடைய கருத்துக்களைப் பேசி யிருக்கிறார்கள்.

அரசே அனைத்துப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் ஏற்று நடத்த வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை என்றாலும், இன்றைக்கு நாம் எடுத்து நடத்துவதில் உள்ள பல்வேறு சிரமங்களையும் கருத்தில் கொண்டு தான் முழுமையான அளவிலே அவைகளை ஏற்று நடத்தவில்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பேச்சின் ஆரம்பத்திலே சில

பள்ளி விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நமது மாநிலத்தில் இருக்கும் தொடக்கப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 27,662. அதிலே, அரசு, உள்ளாட்சி நிறுவனங்கள், நகராட்சி, ஊராட்சி ஒன்றியம், தனியார் என்ற அடிப்படையில் பல்வேறு நிறுவனங்கள் இந்தப் பள்ளிகளை நடத்துகின்றன. அரசு பள்ளிகள் 1,422, நகராட்சிப் பள்ளிகள் 1,094, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் 20,193, தனியார் துறை நடத்தும் பள்ளிகள் 4,953, உயர் தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 5,685—அதிலே அரசுப் பள்ளிகள் 250, நகராட்சிப் பள்ளிகள் 400, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் 3,073, தனியார் பள்ளிகள் 1,962, உயர்நிலைப் பள்ளிகள் (மேல்நிலைப் பள்ளிகள் 1,087 உட்பட) எண்ணிக்கை 3,226—இதிலே அரசுப் பள்ளிகள் 1,999, நகராட்சிப் பள்ளிகள் 127, ஊராட்சி ஒன்றியம் ஒன்றும் நடத்தவில்லை, தனியாரால் நடத்தப்படும் பள்ளிகள் 1,100. ஆகவே, தொடக்கப் பள்ளி, உயர் தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் இவைகளை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று சொல்லும்போது, நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய தனியார் துறைப் பள்ளிகள் 8,015. இதிலே ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகள் 191 என்ற புள்ளிவிவரத்தைத் தந்திருக்கிறார்கள்.

அதற்கடுத்து சிறப்புப் பள்ளிகள். அதில், இளஞ்சிறார் பள்ளிகள் மொத்தம் 40. அரசு பள்ளி 1, நகராட்சிப் பள்ளி 1, தனியார் பள்ளி 38. கீழ்த்திசைப் பள்ளிகளின் எண்ணிக்கை 18. இந்தப் பள்ளிகள் 18-ம் தனியாரால் நடத்தப்படுகின்றன. அதற்கடுத்து உடல் ஊனமுற்றோர் பள்ளிகள் 45. அதில் அரசுப் பள்ளிகள் 22, நகராட்சிப் பள்ளிகள் 2, தனியார் பள்ளிகள் 21. ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 79—அதில் அரசுப் பள்ளிகள் 28, தனியாரால் நடத்தப்படும் பள்ளிகள் 51. மொத்தச் சிறப்புப் பள்ளிகள் 203-லே தனியாரால் நடத்தப்படும் பள்ளிகள் 131.

அடுத்து, கல்லூரிகள்—பொது கலை—அறிவியல் கல்லூரிகள் மொத்தம் 187. இதில் அரசுக் கல்லூரி 51, தனியார் கல்லூரி 136. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 23, அதில் அரசுக் கல்லூரி 7, தனியார் கல்லூரி 16. பிற கல்லூரிகளின் எண்ணிக்கை 24, அதில் 1 அரசு நடத்துவது, மீதி 23 கல்லூரிகளும் தனியார் கல்லூரிகள்.

அடுத்து, தொழிற் கல்வி நிறுவனங்கள். பொறியியல் கல்லூரிகள் மொத்தம் 13. அதில் அரசுக் கல்லூரிகள் 3, தனியார் கல்லூரிகள் 10. பாலிடெக்னிக்குகள் மொத்தம் 40. அரசு நடத்துவது 20. தனியாரால் நடத்தப்படுவது 20. உயர் நிலைப் பள்ளிகள் மொத்தம் 14, அரசால் நடத்தப்படுவது 3, தனியாரால் நடத்தப்படுவது 11. இதுதான் இருக்கின்ற நிலைமை.



சிறுபான்மை வகுப்பினர் நடத்தும் தனியார் பள்ளிகளையும் சேர்த்து அரசுடைமையாக்குகிற முயற்சியாக இருக்காது. அது எந்த விதத்தில் சிறந்ததாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பெரும்பான்மை என்றால் அது இந்துக்களால் அல்லது பெரும்பான்மை வகுப்பினரால் நடத்தப்படும் தனியார் பள்ளிகளை மட்டுமே அரசு எடுத்துக்கொள்கிறது என்ற நிலையை உருவாக்கினால், அது எந்த அளவுக்கு நல்லதாக இருக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். மைனாரிடியினருக்குத் தரப்படுகிற உரிமைகள் எந்த அடிப்படையில் தரப்படுகிறது என்றால், பெரும்பான்மை மக்கள் சில உரிமைகளை அனுபவிப்பார்கள், அதன் காரணமாக மைனாரிட்டிகளுக்கு சில உரிமைகள் கிடைக்காது என்ற அடிப்படையில் அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் ஒரு பாதுகாப்பைத் தந்தார்கள். ஆனால் இன்றையதினம் நடைமுறையில் இருக்கிற நிலை என்னவென்றால் மைனாரிட்டி மக்களுக்கு இருக்கிற உரிமைகள் பெரும்பான்மை வகுப்பு மக்களுக்கு இல்லை என்பது தான். ஆக, மெஜாரிட்டி மக்களுக்கு அத்தகைய பாதுகாப்பில்லை, மைனாரிட்டி மக்களுக்கு மட்டுமே அத்தகைய பாதுகாப்பு உண்டு என்று சொல்லக்கூடிய ஒரு நிலையை உருவாக்கினால், அது சமுதாயத்தில் ஓர் அதிருப்தியைத்தான் உருவாக்கும். அல்லது விரும்பத்தகாத உணர்வுகளைத்தான் அது வளர்க்கும். அதன் காரணமாக, பெரும்பான்மை மக்களின் ஆதரவை அன்றைக்கு இருக்கும் எந்த அரசும் பெறத் தவறிவிடும். அது நல்லதல்ல என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

அதோடு, மைனாரிட்டி மக்களுக்குத் தரப்படுகிற பாதுகாப்பு என்பதே மதம் என்கிற அடிப்படையில்தான் தரப்படுகிறது. அது மெஜாரிட்டி மக்களுக்கு இல்லாத உரிமை. இப்படிப்பட்ட நிலையில் மைனாரிட்டி மக்களுக்குச் சாதகமான ஒரு நிலையை உருவாக்கிவிட்டுவிட்டால், அது மெஜாரிட்டி மக்களுக்கு எத்தகைய உணர்வை ஏற்படுத்தும் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு மதத்திற்கு ஆதரவாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை இன்னொரு மதத்திற்கு ஆதரவற்ற நடவடிக்கையாக முடிந்துவிடும். அத்தகைய ஒரு நிலையை மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்ப மாட்டார்கள் என்றே நான் கருதுகிறேன். இவைகளெல்லாம் நாம் இந்தப் பிரச்சினையை அதிகமாகப் பரிசீலிக்கும்போது எதிர்படுகிற கருத்துக்கள் என்பதால், அவைகளை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

இங்கே பேசப்படும் கருத்துக்கள் அனைத்துமே ஆசிரியர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டுதான் சொல்லப்பட்டிருக்கின்றன. எந்தெந்த வகைகளில் ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று எடுத்துச் சொல்லி,

பள்ளிகள் அனைத்துமே அரசுத் துறையில் இருந்திருந்தால், இத்தகைய பாதிப்பு ஏற்படாது என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் அனைத்துப் பள்ளிகளையும் அரசுப் பள்ளிகளாக்க வேண்டும் என்று பரவலாக வலியுறுத்தப் படுகிறது. ஆசிரியர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதைத் தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால் இன்னொன்றையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறேன். இந்தக் கருத்தை நான் ஏற்கெனவே பலமுறை இந்த அவையிலும் சொல்லியிருக்கிறேன். பெற்றோர்களாக இருப்பவர்கள் தங்களுடைய குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க வேண்டும் என்று விரும்பினால், அவர்கள் வீட்டை விட்டு புறப்பட்டதும் முதலில் போய் நிற்கிற இடமே தனியார் பள்ளிதான். தனியார் பள்ளியில் இடமில்லை என்றால்தான், பிறகு மாநகராட்சிப் பள்ளிக்கோ, அரசுப் பள்ளிக்கோ வருகிறார்கள். பெற்றோர்கள் என்று சொல்லுகிறபோது, நான் பொதுவாகவே பொது மக்களின் நிலையைத்தான் குறிப்பிடுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்காலிங்கம் அவர்கள் பேசும்போது, தானே ஒரு கல்லூரியை நிருவகித்துக் கொண்டிருப்பதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். கல்லூரிகளையெல்லாம் அரசு தன்னுடைய பொறுப்பில் ஏற்றுக் கொள்ள விரும்பினால், தன்னுடைய கல்லூரியை முதலில் தந்துவிடுவதற்குத் தான் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். நான் உரிமையோடு சொல்ல விரும்புகிறேன், அப்படி அரசே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்பினால், அதற்கு முதலில் உடன்படுபவரே மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களாகத்தான் இருப்பார்கள் என்று கருதுகிறேன். அதுவல்ல பிரச்சினை. அவர் பேசும்போது இன்னொரு கருத்தையும் தெரிவித்தார்கள். அவருடைய கல்லூரியைப் பொறுத்தவரையில், அதிகாரிகள் வந்து பார்வையிட்டு இந்தக் கல்லூரி சிறந்த முறையில் நடக்கிறது என்று சொன்னார்கள் என்றும் குறிப்பிட்டார். நாங்கள் அரசின் சார்பில் அதைத் தான் கவனிக்கிறோம். அவருடைய கல்லூரியில் அதிகமாகப் பிரச்சினைகள் வரவில்லை என்பது நமக்குத் தெரியும். அப்படிப்பட்ட முறையில் செயல்பட்டு வரும் கல்லூரியை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டால், அவர் தந்துவிடுவதற்குக்கூட தயாராக இருக்கலாம். அப்படித் தந்துவிட்டால், அடுத்த நிலை என்ன என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். அங்கே இருக்கிற ஆசிரியர்கள் உடனடியாக மாறுதல் கேட்பார்கள். மாறுதல் கேட்டு பல்வேறு பிரச்சினைகளைக் கொண்டு வருவார்கள். மாறுதல் கேட்பவர்களில் சிலர் போட்ட இடத்திற்குப் போக மாட்டார்கள். உடனே இரண்டு அல்லது மூன்று மாதம் லீவு எடுப்பார்கள்.



கிராமத்தில் உள்ள மாணவர்களுக்கு உயர் கல்வி கிடைக்க வேண்டும் என்று அங்கெல்லாம் ஆரம்பிக்கப்பட்டுள்ள பல கல்லூரிகளில் ஆசிரியர்களின் ஒத்துழைப்பு இல்லாத காரணத்தால், கிராமங்களில் உள்ள மாணவர்களுக்குச் சரிவர கல்வி கிடைக்கவில்லை என்பதை மிகுந்த வேதனையோடு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அரசு சார்பில் நடக்கும் எந்தக் கல்வி நிறுவனமானாலும் சரி அது தனியார் துறையில் நடக்கிற கல்வி நிறுவனத்தை விட சிறந்த முறையில் நடக்கிறது என்ற நிலையை நாம் உருவாக்கிவிட்ட பிறகு, நாம் இத்தகைய கோரிக்கைகளை வைக்கலாம் என்பதைத்தான் நான் இந்தச் சூழ்நிலையில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு அடிப்படையான மனமாறுபாட்டை நாம் ஏற்படுத்தியாக வேண்டும்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் வெள்ளைக்காரர்கள் ஆட்சிக் காலத்தில் நாம் ஊதியம் வாங்கிக்கொண்டுதான் பணியாற்றிக் கொண்டிருந்தோம். அப்போது நமக்கிருந்த உணர்வே வேறு. சம்பளம் வாங்குகிறோம், ஆகவே உழைக்க வேண்டும் என்று பணியாற்றினோம். ஆனால் இன்றைக்கு நாடு சுதந்திரம் அடைந்த பிறகு மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் நமது கடமையைச் செய்ய வேண்டும். அதிலும் கிராமங்களில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தால், அதைவிட வேறு மகிழ்ச்சிகரமான நிலை ஒன்று இருக்க முடியாது. ஆசிரியர்களானாலும் சரி, வேறு யாரானாலும் சரி, மக்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ள இடத்தில் பணியாற்றுவதை நமக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பமாகக் கருத வேண்டும். இத்தகைய உணர்வு நமக்கு மேலோங்கி நிற்குமானால், இதுபோன்ற பிரச்சினைகளில் நாம் இவ்வளவு தடுமாற்றம் அடையத் தேவையில்லை.

என்னைப்பற்றி இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் கணிதத்தில் பட்டப்படிப்பு முடித்திருந்த காரணத்தால், 1952-53-ல் எனக்கு உடனே வேலை கிடைத்துவிட்டது. அப்போதெல்லாம் பரீட்சை எழுதிய உடனே வேலை வாய்ப்புக் கிடைத்துவிடும். அந்தக் காலத்தில் கணக்குப் படித்தவர்கள் மிகக் குறைவாக இருந்ததால், அவர்களுக்கு மிக விரைவிலே வேலை கிடைத்துவிடும். அதன் காரணமாகத்தான் ஆசிரியராக ஒருவரை நியமிக்கும் அதிகாரத்தை அப்போது தலைமை ஆசிரியருக்கே கொடுத்திருந்தார்கள். ஒரு பள்ளிக்கு அருகாமையில் யாராவது படித்துத் தேறியவர்கள் இருந்தால், அவர்களை உடனே வேலைக்கு வைத்துக்கொள்வார்கள். தலைமை ஆசிரியரே ஒருவரை வேலைக்கு அமர்த்திக்கொண்டு, பிறகு மேலதிகாரிகளிடம் அதற்கான ஒப்புதல் பெறும் நிலை இருந்தது. அப்போது நான் நினைத்திருந்தால், கோவை நகராட்சியிலே ஒரு பள்ளியில் சேர்ந்திருக்க

முடியும். ஆனால் கிராமப் பகுதியில் பணியாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தான் நான் டிஸ்ட்ரிக்ட் போர்டு பள்ளியில் போய்ச் சேர்ந்தேன். வேறு எந்தக் காரணத்தாலும் அல்ல. அந்த உணர்வு இப்போது இல்லை. ஆனால் அந்த

(பிற்பகல் 12-10)

உணர்வு எல்லோரிடத்திலும் மேலோங்கி இருக்க வேண்டும். கோடைக்கானல், பண்ணைக்காடு, வால்பாறை, ஏற்காடு ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகள் திருப்திகரமாக இயங்கிக் கொண்டிருக்கவில்லை. அதற்குக் காரணம் ஆசிரியர்கள்தான். ஆசிரியர்கள் முழு ஒத்துழைப்பைக் கொடுப்பதில்லை. பூலாங்குறிச்சியில் ஒரு கல்லூரி இருக்கிறது. அங்கே எந்த ஆசிரியரைப் போட்டாலும், போக மறுக்கிறார்கள் ; விடுப்பு எடுத்துக்கொள்கிறார்கள். பூலாங்குறிச்சியில் உள்ள அந்த வட்டார மக்களின் நலனைக் கருதித்தான் அங்கே கல்லூரியை வைத்திருக்கிறோம். ஆனால் ஆசிரியர்கள் தங்களுக்குரிய உரிமைகளைப் பயன்படுத்தி, சட்ட விதிகளைப் பயன்படுத்தி, போக மறுக்கிறார்கள். அரசுக் கல்லூரிகள், அரசுப் பள்ளிகள் சரியான வழியில் நடக்க தங்களுடைய உரிமைகளைக் கூட விட்டுக்கொடுத்து ஒத்துழைப்புத் தர வேண்டிய நிலையில் இருக்க வேண்டிய ஆசிரியர்கள் இன்றைக்கு அப்படி இல்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். இதனால் பல பள்ளிகள், பல கல்லூரிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. ஒன்று, அரசுக் கல்லூரிகளிலும், அரசுப் பள்ளிகளிலும் நல்ல தரமான கல்வி தரப்படுவதில்லை என்ற கருத்து பொதுவாகப் பரவக்கூடிய நிலைமை இருக்கிறது. இன்னொன்று, அத்தகைய கல்லூரிகள், பள்ளிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள் தங்களுடைய ஒத்துழைப்பை நம்முடைய நிர்வாகத்திற்குத் தருவதில்லை. அதற்குப் பதிலாக உரிமையைப் பயன்படுத்துகிறார்கள். இதை நான் சொல்லுவதால், அரசே எல்லாக் கல்வி நிலையங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்துக்கு விரோதமானவன் என்று இல்லை. நான் இதைச் சொல்லுவதற்குக் காரணம், அத்தகைய சூழ்நிலை இன்றைக்கு இல்லை. அத்தகைய சூழ்நிலையை ஆசிரியப் பெருமக்களும், மற்ற சம்பந்தப்பட்டவர்களும் என்றைக்கு ஏற்படுத்தித் தருகிறார்களோ அன்றைக்குத் தான் அந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்படும். இது உடனடியாக செய்யக் கூடிய காரியமல்ல. ஆகவே இன்றிலிருந்தே அந்த முயற்சியில் ஈடுபட வேண்டும். அதன் காரணமாகத்தான் கடந்த மூன்று ஆண்டுகளாகவே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக பாலிடெக்னிக்குகள், பொறியியல் கல்லூரிகள் ஆகியவைகள் தனியார் துறையிலே இருக்கின்றன



என்று சொன்னாலும்கூட, ஏறக்குறைய அரசு நிலையங்களாகத்தான் அவை இருக்கின்றன. பொறியியல் கல்லூரியை நடத்துகிறவர்கள், தங்கள் பிள்ளைக்குக் கூட பி.ஈ. வகுப்பில் இடம் பெற முடியாது. அவர்களுக்கு இருந்த உரிமையை எடுத்துவிட்டோம். பாலிடெக்னிக்குகளில் நிர்வாகக் குழுக்கள் இருக்கின்றன. அதிலே அரசுக்கு அதிகமான அளவு அதிகாரம் இருக்கிறது. அவர்கள் நினைத்தபடி ஆட்களை நியமனம் செய்ய முடியாது. அவர்கள் நினைத்தபடி மாணவர்களைச் சேர்க்க முடியாது. நாம் சொல்லுகிற தகுதியின் அடிப்படையிலேதான் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். பாலிடெக்னிக்குகளில் உள்ள இடத்தில் பத்து சதவீதத்தை அவர்களுக்கு ஒதுக்கியிருக்கிறோம். இதைப்போல பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

கல்லூரிகளில் அவர்களே சம்பளத்தைத் தந்துகொண்டிருந்தார்கள். இப்போது நிர்வாகம் சம்பளத்தைத் தருவதில்லை. அரசே நேரிடையாகத் தருகிறது. அதுவும், ஆசிரியர்கள் யாரிடத்திலேயும் நின்று கை நீட்டி வாங்காத நிலையில் அவர்களுடைய வங்கிக் கணக்குக்கே பணம் போய்ச் சேருகிற அளவிற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற நடவடிக்கை. அவர் விரும்புகிற நிலைமை, அவர் அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிற நிலைமை ஒரு பக்கம் இருக்க அவர் விரும்புகிற நிலைமையை நோக்கிப் பல்வேறு நடவடிக்கைகளை நாங்கள் எடுத்து வருகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அரசே எல்லாக் கல்வி நிலையங்களையும் ஏற்றுக்கொண்டால், சிறந்த முறையிலே கல்வியைத் தர முடியும். அது மட்டுமல்லாமல், சமுதாய முன்னேற்றத்திற்குத் தேவையான கல்வியைத் தர முடியும் என்பதிலேயும் கருத்து வேறுபாடு கிடையாது. எங்களுடைய அரசுக்கும் இதிலே கருத்து வேறுபாடு கிடையாது. அந்த அடிப்படையிலே பல ஆண்டுகளாக எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு மேலும் சில நடவடிக்கைகளை எடுத்து பிரச்சினைகளைப் போக்கலாம். கல்வி நிலையங்கள் தங்கள் இஷ்டப்படி பாடத்திட்டங்களை வகுக்க முடியாத அளவிற்கு குறிப்பிட்ட முறையிலேதான் கல்வியைத் தர வேண்டும் என்றும் வகுத்திருக்கிறோம். மதச்சார்புடைய நிறுவனங்களில் கட்டாயப்படுத்தி மதச்சார்புடைய கல்வியைத் தரக்கூடாது என்று விதித்து, மாணவர்கள் கல்வியறிவு பெறுவதில் இருக்கின்ற குறைபாடுகளைப் போக்குவதில் அரசு கவனம் எடுத்துக் கொண்டு வருகிறது. ஆகவே இந்த

அடிப்படையிலே இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களை அரசு அலட்சியப் படுத்தவில்லை, புறக்கணிக்கவில்லை, ஏற்றுக்கொள்ளாமல் இல்லை. ஏற்றுக் கொண்டு பல்வேறு காரியங்களைச் செய்து கொண்டு வருகிறோம்.

தமிழ் நாடு தனியார் துறைப் பள்ளிகள் சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகளைப்பற்றிச் சொன்னார்கள். அதைத் திருத்துவதற்காக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக் களையெல்லாம் கேட்டிருக்கிறோம். அவைகளைச் சேகரித்த பிறகு, அந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கான நடவடிக்கையை அரசு நிச்சயம் எடுக்கும்.

தனியார் துறை நிறுவனங்கள் தங்களுடைய இஷ்டப்படி ஆசிரியர்களைப் பழி வாங்குவதை தவிர்க்கும் அளவில் நடவடிக்கை எடுக்கப்படும். அதே நேரத்தில் ஆசிரியர்கள் எதைச் செய்தாலும் அது சரி ; நிர்வாகங்கள் எதைச் செய்தாலும் அது தவறு என்ற முறையிலே ஆசிரியர்களுடைய பிரச்சினைகளை அணுகிக் கொண்டுபோனால், தவறான நிலைமைகளை உருவாக்கி, தவறுகள் அதிகமான பிறகு, அவற்றைத் தடுக்க முடியாத நிலைமையிலே கொண்டு வந்துவிடும். யார் தவறு செய்தாலும், நாம் கண்டிருக்கிறோம். யார் தவறு செய்தாலும், அதற்கான நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது. யார் தவறு செய்தாலும், நடவடிக்கை எடுக்கிறபோது, அதற்கு ஆசிரியர்களுடைய ஒத்துழைப்பு இருக்கிறது என்ற நிலைமையை உருவாக்க வேண்டும் என்று பொது மக்களுடைய நலனைக் கருதி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்களைக் கவனமாக இத்தனை நாளும் கேட்டிருக்கிறோம். அதில் முடிந்த அளவிற்குக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் உணர்வார் என்று கருதுகிறேன். அந்த அடிப்படையிலே இந்தத் தீர்மானத்தை வலியுறுத்தத் தேவையில்லை என்று கேட்டு என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.

* திரு. பி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, " தனியார் கல்வி நிலையங்கள், உள்ளாட்சித் துறை, மாநகராட்சியின்கீழ் உள்ள கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்கள்-ஊழியர்களுக்குப் பூரண பணிப்பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் ஒரே சீரான நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரும் பொருட்டும், சீரான கல்வி வளர்ச்சியை நிலை நிறுத்தும் பொருட்டும், தமிழ்நாட்டிலுள்ள தனியார் பள்ளிகள், தனியார் கல்லூரிகள், உள்ளாட்சி, மாநகராட்சித் துறை நடத்தும் பள்ளிகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசே ஏற்று நடத்த, தகுந்த சட்டத்தை நிறைவேற்றுமாறு அரசுக்கு இம்மேலவை



பரிந்துரை செய்கிறது " என்று நான் 7—11—1979 அன்று முன்மொழிந்த தீர்மானத்தின்மீது 7—11—1979, 31—7—1980, 12—2—1981, 7—3—1981 ஆகிய இந்த நான்கு நாட்களில் தெளிவான, விவரமான விவாதம் நடைபெற்று பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்த பிறகு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அரசின் நிலையைத் தெரிவித்திருக் கிறார்கள்.

இந்தத் தீர்மானத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஏ. ஆர். தாமோதரன், திரு. எஸ். முத்துசாமி, திரு. பா. ரா. தாமஸ், திரு. மியாகான், திரு. மீனாட்சிசுந்தரம், டாக்டர் சனார்த்தனம், திரு. ஜேப்பியார், எதிர்க் கட்சித் தலைவர் திரு. ம. சங்கரலிங்கம் ஆகிய எட்டு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை மிகத் தெளிவாக, அருமையாக எடுத்துச் சொன்னார்கள். இந்தத் தீர்மானத்தை ஆறு உறுப்பினர்கள் ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். இருவர் இதை எதிர்க்கும் வகையிலே பேசியிருக்கிறார்கள் என்றாலும்கூட, அவர்கள் கூட இந்தத் தீர்மானத்தின் உள்நோக்கத்தை வரவேற்று ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். ஆகவே ஒட்டுமொத்தமாக மேலவையினுடைய உணர்வு இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக அமைந் திருப்பது குறித்து உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூட தன்னுடைய பதிலில், இந்தத் தீர்மானத்தினுடைய நோக்கத்தை, உள்ளே புதைந்து கிடக்கின்ற உணர்வுகளை, காரணங்களை மிகத் தெளிவாக அரசு உணர்ந்திருக்கிறது என்று சொல்லி, அரசின் நிலைமையை இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய பிறகு, அதன் மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில், உள்ளாட்சித் துறை ஆசிரியர்கள் பிரச்சினையைக் குறித்து தமிழக அரசு ஒரு நல்ல மகிழ்ச்சி கரமான, வரவேற்கத்தக்க முடிவை அறிவித்திருக்கிறது. ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குகிற முடிவை—பல ஆண்டு காலமாகத் தேங்கிக் கிடந்த இந்த முடிவை—இந்த மன்றத்திலேயே அறிவித்து, அதை ஆளுநர் உரையிலேயும் அறிவித்து அதற்கான நடவடிக்கை எடுத்திருப் பதற்காக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களை நான் அதிகம் பாராட்டு கிறேன். " காக்கை உட்கார பனம் பழம் விழுந்ததைப் போல " இந்த நிகழ்ச்சி அமைந்தது என்று சொன்னாலும்கூட, நான் இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்து பேசிய பிறகு, அதன் மீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிற போது, இந்தத் தீர்மானத்தின் ஒரு பகுதியாக இருக்கின்ற இப்பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே முற்போக்கான நடவடிக்கை எடுத்திருப்பது குறித்து நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், ஆசிரியர்களை மட்டும் அரசு ஊழியர்களாக ஆக்குவதோடு இல்லாமல், ஊராட்சி மன்றப் பள்ளிகளையும் சேர்த்து எடுத்து அரசே நடத்துவது குறித்துப் பரிசீலனை செய்கிறோம் என்று சொன்னார்கள். அது ஒரு நல்ல தெளிவான முடிவு. அந்தக்

(பிற்பகல் 12-20)

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

கருத்துக்குச் சாதகமான முடிவையே எடுக்க வேண்டும். பள்ளிக்கூடங்களையெல்லாம் சேர்த்து கல்வித் துறையின் நிர்வாகத்தில் கொண்டு வரும்போது, நாம் விரும்புகிற அந்தக் கல்வித் தரம் வரவேண்டும். ஆசிரியர்கள் பணிப் பாதுகாப்பு மட்டும் என்னுடைய தீர்மானத்தின் நோக்கமல்ல. கல்வித் தரத்தையும் உயர்த்த வேண்டுமென்பதுதான் நம்முடைய முக்கியமான நோக்கம். நாம் விரும்புகின்ற சீரான கல்வி, கல்வித் தரம் உயர்வு என்பதெல்லாம் வேண்டுமென்றால், பள்ளிகள் எல்லாம் கல்வித் துறையின் கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும். அதுதான் என்னுடைய விருப்பம். அந்த வகையிலே அரசும் நடவடிக்கை எடுத்திருப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். வருகின்ற ஜூன் மாதத்திற்குள்ளாவது அப்படிப்பட்ட நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதால், என்னுடைய பாராட்டுதல்களையும், மகிழ்ச்சியையும் இந்த அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது போலவே நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், அவைகளை எடுத்துக்கொள்வதில் எந்தவிதமான சிரமங்களும் இருக்காது என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனியார் பள்ளிகளை அரசுடைமையாக்குகின்ற பிரச்சினைகள் பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தின் மீது சொல்லுகின்றபோது, முக்கியமான அம்சமாக ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். தனியார் பள்ளிகள் பற்றி அரசினுடைய தரப்பிலே சில கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இன்று அப்படி தனியார் பள்ளிகளை எடுத்துக்கொள்வது என்றால், நஷ்ட ஈட்டுத் தொகை கொடுக்க வேண்டும். அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்குமோ என்று தெரிவித்தார்கள். நஷ்ட



ஈட்டுத் தொகை, காம்பென்சேஷன் என்பது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்க முடியாது. ஏனென்றால், காம்பென்சேஷன் என்ற நிலைமை இருக்கும் என்றாலும்கூட, உடனடியாக அதைக் கொடுக்க வேண்டிய நிலைமை நமக்கு வராது. அந்த நிர்வாகத்தினருக்குப் பல தவணைகளிலே கொடுத்து, ஈடு கட்டுவதற்கு நமக்குச் சட்ட ரீதியாக வாய்ப்புகள் இருக்கின்றன. அது ஒரு பெரிய சிக்கலான பிரச்சினை என்று நான் கருதவில்லை.

அடுத்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். பெரும்பான்மை சமூகத்தினர் நடத்துகின்ற பள்ளிகளை ஏற்றுக்கொள்ளத்தான் வழி இருக்கிறதே தவிர, சிறுபான்மையினர் நடத்துகின்ற பள்ளிகளை ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்கு அரசியல் சட்டத்திலே இடமில்லை என்று சொன்னார்கள். இது குறித்து உச்ச நீதி மன்றத்திற்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அரசு வழக்கு தொடுத்திருக்கின்றது. உச்ச நீதிமன்றத்திலும் அது இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கிறது என்று நினைக்கிறேன். இந்த முயற்சியை விரைவு படுத்த வேண்டும் அரசியல் சட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் எனக்கு ஏற்பட்டிருக்கின்ற சந்தேகங்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சட்டம் படித்தவர்கள். எனக்கு ஏற்பட்டிருக்கின்ற நான்கு சந்தேகங்களை எடுத்துச் சொல்கிறேன். அந்த சந்தேகங்களின் அடிப்படையிலே சில கருத்துக்களை நான் இங்கே தெளிவாக்க விரும்புகிறேன். அந்த அரசியல் சட்டத்தில் 14-வது பிரிவில்,

"The State shall not deny to any person equality before the law and the equal protection of the laws within the territory of India".

என்று இருக்கிறது. அந்த 'Equal Protection' சமமான பாதுகாப்பு மைனாரிட்டியினர் நடத்துகின்ற பள்ளிகளிலே இல்லை. அரசியல் சட்டம் பிரிவு 14-ல் Equal Protection என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் அதே அரசியல் சட்டம் பிரிவு 30-ல் மைனாரிட்டிக்குப் பாதுகாப்பு என்பதையும் சொல்கின்றது. இதில் ஒரு சந்தேகம். சட்ட நுணுக்கமான பிரச்சினையாக இருப்பதால், இதை மேலவையிலே நான் எழுப்ப விரும்புகிறேன். அடுத்த அம்சம். அரசியல் சட்டத்தில் பிரிவு 26-ல் "Freedom to manage religious affairs." என்ற பிரிவு இருக்கிறது.

"Subject to public order, morality and health, every religious denomination or any section thereof shall have the right to

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1981 மார்ச் 7

establish and maintain institutions for religious and charitable purposes ".

மதக் காரியங்களுக்காக நடத்தப்படுகின்ற பள்ளிகள் என்ற அளவில் உரிமைகள் பிரிவு 26-ல் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதாவது மத சம்பந்தமான காரியங்களுக்கு அந்த நிறுவனங்கள் அவைகளை நடத்துவதற்குத்தான் உரிமை கொடுக்கப்படுகிறதே தவிர கல்வி சம்பந்தமான, அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற, பாடத் திட்டம், கல்வித் திட்டம், தேர்வு முறைகள் இவைகளில் இல்லை. எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட அந்தக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்துகின்ற வகையில் அந்த உரிமை இல்லை. மதசம்பந்தமான நடவடிக்கைகளில் அரசு கேட்க முடியாது. ஆனால், கல்வித் துறையினால் உருவாக்கப்பட்டிருக்கின்ற கல்வித் திட்டத்தைத்தான் அந்த மைனாரிட்டி பள்ளிகளை நடத்துகின்றவர்கள் ஏற்க வேண்டும். அதன்படிதான் அவர்கள் வகுப்புகளை நடத்த வேண்டும். இந்தக் காரியங்கள் எல்லாம் மத சம்பந்தமான காரியங்கள் அல்ல. மத சம்பந்தமான காரியங்களில் சுதந்திரம் என்பது வேறு. கல்வி நிர்வாகம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் தவறு செய்யும்போது அந்த நிர்வாகங்களைப் பொறுத்தவரையில், எப்படிக் கேட்காமல் இருக்க முடியும் என்ற சந்தேகம் இருக்கிறது.

இன்னொன்று, பிரிவு 28-ல்

Freedom as to attendance at religious instruction or religious worship in certain educational institutions.

என்று இருக்கிறது. அதிலே இரண்டு பிரிவுகள். உட்பிரிவுகள் தெளிவாக இருக்கின்றன.

" Nothing in the clause shall apply to an educational institution which is administered by the State but has been established under any endowment or trust which requires that religious instruction shall be imparted in such institution '.

" No person attending any educational institution recognised by the State or receiving aid out of the State funds shall be required to take part in any religious instruction that may be imparted in such institution or to attend any religious worship that may be conducted in such institution or in any premises attached thereto unless such person or, if such person is a minor his guardian, has given his consent thereto '.

என்று இருக்கிறது. அதிலே கூட அந்த அரசியல் சட்டத்திலே மைனாரிட்டிகளுக்குக் கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது.



1981 மார்ச் 7]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஏற்கெனவே இந்தத் தீர்மானத்தில் பேசியிருக்கிறார்கள். இப்போது விளக்கம் சொல்வதுபோலத் தான் பேச வேண்டும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, மைனாரிட்டி பள்ளி சம்பந்தமான பிரச்சினைகள் அதிகமாக இருப்பதால், நான் மேற்கோள் காட்டிச் சொல்லிக்கொண்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடைசியாக பிரிவு 30-ல் இருக்கிறது. அரசு எடுக்கப்போகின்ற நடவடிக்கைகளுக்குத் தடையாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதிலேகூட முக்கியமான ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது.

" All minorities, whether based on religion or language, shall have the right to establish and administer educational institutions of their choice ".

அந்த சொற்றொடர்களுக்குச் சட்ட நிபுணர்கள் வெவ்வேறு பொருள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் மத சம்பந்தமான காரியங்களைச் செய்யலாம். அதாவது பாதிரியார்கள், சிஸ்டர்கள் போன்றவர்களுக்குப் பயிற்சி கொடுக்கலாம். சில நிறுவனங்கள் அவைகளை நடத்துகின்றன. அப்படிச் சில நிறுவனங்கள் இருக்கின்றன, அப்படிப்பட்ட நிறுவனங்களிலே வேண்டுமானால் அரசு தலையிடாமல் இருக்கலாம். ஆனால் அரசால் உருவாக்கப்பட்ட கல்வித் திட்டத்தை, முறையை அவர்கள் பின்பற்றாமல் இருந்தால் அப்போது எப்படித் தலையிடாமல் இருக்க முடியும்? ஆசிரியர்களுடைய நன்மைக்காகவும், மாணவர்கள் நன்மைக்காகவும், கல்வியின் நன்மைக்காகவும் காரியங்களைச் செய்ய வேண்டும் இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். இந்தச் சிந்தனைகள்தான் வழக்கறிஞர்களிடையே இருந்து கொண்டிருக்கின்றன. இதைக் குறித்து அரசு சட்ட நுணுக்கம் தெரிந்தவர்களை வைத்துக் கொண்டு ஆலோசனை செய்து முடிவெடுக்க வேண்டும்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேசும்போது, தனியார் பள்ளிகளில்தான் குழந்தைகளைச் சேர்க்கிறார்கள் என்று சொல்கின்றார்கள். நகர்ப்புறங்களிலே தனியார் பள்ளிகள் நிறைய இருக்கின்றன. கிராமப்புறங்களில் அரசுப் பள்ளிகள் இருக்கின்றன. இந்தத் தனியார் பள்ளிகளிலே மாணவர்களைச் சேர்க்கும்போது, ஒரு முறை வைத்திருக்கிறார்கள். அட்மிஷன் சமயத்திலே மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலே தனியார் பள்ளிகளிலே அட்மிஷன் செய்கின்றார்கள். அது எழுத்து பூர்வமாக இல்லை. ஆனால், அதை நடைமுறையிலே செய்துகொண்டிருக்கிறார்கள். தனியார் பள்ளிகளிலே நல்ல மதிப்பெண்கள் உடையவர்களுக்கு ' அட்மிஷன் '

கொடுக்கிறார்கள். ஆனால், அரசுப் பள்ளிகளிலே அப்படிச் செய்ய
முடிவதில்லை. அப்படிச் செய்துவிட்டால், உடனடியாக அது பெரிய
பிரச்சினையாக ஆகிவிடும். பெரும்பாலான தனியார் பள்ளிகளில் அந்த முறை
நடைமுறையில் இருக்கின்றது. அந்த அடிப்படையில் தனியார் பள்ளிகளில்
படிக்கின்றவர்கள் தரம் நன்கு இருக்கிறது என்று சொல்லலாம். அதை
யொட்டித்தான் அந்தக் குழந்தைகளின் கல்வித் தரம் அங்கு அமைகிறது.
அது மட்டுமல்ல, தனியார் பள்ளிகளிலே கட்டிட வசதி, வாய்ப்புகள், சாதனங்
கள் நிறைய இருக்கின்றன. அந்த மாதிரியான சூழ்நிலைகள் அரசுப் பள்ளி
களிலே இல்லை. அந்தக் கட்டிட வசதிகள் வாய்ப்புகள் அரசுப் பள்ளிகளில்
இல்லை. நாம் அரசுப் பள்ளிகளுக்கு அந்த வசதிகளையும் வாய்ப்புக்களையும்
ஏற்படுத்திக் கொடுத்தால், நிச்சயமாக தனியார் பள்ளிகளுடைய தரத்தை
அடைய முடியும். அரசுப் பள்ளிகளிலே அந்தத் தரத்தைக் கொண்டுவர
முடியும். அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் காரணமாகத்தான் தனியார்
பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

ஆசிரியர்களைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கிராமப்
புறங்களில் பணி புரிகின்ற ஆசிரியர்கள் அங்கேயே தங்கவேண்டுமென்பதுதான்
என்னுடைய கருத்தும். அவர்கள் அங்கேயிருந்து பள்ளிக்கூடம் நடத்திய
நேரம் போக மீதி நேரங்களில்கூட மாணவர்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக
இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. ஆனால், அவர்களுக்கு
அங்கே வீட்டுவசதி இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள்
தனி நபர் தீர்மானத்தின் மீது பேசும்போது மற்ற உறுப்பினர்களுக்கும் வழி
விடுகின்ற மாதிரி இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் ஒருவருக்
கொருவர் நல்லது செய்ததாக இருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கிராமப்புறங்களில் அந்த ஆசிரியர்களுக்கு
குறைந்தபட்ச வசதிகளுடைய வீடுகளையாவது கொடுக்க வேண்டும். அந்த
வீட்டுவசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால், அந்த அளவுக்கு ஆசிரியர்களும்
பாடுபட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

ஆக, இப்படிப்பட்ட அம்சங்களையெல்லாம் மாண்புமிகு அமைச்சரவர்கள்
பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய



சூழ்நிலையில் அந்தப் பள்ளிகளை எடுக்க முடியவில்லை என்றாலும்கூட, அதற்கான பல நடவடிக்கைகளைப்பற்றி, ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கான நடவடிக்கைகள் பற்றிச் சொன்னார்கள். அதை வரவேற்கிறேன். அதிலே ஒன்று, தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் உள்ள குறைபாடுகளைப் போக்க வேண்டுமென்ற கருத்து குறித்து அரசு நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். உச்ச நீதி மன்றத்தில் தேங்கியிருக்கும் வழக்கை விரைவாக முடிக்க அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ' கடைசியாக ' என்று சொல்லுங்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குச் சில சலுகைகள், சில உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக வீடு கட்டக் கடன், குழந்தைகள் கல்வி கற்கக் கடன், திருமணக் கடன், ஸ்கூட்டர் வாங்கக் கடன் போன்ற சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சலுகைகள் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடையாது. அவர்களுக்கும் இந்தச் சலுகைகள் கொடுப்பது பற்றி அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றுக்கு முழு மானிய உதவி கொடுக்கப்படுகிறது. கல்லூரி ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்கப்படுகிறது. அதே போன்று தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் நேரடியாக ஊதியம் வழங்க அரசு முடிவெடுத்தால், அதில் எந்தவிதமான சிரமமும் இருக்காது. அது ஒரு விதத்தில் பாதுகாப்பாக அமையும். எனவே கல்லூரி ஆசிரியர்களுக்குச் செய்ததுபோல, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் நேரடியாக ஊதியம் வழங்குவதென்று முடிவெடுத்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகள், கல்லூரிகள் குறித்து ஒரு முக்கியமான கருத்து . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அடுத்த தனி உறுப்பினர் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கடுத்து மூன்று ஆசிரியர் தொகுதி பிரதிநிதிகள் கொண்டு வருகிற தீர்மானங்கள் இருக்கின்றன. எனவே சீக்கிரமாக முடிக்குமாறு கோருகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஒரே ஒரு கருத்து. தனியார் பள்ளிகள், கல்லூரிகளுக்கு நாம் நிறைய மானியம் கொடுக்கிறோம். ஆனால் எவ்வளவு மானியம் கொடுக்கிறோமென்பது தனியாக அரசின் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படுவதில்லை. அரசுப் பள்ளிகளையும், தனியார் பள்ளிகளையும் இணைத்துத்தான் குறிப்பிடப்படுகிறது. இனிமேல் அவ்வாறு இல்லாமல் தனியார் பள்ளிகளுக்கு ஆசிரியர்களுக்காக எவ்வளவு மானியம், கட்டிடங்களுக்காக எவ்வளவு மானியம் போன்ற விவரம் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. தனியார் பள்ளிகளின் பெயர்ப் பலகைகளிலே 'அரசு உதவி பெற்றது' ('கவர்மென்ட் எய்டட்') என்ற வார்த்தைகளைச் சேர்க்க வேண்டும். இப்படிப்பட்ட தனியார் பள்ளிகள் தங்களுடைய சொந்தப் பணத்தில் நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று பொது மக்கள் நினைத்துவிடுகிறார்கள். எனவே ஒவ்வொரு பள்ளி அல்லது கல்லூரியின் பெயர்ப் பலகையிலும், மற்றுமுள்ள பதிவேடுகள், சான்றிதழ்களிலும் 'கவர்மென்ட் எய்டட்'—அரசு உதவி பெற்றது—என்ற வார்த்தைகளைச் சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் எந்தவிதச் சிரமமும் இராதென்று நினைக்கிறேன். அதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய இந்தத் தீர்மானத்தை ஒட்டி, இந்த விவாதத்தில் பங்கு கொண்ட எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் அரசின் சார்பாகச் சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். அதன்மூலம் இந்தத் தீர்மானத்தின் உணர்வுகளை அரசு புரிந்து கொண்டிருக்கிறது என்பது தெரிகிறது. அந்த அடிப்படையிலே அரசு தற்காலிகமாகச் சில நடவடிக்கைகளை எடுக்குமென்ற நம்பிக்கையோடு, அம்முயற்சிகளை விரைவுபடுத்துமாறு வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எதிர் காலத்தில் நிச்சயமாக தனியார் பள்ளிகள், கல்லூரிகளையெல்லாம் நிச்சயமாக அரசே ஏற்று நடத்தும் சூழ்நிலை வந்தே தீரும். அப்படிப்பட்ட சூழ்நிலை வரும்போது, இப்பொழுது அரசுத் தரப்பில் சொல்லுகின்ற இந்தக் காரணங்களை அப்போது பேச முடியாத சூழ்நிலை வரும். அப்படிப்பட்ட சூழ்நிலை விரைவிலே வரும். அப்படிப்பட்ட சூழ்நிலை வருமென்று காத்திராமல் முற்போக்கு நடவடிக்கையாக அரசு, தனியார் பள்ளிகளை அரசுப் பள்ளிகளாக்குவது குறித்து பரிசீலனை செய்து, அது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்காலிகமாகச் சில நடவடிக்கைகளை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் அறிவித்ததை விரைவாகச் செய்து முடித்து, அந்தப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதோடு, ஓரே



சீரான கல்வித் தரத்தை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு ஆசிரியர்கள் நிச்சயமாக ஒத்துழைப்பு தருவார்கள், ஆசிரியர்கள் பிரதிநிதிகள் முழுமையான ஒத்துழைப்பு தருவார்கள் என்று சொல்லி, அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் தீர்மானத்தை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா ?

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் அளித்த வாக்குறுதிகளின்பேரில், என்னுடைய தீர்மானத்தைத் திரும்பப் பெறுகிறேன்.

தீர்மானம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

(2) தமிழ் நாடு தனி மாநிலமாக அமைந்து 25-வது ஆண்டு இறுதியில் வெள்ளி விழா கொண்டாடுவது குறித்து.

திரு. ப. மாணிக்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"தமிழ் நாடு தனி மாநிலமாக அமைந்து—மாநிலங்கள் புனரமைப்பு காரணமாக—25 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 25-வது ஆண்டு இறுதியில் வெள்ளி விழாவாக இதைச் சிறப்புற நடத்த வேண்டுமென மாநில அரசை இந்த அவை கேட்டுக்கொள்கிறது"

என்று முன்மொழிகிறேன்

திரு. வி. வி. வி. ஆனந்தம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மாணிக்கம் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வரவேற்று, வழிமொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"தமிழ்நாடு தனி மாநிலமாக அமைந்து—மாநிலங்கள் புனரமைப்பு காரணமாக—25 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 25-வது ஆண்டு இறுதியில் வெள்ளி விழாவாக இதைச் சிறப்புற நடத்த வேண்டுமென மாநில அரசை இந்த அவை கேட்டுக்கொள்கிறது."

திரு. ப. மாணிக்கம் : தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்திற்கு அரசுத் தரப்பிலே வரவேற்பு இருக்கும்; ஆட்சேபணை இராதென்று கருதுகிறேன். இந்த அவையில் எந்தத் தரப்பும் இதை முழு மனதோடு வரவேற்குமென்று கருதுகிறேன். காரணம், நம்முடைய தமிழ் நாட்டு வரலாற்றில், தமிழ் நாடு

[திரு. ப. மாணிக்கம்] [1981 மார்ச் 7

என்று முதன் முதலாக முழுமையாக தமிழ் நாட்டுப் பகுதிகளைக் கொண்ட அரசு 1956 நவம்பரில் அமைந்தது. அவ்வாறு ஏற்பட்டு 25 ஆண்டுகள் முடியப் போகிறது. நம்முடைய வரலாற்றில் சேர, சோழ, பாண்டிய மண்டலங்கள் தனியாக உண்டு. இருந்தாலும் தமிழ் நாடு என்று முழுமையாக, தமிழர்கள் எல்லோரும் ஒரே அரசின்கீழ்—மாநில அரசாக இருந்தாலும்—வந்திருப்பது வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது. அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி ஏற்பட்டு 25 ஆண்டுகள் முடியப் போகிறது. இந்த வரலாற்றுப் பின்னணிக்கு அடிப்படை உண்டு. நாடு விடுதலை பெற்று, மாநில அரசுகள் அமைந்ததற்குப் பிறகுகூட, மாநிலங்கள் மொழி வாரி அடிப்படையில் அமைக்க வேண்டுமென்ற ஜனநாயகக் கோரிக்கையின் அடிப்படையில் பெரிய கிளர்ச்சிகள் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் நடந்தன. அது போன்ற கிளர்ச்சி தமிழ் நாட்டிலும் நடந்தது. அத்தகைய கிளர்ச்சிகளில் ஒன்று, இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் நீண்ட பாரம்பரியமுள்ள சங்கரலிங்கனார் அவர்கள் விருதுநகரில் தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்பதற்காக பல நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர்விட்டார். அவரைப்பற்றிக் குறிப்பிடுவதற்குக் காரணம், விடுதலை இயக்கத்தில் நீண்ட வரலாறு உடையவர் என்பதோடு மட்டுமல்ல, ஒரு தன்னலமற்ற தியாகி. ஏனென்றால் மக்களை ஐக்கியப்படுத்துவதற்காகவும், எதிர்காலத்திலே தமிழ் மக்கள் தன்னம்பிக்கையோடு வாழ வேண்டுமென்பதற்காகவும் உண்ணாவிரதமிருந்து உயிர் விட்டவர். அவர் எதையும் எதிர்பார்க்கவில்லை. அரசியலில் வேறு எந்தத் துறைக்கும் வராதவர். தொண்டு என்பதை மட்டும் மையமாக வைத்து வாழ்ந்தவர். கடைசியில் உயிர் ஒன்றுதான் மிச்சமென்ற நிலையில், அதையும் தியாகம் செய்தவர். புராணத்தில்தான் உயிரைத் தியாகம் செய்தார்களென்று படித்திருக்கிறோம். அது போன்று அரசியல் வரலாற்றில் நிறைய வரலாறுகள் இருந்தாலும், தமிழ் நாட்டில் தொண்டு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர், தமிழ் நாடு என்று பெயரிட வேண்டுமென்பதற்காக உயிர் விட்டவர் அவர். இந்தியாவிலே மாநிலங்களுக்கு அவற்றுக்குரிய பெயரைத் தருவதிலே ஒரு கடினமான, அழுத்தமான எதிர்ப்பு அப்போது இருந்தது. அந்தப் போக்கை முறிப்பதற்கு அவருடைய உண்ணாவிரதப் போராட்டம் முக்கியமானதாக இருந்தது. வரலாற்றை நான் விவரமாகக் குறிப்பிட விரும்பவில்லை. இந்திய விடுதலை இயக்கத்தில் தமிழ் நாட்டில் முதன் முதலில் மணி அடித்தவர், கொடி காட்டியவர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள். அவருடைய காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்ப்பதென்றால், கனவு கூடக் காண முடியாது. வ.உ.சி. போன்றவர்களுக்கிருந்த சோதனை அந்தவலைக் கணக்கில் எடுத்துப் பார்த்தால், அவர்கள் சிறையில் செக்கு இழுக்க வேண்டிய அவசியம் இராது. அவருடைய காலத்திலிருந்து



1981 மார்ச் 7] [திரு. ப. மாணிக்கம்]

விடுதலை இயக்க உணர்வும், மொழி உணர்வும் மக்களிடையே உண்டாக்கப்பட வேண்டுமென்று பாடுபட்டு, விடுதலை இயக்கத்தில் பல்வேறு கட்டங்களைத் தாண்டி, 1930-க்குப் பிறகு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்று மொழி அடிப்படையிலே மாநிலக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இதற்குக் காரண கர்த்தா காந்திஜிதான். காந்திஜிதான் மொழி அடிப்படையிலே காங்கிரஸ் கமிட்டிகளை அமைக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி, நடைமுறையில் கொண்டு வந்தார். அதற்குப் பிறகு தமிழ் நாட்டின் சில பகுதிகள் கேரளாவிலே இருந்தன. குறிப்பாக கன்னியாகுமரி கேரளாவிலே இருந்தது. திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் இருந்தது. அதைத் தமிழகத்தோடு இணைக்க வேண்டுமென்று போராட்டம் நடந்தது. அதில் பல பேர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். திருவிதாங்கூர் காங்கிரஸ் கமிட்டி என்ற அமைப்பு அப்போது இருந்தது. அதில் பங்கேற்ற பலர் இன்று பேரவையில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். நம்முடைய மேலவைத் தலைவரவர்கள் அந்தப் போராட்டத்தில் பங்கு பெற்றிருக்கிறார்கள். இந்த அவையில் எதிர்க் கட்சித் தலைவராக உள்ள மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் அதில் பங்கு பெற்றிருக்கிறார்கள். எனவே நான் வரலாற்றின் பல்வேறு நிலைகளைப்பற்றி

(பிற்பகல் 12-40)

இங்கே சொல்லலாம் என்றாலும் கூட, தமிழகம் எடுத்த எடுப்பிலேயே ஒரு உத்தரவு மூலம் தனி மாநிலமாக அமையவில்லை என்பதைக் கோடிட்டுக் காட்டுவதற்காகத்தான் நான் இதை இங்கே சொன்னேன். தமிழ் நாடு மொழி அடிப்படையிலே தனி மாநிலமாக அமைய வேண்டுமென்று பல பேர் உயிர் கொடுத்திருக்கிறார்கள். சங்கரலிங்கனார் அவர்களை நான் முன் உதாரணமாகக் குறிப்பிட்டேன். கன்னியாகுமரி மாவட்டத்தை திருவாங்கூரிலிருந்து பிரித்து தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டுமென்று பிரச்சினை எழுந்தபோது, பல்வேறு பிரச்சினைகள் எழுப்பப்பட்டன. பல்வேறு போராட்டங்கள் மூலம் அதில் இளைஞர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள். அதன் மூலம் அவர்கள் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளானார்கள். இன்னும் சொல்லப்போனால், சென்னையைக் கூட எங்களுக்கு வேண்டுமென்று ஆந்திராவில் உள்ளவர்கள் அன்றைபதினம் கேட்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் இன்னும் வேறு சிலரும் சேர்ந்து நின்று சென்னை தமிழர்களுடையது தான் என்று வலியுறுத்தியதுடன், திருப்பதியை நாம் அவர்களுக்குக் கொடுக்க ஒப்புக்கொண்டாலும் கூட, நாம் திருத்தணி வேண்டுமென்று போராட்டம் நடத்தினோம். அதற்கு, மாண்புமிகு தலைவரவர்களே, தாங்கள் தலைமையேற்று பங்கெடுத்தீர்கள். இவை போன்ற

[திரு. ப. மாணிக்கம்] [1981 மார்ச் 7

பலவற்றை நான் இங்கே நினைவுபடுத்திட சந்தர்ப்பம் இல்லாவிட்டாலும் கூட, இது நாட்டு மக்கள் எல்லோருடைய பொதுப் பிரச்சினையாக இருக்கிற ஒன்று என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். எனவே தமிழ் நாடு தனி மாநிலமாக அமையக் காரணமாக இருந்த அனைவரையும், துன்பமடைந்தவர்கள் அனைவரையும், தியாகம் செய்த அனைவரையும் நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை. நாம் தமிழர்கள் என்கிற உணர்வு வளர்வதற்கு நமக்கு வரலாற்றில், இலக்கியத்தில் பல்வேறு காப்பியங்கள் இருக்கின்றன. ஆனால் அரசு என்ற அமைப்பிலே இந்தியாவுக்குள்ளே உள்ள ஓர் அமைப்பாக இருந்தாலும் கூட, முதன் முறையாகத் தனி மாநிலமாக தமிழகம் அமைந்தது 1956-ல் தான். இதற்கு வரலாற்றுப் பின்னணி நிரம்ப இருப்பதால், அவசியம் இதைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். இப்போது நாட்டில் வறட்சி நிலை இருந்தாலும் கூட, 1981 நவம்பரில் தான் இது வருகிறது. அநேகமாகப் பருவமழை அந்த நேரத்தில் நமக்குச் சாதகமாகவே அமைய வேண்டுமென்று விரும்புகிறேன். அமையும் என்று நம்பவும் செய்கிறேன். அப்படி அமைந்துவிட்டால், நம்முடைய மக்கள் அதை மகிழ்ச்சிகரமாகக் கொண்டாட வாய்ப்பாக இருக்கும். பலனுள்ளதாக இருக்கும். எதற்காகத் தமிழ் நாடு மொழி அடிப்படையில் அமைய வேண்டுமென்று மக்கள் போராடினார்களோ அதை நாம் அடைய வேண்டும். வரலாற்றுப் புகழ் மிக்க அந்தப் போராட்ட வாழ்க்கையை நாம் நினைவு கூர்ந்து நாட்டை வளமுள்ளதாக அமைக்கப் பாடுபட வேண்டும். தமிழ் நாட்டு மக்களுடைய முன்னேற்றத்துக்குச் செய்ய வேண்டிய நல்ல காரியங்கள் இன்னும் நிறைய இருக்கின்றன. எந்தெந்த வழிகளில் தமிழ் மக்களை வளம் அடையச்செய்ய விரும்புகிறோமோ அந்த வழிகளுக்கு இது அடிகோலுவதாக அமைய வேண்டுமென்று வலியுறுத்தி தமிழக அரசு இதை எந்தவித ஆட்சேபணையும் இல்லாமல் ஏற்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் முன் மொழிந்திருக்கிற இந்தத் தனி உறுப்பினர் தீர்மானத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல் இந்த அவையிலே இருக்கின்ற எல்லாக் கட்சிகளும் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளும் என்கின்ற உணர்வும், அரசும் இதற்கு ஆட்சேபிக்காது என்கின்ற உணர்வும் வெளிப்படையாகத் தெரிந்த ஒன்று என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டு, அதன் அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை இங்கே அவர்கள் முன்மொழிந்திருக்கின்றார்கள் என்கின்ற உணர்வில் நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்,



1981 மார்ச் 7] [திரு. இராம. வீரப்பன்]

தமிழகம் தனி மாநிலமாக அமைந்ததை வெள்ளி விழாவாகக் கொண்டாட வேண்டுமென்கின்ற இந்தத் தீர்மானத்தின் அடிப்படையை, அரசினுடைய கருத்தைக் கடந்த 1980 ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள் இராஜாஜி மண்டபத்திலே தமிழரசுக் கழகத்தால் கொண்டாடப்பட்ட நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவரவர்களே, தங்களுடைய தலைமையில் நடைபெற்ற அந்த நிகழ்ச்சியிலேயே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, நாங்கள் இந்த விழாவை 1981 ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள் 25-வது ஆண்டு, வெள்ளிவிழா ஆண்டினுடைய இறுதிநாள் விழாவாக, நிறைவு விழாவாக தமிழகத்திலே சிறப்பாகக் கொண்டாடுவோம் என்று அரசின் சார்பிலே நான் அறிவித்திருக்கிறேன். அந்தக் கூட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்களும் கலந்துகொண்டிருந்தார்கள். ஆனால் நான் பேசுகிறபோது அவர்கள் அங்கே இல்லையோ என்று நான் எண்ணுகிறேன். அந்தச் செய்தி பத்திரிகைகளில் கூட தெளிவாக வெளியிடப்பட்டிருந்தது. ஆகவே இதற்கு இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, நீண்ட வரலாறுகளை, பல ஆண்டு விளைவுகளை எல்லாம் அடிப்படையாக வைத்து இந்த வெள்ளி விழா ஆண்டின் நிகழ்ச்சியை, தமிழகத்தினுடைய தமிழ் மக்களுடைய ஒரு பொது விழாவாக நடத்துவதில் இந்த அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. இந்தக் கருத்தை அரசின் சார்பில் கடந்த ஆண்டு நவம்பர் திங்கள் முதல் நாளே வெளியிட்டிருக்கிறேன் என்பதைச் சொல்லி தனி உறுப்பினர் தீர்மானமாக இங்கே இதை விவாதித்து வற்புறுத்த வேண்டிய அவசியம் இல்லை என்பதையும் சொல்லி அரசின் கருத்தினையும், உணர்வையும் உறுப்பினர் அவர்கள் புரிந்திருக்கிற காரணத்தால், இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டு வற்புறுத்த வேண்டாமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மாணிக்கம் தன்னுடைய தீர்மானத்தை திரும்பப் பெறுகிறாரா அல்லது வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** என்னுடைய தீர்மானத்தின் நோக்கத்தை அரசு மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தால், நான் என்னுடைய தீர்மானத்தை வலியுறுத்தவில்லை.

தீர்மானம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

**(3) ஊராட்சி ஒன்றியங்களில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கூட்டுறவு வங்கி.**

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி "அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நல்வாழ்வுக்காக ஊராட்சி ஒன்றியங்கள் தோறும் 'அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், கூட்டுறவு வங்கி' என்ற அமைப்பை அரசின் பங்கு மூலதனத்துடன் உருவாக்கி, ஊழியர்கள் வாழ்வில் மேற்படி வங்கி உற்ற தோழனாக இயங்கத்தக்க ஏற்பாட்டினை அரசு செய்ய வேண்டுமென இந்த மன்றம் அரசுக்குப் பரிந்துரை செய்கிறது" என்கிற பொருள்பற்றி தனி உறுப்பினர் தீர்மானம் கொடுத்திருந்தார்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி அவையில் இல்லாததால் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

**(4) மேலவைத் தேர்தலில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை.**

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தனி உறுப்பினர் தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"மேலவைத் தேர்தலில் ஆசிரியர் தொகுதியில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை அளிக்கும் வகையில் அரசியல் சட்டத்திலுள்ள "Not lower in standard than that of the Secondary Schools" என்ற வாக்கியத்தை நீக்கம் செய்ய வேண்டி மத்திய அரசுக்கு வலியுறுத்த இந்த அவை மாநில அரசுக்குப் பரிந்துரை செய்கிறது".

செல்வி ஏ. லீலாவதி : இதை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம்—

"மேலவைத் தேர்தலில் ஆசிரியர் தொகுதியில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை அளிக்கும் வகையில் அரசியல் சட்டத்திலுள்ள "Not lower in standard than that of the Secondary Schools" என்ற வாக்கியத்தை நீக்கம் செய்ய வேண்டி மத்திய அரசுக்கு வலியுறுத்த இந்த அவை மாநில அரசுக்குப் பரிந்துரை செய்கிறது".

* திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, நான் முன்மொழிந்திருக்கிற இந்தத் தனி உறுப்பினர் தீர்மானத்தின் மீது என்னுடைய ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி இந்தத் தீர்மானத்தை வலியுறுத்த முன்வருகிறேன். இன்றையதினம் ஆசிரியர்களுடைய புள்ளிவிவரத்தை, கணக்கை எடுத்துக்கொண்டால், தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் தான் மிக அதிகமாக இருக்கிறார்கள். ஆசிரியர் தொகுதி என்ற ஒரு தொகுதி நம்முடைய மாநிலத்தில் இருக்கிறது. ஆறு உறுப்பினர்கள் அந்த வகையில்



தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே வந்திருக்கிறோம். ஆனால் ஆசிரியர் தொகுதியிலே வாக்களிக்கக் கூடிய தகுதியுடையவர்கள் யார் என்று சொன்னால், உயர் நிலைப் பள்ளிகளில், தொழில் கல்வி நிலையங்களில், கல்லூரிகளில், பாலிடெக்னிக்குகளில், ஐ.டி.ஐ.-யில் பணியாற்றுபவர்களுக்கு மட்டும் தான் அதற்குத் தகுதி இருக்கிறது என்று அரசியல் சட்டம் அதற்கான உரிமையை வழங்கியிருக்கிறது. வாக்களிக்கக்கூடிய அந்த உரிமை தொடக்கப் பள்ளிகளிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை. தொடக்கப் பள்ளி ஆசிரியர்களாக இருந்த நாங்கள் இருவர் இந்த அவையிலே உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறோம். ஆனால் எங்களுக்கும், எங்களைப் போல் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் வாக்களிக்கக் கூடிய உரிமை இல்லை. எனக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி அவர்களுக்கும் கூட அத்தகைய உரிமை இல்லை. நானே வாக்களிக்க முடியாத தொகுதியிலேயிருந்து நான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறேன். இதிலிருந்தே மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றைத் தெரிந்துகொள்ளலாம். ஆசிரியர்கள் அனைவருக்குமே இன்றையதினம் அந்த உரிமை இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். இன்றைக்கு கல்லூரிகளிலே இருக்கக்கூடிய பேராசிரியர்களும் மற்ற ஆசிரியர்களும், உயர் நிலைப் பள்ளிகளில் இருக்கக் கூடிய பட்டதாரி ஆசிரியர்களும், பட்ட மேற்படிப்பு படித்த ஆசிரியர்களும் இப்படி வாக்குரிமை தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படாததால், சிலர் கருதுவதைப்போல, இவர்கள் எல்லாம் 'ஆப்டர் ஆல் எலிமெண்டரி ஸ்கூல் டீச்சர்ஸ்' தானே என்று கருதாமல் பட்டமேற்படிப்புப் படித்த ஆசிரியர்களும், கல்லூரி, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களும் இன்னும் இப்படிப் பட்டவர்கள் எல்லாம் சேர்ந்து தொடக்கப் பள்ளி ஆசிரியர்களை மேலவை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள் என்றால், இதிலிருந்தே இந்த வாக்களிக்கக்கூடிய உரிமையை எல்லோருக்கும் அளிக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளலாம். அரசியல் சட்டத்திலே "நாட் லோயர் இன் ஸ்டாண்டர்ட் தென் தேட் ஆஃப் தி செக்கண்டரி ஸ்கூல்ஸ்" என்று போட்டிருக்கிறார்கள். அதாவது வாக்களிக்கும் உரிமை உயர் நிலைப் பள்ளிக்குக் குறைந்த நிலையில் இருக்கக் கூடிய பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்குக் கிடையாது என்று அரசியல் சட்டம் தெளிவுபடுத்துகிறது. ஆகவே அந்தச் சட்டத்திலே திருத்தம் கூட அல்ல, அந்த வாக்கியத்தை நீக்க வேண்டுமென்று இங்கே தனி உறுப்பினர் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறேன். இந்த அரசே இதை முன்மொழிய வேண்டுமென்று சொல்வதில் கூட தவறு இல்லை. காரணம் 1946 ஆம் ஆண்டு முதல் இந்தக் கோரிக்கையை வைத்து இயக்கங்களை நடத்திக்கொண்டு வருகிறோம். அதோடு அவ்வப்போது மத்திய அரசில் வருகிற பிரதமர்களிடத்திலும்

வலியுறுத்தி வந்திருக்கிறோம். இப்போதிருக்கிற பிரதமர் இந்திரா அவர்களிடத்தில் இதைப்பற்றி எடுத்துச் சொல்கிறபோது "பரிசீலிக்கிறோம்" என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் இதற்கு முன்னதாக இருந்த

(பிற்பகல் 12-30)

பிரதமர் மொரார்ஜி அவர்களிடத்திலே சொன்னபோது அவர்கள், 'We are going to abolish the Teachers' Constituencies' என்று சொன்னார்கள். ஆசிரியர் தொகுதியை நாங்கள் எடுத்துவிடப் போகிறோம் என்று இதற்கு முன்னால் இருந்த பிரதமர் திரு. மொரார்ஜி அவர்கள் சொன்னார்கள். இப்போது இருக்கிற பிரதமர் அவர்கள் 'நாங்கள் அப்படி எண்ணவில்லை, நாங்கள் அதைப்பற்றிப் பரிசீலிக்கிறோம்' என்று சொன்னார்கள். இங்கே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். சற்று முன்னர் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், ஒரு புள்ளி விவரத்தைப் படித்தார்கள். அதிலே மாநிலத்தில் 2,58,407 பேர் மொத்த ஆசிரியர்கள் என்று சொல்லி அதிலே தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் 1 லட்சத்து 80 ஆயிரத்துக்கும் மேலே இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். 2½ லட்சம் ஆசிரியர்களிலே 1 3/4 லட்சத்திற்கும் அதிகமாக தொடக்கப் பள்ளிகளிலே ஆசிரியர்களாக இருக்கிறார்கள், அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை. நான் கேட்கிறேன் அவர்கள் ஆசிரியர்கள் இல்லையா? அல்லது அந்தத் தொகுதிக்கு ஆசிரியர் தொகுதி என்று பெயர் இல்லையா? உயர்நிலைப் பள்ளிகளிலே கைத்தொழில் போதிக்கின்ற ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் 8-வது வகுப்புவரை படித்தவர்கள். அவர்களுக்கு இத்தொகுதியில் வாக்களிக்கும் உரிமை உண்டு. ஆனால் தொடக்கப் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களிலே எம்.ஏ. பட்டம் படித்தவர்கள், பி.ஏ. பட்டம் பெற்றவர்கள், புலவர் பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இத்தொகுதியிலே வாக்களிக்கும் உரிமை இல்லை. ஆகவே, இப்படி அதிகமாகப் படித்தவர்களுக்கு அவர்கள் பணியாற்றும் இடத்தின் காரணமாக வாக்களிக்கும் உரிமை இல்லை. குறைந்த படிப்புத் தகுதி உடையவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு. இந்த நிலைமைகளை யெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மறைந்த மாண்புமிகு அண்ணா அவர்களுடைய காலத்திலே அமைச்சரவையைக் கூட்டி ஒரு தீர்மானத்தை அவர்கள் போட்டார்கள். இந்தியாவிலே இருக்கும் அனைத்துத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வாக்களிக்கும் உரிமை கொடுக்கும் வகையில் சட்டம் கொண்டு வருவதிலே காலதாமதம் ஆனாலும்கூட, தமிழகத்திலே அப்படிச் செய்வதற்கு எங்களுக்கு அதிகாரம் வேண்டும் என்று கோருகின்ற ஒரு





தீர்மானத்தைப் போட்டார்கள். அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்த திரு. செழியன் அவர்கள் நாடாளுமன்றத்திலே அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தொகுதிக்கான தேர்தலிலே வாக்குரிமை அளிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்து எட்டு வாக்குகள் பெற்று, அந்தத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்தை அரசுத் தரப்பிலேயே கொண்டு வந்திருக்க வேண்டும். அப்படிக் கொண்டு வந்தால், அது தன்னுடைய கௌரவத்திற்குக் குறைவோ என்று அரசு எண்ணும் நிலைமை இருப்பதால், இப்போது இது தனி நபர் தீர்மானமாக வந்திருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும்.

மற்றொன்று, எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என்று எழுத்தறிவித்தவனை இறைவன் என்று சொல்லியிருக்கிறார்கள். எழுத்தறிவித்தவன் யார் என்று கேட்டால் தொடக்கப் பள்ளிகளிலே இருக்கும் ஆசிரியர்கள் தான். அவர்கள் தான் அந்தப் பணியை, அந்த உணர்ச்சியை ஊட்டும் பணியை முதன் முதலில் செய்கிறார்கள். குருநானக் அவர்களைப் பார்த்து ஒருவன் கேட்டான், "நீங்கள் ஆண்டவனையும், பாடம் புகட்டிய ஆரம்ப ஆசிரியனையும் ஒரே இடத்தில் சந்திப்பதாயிருந்தால், அப்போது ஆண்டவனுக்கு முதலிலே வணக்கம் செலுத்துவீர்களா? அல்லது ஆரம்ப ஆசிரியனுக்கு முதலிலே வணக்கம் செலுத்துவீர்களா?" என்று கேட்டபோது, அவர் "முதலிலே ஆரம்ப ஆசிரியனுக்கு வணக்கம் சொல்லிவிட்டு, அப்புறம் தான் ஆண்டவனுக்கு வணக்கம் சொல்வேன்" என்று பதில் சொன்னார். ஏனெனில் ஆண்டவனையே அறிமுகப்படுத்தியது அந்த ஆரம்ப ஆசிரியன் தான் என்று அவர் சொன்னார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆண்டவனுக்கு இரண்டாவதாக வரவது இடம் கொடுத்தாரே!

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அவர் அப்படி இடம் கொடுத்திருக்கிறார். எல்லோரும் அப்படிக் கொடுக்க வேண்டும் என்று இல்லை. அவரவர்களுடைய எண்ணத்திற்கு, கொள்கைக்கு ஏற்றவாறு கொடுக்கலாம். இன்றைக்கு தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை இல்லை என்ற நிலை இருப்பதால், பொது மக்கள் மத்தியிலே ஒரு அவமானமான சூழ்நிலை இருக்கிறது. 1 3/4 லட்சம் இருப்பவர்களுக்கு—தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை, 3/4 லட்சம் இருப்பவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இருக்கிறது என்று சொன்னால், நாங்கள் அனைத்து ஆசிரியர்களின் பிரதிநிதிகள் தானா என்ற ஐயப்பாடும் எங்களுக்கு இருக்கிறது. இதற்காக, சட்டத் திருத்தம் கொண்டு வருவதிலே எந்தவிதமான

மாறுபாடான கருத்தும் இருக்காது என்பதை இங்கே இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தபோது வழிமொழிந்தவர் மாண்புமிகு உறுப்பினர் செல்வி லீலாவதி அவர்கள் என்பதிலிருந்தே புரிந்துகொள்ளலாம். அவர்கள் பட்டதாரிகளுடைய தொகுதியிலேயிருந்து வந்தவர்கள். அவர்கள் எழுந்து வழிமொழிகிறார்கள் என்று சொன்னால், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு அந்த வாக்குரிமை இருக்க வேண்டும் என்பதிலே 'இயக்க வேறுபாடு' இல்லை. 'இயக்க வேறுபாடு' கருதாமல் இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லும் சூழ்நிலை இருக்கிறது. மற்றொன்றையும் நாம் பார்க்க வேண்டும். தனியார்

(மாற்றுத் தலைவர் டாக்டர் இரா. சனார்த்தனம் தலைமை)

துறையிலே பணியாற்றுபவர்கள் இங்கே உறுப்பினர்களாக வருகிறார்கள். தனியார் கல்லூரியினுடைய அவைவராக இருக்கக்கூடிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு சங்கரலிங்கம் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். தனியார் துறையிலே பணியாற்றுகிற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமன் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அங்கே பணியாற்றிக்கொண்டு இங்கே உறுப்பினர்களாக இருக்கும் வாய்ப்பும் இருக்கிறது. இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரும்போது, மற்றொரு கருத்தையும் நான் வலியுறுத்த ஆசைப்படுகிறேன். இந்த நாட்டிலே இருக்கும் சட்டம் அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும். ஒரு பிரிவு ஆசிரியர்கள் அங்கே பணியாற்றவும் செய்யலாம், இங்கே உறுப்பினர்களாகவும் இருக்கலாம். அதே நேரத்திலே ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள், அரசுப் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்கள்—இது ஆசிரியர்களுடைய தொகுதி என்றாலும்—இங்கே வருகிறார்கள் என்று சொன்னால், அவர்கள் தங்களது பதவியை ராஜிநாமா செய்துவிட்டுத்தான் இங்கே வர வேண்டும் என்ற அளவுக்கு இப்போது சட்டம் இருக்கிறது. இது மத்திய அரசு போட்ட சட்டமல்ல. நம்முடைய அரசு போட்ட சட்டம். இப்போது நான் இங்கே வந்திருக்கிறேன் என்று சொன்னால், நான் என்னுடைய வேலையை 'ரிசைன்' செய்துவிட்டு, ராஜிநாமா செய்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களும் தன்னுடைய வேலையை ராஜிநாமா செய்துவிட்டுத்தான் இங்கே வந்திருக்கிறார்கள். நாளைக்கு எனக்கு இந்தப் பதவி இல்லையென்று சொன்னால், நான் திரும்பவும் ஆசிரியராகப் போகும் வாய்ப்பு எனக்கு இல்லை. ஆகவே சட்டம் அனைவருக்கும் ஒன்று, அனைவருக்கும் பொருந்தும் என்ற நிலை இருக்க வேண்டும். தனியார் துறைப் பள்ளிகளிலே இருக்கும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் வாய்ப்பைப் போல மற்ற துறையிலே இருக்கும் ஆசிரியர்களுக்கும் வாய்ப்பளிக்கும் வகையிலே அந்தச் சட்டத்தைத்





திருத்த வேண்டும். நேற்றையதினம் கூட ஒரு அணி டெல்லி நோக்கி பயணம் செய்திருக்கிறது. தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையிலே அவர்கள் போயிருக்கிறார்கள். இந்த நிலைமைகளையெல்லாம் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று அவர்கள் போயிருக்கிறார்கள். "அனைத்து மாநிலங்களிலேயும் மேலவை இல்லை, மேலவை இருக்கும் எல்லா மாநிலங்களிலேயும் ஆசிரியர் தொகுதி என்று இல்லை, உங்கள் மாநிலத்திலே அந்த வாய்ப்பளித்திருக்கிறார்கள் என்ற அந்தச் சூழ்நிலையைப் பார்த்தாலே ஆசிரியர்களுக்கு எந்த அளவுக்குச் சிறப்பான இடம் தரப்பட்டிருக்கிறது—அரசியல் சட்டத்தின் அடிப்படையிலே தரப்பட வேண்டும் என்ற உணர்வோடு தந்திருக்கிறார்கள்—என்று தெரிகிறது" என்று தெரிந்து கொள்ளலாம். மாண்புமிகு தலைவர் அவர்களே கூட, "இந்த அவையின் நேரத்தை இந்த ஆசிரியர்களின் பிரதிநிதிகளே ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும் 'வறட்சி நிலைமைகளைப்பற்றி ஆசிரியர்கள் பிரதிநிதிகள் கூடப் பேசுகிறார்களே' என்று தலைவர் ஆச்சரியக்குறி போட்டுச் சொல்லும் அளவுக்கு, ஆசிரியர் பிரதிநிதிகள் பிரச்சினைகளைப் பேசுகிறோம்.

**மாற்றுத் தலைவர் (டாக்டர் இரா. சனார்த்தனம்)**: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடுவது ஆசிரியர்களின் பிரதிநிதிகளுக்கு எல்லாம் பேசத் தெரியும், எல்லாவற்றையும் பேச நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலே குறிப்பிட்டிருக்கலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்**: ஆசிரியர்களின் பிரதிநிதிகளாகிய நாங்கள் பேசும்போது, ஒரு அச்சத்தோடு பேசுகிறோம். கேள்விகள் கூட அதிகமாகக் கேட்பதில்லை. ஆசிரியர்கள் பிரச்சினைகளைச் சொல்வதற்கு அதிக நேரம் எடுத்துக்கொள்கிறோம் என்கிறார்கள். நாங்கள் இவ்வளவு நேரம் எடுத்துக் கொண்ட பிறகும் கூட, கல்வித் துறையிலே உள்ள குழப்பங்கள் தீர்ந்த பாடில்லை. கல்வித் துறைதான் குழப்பங்கள் நிறைந்த துறை. அந்தத் துறையிலே முன்னுக்குப்பின் முரணான ஆணைகள் போடப்பட்டு, அந்த ஆணைகள் கூடச் சரியான முறையில் செயல்படுத்தப்படுவதில்லை. அதிகாரிகள் சூழ்ச்சி செய்கிறார்கள். அதிகாரிகள் வருமானத்திற்கு வழிவகுக்கும் நிலைதான் அங்கே இருக்கிறது. கல்வித் துறையிலே இருக்கும் நிலைமைகளை இங்கே ஆறு உறுப்பினர்கள் இருந்து பல ஆண்டுகள் எடுத்துச் சொல்லியும் கூட தீர்க்க முடியவில்லை என்று சொன்னால், இதையெல்லாம் உணர்ந்துதான் ஆசிரியர் தொகுதியை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1981 மார்ச் 7

(பிற்பகல் 1-00)

ஆசிரியர் தொகுதிகளைப் பொறுத்த வரையில், அனைத்து ஆசிரியப் பெருமக்களும் வாக்களிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும். அதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டாக வேண்டும். அப்படி இல்லை என்றால், வேறு ஒன்றையும் செய்யலாம். அனைத்து மாநிலங்களிலும் மும்மொழிக் கொள்கைத் திட்டம் இருந்த போதிலும், நமது தமிழகத்தைப் பொறுத்தவரையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் இருமொழித் திட்டம்தான் அமுலில் இருக்கும் என்று கொண்டுவந்து நிறைவேற்றியதைப் போல், இந்தியாவின் மற்ற மாநிலங்களில் எப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தாலும்கூட, தமிழகம் எல்லாவற்றிற்கும் முன்னோடியாக விளங்கும் என்பதற்கு எடுத்துக் காட்டாக, ஆசிரியர்கள் தொகுதியின் அனைத்து ஆசிரியர்களுக்கும் வாக்குரிமை தர தமிழகம் விரும்புகிறது என்பதை மத்திய அரசுக்கு ஒரு பரிந்துரையாகச் செய்யலாம். அப்படிச் சட்டமன்றம் மூலம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பினால், அதன் மூலம் தமிழகத்தில் உள்ள 1,86,000 தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் உள்ளத்திலும் இந்த ஆட்சியாளர்கள் இடம் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை. அதை இந்த அரசு செய்ய முன்வர வேண்டும். இதில் மானப்பிரச்சினையும் சம்பந்தப்பட்டிருக்கிறது. எம்.ஏ., மற்றும் பி.ஏ., படித்தவர்களுக்கெல்லாம் இல்லாத உரிமை, அவர்களைவிட தகுதி குறைந்தவர்களுக்கு இருக்கிறது. ஆசிரியர் தொகுதியைப் பொறுத்த வரையில், எல்லா ஆசிரியர்களையும் ஒன்றாக வைத்து அவர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட ஒரு நிலையை மத்திய அரசு விரும்பவில்லை என்றால், இங்கே உள்ள அரசு தீர்மானம் போடுவது மட்டுமல்ல, தமிழகத்திலுள்ள அனைத்து இயக்கங்களும் வேறு மாநில இயக்கங்களும் ஒன்று சேர்ந்து மத்திய அரசிடம் இதற்குரிய போராட்டத்தை நடத்த ஆயத்தம் செய்து கொண்டிருக்கிற சூழ்நிலையில், அரசு இதற்கான பரிந்துரையை அனுப்பினால், அது மிக மிகச் சாதகமாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

'ஆசிரியர் தொகுதி இருக்க வேண்டுமா? வேண்டாமா?' என்று மத்திய அரசு அனைத்து மாநில அரசுகளுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பி கருத்து கேட்டபோது, நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், அது இருக்கத்தான் வேண்டும் என்று எங்களுக்குச் சாதகமான ஒரு விடையளித்திருக்கிறது. அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன், இதற்கு நன்றி தெரிவித்துக்



1981 மார்ச் 7] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

கொள்கிறேன். ஆனால் ஆசிரியர்களுக்கு என்று சட்டமன்ற மேலவைத் தொகுதிகளை வைத்துக் கொண்டு, அதிலே பெரும்பகுதியான ஆசிரியர்கள் வாக்களிக்க உரிமையில்லாமல் இருக்கிற நிலையை வைத்துக்கொண்டிருப்பதைப் போக்கியாக வேண்டும் என்று எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வகையில் தொடக்கப் பள்ளி ஆசிரியர் சமுதாயத்திற்கு ஏற்பட்டிருக்கிற அவக்கேட்டை, தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் இன்றைக்குத் தலைநிமிர்ந்து நடக்க முடியாத சூழ்நிலையை, ஏனைய ஆசிரியர்களிடம் போய்க் கெஞ்சி நின்றுதான் வாக்குப் பெற்று வரக்கூடிய சூழ்நிலையை மாற்றியாக வேண்டும். அந்த நிலையை மாற்றி, மற்ற ஆசிரியர்களோடு சேர்ந்து நாங்களும் ஆசிரியர்கள்தான் என்று சொல்லுகிற நிலை இல்லாமல் இருப்பதைத் தவிர்ப்பதற்கு வாய்ப்பாக நான் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்துள்ளேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் பாதிக்கப்படும் ஆசிரியர்கள் எல்லாத் துறைகளிலும், எல்லாப் பகுதிகளிலும் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளிவிவரத்திலிருந்து தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், தனியார் துறையில் தான் நிரம்ப இருக்கின்றன. அங்கே தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். அப்படி அவர்கள் பாதிக்கப்படும்போது, அவர்களுக்குத்தான் மிகுந்த பாதுகாப்பு தேவைப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்மைப் பற்றிய செய்தியை இங்கே தெரிவித்தார்கள். அதைப்போலவே நானும் ஒன்றை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நானேகூட தொடக்கப் பள்ளியில் பணியாற்றியவன்தான். அங்கே பணியாற்றி அந்தப் பணியிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்ட பிறகு, பணி நீக்கம் செய்யப்பட்ட காரணத்தால்தான், நான் சென்னையைப்பற்றியே அறிந்து கொள்ள முடிந்தது. அதுவரை நான் சென்னைக்கே வந்ததில்லை. 1958 ஆம் ஆண்டில் பணி நீக்கம் செய்யப்பட்டதற்குப் பிறகு, அதற்காக வாதிட நான் சென்னைக்கு வந்தேன். சென்னையிலிருந்த வழக்கறிஞர்களைப் பிடித்து உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தேன். அதன் காரணமாக அலைகிற போதுதான் அதற்கு உதவியாக ஆசிரியர் இயக்கத் தலைவர் ஒருவரின் துணையை நாடும் சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது. அதற்குப் பிறகு ஆசிரியர் இயக்கத்திற்கு நானே தலைமை ஏற்கும் சூழ்நிலையும் மலர்ந்தது. அதற்குப் பிறகுதான் மேலவையில் இடம் பெறும் சூழ்நிலையும் ஏற்பட்டது.

இவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்ட காரணத்தால், தொல்லையை அடைந்த காரணத்தால், அந்தத் தொல்லையைத் தாங்க முடியாத காரணத்தால் தான் நான் இங்கே வந்தேன். இப்படிப்பட்ட தொல்லைக்குள்ளான தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் பலர் இருக்கிறார்கள். இப்போது ஒரு சிலரை

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1981 மார்ச் 7

வளைத்துக்கொண்டு தங்களுக்குப் பாதகம் வராமல் காத்துக்கொள்ள முடியும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் விரும்பும் வகையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றவிட்டால் அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் கல்வி நிறுவனங்களை விட்டு வெளியே வர வேண்டும் என்ற நிலை ஏற்படும். அப்படி அவர்கள் வெளிவந்தால் ஒன்று அவர்கள் அரசியலுக்கு வர வேண்டும் அல்லது மேலவைக்கு வர வேண்டும். அதனால் கல்வி நிறுவனங்கள் பாதிக்கப்பட்டு, கல்வியின் தரமும் பாதிக்கப்படும் சூழ்நிலை உருவாகும். அதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இன்றையதினம் ஆசிரியர் தொகுதியில் ஆசிரியர் சமுதாயத்திற்கு முறையான உரிமைகள் இல்லை. அவர்களுடைய தொகுதித் தேர்தலில் அவர்களுக்கு வாக்குரிமை இல்லை என்று சொல்வது மிகவும் அவமானகரமாக இருக்கிறது என்பதை மட்டும் இப்போது வலியுறுத்தி எடுத்துச் சொல்லி, நான் முன்னே சொல்லிய கருத்துக்களை இந்த அரசு ஏற்று, தீர்மான வடிவில் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் இந்த அமைச்சரவையில் எடுத்த முடிவை ஆராய்ந்து பார்த்து, அதன் அடிப்படையில் செயல்பட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதை பேரறிஞர் அண்ணா அவர்கள் விரும்பினார்கள். அவருக்குப் பின்னாலே வந்தவர்கள் விரும்பினார்கள் என்பதையெல்லாம் மனதில்கொண்டு, செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பிறகு பேசுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்ற காரணத்தால், இத்தோடு முடித்துக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. க. இராமமூர்த்தி தலைமை)

திரு. எஸ். ஆர். இராதா: மேலவையை அலங்கரித்துக் கொண்டிருக்கும் மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தையொட்டி சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் இங்கே எதைப் பேச வேண்டும், எந்தக் கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று நினைத்தேனோ, அதற்குச் சரியான சூழ்நிலை இல்லாமல் போய் விட்டது. ஆனாலும் சில கருத்துக்களை மட்டும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

மேலவையில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் தேவை என்ற அடிப்படையில், அந்த உணர்வோடு மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் ஒரு தீர்மானம் மூலமாகக் குரலெழுப்பி இங்கே அதை விவாதத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். பல்வேறு



1981 மார்ச் 7] [திரு. எஸ். ஆர். இராதா]

மாநிலங்களில் மேலவையே இல்லாத நேரத்தில் தமிழகம் போன்ற சில மாநிலங்களில் மட்டுமே மேலவை இயங்கிக் கொண்டிருக்கிறது என்பது மிகப் பெரிய சிந்தனையை உருவாக்கியிருக்கிறது. மேலவையே தேவைதானா என்ற கருத்து பல்வேறு இடங்களில் உருவாகியிருப்பதை நான் இந்த நேரத்தில் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மதிப்பீட்டுக் குழுவில் இடம்பெற்று சண்டிகார் நகரில் பஞ்சாப் மாநில மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களைச் சந்தித்தபோது அங்கேயுள்ள உறுப்பினர்களுக்கு எங்களை அறிமுகம் செய்து வைக்கும்போது, "நாங்கள் எங்களை மேலவை உறுப்பினர்கள் என்று சொல்லிக் கொண்டோம்". அப்போது ஒருவர் சிரித்துக் கொண்டே "இன்னும் அங்கே மேலவை வைத்துக் கொண்டிருக்கிறார்களா" என்று கேட்டார். அதற்கு அரசுத் துறையின் துணைச் செயலாளர் அவர்கள் "தமிழ் நாட்டில் மேலவை இருக்கிறது, அதன் பிரதிநிதிகளாக இரு உறுப்பினர்கள் இந்தக் குழுவில் வந்திருக்கிறார்கள்" என்று சொன்னபோது, அந்த உறுப்பினர் "ஓர் அவசியமில்லாத வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள்" என்று கூறினார். அவருக்குப் பதில் சொல்ல வேண்டும் என்ற ஆசை எனக்கிருந்தபோதும்கூட, நான் ஒன்றும் சொல்லவில்லை. பல பேருக்கு இப்படிப்பட்ட உணர்வு வருவது சகஜம். உடனே அங்கே ஓர் உறுப்பினர், நாடாளுமன்றம் இருக்கிறபோது ராஜ்ய சபை என்று வைத்திருக்கிறார்களே,

(பிற்பகல் 1-10)

அது மட்டும் ஏன் என்று கேட்டநேரத்தில், "அதுவும் தேவையில்லாத ஒன்று தான். அதை ஏன் வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை" என்று அவர் உடனே பதில் சொன்னார். இதைச் சொல்லுவதற்குக் காரணம், இந்த அவையைப் பார்க்கிற நேரத்தில் பல பேருக்கு இந்த உணர்வுகள் அடிக்கடி எழுகின்றன. நான் கொஞ்சம் மனம் திறந்து சொல்லுவேன். நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, உள்ளபடியே எனக்கேகூட அப்படிப்பட்ட உணர்வு இருந்தது என்பதை நான் சொல்லியாக வேண்டும். பத்துப் பதினைந்து பேர்கள் அங்கே உட்கார்ந்து கொண்டு அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று நான் நினைத்தது உண்டு. ஆனால் இந்த மன்றத்திற்கு வந்த பின்னாலே, இங்கே நடைபெறுகின்ற விவாதங்களைக் கேட்ட பிறகு தான், இந்த அவையின் அவசியத்தை என்னாலே புரிந்துகொள்ள முடிந்தது. இந்த அவையைப் பொறுத்த வரையில், இது பல்வேறு சிந்தனைகளைத் தாண்டி சிந்தனைகளை உருவாக்க நிச்சயமாகப் பயன்படுகிறது என்பதை ஏற்றுக்கொண்டாக வேண்டும். அதுவும் பல தரப்புக்களிலேயிருந்து

பிரதிநிதிகள் வந்து இங்கே உட்கார்ந்து அந்தந்தத் தரப்பினருக்காக வாதாடுகிறார்கள். அன்றைக்கு ஒரு நாள் திரு. ஜேப்பியார் அவர்கள், திரு. மீனாட்சிசுந்தரத்தைப் பார்த்து ஒன்றைக் கேட்டார்கள். "எப்போது பார்த்தாலும் ஆசிரியர்களைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறீர்களே, நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்குகளைப் பெற்று வந்திருக்கிறோம். நாங்கள் அவர்களைப் பற்றிப் பேசினால் என்ன ?" என்று கேட்டார். அந்த உணர்வுக்கு வருவதற்குக் காரணம் என்ன? திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அவர் அங்கம் வகிக்கின்ற தொடக்கப் பள்ளி ஆசிரியர் பிரதிநிதிகள் இங்கே வர வேண்டுமென்று சொன்னார். அவரே ஒரு தொடக்கப் பள்ளி ஆசிரியர் என்று பெருமைப்பட்டுக் கொண்டார். தான் ஒரு தொடக்கப் பள்ளி ஆசிரியராக இருந்தாலும், தன்னைப் பட்டதாரி ஆசிரியர்கள் இங்கே அனுப்பினார்கள் என்று பெருமைப்பட்டுக் கொண்டார்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளி ஆசிரியர் பிரதிநிதி என்று சொல்லவில்லை. தொடக்கப் பள்ளி உள்ளிட்ட அனைத்துப் பள்ளி ஆசிரியர்கள் பிரதிநிதி என்றுதான் சொன்னேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர் விளக்கம் சொன்னதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நிலைக்கு அவர் போகக் கூடாது என்பதற்காகத்தான் கண்காணிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** என்னைக் கண்காணிக்க என்னுடைய இயக்கம் இருக்கிறது. வேறு யாரும் கண்காணிக்கத் தேவையில்லை.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாற்றுத் தலைவர் அவர்களே, "இயக்கம்" என்று சொன்னால், திராவிடர் இயக்கத்திலே தொடர்பு வைத்துள்ளார் என்று சொல்லுகிறார் என்று நினைக்கிறேன். இன்றைக்கு அதை விட்டு விட்டார் என்று கருதுகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தொடர்பு வைத்திருக்கிறேனா, இல்லையா என்று ஆராய்ச்சி இந்தச் சபையிலே தேவையில்லை. தேவையானால் அதற்குப் பதில் சொல்லவும் தயாராக இருக்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** ஆகவே விட்டுவிடவில்லை என்று இப்போது தெரிகிறது. இன்னும் கொஞ்சம் தொடர்பு வைத்திருக்கிறார்.



**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** எல்லாத் தரப்பினரிடமும் நிறையவே தொடர்பு வைத்திருக்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) :** மாண்புமிகு உறுப்பினர்கள் தலைவரை நோக்கிப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் உங்களிடத்திலே பேச வேண்டும் என்றுதான் ஆசைப்பட்டேன். ஆனால் எதிர்பாராதவிதமாக திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களிடம் பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. உங்களை நோக்கித்தான் பேசுகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) :** மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரத்திற்குப் பதில் சொல்ல வேண்டும் என்றாலும், தலைவர் மூலமாகத்தான் பதில் சொல்ல வேண்டும். ஆகவே என்னைப் பார்த்துப் பேச வேண்டும்.

**திரு. எஸ். ஆர். இராதா :** உங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை, உங்களோடு பேச வேண்டும், கேட்க வேண்டும் என்றுதான் நினைத்தேன். ஆனால் ஆரம்பிக்கும்போது எங்கேயிருந்து பேச வேண்டும், எப்படிப் பேச வேண்டும் என்றுதான் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். நீங்கள் என்னிடத்திலே பேச வேண்டும் என்று சொல்லுகிறபோது, உங்களிடத்திலே பேசுவேன். தற்காலிகத் தலைவர் என்றாலும், இந்தத் தீர்மானம் உங்களை நோக்கித்தான் இருக்கிறது. ஆகவே உங்களிடத்திலே பேச வேண்டியிருக்கிறது.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) :** இப்போது என்னோடு தலைவர் என்ற முறையிலே பேச முடியுமே தவிர, வேறு முறையிலே பேச முடியாது.

**திரு. எஸ். ஆர். இராதா :** நீங்கள் இதைச் சொன்னதற்காக நன்றி சொல்வேன். எப்படி இடம் மாறுகிற நிலையில் நிலை மாறுகிறது என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) :** அதை நான் அடிக்கடி உறுப்பினருக்கு ஞாபகப்படுத்த வேண்டிய அளவிற்கு வைக்க வேண்டாம். உறுப்பினரே ஞாபகத்தில் வைத்துக்கொண்டு விவாதத்தைத் தொடரலாம்.

**திரு. எஸ். ஆர். இராதா :** பிரதிநிதி தேவை என்பதை தனிப்பட்ட முறையிலே யாரிடத்தில் கேட்டாலும் நிச்சயமாக மறுக்கமாட்டார்கள். ஆனால் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் பிரதிநிதிகள் மட்டும்தானா தேவை என்று

[திரு. எஸ். ஆர். இராதா] [1981 மார்ச் 7

திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களைக் கேட்பதாக இருந்தால், அவர்களோடு மற்ற பிரதிநிதிகளும் தேவை என்று நிச்சயமாக அவரும் சொல்லுவார். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். இந்தச் சபையைப் பொறுத்த வரையில், ஆசிரியர்கள் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அதே போல உள்ளாட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் வர வேண்டும். அவர்கள் வரவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகள் இங்கே இருக்கிறார்கள். இந்தப் பிரதிநிதிகளோடு நிற்காமல் மேலும் முக்கியமாகப் பிரதிநிதிகள் வேண்டும் என்று வற்புறுத்துவதாக இருந்தால், தொழிற் சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர் பிரதிநிதிகள் வர வேண்டும் என்று பல்வேறு வாதங்களை ஆரம்பித்து வைப்பார்கள். இந்த அவையிலே பேசிக்கொண்டிருக்கிற ஆசிரியர்கள் பிரதிநிதிகள் ஆசிரியர்களின் பிரச்சினைகளைப் பற்றி மட்டும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மற்ற பிரச்சினைகளையும் பற்றிப் பேசுவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், அவ்வளவுதான். மற்ற பிரச்சினைகளின் விவாதங்களில் அந்த அளவிற்குக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாற்றுத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பிரதிநிதிகள் வேறு பிரச்சினைகளில் பேசுகின்றபோது, "ஆசிரியப் பிரதிநிதிகள் இதிலேயும் பேச வருகிறார்களா ?" என்று கேட்கிறார்கள். சந்தர்ப்பம் அளித்தால், எந்தத் துறையைக் கொடுத்தாலும், மாண்புமிகு உறுப்பினர் பேசுவதை ஒட்டியோ அல்லது வெட்டியோ நீண்ட நேரம் பேசத் தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் சந்தர்ப்பம் கொடுக்கப்படுவதில்லை.

மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) : சந்தர்ப்பம் கொடுக்கப் படுவதில்லை என்பது தலைவருக்கு எதிரான குற்றச்சாட்டு. ஆகவே சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாற்றுத் தலைவர் அவர்களே, நீங்களே அருமையான பதிலைச் சொல்லிவிட்டீர்கள். சந்தர்ப்பம் என்பது ஏற்படுத்திக் கொள்ளுகிற ஒன்றுதான். பேச வேண்டும் என்ற எண்ணம் இருக்குமானால், சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இப்போது நான் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களின் தீர்மானம் வருகிறதென்றால், அதன்மீது என்னுடைய கருத்தைச் சொல்ல வேண்டும் என்று ஆசைப்படுவதால், சந்தர்ப்பத்தை நானே உருவாக்கிக்கொள்ளுகிறேன். அதைப்போலவே ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்,



1981 மார்ச் 7] [திரு. எஸ். ஆர். இராதா]

நாட்டிலே நடக்கின்ற பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் பிரச்சினை
போன்றவைகளில் தலையிட்டு அவர்களுடைய கருத்துக்களைச் சொன்னால்,
இந்த அவைக்கும் நாட்டுக்கும் எவ்வளவோ பெரிய நற்காரியங்கள் நடைபெற
உதவியாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம்
அவர்களைப் பொறுத்த வரையில், சந்தர்ப்பம் கொடுத்தால் பேசமாட்டார்
என்ற கருத்திலே நான் இல்லை. அவர் நன்றாகவே பேசுவார். அவருடைய
நடையுடை பாவனையிலிருந்தே அவர் எவ்வளவு ஆற்றலைப் பெற்றிருக்கிறார்
என்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது. அதனாலே சொல்லுகிறேன், எல்லா
பிரச்சினைகளிலும் அவர் பேச வேண்டும், விவாதிக்க வேண்டும் என்பது
என்னுடைய ஆசை. அவராலே அப்படிப் பேச முடியாது, இயலாது என்பது
அல்ல. இயலாது என்று தெரிந்திருந்தால், அந்தக் கேள்வியை நான்
வைத்திருக்கமாட்டேன். பேசும் ஆற்றலைப் பெற்றவர் அவர்.

அதேபோல, தொழிலாளர் பிரதிநிதிகள் அல்லது தொழிற்சங்கப்
பிரதிநிதிகள் இங்கே வந்து விவாதிக்க வேண்டும் என்ற சூழ்நிலை வரும்.
அதுதான் இன்றைக்கு இருக்கிற முக்கியமான ஒன்று. இந்த அவையில்
பல்வேறு பிரதிநிதிகள் கூடுவதால், இதற்குப் பெருமை இருக்கிறது. இந்த
அவையின் கருத்துக்கள் சிந்தனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ஆனால்
டில்லியிலே வைக்க வேண்டிய தீர்மானம் இது. டில்லியிலே வைக்க வேண்டிய
தீர்மானத்தை மேலவையிலே வைத்து, அன்னை இந்திரா காந்தி அவர்களின்
முழு ஆதரவு கொடுத்துவிட்டார், திரு. மொரார்ஜிதான் [illegible] என்று
அவர் சொல்லுகிற நேரத்தில், இது அவசியம்தானா என்ற சந்தேகம்
வருகிறது. இதற்காக அன்னை இந்திரா காந்தியை அவர் பார்த்திருக்கிறார்.
நாடாளுமன்றத்திலே அரசியல் சட்டத் திருத்தம் மூலமாக இதைக் கொண்டு
வந்தால், இந்தக் காரியம் மிகச் சுலபமாக முடிந்துவிடக் கூடிய ஒன்று.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

அதனாலே திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று இந்த அவையிலே நாம்
சொல்லி, பின்னாலே மற்றவர்கள் சொல்லி, திருத்தத்தை நாடாளுமன்றத்திலே
கொண்டு வருவதைவிட டில்லியிலேயே வைக்கலாம். என்னுடைய நண்பர்
திரு. முத்துசாமி அதற்காகவே டில்லிக்குப் போயிருக்கிறார். "மாநாடு
டில்லியிலேதான். உங்களைக் கேட்பதைவிட டில்லியிலே உள்ள அமைச்சர்
களைக் கேட்பது நல்லது" என்று கூறி இரயில் ஏறி டில்லிக்குப் போய்
விட்டார். அவர் கருத்துக்கு திரு. மீனாட்சிசுந்தரம் [illegible]
இதிலே உடன்படுவார் என்று நினைக்கிறேன். யார் எந்தப் பிரச்சினையை
எடுத்தாலும், பிரச்சினையை யார் எதிர்க்கிறார் என்பதல்ல முக்கியம்.

பிரச்சினை தீர வேண்டும் என்பதுதான் முக்கியம். "நேரிடையாக டில்லியிலே கொடுக்க வேண்டும். டில்லியிலே பேச வேண்டும். டில்லியிலே இருக்கிறவர்களுக்கு உணர்த்த வேண்டும். டில்லியிலே இருக்கிறவர்கள் மறுத்திருக்கிறார்கள். முப்பது ஆண்டுகளாக அவர்களுக்கு உணர்வு வரவில்லை. இன்றைக்கு உணர்வுகளை அவர்களுக்கு உண்டாக்க வேண்டும்" என்ற முறை

(பிற்பகல் 1-20)

யிலே திரு. முத்துசாமி டில்லிக்குப் போயிருக்கிறார். எனக்கு மகிழ்ச்சி ஏற்படுவதாக இருக்கவேண்டுமென்றால், உடன் மாண்புமிகு அங்கத்தினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும் சென்றிருக்க வேண்டும். அப்படிச் சென்றிருந்தால், நானும் மகிழ்ச்சி அடைந்திருப்பேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவர் அவர்களே, ஒரு காரியத்திலே வெற்றி பெறுவதற்கு பல்வேறு நடவடிக்கைகளிலே ஈடுபடுவது தேவையானது என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அறிவார்கள். அவர்கள் அவர்களுடைய முயற்சியில் அதைச் செய்துகொண்டிருக்கிறார்கள். நாங்கள் இங்கே இதைச் செய்துகொண்டிருக்கிறோம். எல்லா வகையிலும் ஒத்துழைக்கக்கூடிய அளவுக்குச் சென்றால்தான் காரியம் நிறைவேறும். பேரறிஞர் அண்ணா அவர்கள் இப்படி நினைத்திருந்தார்கள் என்றால், இங்கே அமைச்சரவையிலே தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவைத்திருக்கமாட்டார்கள். அவர்களுடைய கட்சியிலேயிருந்து அப்போது திரு. செழியன் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு போய் நாடாளுமன்றத்தில் பேசச் செய்திருக்க மாட்டார்கள். ஆகவே இதையெல்லாம் எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து செய்ய வேண்டும். அதற்கு மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய ஒத்துழைப்பும் வேண்டும். அதிலே ஒத்துழைப்பு தேவை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். நான் அடுத்த முறை டெல்லிக்குச் செல்கின்றபோது, அங்கத்தினர் அவர்களை அழைப்பேன். அப்போது அவர்களும் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்படியோ இன்றைக்கு இந்தக் கருத்தை டெல்லிக்குத் தெரிவிக்க வேண்டும், டெல்லிக்கு உணர்த்த வேண்டும் என்பதிலே அங்கத்தினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் வேகமாக இருக்கிறார்கள். அங்கத்தினர் திரு. முத்துசாமி அவர்கள் அங்கே போயிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அண்ணா வழியிலே சென்றிருக்கிறார்கள். அதற்கு ஆதாவு வேண்டுமென்கிறார்கள். அண்ணா வழியிலேயிருந்து கொஞ்சமும் தவறக்கூடாது என்பதிலே



நாங்கள் வேகம் படைத்தவர்களாகத்தான் இருக்கிறோம். அதிலே நிச்சயமாகச் சந்தேகப்படக் கூடாது. நாங்கள் அண்ணாவுக்காகத்தான் இருக்கிறோம். அண்ணாவினுடைய பெயராலேதான் இயக்கம் நடத்துகிறோம், அண்ணாவுக்காகத்தான் இயக்கம் நடத்துகிறோம் என்று சொல்கிறோம். அப்படிச் சொல்லுகின்ற நேரத்தில், அந்த அண்ணாவின் வழியில்தான் நடப்போம். எந்த வகையிலும் உணர்வுகளை மாற்றிக்கொள்ளக் கூடாது என்பதிலே திடமாக இருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாக இந்த உணர்வுகளிலிருந்து மாறமாட்டோம். மாண்புமிகு அங்கத்தினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அடிக்கடி சந்தேகப்படுகிறார். எங்கே மாறிவிடுவோமோ என்னவோ என்று சந்தேகப்படுகிறார்கள். அவர்கள் அண்ணாவைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அண்ணா இப்படிப்பட்ட பணியை அன்று செழியன் அவர்கள் மூலம் செய்தாரே, அங்கே தீர்மானத்தைக் கொடுத்தாரே என்று சொன்னார்கள். அந்த மாதிரி அன்று அவர்கள் செய்தார்கள் என்றால், அதற்குக் காரணம், அந்தத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் கொடுக்கவேண்டிய ஒன்றாக இருக்கிறது. அது அண்ணாவின் காலத்திலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்தத் தீர்மானத்தை அவர்கள் திரு. செழியன் அவர்கள் மூலமாக நாடாளுமன்றத்திலே வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிந்தனை கொண்டிருக்க வேண்டுமென்ற நிலையை அன்று உண்டாக்கினார். உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் தீர்மானத்தைக் கொண்டு வருவதை. அதை, இங்கே இருக்கின்றவர்கள் எல்லாம் ஏற்றுக் கொள்கிறோமோ இல்லையோ, அது தெரியவில்லை, ஆனால் நிச்சயமாகச் சொல்கின்றேன் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களைப் பற்றிய விஷயங்களுக்கு காங்கிரஸ் கட்சியிலே இருக்கின்ற திரு. இராமமூர்த்தியானாலும் சரி, மற்றவர்களானாலும் சரி, நிச்சயமாக ஆதரவாகத்தான் இருப்பார்கள். ஆகவே. அத்தனை பேர்களும் ஆதரித்திருக்கின்றபோது, இதை நிறைவேற்றுவதற்கு எதிர்ப்பு வந்துவிடப்போகிறதா அல்லது தடங்கல் வந்துவிடப் போகிறதா? அது ஒன்றும் இல்லை. ஆனால் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலமாக வருகின்ற சங்கடம் என்ன என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலமாக டெல்லியிலே போய், "தமிழ் நாடு மேலவையில் இந்தத் தீர்மானம் நிறைவேறிவிட்டது, நீங்கள் உடனே இந்தத் தீர்மானத்தை அமுல்படுத்துங்கள்" என்று சொன்னால், டெல்லியிலே இருப்பவர்கள் கேட்பார்களா என்பதை திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள்தான் சொல்ல வேண்டுமே தவிர, வேறல்ல. அங்கே இருப்பவர்கள் என்ன உணர்விலே இருப்பார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, டெல்லியிலே இருப்பவர்கள் கேட்பார்களா மாட்டார்களா என்று கருதிக் கொண்டே மேலவையை நடத்துவது என்றால், மேலவையே தேவையில்லை. மேலவை அதனுடைய பொறுப்பிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. மற்றவர்கள் கேட்பார்களா கேட்கமாட்டார்களா என்பது அல்ல பிரச்சினை. நமக்கு எது சரி என்று தெரிகிறதோ அதைத் தொடர்ந்து நடத்துவதற்குத்தான் மேலவை இருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தப் பிரச்சினை குறித்து இன்னும் 5 நிமிடங்கள் விவாதம் நடைபெறும் என்று நினைக்கிறேன். அது இப்படியே முடிவுறுமானால் அரசு என்ன செய்துகொண்டிருக்கிறது, அரசைச் சேர்ந்தவர்கள் எப்படி இருக்கிறோம் என்பதைத் தெளிவாக்காமல் போய்விடும் நிலைமை ஏற்படும். ஆகவே சொல்கிறேன். பொறுப்பேற்ற பிறகு, இரண்டு முறை என்று கருதுகிறேன், டெல்லிக்கு எழுதி அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த முயற்சியிலேயிருந்து பின் வாங்கிவிடவில்லை என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவர் அவர்களே, விவாதத்திற்கு ஒரு வழியைச் சொல்கின்ற வகையிலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அதைத்தான் சொல்ல வேண்டுமென்று கருதினேன். எங்களைப் பொறுத்த வரையிலே, நாங்கள் தெளிவாகத்தான் இருக்கிறோம். ஆனால் நீங்கள் பார்க்கின்ற நேரத்திலே ஒரு அரசியல் நோக்கத்தோடு பார்க்கின்றீர்கள். அதனாலே நானும் அரசியல் நோக்கத்திலே சிந்தனைகளை உண்டாக்க வேண்டுமென்ற அளவிலே சொல்கின்றேனே தவிர வேறல்ல. அங்கத்தினர் அவர்கள் ஆரம்பிக்கின்ற போதே, அந்த இயக்கம் என்று சொல்லும் நேரத்திலே, எந்த இயக்கம் என்று கேட்டதற்குக் காரணம் இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்திலேயே திரு. செழியன் இருந்து செய்த காரியத்தை இன்றைக்குச் செய்திருக்க முடியாதா என்று கேட்கிறேன். இன்றைக்கு 16 பேர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திலே அங்கே உறுப்பினர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நாடாளுமன்றத்திலே தனி நபர் விவாதத்திலே இத்தகைய தீர்மானத்தைக் கொண்டு வந்து, அன்னை இந்திரா காந்தி அம்மையார் அதை ஏற்றுக்கொண்டார்கள் என்றால், நன்றாக இருக்கும். இன்றைக்கு அந்த வாக்குறுதியை வாங்கியிருக்க முடியும். அதற்கான வாய்ப்பு இன்றைக்கு இருக்கிறது





திரு. க. மீனாட்சிசுந்தரம் : யாரைப் பார்த்துப் பேசுகிறார்கள் ?

திரு. எஸ். ஆர். இராதா : நான் என் நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன். அவர்கள் முதலிலே வேகம் காட்டினார்கள். அதனாலேதான் அவரை அப்படிக் கேட்டேன். இல்லாவிட்டால் திரு. ம. சங்கரலிங்கம் அவர்களைப் பார்த்துத் தான் கேட்டிருப்பேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : நான் பேசுகிறபோது அதைப்பற்றி பதில் சொல்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : ஆகவே எனக்குத் தெரிந்த ஒரு பிரச்சினை உண்மை என்று இருக்கிறேன். இதுவரையிலே மாண்புமிகு அங்கத்தினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கேட்டதிலிருந்து அது தவறான ஒன்று என்று கருதுகிறேன். இன்றைக்குத் தெளிவுபெறவேண்டும் என்பதற்காகத்தான் கேட்டேன். அதனாலேதான் அவர் எந்த இயக்கத்தைச் சொல்கிறார் என்று கேட்டேன். அவர்கள் உடனே எந்த இயக்கம் என்று சொல்கின்றார்கள் ?

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இங்கே மேலவையிலே நான் சுயேச்சையாக உட்கார்ந்திருப்பது தெரியும். நான் எந்தக் கட்சியின் இடத்திலேயும் உட்காரவில்லை. ஆகவே எங்கே எப்படி நடந்து கொள்கிறோம் என்பதுதான் பிரச்சினையே தவிர மற்றது அல்ல.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கட்சிக் கொள்கை என்பது ஒரு அறைக்குள்ளே அல்லது மண்டபத்திற்குள்ளே வந்தால் ஒன்று என்று இல்லாமல் இருக்க வேண்டும். ஒரு புறம் போனால் ஒரு கொள்கை என்று ஒரு கட்சியின் கொள்கை இருக்கக்கூடாது என்பதுதான் எங்களைப் போன்றவர்கள் கருத்து. பொதுவாக எங்கே இருந்தாலும் கொள்கை இன்னதுதான் என்று சொல்லக்கூடிய அளவிலே இருக்க வேண்டுமே தவிர, இன்னொரு இடத்திலே வந்து இந்தக் கட்சிக் கொள்கை எனது இல்லை, அங்கே வந்தால் அந்தக் கட்சிக் கொள்கை எனது இல்லை என்று சொல்லுகின்ற போக்கு இருக்கக்கூடாது. அப்படியிருப்பது எந்தக் கட்சியின் கொள்கைக்கும் சரிபட்டுவராது. நாம் எந்த நிலையிலே இருந்தாலும், இதுதான் கொள்கை என்று சொல்லக்கூடிய அளவுக்கு உறுதியாக, திடமாக இருக்க வேண்டும். அதிலே மாண்புமிகு அங்கத்தினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் நிச்சயமாகப் பின்வாங்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : எங்கே எந்தெந்தக் கட்சியிலே யார், யார் உட்கார்ந்திருக்கின்றார்களோ, அதை வைத்துத்தான் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்றால், அது திரு. ம. சங்கரலிங்கம் அவர்களைக் குறிக்கும். அதுபோல ஆசிரியர்கள் சார்பில் என்று சொல்லும்போது, எங்களைக் குறிக்கும். இந்திரா காங்கிரஸ் என்றால், திரு. இராமமூர்த்தி அவர்களைக் குறிக்கும். அதுபோல நான் ஆசிரியர்கள் சார்பில் வந்திருக்கிறேன். அந்த அளவில் நான் ஆசிரியர்கள் பிரதிநிதியாக இங்கே பணியாற்றிக்கொண்டிருக்கிறேன். ஆக இந்த இடத்தைப் பொறுத்த வரையிலே, நான் ஆசிரியர்கள் பிரதிநிதி என்று ஆகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு சரியான நிலைக்கு நாம் வரவில்லை. அவர்கள் ஒரு பெரிய சிந்தனையை எழுப்பினார்கள். அவர்கள் எழுப்பிய விவாதத்திலே உண்மை இருக்கிறது.

* * *

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் அங்கேயிருந்து இங்கே வந்தேன் என்று சொன்னார்கள். அவருக்குக் கொஞ்சம் அனுபவம் இல்லை என்று நினைக்கிறேன். கவர்னரை இங்கே விவாதத்திலே இழுப்பது நல்லதல்ல என்று நினைக்கிறேன். ஆகவே அதை மட்டும் நீக்கிவிட்டு மற்றவற்றை வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஆளுநர் அவர்கள்பற்றி குறிப்பிட்ட செய்தியை அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விடுமாறு உத்தரவிடுகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : நான் இங்கே ஆளுநர் என்று பெயர் சொல்வது கூட தவறு என்று நினைக்கவில்லை. அப்படி ஒரு விதி இருப்பதாக நான் கருதவில்லை. நான் ஆளுநர் அவர்களை விவாதத்திற்கு அழைக்கவில்லை. ஆளுநர் செய்தார் என்றும் சொல்லவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : ஆளுநர் என்று சொல்லி, உறுப்பினர் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பது பற்றிய கருத்தினைச் சொன்னார்கள். வாதத்திற்கு என்று சொன்னால், அந்த நியமன உறுப்பினர் யாராலே நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று பார்க்க வேண்டும்.

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



திரு. எஸ். ஆர். இராதா : ஆளுநர் அவர்கள் நியமனம் பற்றிச் சொல்லவில்லை. ஆளுநர் அவர்களைக் கொண்டு கேட்கலாம் என்று சொல்லவில்லை. அந்தச் சிந்தனைக்கு நான் வரவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : அந்தச் சிந்தனைகள் வரும். தொடர்ந்து விவாதம் என்று வரும்போது, அதைத் தொடர்ந்து அந்தச் சிந்தனைகள் உருவாகி விடக்கூடும்.

திரு. எஸ். ஆர். இராதா : பொறுப்பானவர்கள் இந்த நிலையிலே இன்றைக்கு உறுப்பினர்களாக இங்கே உட்கார்ந்திருக்கின்றனர். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் அது. அரசியல் ரீதியாக அவர்கள் ஒரு கட்சியின் சார்பில் இன்றைக்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தக் கொள்கைகளின் அடிப்படையில் ஆணித்தரமாக வாதாடிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் வாதாடுவதுதான் சரியான நிலையாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அடுத்த தனி உறுப்பினர் தீர்மான நாள் அன்று திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் தொடர்ந்து பேசுவார்கள்.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் 9—3—1981 அன்று காலை 10-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-30)

## 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

Nil.

### B. Reports, Notifications and Other Papers.

*52. The Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Amendment Bill, 1981 (L.A. Bill No. 23 of 1981), as passed by the Assembly.

*53. The Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1981 (L.A. Bill No. 24 of 1981), as passed by the Assembly.

* Circulated to all M.L.Cs. on 6th March 1981.

* 54. The Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 25 of 1981), as passed by the Assembly.

* 55. The Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1981 (L.A. Bill No. 26 of 1981), as passed by the Assembly.

* 56. The Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Amendment Bill, 1981 (L.A. Bill No. 27 of 1981), as passed by the Assembly.

* 57. The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 28 of 1981), as passed by the Assembly.

## இணைப்பு 1.

[320 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

திரு. பி. டி. அரசு என்ற பி.டி. ஆசிரியர் 20—6—1968 முதல் தியாகராய நகர் மேல்நிலைப் பள்ளியில் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். அவரைப் பள்ளிச் செயலாளர் 10—1—1981-ல் பள்ளிக் குழுவின் தீர்மானத்தின்படி. 'மொத்தத் தீய நடத்தைக்காக' Gross misconduct 11—1—1981 முற்பகல் முதல் தற்காலிக பணிநீக்கம் செய்துள்ளார்.

தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) சட்டம், 1973, விதி 22 ன் கீழ் விசாரணையின் நிமித்தம், ஆசிரியர் அல்லது ஆசிரியரல்லாத தனியார் பள்ளி பணியாளர் ஒருவரை இரண்டு மாத காலத்திற்' மிகாமல் தற்காலிக பணிநீக்கம் செய்யும் அதிகாரம் பள்ளிக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. விசாரணை குறித்த காலத்தில் முடியவில்லை என்றால் உரிய அதிகாரியிடம் மேலும் இரண்டு மாதத்திற்கு நீட்டிப்பு பெறலாம். அந்த ஆசிரியர்க்கு உரிய பணிக்கால ஊதியம் மற்றும் பிழைப்பு ஊதியத்தையும் வழங்கப்பட்டுள்ளது.

பள்ளி நிர்வாகம் தற்காலிக பணிநீக்கம் செய்த செயலை எதிர்த்து 29—1—1981 பிற்பகல் 3 மணி அளவில் சென்னை பட்டதாரி ஆசிரியர் சங்கத்தினர் தி. நகர் மேல்நிலைப் பள்ளி அருகில் கிளர்ச்சி செய்து ஊர்வலமும் நடத்தினர். அதில் வன்முறை சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. மற்றும் அந்த நிகழ்ச்சிகளில் பெற்றோர்களோ மாணவர்களோ ஈடுபடவோ அல்லது பாதிக்கப்படவோ இல்லை. பள்ளி உள்ள பிராந்தியத்தில் பதட்டநிலை எதும் இல்லை.

---

* Circulated to all M.L.Cs. on 6th March 1981.



[324 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

சென்னை கடற்கரைச்சாலையில் உள்ள வென்லக் பூங்கா பொதுப்பணித் துறையினைச் சார்ந்தது. இதை தமிழ்நாடு பாரத சாரண சாரணிய இயக் கத்திற்கு வாடகையின்றி 1925 ம் ஆண்டு முதல் பொதுப்பணித்துறை குத்த கைக்கு விட்டிருந்தது. பொது (தகவல் மற்றும் மக்கள் தொடர்பு) துறை, நிதி அமைச்சரின் ஆணைக்கேற்ப மேற்படி இடத்தில் பெரியார் மாநாட்டுக் கூடம் அமைப்பதற்கு உத்தேசித்துள்ளதாகவும் அதற்கான ஏற்பாடுகளை மேற் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தது. மேற்படி மனையில் பெரியார் மாநாட்டுக் கூடம் கட்டினால் சாரண இயக்கத்தின் முன்னேற்றத்தில் தடை ஏற்படும் என்று கருதி இம்முயற்சியை கைவிட்டு மாநாட்டுக்கூடத்தை கீழ்க்கண்ட இடங் களில் ஏதாவது ஒன்றில் அமைக்குமாறு இத்துறை பொது (தகவல் மற்றும் மக்கள் தொடர்பு) துறையினரை கேட்டுக் கொண்டுள்ளது.

1. அண்ணா சதுக்கத்தின் வடபுறமிருக்கும் அண்ணா படகு மன்றத் திற்கும், சுராங்கணி சிற்றுண்டி கட்டிடத்திற்குமிடையில் உள்ள 3 ஏக்கர் நிலப் பரப்பு.

2. ராணி மேரி கல்லூரியின் பழைய விடுதிக்கட்டிடத்தின் வடபுறமிருக் கும் 3 ஏக்கர் மனை.

3. வள்ளுவர் கோட்டத்தினருகில் உள்ள பெரிய இடம். பெரியார் மாநாட்டுக்கூடத்தை வேறு சில இடங்களில் அமைக்கலாமா என யோசித்து வருவதால் வென்லக் பூங்காவில் இயங்கிவரும் சாரண இயக்கத்தினர் அதிருப்தி ஏதும் கொள்ளத் தேவையில்லை.

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

திங்கட்கிழமை, 1981 மார்ச் 9.

மாசி 26, ரௌத்திரி 2012—திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Teachers of Tiruppuvanam Panchayat Union Schools*

*126 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Finance be pleased to state :

(a) whether it is a fact that House Rent Allowance and City Compensatory Allowance sanctioned to the teachers of eleven schools in Tiruppuvanam Panchayat Union in Ramanathapuram District, from 2nd October 1970 to 31st March 1976 had been stopped at present; and

(b) if so, the action taken on the representation made by the teachers of the said schools, which are situated within 16 K.M. from Madurai City?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் மாவட்டம் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 11 பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 2—10—1970 முதல் 31—3—1976 வரை வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி வழங்குவது குறித்த கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. பா. ரா. தாமஸ் : ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த வீட்டு வாடகைப் படியும், நகர ஈட்டுப் படியும் இப்போது நிறுத்தப்பட்டுள்ளதென்பது குறித்துத் தான் கேள்வி இருக்கிறது. இது பல ஆண்டுகளாகத் தேக்க நிலையில் உள்ளதால், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு உடனடியாக வழங்க மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் ஆணையிடுவார்களா ?

[1981 மார்ச் 9

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சென்னை நகர எல்லையிலிருந்து 32 கிலோ மீட்டருக்கு உள்ளடங்கிய பகுதிகளில் உள்ள அலுவலகங்களில் வேலை பார்ப்பவர்களுக்கும், மதுரை போன்ற நகரங்களில் எல்லைகளிலிருந்து 16 கிலோமீட்டருக்கு உள்ளடங்கிய பகுதிகளில் உள்ள அலுவலகங்களில் வேலை பார்ப்பவர்களுக்கும் வழங்குகின்ற அளவிற்கு ஆணையிட்டிருக்கிறோம். ஆனால் அந்தப் பட்டியலைத் தயாரிப்பதில் பல்வேறு குழப்பங்கள் ஏற்படுகின்றன. 16 கிலோ மீட்டருக்குள்ளாகவா அல்லது அதற்கு வெளியேவா என்பது குறித்து மறுபடியும் தெளிவுபடுத்தும்படி கேட்டிருக்கிறோம். 16 கிலோ மீட்டருக்குள் அடங்கிய பகுதி என்று சொல்லிவிட்டால், நகர ஈட்டுப் படி, வீட்டு வாடகைப் படி தருவதில் எந்தக் கஷ்டமும் இராது. அந்தப் பட்டியல் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்குப் பிறகு 2—10—1970-லிருந்து பெற உரிமை பெற்றவர்களாகிறார்கள். அவர்கள் எந்தெந்த ஆண்டு பெறவில்லையோ அந்த ஆண்டுகளுக்குப் பெறுவதற்கு, வாய்ப்புகள் ஏற்படும். எல்லாவற்றுக்கும் அந்தப் பட்டியலைத்தான் எதிர்பார்க்கிறோம்.

**திரு. பா. ரா. தாமஸ் :** 2—10—1970-லிருந்து திட்டவட்டமாக வழங்குவதாக, பரிந்துரை வந்தால் செய்யலாம் என்று சொன்னார்கள். எல்லா மாவட்டங்களிலும் மாவட்டத் தலைநகரங்களுக்கு 16 கிலோ மீட்டருக்குள் அடங்கிய பகுதிகளுக்கு வழங்க வேண்டுமென்ற கருத்து வந்தபோது, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் குறிப்பிட்ட காலத்திற்குள் பட்டியலைப் பெற்று, பரிசீலனை செய்து, ஆணை பிறப்பித்தால் நல்லது. அந்த வகையிலே மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து விரிவான அறிக்கை பெற்று, விரைவில் ஆணை பிறப்பிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது போன்று சில குழப்பங்கள் நீங்க வேண்டுமென்று, தெளிவான அறிக்கை கேட்டிருக்கிறோம். நாம் கொள்கை ரீதியாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய பட்டியல் திட்டவட்டமாக வந்தால், நடவடிக்கை எடுப்பதில் அரசுக்குச் சிரமம் ஏற்படாது. உடனடியாகப் பட்டியலை அனுப்பும்படி கேட்டிருக்கிறோம். அது வந்தவுடன் கோரிக்கை நிறைவேற்றப்படும்.



1981 மார்ச் 9]

## அயல் நாட்டு மீன்பிடிக் கப்பல்கள்.

* 127 வினா—**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1980 செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில், சீன மீன்பிடிக் கப்பல்கள் தூத்துக்குடி கடற்கரையில் காணப்பட்டது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அது பற்றி அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) 1979-ஆம் ஆண்டிலும், 1980-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் தொடர்ந்தும் அயல் நாட்டு மீன்பிடிக் கப்பல்கள் குறிப்பாக தைவான் நாட்டு பெரிய மீன்பிடிப் படகுகள் தூத்துக்குடி கடலோரப் பகுதியிலும் தமிழ் நாட்டின் இதர கடலோரப் பகுதிகளிலும் ஊடுருவி மீன்பிடித்து வந்தது. அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

(இ) தகவல் கிடைத்ததும், காவல் துறையினரின் எல்லைக்குட்பட்ட கடல் பகுதிக்குள் ஊடுருவும் அயல் நாட்டு மீன்பிடிக் கப்பல்களை மீன்துறை மற்றும் தனியார் விசைப் படகுகளைக்கொண்டு விழிப்புடன் கண்காணித்து, அவைகளைத் தடுப்பதற்கு அறிவுறுத்தப்பட்டது. அக் கப்பல்கள் பெரும் பாலும் காவல் துறையினரின் எல்லைக்கு அப்பால் மீன்பிடிக்கின்றன. அவைகளைத் தடுத்து அப்பகுதிகளை ரோந்து செய்யும்படி கிழக்கு மண்டல கடலோரப் பாதுகாப்பு படையும் இந்திய கப்பற்படைப் பிரிவும் அவ்வப்போது கேட்டுக்கொள்ளப்பட்டது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 1979-லிருந்து இப்படி அடிக்கடி தைவான் நாட்டுக் கப்பல்களும், தேசிய சீனக் கப்பல்களும் இங்கு வந்து மீன் பிடிப்பதால், நம்முடைய நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய முக்கிய உணவுப் பொருளான மீன் கிடைக்காமல் போகிறது. மேலும் அதை நம்பி வாழும் மீனவர்கள் குடும்பங்கள் வறுமையால் வாடும் நிலைமை ஏற்படுகிறது. முன்பு கொச்சியில் உள்ள இந்தியக் கடற்படையினர் இரண்டு தேசிய சீனக் கப்பல்களைப் பிடித்து, பிறகு இந்தியத் துணைக்கண்ட வெளி உறவு அமைச்சரோடு தொடர்புகொண்டு, அவர்கள் மூலம் பேச்சுவார்த்தை நடத்தி, அந்தக் கப்பல்கள் திருப்பிக் கொடுக்கப்பட்டன. அதற்குப் பிறகு இத்தகைய சம்பவங்கள் நடைபெறுகின்றன. எனவே மத்திய அரசோடு தமிழக அரசு தொடர்பு கொண்டு, இந்தியக் கப்பற்படைப் பிரிவை அங்கே வைப்பதற்கும், இந்த நாடுகளோடு தொடர்பு கொள்ள மத்திய அரசின் வெளி நாட்டு விவகார அமைச்சரோடு தொடர்பு கொண்டு என்னென்ன நடவடிக்கைகளை எடுப்பதென்று முடிவு செய்து, அதை இந்த அவைக்கு அறிவிப்பார்களா ?

[1981 மார்ச் 9]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அயல் நாட்டுக் கப்பல்கள், மீன்பிடிக் கப்பல்கள், குறிப்பாகத் தைவான் நாட்டுக் கப்பல்கள் அப்படி வந்து, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது போன்ற தொல்லைகளைக் கொடுக்கின்றன. நம்முடைய காவல் துறையினரை வைத்து மட்டும் நடவடிக்கை எடுக்க இயலாத நிலையில் நாம் இருக்கிறோம். நம்முடைய செயலுக்கு அப்பாற்பட்டு வரும்போது, கிழை மண்டலப் பாதுகாப்பு கடற் படைப் பிரிவின் கமேண்டருக்குத் தெரிவித்து, அவருடைய உதவியோடு காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த வகையில் இரண்டு தைவான் நாட்டுக் கப்பல்கள் பிடிக்கப்பட்டு, பின்னர் இந்திய அரசின் யோசனையில் அந்தக் கப்பல்கள் விடுவிக்கப்பட்டன. அந்த மீன்களைக் கைப்பற்றி, நாம் ஏலத்தில் விட்டோம். அவர்கள், ரோந்துப் படகுகளுக்குப் பற்றாக்குறை இருப்பதால், உதவி செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுவது போன்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். அடிக்கடி இப்படிப்பட்ட தொல்லைகள் ஏற்படுவதாலும், இதனால் மீனவர்கள் அவதிக்கும், தொல்லைகளுக்கும் ஆட்படுவதன் காரணமாக அவர்களுக்கு இழப்பு ஏற்படுவதாலும், நிரந்தரமாக அந்தப் பகுதியில் ரோந்து செய்ய கப்பற்படைப் பிரிவை ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசிடம் வற்புறுத்தியிருக்கிறோம். மத்திய அரசு, அதைப் பரிசீலனை செய்து, அதை நிறைவேற்றுவதற்கான வழிகளைக் காணுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நிரந்தரப் படை இல்லாமல், அவ்வப்போது நாம் அறிந்து, அதற்குப் பிறகு அவர்களுக்கு அறிவித்து, அவர்கள் வருவதற்குள்ளாக, மற்றைய நாட்டுக் கப்பல்கள் தங்கள் பணியினைச் செய்துகொண்டு போய் விடுகின்றன. அதற்காக ஒரு சட்டம் கொண்டுவர மத்திய அரசு முயற்சி செய்கிறது. அயல் நாட்டுக் கப்பல்களைத் தடுக்கும் சட்டத்தை மத்திய அரசின் வேளாண்மை அமைச்சகம் கொண்டு வரும் சிரிய முயற்சியில் இருக்கிறது. இது குறித்து மேலும் மேலும் வற்புறுத்த இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** இவர்கள் மீன் பிடிக்க வருகிறார்கள், நாளா வட்டத்தில் உளவுத் துறையிலும் ஈடுபட்டு, நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து வரும் நிலையை உருவாக்குவார்கள். வாணிபத்திற்காக வந்தவர்கள், இந்த நாட்டையே ஆண்டிருக்கிறார்கள். அப்படி மீன் பிடிக்க வருகிறவர்களுக்கு நாட்டை ஆளும் ஆசை வந்தால், ஐயப்படுவதற்கில்லை. எனவே பாதுகாப்பு அமைச்சரோடு மாநில அரசு பேச்சுவார்த்தை நடத்தி . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் அவ்வளவு தூரம் போக வேண்டுமா?



1981 மார்ச் 9]

**திரு. ம. சங்கரலிங்கம்:** நம்முடைய பாதுகாப்புத் துறையோடு தொடர்பு கொண்டு, இதற்குத் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வழி வகுக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பாதுகாப்புப் படையினருடைய உதவியின் அடிப்படையிலேதான் இந்தப் பணிகளை நாம் நிறைவேற்ற வேண்டும். அயல்நாட்டுக் கப்பல்கள் ஊடுருவுவதைத் தடுக்க கப்பற்படையினால்தான் முடியும். எனவே இது குறித்து கிழை மண்டலக் கடலோரக் கப்பற்படைக் கமேண்டருக்கு எழுதியிருக்கிறோம். அதைப்பற்றி அவர்கள் பரிசீலிக்கிறார்கள்.

**திரு. சி. இராமலிங்கம்:** கேரளாவிலே பிஷரீஸ் கார்ப்பரேஷன் அமைத்து, அதன் மூலமாகப் படகுகளை வாங்கி மீனவர்களுக்கு அளிக்கிறார்கள். அது போன்று தமிழகத்தில் இருக்கிறதா? அப்படி இருந்தால் எத்தனை விசைப் படகுகளை வாங்கி மீனவர்களுக்கு அளித்திருக்கிறார்கள்? எங்கெங்கு மீன் பிடிக்கிறார்கள்?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மூலக் கேள்விக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மூலக் கேள்வி பாதுகாப்புப் படை பற்றியது. மீன், படகு என்று சொல்லும்போது அது சம்பந்தமாக எல்லாவற்றையும் கேட்டால் பதில் சொல்ல முடியாது. தனிக் கேள்வி கேட்டால், விவரங்கள் அளிக்க முடியும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மீன் பிடிக்க வந்தார்களோ, ஆள் பிடிக்க வந்தார்களோ என்ற சந்தேகம் வந்தாலும், யுவான்சுவாங், பாஹியான் போன்ற அறிஞர்கள் யாராவது அந்தக் கப்பல்களில் வந்தார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அறிஞர்கள் வந்தால் நமக்குச் சொல்லிவிட்டுத்தான் வருவார்கள். அவர்கள் மீன்பிடி படகுகளை வைத்துக்கொண்டு ஒருகாலும் வரமாட்டார்கள்.

## *Converts to Christianity.*

*128. *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Finance be pleased to state:

(*a*) whether any representations have been received from Christian Organisations, requesting that educational and other concessions now being given only to the members of the backward

classes who profess the Hindu religion, should be extended to the members of the same classes who profess Christian religion also ; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) பின்தங்கிய வகுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சலுகைகளை மதம் மாறிய கிருத்துவர்களுக்கும் அளிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் தனிப்பட்ட நபர்களிடமிருந்தும் பல்வேறு கிருத்துவ சங்கங்களிடமிருந்தும் வந்துள்ளன.

(இ) பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் கண்டுள்ள சாதி/இனத்தவர்களின் கல்வி சமூக மற்றும் இதர நிலைகளை புள்ளி விவரங்களுடன் ஆய்ந்தும் பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென கோரியுள்ள சாதி/இனத்தவர்களின் கல்வி, சமூக மற்றும் இதர நிலைகளை புள்ளி விவரங்களுடன் ஆய்ந்தும் அரசுக்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்குமாறு பிற்பட்டோர் நலத்துறை இயக்குநரை தனி அலுவலராகக் கொண்ட ஒரு குழுவை அரசு அமைத்துள்ளது. இக்குழு இதுகாறும் தனது பணியினைத் தொடங்கவில்லை. மேற்கண்ட மதம் மாறிய கிருத்துவர்களிடமிருந்து வந்த மனுக்கள் தனி அலுவலருக்கு அனுப்பப்பட்டுள்ளன. தனி அலுவலரின் அறிக்கை கிடைக்கப் பெற்றபின் இது குறித்து தக்கமுடிவு எடுக்கப்படும்.

திரு. பா. ரா. தாமஸ் : ஒருவர் கிருத்துவச் சமயத்திலிருந்து இந்து சமயத்திற்குத் திரும்பினால், அவர் அனைத்துச் சலுகைகளையும் பெறக்கூடிய வாய்ப்பு இன்று இருக்கிறது. இந்த அடிப்படையிலே இது ஒரு பாரபட்சமென்ற முறையிலே அணுகி, நம்முடைய அரசு இதில் நல்லதொரு பரிகாரம் காண முன்வருமா ?

(முற்பகல் 10-40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஏற்கெனவே ஆய்வு நடத்திய வகையில் ஓரளவுக்குப் பிற்பட்டோர் பட்டியலில் அவர்களைச் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தபோது, அவர்களுடைய சமூகம் மற்றும் கல்வி நிலையைப்பற்றி கமிஷனர் ஆஃப் ஸ்டேடிஸ்டிக்ஸ் மற்றும் டைாக்டர் ஆஃப் எவாலுவேஷன் அண்ட் அப்ளைட் ரிசர்ச் உதவியுடன் ஆய்வு நடத்தி அறிக்கை தருமாறு கேட்கப்பட்டது. அப்படி மாற்ற வேண்டுமென்று பார்க்கும்போது, கிறிஸ்தவர்கள் என்று சொன்னால் மீனவ கிறிஸ்தவர்கள், ஆதி திராவிட கிறிஸ்தவர்கள், இந்து கிறிஸ்தவர்கள் என்று மூன்று பிரிவினர் இருக்கிறார்கள் என்றும், ஆதி திராவிட கிறிஸ்தவர்களுக்கு ஆதி திராவிடர்களுக்குரிய



சலுகையை வழங்கலாம் என்றும், மீனவ கிறிஸ்தவர்களுக்கு பிற்பட்டோருக்குரிய சலுகையை வழங்கலாம் என்றும், இந்து கிறிஸ்தவர்களை மேற்கண்ட இரு பிரிவினரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நல்ல நிலையில் இருக்கிறார்கள் என்றும் அறிக்கை தரப்பட்டது. மீனவர்களிலேயே ஆறு பிரிவினர்களாக இருப்பவர்களையும் பிற்பட்டவர்களாக ஆக்கலாம் என்று கருதி, அவர்களுக்கும் பிற்பட்டோருக்குரிய சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. பறவர், மூத்தவர், பர்வதராஜு குலத்தினர், பட்டணவர், செம்படவர் மற்றும் மீனவர் ஆகிய ஆறு வகுப்புகளைச் சேர்ந்தவர்களும் பிற்பட்டவர்களுடைய பட்டியலில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு பிற்பட்டோருக்குரிய சலுகைகள் வழங்கப்படுகின்றன. இன்னும் வேறு சமூகங்களுக்கும் இதுபோல் சலுகை வழங்க வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. அவர்களுடைய சமூக நிலை, பொருளாதார நிலை இவைகளையெல்லாம் ஆராய வேண்டியிருக்கிறது. இது பற்றி இப்போது புள்ளிவிவரம் எடுக்க தனி அலுவலருக்குச் சொல்லியிருக்கிறோம். முழு விவரம் வந்த பிறகு, பிற்பட்டோர் நல இயக்குநர் அவர்கள் இவர்களுடைய கோரிக்கையை நீடு ஆராய்ந்து ஒரு அறிக்கை தரும்படி கேட்டிருக்கிறோம். அந்த அறிக்கை வந்த பிறகு அரசு இதுபற்றி ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

**ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்கள் நியமனம்.**

* 129 வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர் நியமனம் செய்துள்ள நேர்வுகளில் பணிமூப்புடையோர், பணிக்காலம் குறைந்தவர்களைவிட குறைவாக ஊதியம் பெறும் நிலை உருவாகியிருப்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், இந்நிலை, அரசு ஊழியர்களின் அடிப்படை விதி 22-பி-க்கு முரணானது என்பதை அரசு அறியுமா ?

(உ) ஆம் எனில், இந்நிலையைத் தவிர்க்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) & (உ) பணிமூப்பில் முதியவர்கள் தலைமை ஆசிரியராக பதவி வகிப்பதற்கு பதிலாக, பணிமூப்பில் இளையவர்கள் தலைமையாசிரியராக நியமனம் செய்யப்பட்டிருந்ததால், இவர்கள் ஆசிரியர்களாக பதவி இறக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்த சூழ்நிலையில் பதவி இறக்கம் செய்யப்பட்டவர்களுக்கு ஊதிய இழப்பு இருக்கக்கூடாது என்ற அடிப்படை நோக்கத்தில்

இவர்கள் தலைமை ஆசிரியர் பதவி வகித்தபோது பெற்ற ஊதியத்தைத் தொடர்ந்து பெற ஆணையிடப்பட்டுள்ளது. இந்த ஆணை, பன்முறை வெளியிடப்பட்ட ஆணைகள் மற்றும் உயர்நீதி மன்றம் வழங்கிய கருத்துரைகளின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளது. இது ஒரு தனிப்பட்ட நிலைமையாகும். இவர்களுக்கு இணையாக பணிமூப்பின் காரணமாக தற்போது தலைமையாசிரியராகப் பதவி பெற்றவர்களுடைய ஊதியத்தை உயர்த்த இயலாது.

திரு. ம. சங்கரலிங்கம்: 22-பி என்பது அடிப்படை விதி. அடிப்படை உரிமையை பாதுகாக்கிற ஒரு விதி. பணிமூப்புடையோர், பணிக்காலம் குறைந்தவர்களைவிடக் குறைவாக ஊதியம் பெறக்கூடாது. எந்தச் சூழ்நிலையில் அமைந்தாலும்கூட, பணிமூப்பில் உள்ளவர்களைத்தான் தலைமையாசிரியர்களாக நியமித்திருக்க வேண்டும். ஆனால் இங்கே பணிக்காலம் குறைந்தவர்களை நியமித்திருக்கிறார்கள். மூப்பில் உள்ளவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று உத்தரவு பெற்றாலும்கூட, பணிமூப்பில் இளையவர்களைத் தலைமையாசிரியர்களாக நியமித்தது அவர்களுடைய தவறல்ல. அது நிர்வாகத்திலிருப்பவர்களால் ஏற்பட்ட தவறு. எனவே 22-பி சட்டத்தின் அடிப்படையில் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுமா? அப்படிக் கொடுக்கப்பட்டால், அரசுக்கு எவ்வளவு இழப்பு ஏற்படும்? ஏன் அரசு அதைத் தர மறுக்கிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அடிப்படை விதிகள் எப்.ஆர்: 22-பி விதியை பின்பற்றும்போது ஏற்படும் ஊதிய மாறுபாட்டைத் தவிர்க்க பணிமூப்பு அடிப்படையில் ஊதியத்தை மாற்றியமைக்க முடியாது என்று தான் சொல்லப்படுகிறது. 22-பி விதியின் காரணமாக மட்டும் ஊதிய வேறுபாடுகள் எழலாம். இதுபற்றி 22-பி மூன்றாவது உட்பிரிவில் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம்: இதனால் எவ்வளவு நிதி இழப்பு ஏற்படும் என்பதையும் காரணம் என்ன என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். நிதி அடிப்படையைப் பொறுத்தவரையில், ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட வரையில் தவறு இல்லாமல் அதிகாரிகள் அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கும்படியான நிலை ஏற்பட்டு, அதிகாரிகளுடைய தவறு இதில் இருக்குமானால், அரசு இதை மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: விதி 22-பி-யின் 3-வது பிரிவில் தெளிவாக இதுபற்றி விளக்கப்பட்டிருக்கிறது. கொடுக்க வேண்டுமென்ற கண்டிப்பு இல்லை. எவ்வளவு இழப்பு ஏற்படும் என்று சொல்வதற்கு இங்கே இடமும் இல்லை. அரசு ஆணையை உயர் நீதிமன்றம் 2—11—1979-லேயே அங்கீகரித்துள்ளது. அதற்குப் பின்பு இப்போது தொடுக்கப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது.



திரு. பா. ரா. தாமஸ்: எந்த நிலையிலும் ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் ஊதிய இழப்பு ஏற்படக் கூடாது என்று தான் விதியில் இருக்கிறது. அந்த அடிப்படையில் இவர்களுக்குப் பாதுகாப்பு தரப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: எந்த நிலையிலும் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் குறிப்பாக ஊதிய இழப்பு ஏற்படக்கூடாது என்பதுதான் அரசுடைய நோக்கமும். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட விதியின்படிதான் இப்படிப்பட்ட மாற்றங்கள் செய்யப்பட்டன. அதை எதிர்த்து இப்போது உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் வழக்குகள் இருப்பதால், இவைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

## *Provident Fund Accounts of Teachers of Panchayat Union Schools*

*130 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) whether it is a fact that the provident fund accounts of the teachers working in Dindigul, Athoor and Thoppampatti Panchayat Union Schools, are not being maintained properly, resulting in inordinate delay in the disposal of Pension papers; and

(*b*) if so, the action proposed to be taken thereon?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (இ) குறிப்பிட்டுள்ள ஒன்றியங்களில் வைப்பு நிதி கணக்குகள் சரிவர பராமரிக்கப்பட்டு, 1979-80 ஆண்டிற்கான கணக்குத்தாள்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்றும் ஓய்வூதியம் பற்றிய கருத்துரு ஒன்றும் நிலுவையில் இல்லை என்றும் அறியப்படுகிறது.

திரு. பா. ரா. தாமஸ்: பொதுவாக ஊராட்சி ஒன்றியங்களிலும் நகராட்சி நிர்வாகங்களிலும் இவ்வாறு ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டிய வருங்கால வைப்பு நிதிக் கணக்குகள் சரிவர வைக்கப்படவில்லை. இதை எல்லோரும் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்போது குறையில்லாமல் இருக்கிறது என்று கூறுவதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு வருங்கால வைப்பு நிதியுடன் கூட்டப்பட வேண்டிய வட்டியையும் சேர்த்து ஆசிரியர்களுக்குக் காட்டும் வகையில் அறிவுறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 2—3—1981 அன்று வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்ட வினா எண் 103 ஒத்திப்போடப்படுகிறது.

## உடுக்குறியிடாத வினாக்கள்.

### தென்னாற்காடு மாவட்ட அரசினர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்ற புறநோயாளிகள்.

9. வினா—திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள வட்ட அரசினர் மருத்துவ மனைகளில், 1978 சனவரி முதல் 1979 மார்ச் முடிய சிகிச்சை பெற்றுக்கொண்ட புறநோயாளிகளின் எண்ணிக்கை, மாதந்தோறும் எவ்வளவு?

ப.—தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள 10 வட்ட அரசினர் மருத்துவ மனைகளில் 1978 சனவரி முதல் 1979 மார்ச் முடிய சிகிச்சை பெற்றுக்கொண்ட புறநோயாளிகளின் எண்ணிக்கை மாதந்தோறும் கீழ்க்கண்டவாறு:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சனவரி | 1978 | 191051 | செப்டம்பர் | 1978 | 207680 |
| பிப்ரவரி | 1978 | 194895 | அக்டோபர் | 1978 | 212730 |
| மார்ச் | 1978 | 196265 | நவம்பர் | 1978 | 250804 |
| ஏப்ரல் | 1978 | 195208 | டிசம்பர் | 1978 | 208680 |
| மே | 1978 | 209860 | சனவரி | 1979 | 221021 |
| ஜூன் | 1978 | 206430 | பிப்ரவரி | 1979 | 210990 |
| ஜூலை | 1978 | 208636 | மார்ச் | 1979 | 230958 |
| ஆகஸ்ட் | 1978 | 213596 | | | |

### உப்பு உற்பத்தி தொழிலாளர்கள்.

10. வினா—திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

தமிழகத்தில் எத்தனை ஆயிரம் தொழிலாளர்கள் உப்பு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்?



ப.—தமிழகத்தில் ஒவ்வொரு மாதமும் சுமார் 13,233 தொழிலாளர்கள் உப்பு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அதன் விவரம் பின்வருமாறு:

ஒவ்வொரு மாதமும் சராசரி சேர்க்கப்பட்ட தொழிலாளர்கள்.

| | 1980 ஆகஸ்டு வரை உரிமம் வழங்கப்பட்ட உப்பளங்களில் | 1980 டிசம்பர் வரை உரிமம் வழங்கப்படாத உப்பளங்களில் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| கன்னியாகுமரி | 378 | — |
| தென்னாற்காடு | 341 | 3 |
| இராமநாதபுரம் | 1145 | 133 |
| திருநெல்வேலி | 4745 | 1870 |
| தஞ்சாவூர் | 2408 | 600 |
| செங்கல்பட்டு | 1482 | 50 |
| புதுக்கோட்டை | 53 | 25 |
| | 10552 | 2681 |

### கலப்புத் திருமணத் தம்பதிகள்.

11. வினா—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1—1—1967 முதல் 15—6—1980 வரை கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களில் தங்கப்பதக்கம் வழங்கப்பெற்றவர்கள் மாவட்டவாரியாக எத்தனை பேர்?

ப.—கலப்புத் திருமணங்கள் செய்துகொண்டுள்ள தம்பதிகளுக்கு தங்கப் பதக்கங்கள் வழங்கும் திட்டம் 1968-69-ல் கொண்டுவரப்பட்டது. எனவே, இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 21—7—1980 வரை கலப்புத் திருமணம்

செய்து கொண்டவர்களில் 843 பேருக்கு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. இதன் விபரம் மாவட்டவாரியாக பின்வருமாறு :

எண்ணிக்கை மாவட்ட வாரியாக.

| தொடர் எண். | மாவட்டத்தின் பெயர். | தங்கப் பதக்கம் பெற்றோர் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | சென்னை .. .. | 226 |
| 2. | செங்கல்பட்டு .. .. | 71 |
| 3. | வட ஆற்காடு .. .. | 62 |
| 4. | தென் ஆற்காடு .. .. | 34 |
| 5. | புதுக்கோட்டை .. .. | 9 |
| 6. | தஞ்சாவூர் .. .. | 93 |
| 7. | திருச்சிராப்பள்ளி .. .. | 39 |
| 8. | மதுரை .. .. | 74 |
| 9. | இராமநாதபுரம் .. .. | 53 |
| 10. | திருநெல்வேலி .. .. | 29 |
| 11. | கன்னியாகுமரி .. .. | 41 |
| 12. | கோயம்புத்தூர் .. .. | 45 |
| 13. | சேலம் .. .. | 45 |
| 14 | தர்மபுரி .. .. | 20 |
| 15. | நீலகிரி .. .. | 2 |
| 16. | பெரியார் .. .. | — |
| | மொத்தம் .. | 843 |

*Artificial Insemination Centres*

12. *Q.*—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state :

(*a*) the number of artificial insemination centres in the State ; and

(*b*) the number of cattle treated in each of these centres from 1977 to 1980 ?

A. A statement @ is placed on the table of the House.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

@ 477-478 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(1) சேலம் மாவட்டம் குமாரபாளையத்திலுள்ள எஸ். எஸ். எம். புராசசிங் யூனிட் நிறுவனத்தில் பணிபுரிந்த தொழிலாளர்கள் உண்ணாநோன்பு இருப்பது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. ஆறுமுகம் தொழிலாளர்கள் உண்ணாநோன்பு குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். இது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதை மட்டும் சுருக்கமாகச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டம குமாரபாளையத்தில் எஸ். எஸ். எம். புராசசிங் யூனிட் என்ற தொழிற்சாலையிலே 1,200-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பல்னெடுங் காலமாகப் பணி புரிந்தும் அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்காமல் வைத்திருக்கிறார்கள். இது குறித்து தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்து வலியுறுத்தக்கூடிய வகையில் 3—2—1981 முதல் உண்ணாநோன்பு இருப்பதற்காக முதல் நாள் அன்றே பந்தல் போட்டார்கள். ஆனால் அந்த நிர்வாகத்தினர் ஆட்களை அனுப்பி அவர்கள் அமைத்த அந்தப் பந்தலுக்குத் தீ வைத்தார்கள். அதற்குப் பிறகு, தொடர்ந்து உண்ணாநோன்பு மேற்கொள்ளப்பட்ட நேரத்தில் 10—2—1981 அன்று சங்கத் தலைவர் திரு. பழனிசாமி என்பவரை திடீரென்று வேலையிலிருந்து நீக்கினார்கள். பிறகு 16—2—1981 அன்று இதுபற்றி சேலம் 'டெபுடி கமிஷனர் ஆப் லேபர்' அவர்கள் முன்னிலையில் நிர்வாகத்தினரும், தொழிலாளர்களும் பேச்சு வார்த்தை நடத்தினர். அதில் தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் ஏற்கப்பட்டன. அதற்குப் பின்னால் திடீரென்று 17—2—1981 அன்று 80 பேரை நிர்வாகம் சஸ்பெண்ட் செய்து வேலையிலிருந்து வெளியேற்றியது. 8 நாள் சம்பளத்தை எல்லாத் தொழிலாளர்களிடமிருந்தும் பிடித்தம் செய்தார்கள். 200-க்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலையில்லை என்று நோட்டீஸ் கொடுத்து வெளியே அனுப்பிவிட்டார்கள். அதற்குப் பின்னால் 6—3—1981 முதல் சட்ட பூர்வமான நோட்டீஸ் கொடுத்து இன்றைய தினம் தொழிலாளர்கள் போராடி வருகிறார்கள். ஆனால் தொழிலாளர்களுடைய நியாயமான கோரிக்கைகளை ஏற்று நிர்வாகம் பரிசீலிப்பதற்குப் பதிலாக நிர்வாகத்தினர் வெளி ஆட்களைக் கொண்டு வந்து, போலீஸ் துணை கொண்டு போராட்டத்தை முறியடிப்பதற்காக அச்சுறுத்தி வருகிறார்கள். அதே நேரத்தில் அந்தத் தொழிற்சாலையில் இருந்த கருப்புசாமி என்பவர், அந்தப் பகுதிக்கே வரக்கூடாது என்று நீதிமன்றத்திற்குச் சென்று இன்ஜங்ஷன்

போன்ற ஆர்டரை வாங்கி அவரைத் தடுத்து நிறுத்தி, தொழிலாளர்களுக்குத் தொல்லை கொடுத்து வருகிறார்கள். இதனால் தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டு, இன்றைய தினம் சூழ்நிலை மிகவும் மோசமாகி அந்தப் பகுதியில் பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தால், அந்தத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டிய அவசியம் இருப்ப தால், தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட, மிக முக்கியம் வாய்ந்த பிரச்சினை என்ற காரணத்தாலே, இந்த அவையினுடைய மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

* **மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் குமாரபாளையத்தில் பல்வேறு நிறுவனங்கள் பவர்லூம், எம்ப்ராய்டரி பிராசஸ்சிங் தொழிலில் ஈடுபட்டுள்ளன. அம்மாதிரி நிறுவனங்களில் பலவற்றிற்கும், சேலம் மாவட்ட திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், சேலம், வேலைநிறுத்த நோட்டீசுகள் அனுப்பியிருந்தது. மேற்கூறிய நிறுவனங்களில் எஸ்.எஸ்.எம். யூனிட் (குரூப்) எனக் கூறப்படும் பின்வரும் நிறுவனங்களுக்கும் வேலை நிறுத்த நோட்டீஸ் தொழிற் சங்கம் அனுப்பியது. வினா கேலண்டரிங் மில்ஸ், எஸ். எஸ். எம். பிராசஸ்சிங் மில்ஸ் எஸ் எஸ் எம் சைனிங் செண்டர் எஸ் எஸ் எம். பிரதர்ஸ் (பி) லிட், வினா டெக்ஸ்டைல்ஸ் (பி) லிட், புருஷோத்தம் இண்டஸ்ட்ரீஸ், லட்சுமி அம்மாள் இண்டஸ்ட்ரிஸ், வினா இண்டஸ்ட்ரிஸ் இந்தக் குரூப் யூனிட்டில் சுமார் 688 தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். சேலம் மாவட்ட திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் தனது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடில் 5—3—1981 முதல் வேலை நிறுத்தம் செய்வதாக அறிவித்திருந்தது. தொழிலாளர்களுடைய டைம் கார்டுகள் கொடுத்தல், ஊதிய உயர்வு, பஞ்சப்படி அதிகரிப்பு, ஹீட் அலவன்ஸ், இடைக்கால நிவாரணம், வேலை நிரந்தரம், சில தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்துவது, சீருடை, ஓய்வு விடுதி, வீட்டு வசதி, தொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்ட தண்டனைகளைத் திரும்பப் பெறுவது, பிடித்தம் செய்யப் பட்ட சம்பளப் பணத்தைத் திருப்பியளிப்பது போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.



இந்தத் தொழிற் தகராறு மீது சேலம் தொழிலாளர் துறைத் துணை ஆணையர் 6—2—1981 மற்றும் 19—2—1981 தேதிகளில் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இதற்கிடையில் 10—2—1981 முதல் எஸ்.எஸ்.எம். யூனிட்டில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் ஆரம்பித்தனர். 16—2—1981 அன்று நடந்த பேச்சு வார்த்தைகளில் சேலம் தொழிலாளர் துறைத் துணை ஆணையர் கொடுத்த அறிவுரைப்படி தொழிலாளர்கள் 17—2—1981 முதல் வேலைக்குத் திரும்பினர். இந்த வேலை நிறுத்தத்தைச் சட்ட விரோதமான தாகக் கருதிய நிர்வாகத்தினர் வேலை நிறுத்தம் செய்த ஒவ்வொரு தொழிலாளி யின் சம்பளத்திலும் 8 நாட்களுக்கு உண்டான சம்பளப் பணத்தைப் பிடித்தம் செய்வதாக அறிவித்துள்ளனர். 6—3—1981 முதல் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள 52 தொழிலாளர்களுக்கு வேலை கோரியும் ஊதிய உயர்வு கோரியும் 6—3—1981 முதல் வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. 584 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். 104 தொழிலாளர்கள் வேலைக்குச் செல்கின்றனர். சேலம் தொழிலாளர் அலுவலர் இது சார்பாக 9—3—1981 அன்று சமரசப் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். ஆகவே உரிய நடவடிக்கை எடுத்துள்ளதால் இதற்காக மேலவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டிய தேவையில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கருதி எனது அனுமதியை மறுக்கிறேன்.

## 3. அறிவிப்புகள்.

### (1) பேரவையிலிருந்து செய்திகள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தனிக் குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1981) ஆய்வு செய்வதற்காக 27 உறுப் பினர்கள் அடங்கிய (18 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், 9 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைப்பதற்கு 6—3—1981 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகலை அனுப்பி, மேற்படி கூட்டாய்வுக் குழுவில் பணியாற்று

மாறு கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படு கிறார்கள் என்ற தகவலை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரிட மிருந்து பெற்றுள்ளேன்.

1. திரு. ஜி. கிருஷ்ணராஜ்
2. திரு. கே. சௌந்தரராசன்
3. திரு. கோவைத் தம்பி
4. திரு. கருப்பசாமி பாண்டியன்
5. திரு. கே. குப்புசாமி
6. திரு. கே. எம். அப்துல் ரசாக்
7. திரு. பாபு கோவிந்தராஜன்
8. திரு. எம். சின்னசாமி
9. திரு. க. பாலசுப்பிரமணியன்
10. திரு. வி. பி. பாலசுப்ரமணியன்
11. திரு. எஸ். ரெத்தினராஜ்
12. திரு. என். வி. என். சோமு
13. திரு. வே. இராஜசேகரன்
14. திரு. டி. மணி
15. திரு. ஆர். தியாகராசன்
16. திரு. கே. தனக்கோடித் தேவர்
17. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்
18. டாக்டர் கே. சௌரிராஜன்

சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

1. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 23/1981).



2. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1981).

3. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1981).

4. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரி களை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1981).

5. 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 27/1981).

6. 1981 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981).

**(2) மேலவை உறுப்பினர் திரு. ஆர். டி. சீத்தாபதி சென்னை மத்திய சிறையில் வைக்கப்பட்டுள்ளது.**

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 7—3—1981 அன்று காவல் துறை ஆணையரிடமிருந்து கீழ்க்கண்ட கடிதம் வரப் பெற்றது.

"திரு. ஆர். டி. சீத்தாபதி எம். எல். சி. அவர்கள் பெருநகர் கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட் முன்பு 7—3—1981 அன்று ஆஜர் படுத்தப்பட்டார். மேற்படி மாஜிஸ்டிரேட் உறுப்பினரை 21—3—1981 வரை மேலும் காவலில் வைக்க ஆணை பிறப்பித்தார். அவ்வுறுப்பினர் 7—3—1981 ஆம் நாளன்று சென்னை மத்திய சிறையில் வைக்கப்பட்டார்".

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(2) திருச்சி சிறையில் அடைக்கப்பட்டுள்ள தி. மு. க. கைதிகளுக்குப் போதிய குடி தண்ணீர்—உணவு போன்றவை கிடைக்காமையால் எழுந் துள்ள நிலைமை குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கர லிங்கம் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றுக்கு முன்னறிவிப்புக் கொடுத் திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்று சுருக்க மாக விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** எரி சாராய பேர ஊழல் விசாரணைக் கமிஷன் நியமன ஆணையின் நகல் எரிப்புப் போராட்டத்தின் காரணமாக தமிழகத்தில் மார்ச் 1 ஆம் தேதி ஏறக்குறைய 10 ஆயிரம் பேர்கள் கைது செய்யப்பட்டு ஆங்காங்கு உள்ள சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில், திருச்சி சிறையில் மட்டும் சுமார் 2,000-க்கும் மேற்பட்டவர்கள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கு சரியான முறையில் அவர்கள் பராமரிக்கப்படவில்லை. உணவு சரியாக அவர்களுக்குக் கொடுக்கப்படாததால், பல்வேறு துன்பத்திற்கும் அவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை சட்டப் பேரவையிலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக்கூறி, திருச்சி சிறையிலே அவர்களுக்கு வழங்கக்கூடிய சோள உப்புமாவின் சாம்பிள் ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் காட்டி பிரச்சினைகளை எடுத்துச்சொன்ன பிறகும், இந்தப் பிரச்சினை இன்றுவரை தீர்ந்தபாடில்லை என்ற தகவல் இப்போது கிடைத்திருக்கிறது. திருச்சி மத்திய சிறை சுமார் 2,000 கைதிகள்தான் இருப்பதற்கு வசதியுடையதாக இருக்கிறது. இப்போது எரி சாராய பேர ஊழல் விசாரணைக் கமிஷன் நியமன ஆணையின் நகல் எரிப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு கைது செய்யப்பட்டு அந்தச் சிறையில் இருப்பவர்களையும், ஏற்கெனவே அந்தச் சிறையில் இருப்பவர்களையும் சேர்த்து ஏறக்குறைய 5,000க்கும் மேற்பட்டவர்கள் அந்தச் சிறையில் இருப்பதால் குடிதண்ணீர் கூட சரியாகக் கிடைக்காமல் அந்தச் சிறையிலே இருப்பவர்கள் கஷ்டப்படுகிறார்கள். இதுபற்றி சட்டமன்றப் பேரவையிலே கொள்ள போது, மாண்புமிகு ஜெயில் துறை அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்கப் போவதாக உறுதியளித்தார்கள். நகர் மன்றத்துக்குச் சொந்தமான வண்டிகளிலும், ஊர்திகளிலும் தண்ணீர் கொண்டு கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். இப்போது குடிப்பதற்கு மட்டும் தண்ணீர் கிடைக்கிறதே தவிர, குளிப்பதற்கும் மற்ற வசதிகளுக்கும் வேண்டிய தண்ணீர் இல்லாமல் அவர்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். சோள உப்புமா அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. தி.மு.க.-வின் சார்பில், பொருளாளர் திரு. சாதிக் அவர்களும், திரு. எல். கணேசன், எம்.பி. அவர்களும் போய்ப் பார்த்தார்கள். ஏற்கெனவே இருந்த நிலைமைகள்தான் இப்போது இருக்கின்றன. எப்படி அந்த உப்புமா பொட்டலம் வெளியே வந்தது என்ற ஆராய்ச்சிதான் இப்போது நடைபெறுகிறதே தவிர, அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தண்ணீர்ப் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக இப்போது இருக்கிறது. அங்கே ' போர் ' வெல்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவைகளுக்குக் கனெக்ஷன்



கொடுத்து, மோட்டார் பிட் செய்துவிட்டால் உடனடியாகத் தண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியும். இவைகளைச் செய்வதற்குரிய அரசாணை இல்லாததாலும் நிதி வசதி இல்லாததாலும் அதிகாரிகள் அதற்கான முயற்சிகளை எடுக்க இயலவில்லை. மேலும் சிறையிலே இடவசதி போதவில்லை. இப்போது வெயில் மிகவும் கடுமையாக இருக்கிறது. போதுமான அளவுக்கு கொட்டகைகளைப் போட வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் திரு. தாழை மு. கருணாநிதி அவர்கள் சிறையிலே சென்று இவைகளையெல்லாம் பார்த்தபோது, அவர் சிறை அதிகாரிகளால் மிகவும் கேவலமாக நடத்தப்பட்டிருக்கிறார். இது, திரு. மாயத்தேவர், எம்.பி. அவர்களால் பாராளுமன்றத்திலே எழுப்பப்பட்டிருக்கிறது. இந்த நிலைமை இப்படியே தொடர்ந்து நீடித்தால், திருச்சி மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சரும் இப்போது சட்டமன்ற உறுப்பினருமான திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நடக்கவிருக்கிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கும்போது திருச்சியிலே ஒரு பதட்ட நிலை ஜெயிலுக்கு உள்ளேயும், வெளியேயும் ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர முடிகிறது. அந்த நிலை ஏன் உருவானது என்பது பற்றியும், எப்படிப்பட்ட முறையில் அதற்குப் பரிகாரம் காண்பது என்பது பற்றியும் ஆராய உதவியாக இந்த அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க அனுமதியளிக்கக் கோருகிறேன்.

**(முற்பகல் 11-00)**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்ட மத்திய சிறைச்சாலையில் உள்ள சில நிலைமைகளை எடுத்துச் சொல்லி அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருப்பதால், அது குறித்து சிலவற்றைத் தெளிவுபடுத்துவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

1—3—1981 அன்று திருச்சி மத்திய சிறைச்சாலையில் தி.மு.க. போராட்ட வீரர்களான 143 பேர் அடைக்கப்பட்டார்கள். அதற்குப் பிறகு திடீரென்று சிறைக்குச் சென்றவர்களின் எண்ணிக்கை அதிகமாகிவிடவே, வழக்கமாக அங்கே அளிக்கப்பட்டு வரும் வசதிகள் அனைவருக்கும் உடனடியாகப் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால், சில

மணி நேரங்களுக்கு அங்கே இருந்தவர்களுக்குச் சில வசதிக் குறைவுகள் ஏற்பட்டனவே ஒழிய, அந்தச் சிறைச்சாலையில் இருந்தவர்களுக்கு வசதிகளை செய்து தரப்படவில்லை என்று சொல்லுவது முற்றிலும் ஆதாரமற்ற ஒன்றாகும்.

அதைப்போலவே திருச்சி மத்திய சிறைச்சாலையில் உள்ள நிலைமைகளைக் தண்ணீர் வசதியில்லாமல் இருக்கிறது என்ற பிரச்சினையை நேரடியாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும் என்னிடமும் மாண்புமிகு சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களும் மற்றும் பேராசிரியர் அவர்களும் சொன்னதன் அடிப்படையில் நான் உடனடியாக அதிகாரிகளோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு, அதற்குப் பிறகு அங்கே தண்ணீர் பிரச்சினையைத் தீர்த்து வைத்தோம். வேலூரில் உள்ள மத்திய சிறைச்சாலையில் போதிய அளவு தண்ணீர் கொண்டுவரும் லாரிகள் இல்லாத நிலையிருந்ததோடு, அங்கேயுள்ள நகராட்சி மன்றத்திலும் போதிய அளவுக்குத் தண்ணீர் கொண்டு வரும் லாரிகள் இல்லாத காரணத்தால் தனியார்களிடம் உள்ள அந்தகைய லாரிகளை வாடகைக்கு ஏற்பாடு செய்தாவது சிறைச்சாலைக்குத் தண்ணீர் கொண்டு செல்லப்பட வேண்டும் என்று உத்தரவிட்டு அதற்குப் பிறகு அங்கே தண்ணீர்ப் பிரச்சினை தீர்ந்து விட்டது என்பதை அறிந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் அதற்காகப் பேரவையில் நன்றிகூடத் தெரிவித்திருக்கிறார்கள்.

அதைப்போலவே திருச்சி மத்திய சிறைச்சாலையில் உள்ள நிலைமைகளைக் குறித்து முன்னாள் அமைச்சர் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தபோது அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால், அங்கே ஏற்பட்ட நிலைமை அல்லது பிரச்சினை வேறு. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது போதிய நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால், திருச்சி மத்திய சிறைச்சாலையில் தண்ணீர்ப் பிரச்சினை உருவாகியிருப்பதாகச் சொன்னார்கள். அதுவல்ல அங்கே பிரச்சினை. தண்ணீர்த் தேவையைப் பொறுத்த வரையில், அரசுத் தரப்பில் வெளியிலிருந்து தண்ணீர் கொண்டு வரப்பட்டு, அந்தப் பிரச்சினை அங்கே பூரணமாகத் தீர்வு செய்யப்பட்டு விட்டது. அதோடு கூடுதல் தண்ணீர் வசதி செய்து தர வேண்டும் என்ற விரிவான திட்டத்தைத் தயாரித்து, அது பல ஆண்டுகளாக, தி.மு.க. ஆட்சிக் காலத்தில்கூட நடைமுறைப்படுத்தப் படாமல் விட்டிருப்பதை மாற்றி, இப்போது அந்தத் திட்டத்தை நிறைவேற்ற



வேண்டும் என்று இந்த அரசு முடிவு செய்து, 7-வது நிதிக் குழுவின் மூலம் நிதி கோரிப் பெற்று, நடப்பு ஆண்டிலிருந்தே அந்தத் திட்டத்தைச் செயல் படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

திருச்சி மத்திய சிறையில் ஏற்பட்ட பிரச்சினையே வேறு. வழக்கம்போல அங்கே காலையில் சிறைக் கைதிகளுக்கு "சோளப் பிட்டு 'It is n (உப்புமா) தரப்பட்டது. இந்தச் சோளப் பிட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட பிறகு அவர்களுக்காக என்று கொடுக்கப் பட்டதல்ல.

**திரு. சோ. ஆறுமுகம் :** அது சோளப் பிட்டு அல்ல. சோளப் புட்டு.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தமிழில் சோளப் பிட்டு என்று தான் சொல்ல வேண்டும் என்று கருதுகிறேன். அது சோளப் புட்டு அல்ல. பிட்டு என்பதுதான் சரியான சொல். மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் இதற்குச் சரியான விளக்கம் தருவார்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சோளப் பிட்டு என்பதுதான் சரியானது. சோளப் புட்டு என்பது சரியல்ல.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** எனவே தி.மு.க. வினர் திருச்சி மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட பிறகுதான், அவர்களுக்காகப் புதிதாக இந்த அரசு சோளப் பிட்டு தர வேண்டும் என்று உத்தரவிட்டது போன்ற பிரமையை மக்கள் மத்தியில் எழுப்பிப் பிரச்சாரம் செய்யப்படுவது என்பது மிகவும் வேதனைக்குரியதாகும்.

சோளப் பிட்டு என்பது கலைஞர் அவர்களின் காலத்திலிருந்தே மத்திய சிறைச்சாலைகளில் வழங்கப்படுவதாகும். நான் சென்றமுறை மேலவையில் கூட இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். அதாவது, தற்போது வழங்கப்படும் சோளப் பிட்டுக்குப் பதில், அரிசிப் பிட்டு வழங்கப்பட வேண்டும் என்று முடிவு செய்து, அதற்குக் கூட நிதி ஒதுக்கீடு செய்து 7-வது நிதியாணைக் குழுவிடம் நிதிபெற்று அடுத்த மாதத்திலிருந்தே அதை நடைமுறைப்படுத்த இருக்கிறோம். திருச்சி மத்திய சிறையில் உள்ள தி.மு.க.-வினருக்கு மட்டும் இப்போது சோளப் பிட்டை மாற்றி அரிசிப் பிட்டாகப் போட முடியாது. காரணம் அங்கேயுள்ள மற்ற கான்விக்ட் கைதிகள், விசாரணைக் கைதிகள் (ரிமாண்டு பிரிசனர்ஸ்) அனைவருக்குமே அதைக் கொடுக்க வேண்டும். எனவே, திருச்சி

மத்திய சிறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கைதிகளாக அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக அவர்களுக்கு மட்டும் தனியாக இந்தச் சலுகையைத் தர வேண்டும் என்று நினைத்து சோளப் பிட்டிற்குப் பதில் அரிசிப் பிட்டு தர வேண்டும் என்று உத்தரவிடுவது என்பது முடியாத காரியம். அதோடு அது தர்மத்திற்கும் நியாயத்திற்கும் அப்பாற்பட்டது என்ற காரணத்தால், தற்போது அனைத்துக் கைதிகளுக்கும் உள்ள வசதிகளே, அவர்களுக்கும் செய்து தரப்படுகின்றன. சட்டப் பேரவையின் எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் பேசும்போது, " உப்புமா " பொட்டலம் என்று ஒன்றை அங்கே எடுத்துக் காட்டினார்கள். அதன் எடை ஒரு 15 கிராம்கூட இருக்காது. அதைப் பார்த்து நானே ஆச்சரியப்பட்டேன். அது ஒரு சின்ன பிளாஸ்டிக் பையிலே வைத்து தையலிடப்பட்டு கொடுக்கப்பட்டிருந்தது. அதைப்பற்றி நான் விசாரித்தபோது ஒரு உண்மை புரிந்தது. சிறையில் பிளாஸ்டிக் பைகளில் 15, 20 கிராம் அளவுக்குச் சோளப் பிட்டு தரப்படுவதில்லை. 150 கிராம் எடையுள்ள சோளப்பிட்டுதான் தரப்படுகிறது. (It is not cooked உப்புமா. It is only பிட்டு) உப்புமா என்பது வழ வழா என்று இருக்க வேண்டுமே, இது கிரானியூல்ஸ் வடிவத்தில் இருக்கிறதே என்று எண்ணிக் கொண்டுதான் அவரே அப்படிக் காட்டினார் என்று கருதுகிறேன். அதை நான் வரவழைத்துப் பார்த்தேன். சோளப் பிட்டு என்பது நீராவியில் வேக வைக்கப்படுவதால், அது கிரானியூல் வடிவத்தில் இருக்கிறது. ஆக அது ஒன்றும் புதிதாக வழங்கப்பட்ட ஒன்றல்ல. அதோடு மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதைப்பற்றிக் குறை சொன்னார்களே என்பதற்காக அது நல்ல முறையில் இனி இருக்க வேண்டும் என்று உடனே இந்த அரசு உத்தரவிட்டு அதற்கடுத்த நாளிலிருந்து சோளப் பிட்டுக்குப் பதில் அதை " இட்டலி " வடிவத்தில் கொடுக்க ஏற்பாடு செய்துள்ளது. அங்கேயுள்ள கைதிகளுக்கு மட்டும் பிரத்தியேகமாக இட்டலி வழங்கப்படுகிறது. அந்த இட்டலிக்குச் சட்டினியும் வழங்கப்படுகிறது. அதோடு கூட பிரௌன் ஷுகரும் கலந்து தரப்பட்டு வருகிறது.

மேலும், பாராளுமன்றத்தின் துணை சபாநாயகர் மாண்புமிகு திரு. ஜி. லட்சுமணன் அவர்கள்கூட அந்தச் சிறைச்சாலையைச் சென்று பார்வையிட்டு வந்திருக்கிறார். அதுபற்றிய அறிக்கை வெளியே எப்படி இருந்தபோதிலும், அவர் கைதிகளிடம் விசாரித்தபோது, தங்களுக்கு எந்தக் குறைகளும் இல்லை, பிரச்சினைகளும் இல்லை என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை அங்கே தொடர்ந்து இருக்குமானால், இன்னும் 6 மாதத்திற்குக்கூட



அவர்கள் அங்கே இருக்கத் தயார் என்று சிலர் அவரிடம் தெரிவித்திருக்கிறார்கள் என்பதற்கான ஆதாரம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் விரும்பினால், அவரிடம் காட்டத் தயாராக இருக்கிறேன். அந்த அளவுக்கு அரசியல் கைதிகள் சிறையில் அடைக்கப்பட்ட பிறகு, அவர்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு ஒரு சிறிதும் இல்லை என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

தற்சமயம் திருச்சி மத்திய சிறையைப் பொறுத்தவரையில். தண்ணீர்ப் பிரச்சினை முழுமையாகத் தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. வெளியிலிருந்து லாரிகளில் தண்ணீர் கொண்டு வரப்பட்டு, போதுமான அளவுக்குத் தண்ணீர் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. அதோடு உணவுப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், நான் மேலே கூறியவகையில் இட்டலி, சட்டினி தரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், மத்திய சிறையில் உள்ள கைதிகள் வெயிலில் அடைக்கப்பட்டிருக்கவில்லை. தனித் தனி செல்களில் இருப்பதைவிட ஹாலில் அடைத்தால் நன்றாக இருக்கும் என்று ஹாலில்தான் அடைத்திருக்கிறோம். இதைப்பற்றிக் கலைஞரிடம் தெரிவித்தபோது, அவர்கூட மகிழ்ச்சி தெரிவித்தார். இதைப் போலவே மற்ற சிறைகளிலும் ஹாலில் கைதிகளை அடைக்க உத்தரவிட்டிருக்கிறோம். ஆக், இது பாராட்டப்பட வேண்டியதே தவிர. குறை கூறுவதற்குரியதல்ல என்பதை மட்டும் கூறி, இந்த விளக்கத்திற்குப் பிறகும் அவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க அவசியமில்லை என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து விவாதிக்க. அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கருதி. இதற்கு என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

(1) செங்கை மாவட்டத்தின் உணவுப் பொருள் கிடங்குகளில் அதிக அளவு நெல்லும், அரிசியும் குறைந்து போயிருப்பதாகக் கூறப்பட்டதும். அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்காணும் நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

"செங்கை மாவட்டத்தின் உணவுப் பொருள் கிடங்குகளில் அதிக அளவு நெல்லும், அரிசியும் குறைந்து போயிருப்பதாகக் கூறப்பட்டதும், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும்."

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அவையின் முன் ஒரு விவர அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 11-10)

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே. செங்கை மாவட்டத்திலே நடைபெற்றிருக்கின்ற இந்த நிகழ்ச்சியைப் போல பல்வேறு நிகழ்ச்சிகள், பல்வேறு இடங்களில் இதே போன்ற சூழ்நிலைகளில் கடந்த ஆண்டுகளில் நடைபெற்றிருக்கின்றன. இந்த அனுபவத்தின் அடிப்படையிலே இது போன்ற நிகழ்ச்சிகள் மேலும் நடைபெறாமல் தடுக்கக் கூடிய அளவிற்கு இந்தத் துறை நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து 25 ஆயிரம் ரூபாய் பிணை வைப்புத் தொகையாகவும், ரூபாய் ஒரு இலட்சத்திற்கு வாலாஜாபாத் நகரில் உள்ள இந்தியன் வங்கியிடமிருந்து 20—12—1979-ல் மூன்றாண்டுகளுக்குப் பொறுப்பு நிதியாகவும் நுகர்பொருள் வாணிபக் கழகம் பெற்றுள்ளது. இந்தத் தொகைக்கு அதிகமாக அவர்கள் நெல்லை சிவில் சப்ளைஸ் துறையிலிருந்து பெற முடிந்திருக்கிறது. அதை எப்படி இந்தத் துறை அனுமதித்தது? இந்த ஊழல் நடைபெறுவதற்கு அதுவே ஆரம்ப காரணமாக இருந்திருக்கிறது. அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

@ 479-482 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே, நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளைப் பற்றிய முழு விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 176.774 டன் இருப்பு இருக்க வேண்டிய நெல் இல்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டு குற்றச்சாட்டாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார், யார் என்று கண்டுபிடித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. மேற்கண்ட குறைபாடுகள் மீது நுகர் பொருள் வாணிபக் கழகம் தனது சட்ட ஆலோசகர்களுடன் கலந்தாலோசித்து, குற்றவியல் சட்டத்தின் கீழ் இவர்களைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்குமாறு வாலாஜாபாத் சப்-இன்ஸ்பெக்டரிடம் மண்டல மேலாளர் மூலம் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. இது தவிர மூவர் மீதும் உரிமை இயல் வழக்கு தொடருமாறும் சட்ட ஆலோசகர் அறிவுரை கூறியுள்ளார். அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மேலும் இரட்டைப் பூட்டு முறையில் உள்ள கிட்டங்கி என்பதால், அதனுடைய ஒரு சாவி அவர்களிடத்திலே இருக்கும், மற்றொரு சாவி நம்மாலே நியமிக்கப்படும் அரசு அதிகாரியிடத்திலே இருக்கும். இந்த இரண்டு பேர்களுடைய கவனம் இல்லாமல் நெல் வெளியே போக நியாயம் இல்லை. ஆகவே, அங்கே பணியாற்றிய இரண்டு பேரும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மேற்கண்ட விசாரணையில் அவர்கள் உடந்தை என்று தெரியவந்தால், அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் மண்டல மேலாளர் அடிக்கடி ஒவ்வொரு கிடங்கையும் மேற்பார்வையிட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்று, வேறு எங்கேயாவது நடைபெற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதுபற்றி முழுமையாக நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது. இப்படிப்பட்டவர்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதிலே அரசு உறுதியாக இருக்கிறது. ஆகவே, இன்னும் தீவிரமான முறையிலே கண்காணிக்க வேண்டும் என்று சுற்றாணை அனுப்பப்பட்டிருக்கிறது.

* திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, சில ஆண்டுகளுக்கு முன்பு திருக்கோவிலூர் அருகே உள்ள அரகண்டநல்லூரில் ஏறத்தாழ இதே சூழ்நிலையில் நடைபெற்ற ஊழலைக் கண்டுபிடித்தனர். ஆனால் அடிமட்டத்திலே இருக்கின்ற ரெவின்யூ இன்ஸ்பெக்டர், டெபுடி தாசில்தார் ஆகியவர்கள் மட்டுமே

செங்கை மாவட்டத்தின் உணவுப்பொள் கிடங்குகளில் அதிக அளவு நெல்லும்; அரிசியும் குறைந்து போயிருப்பதாகக் கூறப்பட்டதும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும்



சஸ்பெண்டு செய்யப்பட்டார்கள். அது அந்த அளவோடே முடிந்துவிட்டது. அந்த ஊழல் தொடர்பான ஆவணங்கள் இன்றைக்கு சம்பந்தப்பட்ட துறை களிடத்திலேயிருந்து கண்டுபிடிக்க முடியவில்லை என்பதால், அனைவரும் தப்பிக்கின்ற நிலை இருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்திலே இது போன்று பல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. இப்பொழுது நடைபெற் றிருக்கும் நிகழ்ச்சியும் ஏறத்தாழ அதே போல நடைபெற்றிருக்கிறது. ஆகவே பல இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள உணவுப் பொருள்களைக் கொள்ளையடித்துவிட்டு, அல்லது திருடிவிட்டு அப்படிச் செய்தவர்கள் தப்பித் துக்கொள்ளக் கூடிய நிலையையும், சில சாதாரண அதிகாரிகள் பலியாகக் கூடிய நிலையையும் தவிர்க்கும் வகையில் இந்த ஆவணங்களைக் காக்க முறையாக நடவடிக்கை எடுக்க, உத்திரவாதம் தர அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண் புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற கருத்துக்கள் உள்ளத்திலே கொள்ளப் பட்டு அதற்கான நடவடிக்கைகள் முறைப்படி மேற்கொள்ளப்படும். எற் கெனவே என்னென்ன குறைபாடுகள் உள்ளன என்று நாம் உணர்ந்தோமோ அவை மீண்டும் நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நமது கடமை. இப்போது அவர்கள் 176,774 டன் நெல்லையும் மூன்று மாதங்களுக்குள் தந்து விடுகிறோம் என்று ஒப்பந்தத்திற்கு வருகிறார்கள். அவர்கள் செய்தது தவறு தான், அதற்கான தண்டனையை அவர்கள் அனுபவித்தே தீர வேண்டும், அவர் கள் கொடுக்கிறேன் என்று சொல்லுவதை வாங்கிக்கொண்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்ற முடிவுக்கு வர வேண்டாம் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். செய்தது தவறு என்ற காரணத்தால், இப்படிப்பட்ட தவறுகள் இனிமேல் செய்யாமலிருக்க, அவர்கள் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டும், மூன்று மாதங்களுக்குள் தருகிறேன் என்று சொல்லுவதால் அவர் களை விட்டுவிடக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. தீவிரமான நடவடிக்கையில் அரசு ஈடுபடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





(2) இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் முகாமிலும், இராமேஸ்வரம் பகுதியிலும் அரசுப் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கொடுக்கப் பட்டு வந்த மிகை வாழ்க்கைச் செலவுப் பகுதிப்படியை நிறுத்திவிட்டது குறித்து.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

" இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் முகாமிலும், இராமேஸ்வரம் பகுதியிலும் அரசுப் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட்டு வந்த மிகை வாழ்க்கைச் செலவுப் பகுதிப்படியை நிதித் துறையின் (படிகள்-2) 3—2—1981 ஆம் நாளிட்ட 55 ஆம் எண் அரசாணையின்படித் திடீரென நிறுத்திவிட்டது குறித்தும். அதன் விளைவாக ஏற்பட்டுள்ள அளவிடற்கரிய இன்னலும், அதிக ஊதிய இழப்பும் குறித்து ".

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை@ ஒன்று அவையின் முன் வைக்கப்பட் டுள்ளது.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கையின்படி, இரண்டாம், மூன்றாம் ஊதியக் குழுக்களின் பரிந்துரையின்படி இந்தப் படி நிறுத்தப்பட் டிருப்பதாகத் தெரிகிறது. இரண்டாம் ஊதியக் குழுவின் பரிந்துரை 1970 ஆம் ஆண்டிலும், மூன்றாம் ஊதியக் குழுவின் பரிந்துரை 1978 ஆம் ஆண்டிலும் வந்திருக்கின்றன. இடையிலே 1974 ஆம் ஆண்டிலே முகவை மாவட்ட ஆட்சித் தலைவரும், கோட்டாட்சித் தலைவரும் இராமேஸ்வரப் பகுதியிலே வாழும் ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் குறைந்தது 20 விழுக்காடு அளவிலே வழங்க வேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதியிலே போக்குவரத்து சீர்பட்டதாகத் தெரியவில்லை. 1980 ஆம் ஆண்டு கடைசிப் பகுதியில் கூட இராமேஸ்வரம் குறுக்குப் பாலத்தில் நடந்து போக வேண்டிய நிலை வந்தபோது, நானே நேரிலே பார்த்திருக்கிறேன். போக்குவரத்து சீராகவில்லை. அங்கே இயற்கையின் சீற்றம் தொடர்ந்து இருக்கிறது. மேலும் வாடகை உயர்ந்துவிட்டிருக்கிறது. மலேரியா காய்ச்ச லால் மக்கள் தொல்லைப்படுகிறார்கள். இவற்றையெல்லாம் அடிப்படையாக வைத்துக்கொண்டு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து இந்தப்

@ 483-485 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பிரச்சினையை அனுதாபத்தோடு அணுகி 20 சதவீதப் படியை வழங்க முன்வர வேண்டும் என்று வேண்டுகிறேன். இது குறித்து அமைச்சர் அவர்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுபற்றி முழு விவரம் தரப்பட்டிருக்கிறது. திடீரென்று நிறுத்தப்படவில்லை. இதை முன்கூட்டியே நிறுத்தியிருக்க வேண்டும். இரண்டாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளுக்குப் பிறகு இருக்கிற நிலைமைகளை உத்தேசித்து, மாண்புமிகு உறுப்பினர் கூறியது போன்ற பல்வேறு பிரச்சினைகளை ஆராய்ந்து பார்த்து, பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளுவது என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. அதிலே குறிப்பிட்டிருக்கிற கருத்துக்களுக்கு மாறாக மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்ற வேறு பல இடைஞ்சல்கள் இருக்கின்ற சூழ்நிலைகள் இருக்குமானால், அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், மீண்டும் அரசு ஆராய்வது பற்றி ஆட்சேபனை இல்லை. பரிந்துரைகளிலே குறிப்பிட்ட நிலைமை சரியாக இருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படி இல்லையென்பதற்கான காரணம் தெரியவில்லை. எங்களுக்குக் கிடைத்திருக்கிற தகவலை ஆராய்ந்து இல்லை என்று முடிவு செய்திருக்கிறோம். அது பற்றி விவரம் தந்தால், தனியாக ஆராயலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே. இந்த மாநிலத்தில் விலைவாசி அதிகமாக உள்ள பகுதி என்று அரசால் அறிவிக்கப்பட்ட பகுதிகளில், இராமேஸ்வரம், குருசடைத் தீவுகள், மண்டபம் ஆகியவைகள் அடங்கும் என்பது அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஊதியக் குழுவும், மூன்றாவது ஊதியக் குழுவும், ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் சாதகமாகக் கூறியுள்ள பரிந்துரைகளையெல்லாம் இன்னும் செயல்படுத்தாமல் இருக்கும்போது, அரசுக்கு ஆதரவாக இருக்கும் இந்தக் குறிப்பை மட்டும் செயல்படுத்துவது குறித்து அந்தப் பகுதிகளிலே உள்ளவர்களுக்கு வேதனையைத் தருகிறது. இரண்டாவது, மூன்றாவது ஊதியக் குழுக்கள், இந்தப் படியை ஏற்கெனவே வாங்குபவர்களுக்குப் பாதுகாப்பைக் கொடுத்து பரிந்துரை செய்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அந்தப் பகுதிகளில் இன்னும் விலைவாசிகள் அதிகமாக இருக்கின்றன. இயற்கைச் சீற்றத்திற்கும் அடிக்கடி ஆளாகக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. மேலும் அது சுற்றுலா ஸ்தலமாக இருக்கிறது. இந்த அம்சங்களைக் கண்ணோட்டத்





திலே கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்போது வாங்கிக் கொண் டிருக்கின்றவர்கள் இந்தப் படியை தொடர்ந்து வாங்குகின்ற வகையிலே ஒரு நல்ல முடிவை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். இதை எந்தப் பெயரிலே வேண்டுமானாலும் கொடுக்கலாம். பெயர் மாற்றத்திற்கு நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அரசுக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கையை அனுப்பியிருப்பாரேயானால், அதுபற்றி அரசு ஆராயும். ஆனால் இப்படிப்பட்ட நிலைமை வருவதற்கு நியாயம் இருக்கிறது. நான் ஏற்கெனவே கூறியபடி, ஏற்கெனவே இருந்த சூழ்நிலை மாறியிருக்கிறது என்று இரண் டாவது சம்பளக் குழு கருதுகிறது, அரசு கருதுகிறது. மாறவில்லை என் பதற்கான காரணங்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அரசு மீண்டும் ஆராயும்.

(முற்பகல் 11-20)

செல்வி அ. லீலாவதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரையிலே போதுமான போக்குவரத்து வசதி இன்னும் அந்த இடங்களிலே இல்லாதபடியால், இந்தப் படியைப் பெற்றுவருவதற்குப் பாதுகாப்பு அளிக்கப்படலாம் என்று இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் கவனத்தில் கொண்டு, அங்கு இருக்கும் ஆசிரியர் களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் இந்தப் படியை வழங்குவாரா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி நான் முதலிலேயே தெளிவுபடுத்தியிருக்கி றேன். 'இந்தப் படியைத் தொடர்ந்து கொடுப்பதற்கான அவசியம் எதுவும் இருப்பதாக நாங்கள் நம்ப இயலவில்லை. இதனை நிறுத்திவிடலாம்' என்று சொல்லிவிட்டு, அதன் பிறகு 'ஆனாலும் தற்போது இந்தப் படியைப் பெற்று வருவோர்க்குப் பாதுகாப்பு அளிக்கப்படலாம்' என்று சொல்லப்பட்டிருக் கிறது. கடைசியாகச் சொல்லியிருப்பதன் அடிப்படையில் அளித்து வருகி றோம். மூன்றாவது சம்பளக் குழு 'முந்தைய குழுவின் பரிந்துரையினின்றும் மாறுபடுவதற்கான காரணம் ஏதும் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை.

என்று சொல்லியிருக்கிறார்கள். 1978-ல் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. முதலிலே சொல்லியதுபோல, இந்த முடிவை மாற்றுவதற்கான காரணங்கள் இருந்தால், மீண்டும் அதை ஆராயலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலே இந்தப் படி நிறுத்தப்பட்டிருந்தாலும், பொதுவாக ஒவ்வொரு அரசும் அதன் ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் புதிது புதிதாகச் சலுகைகளை வழங்கிக் கொண்டிருக்கின்ற நோக்கில், ஏற்கெனவே இருக்கின்ற சலுகைகளை எடுக்கின்ற வகையிலே இந்த ஆணை இருக்கிறது. இன்னும் அங்குள்ள ஆசிரியர்களுக்கு அந்த நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன என்பதால், மறுபடியும் இந்த ஆணையை ஆசிரியர்களுக்குச் சாதகமாகப் பிறப்பிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல, இந்தமாதிரியான சங்கடங்களும், துயரங்களும் அளிக்கின்ற நிலைமைகள் அங்கு இருந்தால், அரசு அதைப்பற்றி ஆராய்ந்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. மேலவை விதி 82-ன்கீழ் அமைச்சரின் விளக்க உரை.

### உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கான மின் வினியோகத்தில் கட்டுப்பாடுகள் குறித்து.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாக மின் விநியோகத்தில் பல்வேறு இடங்களில் தடை ஏற்பட்டுள்ளது எனவும், சீரான முறையில் மின் விநியோகம் இல்லாததினால் விவசாய மின் இணைப்புகளில் உள்ள பம்பு செட்டுகள் பாதிக்கப்பட்டன எனவும், பல்வேறு பகுதி விவசாயச் சங்கப் பிரதிநிதிகளிடமிருந்தும் சட்டப்பேரவை, மேலவை உறுப்பினர்களிடமிருந்தும் முறையீடுகள் வந்துள்ளன.



மின்சக்தி ஒரு நாளைக்கு சுமார் 31 மில்லியன் யூனிட்டுகள் தேவைப்படுகின்றன. அனல் மின்நிலையங்களில் இருந்தும், நீர் மின் நிலையங்களிலிருந்தும், கேரள அரசிடமிருந்தும் நமக்கு மொத்தமாக 26.65 மில்லியன் யூனிட்டுகள் தான் கிடைக்கின்றன. எனவே பற்றாக்குறை நாளொன்றுக்கு சுமார் 4.35 மில்லியன் யூனிட்டுகள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே சீரான மின் விநியோகம் கிராமப்புறங்களுக்கும் விவசாய மின் இணைப்புகளுக்கும் கிடைக்கவேண்டும் என்பதற்காக உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கான மின் விநியோகத்தில் கீழ்க்காணும் கட்டுப்பாடுகளை விதிக்க அரசு முடிவெடுத்துள்ளது.

1. சிமிண்ட் உற்பத்தி ஆலைகளுக்கு உச்சத் தேவையிலும் மின் சக்தியிலும் 15 சதவிகித மின்வெட்டு அமுலாக்கப்படும்.

2. அத்தியாவசியமான பணிகளுக்கும் உச்சத் தேவையிலும், மின் சக்தியிலும் 15 சதவிகித வெட்டு அமுல்படுத்தப்படும். மாவு மில்களுக்கு விலக்களிக்கப்படுகின்றன.

3. பொதுப்பணிகளுக்கான உயர் அழுத்த மின் இணைப்புகளுக்கும், உச்சத் தேவையிலும் மின் சக்தியிலும் 30 சதவிகித மின்வெட்டு அமுல்படுத்தப்படும்.

4. மூன்று ஷிப்டுகள் வேலை செய்யும் உயர் அழுத்தத் தொடரா முறைத் தொழிற்சாலைகளுக்கு உச்சத் தேவையில் 50 சதவிகிதம் மின் வெட்டு அமுல்படுத்தப்படும். பயன்படுத்தும் மின் சக்தியில் தற்போது நடைமுறையில் உள்ள 30 சதவிகித வெட்டில் எவ்வித மாற்றமும் இல்லை.

5. அரசு ஆணைகளின் மூலம் அவ்வப்போது விலக்கு அளிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளுக்கும் உச்சத் தேவையிலும் மின் சக்தியிலும் 15 சதவிகித மின்வெட்டு அமுல் படுத்தப்படும். அரிசி ஆலைகள் உபரி உற்பத்தியை அரசுக்குத் தருமானால் இதிலிருந்து விலக்களிக்க அரசு முன்வரும்.

6. புதிய உயர் அழுத்த மின் இணைப்புகளோ ஏற்கெனவே உள்ள தொழிற்சாலைகளுக்குக் கூடுதல் சுமையோ நிலைமைகள் சீர்படும்வரை வழங்கப்படமாட்டாது.

7. அலங்கார விளக்குகளோ, ஆடம்பர விளக்குகளோ, பெயர்ப் பலகைகளில் விளக்குகளோ பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்படும்.

மேற்குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளினால் மின்சக்தியின் உபயோகம் ஓரளவிற்குக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள கட்டுப்பாடுகளை அமுல்படுத்துவதன்மூலம் குறையக் கூடிய மின் சக்தியைக் கொண்டும், மற்ற நடவடிக்கைகளின் மூலமும் கிராமப் புறங்களில் கிடைக்கும் வகையில் சீரான மின் விநியோகத்திற்கான ஏற்பாடுகள் அமுலாக்கப்படும்.

முதல் பிரிவு : காலை 6 மணி முதல் நண்பகல் 12 மணி வரை (6 மணி நேரம்).

இரண்டாவது பிரிவு : நண்பகல் 12 மணி முதல் மாலை 6 மணி வரை (6 மணி நேரம்).

மூன்றாவது பிரிவு : இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை (8 மணி நேரம்).

இம்மூன்று பிரிவுகளுக்கும் 10 நாட்களுக்கு ஒரு முறை சுழல் முறையில் மாற்றி மாற்றி மின்சக்தி வழங்கப்படும்.

இந்த கட்டுப்பாடுகள் 9—3—1981-ம் நாளிலிருந்து அமுலுக்கு வரும்.

### 6. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வீட்டுவசதி வாரிய (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1981).

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, வீட்டுவசதி வாரிய (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1981) @ ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு வீட்டுவசதி வாரிய (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

@ 486ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.





* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு சாதாரணமானதாகத் தோன்றினாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவருவதற்கான காரணத்தை விவரித்திருந்தால், ஒருவேளை இதிலே திருத்தம் கொடுப்பதற்கு அவசியமே இல்லாமல் போயிருக்கலாம். இந்தத் திருத்தச் சட்டம் 'ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' கொடுப்பதற்காக அமைந்திருக்கிறது. ஏற்கெனவே நடைபெற்றுக் கொண்டிருக்கிற நடைமுறையில் ஒரு மாற்றம் செய்கின்ற அளவிலே இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவினுடைய நோக்கம் கூறப்பட்டிருக்கிறது. இதற்கான விவரங்களையும், அவசியத்தையும் காரணங்களையும் சொல்கின்றபோது

"The regulations made by the Housing Board under this section now take prospective effect only. It does not empower the Board to make regulations retrospectively. Absence of the provision has caused certain administrative difficulties." என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறபோது, ஏற்கெனவே உள்ள சட்டத்தின் மூலமாக, அல்லது வீட்டு வசதி வாரியம் நடைமுறைப் படுத்திய அரசு ஆணைகள் மூலமாக, அல்லது நோட்டிபிகேஷன் வழியாக, சில நிர்வாகச் சங்கடங்கள், சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று தெரிவித்திருக்கிறார்கள். சாதாரணமாக எந்த நடவடிக்கை எடுத்தாலும், எந்த ஆணையோ, நோட்டிபிகேஷனோ, ஜீ.ஓ.வோ அரசுத் துறையிலேயிருந்து வந்தாலும், அது இனிமேல் நடைமுறைக்குப் பொருந்துகின்ற வகையிலே அமைய வேண்டும். சட்டம் இயற்றுகின்றபோது குறிப்புகள் வெளியிடுகின்றபோது, எந்த அளவிலே நடைமுறைகள் பாதிக்கப்படுகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். 'டேபிள் ஒர்க்' என்ற அளவிலே பாதிப்பதானால், அது வேறு. அது மட்டுமல்லாமல், ஏற்கெனவே எடுத்த நடவடிக்கைகளை இது மாற்றுவதாக அமையுமானால், அது தீர பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்றாகும். இதிலே எந்த நிர்ப்பந்தம், எந்தச் சூழ்நிலை, எந்த அவசியம் இந்தச் சட்டத் திருத்தத்தை உருவாக்கியிருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. இந்தச் சட்டத் திருத்தம் ஒருவேளை ஏற்கெனவே நடைபெற்றவற்றையெல்லாம் மறுமுறைப் படுத்துவதற்கான வகையிலே, அதிலே கை வைக்கின்ற அளவிலே அமைவதானால், அதைப்பற்றி தீர பரிசீலித்தாக வேண்டுமென்ற அளவிலே இதற்கான விவரங்களை அமைச்சர் அவர்களும் இந்தத் துறையினரும் அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

(முற்பகல் 11-30)

THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI : Hon. Chairman, I am indeed very happy to speak on this very progressive measure. I call it a progressive measure because the Housing Board itself is a welfare organisation providing houses to those who have no home and if the present Bill is going to give the Board some kind of leeway to do good work, it is a most welcome provision. While speaking on this particular Bill, I would like to draw the attention of the Hon. inister that when the Housing Co-operative Societies came into existence, in every area, land was provided for the Women's organisation, for schools, parks and other ameninties. In recent years, we find that many of the Women's organisations who are on the Housing Board land have been asked to pay very heavy ground rent or to quit the area. This is not a welfare measure because all these Women's organisations serve the most deserving and these are the places where women of middle income group or low income group could meet and exchange ideas for doing some work of utility. While this power has been given to the Board, I request the Housing Board to be sympathetic towards such welfare organisations which are in existence on the land of co-operative societies and the Housing Board. With these words, I once again welcome this measure and I hope that it will help not only the well-to-do people but also the most deserving and needy. Thank you.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். ஹவுசிங் போர்ட் ஆக்டின் 161-வது பிரிவின் அடிப்படையில் விதிகளை உருவாக்க அதிகாரம் இருக்கிறதே தவிர, முன்னாலே நடந்த நிகழ்ச்சிகளைப் பின்னோக்கி அமல்படுத்தும் நிலைமைகள் இல்லாததன் காரணமாக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருப்பதாக நான் அறிகிறேன். குறிப்பாக அங்கே பணியாற்றுபவர்களுக்குத் தகுதி அடிப்படையில் பதவி உயர்வு என்ற நிலை வரும்போது, பட்டதாரிகளுக்கும், எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கும் இடையே ஏற்பட்ட நிலைகளைச் சரி செய்ய இது துணை நிற்குமென்ற அடிப்படையிலே இதை நான் வரவேற்கிறேன். சர்வீஸ் ரெகுலேஷன்ஸ் அமைப்பதற்கு இந்தச் சட்ட முன்வடிவு துணை செய்யும். அதோடு நீதி மன்றக் கருத்தின் அடிப்படையிலே ஹவுசிங் போர்ட் சட்ட விதிகள் முறைப்படி செய்யப்படவில்லை என்னும்போது, இப்போதிருக்கும் நிலை இன்னமும் நீடித்து, இப்போது குறுகிய அளவிற்குப் பாதிக்கப்படுகிற நிலை போய்,





மிகப் பெரிய அளவிற்கு அதிகம் பேர் பாதிக்கப்படுகிற எதிர்கால நிலை வருவதன் காரணமாக இதில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மன வருத்தம் ஏற்பட்டு, அதன் காரணமாக பணியில் ஊக்கமில்லாமல் போவதைத் தடுக்க இந்த விதி வகை செய்யுமென்று கருதுகிறேன். இதனால் யாருக்கும் கெடுதல் இல்லாத நிலையில், ஊழியர்களுக்குப் பயன் ஏற்படும் நிலையில் இது அமைந்திருக்கிறது என்ற வகையிலும், அவர்களுடைய பணியை வேகப்படுத்த இது துணை செய்யுமென்ற வகையிலும் இதை வரவேற்கிறேன். குறிப்பாக, கிராமப்புறங்களில் பரவி இருக்கிற வீட்டு வசதி வாரியத்தின் பணி சீரும் சிறப்புமாக நடைபெற இது உதவி செய்யுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியம் தன்னுடைய பணியைக் கிராமங்களுக்கு விஸ்தரிக்க இருக்கும் நிலையில், கிராமங்களில் மாடி வீடுகள் இல்லாமல் சிறு சிறு வீடுகளாகக் கட்டி, வீட்டு வசதி வாரியத்தின் பணி சிறக்க என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியம் 1961 ஆம் வருடச் சட்டத்தின் 161-வது பிரிவில் திருத்தம் கொண்டு வந்திருப்பதை நான் வன்மையாக எதிர்க்கிறேன். இந்தச் சட்டம் உண்மையிலேயே அடிப்படை உரிமையில் கை வைக்கின்ற சட்டம். ஏனென்றால் வீட்டு வசதி வாரியச் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தினுடைய 161 ஆம் பிரிவு, இந்தச் சட்டத்தை அமல்படுத்துகின்ற விதத்தில், அப்போதைக்கப்போது தேவைப்படுகிற அரசு ஆணைகளைப் பிறப்பிக்கின்ற அதிகாரம் அரசுக்குக் கொடுத்திருக்கிறது. அரசு ஆணைகளைப் பிறப்பித்து, அமல் நடத்தி, வீட்டு வசதி வாரியத்தைச் சிறப்பாக நடத்த வேண்டியது அரசின் கடமை. இப்போது கேட்பது என்னவென்றால், 1981-லே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, 1961-லிருந்து அமல் நடத்தப் போகிறோம் என்று சொல்லப்படுகிறது. அந்தச் சட்டத்தின்கீழ் ஒரு ஆணையை 1961-லிருந்து அமல் நடத்தப் போகிறோமென்று சொல்லுவது அடிப்படை உரிமையைப் பாதிக்கின்றதாகும். பிளாங்க் செக்கில் கையெழுத்துப் போடுவது போலாகும். எனவே, இந்த அவை இதை ஏற்றுக்கொள்ளாதென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எவ்வளவு ரூபாய்க்கு வேண்டுமென்று கேட்டு, செக்கில் கையெழுத்து வாங்குங்கள். பேங்கில் பணம் இல்லை என்றால், பிளாங்க் செக்கில் கையெழுத்துப் போடலாம். ஐந்து ரூபாய் பாங்கில் இருக்கிறது என்றால், செக்கில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கலாம். ஆனால் இந்தச் சட்டம் அப்படியல்ல. வீட்டு வசதி வாரியச் சட்டம் பல அதிகாரங்களை

அரசுக்குக் கொடுத்திருக்கிறது. அந்த அதிகாரங்களின்கீழ் ஒரு ஆணையைக் கொண்டு வந்தால், அந்த ஆணை என்றைக்குப் பிறப்பிக்கப்படுகிறதோ, அன்றையிலிருந்துதான் அமல்படுத்தப்பட வேண்டும். அதற்கு முன்னால் அமல் நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டால், குறிப்பிட்ட ஆணையைக் கொண்டு வந்து, இதனால் இன்ன நன்மைகள் மக்களுக்கு இருக்கின்றன என்று விளக்கி, இரண்டு அவைகளின் ஒப்புதலையும் பெற்று, அந்த ஆணையைப் பின்னோக்கிச் செலுத்த வேண்டுமே தவிர, இப்போது செய்வதைப்போல் செய்யக்கூடாது. உலகத்தில் இல்லாத புதுமையாக இது அமைந்திருக்கிறதென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள், அதிகாரிகளுக்கு நன்மை பயக்கிறதென்று சொன்னார்கள். அதில் எனக்கொரு சந்தேகம், சில அதிகாரிகளுக்கு நன்மை பயக்க இந்தச் சட்டம் வருகிறதோ என்னவோ என்று.

டாக்டர் இரா. சனார்த்தனம்: 'அதிகாரிகள்' என்று சொல்லவில்லை. 'அலுவலர்கள்' என்று ஒட்டுமொத்தமாகச் சொன்னேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: அதிகாரிகள் என்பவர்கள் கொஞ்சம் மேல் மட்டத்தில் இருக்கிறவர்கள். அவர்களோடு அடி மட்டத்தில் இருக்கிறவர்களையும் சேர்த்திருக்கிறார்கள். இந்தச் சட்டம் புதிராக இருக்கிறது. படித்துப் பார்த்தால் என்ன என்று புரியவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிமுகப்படுத்தும்போதே அதைப்பற்றிச் சொல்லியிருக்க வேண்டும். கடைசியில் சொல்கிறேன் என்று சொல்லுகிறார்கள். எனவே அப்போது மீண்டும் பேச வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்நிந்த விதிகளைப் பிறப்பித்தோம், இந்த ஆண்டு இந்த விதி பிறப்பிக்கப்பட்டது, அதில் இன்னின்ன கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன, 10 ஆண்டுகளுக்கு முன்னால் அதை அமல்படுத்தியிருந்தால் நாட்டுக்கு மக்களுக்கு நன்மை ஏற்பட்டிருக்கும், இதை அனுமதியுங்கள் என்று கேட்டிருக்க வேண்டும். ஆனால், இப்போது பிளாங்க் செக்கில் கையெழுத்து கேட்கிறார்கள். அரசிடம் அதிகாரம் என்ற பணம் இருக்கிறது. எனவே எவ்வளவு பணம்—எதற்காகத் திருத்தம் என்று சொல்லாதவரை, கையெழுத்துப் போட மாட்டோமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்திலே எனக்கு வரும் ஒரு ஐயப்பாட்டைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது பல இடங்களிலே வீட்டு வசதி வாரியம் ஒரு ஆணை பிறப்பிக்கிறது. 10 ஆண்டுகளுக்கு முன்னாலே கையகப்படுத்தி,



அதற்குப் பிறகு வீட்டு வசதி வாரிய விதியின்கீழ் பலருக்கு அதைப் ப்ர்ந்தளித்து, அவர்கள் வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். அதற்காக விலை நிர்ணயம் செய்யப்பட்டு, வீடு கட்டவும் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 'ஏ' டைப்புக்கு ரூ. 80,000 என்று ஆரம்பித்து 'எப்' டைப்புக்கு ரூ. 15,000 என்று சொல்லப்பட்டது. அவர்களும் மாதாமாதம் தவணைகளைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது என்ன சொல்லுகிறார்களென்றால், பல்வேறு காரணங்களினால் 15,000 ரூபாய் என்பது 30,000, ரூபாய் ஆக்கப்பட்டிருக்கிறது என்கிறார்கள். அதற்கு இப்போது எதிர்ப்பு வருகிறது. நாகர்கோவிலில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அரசாங்க ஊழியர்களுக்கு ஒதுக்கியவைகளுக்கு இப்போது இரண்டு மடங்கு விலை அறிவித்திருக்கிறார்கள். அதன் நகலை எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். இந்த அதிகாரத்தைத் தராமல் இருக்கும்போதே, பின்னுக்குச் சென்று முன்னால் செய்த நிர்ணயத்திற்கு மேலே விலை நிர்ணயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். அவற்றையெல்லாம் நியாயப்படுத்தத்தான் இப்போது அதிகாரம் கேட்கிறார்கள். 15,000, 20,000, அல்லது 30,000 ரூபாய் என்று நிர்ணயித்ததை இப்போது இரண்டு மடங்காக்கிப் பிறப்பித்த உத்தரவுகளை நியாயப்படுத்தத்தான் இது வந்திருக்கிறதென்று நான் கருதுகிறேன். எனவே இதை நிறைவேற்றுவதன் மூலம் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் நன்மை பெறும் அரசு அலுவலர்கள், ஏழை மக்களுக்குத் தீமை செய்வதாக நான் கருதுகிறேன்.

(முற்பகல் 11-40)

இதை மாற்றுகிற ஒரு நிலைதான் இருக்கிறது. நன்மை தருகிற நிலை என்று அரசு இதைக் கருதினால், அதற்குரிய புள்ளிவிவரங்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கமாக இங்கே சொல்ல வேண்டும். ஒட்டுமொத்தமாக ஒரு விதியை இப்படிக் கேட்காமல், ஒவ்வொரு ஆண்டும் இன்ன தேதியிலிருந்து 'ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' என்கிற முறையில் கேட்டுப் பெற வேண்டும். அதுதான் முறை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்ன பிறகும்கூட, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல மாண்புமிகு தலைவரவர்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அப்படி ஒரு விதி சட்டத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் விளக்கம் கேட்க விரும்பினால், அனுமதிக்கிறேன்.

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, அரசு கொண்டு வருகிற சட்டங்கள், அல்லது வீட்டு வசதி வாரியத் திருத்தச் சட்ட முன்வடிவு போன்றவைகள் இங்கே கொண்டு வரப்படும்போது, சட்டங்களை

வருங்காலத்திலிருந்து அல்லது கடந்த காலத்திலிருந்து செயலுக்குக் கொண்டு
வரும்படியாக விதிமுறைகளை அரசு எப்போது வேண்டுமானாலும் ஏற்படுத்த
லாம். அதுமாதிரி விதிமுறையைச் சேர்ப்பதற்காகத்தான் இந்தச் சட்ட
முன்வடிவு திருத்தமாக இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. 1961 ஆம்
ஆண்டு வரையில் வீட்டு வசதி வாரியம் என்பது 'சிட்டி இம்ப்ரூவ்மென்ட்
டிரஸ்ட்' என்கிற பெயரில் இருந்து வந்தது. 1961 ஆம் ஆண்டிலிருந்துதான்
அது வீட்டு வசதி வாரியமாக மாறியது. அவ்வாறு மாறிய பிறகு, 1963 ஆம்
ஆண்டிலே ஒரு வரைவு ரெகுலேஷனை, வீட்டு வசதி வாரியம் அரசுக்கு
அனுப்பி வைத்தது. அதன்படி ஜூனியர் அசிஸ்டென்ட் ஆக இருப்பதற்குப்
பட்டப்படிப்பு வேண்டுமென்கிற விதியைக் கொண்டு வந்தார்கள். 1963 ஆம்
ஆண்டு அனுப்பப்பட்ட அந்த விதியை, அரசு 1969 ஆம் ஆண்டுதான் ஏற்றுக்
கொண்டது. அதுவும் ஆறு ஆண்டுகள் கழித்துதான் கெசட்டில் வெளியிடப்
பட்டது. அதற்கிடையில் அதாவது 1969 ஆம் ஆண்டில் அரசு ஏற்றுக்கொண்ட
விதி வெளியிடப்படுவதற்கு முன்னதாக, 1965 ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு
விதியை வீட்டு வசதி வாரியம் முடிவு செய்தது—அதாவது ஜூனியர்
அசிஸ்டென்டாக இருப்பதற்கு எஸ்.எஸ்.எல்.சி. போதும் என்கிற முறையில்
விதியைக் கொண்டுவந்தார்கள். அதுவும் கெசட்டில் வெளியிடப்படவில்லை.
அவ்வாறு அது கெசட்டில் வெளியிடப்படாத காரணத்தால் 1974 ஆம் ஆண்டில்
பட்டதாரிகள் வழக்குமன்றத்திற்குச் சென்றார்கள். அப்போது ஜூனியர்
அசிஸ்டென்ட்டாக வருவதற்கு பட்டதாரிகளாக இருக்க வேண்டுமென்றும்,
எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் ஜூனியர் அசிஸ்டென்ட் ஆக இருக்க முடியாது
என்றும் ஏனென்றால் ஏற்கெனவே அரசு இது சம்பந்தமாக ரெகுலேஷன், விதி
கொண்டு வந்திருந்தாலும், அதை அரசு ஏற்று கெசட்டில் வெளியிடவில்லை
என்றும் வழக்குமன்றத்தில் தீர்ப்பு சொல்லிவிட்டார்கள். எஸ்.எஸ்.எல்.சி.
படித்தவர்கள் நிலை என்ன ஆகும்? 1965 ஆம் ஆண்டில்
எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் போதும், மினிமம் எஜுகேஷனல்
குவாலிபிகேஷன் போதும் என்று விதிமுறை முடிவு செய்யப்
பட்டாலும்கூட, அது கெசட்டில் வந்தது 1977 ஜூன் மாதத்தில்தான்.
இதன் விளைவாக அந்தத் தேதி வரை எஸ்.எஸ்.எல்.சி. படித்திருந்த 215
ஜூனியர் அசிஸ்டென்ட்களுடைய நிலை என்ன என்கிற பிரச்சினை எழுந்தது.
தீர்ப்புக்கு முன்னாலேயே விதிமுறையைத் திருத்தியிருந்தும்கூட, அது கெசட்
நோட்டிபிக்கேஷனில் வந்தது 1977 ஜூன் மாதம்தான். ஆகவே, தீர்ப்புக்குப்
பின்னால்தான் கெசட் நோட்டிபிகேஷன் வந்திருக்கிறது. நீதிமன்றத் தீர்ப்
புக்கு முன்னால் இருந்த எஸ்.எஸ்.எல்.சி. படித்த ஜூனியர் அசிஸ்டென்ட்
களுடைய நிலை என்ன என்கிற பிரச்சினை வந்தது. அவர்கள் பெர்மனென்ட்



செய்யப்படவில்லை. வேலையிலிருந்து அவர்கள் போகக்கூடிய நிலையில்
இருந்தார்கள். இப்போது 5—2—1981 வரையில் 488 எஸ்.எஸ்.எல்.சி. படித்த
வர்களும், 174 பட்டதாரிகளும் இருக்கிறார்கள். ரெகுலேஷனைக் கொண்டு
வந்தவுடன் அதை கெசட்டில் வெளியிடாத காரணத்தால், மினிமம் குவாலிபி
கேஷன் எஸ்.எஸ்.எல்.சி. என்று இருந்தும்கூட, பட்டதாரிகளுக்கு ஆதரவாக
தீர்ப்பு வழங்கப்பட்ட காரணத்தால், அதற்கு முன்பிருந்த எஸ்.எஸ்.எல்.சி.
படித்தவர்களுடைய நிலை என்ன என்பதை அரசு யோசித்துப் பார்த்தது.
அவர்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும் என்கிற அடிப்படையில்தான்,
இந்தச் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு தந்து அதற்கு 'ரெட்ராஸ்பெக்டிவ்
எபெக்ட்' கொடுக்கலாம் என்கிற முறையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.
இதைக் கொண்டுவராவிட்டால், அவர்களுக்கு வேலையே இல்லாமல் போய்
விடும். இந்தச் சட்டத் திருத்தத்தின்படி எந்தத் திருத்தம் கொண்டுவந்தாலும்,
பிராஸ்பெக்டிவ் ஆக மட்டுமல்ல, ரெட்ராஸ்பெக்டிவ் ஆகக்கூட கொண்டு
வரலாம். அதற்காக ஒவ்வொரு முறையும் இங்கே திருத்தம் கொண்டு வரக்
கூடாது என்பதையும் சொல்லி, அவர்களுக்குப் பாதுகாப்பு தரத்தான் இது
கொண்டு வரப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் இதுமாதிரி வரும்போது, சட்ட
மன்றத்திற்கு வராமலே பாதுகாப்பு அளிக்கும் வகையில் இது கொண்டு
வரப்படுகிறது என்பதையும் சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, வீட்டுவசதி வாரிய (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

THIRU K. RAMAMOORTHY: Sir, I move the following amendment :—

"In clause 2, for the word 'retrospectively' substitute the word 'presently'"

**திரு. ம. சங்கரலிங்கம்:** நான் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

[1981 மார்ச் 9

* திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வந்ததற்கான அவசியம் என்ன என்பதை மிகவும் தெளிவாகவும், விளக்கமாகவும் சொன்னார்கள். அவ்வப்போது அரசு ஏற்றுக்கொள்ளுகின்ற விதிமுறைகள் முறையாக கெசட் நோட்டிபிகேஷனில் வெளியிடப்படாமல் விடுபட்டு விடுமானால், அது எந்த அளவுக்கு பாதிக்கின்றது என்பதை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்கள் மிகத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற பிரச்சினை, ஏறக்குறைய 250 எஸ்.எஸ்.எல்.சி. படித்து, ஜூனியர் அசிஸ்டென்டுகளாக பணியாற்றக்கூடியவர்களுடைய பிரச்சினை ஆகும். அவர்களுக்காக இந்தச் சட்டத்தைத் திருத்துவதிலே நியாயம் இருக்கிறது, தேவை இருக்கிறது என்று சொல்வதை முழு மனதுடன் ஏற்றுக்கொள்கிறோம். சட்டங்களைப் பொறுத்தவரையிலும், சட்டத் திருத்தங்களைப் பொறுத்தவரையிலும், இங்கே அவைக்குக் கொண்டு வருவதன் மூலம்தான் பாதுகாப்பு.

மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே பேசியதிலிருந்து எங்களுக்கு ஒன்று புரிந்தது. இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்படுவதன் தேவை என்ன என்பதைக்கூட இந்தப் பக்கத்திலேயிருக்கிற எங்களால் முன்கூட்டி அறிய முடிய வில்லை. ஆனால், அந்தப் பக்கத்திலேயுள்ளவர்களால் அதற்குரிய விவரம் அறிய முடிந்திருக்கிறது. பொதுவாக சட்டங்களை இயற்றுகின்றபோது, அதைப்பற்றிய சில உண்மைகள் எங்களுக்குத் தெரிந்தாக வேண்டும். கெசட் நோட்டிபிகேஷனிலிருந்த உண்மை நிலையை இங்கே அமைச்சரவர்கள் சொன்னார்கள். நாமேகூட சில சட்ட முன்வடிவுகளை இன்னும் பரிசீலிக்க இருக்கிறோம். சென்ற ஆண்டுகளில் கெசட் நோட்டிபிகேஷன் காலம் கடந்து வந்ததால், எந்த அளவு சிக்கல்கள் வந்திருக்கின்றன என்பதை, சட்ட முன்வடிவு இங்கே வருவதன் மூலம் நாம் அறிய முடிந்தது. இன்னொன்று, அரசாங்கத்தில் சில கடமைகளைச் செய்ய வேண்டிய காலத்தில் செய்யத் தவறினால், இந்தச் சட்டமன்றம் எப்படி பாதிக்கப்படுகிறது, எப்படி அதிகப்படியான வேலையை அது உருவாக்குகிறது என்பதையும் நாம் அறிய முடிந்தது. கெசட் நோட்டிபிக்கேஷன் உரிய காலத்தில் வந்திருந்தால், இப்படிப்பட்ட சட்டத் திருத்தம் இங்கே கொண்டுவரப்படுவதும், அதன் மூலம் இந்த அவைக்கு ஏற்படுகின்ற அதிகப்படியான பணிகளும் தவிர்க்கப்பட்டிருக்கும். ஆனால், செய்யத் தவறியது எங்கள் ஆட்சிக் காலத்தில் அல்ல, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லலாம். இது இப்போதும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது என்பதை, பின்னால்



1981 மார்ச் 9] [திரு. க. இராமமூர்த்தி]

வருகின்ற சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்யப்படும்போது, நான் சுட்டிக் காட்டுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்பதையும் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டத் திருத்தம் அவசியம் தேவை என்ற அளவிலே கொண்டு வரப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட இந்தக் காரியத்திற்கு மட்டும் மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்தச் சட்டத் திருத்தம் துணை புரிவதாக இருக்க வேண்டுமே தவிர இனிமேல் இதுபோன்ற பிரச்சினை எப்போது வேண்டுமானாலும் எழலாம், அப்போது எல்லாம் "ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்" என்கிற முறையில் நடவடிக்கை எடுக்க அதிகாரம் கொடுத்துவிடுவோம் என்று நினைக்கக் கூடாது. எனக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் மீது முழு நம்பிக்கை இருக்கிறது. அவர் அவசியமற்ற காரியங்களுக்கு இதைப் பயன்படுத்த மாட்டார்கள். இது நிரந்தரச் சட்டம். நடுவில் அமைச்சர்கள் மாறலாம், அமைச்சரவைகள் மாறலாம் என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவேதான் சொல்கிறேன், எதிர்காலத்திற்கும் சேர்த்து ஒரு சட்டத் திருத்தத்தை நிறைவேற்றக் கூடாது. எதிர்காலத்தில், எவ்வளவு காலத்திற்கு வேண்டுமானாலும் என்கிற அளவில் ஒரு திருத்தத்தை நிறைவேற்றுவது உகந்ததாக இருக்காது. மாண்புமிகு அமைச்சரவர்களின் சட்டத் திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் சட்டத் திருத்தம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் போது, அவர்களும் ஏற்றுக்கொள்ளுகின்ற முறையில் இன்னொரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்து, அவசியமான குறிப்பிட்ட பணிக்கு மட்டும் இந்தத் திருத்தம் இருக்க வேண்டுமென்ற அளவில் அது அமைய வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

(முற்பகல் 11-50)

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கொடுத்திருக்கிற திருத்தத்தை வழிமொழிந்து நான் பேசுகிறபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்த விளக்கத்தில் ஒரு உண்மையைச் சொன்னதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். எஸ்.எஸ்.எல்.சி. படித்த அலுவலர்கள் சிலர் பாதிக்கப்படுகிறார்கள், அவர்கள் தொடர்ந்து பணி புரிந்தும், அவர்கள் அந்தப் பணியில் வரன்முறைப்படுத்தப் படாமலும், அந்தப் பணிக்கு உரிய சிறப்புக்களைப் பெற முடியாமலும் இருக்கிறார்கள் என்றும், அவர்களைக் காப்பதற்கு இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்படுகிறது என்றும் சொன்னார்கள். நான் இந்தச் சந்தர்ப்பத்திலே அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 1963-லே வீட்டு வசதி வாரியத்தின் கீழ், அந்த வாரியம் தனியாக அமைக்கப்பட்டதால், ஒரு

அட்டானமஸ் பாடியாக இருப்பதால், யார் யார் எந்தெந்தக் கல்வித் தகுதியோடு பணி புரிய வேண்டும் என்று அவர்கள் ஒரு நியதி வைத்தார்கள். 1965-லே எஸ்.எஸ்.எல்.சி. தான் குறைந்தபட்சக் கல்வித் தகுதி என்று திருத்தப்பட்டது. ஆனால் அது விதியே அல்ல. அது கெசட்டில் நோட்டிஃபை செய்யப்படவே இல்லை. அதிகாரிகள் வெறும் தாளிலே எழுதி வைத்துக்கொண்டார்கள். வெறும் காகிதத்திலே எழுதி வைத்த ஒன்றுதானே தவிர, அது அரசாணை அல்ல. அரசாணை என்று சொன்னாலே, அதை கெசட்டிலே 'பப்ளிஷ்' பண்ண வேண்டும். ஒரு சட்ட முன்வடிவை எடுத்துக்கொண்டால், அது இரண்டு அவைகளிலேயும் பாசாகிவிட்டாலும், கடைசியிலே அது ராஷ்ட்டிரபதிக்குச் சென்று அவருடைய கையெழுத்து பெற்ற பிறகுதான் ஆணையாகிறது. ஆகவே, அரசு 'ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' கொடுக்க வேண்டாம், அதைச் சட்ட மன்றத்திலே வைத்து 'பாஸ்' பண்ணினால் போதும். அதிகாரிகள் தவறு செய்ய இடம் கொடுக்கக்கூடாது. நாம் சட்டங்களை வகுத்துக் கொடுப்பது அவர்களுடைய கையிலே, அவர்கள் செயல்படுத்துகிறார்கள். தவறு ஏற்படும்போது அதைக் கண்டிக்க நாம் இருக்கிறோம். இந்த நிலையிலே 1963-லே அந்த விதி வந்து ஏன் அது பற்றிய கெசட் நோட்டிபிகேஷன் வரவில்லை? அதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் யார்? இவற்றுக்கெல்லாம் காரணம் என்னவென்று பார்க்க வேண்டும். 'ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' கொடுக்க வேண்டுமானால் கூட, சட்டத்தை அதற்கென்று நிறைவேற்றிக்கொண்டு வரவேண்டும் என்ற தேவையில்லை. உச்ச நீதிமன்றத்திலே, தலைமை நீதி மன்றத்திலே இவைகள் இருக்கின்றன. ஒரு அரசாணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்துதான் அமுல்படுத்தப்பட வேண்டும். பி.ஏ. குறைந்தபட்சக் கல்வித் தகுதி என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் கூட இருக்கிறார்கள். அவர்களை அப்படியே வைக்க வேண்டும் என்று நாம் நினைக்கிறோம். இப்போது ஒரு பதவிக்கு பி.ஏ. தான் தகுதி என்று வைத்திருக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். வேலையில்லாத் திண்டாட்டம் உச்சகட்டத்திற்கு வந்து எம்.ஏ. பட்டம், டாக்டரேட் பட்டம் எல்லாம் பெற்றவர்கள் நிறைய இருக்கிறார்கள். ஆகவே, இனிமேல் அந்தப் பதவிக்கு எம்.ஏ. தான் குறைந்தபட்சத் தகுதி என்று வைத்து, அதற்கு 'ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' கொடுத்தால், ஏற்கனவே அந்த வேலையில் இருப்பவர்கள் அதை விட்டுவிட்டுப் போகும் நிலைதான் வரும். ஆகவே, 'ரெட்ராஸ்ப்பெக்டிவ் எபெக்ட்' கொடுத்தால், ஏற்கனவே அந்த வேலையில் இருப்பவர்களின் உரிமையைப் பாதிக்கும். இப்போதிருக்கும் 200-க்கும் மேற்பட்ட ஊழியர்



களைக் காப்பதற்கு உறுதுணையாக இருந்து, இங்கு குறிப்பிட்ட கருத்துக்களின் அடிப்படையில் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

* **மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே பதில் சொல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் சரியாகப் புரிந்து கொள்ளும் வகையில் சொல்லவில்லை என்று கருதுகிறேன். எனவே மீண்டும் சொல்கிறேன். 1961 ஆம் ஆண்டு ஹௌசிங் போர்டு வந்தபோது, அப்போதிருந்த நியதியின்படி குறைந்தபட்சப் படிப்பு எஸ்.எஸ்.எல்.சி. இருந்தாலும் போதும் என்ற நிலைமை இருந்தது. 1963-ல் பட்டதாரிகள் வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள். அது கெசட்டில் வெளியிடப்படாத காரணத்தால், விதியாக வரவில்லை. 1975-ல் தான் கெசட்டில் வெளியிட்டிருக்கிறார்கள். இதற்கிடையில் தவறுகளுக்கு மேல் தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. எந்த ஆட்சியிலே, யார் யார் தவறுகளைச் செய்தார்கள் என்று நான் சொல்ல விரும்பவில்லை. 1963-க்கும், 1969-க்கும் இடையிலே, 1965-லே மறுபடியும் குறைந்தபட்சத் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. இருந்தால் போதும் என்று அறிவித்தார்கள். அதையும் கெசட்டில் வெளியிடவில்லை. வெளியிடாத காரணத்தால், 1963-ல் முடிவெடுத்து 1975-ல் கெசட்டில் வெளிவந்தபடி, பட்டதாரிகள் வேண்டும் என்ற விதி ஆகிவிட்டது என்று சொன்னால், 1963-க்கு முன்னாலும் 1965-க்குப் பின்னாலும் எடுக்கப்பட்ட எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுடைய நிலை என்ன? 1975-லே மீண்டும் ஒரு விதியைக் கொண்டு வந்து குறைந்தபட்சத் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. என்று முடிவெடுத்து, 1977-ல் கெசட்டிலே வெளியிட்டிருக்கிறார்கள். இப்போது எஸ்.எஸ்.எல்.சி. போதும் என்று ஆகிவிட்டது. உயர்நீதி மன்றத் தீர்ப்புப்படி 1974 வரையில் இருக்கக்கூடிய நிலை குறைந்தபட்சத் தகுதி பட்டதாரி என்பது. இந்த "situation லேயிருந்து "how to extricate ourselves" எப்படி வெளிவருவது என்றுதான் "retrospective effect" என்று இப்போது கொண்டு வந்திருக்கிறோம். ஹௌசிங் போர்டில் யார் தவறு செய்தார்கள் என்று பார்த்து, தக்க நடவடிக்கை எடுப்பது பற்றி இனிமேல் நாங்கள் பரிசீலனை செய்கிறோம். நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே சொல்லிவிட்ட பிறகு, நாங்கள் எடுத்துத்தான் ஆக வேண்டும். கேட்டால் சொல்லலாம், 'எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்' என்று சொல்லலாம். ஒரு ரெகுலேஷன் கொண்டு வந்து விதியாக்கி, கெசட்டிலே வெளியிட்டு அமுல்படுத்த வேண்டும் என்று . .

சொன்னால், சட்டமன்றத்திற்குக் கொண்டு வந்து அதை நிறைவேற்ற வேண்டும். எந்தச் சிரமமும் இல்லாமல், ஹௌசிங் போர்ட் ஒழுங்காக நடப்பதற்காக இனிமேல் எந்த விதி கொண்டு வந்தாலும், கெசட்டிலே வெளியிட 'ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் "presently" என்று இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இப்பொழுது இருக்கும் நிலைதான் அது. அவர் ஒரு லாயர். லாயர்களை எடுத்துக்கொண்டாலே ஒருவருக்கொருவர் வித்தியாசம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஒரு வழக்கறிஞர். நான் எஸ்.எஸ்.எல்.சி. மட்டும் படித்தவன். அப்படிச் செய்தால், the very purpose of the Bill will be defeated". எங்களைப் பொறுத்தவரையில், இதற்கு மட்டும் அல்ல, வேறு விதிகளைக் கொண்டு வரும்போதும் "retrospective effect" வேண்டும் என்று கருதினால், அதற்கும் உபயோகமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இவ்வாறு கொண்டு வரப்படுகிறது. The word "presently not serve the purpose.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா ?

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் வலியுறுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"In clause 2, for the word 'Retrospective', substitute the word "presently".

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு வீட்டு வசதி வாரிய (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1981) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.





மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு வீட்டு வசதி வாரிய (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

**தீர்மானம்**, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(நண்பகல் 12-00)

(2) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு தனிக் குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண 20/1981).

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தனிக் குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன்வடிவினை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1981) ஆய்வு செய்வதற்காக, 27 உறுப்பினர்கள் அடங்கிய (18 சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களும், 9 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைப்பதில் சட்டப் பேரவைக்கு, மேலவை தனது இசைவைத் தெரிவிக்கிறது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு கீழ்க்காணும் மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் :—

1. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்.
2. திரு. ச. வே. அ. வள்ளிமுத்து.
3. திரு. எஸ். முத்து.
4. திரு. ஜேப்பியார்.
5. திரு. ம. சங்கரலிங்கம்.
6. திரு. க. இராமமூர்த்தி.
7. திரு. எ. ஆர். தாமோதரன்.
8. திரு. ப. மாணிக்கம்.
9. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**426 தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வீட்டுவசதி வாரிய (திருத்தச்) சட்ட உரிமைச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1981)**

[1981 மார்ச் 9

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

" தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தனிக் குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்ட முன்வடிவினை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1981) ஆய்வு செய்வதற்காக, 27 உறுப்பினர்கள் அடங்கிய (18 சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களும், 9 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைப்பதில் சட்டப் பேரவைக்கு, மேலவை தனது இசைவைத் தெரிவிக்கிறது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு கீழ்க்காணும் மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் :—

1. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்.
2. திரு. ச. வே. அ. வள்ளிமுத்து.
3. திரு. எஸ். முத்து.
4. திரு. ஜேப்பியார்.
5. திரு. ம. சங்கரலிங்கம்.
6. திரு. க. இராமமூர்த்தி.
7. திரு. ஏ. ஆர். தாமோதரன்.
8. திரு. ப. மாணிக்கம்.
9. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்ட முன்வடிவுகள் 3 முதல் 8 வரை ஒரே பொருள் குறித்து இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர்கள் பொது வாகவே அவற்றைப்பற்றி விவாதிக்கலாம். பின்னர் சட்ட முன்வடிவுகள் தனித் தனியாக அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்படும்.



(3) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1981).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "
என முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எல்லா மசோதாக்களின் பேரிலும் உறுப்பினர்கள் தங்களின் கருத்துக்களைச் சொல்லிவிடலாம். ஆனால் வாக்கெடுப்புக்கு விடப்படும்போது, ஒவ்வொரு சட்ட முன்வடிவாக அவை எடுத்துக்கொள்ளும்.

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறைக்குப் புதிதாகப் பொறுப்பேற்ற பிறகு, இப்போது இரண் டாவது முறையாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், உள்ளாட்சி மன்றங்களுக்குரிய தேர்தல்களைத் தள்ளிப் போட்டு, தனியதிகாரி களின் காலத்தை நீட்டிக்கக் கோரி அவை முன் வந்திருக்கிறார். இவருக்கு முன்பாக, அகில இந்திய அண்ணா தி.மு.க.-வின் ஆட்சியில் இத் துறைகளின் பொறுப்பேற்றிருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதேபோன்று பலமுறை நீட்டிப்புக் கோரி அவையின் முன்வந்து ஒப்புதல் பெற்றிருக்கிறார். அப்படி ஒவ்வொரு முறையும் அதற்கான சட்ட முன்வடிவு நிறைவேற்றப்படும் போது வழக்கமாக ஒரு வாக்குறுதியைத் தந்து வந்தார். அதாவது நிச்சய மாக இந்தக் கால நீட்டிப்பிற்குள்ளாக தேர்தலை நடத்தியே தீருவோம் என்றும், எந்தச் சூழ்நிலை ஏற்பட்டாலும் உள்ளாட்சி மன்றங்களுக்கான

---

@ 487 ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. க. இராமமூர்த்தி] [1981 மார்ச் 9

தேர்தல்களை நடத்தி முடித்துவிடுவோம் என்றும் உறுதி அளித்து வந்திருக்கிறார். எனவேதான் புதிதாக இத்துறைக்குப் பொறுப்பேற்றுள்ள இன்றைய அமைச்சர் முதல் முறையாக கால நீட்டிப்புக் கோரி இந்த அவை முன் வந்த போது, நான் உரிமையோடு ஒரு கருத்தைச் சொன்னேன். "இப்படிப்பட்ட அனுபவம் எங்களுக்கு நிறைய இருக்கிறது. ஏற்கெனவே உங்கள் பக்கத்திலே அமர்ந்து இருக்கும் அமைச்சர் அவர்கள் என்ன செய்துவந்தார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும். எனவே சில ஆண்டுகளுக்கு ஒட்டுமொத்தமாக நீங்கள் கால நீட்டிப்பைக் கேட்பது சரியாக இருக்கும். உங்கள் பதவிக் காலம் முடிவடையும்வரை உங்களை யாரும் தேர்தலை ஏன் நடத்தவில்லை என்று கேட்க முடியாத அளவுக்கு ஒரு கால நீட்டிப்பைக் கேட்கலாம், அவகாசமாகத் தேர்தலை நடத்தலாம். எதற்காக இப்படி அடிக்கடி சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வந்து உள்ளாட்சி மன்றங்களைப்பற்றி எங்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

இன்றைய நிலையில், உள்ளாட்சி மன்றங்கள் இருந்ததையே மக்கள் மறந்துவிட்டார்கள். பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து ஒன்றியங்களும், நகராட்சிகளும், மாநகராட்சிகளும் எந்தப் பணிக்காக இருக்கின்றன, எதற்காக அவைகள் தேவைப்படுகின்றன என்ற விவரமெல்லாமே மக்களுக்கு மறந்துவிட்டன. "மக்கள் மறந்துவிட்ட இவைகளைப்பற்றி மீண்டும் அவைகளுக்கு உயிர் அளிக்கும் வகையில் எதற்காக அடிக்கடி கால நீட்டிப்பு கோரி சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வருகிறீர்கள்? விளையாட்டு போல எதற்காக இவைகளை நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறீர்கள்? எங்களைப் பொறுத்த வரையில், உங்களுக்கு முழு அதிகாரத்தையும் கொடுத்துவிடுகிறோம். நீங்கள் எப்போது விரும்புகிறீர்களோ அப்போது புதிதாகத் தேர்தலை நடத்துங்கள்" என்று சொல்லுகிற அளவுக்குத்தான் எங்களின் எண்ண ஓட்டங்கள் இருந்து கொண்டிருக்கின்றன.

உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும் என்று நாங்கள் கேட்கும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களைப் பார்த்து "அந்த மாநிலத்தில் நடந்ததா அல்லது இந்த மாநிலத்தில் நடந்ததா" என்றெல்லாம் கேட்பது வாதப் பிரதிவாதங்களுக்குத் துணையாக இருக்குமே தவிர, அது உண்மை நிலையைப் பிரதிபலிப்பதாகாது. ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள சூழ்நிலைகள் என்ன, ஒவ்வொரு மாநிலமும் எப்படி மாறுபட்டிருக்கின்றது என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்து அதன் அடிப்படையில்தான் நாம் இதை அணுக வேண்டும்.



1981 மார்ச் 9] [திரு. க. இராமமூர்த்தி]

(மாற்றுத் தலைவர் திரு. க. அருணாசலம் தலைமை)

இன்றைக்குத் தேர்தல்கள் நடைபெறாததன் காரணமாக உள்ளாட்சி மன்றங்கள் எந்த அளவுக்குச் செயல்படாமல் இருக்கின்றன என்பதையும், அதன் காரணமாக மக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். பொதுவாக லஞ்ச ஊழல் என்பது மாநிலத்தில் தலைமையிலிருந்து கீழ்மட்டம் வரை தலை விரித்தாடிக் கொண்டிருப்பதற்கான மூல காரணமே இன்றையதினம் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அமைப்புகள் இல்லாததுதான் என்பதை நாம் உணர வேண்டும். அரசாங்கப் பணிகளைப் பொறுத்தவரை, அவை நாள்தோறும் விரிவடைந்து கொண்டே இருக்கின்றன. அரசு எந்தக் காரியத்தைச் செய்ய விரும்பினாலும், அதை உள்ளாட்சி மன்றங்கள் மூலமாகத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. சாலை வசதியானாலும், தண்ணீர் வசதியானாலும், சுகாதார வசதியானாலும், அல்லது கல்வி வசதியானாலும், எதுவானாலும் உள்ளாட்சித் துறையின் ஒத்துழைப்பில்லாமல் செய்துவிட முடியாது என்பதை நாம் அறிவோம். சாதாரணமாக வேலைக்கு உணவுத் திட்டம் என்றால்கூட, அதை உள்ளாட்சி மன்ற அமைப்புகள் மூலம்தான் நிறைவேற்றுகிறோம். அதில் நடக்கும் குறைகளை நாங்கள் எடுத்துச் சொன்னால், அரசுத் தரப்பிலிருந்து என்ன பதில் அளிக்கப்படுகிறது என்றால், "ஒன்று அப்படிப்பட்ட தவறுகள் நடைபெறவில்லை. அல்லது அவைகளைத் தவிர்க்கிறோம் அல்லது அவைகள் இனி நடவாமல் பார்த்துக்கொள்ளுகிறோம்" என்பதுதான்.

வறட்சியானாலும், வெள்ளம் புயலானாலும், பஞ்சமானாலும், சாலை வசதியானாலும், எந்தப் பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்தவரை குற்றச்சாட்டுகள் வராமல் இருக்கின்றனவா? அரசுத் தரப்பில் வேண்டுமானால், "அவைகளை நாங்கள் மறுக்கிறோம் என்றோ, அவைகளைப்பற்றி விசாரிக்கிறோம் என்றோ" சொல்லிக்கொள்ளலாம். ஆனால் உள்ளாட்சி மன்றங்கள் மீது குற்றச்சாட்டு இல்லாமல் இருக்கின்றதா என்பதுதான் பிரச்சினை. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்தால், இதுபோன்ற குற்றச்சாட்டுகள் வராமல் இருக்குமா என்றால் அது வேறு. இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களின் எண்ணிக்கையாவது வெகுவாகக் குறையும்.

இன்றைக்குப் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து ஒன்றியங்களும் செயல்படுவதே இல்லை. பஞ்சாயத்துத் தலைவர்களையும் இந்த அரசு ஏற்கெனவே வீட்டிற்கு அனுப்பிவிட்டது. அதைப்போலவே கிராம அதிகாரிகளை

[திரு. க. இராமமூர்த்தி] [1981 மார்ச் 9

விட்டிற்கு அனுப்பியாகிவிட்டது. ஆக, கிராம அதிகாரிகளும் இல்லை, பஞ்சாயத்துத் தலைவர்களும் இல்லை. யாரிடம் எதைக் கேட்பதென்றே மக்களுக்குப் புரியவில்லை.

மாநிலம் முழுவதும் வறட்சி நிலைமை இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில மாதங்களுக்கு முன்பே இப்படிப்பட்ட வறட்சிப் பகுதிகளைச் சென்று நேரில் பார்ப்பதாக அறிவித்தார்கள். ஆனால் இன்றைக்குத்தான் தொடங்கியிருக்கிறது என்று நினைக்கிறேன். அது எப்படி இருந்தாலும், மாநிலத்தில் வறட்சி இருக்கிறது என்ற நிலைமை ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகு, அதற்கான நிவாரணப் பணிகளை உடனடியாக இந்த அரசு மேற்கொண்டாக வேண்டும். முதலில் கிராமங்களில் நியாய விலைக் கடைகளைத் திறந்தாக வேண்டும். மக்களுக்கு அடிப்படையான உணவுப் பொருள்கள் கிடைக்க வழி செய்தாக வேண்டும். இவற்றை உறுதிப்படுத்த மக்கள் சார்பில் நின்று அரசைக் கேட்கவும், அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள், அல்லது துயர் துடைப்புப் பணிகள் சரியாக நடைபெறுகின்றனவா என்பதைக் கண்டறியவும் பஞ்சாயத்துத் தலைவர்கள் இருக்க வேண்டாமா? இன்றையதினம் யாரும் கிடையாது. கிராம அளவில் கிராம அதிகாரிகளும் இல்லை, பஞ்சாயத்துத் தலைவர்களும் இல்லை. இதனால் நாட்டு மக்கள் அனாதைகளாக நடுத் தெருவில் நிற்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பஞ்சாயத்து ஒன்றியங்களைப் பொறுத்தவரை, அங்கே பணியாற்றும் பி.டி.ஓ.க்களானாலும் சரி, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களானாலும் சரி, தாங்கள் பணியாற்றும் இடத்திலிருந்து வேறு எங்கேயும் போக மாட்டோம் என்று சொல்லுகிற அளவுக்கு அவர்கள் பணியாற்றும் இடங்களையே ஒரு சொர்க்க பூமியாக மாற்றிக் கொண்டுவிட்டார்கள். எனவேதான் எங்கே பார்த்தாலும், லஞ்ச ஊழல் தலைவிரித்தாடும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. ஏதோ இந்த அரசின் மீது களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சொல்வதாகக் கருதக்கூடாது. எந்த ஆட்சியிலும் இதுபோன்ற சூழ்நிலைகளில், இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாவதைத் தடுக்க முடியாது. இந்த நிலைமையைத் தவிர்க்க வேண்டும் என்றால், அதற்கு அரசின் செயல்முறைகள் இன்னும் மிகுந்த அளவுக்கு கண்காணிப்போடு இருக்க வேண்டும் அல்லது உள்ளாட்சி மன்றங்களுக்கு முறையான தேர்தல்கள் நடத்தப்பட்டு, மக்கள் அமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.



1981 மார்ச் 9] [திரு. க. இராமமூர்த்தி]

(பிற்பகல் 12-10)

ஜனநாயகத்தில் இருக்கின்ற மிகப் பெரிய வாய்ப்பு, பாதுகாப்பு "செக்ஸ் அண்டு பேலன்சஸ்" (checks and balances) என்பதுதான். நிர்வாக இயந்திரம் அதிகார பூர்வமாக உள்ளவர்களையும், அதிகார பூர்வமற்றவர்களையும் வைத்துக்கொண்டு இயங்குகிறது. அரசாங்க அதிகாரிகள்தான் இருக்கிறார்களே நிர்வாகத்திலே, அதற்கு மேல் ஏன் அமைச்சரவையை வைத்துக்கொண்டிருக்கிறோம்? இந்த இரண்டும் முறையோடு செயல்பட்டால்தான், ஜனநாயகத்தின் முழுப் பலனையும் அடைய முடியும். அதேபோலத்தான் மாநகராட்சியானாலும், நகராட்சியானாலும், பஞ்சாயத்து ஒன்றியமானாலும், பஞ்சாயத்து ஆனாலும், அவைகளிலே அதிகாரிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதிகாரப் பற்றற்றவர்களும் செயல்படக் கூடிய அளவிற்கு அந்த அமைப்பு இருக்கிறது. ஒருவேளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த அமைப்புகளில் மக்கள் குழுக்கள் இருக்கின்றன என்று உரிமையோடு சொல்லலாம். அந்த நியமன மக்கள் குழுக்கள் என்ன அதிகாரத்தைப் பெற்றிருக்கின்றன? யாருடைய தலைமையின் கீழ் இயங்குகிறது? அதிகாரப் பற்றற்றவர்களைக் கொண்டு போய் அதிகாரம் படைத்த பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களின்கீழ் பணியாற்ற வேண்டும் என்று வைத்திருக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்துக் கமிஷனர்களின் தலைமையின் கீழ் இயங்க வேண்டுமென்ற நிலைமையை உருவாக்குகிறபோது, அது அவர்களுடைய தகுதிக்குக் குறைவு, மரியாதைக்குக் குறைவு என்று சொல்லவில்லை, ஆனால் இந்த அமைப்பினுடைய முக்கியத்துவமே குறைந்து போகிறது என்றுதான் சொல்லுகிறேன். ஆகவே மாற்றாக அமைக்கின்ற அமைப்புக் கூட முறையாகச் செயல்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கு நடந்துவரும் நடவடிக்கைகளை வரவழைத்துப் பார்த்தால், தெரியும். மக்கள் குழுக்கள் ஓரிடத்திலே கூட ஒழுங்காகச் செயல்படவில்லை. செயல்பட வேண்டும் என்பதில் அவர்களுக்கு ஆர்வம் உண்டு. ஆனால் அந்த அதிகாரப் பற்றற்றவர்களுக்கு சட்டபூர்வமான அதிகாரம்—லீகல் சாங்டிட்டி—கிடையாது என்ற அளவிலே வார்த்தைகளை முன்னெச்சரிக்கையாகப் போட்டு கூட்டத்திற்கு B.D.O. -க்கள் அழைப்பு விடுத்திருக்கிறார்கள். இந்த அளவிற்கு முக்கியத்துவமற்ற அமைப்பிலே சென்று அங்கே பணியாற்ற வேண்டிய அவசியம் யாருக்கு இருக்க முடியும்?

[திரு. க. இராமமூர்த்தி] [1981 மார்ச் 9

பஞ்சாயத்து ஒன்றியங்களிலிருந்து அவர்கள் விநியோகம் செய்துள்ள சிமென்டுக்குக் கணக்குக் காட்ட முடியுமா? எத்தனை ஆயிரம் மூட்டைகளுக்கு இந்தப் பஞ்சாயத்து ஒன்றிய ஆணையாளர்கள் பெர்மிட்டுகளைக் கொடுத்திருக்கிறார்கள்? அந்த அளவிற்குக் கட்டிடங்கள் அந்த எல்லைக்குள்ளே கட்டப்பட்டிருக்கின்றனவா? மைலம் பஞ்சாயத்து யூனியனில் எத்தனை மூட்டைகளுக்கான சிமென்ட் பெர்மிட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன? அதற்கான கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றனவா? அல்லது என்ன, காரணத்திற்காக பெர்மிட் வழங்கப்பட்டதோ அதற்கான வேலை நடைபெற்றிருக்கிறதா என்பதைப் பார்வையிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யாரை அனுப்பி விசாரிப்பதானாலும் நான் பொறுப்பேற்கத் தயாராக இருக்கிறேன். சிமென்ட் பெர்மிட்டை வாங்கி ஒரு மூட்டைக்குப் பத்தோ, பதினைந்தோ என்று வாங்கிக் கொண்டு யாருக்காவது அந்த பர்மிட்டை விற்றுவிடக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. இப்படித் தங்களுக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி மற்றவர்களை மிரட்டக்கூடிய அளவிற்கு, இதையெல்லாம் அன்றாடத் தொழிலாகக் கொண்டிருக்கும் செல்வாக்கு படைத்தவர்கள் அங்குள்ள கமிஷனர்களை வைத்துக்கொண்டிருக்கக்கூடிய அளவிலேதான் அந்த அமைப்புகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்றைச் சொன்னேன். இதுபோன்று பல துறைகளில் நடக்கின்றன.

சாலைப் பணிகளைப் பொறுத்த வரையில், வறட்சி நிவாரணப் பணியின் கீழ் பல வேலைகளைத் துவங்கியிருக்கிறார்கள். வெள்ள நிவாரணப் பணியின் கீழ் போடப்பட்ட பாதைகள் எல்லாம் இப்போது எப்படி இருக்கின்றன என்பதைத் தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போய் நேரில் பார்க்க வேண்டும். எல்லா இடத்திற்கும் அவரால் போக முடியாவிட்டால், யாரையாவது அனுப்பி விசாரித்துப் பார்க்க வேண்டும். நானே பல இடங்களில் போய்ப் பார்த்தேன். அங்கே பாதைக்காகப் போடப்பட்டிருக்கின்ற கற்கள், கருங்கல் ஜல்லிகள், நொறுங்கி மாவு போல ஆகக்கூடிய அளவிற்கு சப்-ஸ்டாண்டர்டாக இருக்கின்றன. இதையெல்லாம் கண்காணிக்க யார் இருக்கிறார்கள்? பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து ஒன்றியங்கள் செயல்பட்டிருந்தால், அந்தந்த ஊரினுடைய தேவையை, நன்மையைக் கருதி, பஞ்சாயத்துத் தலைவர்கள், ஒன்றிய உறுப்பினர்கள் எடுத்துச் சொல்வார்கள். இப்படிப்பட்ட தவறுகள் எல்லாம் நடப்பதற்குக் காரணம் இந்த ஆட்சிதான், இந்த அமைச்சரவைதான் என்று சொல்ல முடியும். ஆனால் நான் நிச்சயமாக



1981 மார்ச் 9] [திரு. க. இராமமூர்த்தி]

அப்படிச் சொல்ல விரும்பவில்லை. கீழ் மட்டத்திலே அமைப்புகள் இல்லாததன் விளைவாக, இவற்றையெல்லாம் கண்காணிக்க, நடைமுறைப்படுத்த யாரும் இல்லை. இதனால்தான் இந்தச் சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன.

குடிநீருக்காக தமிழகம் முழுவதும் மக்கள் ஆலாய்ப் பறந்து கொண்டிருக்கிறார்கள். குடிநீர் பற்றாக்குறை பஞ்சமாக நாட்டிலே உருவெடுத்துக் கொண்டிருக்கிறது. குடிநீர் இல்லாததால் ஆடு, மாடுகளுக்குக்கூட தண்ணீர் இல்லை. ஆகவே கிராமம், கிராமமாகக் குடிபெயர்ந்து போகக்கூடிய சூழ்நிலைக்கு தமிழகம் ஆளாகிக் கொண்டிருக்கிறது. இதற்கான அவசர நடவடிக்கைகளை, போர்க்கால நடவடிக்கை போல் எடுக்க வேண்டும். இப்படிப்பட்டவைகளையெல்லாம், சட்டமன்றம் எப்போது கூடுமோ என்று பார்த்து, கூடிய பிறகு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமும், ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மூலமும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து நாங்கள் எடுத்துச் சொல்லுவதற்குக் காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் உருவாகிறபோது, உடனுக்குடன் அது பற்றி நடவடிக்கை எடுக்க பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து ஒன்றியங்களும் இருந்தால், உதவியாக இருக்குமா இல்லையா?

அதேபோல நகராட்சிகளைப் பொறுத்த வரையில், பெரும்பாலானவற்றில் இலஞ்சம் வாங்கும் வேலைதான் நடைபெற்று வருகின்றது. சில நகராட்சிகள் விதிவிலக்காக இருக்கலாம். எந்த முறையிலே பணம் வாங்குவது என்பதைப் பற்றித்தான் அவர்கள் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திண்டிவனத்திலே நடந்துபோய் பார்க்க வேண்டும். இத்தனை ஆண்டுக்காலமாக எந்த வேலையும் நடைபெறவில்லை. ஒன்றரை மாதத்திற்கு முன்புதான் சாலையைக் கொத்தினார்கள். வேலை நடந்து வருகிறது என்று நினைக்கிறேன். பாதை கொத்தப்பட்டு, பகுதியாகக் கொத்தப்பட்ட நிலையிலேயே நின்று விட்டது. இடையிலே காண்ட்ராக்டர் சரியில்லையா, இல்லை என்ன நடந்தது என்று தெரியவில்லை. ஒருவேளை இதிலேயும் இலஞ்சம் வாங்கி விட்டார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. அந்தச் சாலை வேலைகள் அப்படியே நின்றுவிட்டன. நகராட்சி மன்றத் தலைவர் இருந்திருந்தால், நகராட்சி மன்ற உறுப்பினர்கள் இருந்திருந்தால், அவர்களை இப்படி நடமாட விட்டுவைப்பார்களா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். அதே நடவடிக்கையை நகராட்சி ஆணையாளர் மீது எடுக்க முடியுமா? அவர் எதைச்

செய்தாலும், எதைச் சொன்னாலும், அவருக்குப் பாதுகாப்பு இருக்கிறது. நகராட்சி மன்றங்கள் வேலை செய்யாததன் விளைவு, மக்களுடைய அன்றாடத் தேவைகள் கூட பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன.

(மாற்றுத் தலைவர் மணி அடித்தார்.)

ஆறு மசோதாக்களின் மீதும் பேச வேண்டியிருப்பதால் நான் நிறைய பேச வேண்டியிருக்கிறது.

ஆகவே இன்றைக்கு இருக்கின்ற மிகப் பெரிய சங்கடம், எங்கேயும் ஒரு வேலையும் நடைபெறவில்லை என்பதோடு மட்டுமல்லாமல், மக்களுக்கேகூட பாதுகாப்பு இல்லை. சுகாதாரக் கேடுகளின் விளைவாக புதிய நோய்கள் பரவியிருக்கின்றன என்ற வேதனை வெளியீடுகள், பள்ளிகளில் நடைபெற்று வரும் அவலங்கள் ஆகியவற்றையெல்லாம் பத்திரிகையிலே பார்க்கிறேன். பாதைகளைப் பொறுத்த வரையில், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். போக்குவரத்து அமைச்சர் அவர்களோடு தொடர்பு கொண்டு பல இடங் களுக்குச் சென்று பார்த்தால் தெரியும். பெரிய மனம் வைத்து நல்ல நோக்கத்தோடு கிராம மக்களுக்கு உதவி செய்ய பேருந்துகளை விடவேண்டு மென்று முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், ஓடிக்கொண்டிருந்த பல பேருந்துகள் ஓடாமல் நின்றிருக்கின்றன. அதற்குக் காரணம் என்ன வென்றால், பாதை வசதிகள் சரியாக இல்லை என்பதுதான். ஏற்கெனவே இருந்த ரோடுகள் கூட புழுதியாகிவிட்டன. பஸ் போனால் இருக்கின்ற ரோடுகள் கூட அழிந்துபோகின்றன. எனவே ஓடுகின்ற பஸ்களைக் கூட நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. உள்ளாட்சி மன்ற அமைப்புகள் இருந்திருந்தால், பாதைகள் அவ்வப்போது சரியாகச் செய்யப் பட்டிருக்கும். கிராமப்புறங்களில் இது போன்ற சூழ்நிலைகள் இருக்கின்றன. நகராட்சி மன்றம், பஞ்சாயத்து ஒன்றியம், பஞ்சாயத்துக்கள் இயங்கிக் கொண்டிருந்தபோது, பல்வேறு குறைபாடுகளை அவ்வப்போது சொல்லி வந்திருக்கிறோம். அவற்றைக் களைய வேண்டும் என்று நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறோம். அவைகள் இயங்காத நிலையிலே இந்தச் சூழ்நிலை எவ்வளவு விபரீதமாக மாறியிருக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்போது சென்சஸ் எடுத்துக் கொண்டிருக்கிறோம், ஆகவே தேர்தலை ஒத்திப் போடுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு முன்பு என்ன காரணம் சொன்னார்கள்



என்பது என்னுடைய நினைவுக்கு வருகிறது. அடுத்த முறை இதே போன்ற சட்ட முன்வடிவுகளை நிறைவேற்ற வரும்போது, தமிழகம் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது, போர்க் கால நடவடிக்கை எடுத்திருக்கிறோம், ஆகவே தேர்தலைத் தள்ளிப் போடுகிறோம், தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்க அவகாசம் தேவை என்று நிச்சயமாகக் கேட்கத்தான் போகிறார்கள். அதற்குப் பிறகு என்ன காரணத்தைச் சொல்லப் போகி றார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆகவே ஏதாவது ஒரு காரணம் வந்து கொண்டிருக்கும். இடையிலே ஒன்று தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலே வேண்டாம் என்றால் அதைத் தைரியமாக அறிவித்துவிட வேண்டும். இந்த இரண்டும் இல்லாமல், தேர்தலை நினைவுபடுத்திக் கொண்டே தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பது என்பது நல்லதல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

சென்னை, மதுரை மாநகராட்சிகளைப் பொறுத்து, ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். சுகாதாரத் தேவைகளைப் பொறுத்த வரையில், அதிகார அமைப்பு எவ்வளவுதான் முழுமையாகச் செயல்பட்டாலும்கூட, ஆங்காங்குள்ள குறைபாடுகளை சொல்லித்தான் தீர வேண்டும். சில அத்தியாவசியக் குறைபாடுகளை மட்டும் எப்படித் தீர்ப்பது என்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டும். ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் ஆகப்போகின்றன. 6 ஆண்டுகள் முடிந்து ஏழாவது ஆண்டை நோக்கிப் போய்க்கொண்டிருக் கிறோம். சென்னை மாநகராட்சியைச் சேர்ந்தவர்களுக்கு அப்படி ஒரு மாநகராட்சிக் கட்டிடம் எதற்கு என்பது தெரியவில்லை. அந்த அளவுக்கு அதைப்பற்றி மறந்துபோய்விட்டது. மாநகராட்சிகளிலே தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் இருந்தபோதே பல கோடி ரூபாய்களுக்கு ஊழல் நடை பெற்றதே என்ற எண்ண ஓட்டம் நமக்கு வருகிறது. அதையும் தாண்டி, "இன்றைக்கு அப்படி இருக்கும்போதே அவ்வளவு நடந்ததே, இப்போது எவ்வளவு நடக்கும்? நாம் தேர்தலை நடத்துவது வரையிலே என்னாகும்?" என்ற எண்ணம் வரும். அது மட்டுமல்ல, ஜனநாயக அரசு சில தவறுகளைக் கண்டுபிடித்த பிறகு அதை முறைப்படுத்தி மீண்டும் ஜனநாயகத்தைச் செயல் படுத்தவேண்டியதுதானே. அதுதானே நம்முடைய கடமை. அதைச் செய்ய வில்லையே. அதனுடைய விளைவாக நகராட்சிகளிலே அவலங்கள் அதிக மாகிக் கொண்டிருக்கின்றன என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

[திரு. க. இராமமூர்த்தி] [1981 மார்ச் 9

மதுரை மாநகராட்சி பற்றி நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. இப்போதுதான் பலகோடி ரூபாய்களை உலகத் தமிழ் மாநாடு பெயரால் அங்கே வளர்ச்சிப் பணிகளுக்காகச் செலவிட்டிருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டுகிறேன். ஆனால் அந்தப் பணிகள் எப்படி நடைபெற்றன என்பதைப் பார்க்க வேண்டும். நான் அப்போதே சொன்னேன். அங்கேயுள்ள மாநகராட்சி மன்றம் "அங்கே கழிப்பிடங்கள், கழிவறைகள் கட்டியதற்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை" என்று சொல்கின்றார்கள். பப்ளிக் ஒர்க்ஸ் துறையும் "எங்களுக்குத் தொடர்பில்லை" என்று சொன்னார்கள். கட்டிடத்தைக் கட்டியது வீட்டு வசதி வாரியம் (Housing Board) என்று சொல்கிறார்கள். இப்படி ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல், ஒன்றுக்கொன்று ஈடுபாடில்லாமல், அந்த வேலைகள் அங்கே நடைபெற்றிருக்கின்றன. அவற்றுக்கு வேண்டிய தண்ணீர் வசதியில்லாமல், சுவேஜ் வசதிகள் எப்படி அளிப்பது என்பது தெரியாமல் நடைபெற்றிருக்கின்றன. ஆகவே, அவைகள் மூடப்பட்டிருக்கின்றன. வேறு காரணங்களுக்காகவும் பூட்டப்பட்டிருக்கலாம். அங்கே பணத்தை வீணாகச் செலவிட்டிருக்கின்றார்கள் என்ற குற்றச் சாட்டைச் சொல்ல வரவில்லை. இதை எதற்காக நான் சொல்கிறேன் என்றால், முறைப்படுத்தி நன்றாகச் செயல்படுவதற்கான வாய்ப்புகள் இல்லாமல் இவற்றைச் செய்திருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். அங்கே நகராட்சி இயங்கவில்லையா? அது அங்கே இயங்கிக்கொண்டுதானிருக்கிறது. அதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அங்கேயும் இதுபோன்ற காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இறுதியாக இன்னொன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கோவையை மாநகராட்சி மன்றமாக அறிவித்திருக்கிறோம். அது இனிமேல் மாநகராட்சி மன்றமாக இயங்கும். ஆனால் அது மாநகராட்சி மன்றமாக இயங்க, எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எத்தனை ஆண்டுகாலமாக எடுத்துக் கொண்டிருப்பது? அதற்கு அளவே கிடையாதா? மதுரை மாநகராட்சி தேர்தலைத் தனித் தேர்தலாக நடத்தியதுபோல, சென்னையிலே தேர்தல் நடத்துவதிலே சங்கடம் இருக்குமானால், கோவைத் தேர்தலைத் தனியாக நடத்திவிட வேண்டியதுதானே. ஏன் அதற்கும் கால கெடுவை வளர்த்துக் கொண்டு போக வேண்டும் என்பதைப் பார்க்க வேண்டும். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீது குற்றம் சாட்டவில்லை. அவர்கள் பொறுப்பேற்று ஒரு ஆண்டு காலம் தான் ஆகிறது. அவர் பொறுப்பேற்ற



1981 மார்ச் 9] [திரு. க. இராமமூர்த்தி]

போது பிரச்சினைகளோடுதான் பொறுப்பேற்றார்கள். எனவே அவர் மீது குற்றம் சாட்டவில்லை. இந்த ஆட்சியின் மீது குற்றம் சாட்ட நான் விரும்ப வில்லை. ஆனால் இந்த அரசு கடைப்பிடிக்கின்ற கொள்கை தவறான ஒன்று. அது மட்டுமல்ல. ஆட்சி அலட்சியமாக நடப்பதுபோல அமைந் திருக்கிறது. இதன் விளைவாக நம் சமுதாயத்தில் அடித்தளத்திலே இருப்பவர்கள், எடுத்துச் சொல்ல முடியாதவர்கள், படிப்பும் வசதியும் இருந்தாலும்கூட, தங்களுடைய குறைகளைச் சொல்ல முடியாதவர்களுக்கு இருக்கிற குறைகளை யாரிடமும் தெரிவிக்க இயலவில்லை. அவர்கள் சொல்லொணாத துயரை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். சென்னையைப் பொறுத்த வரையிலே, ஒவ்வொரு ஹவுசிங் போர்ட் (Housing Board) காலனியாகச் சென்று பார்க்க வேண்டும். அது கடற்கரை (Foreshore: எஸ்டேட் காலனியாக இருக்கட்டும், சி.ஐ.டி. (C. I. T.) காலனியாக இருக்கட்டும், பீட்டர்ஸ் (Peters) ரோடு காலனியாக இருக்கட்டும். லாயிட்ஸ் (Lloyds) ரோடு காலனியாக இருக்கட்டும், அங்கேயெல்லாம் என்ன நடைபெறுகிறது? காம்பவுண்டு உள்ளே வந்து கள்ளச் சாராய வியாபாரம் நடைபெறாத இடமே கிடையாது. அந்தக் குடியிருப்புகளிலே சம்பந்தமில்லாதவர்கள் நிரந்தரமாகவே தங்கிக் கொண்டிருக்கிறார்கள். குடும்பம் குடும்பமாக தங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதை எவரும் பார்க்காமலிருக்க முடியாது. அங்கே சமூக விரோதிகள். செயல்பட்டுக் கொண்டிருப்பதை நாம் காணாமலிருக்க முடியாது. அவற்றையெல்லாம் சொன்னால், நமக்கு என்ன ஆபத்து வருமோ, அசிங்கம் ஏற்படுமோ என்று மென்று விழுங்கிக்கொண்டிருக்கின்ற குடியிருக்கும் அலுவலாளர்கள், படித்தவர்களைப் பார்க்க முடிகிறது. அந்த அளவுக்கு அவர்கள் மனம் குமுறிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமைகளிலே அவர்கள் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். இன்றைக்குப் பத்திரிகைகளிலே பார்த்தேன். சென்னை நகரத்திலே வீதியில் அலைந்துகொண்டிருப்பவர்களை எல்லாம், சமூக விரோத சக்தி களாக்கிக் காவல் துறையினர் அவர்களைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்தேன். ஏன் அந்தச் சூழ்நிலை எல்லாம் ஏற்பட்டது? எந்த அவசியம், இந்த நடவடிக்கைகளை எடுக்க வைத்தது? அரசு சொல்வது போன்ற சூழ்நிலைகள் தாமே காரணம்? முன்னர் நம் அவையிலேயே பேசினோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நகராட்சிப் பள்ளிகளிலே பலவற்றில் சாராயம் விற்றுக்கொண்டிருந்தார்கள் என்றும் அவைகள் பிடிக்கப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது

என்றும் சொன்னார்கள். நடவடிக்கைகள் எடுத்ததைப் பாராட்டுகிறேன். ஆனால், உரிய காலத்திலே இவைகளை அரசின் கவனத்திற்கு கொண்டுவர முடியாமல் போயிற்று. அங்கே ஒரு உள்ளாட்சி மன்ற உறுப்பினர் இருந்திருந்தால், அந்தப் பகுதி மக்கள் உலுக்கியிருப்பார்களா இல்லையா? இதுமாதிரியெல்லாம் நடக்கிறதே, எங்கள் குழந்தைகள் எப்படிப் படிப்பது என்று கேட்டிருப்பார்களா இல்லையா? ஆகவே சராசரி மனிதன், வாய்ப்புகளும் வசதிகளும் இல்லாத மனிதன் வாய் திறந்து தன்னுடைய குறைகளை உரத்த குரலிலே சொல்லமுடியாதவர்களுடைய குறைகள் எதிரொலிக்கப்பட வேண்டாமா? ஏழை எளிய மக்களுடைய குறைகளைச் சொல்ல முடியாத அளவில் இருக்கின்றன. அவற்றையெல்லாம் கேட்பதற்கு ஆள் இல்லை. அவற்றைக் கேட்பதற்கு அங்கே பஞ்சாயத்துக்கள் இல்லை, பஞ்சாயத்து ஒன்றியங்கள் இல்லை, நகராட்சி மன்றங்கள் இல்லை, மாநகராட்சி மன்றங்கள் இல்லை. இதன்விளைவாக அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கைகள் எதுவாக இருந்தாலும், பல கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கிச் செய்கின்ற எந்த நிவாரணத் திட்டமாக இருந்தாலும், பல கோடிக்கான ரூபாய்கள் ஒதுக்கிச் செய்கின்ற வளர்ச்சித் திட்டங்கள் எதுவாக இருந்தாலும், அது மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து பணம் ஒதுக்கிச் செய்கின்ற திட்டமாக இருந்தாலும், இடையிலே இருப்பவர்கள் கொள்ளையடிக்கின்ற சூழ்நிலைகள் தான் இருக்கின்றன. அவைகள் எல்லாம் சரியாகக் கண்காணிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். இவைகள் எல்லாம் குறையவேண்டுமானால், தேர்தலை உடனடியாக நடத்தியாக வேண்டும். அல்லது அரசு உண்மையிலேயே தைரியம் இருந்தால், அரசு ஒரு சட்ட முன்வடிவோடு வரவேண்டும். 'இனிமேல் உள்ளாட்சி மன்றங்களுக்கே தேர்தல் நடத்தமாட்டோம். எங்களுக்கு அதிலே நம்பிக்கை இல்லை. ஆகவே அதற்கு மாற்றாக இப்படி ஒரு புதிய அமைப்பை அமைக்க இருக்கிறோம். அதற்கு அனுமதி தாருங்கள்' என்று வாருங்கள். அது நியாயமாக இருந்தால், நாங்களும் ஏற்றுக்கொண்டு அரசுக்கு உறுதுணையாக இருக்கிறோம். இதையெல்லாம் விட்டுவிட்டு ஜனநாயகத்தின் பெயராலே, ஜனநாயகத்தில் உள்ள நம்பிக்கையை உருக்குலைக்க வேண்டாம். ஜனநாயக அமைப்பிலே இருந்துகொண்டு, ஜனநாயகத்தைச் சீரழிக்கின்ற பெரும் பாவச் செயலைச் செய்ய வேண்டாம் என்று சொல்லி அமைகிறேன். வணக்கம்.

**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சில சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவைகளை நான் வரவேற்கிறேன். அதே



நேரத்திலே இங்கே மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கடுமையாக நமது அரசைப் பற்றிக் குறை கூறினார்கள், **கண்டித்தார்கள்.** அதே நேரத்திலே மஸ்டர் ரோல் ஊழல் பற்றியும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், ஒரு பொறுப்புக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்ற நாமெல்லாம் நேர்மையாக, ஒழுங்காகப் பணியாற்றினாலும் குறைகள் சொல்வார்கள். அதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். சின்ன சின்ன ஆட்டுக்குட்டிகள் சண்டையிட்டுக் கொண்டால், அதன் தாய் தலையிலே விடியும் என்பார்கள். அதுபோல பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கின்ற ஊராட்சித் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள் பற்றிக் குறை சொல்லலாம்.

**திரு க. இராமமூர்த்தி:** அவர்களுக்கு உதவி செய்யலாம் என்பதற்காகச் சொல்கிறேன். ஆட்டுக்குட்டிச் சண்டை போட்டால் தாய் தலையிலே விடியும் என்பதல்ல. குட்டி சண்டை போட்டால் அது நாய் தலையிலே விடியும் என்பார்கள்.

**திரு. சி. இராமலிங்கம்:** இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே உள்ளாட்சித் துறைகளிலே தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். உள்ளாட்சித் துறைகளிலே பொறுப்பேற்றிருந்த அதிகாரிகள் பல தவறுகள் செய்திருக்கிறார்கள், செய்து கொண்டு வந்தார்கள். இதை ஏன் சொல்கிறேன்? நாம் சுதந்திரம் பெற்று 1947-க்குப் பிறகு வந்த அதிகாரிகள், நாம் சில சட்ட திட்டங்களை ஏற்படுத்தி ஆட்சியை நடத்திவந்தபோது, தவறுகள் செய்தார்கள். அப்போது மிட்டா மிராசுகள் எல்லாம் தலைவர்களாக இருந்தபோது, இதையெல்லாம் கண்டும் காணாமலும் இருந்தார்கள். அப்படி இருந்த காரணத்தினாலேதான், அந்தப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகள் உள்ளாட்சித் துறையிலே, ஒன்றிய அலுவலர்களிடையே சிறு சிறு தவறுகள் நடந்தபோது, பெரிய மிட்டாக்களும் மிராசுகளும் அதைக் காணாமல் இருந்துவிட்டார்கள். அவர்களுக்கு ஏதாவது வந்துவிட்டால் போதும் என்ற அளவில் அவர்களும் இருந்துவிட்டார்கள். அந்தத் தவறுகள் இன்று நிரம்பிவிட்டன. அந்த அளவில் அதிலே இருக்கின்ற கோளாறுகளை எல்லாம் நிரந்தரமாகச் செப்பனிட வேண்டுமென்பதற்காகத் தான் இந்தத் திருத்தங்களைக் கொண்டு வருகிறோம். 6 மாதம், 6 மாதம் என்று சொல்லி காலம் கேட்டு வருகிறோம். மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாக நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். உள்ளாட்சித் துறை அதிகாரிகள், தாசில்தார் போன்றவர்கள், வருவாய்த் துறையில்

உள்ளவர்கள் புறம்போக்கு நிலங்களை, ஏரி நிலங்களையெல்லாம் உள்ளாட்சித் துறையிடம் ஒப்படைத்திருந்தார்கள். கிராமங்களிலே ஆக்கிரமிப்புகள் நடை

(பிற்பகல் 12.30)

பெற்று வருகின்றன. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே ஆக்கிரமிப்புகள் நடந்தன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ஆக்கிரமிப்புகள் நடந்தன. இப்படிச் சொல்லும்போது, 'உங்களுடைய ஆட்சிக் காலத்திலே ஆக்கிரமிப்புகள் நடைபெறவில்லையா?' என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கேட்பார்கள். இரண்டு ஆட்சிக் காலங்களிலும், இருந்த புறம்போக்கு நிலங்களெல்லாவற்றையும் அவர்களே ஆக்கிரமித்துக் கொண்டார்கள். எங்களுக்கு நிலமேயில்லை, ஆக்கிரமித்துக்கொள்ள, எங்களுடைய ஆட்சிக் காலத்திலே.

**திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஆக்கிரமிப்பு செய்ய இடமில்லை என்று சொன்னார்கள். அப்படி என்றால், ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. சி. இராமலிங்கம்:** தவறுகள் நடந்தன என்றுதான் சொல்லுகிறேன் . . .

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் தவறான தகவல் கொடுக்கிறார். அவர் கொடுக்கும் கணக்கின் அடிப்படையில், தமிழ் நாட்டில் புறம்போக்கு நிலங்களே இல்லையா? அதுதான் அரசாங்கத்தின் கணக்கா? அந்த அளவிற்குக் கணக்கைச் சரி செய்துவிட்டார்களா?

**திரு. சி. இராமலிங்கம்:** கணக்கை நாங்கள் சரி செய்யவில்லை. கணக்கைப் பார்த்தோம். யார் யார் மீது பற்று இருக்கிறதென்றுதான் சொல்லுகிறேன். ஏரிகள் தூர்ந்து போயிருக்கின்றன. சென்னையிலிருந்து காஞ்சிபுரம் போனாலும் சரி, சென்னையிலிருந்து திண்டிவனம் போனாலும் சரி, இருக்கிற ஏரிகளில் வருவாய் நிலத்தைப் பயிரிட்டிருக்கிறார்கள். யார் பயிரிட்டிருக்கிறார்களென்றால், இதற்கு முன்னால் ஆட்சியில் இருந்தவர்களின் ஆட்கள்தான் பயிர் செய்திருக்கிறார்கள். இந்த ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் தேவை என்பதற்காகத்தான் இவற்றைப்பற்றிப் பேசினேன். பஞ்சாயத்து அதிகாரத்தை ரெவின்யூ அதிகாரிகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கவனிப்பதில்லை என்ற நிலை வருகிறது.



மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள், அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்கள், தவறு செய்கிறார்களென்று சொன்னார்கள். மத்திய அரசை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அவர்கள். அதிகாரிகள் தவறு செய்கிறார்கள், லஞ்சம் வாங்குகிறார்களென்றால், எங்கே வாங்கினாலும், மத்திய அரசைப் பாதிக்கும். அப்போது லஞ்ச லாவண்ய ஆட்சி என்று பாராளுமன்றத்தில் ஏன் பேசக்கூடாதென்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** 'லோகல் போர்ட்' விவகாரத்தில் லஞ்சம் வராமல் இருக்கலாமே!

**திரு. சி. இராமலிங்கம்:** லஞ்சம் வாங்குகிறவர்களைத் திருத்த வேண்டுமென்ற முறையில்தான் மகாத்மா காந்தி அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள், வெள்ளைக்கார ஆட்சியை . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது சரியான தகவல் இல்லை.

**திரு. சி. இராமலிங்கம்:** கள்ள மார்க்கெட்காரர்களையும், லஞ்சம் வாங்குகிறவர்களையும் தூக்கிலிட வேண்டுமென்று சொன்னார்கள். நிர்வாகச் சீர்திருத்தத்திற்காக உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன் என்று சொன்னார்கள். சுதந்திரப் போராட்டத்திற்குள் நான் செல்லவில்லை.

* **திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் தவறான தகவல்களைச் சொல்ல வேண்டாம். கள்ள மார்க்கெட்காரர்கள், கள்ளச் சந்தைக்காரர்களைத் தூக்கிலிட வேண்டுமென்று சீற்றத்தோடு பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தியா முழுக்க அன்றைக்கு இருந்த சூழ்நிலையிலே பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டபோது, சமுதாயத் துரோகிகளைக் கடுமையாகக் கண்டிக்க வேண்டியிருக்குமென்ற வேகப் பேச்சாக, அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கடமையை மக்களுக்கு உணர்த்துவதற்காகத்தான் அப்படிப் பேசினார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதைப் பற்றி அபிப்பிராயம் சொல்லவில்லை. தகவல்தான் சொன்னார்கள்.

**திரு. சி. இராமலிங்கம்:** எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், எங்கள் ஆட்சியில்தான் அதிகாரிகள் லஞ்சம் வாங்கினார்கள் என்று உறுப்பினரவர்கள் தகவல் சொன்னார்கள் . . .

* திரு. க. இராமமூர்த்தி: 'உங்கள் ஆட்சி' என்று சொல்லவில்லை. உள்ளாட்சி மன்றங்களில் தேர்தல்கள் நடக்காததால், இப்படியெல்லாம் நடைபெறுகிறதென்றுதான் சொன்னேன்.

திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய வாயாலே 'உங்கள் காலத்திலே' நடைபெறவில்லை என்று சொல்வதற்காகத்தான் இவ்வளவும் சொன்னேன். பேரவைத் தலைவரவர்களே . . மேலவைத் தலைவரவர்களே . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு இந்தக் குழப்பம் ஏன் வந்தது? அவர்கள்தான் பேரவைக்குப் போக வில்லையே!

திரு. சி. இராமலிங்கம்: இன்றைக்கு தமிழ் நாட்டில் இருப்பவர்கள்தான், தமிழர்கள்தான் அதிகாரிகளாக இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இருப்பவர்கள்தான் வரி செலுத்துகிறார்கள். தமிழ்நாட்டில் இருப்பவர்கள்தான் ஆளுகிறார்கள். எல்லோரும் சேர்ந்து, அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று சொல்லும்போது, தமிழர்கள் தமிழ்நாட்டை ஆட்சி செய்யும்போது, அது நம்மைப் பாதிக்கிறது. எனவே லஞ்சம் வாங்குகிறவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்க சட்டம் கொண்டுவர வேண்டும். பம்மல் பேரூராட்சியில் 20,000 ரூபாயை நிர்வாக அதிகாரி கையாண்டுவிட்டார். கையாடல் செய்த அவரை சஸ்பென்ட் செய்து வீட்டுக்கு அனுப்பியிருக்க வேண்டும். ஆனால், அப்படிச் செய்யாமல் கையாடல் செய்த தொகையைத் தவணை முறையில் கட்டுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். (சிரிப்பு) தயவுசெய்து சிரிக்க வேண்டாம். இது எங்கள் ஆட்சியில் அல்ல. சட்டத்திலே அப்படி இடம் இருப்பதால்தான் அதிகாரிகள் துணிந்து தவறுகள் செய்கிறார்கள் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சீக்கிரம் முடிவிற்கு வரவேண்டும். இன்னும் ஆறு சட்ட முன்வடிவுகள் இருக்கின்றன.

திரு. சி. இராமலிங்கம்: பதவிக் காலத்தை ஆறு மாதங்களுக்கு மேலும் நீட்டிக்கின்ற இந்த மசோதாவை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பலமாகக் கண்டித்தார்கள். உடனடியாகத் தேர்தல்கள் நடத்தாததற்கு சில குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு நாங்கள் காரணமல்ல. எனவே எற்கெனவே நடந்த தவறுகளை எங்கள் மீது



சுமத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். உடனடியாகத் தேர்தல்களை நடத்துவதற்கான வாய்ப்பு குறித்து மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சென்ஸஸ் முடிந்தவுடன் தேர்தல்கள் நடத்தப்படுமென்று கூறியிருக்கிறார்கள். அதற்காக நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்றைய பகல் நேரத்திற்குள்ளாக எல்லாச் சட்ட முன்வடிவுகளையும் நிறைவேற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்குமாறு வேண்டுகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, உள்ளாட்சித் துறை சம்பந்தமான சட்ட முன்வடிவுகளின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தேர்தல்களைத் தள்ளிப் போடுவதன் காரணமாக தனி அதிகாரிகளுக்கு நீட்டிப்பு தரும் வகையில் சட்ட முன்வடிவுகள் கொண்டுவரப்படுகின்றன. இப்படி பல முறை கொண்டுவரப்பட்டிருக்கின்றன, மீண்டும் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது. தேர்தல்களைத் தள்ளிப் போடுவதென்ற கருத்தினை ஆளும் கட்சியில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி, எதிர்க் கட்சியில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி, அதை ஆதரிக்க மாட்டார்கள். நம்முடைய நாட்டினுடைய ஜனநாயக அமைப்பினுடைய அடிப்படையாக, அடிக்கல்லாக இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புக்களுக்கான தேர்தல்களைத் தள்ளிப் போடுவதென்பது எந்த அளவிற்கு அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றது என்பதைப் பல முறை இந்த மன்றத்தில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் மிகத் தெளிவாக, ஆதாரங்களோடு எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த முறை சென்சஸ் பணிகள் காரணமாக தேர்தல்கள் தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன என்று அரசுத் தரப்பிலே கூறப்பட்டிருக்கிறது. என்னுடைய ஆசையெல்லாம், மேலும் இதைத் தள்ளிப் போடாமல், வருகின்ற மே மாத இறுதிக்குள் அத்தனை தேர்தல்களையும்—ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள்—என்ன தடைகள் வந்தாலும், நடத்தி முடிக்க வேண்டுமென்பது தான். அதுதான் ஜனநாயக அமைப்பிற்கு நல்லது, ஆளும் கட்சிக்கு நல்லது, மக்களுக்கு நல்லதென்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். கிராம ராஜ்யம் பற்றி, பஞ்சாயத்து ராஜ்யம் பற்றி காந்தியடிகளும், நேருஜியும் கண்ட கனவுகளையெல்லாம் நாம் மீண்டும் மீண்டும் சொல்லி, அவர்கள் சொல்லியதைச் சொல்லிக்கொண்டு, அவர்கள் கண்ட கனவுகளுக்கு மாறான பாதையிலே, காந்தியடிகள் விரும்பிய ராம ராஜ்யம் அமைப்பதற்கு மாறான பாதை

யிலே சென்று, இந்தத் தேர்தல்களைத் தள்ளிப் போடுவது எல்லோருக்கும் வேதனை தருவதாகும். எனவே இந்தத் தேர்தல்களை உடனடியாக நடத்தி முடிக்க வேண்டுமென்று கோருகின்ற அனைத்துக் கட்சிகளோடு அதை ஆதரிக்கின்ற நேரத்திலே, இடைக்காலத்திலே அரசு செய்ய வேண்டிய பணிகளை நினைவுபடுத்துவது என்னுடைய கடமையாகும்.

(பிற்பகல் 12-40)

ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை ஒழுங்காக நடைபெறவில்லை. கூட்டப்படுவதும் கிடையாது. பெயரளவுக்கு அவைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த விஷயத்தில் மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொல்லிய கருத்துக்களை நான் முழுமனதுடன் ஆதரிக்கிறேன். இந்தக் குழுக்களை அடிக்கடி கூட்டி அங்கே இருக்கின்ற கிராமப்புற, நகர்ப்புற பிரச்சினைகளை எடுத்துச்சொல்லி விவாதிப்பதற்கான வாய்ப்பினைத் தர வேண்டும். அப்படிச் செய்தால் ஓரளவுக்காகிலும் பரிகாரம் காண முடியும். அவை அடிக்கடி கூட்டப்படாததற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. அது ஒரு பெரிய குறைபாடு. மாவட்ட வளர்ச்சி மன்றம் என்பது மாவட்ட அளவில் இயங்குகின்ற ஒரு ஆலோசனைக் குழு. அந்தக் கூட்டங்கள்கூட ஒழுங்காகக் கூட்டப்படுவதில்லை. ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுடைய தேர்தல் நடைபெறாத காரணத்தால், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மாதத்திற்கு ஒரு முறையாவது அதனுடைய நியமன உறுப்பினர்கள், அந்தப் பகுதி சட்ட மன்ற உறுப்பினர்கள் எல்லாம் கூடி பிரச்சினைகளை எடுத்துச்சொல்லி, விவாதிக்க அப்படிக் கூட்டப்படுவது ஒரு வாய்ப்பாக இருக்கும். அப்படிச் செய்யப்பட்டால், குறைகள் ஓரளவுக்காகிலும் தவிர்க்கப்படக்கூடும். ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் கூட்டப்பட வேண்டுமென்று கன்வென்ஷன் இருக்கிறது. நான்கு மாதம் இன்னும் சில நேரங்களில் ஆறு மாதமானால்கூட, அது கூட்டப்படுவதில்லை. தேர்தல் வரையிலாவது இந்தக் கூட்டம் மாதத்திற்கொரு முறை அவசியம் கூட்டப்பட வேண்டும். அதற்குரிய வகையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு, குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இந்த அரசு அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாவட்ட வளர்ச்சி மன்றம் 'அட்வைசரி பாடி' என்கிற நிலையில் இல்லாமல் சில மிக முக்கியமான பிரச்சினைகள் குறித்து முடிவெடுக்கக்கூடிய ஒன்றாக, தற்காலிகமாக அந்த அதிகாரத்தை வழங்கலாமா என்பதுபற்றி



மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, ஒவ்வொரு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் கட்டாயம் ஒரு அமைச்சர் கலந்துகொள்கிற மாதிரி ஒரு ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்தான் இப்போது அதன் தலைவராக இருக்கிறார். ஒரு அமைச்சர் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் நிலை வந்தால் கூட்டத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வரும். அங்கே விவாதிருக்கின்ற பிரச்சினைகளுக்குக்கூட ஒரு சிறந்த முக்கியத்துவம் வரும். பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்ற அவசியம், ஆர்வம் வரும். மாதம் ஒரு முறை கூட்டம் கூட்டப்பட வேண்டும். அக்கூட்டத்தில் அவசியம் ஒரு அமைச்சர் கலந்துகொள்ள வேண்டுமென்கிற நியதியைக் கடைப்பிடிப்பது நல்லது. நகராட்சிகளைப் பொறுத்தவரையில், மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில், ஒரு ஆலோசனையை இந்த அரசுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முதலிலேயே அதைச் சொல்லியிருக்கலாமே. (சிரிப்பு).

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில், நகராட்சிகளைப் பொறுத்தவரையில், அரசியல்வாதிகளின் குறுக்கீடு எந்த விதத்திலும் இருக்கக்கூடாது. நூற்றுக்கு நூறு தேர்ச்சி பெற்றவர்களுடைய பட்டியலைப் பார்க்கும்போது, ஒரே ஒரு பள்ளிதான் நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றிருந்தது. என்னிடத்தில் அதற்குரிய ஆதாரம் இருக்கிறது. இது குறித்து நான் மாண்புமிகு அமைச்சரவர்களிடத்தில் ஒரு முறையீடு கொடுத்தேன். எவ்வாறு அரசியல் குறுக்கீடு காரணமாக ஒரு ஆசிரியர் பாதிக்கப்பட்டார் என்பதற்கான சான்றுகளுடன் முறையீடு கொடுத்தேன். உடனே மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிகாரம் காண நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால் கொஞ்ச நாளைக்குள்ளாகவே மீண்டும் முதலில் எடுத்த நடவடிக்கைக்கு மாறாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனக்கு அது அதிர்ச்சியாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்ததற்கு நேர்மாறாக 95 சதவீதம் மார்க் தன்னுடைய பாடத்திலே மாணவர்கள் தேர்விலே எடுப்பதற்குக் காரணமாக இருந்த ஆசிரியர் வேண்டுமென்றே மாற்றப்பட்டிருக்கிறார். இது தென்னாற்காடு மாவட்டத்திலே விழுப்புரம் நகரிலே நடைபெற்றிருக்கிறது. இதுபற்றி மாண்புமிகு அமைச்சரிடத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இவ்வளவு ஆர்வமுடன் மாணவர்களின் வெற்றிக்காகப் பாடுபட்ட ஒரு நல்ல ஆசிரியருடைய ஆர்வம் எந்தவகையில்

இதன் காரணமாகப் பாதிக்கப்படும் என்பதை அரசுத் தரப்பிலிருந்து உணர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்த ஒரு அரசியல் குறுக்கிடும், தலையீடும் ஆசிரியர்களுடைய விஷயங்களில் இருக்கக்கூடாது. அப்படி இருந்தால்தான், கல்வி வளர்ச்சியடையும். முன்பே இந்த மன்றத்தில் விவாதித்தது போல், உள்ளாட்சித் துறை பள்ளிகளை எல்லாம் அரசு எடுத்துக் கொள்ள முடிவு செய்துள்ளதை நாங்கள் முழுமனதுடன் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். அதுமாதிரி நகராட்சிப் பள்ளிகளையும், மாநகராட்சிப் பள்ளிகளையும் அவர்கள் அரசிடமே ஒப்படைப்பது கல்வியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்து அமைகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, ஊராட்சி மன்றங்களுடைய, நகராட்சிகளுடைய தேர்தலைத் தள்ளி வைப்பதாக இங்கே கொண்டு வந்திருக்கக்கூடிய சட்ட முன்வடிவுகள்மீது என்னுடைய சில வார்த்தைகளை மெத்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் காட்டியதுபோல், பல முறை இந்தத் தேர்தல்கள் தள்ளி வைக்கப்பட்டு, மீண்டும் மீண்டும் தள்ளி வைக்கப்படக்கூடிய சூழ்நிலையும், அதற்கு மீண்டும் மீண்டும் அரசுத் தரப்பில் பதில் சொல்லக்கூடிய நிலையும் இருந்து வருகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை இருப்பதால், எங்களுக்குப் பேசுவதற்கே என்னவோபோல் இருக்கிறது. ஆக மொத்தத்தில் தேர்தலே நடைபெறப் போவதில்லை என்று அரசுத் தரப்பிலிருந்து சொல்லிவிட்டால், இதுபற்றி நாம் மேலும் மேலும் விவாதத்திற்குப் போகாமல் இருக்க முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. ஊராட்சி நிர்வாகங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இல்லாத காரணத்தால், அங்கு இருக்கின்ற அதிகாரிகள் நிர்வாகம் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் இஷ்டத்திற்கு எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்கிற நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். இங்கே சட்டமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய சொத்துக் கணக்கைத் தர வேண்டுமென்று சொல்வதுபோல் ஊராட்சி ஒன்றியங்களில், நகராட்சிகளில் இருக்கிற அதிகாரிகளும் தங்களுடைய சொத்துக் கணக்குகளை ஒப்படைக்கச் செய்து, பினாமியிலும் இன்னும் பல்வேறு வகைகளிலும் கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக அவர்களுடைய சொத்துக்கள் பெருகியிருக்கிற கணக்கு எப்படி இருக்கிறது என்பதை எடுத்துப்பார்த்தால், எவ்வளவு ஊழல் அவர்களால் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்கிற விவரம் அரசுக்குக் கிடைக்கும். இது பல்வேறு தரப்பிலிருந்து, பல்வேறு முறை சுட்டிக்





காட்டப்பட்ட ஒன்று. என்றாலும் கூட நான் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் தரப்பிலே நின்று அங்கே செய்கின்ற அக்கிரமங்களை, சிலவற்றை மட்டும் சான்றுகளுடன் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். அப்படி நான் இந்த அவையிலே கோடிட்டுக் காட்டுவது மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு குறிப்பாக நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்கும் என்பதால்தான். திருச்சி மாவட்டத்திலே ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம் இருக்கிறது. ஆணையருடைய பெயரைச் சொல்ல வருந்துகிறேன். இப்போது அங்கே அவர் இல்லை. அவர் வேறொரு ஒன்றியத்திற்கு மாற்றப்பட்டு வேறொருவர் வந்திருக்கிறார். இப்போது இருக்கிறவர் செய்ததாகக் கருதக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். முன்பு இருந்தவரைத்தான் சொல்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அவர்பற்றிப் புகார் தந்திருக்கிறேன். அவர் பெயர் கோவிந்தராசன்; அவர் இப்போது மருங்காபுரியில் பணியாற்றுகின்றார். ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப்பற்றி நான் அவருடன் பேசிக்கொண்டிருக்கும்போது, அவர் போதைப் பொருள்களைப் பயன்படுத்திய நிலையில் நிதானம் தவறியிருந்தார். நல நிதி கடன் ஆசிரியர்களுக்கு 100 ரூபாய் சேங்ஷன் செய்யப்பட்டிருந்தால், அவருக்கு நான்கு ரூபாய் கமிஷன் கொடுக்க வேண்டும். இதைத் தீர்மானமாக ஆசிரியர் மன்றத்தின் மூலம் கண்டித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தந்திருக்கிறேன். மதிய உணவு மானியத்திலிருந்து 50 விழுக்காடை அதாவது ஐந்து பைசாவிலிருந்து 2½ பைசாவை எடுத்துக்கொண்டு அவர் மீதியைத்தான் தருகிறார். மிதி வண்டி வாங்க கடன் தர வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. மிதி வண்டி கடன் வேண்டுமென்று விண்ணப்பம் போட்டால், இத்தனை சைக்கிள் வேண்டுமென்று அவரே கம்பெனிக்குப் போய் பேரம் பேசி கமிஷன் பெற்று சைக்கிளை வாங்கி லாரிகளில் அவரே கொண்டு வந்து இறக்கி அதற்கு செலவுத் தொகையாக 18 ரூபாய் என்று ஒவ்வொரு ஆசிரியரிடத்திலிருந்தும் வசூலிக்கிறார். அரசாணையில் சைக்கிள் வாங்க கடன் கொடுக்க வேண்டுமென்றுதான் இருக்கிறது. சைக்கிள் கொடுக்க வேண்டுமென்று இல்லை. ஆனால் இவரே போய் கமிஷன் பெற்று சைக்கிள் வாங்கிக் கொடுக்கிறார். அத்துடன் இறக்குமதி சார்ஜ் என்று ஒவ்வொரு ஆசிரியரிடத்திலிருந்தும் 18 ரூபாய் வாங்குகிறார். கையாட்கள் மூலம் கையூட்டு வாங்கிக்கொண்டுதான் ஒவ்வொரு செயலையும் செய்தார். இப்படி மற்றவர்களுக்கு பாதகமான பல்வேறு நடவடிக்கைகளை அவர் செய்துகொண்டிருந்தார். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நான் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுதான் புகார்

கொடுத்திருந்தேன். ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவரோ அவரை மாறுதல் செய்திருக்கிறார். ஒரு எம்.எல்.சி. கொடுத்த புகாருக்குக்கூட மாவட்ட ஆட்சித் தலைவர் இன்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்கிற தகவலைத் தரவில்லை. அவரை மாறுதல் செய்திருக்கிறார்கள். ஆனால் அவர் சென்ற இடத்திலும்கூட அதேமாதிரி நடவடிக்கைகளில்தான் இன்றைக்கு ஈடுபட்டிருக்கிறார். அந்த ஆணையருடைய தவறான செயல்களைத் தடை செய்யக்கூடிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல் சேந்தமங்கலத்தில் திரு. காளிமுத்து என்பவர் ஆணையராக இருக்கிறார். ஊராட்சி ஒன்றிய சிக்கன நாணயச் சங்கத்தின் எக்ஸ்-அபிசியோ பிரசிடெண்ட் அவர். அவர்தான் பணம் சேங்ஷன் செய்ய வேண்டும். 41 ஆசிரியர்களுக்கு சேலம் மத்திய கூட்டுறவுச் சங்கத்திலிருந்து 3,000 ரூபாய் விதம் சேங்ஷன் செய்யப்பட்டும்கூட அந்தக் கடன் தொகையை அவர் இன்னும் ஆசிரியர்களுக்கு பெற்றுத் தர மறுக்கிறார். ஏதோ

(பிற்பகல் 12-50)

எதிர்பார்த்து இப்படிச் செய்துகொண்டிருக்கிறார். அதைக் கொடுத்தால்தான் தருவேன் என்கிறார். பெரியநாயக்கன்பாளையத்திலே இருக்கும்போது அங்கிருக்கும் கூட்டுறவு நாணயச் சங்கத்திலேயிருந்து ரூபாய் 3,000 கடன் பெற்று அதை இன்னும் அவர் திரும்பக் கட்டவில்லை. அப்படிப்பட்டவர் அவர்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சீக்கிரமாக முடிக்க வேண்டும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: நெல்லை மாவட்டம் ராதாபுரம் யூனியனிலே அங்கே இருக்கும் 400-க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு இன்னும் பிப்ரவரி மாதச் சம்பளம் கிடைக்கவில்லை. சம்பளம் கொடுப்பதற்குப் பணம் இல்லை. இதற்கெல்லாம் முன்கூட்டியே தக்க நடவடிக்கைகள் எடுத்து அவர்களுக்குச் சம்பளம் பட்டுவாடா செய்திருக்க வேண்டும். ஆனால் அங்கிருக்கும் ஆணையாளர் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறார். இப்படிப்பட்ட அதிகாரிகள் ஆட்சிக்கு அவப்பெயரை ஏற்படுத்துகிறார்கள். அடுத்து, காரியாப்பட்டி ஒன்றியத்திலே ஒரு விஷயம் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஒவ்வொன்றாக இப்படி எடுத்துக் கொண்டு அதிலே விவரமாகச் சொன்னால் எப்படி? இதுபோல போனால் எப்படி முடிப்பது? . . .



திரு. க. மீனாட்சிசுந்தரம்: நான் விவரத்தை மட்டும் சொல்கிறேன். அதற்கு இது நல்ல வாய்ப்பான நேரம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எல்லாம் வாய்ப்பான நேரம்தான். ஆனால் எனக்குத்தான் வாய்ப்பில்லை. அவையை முடிக்க வேண்டும். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: காரியாப்பட்டியிலே மிகப் பெரிய ஊழல் ஒன்று நடந்திருக்கிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தையற் பயிற்சிக்குத் தேர்வு செய்தார்கள். 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும், மிகச் சிறிய விவசாயக் குடும்பத்திலே உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் குறிப்பிட்டிருந்தபடி, தகுதி புடையவர்களுக்கு அது தரப்படவில்லை. அந்தப் பட்டியல் என்னிடத்திலே இருக்கிறது, நான் தருகிறேன். (மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னிடத் திலே அந்தப் பட்டியலைத் தந்துவிடுமாறு சைகை காட்டினார்.) பெரிய கான்ட்ராக்டர்கள், பெரிய செல்வந்தர்கள் குழந்தைகளுக்குத்தான் அந்த வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. மேலும், 18 வயதுக்குக் கீழே உள்ளவர் களுக்கும் அந்த வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்னும் அரை மணி நேரம்தான் இருக்கிறது. ஆறு பில்லை எடுத்து முடிக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களே பட்டியலை அப்படியே கொடுத்துவிடுங்கள் என்று சொல்லியிருக்கிறார், இன்னும் என்ன வேண்டும்?

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அதுபோல பல்வேறு ஊராட்சி ஒன்றியங் களிலே . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இது ஆசிரியர் 'பில்' அல்ல.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: ஆசிரியர் தொடர்புடைய 'பில்'.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதனால்தான் இவ்வளவும் அனும தித்தது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: காஞ்சிபுரத்திலே முகமது என்ற கல்வி அதிகாரி இருக்கிறார். அவர் ஒரு சங்கத்தை ஏற்படுத்தி அந்தச் சங்கத்திலே ஆசிரியர்கள் எல்லோரும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்று வற்புறுத் . . .

துகிறார். ஒரு அட்மினிஸ்ட்ரேட்டிவ் அலுவலர் தன்னுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறார். இதுபற்றி நான் புகார் செய்திருக்கிறேன். எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாததால் இப்படியெல்லாம் அந்தந்தப் பகுதிகளிலே இருக்கும் அதிகாரிகளுடைய கொட்டம் அதிகமாக இருக்கிறது. இந்த நிலைமைகளை எவ்வளவு நாட்கள் இன்னும் அனுமதிக்கப்போகிறார்கள்? என்னதான் மேலதிகாரிகளுக்கு அவர்களைப்பற்றிப் புகார் செய்தாலும்கூட, மேலே இருப்பவர்கள்கூட அவர்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள். என்னிடத்திலே பல ஆதாரங்கள் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியத்திலே நல்ல பல பணிகள் நடக்க, ஊழல்களை ஒழிக்க இந்தத் தேர்தலை இன்னும் அதிக நாள் தள்ளி வைக்காமல் சீக்கிரம் நடத்த வேண்டும். முன்பு ஒருமுறை இந்தக் கருத்தை நான் சொல்லியபோது, அப்போது இருந்த அமைச்சர் அவர்கள் கண்டிப்பாகத் தேர்தல் நடக்கும் என்று சொல்லி 'உள்ளதைச் சொல்வேன், சொன்னதைச் செய்வேன், வேறொன்றும் தெரியாது' என்று சொல்ல நான் பதிலாக 'உள்ளதைச் சொல்லேன், சொன்னதைச் செய்யேன், வேறொன்றும் தெரியாது' என்ற நிலைதான் ஏற்பட்டுவிடப் போகிறது என்று சொன்னேன். முன்பு இருந்த அமைச்சர் ஏற்கெனவே நான்கு முறை கால நீட்டிப்பு வாங்கிவிட்டார். இப்போது இந்த அமைச்சர் இரண்டு முறை வாங்கிவிட்டார்கள். ஆகவே, தேர்தலை மீண்டும் தள்ளி வைக்காமல் எல்லோரையும் வாழ வைக்க இந்தத் தேர்தலை சீக்கிரம் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம்: தலைவரவர்களே, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகிய உள்ளாட்சி நிர்வாகங்களுக்கு மேலும் தனி அதிகாரிகள் நியமனம் நீட்டிப்பு கோரி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சட்ட முன்வடிவை வைத்திருக்கிறார்கள். பலமுறை அதிகாரிகளுடைய நிர்வாகத்திலே இயங்குவதற்கு அனுமதி கோரியபோதும் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரணத்தை ஆட்சியாளர்கள் எடுத்துச் சொல்லி அனுமதி பெற்று, அப்படி அனுமதி பெறுகிறபோது அடுத்த முறை நிச்சயமாகத் தேர்தல் நடைபெறும் என்று வாக்குறுதி கொடுத்து அந்த வாக்குறுதி இன்றையதினம் காற்றிலே பறக்கவிடப்பட்டு மீண்டும் தொடர்ந்து இன்றைக்கு தனி அலுவலர்களை நியமிக்கும் அதிகாரத்தைக் கோருகிறார்கள். சென்ற முறை தனி அதிகாரிகளை நியமிப்பதற்கு அனுமதி கோரியதற்குக் காரணம் 18 வயது உள்ளவர்களுக்கெல்லாம் வாக்குரிமை அளிக்க நாங்கள் முன்வந்திருக்கிறோம்,



அதற்கான வாக்காளர் பட்டியலைத் தயார் செய்ய வேண்டும் என்றும் எனவே அனுமதி தர வேண்டும் என்றும் அந்தப் பணி முடிந்ததும் நிச்சயமாகத் தேர்தல் உண்டு என்றும் சொல்லப்பட்டது. ஆனால், அந்த வாக்காளர் பட்டியல் இன்றையதினம் தயாரிக்கப்பட்டு, தயாராக இருக்கும் இந்த நிலையிலேயும் தேர்தலை நடத்தாமல் திடீரென்று மக்கள் தொகை கணக்கெடுப்பை மத்திய அரசு நடத்துவதால், மத்திய அரசாங்கம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இந்தத் தேர்தலை நாங்கள் மேலும் தள்ளி வைக்கவேண்டிய அவசியம் இருக்கிறது என்ற ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். அந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடியதா என்று பார்த்தால் இல்லை. மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி கூட இப்போது முடிவடைந்துவிட்டது. அந்தப் பணி முடிவடைந்த பிறகு, மேலும் ஆறு மாத காலம் தனி அலுவலர்களை நியமிக்க அனுமதி கோருவது பொருத்தமற்றது. 18 வயது உள்ளவர்களுக்கெல்லாம் வாக்குரிமை அளிக்க வேண்டும் என்று வாக்காளர் பட்டியலைத் தயார் செய்து விட்ட பிறகு, இன்றைக்கு 30 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் புதிய வாக்காளர்களாக இடம்பெற்றிருக்கிறார்கள் என்று இந்தத் துறையின் பொறுப்பில் இருக்கும் அமைச்சர் அவர்கள் சொன்னதாக செய்தித்தாளிலே நான் பார்த்தேன். வாக்காளர் பட்டியலைத் தயார் செய்வதில் எவ்வளவு மோசடி நடந்திருக்கிறது என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இந்த வாக்காளர் பட்டியலைத் தயார் செய்கின்ற பணி முன்பெல்லாம் ஆசிரியர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டு அவர்கள்தான் செய்து வந்தார்கள். ஆனால், வேலையில்லாத பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குகிறோம் என்று சொல்லி ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களைக் கொண்டு இந்த வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க வைத்து, அவர்களுக்கு இரண்டு மூன்று மாதங்கள் சம்பளம் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பணி மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய நேரடி கவனிப்பிலே நடைபெற்றது. உள்ளபடியே, ஒரு கிராமத்திலே இருக்கின்ற வாக்காளர்களை விடுபடாமல் சேர்ப்பதிலே யாருக்கும் ஆட்சேபணையில்லை. ஆனால் எப்படி நடந்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். நான் பூலாவாரி கிராமத்தைச் சேர்ந்தவன். 1958 முதல் தொடர்ந்து பிறகு ஊராட்சி மன்றங்களை இந்த ஆட்சியாளர்கள் கலைக்கும் வரை நான் ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருந்தவன். என்னுடைய ஊராட்சி ஒன்றியம் பூலாவாரி. அந்த ஊராட்சி ஒன்றியத்தில்—நான் விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை—இரண்டாவது வார்டிலே 936/2 என்ற பகுதியிலே புதிதாக 'எ' என்று போட்டு சில

வாக்காளர்களைச் சேர்த்திருக்கிறார்கள். அவர்களுடைய பெயரைத் தெரிவிக்க விரும்பவில்லை. அரசாங்கத்திற்கு அதைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. வாக்காளர்கள் இருப்பது பாரப்பட்டி என்ற வில்லேஜ். அங்கே இருப்பவர்களை இந்தக் கிராமத்திலே கொண்டுவந்து சேர்க்கிறார்கள்.

(பிற்பகல் 1-00)

இப்படி இரண்டு மைல்களுக்கு அப்பால் வசிக்கும் ஒருவரின் பெயரை இந்தப் பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள். அவருடைய ஊரிலும் அவருடைய பெயர் இருக்கிறது. அதைப்போலவே ஆறு மைல்களுக்கு அப்பால் உள்ள வெங்காம் பட்டி மன்னூர் என்ற ஊரில் உள்ள ஒருவரின் பெயரை 936-ன் வரிசையில் சேர்த்திருக்கிறார்கள். அதைப்போலவே "வாழைக் குட்டப்பாடி" என்கிற ஊர் 11 மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. அங்கே உள்ள ஒருவரின் பெயரை இங்கே கொண்டுவந்து சேர்த்திருக்கிறார்கள். இதையெல்லாம் விவரமாகத் தெரிவித்து சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 25—12—1980 அன்று நான் ஒரு கடிதம் எழுதி இதற்குப் பரிகாரம் தேட வேண்டும் என்று கேட்டிருந்தேன். மாவட்டத்தில் இந்த வகையில் உண்மைக்கு மாறான வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படுகிறது என்றும் இதையெல்லாம் நிறுத்த வேண்டும் என்றும் நான் அதில் கேட்டிருந்தேன். ஆனால் அந்தக் கடிதம் பஞ்சாயத்து யூனியன் அதிகாரிக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுப்பப்பட்டு அந்த அதிகாரியிடமிருந்து எனக்கு ஒரு வினோதமான பதில் வந்தது. நான் மேலவை உறுப்பினர் என்ற முறையில் நடைபெற்ற தவறுகளை எடுத்துச் சொல்லி கடிதம் எழுதினால் அதற்கு "அவ்வாறு தவறாக நடைபெற்றிருந்தால், அவர்களின் பெயர்களை நீக்குகிறோம் அல்லது அவர்கள் அங்கேதான் வசிக்கிறார்கள், ஆகவே அவர்களின் பெயர் அங்கே சேர்க்கப்பட்டிருக்கிறது" என்று எனக்கு பதில் அனுப்பியிருந்தால் பரவாயில்லை. அதற்கு மாறாக ஏதோ ஒரு சாதாரண வாக்காளர் சுட்டிக்காட்டினால், அவருக்கு என்ன பதில் அனுப்புவார்களோ அந்த வகையில் ஒரு பதில் எழுதியனுப்பியிருக்கிறார்கள். அந்த பதிலில் விதிமுறைகளைக் குறிப்பிட்டு, "ஆட்சேபணை ஏதுமிருப்பின் 4 ஆம் படிவத்தில் (ஒவ்வொன்றும் 5 காசு விலையுள்ளது) நீங்கள் உங்கள் ஆட்சேபணையைத் தெரிவிக்க வேண்டும்" என்று எனக்கு பதில் அனுப்பியிருக்கிறார்கள். ஒவ்வொரு பெயருக்கும் 5 காசு கொடுத்து 4 ஆம் படிவத்தை வாங்கி ஆட்சேபணை தெரிவிக்க வேண்டும் என்று எனக்கு பதில் அனுப்பியிருக்கிறார்கள். இந்த முறை எனக்குத் தெரியாததல்ல. இந்த ஆட்சியில் எப்படிப்பட்ட பதில் ஒரு சட்டமன்ற உறுப்பினருக்குத் தரப்படுகிறது என்ப





தற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன். எனவேதான் சொல்கிறேன். இந்த நிலையில் 18 வயதுள்ளவர்களுக்கும் வாக்குரிமை என்ற பெயரில் தமிழகத்தில் எப்படிப்பட்ட முறையில் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படுகிறது என்றால், எப்படியாவது ஆளும் கட்சியினர் உள்ளாட்சிமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் தயாரிக்கப்படுகிறது. அந்த அளவுக்கு ஒரு மோசடியான வாக்காளர் பட்டியலைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் இங்கே சுமத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் வாக்காளர் பட்டியல் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறார். அவை முன் இருப்பது உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல்களைத் தள்ளிப் போடுவது பற்றியதாகும். எனவே விரைவில் சுருக்கமாகக் கூறி முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. சோ. ஆறுமுகம்:** அதனால்தான் நான் விவரமாகப் போகவில்லை. இதற்கெல்லாம் காரணம், உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்தாமல் தள்ளிப் போட்டுக்கொண்டு அதிகாரிகளை நியமித்து நிருவாகத்தை நடத்தும்படி சொல்வதுதான்.

ஊராட்சி அமைப்புகளைக் கலைத்தாகிவிட்டது. ஊராட்சி ஒன்றியங்களையும் கலைத்தாகிவிட்டது. அதன்பிறகு நாட்டில் எப்படி நிர்வாகம் சரியாக இருக்க முடியும்? இதைக் கேட்டால் மற்ற மாநிலங்களில் தேர்தல்களை நடத்தவில்லையே என்று கூறுகிறார்கள். மற்ற மாநிலங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை வைத்துக்கொண்டுதான் தேர்தல்கள் நடத்தும் காலத்தை நீட்டித்திருக்கிறார்களே தவிர, இங்கே உள்ளதைப்போல் இருக்கிறவர்களையும் வீட்டிற்கு அனுப்பிவிட்டுத் தேர்தல்களை நடத்தாமல் இல்லை. அங்கே யாரும் இருக்கிற நிர்வாகங்களைக் கலைத்துவிட்டு தேர்தல் நடத்தாமல் இல்லை. அத்தகைய சிறப்பு இந்த ஆட்சிக்கு மட்டும்தான் உண்டு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மக்கள் குழு என்று ஒன்றைப் போட்டார்கள். அதிலே எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் உண்டு என்று பேசினார்கள். அதில் எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் இடமளிக்கிறோம் என்றெல்லாம்கூட சொன்னார்கள். ஆனால் நிலைமை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். என்னுடைய சொந்த ஊரான பூலாங்குறிச்சியில் உள்ள நிலைமையைப்பற்றி மட்டும் நான் இங்கே தெரிவிக்க

விரும்புகிறேன். வேறு எங்கேயும் நான் போக விரும்பவில்லை. அப்படி வேறு எந்த இடத்தைப்பற்றியாவது சொன்னால், ஒருவேளை அது உண்மைக்கு மாறாக இருக்கும் அல்லது நான் கொடுப்பது சரியில்லாத தகவலாகக்கூட இருக்கும் என்று சொல்லப்படலாம்.

நான் ஏற்கெனவே சொன்னபடி, நான் பூலாவாரி பஞ்சாயத்துத் தலைவராக இருந்தவன். அந்த ஊருக்கு மக்கள் குழு என்ற பெயரில் அந்த ஊருக்குச் சம்பந்தமில்லாத வேறு ஒரு பஞ்சாயத்திலிருந்து ஏழு பேர்களை நியமித்திருக்கிறார்கள். அந்தப் பஞ்சாயத்தில் வசிக்கும் ஆளும்கட்சிக்காரர்களைப் போட்டிருந்தால்கூட, நான் அதை ஆட்சேபித்திருக்க மாட்டேன். ஆனால் இந்த மக்கள் குழுவிற்குத் தலைவராக இருப்பவர் வேறு ஒரு பஞ்சாயத்தைச் சேர்ந்தவர். அதைப் போலவே மற்ற உறுப்பினர்களும் அந்தப் பஞ்சாயத்தைச் சேர்ந்தவர்களல்ல.

அங்கே வாக்காளர்கள் பட்டியல் தயாரித்திருப்பதை அங்கீகரிப்பதற்காக அங்கே உள்ள பஞ்சாயத்தில் ஒரு கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் அங்கே உள்ள பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் குழு உறுப்பினர்களுக்குத் தகவல் கொடுக்க வேண்டும் என்ற வகையில் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார். அப்படி நோட்டீஸ் கொடுப்பதற்குத் தேடிப்பார்த்தபோது அவர்களால் மூன்று பேர்களை மட்டும்தான் கண்டுபிடிக்க முடிந்தது. மற்ற நால்வர் யார் என்றே அவர்களால் அடையாளம் காண முடியவில்லை. எனவே கூட்டத்திற்கான அறிவிப்பு (நோட்டீஸ்) அவர்களுக்கு அனுப்பப்படவில்லை. இப்படி இல்லாதவர்களை எல்லாம் மக்கள் குழுவில் இடம் பெறும்படி செய்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இப்படி இருந்தால், ஊராட்சிகளின் நிர்வாகம் எந்த வகையில் இருக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இதன் காரணமாகத்தான் ஊராட்சிகளானாலும் சரி, ஊராட்சி மன்றங்களானாலும் சரி, அந்தப் பகுதிகளிலெல்லாம் மேற்கொள்ளப்படும் சமுதாய நலத் திட்டங்களின் பலன்கள் 100-க்கு 25 சதவிதம்கூட மக்களுக்குப் போய்ச் சேருவதில்லை. மக்களுடைய நலத் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் நிதி உரிய வகையில் பயன்படுத்தப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்கு முன்பெல்லாம், உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை ஒத்தி வைப்பதற்கு ஆட்சியாளர்கள் சொல்லி வந்த காரணம் சென்னை மாநகரத்தின் நிர்வாகத்தில் நடைபெற்ற ஒன்றாகும். இப்போதும் இங்கே பேசிய மாண்புமிகு



உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் மிகவும் பெருமையோடும் பூரிப்போடும் அதைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால் இப்போது சென்னை மாநகராட்சியில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். அது குறித்து இங்கே நான் ஒன்றைச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

18—9—1980 அன்று சென்னை தெற்கு நகராட்சி உதவி கமிஷனர் ஒரு "சஸ்பென்ஷன்" ஆணை பிறப்பிக்கிறார். இதற்குக் காரணம் என்ன என்று பார்த்தால், மாநகராட்சி ஆணையர் ஒருவருக்கு நியமன உத்தரவு போட்டதைப் போல் அங்கே உள்ளவர்கள் எல்லாம் சேர்ந்து ஒருவருக்கு அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். அந்த நபர் அந்த நியமன உத்தரவைக் கையில் எடுத்துக்கொண்டு பணியில் சேருவதற்காகப் போயிருக்கிறார். நல்ல வேளையாக அந்த நேரத்தில் கமிஷனரே அங்கே இருந்திருக்கிறார். என்னடா நான் அப்படி எந்த உத்தரவும் போடவில்லையே என்று எண்ணி இதைப்பற்றி விசாரித்திருக்கிறார். இதற்குப் பின்னால், யார் யார் உடந்தை என்று விசாரித்துப் பார்த்து இதில் முடிவெடுக்கும் வரையில் சிலரை தற்காலிக வேலை நீக்கம் செய்திருக்கிறார். இப்படிப்பட்ட வகையில் போலியான நியமன உத்தரவுகள்கூட இந்த ஆட்சியில் தரப்படுகின்றன என்ற குற்றச்சாட்டை நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநகராட்சியானாலும் சரி, நகராட்சிகளானாலும் சரி, அல்லது ஒன்றியங்களானாலும் சரி, இங்கெல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், பெருமளவுக்கு அங்கெல்லாம் ஊழல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே இப்படிப்பட்ட காரியங்கள் தொடர்ந்து நடைபெறுவதற்கு உதவியாகத்தான் இந்த ஆட்சி இவைகளுக்கான தேர்தல்களை ஒத்திபோட்டுக் கொண்டிருக்கிறது என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

இதற்கு முன்பெல்லாம் ஊராட்சி அமைப்புகளுக்கு நிலங்களும் மரங்களும் சொத்துக்களாக இருந்தன. அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு ஊராட்சி மன்றங்களுக்கு இருந்தது. தி.மு.க. காலத்தில் நிலங்களில் எல்லாம் ஆக்கிரமிப்பு நடைபெற்றுவிட்டது என்று சில உறுப்பினர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். ஆனால் இப்போது என்ன நிலைமை என்றால், அங்கே இருந்த மரங்கள்கூட வெட்டப்பட்டுவிட்டன. ஊரில் இருந்த நிலங்களையெல்லாம் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டார்கள். நிலங்களையெல்லாம் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் ஆக்கிரமித்து அவர்களின் கூடாரங்களாக ஆக்கிக்கொண்டு அவற்றிற்கான பட்டாக்களைச் சில இடங்

களில் பெற்றுவிட்டார்கள். பல இடங்களில் பட்டா பெறும் முயற்சியில் ஈடு
பட்டிருக்கிறார்கள் என்பதை நான் ஆதாரத்தோடு இங்கே சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். பொதுச் சொத்தாக இருந்தவைகள் எல்லாம் ஆளும் கட்சி
யினரால் அவர்களின் சொந்த உடமைகளாக்கப்பட்டுவிட்டன. நாட்டின்
சொத்து ஆளும் கட்சியினருக்குச் சொந்தமானதாக்கப்படுகிறது. இதற்
கெல்லாம் தடையாக இருக்கக்கூடாது என்ற கருத்தில்தான் உள்ளாட்சி மன்றங்
களுக்கான தேர்தல்களை நடத்தாமல் தள்ளிப் போட்டுக்கொண்டே போகி
றார்கள். இன்றைக்கு இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேறினாலும், அதற்குப்
பிறகு விரைவில் இந்த ஆட்சியாளர்கள் உள்ளாட்சி மன்றங்களுக்கான
தேர்தல்களை நடத்தப்போவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம
மூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, "இனிமேல் எங்கள் ஆட்சிக் காலம்
முழுவதும் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை ஒத்தி வைத்துவிடுகிறோம்"
என்று சொல்வதேகூட முறையாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன்.

கிராமப் புறங்களில் உள்ள மக்களையெல்லாம் பல்வேறு இன்னல்களுக்கு
ஆளாக்கியிருக்கிறோம். அவர்களுக்குச் சரியான குடிநீர் இல்லை, சுகாதார
வசதிகள் இல்லை, மின்சார வசதியில்லை, பாதை வசதியில்லை, அதைப்
போலவே நகர்ப்புறங்களில் இருப்பவர்களுக்கும் சரியான சுகாதார வசதிகள்
இல்லை. இன்னும் சொல்லப்போனால் பள்ளிக் கட்டிடங்கள் நல்ல பராமரிப்பு
இல்லாமல் கல்வியேகூட பாதிக்கப்படும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே
இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு மேலும் தேர்தல் நடத்துவதைத்
தள்ளிப் போடுவது எந்த வகையிலும் நியாயமில்லை. இப்படி ஏதாவது
காரணத்தைச் சொல்லி அவையின் அனுமதியைப் பெறுவதென்பது வெறும்
கண்துடைப்பு வேலையே தவிர வேறு ஒன்றுமில்லை. அடுத்து 6 மாதத்திற்
குள்கூட இவர்கள் தேர்தல்களை நடத்தப் போவதில்லை என்பதை எடுத்துச்
சொல்லி இந்த மசோதாவை எதிர்த்து அமைகிறேன்.

(பிற்பகல் 1-10)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு மேலவைத் தலைவர்
அவர்களே, இங்கே அவையின் முன்னால் 6 சட்ட முன்வடிவுகள் கொண்டுவரப்
பட்டு, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அதன் மீது ஐந்து உறுப்பினர்கள்
பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக தனி
அதிகாரிகளுடைய காலத்தை எதன் காரணமாக நீட்டிக்கின்றோம் என்பது
சட்ட முன்வடிவுகளிலேயே விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக்





காரணங்களையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். சட்ட முன்வடிவுகள் எண் 23/1981-லிருந்து எண் 28/1981 வரையில் உள்ள சட்ட முன்வடிவுகள் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், கோவை நகராட்சி, சென்னை மாநகராட்சி ஆகியவைகளில் உள்ள தனி அதிகாரிகளுடைய காலத்தை நீட்டிக்க வேண்டும் என்பதற்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே ஒரு தடவை நான் அமைச்சரான பிறகு காலத்தை நீட்டிக்க வேண்டுமென்று இதே மன்றத்திலே கேட்டு இந்த மாமன்றமும் அதை ஏற்றுக்கொண்டு தனி அதிகாரிகளுடைய காலத்திற்கு நீட்டிப்புக் கொடுத்தது. ஆனால் இப்போது மீண்டும் அந்தக் கால நீட்டிப்பு வேண்டுமென்று கேட்பது சரியானதல்ல, முறையானதல்ல என்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இராமமூர்த்தி, திரு. ஆறுமுகம் ஆகியவர்கள் இங்கே விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். கால நீட்டிப்பு கேட்பதற்குரிய காரணங்களை தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே 1980-ல் நாடாளுமன்றத் தேர்தல் இந்த மாநிலத்தில் நடந்த நேரத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோல்வியுற்று, இரண்டே இரண்டு இடங்களைப் பெற்ற நேரத்தில் தமிழகத்தின் முதல்வர் ஊராட்சி மன்றத் தேர்தல் ஏப்ரல் மாதம் நடைபெறும் எனக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆனால் எதிர்பாராதவண்ணம், 17—2—1980 அன்று மாநிலத்திலேயிருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மைய அரசால் கலைக்கப்பட்டது. கலைக்கப்பட்ட காரணத்தால், அன்று ஜனநாயகத்திற்கு பேரிடி என்ற அளவிலே, எல்லோரும் எதிர்பாராத வண்ணம் நிகழ்ச்சி நடந்தது எல்லோருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். ஆகவே தேர்தலைத் தள்ளிப் போட வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்குக் கிஞ்சித்தும் இல்லை என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குப் பின்னாலே அனைத்துக் கட்சியினர் கூடி 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டும், அதற்காக வாக்காளர் பட்டியல் தயார் செய்ய வேண்டும் என்று ஒத்துக்கொண்டதை அடுத்து 18 வயது வந்தோர் வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கின்ற நிலைமையை பரிசீலனை செய்து கடந்த சனவரி மாதம் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு, ஊராட்சி மக்களில் ஏறத்தாழ 36 இலட்சம் வாக்காளர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இன்னும் நகராட்சி

களில் இந்தப் பணி தொடங்கப்படவில்லை. 18 வயது வந்தோர் வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கும் பணியை நகராட்சிகளும், மாநகராட்சிகளும் துவங்க வேண்டும். இவைகளைத் தயார் செய்து இந்தத் தேர்தலை நடத்த வேண்டிய சூழ்நிலைக்கு இந்த அரசு தள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மைய அரசிலிருந்து சில தாக்கீதுகள் இந்த மாநில அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. குறிப்பாக பஞ்சாயத்துக்களை வைத்துக்கொண்டிருக்கிற விவசாய அமைச்சரிடத்திலிருந்து ஒரு தாக்கீது இந்த அரசுக்கு அனுப்பப்பட்டது. அந்தத் தாக்கீதுபடி உடனடியாகத் தேர்தலைத் தள்ளிப் போடாமல் நடத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். அதற்குப் பிறகு ஒரு மாதம் கழித்து மீண்டும் ஒரு தாக்கீது மைய அரசின் உள்ளாட்சித் துறை அமைச்சரிடமிருந்து எங்களுக்கு வந்தது. "தேர்தலை நடத்த வேண்டாம்; வருகிற 31—3—1981 வரையில் தேர்தலை நடத்த வேண்டாம்; ஜனத்தொகை கணக்கெடுப்பு நடக்கிறது; அது முடிந்த பின்னாலே இவைகளைச் செய்ய வேண்டும்" என்று தாக்கீதுகள் எங்களுக்கு வந்திருக்கின்றன. மைய அரசு அனுப்பியிருக்கின்ற கடிதப் போக்குவரத்தின் அடிப்படையில் தேர்தலைத் தள்ளிப் போடவேண்டிய அவசியம் இந்த மாநில அரசுக்கு ஏற்பட்டது என்பதைச் சொன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, மைய அரசு இதிலே இடையூறு என்று சொல்லவில்லை. முக்கிய காரணங்களைக் காட்டி; அதை முன்னிட்டு தேர்தலைத் தள்ளிப்போட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்ததன் காரணமாகத்தான் தள்ளிப் போட வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு ஏற்பட்டிருந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேண்டுமென்றே தேர்தலைத் தள்ளிப் போடவேண்டும், பின்னாலே நமக்குச் சமயம் கிடைக்கும் நேரத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உண்மையிலே இல்லை என்பதை மீண்டும் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களும், மற்ற உறுப்பினர்களும், ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றில் பல மோசடிகள் நடக்கின்றன. இலஞ்ச லாவண்யங்கள் இருக்கின்றன, முறைகேடுகள் நடக்கின்றன என்று கோடிட்டுச் சொன்னார்கள். பஞ்சாயத்து உறுப்பினர்கள் இருந்த நேரத்திலும் கூட இது போன்ற முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்பதற்கு அவர்களே ஆதாரத்தைச் சுட்டிக்காட்டி; சென்னை மாநகராட்சியிலும் அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது என்பதை



யும் சொன்னார்கள். அதன் காரணமாகத்தான், முறைகேடுகள் அந்த அளவிலே நடைபெறுகின்றன, அவற்றைக் குறைக்க வேண்டும் என்பதற்காகத் தான், இந்தத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்பதற்காகத்தான், தனி அதிகாரிகளுடைய காலத்தை நீட்டிக்க வேண்டும் என்று இந்தச் சட்ட முன்வடிவுகளை நாம் கொண்டு வந்திருக்கிறோம். குறிப்பாக பல முறை கேடுகளைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் கவனத்திலே எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. ஆகவே கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த மூன்றாண்டுக்காலத்திலே புதிய ரோடுகள் அதிகமாகப் போடப்பட்டிருக்கின்றன என்ற கணக்கைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உண்மையிலேயே புதிய பேருந்து வழித்தடங்கள் இந்த ஆண்டு அதிகப்படுத்தப் பட்டுள்ளன. சனவரி மாதம் 1981-ல் மட்டும் புதிய கிராமப்புற பேருந்துகள் 400 விடப்பட்டிருக்கின்றன. ஆகவே மொத்தத்திலே 20 சதவீதம் அதிகமாகச் செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு நாம் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், இந்த ஆட்சிக் காலத்திலே அதிகமான ரோடு போடப்பட்டது என்பதைச் சொல்லிவிட்டு, பஸ் விட்ட கணக்கைப் படிக்கிறார். ஏற்கெனவே இருந்த பாதைகளை வேண்டுமானால் பராமரிப்பு செய்திருக்கலாம். புதியதாக பாதை அமைத்து விடப்பட்ட பஸ்கள் எத்தனை?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அந்தக் குறிப்புக்கு வருகிறேன். பல்வேறு திட்டங்களை இந்த அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. பஞ்சாயத்துத் தேர்தல் நடந்து பஞ்சாயத்து உறுப்பினர்கள் வந்தால் என்னென்ன பணிகளை மேற்கொள்ளுவார்களோ, அதற்கு மேலான பணிகளை இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, தன்னிறைவுத் திட்டம் கொண்டுவரப்பட்டு, 1980-81-ல் 69 ஒன்றியங்கள் எடுக்கப்பட்டு 31—3—1981-க்குள் 69 ஒன்றியங்களிலும் இருக்கக் கூடிய அடிப்படை வசதிகளைச் செய்கின்ற திட்டம் முடிய இருக்கிறது. ஏறத்தாழ 4 கோடி ரூபாய் இதற்காகச் செலவிடப்பட்டிருக்கிறது. ஆனால் இது வரையில் பஞ்சாயத்துத் தேர்தல் நடந்து பஞ்சாயத்து உறுப்பினர்கள் இருந்த நேரத்தில்கூட, கடந்த 30 ஆண்டுக் காலத்திலே இப்படிப்பட்ட திட்டம் நடைபெறவில்லை. பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தாமல்

அரசே பொறுப்பேற்றுக்கொண்டு இப்படிப்பட்ட அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்திருப்பதற்காக மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அரசைப் பாராட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே அரசே இவைகளைச் செய்து கொண்டிருப்பதால், தேர்தல் தேவையில்லை என்பதல்ல எண்ணம். தேர்தல் வேண்டும். தேர்தலை நடத்த வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் நாங்கள் இருக்கிறோம். எதாவது ஒரு தாக்கீது மைய அரசிடமிருந்து வந்து உடனே தேர்தலை நிறுத்த வேண்டும் என்பதால் இவைகளை இந்த மாமன்றத்திற்குக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

நகராட்சி மன்றங்களுக்குத் தேர்தலை என் நடத்தவில்லை என்று திரு. இராமமூர்த்தி அவர்கள் கேட்டார்கள். நகராட்சி மன்றங்களுக்கு தேர்தலை நடத்தாததற்குக் காரணம் 18 வயது வந்தவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டிய பணி நடத்த வேண்டியிருக்கிறது. ஆகவே அது முடிந்த பிறகு தேர்தல் நடத்தப்படும்.

அதே போல மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன், மாவட்ட அபிவிருத்திக் குழுவின் கூட்டம் நடைபெறவில்லை என்று சொன்னார்கள். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் கூட்டங்கள் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆகவே நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படும் என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போல நம்முடைய அருமை நண்பர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள், சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். பல முறைகேடுகள் நடைபெற்று வருகின்றன என்று சொல்லி, குறிப்பாக இராமநாதபுரம ஒன்றியத்திலே பிப்ரவரி மாதச் சம்பளம் ஆசிரியப் பெருமக்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்று சொல்லி, குறிப்புகளைக் கூட என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள், எந்த ஒன்றியத்திலும் அலுவலர்களுக்குச் சம்பள பாக்கி இருக்கக் கூடாது; சம்பள பாக்கி போன்ற குறைபாடுகள் நடந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஏற்கெனவே அதிகாரிகளுக்குத் தெளிவு படுத்தியிருக்கிறேன். இப்படிப்பட்ட நிலைமைகள் எந்த ஊராட்சி ஒன்றியத்திலும் ஏற்பட்டுவிடக்கூடாது. அரசாங்கம் எப்போது வேண்டுமானாலும் "வேஸ் அண்டு மீன்ஸ் அட்வான்ஸ்" கொடுக்கத் தயாராக இருக்கிறது என்பதைச் சொல்லி ஆணையாளர்களுக்குச் சுற்றறிக்கை அனுப்பப்பட்



டிருக்கிறது. எந்த ஆணையர் தவறு செய்தாலும், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போல வாக்காளர் பட்டியலில் பெரிய மோசடி நடந்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் இந்த மாமன்றத்திலே தெரிவித்திருக்கிறார். 1958-லிருந்து 1979 வரையில், பஞ்சாயத்துக்கள் கலைக்கப்படுகிற வரையில் ஏறத்தாழ இருபது ஆண்டுகளாக பஞ்சாயத்து ஒன்றியத் தலைவராக இருந்திருக்கிறார். அவர்களுக்குத் தெரியாததல்ல. மோசடி குற்றச்சாட்டைச் சொல்லி, வாக்காளர் பட்டியலில் இப்படி நடக்கலாமா என்று

(பிற்பகல் 1-20)

கேட்டார். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். "நீங்கள் ஏற்கெனவே அங்கேயுள்ள மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களுக்கு ஒரு தாக்கீது அனுப்பியிருக்கிறீர்கள். அதற்கு அவர்கள் பதிலைக் கொடுத்திருக்கிறார்கள். நாலாவது படிவத்திலே, சேர்க்கவேண்டும் என்றாலும் விலக்கவேண்டுமென்றாலும், கொடுக்கவேண்டும் என்று ஒரு குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 20 ஆண்டுக்காலம் தலைவராக இருந்தவருக்கு, அவைகள் எல்லாம் தெரிந்திருக்கும். அப்படித் தெரிந்திருந்தும்கூட இந்த மாமன்றத்திலே இப்படியெல்லாம் கேட்பது நியாயமாக இருக்குமா, சரியாக இருக்குமா ?" என்ற கேள்விதான் கேட்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : நானும் ஒரு கிராமத்திலிருந்துதான் ஒரு சாதாரண வாக்காளர் என்ற முறையில், ஆட்சேபனை தெரிவிக்கின்ற முறையில், இதைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறேன். ஒரு மேலவை உறுப்பினர் என்ற முறையிலே ஒரு அரசியல் கட்சியிலே இருக்கக்கூடிய காரணத்தினாலே, இப்படிப்பட்ட தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. நான் இவைகளைப்பற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு விண்ணப்பம் கொடுத்தேன். அந்த விண்ணப்பத்தின் மீது விசாரணை செய்து நீக்கவேண்டியவர்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல், எனக்கு இப்போது இங்கே பதில் இப்படிக் கொடுப்பது முறைதானா என்று ஒரு கேள்வியைக் கேட்கிறேனே தவிர வேறல்ல. எனக்கு இது தெரியாமல் இல்லை.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** வாக்காளர் பட்டியலில் எப்படி சேர்க்க வேண்டுமென்ற முறைகளெல்லாம் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. தெரிந்திருக்கின்ற காரணத்தினாலேதான் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டு அந்தந்தப் பஞ்சாயத்து அலுவலகங்களிலே மாட்டப் பட்டிருந்தது. அதற்கான குறுகிய காலம் கொடுத்து, எந்த எந்தக் காலத்தில் சேர்க்கலாம், எந்த எந்தக் காலத்திலே விலக்கலாம் என்று கூட அங்கே குறிப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இது எல்லாம் தெரியாமல் இல்லை. வேண்டுமென்றே எங்கள் கட்சிக்காரர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. மேலும் வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பது ஏற்கெனவே முடிவு எடுத்தபடி செய்யப்பட்டிருக்கிறது. யார் யார் பட்டதாரிகளோ, அப்படியிருந்து வேலையில்லாமல் இருக்கின்றார்களோ, அவர்களையெல்லாம் இந்தப் பணிக்கு அமர்த்தலாம் என்று முடிவு எடுத்து அதன்படி அந்தப் பணி முடிக்கப்பட்டிருக்கிறது. அப்போது ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் பட்டியல்கள் முடிவடைந்த பிறகு, ஆட்சேபணைகள் சொல்கின்ற முறையில், மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆறுமுகம் அவர்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே சொல்லிக்கொள்கிறேன். எங்களைப் பொறுத்தவரையில் அ.தி.மு.க. வைப் பொறுத்த வரையில், ஆளும் கட்சிக்காரர்களை நம்பித்தான் அரசை நடத்த வேண்டும் என்ற நிலையில் இல்லை. ஆளுங்கட்சிக்காரர்களை வைத்துத்தான் நிலைமைகளைச் சரிப்படுத்தவேண்டுமென்ற நோக்கம் கண்டிப்பாக எங்களுக்கு இல்லை. நேரம் கிடைக்கின்றபோதெல்லாம் அனைத்துக் கட்சிகள் கூட்டம் போட்டுதான் முடிவு எடுக்கப்படுகின்றது. இன்னும் நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்களையெல்லாம் எப்படி நடத்தலாம் என்பதற்காக மே மாதத்திலே அனைத்துக் கட்சிக் கூட்டம் நடக்கவிருக்கிறது என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது போலவே சென்னை மாநகராட்சியிலே முறைகேடுகள் நடைபெற்றதைப் பற்றியும் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது உடனடியாகக் கவனிக்கப்படும் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக பொதுவாகவே ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் அதே நேரத்திலே நகராட்சி, மாநகராட்சிகள் எல்லாம் ஜனநாயகத்தினுடைய தொட்டில்கள் என்பதையும்,



இங்கே ஜனநாயகத்திலே நம்பிக்கை உள்ளவர்களிடம் தான் ஆட்சி இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான தேர்தல்களை எவ்வளவு சீக்கிரமாக நடத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நடத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment—

" In clause 2, delete the words ' period of two " and insert the word ' few ' ".

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, இந்தத் திருத்தம் தேவையில்லை என்பதுதான் என்னுடைய எண்ணம். தேர்தல்களை சீக்கிரமாக நடத்த இருக்கிறோம் என்ற காரணத்தினால்தான் காலக் குறியீடுகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திருத்தத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் திருத்தத்தை வற்புறுத்துகின்றார்களா அல்லது திரும்பப் பெறுகிறார்களா ?

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே I insist on my amendment.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" In clause 2, delete the words 'period of two' and insert the word 'few' ".

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1981) நிறைவேற்றப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 23/1981) நிறைவேற்றப்பட வேண்டும். "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1981).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு @(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1981) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

@ 488 ஆம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment :—

" In clause 2, delete the words " four years and two months" and insert the words " some years ".

(திரு. சோ. ஆறுமுகம் வழிமொழிந்தார்.)

* திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, இரண்டு வார்த்தைகள் சொல்லிக்கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையிலே, இந்த அரசு கொள்கை அளவில் 18 வயதானவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை என்ற அறிவிப்பு செய்திருக்கிறது. அதற்கான வாக்காளர் பட்டியல் தயாராக இருக்கிறது. இந்தக் கால நீடிப்பு காரணமாக அரசு சொல்கின்ற ஒரு ஆண்டு கடந்தால்கூட, இப்போது 18 வயது என்பவர்களுக்கு தேர்தலின்போது 19 வயது ஆகின்ற நிலை ஏற்படும். ஆகவே அரசினுடைய நோக்கமே, கொள்கையிலே மாறுபாடு உண்டாகிறது. ஆகவே சில ஆண்டுகள் என்ற எனது திருத்தத்தை ஏற்றுக்கொள்வதாக இருந்தால், குறிப்பாக அரசு எப்போது நினைக்கிறதோ அதற்கு ஏற்றாற்போல் தேர்தலை வைத்துக்கொள்ளலாம். நான் சொல்வது அரசுக்கே துணையாக இருக்கும். மத்திய ஆட்சி தலையீட்டினாலேதான் தேர்தல்கள் எல்லாம் தள்ளிப்போயிற்று என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அ.தி.மு.க. அரசு ஏற்பட்ட பிறகு எத்தனை முறை தாக்கீதுகள் வந்தன என்று தெரியவில்லை. மத்திய அரசு இருந்துகொண்டிருக்கின்ற நிலையிலேயேதான் வேறு மாநிலங்களில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மத்திய அரசு சொல்வதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்கின்றார்கள். இந்த அரசு எத்தனை முறை தள்ளிப்போட்டி

ருக்கிறது ? பலமுறை தள்ளிப் போட்டிருக்கின்றார்கள். அந்த நிலையிலே எல்லாம் மத்திய அரசு—தேர்தல்களை உடனடியாக வைக்க வேண்டும் என்று சொல்லிற்று, இப்போதுதான் "சென்சஸ்" என்று சொன்னார்கள். "சென்சஸ்" எடுக்கின்ற வரையிலே வேண்டாம். பிறகு தேர்தலை நடத்துங்கள்" என்று சொன்னார்கள். ஆனால் இப்போது சொல்லும் காரணம் என்ன ? இங்கே வறட்சி இருக்கிறது, டிரௌட் (drought) இருக்கிறது என்ற காரணங்களைச் சொல்கின்றார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அலுவல்கள் முடியும் வரை அவையின் நேரம் நீடிக்கப்படுகிறது.

திரு. க. இராமமூர்த்தி : எதாவது காரணங்களை வைத்து அவ்வப்போது தள்ளிக்கொள்கிறார்கள். ஆகவே அரசுக்கு எப்போது வாய்ப்பு இருக்கிறதோ அப்போது தேர்தலை நடத்திக்கொள்ளலாம் என்ற அளவிலே, என் திருத்தம் அரசுக்குத் துணையாக இருக்கும் என்பதால், எனது திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, "four years and two months" என்பதை "some years" என்று திருத்த வேண்டும் என்று அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்கள். அது தேவையில்லை என்பது என்னுடைய எண்ணம். காரணம் நாங்கள் தேர்தலை ஏற்கெனவே தள்ளிவைப்பதற்கான காரணங்களைச் சொல்லி அதற்குக் காலக் குறியீடுகள் எல்லாம் கொடுத்திருக்கிறோம். அதற்கு வேண்டிய விளக்கமும் கொடுத்திருக்கிறோம். வேறு பல மாநிலங்களில் இன்னும் தேர்தல் நடைபெறவில்லை என்பதையும் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே இந்திய தேர்தல் அதிகாரி திரு. ஷக்தர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியா முழுவதும் மேல் சபை உறுப்பினர்களுடைய பதவிகள்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். 200-க்கு மேற்பட்ட பதவிகள் இன்னும் மாநிலங்களில் நிரப்பப்படவேண்டியிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். நம்மைப் பொறுத்த வரையில், 21 இடங்கள். பக்கத்திலே ஆந்திராவில் 26 இடங்கள். உத்தரப் பிரதேசத்தில் 63 இடங்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு நான் கோடிட்டுக் காட்டி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இந்தத் திருத்தத்தை வாபஸ் பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



திரு. க. இராமமூர்த்தி : நான் திரும்பப் பெறுகிறேன், நேரம் ஆயிற்றே என்பதற்காக.

திருத்தம், அவையின் அனுமதியோடு, திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1981) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 1-30)

(5) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1981.)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவர்களே—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 491 ஆம் பக்கத்தில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு, 2.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment :—

" In clause 2, for the words " four years and two months " *insert* the words " few years ".

திரு. சே. ஆறுமுகம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா ?

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, என்னுடைய திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1981) நிறைவேற்றப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.





மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1981) நிறைவேற்றப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(6) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1981)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவரவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

---

@ 490 ஆம் பக்கத்தில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பிரிவு 2.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment :—

"In clause 2, sub-clause (1), for the words "for a period of five years and nine months" *insert* the words "few years"."

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா, திரும்பப் பெறுகிறாரா?

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, என்னுடைய திருத்தத்தை திரும்பப் பெறுகிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும்முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு என் 26/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 26/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



(7) 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1981).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 27/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 27/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment :—

"In clause 2, sub-clause (1) for the words 'for a period of six years' *innsert* the words' till such time and date the State Government feel convenient to hold elections'".

திரு. சோ. ஆறுமுகம் : திருத்தத்தை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா, திரும்பப் பெறுகிறாரா?

---

@ 491 ஆம் பக்கத்தில் இணைப்பு IX ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, என்னுடைய திருத்தத்தை வலியுறுத்தவில்லை.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 27/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## (8) 1981 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 28/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 492 ஆம் பக்கத்தில் இணைப்பு X ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

### பிரிவு 2.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment :—

"In clause 2, *delete* the words 'within a period of seven years and six months' and *insert* the words 'within a period convenient to the State Government'".

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய பதிலிலிருந்து ஒன்று தெரிந்தது. இந்தியாவில் எந்தெந்த மாநிலங்களில் தேர்தல்கள் நடைபெறவில்லை என்ற கணக்கை எடுத்ததிலிருந்து இப்போதைக்கு உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதாக இல்லை என்பது அவரை அறியாமலேயே வெளிப்படுகிறது. எனவே என்னுடைய திருத்தம் அவருடைய கருத்துக்கு ஏற்றதாக இருக்கிறதென்று நினைக்கிறேன். எனவே இதை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆந்திர மாநிலத்தில் ஐதாராபாத் மாநகராட்சியில் 1966 லிருந்து தேர்தல் நடைபெறவில்லை. அதே நேரத்தில் நமது மாநிலத்தில் சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையில், வெகு சீக்கிரமாக நடத்த இருக்கிறோமென்று தெரிவித்து, இந்தத் திருத்தத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா, திரும்பப் பெறுகிறாரா ?

[1981 மார்ச் 9

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"In clause 2, *delete* the words 'within a period of seven years and six months' and *insert* the words 'within a period convenient to the State Government'".

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

திரு. க. இராமமூர்த்தி : அரசு என்னுடைய திருத்தங்களை ஏற்காமல் பிடிவாதம் பிடித்துக்கொண்டிருக்கிற போக்கைக் கண்டித்து நானும், என்னுடைய கட்சியினரும் வெளி நடப்பு செய்கிறோமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. க. இராமமூர்த்தி வெளி நடப்பு செய்தார்)

திரு. ம. சங்கரலிங்கம் : இந்த அரசாங்கம் ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களை நடத்தாமல், கால நீட்டிப்பு கேட்பதைக் கண்டித்து, திராவிட முன்னேற்றக் கழகம் வெளியேறுகிறது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்தத் திருத்தத்தை வழிமொழிந்து பேசிய அளவிலே . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வெளியேறுவதென்பது உறுப்பினர்களின் உரிமை. ஆனால் வெளியேறுவதற்கு ஒரு இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஏற்கெனவே இப்படி நடந்திருக்கிறதோ, என்னவோ, வாக்கெடுப்பின்போது வெளிநடப்பு செய்வது நல்லதொரு சம்பிரதாயமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: நான் வெளி நடப்பு செய்கிறேன்.

(உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் வெளிநடப்பு செய்தார்).



1981 மார்ச் 9]

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ரொம்ப நாள் ஆகிவிட்டது வெளி நடப்பு செய்து.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் நாளை காலை 10.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1.37)

7. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

Nil

*B. Reports, Notifications and Other Papers.*

58. Answers to Unstarred Question Nos. 9 to 12.

* 59. The Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1981 (L.A. Bill No. 2 of 1981), as passed by the Assembly.

* 60. The Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Amendment Bill, 1981 (L.A. Bill No. 6 of 1981), as passed by the Assembly.

* 61. The Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants Arrears of Rent (Relief) Amendment Bill, 1981 (L.A. Bill No. 7 of 1981), as passed by the Assembly.

* 62. The Tamil Nadu Payment of Subsistence Allowance Bill, 1981 (L.A. Bill No. 13 of 1981), as passed by the Assembly.

* Circulated to all M.L.Cs. on 7th March 1981.



இணைப்பு I

392 ஆம் பக்கத்தில் உடுக்குறியிடாத வினா 12-க்கான விடையைக் காண்க

பதில்: (அ) கால்நடைப் பராமரிப்புத் துறை திருத்தி அமைக்கப்பட்ட அமைப்பில், செயற்கை முறை கருவூட்டு நிலையங்கள் என்று தனியாக எதுவும் இந்த மாநிலத்தில் இல்லை.

(ஆ) 1977-78, 1978-79 மற்றும் 1979-80-ம் ஆண்டுகளில் செயற்கை முறை கருவூட்டல் வேலையானது கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற்று வருகிறது :—

| | 1977-78. | 1978-79. | 1979-80. |
|---|---|---|---|
| கால்நடை மருந்தகம் மற்றும் கேந்திர கிராம நிலையங்கள் | 78 | 79 | 67 |
| கால்நடை மருத்துவமனை மற்றும் கேந்திர கிராம நிலையங்கள் | 10 | 9 | 10 |
| கால்நடை கிளை நிலையங்களில் செயற்கை கருவூட்டல் செய்யப் பட்டவை | 539 | 539 | 477 |
| தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம் : | 4 | 5 | 7 |
| மண்டல செயற்கை கருவூட்டு நிலையங்கள் | 10 | 12 | 16 |
| தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம் கிளை நிலையங்கள் | 250 | 300 | 400 |
| கேந்திர கிராம மைய நிலையங்கள் | 39 | 55 | 57 |
| கேந்திர கிராமக் கிளை நிலையங்கள் | 390 | 550 | 570 |

(ஆ) (1)

| வருடம் | மொத்தச் செயற்கைக் கருவூட்டல் செய்த எண்ணிக்கை. |
|---|---|
| 1977-78 | 9,67,008 |
| 1978-79 | 10,27,199 |
| 1979-80 | 9,95,871 |

(2) மருத்துவம் மற்றும் செயற்கைக் கருவூட்டல் செய்யப்பட்ட கால்நடைகளின் மொத்த எண்ணிக்கை.

மருத்துவம் மற்றும் கருவூட்டல் இந்த நிலையங்களில் செய்யப்பட்ட விவரம்:—

| | எண்ணிக்கை | மருத்துவம் செய்யப்பட்டவை | செயற்கை கருவூட்டல் செய்யப்பட்டவை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **1977—78.** | | | |
| கால்நடை மருத்துவமனை மற்றும் கேந்திர கிராம நிலையங்கள் | 10 | 70,129 | 56,970 |
| கால்நடை மருந்தகம் மற்றும் கேந்திர கிராம நிலையங்கள் | 78 | 3,16,605 | 4,44,342 |
| கால்நடை கிளை நிலையங்கள் | 539 | .. | 2,15,131 |
| தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம் | 4 | 89,340 | 1,09,107 |
| கேந்திர கிராம வளர்ச்சி வட்டாரங்கள் | 39 | 69,798 | 1,41,458 |
| **1978—79.** | | | |
| கால்நடை மருத்துவமனை மற்றும் கேந்திர கிராம நிலையங்கள் | 9 | 71,618 | 51,026 |
| கால்நடை மருந்தகம் மற்றும் கேந்திர கிராம நிலையம் | 79 | 4,21,814 | 4,47,772 |
| கால்நடை கிளை நிலையங்கள் | 539 | .. | 2,02,218 |
| தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம் | 5 | 90,245 | 1,48,772 |
| கேந்திர கிராம வளர்ச்சி வட்டாரங்கள் | 57 | 74,988 | 1,77,411 |
| **1979—80.** | | | |
| கால்நடை மருத்துவமனை மற்றும் கேந்திர கிராம நிலையங்கள் | 10 | 73,033 | 40,410 |
| கால்நடை மருந்தகம் மற்றும் கேந்திர கிராம நிலையம் | 67 | 5,81,906 | 2,70,720 |
| கால்நடை கிளை நிலையங்கள் | 477 | .. | 2,5[illegible],768 |
| தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம் | 7 | 3,74,642 | 2,08,548 |
| கேந்திர கிராம வளர்ச்சி வட்டாரங்கள். | 57 | 3,10,535 | 2,25,424 |



## இணைப்பு II

[404 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

திருவாளர்கள் எஸ். பரமசிவம், எஸ். இராசேந்திரன், எஸ். மனோகரன் ஆகிய மூன்று சகோதரர்கள் வாலாஜாபாத்தில் " எஸ். பரமசிவம் மற்றும் சகோதரர்கள் " என்ற பெயரில் ஒரு கூட்டாண்மை (Partnership) -யும், " எஸ். இராசேந்திரன் மற்றும் சகோதரர்கள் " என்ற பெயரில் மற்றொரு கூட்டாண்மையும் அமைத்து ஒவ்வொரு கூட்டாண்மைக்கும் ஒரு அரிசி அரைவை ஆலையாக இரு அரிசி அரைவை ஆலைகள் நிறுவி தொழில் நடத்தி வருகிறார்கள். இராசேந்திரன் மற்றும் சகோதரர்கள் என்ற கூட்டாண்மை நடத்தி வரும் அரைவை ஆலை நவீன ஆலையாகும். அவர்களின் விண்ணப்பத்தின் பேரில் "பரமசிவம் மற்றும் சகோதரர்கள்" என்ற கூட்டாண்மை தமிழ்நாடு நுகர் பொருள் கழகத்தின் அரைவை முகவராக 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நியமனம் செய்யப்பட்டது. அக்கூட்டாண்மையிடமிருந்து ரூ. 25,000 பிணை வைப்புத் தொகையாகவும், ரூபாய் ஒரு லட்சத்திற்கு வாலாஜாபாத் நகரில் உள்ள இந்தியன் பாங்கிடம் இருந்து 20—12—1979-ல் மூன்றாண்டுகளுக்கு பொறுப்புறுதியாகவும் நுகர் பொருள் வாணிபக் கழகம் பெற்றுள்ளது. " இராசேந்திரன் மற்றும் சகோதரர்கள் " என்ற மற்ற கூட்டாண்மையையும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு அரைவை முகவராக நியமனம் செய்யுமாறு விண்ணப்பம் நுகர்பொருள் கழகத்திற்கு வந்துள்ளது. இந்த கூட்டாண்மையிடமிருந்தும் ரூ. 25,000 பிணை வைப்புத் தொகையாக நுகர் பொருள் வாணிபக் கழகம் 9—7—1980 அன்று பெற்றுள்ளது. இந்த கூட்டாண்மை வாலாஜாபாத் இந்தியன் பாங்கினை ரூ. 1 லட்சத்திற்கு பொறுப்புறுதியளிக்குமாறு கேட்டுள்ளது. அப்பொறுப்புறுதி இன்னும் வரவில்லை. எனவே இக்கூட்டாண்மையை அரைவை முகவராக இன்னும் நியமித்து ஆணையிடப்படவில்லை.

அரைவை முகவராக நியமிக்கப்பட்ட "பரமசிவம் மற்றும் சகோதரர்கள்" என்ற கூட்டாண்மைக்கு 1979 சம்பாவில் அரைவைக்காகக் கொடுக்கப்பட்ட நெல் முழுவதற்கும், 1980 சம்பாவில் முதலில் கொடுத்த நெல்லிற்கும், நிர்ணயிக்கப்பட்ட அரிசியை கொடுத்து தங்களது கணக்கினை முடித்துக் கொண்டார்கள். அதன்பின் கொடுத்த நெல்லிற்கு நிர்ணயிக்கப்பட்ட அரிசியை ஒப்படைக்கவில்லை.

அரவைக்காக கொடுக்கப்பட்ட நெல்லும் அக்கூட்டாண்மை அரைத்து அளித்த அரிசியின் அளவுகளும் இன்னும் வரவேண்டிய அரிசியின் அளவுகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| அறுவடைப் பருவம் | நெல் ரகம் | ஒப்படைக்கப் பட்ட நெல் | நிர்ணயிக்கப் பட்ட அரிசி | ஒப்படைப்பு செய்த அரிசி | வரவேண்டிய அரிசி |
|---|---|---|---|---|---|
| | | (டன்களில்.) | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1979 சம்பா | சன்னரகம் | 5.130 | 3·488 | 3.500 | இல்லை |
| | நடுத்தரம் | 7·600 | 5·168 | 5·195 | இல்லை |
| | மோட்டா ரகம் | 40.198 | 27·335 | 27.296 | இல்லை |
| 1980 சம்பா | சன்னரகம் | 118.883 | 80.935 | 80.840 | இல்லை |
| 1980 சம்பா | சன்னரகம் (ஐ.ஆர்.20) | 39.935 | 25.958 | 20.000 | 5·956 (நொய்) |
| | மோட்டா ரகம் (ஏ.டி.டி.31) | 100.010 | 55.191 | 35.250 | 19.941 (நொய்) |

1980 சம்பா அறுவடையில் நுகர்பொருள் வாணிபக் கழகம் அளித்த அனுமதியின் பேரில் இக்கூட்டாண்மை 678.000 டன் சன்னரக நெல் நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் நேரடி கொள்முதல் செய்து இரட்டைப் பூட்டு முறையில் இக்கூட்டாண்மையின் அரிசி அரவை ஆலையின் கிட்டங்கியில் வைத்தது. அதில் 150 டன் நெல்லை "இராசேந்திரன் மற்றும் சகோதரர்கள்" என்ற பெயரில் இவர்கள் நடத்தும் அடுத்த கூட்டாண்மையின் நவீன அரவை ஆலையில் அரைக்கும் பொருட்டு 6—1—1981 அன்று மாற்றப்பட்டது. மீதம் உள்ள 528 டன் நெல்லில் 351.226 டன் நெல் அரவைக்காக இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நெல்லிற்கு 67 விழுக்காடு அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட அரிசி 235.32 டன். ஆனால் அவர்கள் அளித்த அரிசி 204.347 டன் மட்டுமே. இதிலும் 30.974 டன் அரிசி வர வேண்டியது உள்ளது. மீதம் 176.774 டன் நெல் அவர்களது கிட்டங்கியில் இருக்க வேண்டும். ஆனால் 27—1—1981 அன்று நுகர் பொருள் வாணிபக்







கழகத்தின் மண்டல மேலாளர் ஆய்வு செய்தபோது, அக்கிட்டங்கியில் இருந்த 176.774 டன் நெல் முழுவதும் இல்லை. இந்த நெல்லை இரட்டைப் பூட்டு முறையில் உள்ள கிட்டங்கியில் இருந்து அரவைக்காகக் கொடுக்கப்பட்டதாகவும் பதிவேடுகளில் குறிப்புகள் இல்லை. இந்த நெல் எப்படி கிட்டங்கியை விட்டு வெளியேறியது என்பது மர்மமாக உள்ளது.

இவர்களது மற்றைய "இராசேந்திரன் மற்றும் சகோதரர்கள்" என்ற கூட்டாண்மை நடத்தும் நவீன அரிசி ஆலையில் அரவைக்காக முதலில் 50 டன் நெல் கொடுக்கப்பட்டது. அதற்குரிய அரிசி முழுவதும் அரைத்துக் கொடுத்து விட்டார்கள். ஆனால் 6—1—1981 அன்று இரட்டைப் பூட்டு முறையில் உள்ள கிட்டங்கியிலிருந்து மாற்றப்பட்ட 150 டன் நெல்லுக்கு உரிய அரிசியைக் கொடுக்கவில்லை. இதற்கிடையில் 11—1—1981 அன்று வழக்கறிஞர் மூலம் இவர்களுக்கு நுகர் பொருள் வாணிபக் கழகம் அரவைக் கூலியாக வரவேண்டிய பணத்தைக் கொடுக்கும்படியும் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட நெல்லில் அதிக அளவு ஈரப்பதம் இருந்ததாகவும் எனவே, அந்நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்ட அரிசி நியாயமற்றது என்றும் அறிவிப்பு ஒன்றை அனுப்பினார்கள். இவர்களிடமிருந்து வரவேண்டிய அரிசி முழுவதையும் உடனடியாக கொடுக்க வேண்டும் என்று மண்டல மேலாளர் 12—1—1981 அன்று இறுதி அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இந்த அறிவிப்பினை பெற்ற பிறகு, முன் ஜாமீன் கோரி உயர்நீதி மன்றத்தில் இவர்கள் மனுச் செய்துள்ளார்கள்.

இவர்கள் வழக்கறிஞரிடம் கொடுத்த அறிவிப்பு முழுவதும் தவறு என்று மண்டல மேலாளர் கூறியுள்ளார். மேலும் 29—1—1981 அன்று இம்மூன்று சகோதரர்களும் மண்டல மேலாளரைச் சந்தித்து கொடுக்க வேண்டிய எல்லா அரிசியையும் கணக்குப்படி கிட்டங்கியில் இருக்க வேண்டிய 176.774 டன் நெல்லுக்குரிய அரிசியையும் சேர்த்து மூன்று மாத காலத்திற்குள் கொடுத்து விடுவதாக எழுத்து மூலம் மண்டல மேலாளரிடம் உறுதியளித்துள்ளார்கள். மேலும் வழக்கறிஞர் மூலம் அவர்கள் கொடுத்த அறிவிப்பினை திரும்பப் பெற்றுக் கொள்வதாகவும் உறுதியளித்துள்ளனர்.

மேற்கண்ட குறைபாடுகள் மீது நுகர் பொருள் வாணிபக் கழகம் தனது சட்ட ஆலோசகர்களுடன் கலந்தாலோசித்தது. குற்றவியல் சட்டத்தின் கீழ் இவர்களை தண்டிப்பதற்காக நடவடிக்கை எடுக்குமாறு வாலாஜாபாத் சப்-இன்ஸ்பெக்டரிடம் மண்டல மேலாளர் மூலம் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர இம்மூவர் மீதும் உரிமை இயல் வழக்கு தொடருமாறும் சட்ட ஆலோசகர் அறிவுரை கூறியுள்ளார். மேலும், காவல்துறை விசாரணையில்

இரட்டைப் பூட்டு அதிகாரி நேரடியாகவோ, மறைமுகமாகவோ சம்பந்தப் பட்டிருப்பதாகத் தெரிய வந்தால், அவர்மீதும் குற்ற நடவடிக்கை எடுக்கப் பரிந்துரை செய்துள்ளார். மேலும் இந்தியன் பாங்க் பாமசிவம் சகோதரர்கள் என்ற கூட்டாண்மைக்கு அளித்த பொறுப்புறுதி அடிப்படையில் இந்தியன் பாங்கினை ஒரு இலட்ச ரூபாய் நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு இக்கூட்டாண்மை அரிசி முழுமையும் அளிக்காததினால் ஏற்பட்ட நட்டத்திற்கு ஈடாக செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது. நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான நெல்லை அனுமதியின்றி எடுத்ததற்கும் ஒப்படைக்க வேண்டிய அளவு அரிசியை கொடுக்காததற்கும் ஆலை சொந்தக்காரர்கள் மீது உடனடியாக எல்லாவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும். மேலும் முன்பு இவ்வரைவை முகவரின் கிட்டங்கியின் இரட்டைப் பூட்டு அதிகாரியாக பணி யாற்றிய உதவி தர ஆய்வாளர் திரு. மோகன்தாஸ் என்பவரையும் (தற்போது பொன்னேரி உதவி தர ஆய்வாளர்) இந்நெல் கிட்டங்கியில் இல்லையென்பதை கண்டு பிடித்தபொழுது இரட்டைப் பூட்டு அதிகாரியாக பணியாற்றிய உதவி தர ஆய்வாளர் திரு. அப்துல் ரசாக் என்பவரையும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். விசாரணையில் இவர்கள் இக்குற்றத்திற்கு உடந்தை யென்று தெரிய வந்தால் அவர்கள் மீது குற்ற **இயல் சட்டத்தின் கீழ் நடவ டிக்கை எடுக்கப்படும்.**



## இணைப்பு III

[407 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

1. இம்மாநிலத்தில் கீழ்க்காணும் இடங்கள் விலைவாசி அதிகமுள்ள பகுதிகள் என்று அறிவிக்கப்பட்டுள்ளன:—

(1) இராமேஸ்வரம், குருசடைத் தீவுகள், மண்டபம்.

(2) பெரியார் மாவட்டத்தில் (கோயம்புத்தூர் மாவட்டத்தில் முன்பு இருந்த) தாளவாடி வளர்ச்சி வட்டாரம்.

(3) தென்னார்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் பொட்டியம், புதூர், புதுப்பாளப்பட்டி, சரியலூர், பாச்சேரி.

2. தாளவாடி வளர்ச்சி வட்டாரம் நீங்கலாக மேற்சொன்ன இடங்களில் உள்ள அரசுப் பணியாளர்களுக்கு தமிழ் நாடு தனிச்சம்பளம், படிகள் விதியைச் சேர்ந்த 8 (பி) விதியில் சுட்டிய விதங்களில், விலைவாசி அதிகமுள்ள பகுதி களுக்கான படி வழங்கப்பட்டு வந்தது. (முன்பு கோயம்புத்தூர் மாவட்டத் திலும் தற்போது பெரியார் மாவட்டத்திலும் உள்ள) தாளவாடி வளர்ச்சி வட்டாரத்திலுள்ள அரசுப் பணியாளர்களுக்கு பணியாளரின் அடிப்படைச் சம்பளத்தில் 20 சதவீதம், சிறப்பு ஈட்டுப்படியாகக் கொடுக்கப்பட்டு வந்தது. இத்தொகை விலைவாசி அதிகமுள்ள பகுதிப் படிக்குப் பதிலாக திங்கள் தோறும் உயரளவு ரூபாய் 80-க்கு உட்பட்டதாகும். விலைவாசி அதிகமுள்ள பகுதிகளென தமிழ்நாடு மூன்றாவது சம்பளக் குழுவினால் அறிவிக்கப்பட் டுள்ள எல்லா இடங்களுக்கும் அப்படியை வழங்கும் திட்டம் பரிசீலிக்கப் படுகிறவரையில், தாளவாடி வளர்ச்சி வட்டாரத்தைப் பொறுத்தமட்டில், அந்தப் படி வழங்கப்படுவதற்குப் பதிலாக சிறப்பு ஈட்டுப்படி வழங்கும் திட்டம் 1—4—1978-லிருந்து நிறுத்தி வைக்கப்பட்டது.

3. விலைவாசி அதிகமுள்ள பகுதிகளுக்கான படி வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவது குறித்து ஆய்ந்து பார்த்த தமிழ் நாடு இரண் டாவது சம்பளக்குழு பின்வருமாறு பரிந்துரைத்துள்ளதையும் இச்சந்தர்ப் பத்தில் சுட்டிக் குறிப்பிடலாம்:—

" உள்நாட்டில் வெகு தொலைவில் சரியான போக்குவரத்து வசதியற்ற ஒதுக்குப்புறமான இடங்களிலும், இராமேஸ்வரம், மண்டபம் முதலிய தீவு களிலும் பணியிலமர்த்தப்பட்டுள்ள அரசுப் பணியாளர்களுக்கு இத்தகைய பகுதிகளில் அவர்களுக்கு ஏற்படக்கூடிய கூடுதல் செலவை ஈடு செய்ய கூடுதல் படி வழங்கப்படுகிறது. தற்போது பெரும்பாலும் இராமேஸ்வரத்திலும்

மண்டபத்திலும் பணியாற்றுகின்ற பத்திரப் பதிவுத் துறை, கூட்டுறவுத் துறை, மீன்வளத் துறை, காவல் துறைப் பணியாளர்களுக்கு இந்தப்படி கொடுக்கப்படுகிறது. இவ்விடங்களில் உள்ளவர்கள், இயல்பான போக்குவரத்தைக் கொண்டு இவ்விடங்களுக்குச் செல்வது மிகவும் கடினமாக இருந்தபோது இன்றியமையாப் பொருட்கள் கிடைப்பது அரிதாய் இருந்தபோது, இந்தப் படி அனுமதிக்கப்பட்டது. தற்போது மண்டபம், அப்பகுதியிலுள்ள மற்ற இடங்களுடன் முறையாக பேருந்து, இரயில் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. இராமேஸ்வரத்திற்கும் முறையான இரயில் போக்குவரத்து உள்ளது.

இந்தப் படியைத் தொடர்ந்து கொடுப்பதற்கான அவசியம் ஏதுவும் இருப்பதாக நாங்கள் நம்ப இயலவில்லை. இதனை நிறுத்தி விடலாம். ஆனாலும் தற்போது இந்தப் படியைப் பெற்று வருவோர்க்கு பாதுகாப்பு அளிக்கப்படலாம்."

விலைவாசி அதிகமுள்ள பகுதிகளுக்கான படி கொடுப்பது குறித்து தமிழ்நாடு இரண்டாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகள் செயல்படுத்தப்படவில்லை. ஆகவே, இந்தப் படியை "விலைவாசி அதிகமுள்ள படிகளென" அறிவிக்கப்பட்ட இடங்களில் அமர்த்தப்பட்டுள்ள பணியாளர்களுக்குத் தங்கு தடை ஏதுமின்றி தொடர்ந்து வழங்கப்பட்டது.

4. இதுபற்றி ஆய்ந்து பார்த்த தமிழ் நாடு மூன்றாவது சம்பளக் குழு பின்வருமாறு பரிந்துரைத்துள்ளது :—

"விலைவாசி அதிகமுள்ள பகுதிகளில் பணியாற்றும் அரசிதழ் பதிவிலா அலுவலர்களுக்கு வழங்கப்படுகிற இந்தப் படியின் அளவு, பணியாளர்களின் சம்பளத்திற்கேற்ப ரூபாய் 2.50-லிருந்து ரூபாய் 20.25 வரையில் உள்ளது. இவ்விடங்களுக்கு சாலைப் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள காரணத்தை முன்னிட்டு இந்தப் படியை நிறுத்திவிடலாம் என்று இரண்டாவது சம்பளக் குழு பரிந்துரைத்தது. ஆயினும், இந்தப் படியை அப்போது அனுபவித்து வந்தவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படலாம் என்றும் அக்குழு பரிந்துரைத்தது. எங்களுக்கு முந்தைய குழு செய்த பரிந்துரையை அரசு ஏற்று செயல்படவில்லையென நாங்கள் அறிகிறோம். சில இடங்களில் உள்ள பணியாளர்களின் சங்கங்கள் இந்தப் படியை இன்னும் பரவலாக வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளன. இது சம்பந்தமாக, முந்தைய குழுவின் பரிந்துரையினின்றும் மாறுபடுவதற்கான காரணம் ஏதும் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை."



5. போதிய போக்குவரத்து வசதிகள் இன்றி அதனால் இன்றியமையாப் பொருட்கள் கிடைப்பது அரிதாக இருந்ததாலும் ஏற்படக்கூடிய செலவை ஈடு செய்யவே விலைவாசி அதிக செலவினப் பகுதிப்படி வழங்க ஆணையிடப்பட்டது. இவ்விடங்களுக்கு சாலைப் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதை ஈண்டு குறிப்பிடலாம். விலைவாசி அதிகமுள்ள பகுதிகளுக்கான படியை நிறுத்திவிடுவது சம்பந்தமாக மூன்றாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளை அரசு பரிசீலித்து அந்தக் குழுவின் பரிந்துரைகளை ஏற்பதென முடிவெடுத்தது. தமிழ் நாடு தனிச்சம்பளம் படிகள் விதிகளின் 7 (2) விதியில் கண்டுள்ள பல்வேறு அதிக செலவின இடங்களில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட விலைவாசி அதிகமுள்ள பகுதிகளுக்கான படி வழங்கப்படுவதை 31—1—1981 மாலை முதல் நிறுத்த நிதித் துறையின் (படிகள்-2), 3—2—1981 நாளிட்ட 55 ஆம் எண்ணில் அரசாணை வெளியிடப்பட்டது. இரண்டாவது மற்றும் மூன்றாவது சம்பள ஆணைக் குழுக்களின் பரிந்துரைகளுக்கிணங்கவே மேற்படி அரசாணை வெளியிடப்பட்டது. இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் முகாமிலும், இராமேஸ்வரம் பகுதியிலும் பணியாற்றுகின்ற அரசுப் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டு வந்த அதிக செலவின இடப்படி திடீரென நிறுத்தப்படவில்லை என்பதை ஈண்டு குறிப்பிடலாம்.

## இணைப்பு IV

[412-ஆம் பக்கத்தில் இனம் 6 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 15 OF 1981.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu State Housing Board Act, 1961*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu State Housing Board (Amendment) Act, 1981.

(2) It shall come into force at once.

2. *Amendment of section 161, Tamil Nadu Act 17 of 1961.*—In the Tamil Nadu State Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961), in section 161, in sub-section (1), after the words "make regulations", the words "whether prospectively or retrospectively" shall be inserted.



## இணைப்பு V

[427 ஆம் பக்கத்தில் இனம் 6 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 23 OF 1981.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Act, 1979.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Amendment Act, 1981.

(2) It shall come into force at once.

2. *Amendment of section 4, Tamil Nadu Act 60 of 1979.*—In clause (*a*) of sub-section (3) of section 4 of the Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Act, 1979 (Tamil Nadu Act 60 of 1979, for the words "for a period of one year and six months", the words "for a period of two years" shall be substituted.

இணைப்பு VI

[464ஆம் பக்கத்தில் இனம் 6 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 24 OF 1981.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Act,* 1977.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Act, 1981.

(2) It shall come into force at once.

2. *Amendment of section* 4, *President's Act* 5 *of* 1977.—In clause (a) of sub-section (3) of section 4 of the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Act, 1977 (President's Act 5 of 1977), for the expression "four years and two months", the expression "four years and eight months" shall be substituted.





இணைப்பு VII

[464 ஆம் பக்கத்தில் இனம் 6 (5)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 25 OF 1981.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Panchayats Act,* 1958.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Panchayats (Amendment) Act, 1981.

(2) It shall come into force at once.

2. *Amendment of section* 155, *Tamil Nadu Act XXXV of* 1958.—In the proviso to clause (*b*) of sub-section (1) of section 155 of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958), for the expression "three years and eight months", the expression "four years and two months" shall be substituted.

இணைப்பு VIII

[469 ஆம் பக்கத்தில் இனம் 6 (6)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 26 OF 1981.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Act*, 1976.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement*.—(1) This Act may be called the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Amendment Act, 1981.

(2) It shall come into force at once.

2. *Amendment of section* 4, *President's Act* 28 *of* 1976.—In clause (*a*) of sub-section (3) of section 4 of the Tamil Nadu Municipal Council (Appointment of Special Officers) Act, 1976 (President's Act 28 of 1976),—

(i) for the words "for a period of four years and nine months", the words "for a period of five years and nine months" shall be substituted.

(ii) in the first proviso, for the words "the said period of four years and nine months", the words "the said period of five years and nine months" shall be substituted;

(iii) in the second proviso, for the words "three months", the words "six months" shall be substituted.





இணைப்பு IX

[467 ஆம் பக்கத்தில் இனம் 6 (7)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 27 OF 1981.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Coimbatore Municipal Council (Appointment of Special Officer)* Act, 1975.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement*.—(1) This Act may be called the Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Amendment Act, 1981.

(2) It shall come into force at once.

2. *Amendment of section* 3, *Tamil Nadu Act* 39 *of* 1975.—In clause (*a*) of sub-section (3) of section 3 of the Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Act, 1975 (Tamil Nadu Act 39 of 1975),—

(i) for the words "for a period of five years and nine months", the words "for a period of six years" shall be substituted;

(ii) the proviso shall be omitted.

இணைப்பு X

[472 ஆம் பக்கத்தில் இனம் 6 (8)க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 28 OF 1981.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Madras City Municipal Corporation Act, 1919.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras City Municipal Corporation (Amendment) Act, 1981.

(2) It shall come into force at once.

2. *Amendment of section 55-B, Tamil Nadu Act IV of 1919.*—In section 55-B of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919), in sub-section (1), for the words "within a period of six years and six months", the words "within a period of seven years and six months" shall be substituted.

---

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

செவ்வாய்க்கிழமை, 1981 மார்ச் 10.

மாசி 27; ரௌத்திரி, திருவள்ளுவராண்டு; 2012.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கந்தசாமி குழு அறிக்கை.

*131. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வீட்டு வசதி வாரியம், அரசினர் குடியிருப்பு ஆகியவைகளின் வாடகைப் பிரச்சினை தொடர்பாக கந்தசாமி கமிட்டி அறிக்கை எப்போது தந்தது?

(இ) அவ்வறிக்கையின் அடிப்படையில் அரசு ஏதும் ஆணை பிறப்பித்ததா?

(உ) இல்லை எனில், உரிய ஆணை எப்போது பிறப்பிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இக்குழு தன் அறிக்கையை 5—4—1979-ல் அரசுக்கு சமர்ப்பித்தது.

(இ) கந்தசாமி குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நிதித்துறை (படிகள்) 8—5—1980 நாளிட்ட 428 ஆம் எண் ஆணையில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தமிழ் நாடு அரசு அலுவலர்களின் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க மேற்சொன்ன ஆணை நிதித்துறை (படிகள் II) 22—5—1980 நாளிட்ட 472 ஆம் ஆணைப்படி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(உ) கிடை எழவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தமிழ் நாடு அரசு அலுவலர்களின் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, மேற்சொன்ன ஆணை நிறுத்தி வைக்கப்பட்டதாகச் சொன்னார்கள். கந்தசாமி குழுவின் அறிக்கைப்படி முதல் ஆண்டு 16 ரூபாயும், இரண்டாம் ஆண்டு 12 ரூபாயும், மூன்றாம் ஆண்டு 9 ரூபாயும் பிடித்தம் குறைத்துச் செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அது யானைப் பசிக்கு சோளப் பொரி தருவது போல் உள்ளது. மீண்டும் அரசு அலுவலர்களின் சங்கங்களை அழைத்துப் பேசி, அவர்கள் விரும்புகின்ற அளவுக்கு அரசு ஏதாவது செய்ய வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தவகையில் அரசு அலுவலர் களின் சங்கங்களை அழைத்துப் பேசி ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கந்தசாமி குழுவினுடைய பரிந்துரைகளின் அடிப்படையில்தான் அரசு ஆணை பிறப்பித்தது. ஆனால், பிறகு அரசு அலுவலர்களின் சங்கம் அதில் சங்கடம் இருக்கிறது என்று தெரிவித்ததன் பேரில் 22—5—1980 நாளிட்ட அரசு நிதித்துறை ஆணை எண் 472 மூலம் அந்த அரசாணை நிறுத்தி வைக்கப்பட்டது. மேற்சொன்ன பிரச்சினை குறித்து பணியாளர்களின் பிரதிநிதிகளுடன் ஒரு முறை விவாதித்த பிறகு மறு பரிசீலனை செய்ய விரும்புவதாகத் தலைமைச் செயலாளர் 2—7—1980-ல் நடைபெற்ற கூட்டுப்பணிகள் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார். தலைமைச் செயலாளரின் வேண்டுகோளுக்கிணங்க அப்போதிருந்த நிதித் துறை இணைச் செயலாளர் பணியாளர்களின் பிரதிநிதிகளுடன் முதற்கட்டக் கூட்டத்தை 16—8—1980-ல் கூட்டினார். மறு பரிசீலனை தொடர்பான கருத்துரு அரசின் கவனத்தில் உள்ளது. அரசு இதைப்பற்றி ஆராய்ந்து விரைவில் முடிவெடுக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அரசு அலுவலர்களுக்கு எல்லாம் வாடகைக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அரசாங்கக் குடியிருப்புகளைப் பொறுத்த வரையில், மேற்கு வங்கத்திலே ஊதியத்திலிருந்து ஐந்து சதவிகிதமும், கேரளா விலே ஊதியத்திலேயிருந்து ஏழு சதவிகிதமும் வாடகையாக வசூலிக்கிறார்கள். ஆனால், தமிழ் நாட்டிலே மட்டும் அரசு ஊழியர்களிடமிருந்து வீட்டு வாடகை யாக பத்து சதவிகிதம், ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. இன்றைக்குக்கூட செய்தித்தாளில் ஒரு செய்தியைப் படித்தேன். குடிசை மாற்று வாரியத்தின் குடியிருப்புகளில் குடியிருப்பவர்களுடைய வாடகையைப் பொறுத்தவரையில், 20 ரூபாய் வாடகையைக் குறைக்கப் போவதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. பிற மாநிலங்களிலுள்ள நடைமுறை யைப் பின்பற்றி நம்முடைய மாநிலத்திலும் 10 சதவிகிதம் என்று இப்போது இருப்பதைக் குறைத்து ஐந்து சதவிகிதம் அல்லது ஏழு சதவிகிதமும் வீட்டு வாடகையாக அரசு ஊழியர்களிடத்திலிருந்து வசூலிக்க, இந்த அரசு முன் வருமா?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு முறை கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த மாநிலத்தில் இந்த முறை கடைப்பிடிக்கப்படுகிறது. ஆகவே, இப்போது இதுபற்றி மறுபரிசீலனை செய்யவேண்டிய நிலையில் இல்லை.

**திரு. ஆ. நல்லசிவன் :** வீட்டு வசதி வாரியத்தின் குடியிருப்புகளிலும், அரசு குடியிருப்புகளிலும் வசிக்கக்கூடிய அரசு ஊழியர்களுடைய ஊதியத் திலிருந்து 10 சதவிகிதம் வாடகையாக வசூலிக்கப்படுவதுடன் கூட அவர்களுக் குரிய ஹவுஸ் ரென்ட் அலவன்சும் பிடித்தம் செய்யப்படுகிறது. இந்தக் குறை நீண்ட காலமாக அரசு ஊழியர்களிடம் இருந்துகொண்டிருக்கிறது. அரசு ஊழியர்களுடைய 9 அம்சக் கோரிக்கையில் இதுவும் ஒன்று. வீட்டு வாடகை என்று அடிப்படை ஊதியத்திலிருந்து 10 சதவிகிதத்தையும் பிடித்தம் செய்கிறார்கள். அதே நேரத்தில் அவர்களுக்குரிய வீட்டு வாடகைப் படியையும் பிடித்தம் செய்கிறார்கள். இரண்டு விதத்தில் வீட்டு வாடகையை அரசு ஊழியர்களிடமிருந்து வசூலிக்கிறார்கள். பல ஆண்டு காலமாக இதைக் கோரிக்கையாக வைத்து அரசு ஊழியர்கள் வாதாடி வருகி றார்கள். இதுபற்றி சென்ற முறை நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர் களைக் கேட்டதற்கு; தனிக் கேள்வி போடச் சொன்னார்கள். இப்படி இரண்டு விதத்தில் அரசு ஊழியர்களிடமிருந்து பிடித்தம் செய்வது அநீதி. இப்படிப் பிடித்தம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய முன்வருவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்தப் பிரச்சினை குறித்து பணியாளர்களின் பிரதிநிதிகளுடன் ஒரு முறை விவாதித்த பிறகு, மறு பரிசீலனை செய்ய விரும்புவதாகத் தலைமைச் செயலாளர் முன்பு நடைபெற்ற கூட்டுப்பணிகள் குழுக் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார். தலைமைச் செயலாளரின் வேண்டுகோளுக்கிணங்க, அப்போதிருந்த நிதித் துறை இணைச் செயலாளர் பணியாளர்களின் பிரதிநிதிகளுடன் முதற்கட்ட கூட்டத்தை ஏற்கெனவே கூட்டியுள்ளார். ஆகவே, தலைமைச் செயலாளர் அவர்களும் பணியாளர்களின் பிரதிநிதிகளுடன் பேசி ஒரு நல்ல முடிவுக்கு வரலாம் என்று தான் கருதுகிறார்கள். பணியாளர்களின் பிரதிநிதிகளுடன் அரசும் ஒப்புக்கொள்ளும் விதத்தில் ஒரு நல்ல முடிவுக்கு வர வேண்டும் என்பதுதான் இந்த அரசின் எண்ணமும். ஆகவே, இது பரிசீலனையில் இருக்கிறது என்பதையும் பரிசீலனை முடிந்த பிறகு பணியாளர்களின் பிரதி நிதிகளுடன் பேசி எல்லோருக்கும் ஏற்ற ஒரு நல்ல முடிவை எடுக்கலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## உள்ளாட்சித்துறைத் தேர்தல்கள்.

* 132. வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர்
அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேர்தல் கமிஷன் மாநிலங்களிலுள்ள உள்ளாட்சித் துறைத்
தேர்தலை நடத்தும் பொறுப்பையும் தன்னிடத்திலே ஒப்படைக்க வேண்டு
மென்று பரிந்துரை செய்துள்ளது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதுபற்றி அரசின் கருத்து என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இதற்கு இடமில்லை.

திரு. ம. சங்கரலிங்கம்: இரண்டு மாதங்களுக்கு முன்னால் இந்தியத்
தேர்தல் ஆணைக் குழு முதன்மைத் தேர்தல் ஆணையாளர் செய்தி நிருபர்கள்
கூட்டத்தில் பல மாநிலங்களில் உள்ள சட்டமன்ற மேலவைகளில் காலியாக
உள்ள இடங்களைக் குறிப்பிட்டு, அவைகள் ஏன் நிரப்பப்படாமல் இருக்கின்
றன என்று சொல்லிவரும்போது உள்ளாட்சி நிறுவனங்களின் தேர்தல்
களைத் திறமையாகவும் முறையாகவும் நடத்துவதற்கு தேர்தல்களை நடத்
தும் பொறுப்பை தேர்தல் ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கலாம் என்று
சொன்னதாகச் செய்தித் தாள்களில் வந்தது. குறிப்பாக இந்தியன் எக்ஸ்
பிரசில் அது வந்தது. இங்கே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தேர்தல்
கமிஷன் மாநிலங்களிலுள்ள உள்ளாட்சித் துறைத் தேர்தலையும் தன்னிடத்
திலே ஒப்படைக்க வேண்டுமென்று சிபாரிசு செய்யவில்லை என்று இங்கே
தெரிவித்தார்கள். திரும்பவும் இதுகுறித்து இந்த அரசு பரிசீலனை செய்து
இந்தியத் தேர்தல் ஆணைக் குழு முதன்மைத் தேர்தல் ஆணையாளர் அப்படி
செய்தி நிருபர்கள் கூட்டத்தில் செய்தி வெளியிட்டார்களா என்பதைத்
தெரிந்து அதற்கேற்ப தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு எதிர்க் கட்சித்
தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள்
5, 6, 8 தேதிகளில் பனாஜியில் (கோவா) நடந்த தலைமைத் தேர்தல் அதிகாரி
கள் மாநாட்டில் இந்திய தேர்தல் ஆணைக் குழு முதன்மைத் தேர்தல்
ஆணையாளர் தமது வரவேற்புரையில் பல மாநிலங்களில் உள்ள சட்டமன்ற
மேலவைகளில் காலியாக உள்ள இடங்களைக் குறிப்பிட்டு, அவைகள் ஏன்
நிரப்பப்படாமல் இருக்கின்றன என்று சொல்லிவரும்போது, உள்ளாட்சி
நிறுவனங்களின் தேர்தல்களைத் திறமையாகவும் முறையாகவும் நடத்து
வதற்கு தேர்தல்களை நடத்தும் பொறுப்பை தேர்தல் ஆணைக் குழுவிடம்
ஒப்படைக்கலாம் என்று தாம் முடிவிற்கு வந்ததாகக் குறிப்பிட்டார்.



அம் மாநாட்டின்போது இன்னுமொரு தருணத்தில் உள்ளாட்சித் தேர்தல்களை ஒரு நிர்வாக இயந்திரத்தின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று தேர்தல் ஆணைக் குழுவின் கருத்தை ஒரு தலைமைத் தேர்தல் அதிகாரி பாராட்டிப் பேசியிருக்கிறார். தேர்தல் ஆணைக் குழு அனுப்பிய கருத்தினையே தலைமைத் தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டிருக்கலாம். என்ன கருத்தை தேர்தல் ஆணைக்குழு மைய அரசுக்குத் தெரிவித்தது என்ற விபரம் இல்லை. நான் குறிப்பிட்டது எந்தத் தகவலும் மத்திய அரசிடமிருந்தோ, தலைமைத் தேர்தல் ஆணையாளரிடமிருந்தோ செய்த் குறிப்பாகவோ, கடிதமாகவோ வரவில்லை. அப்படி வந்தால்தான் நாம் நம்முடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் வரும். அப்படிப்பட்ட செய்தியோ; கடிதமோ நமக்கு வரவில்லை. அதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டுள்ளேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: நம்முடைய மாநிலத்திலிருந்து சென்ற தலைமைத் தேர்தல் அதிகாரி இதற்கு என்ன பதில் சொன்னார்? 2 வருடங்கள் வரை உள்ளாட்சித் துறைத் தேர்தல் நடத்தப்படாமல் இருக்கக்கூடிய உள்ளாட்சித் தேர்தல்களை தேர்தல் கமிஷனிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற கருத்து அங்கே வெளியானதாகச் செய்தித் தாள்களில் படித்தேன். அந்த அடிப்படையில் தான் நம்முடைய தேர்தல் அதிகாரியும் கருத்து வெளியிட்டார்களா? அப்படிப்பட்ட அறிக்கையை நம்முடைய தலைமைத் தேர்தல் அதிகாரி அங்கே சமர்ப்பிக்காவிட்டால், அதுபற்றி அரசு மத்திய அரசோடு தொடர்புகொண்டு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்களா என்பது பற்றிய தகவல் நமக்குத் தரப்படவில்லை. இந்தியத் தலைமைத் தேர்தல் கமிஷனர் அப்படிப்பட்ட கருத்தினைத் தெரிவித்திருக்கிறார். கருத்துக்கள் அங்கே பரிமாறப்பட்டன. ஒவ்வொரு மாநிலத்திலிருந்து சென்ற தலைமைத் தேர்தல் அதிகாரிகளும் தங்களுடைய கருத்துக்களைப் பரிமாறியிருக்கிறார்கள். நம்முடைய தேர்தல் கமிஷனர் இது கொள்கை பற்றிய பிரச்சினை என்று சொல்லியிருக்கிறார். உள்ளாட்சித் துறைத் தேர்தலை நடத்துகின்ற பொறுப்பு மாநில அரசிடமே இருக்கலாமா அல்லது இந்தியத் தேர்தல் ஆணைக் குழுவிடமே இருக்கலாமா என்பது கொள்கைப் பிரச்சினை. அதுகுறித்து அரசு முடிவு எடுத்த பிறகு தான் செய்ய முடியும். அப்படிப்பட்ட கருத்தினைத் தான் தெரிவித்திருக்கிறார். மத்திய அரசிடமிருந்தோ, இந்தியத் தலைமைத் தேர்தல் கமிஷனரிடமிருந்தோ நமக்கு எந்தவிதமான செயற் குறிப்பும், கடிதமும் வரவில்லை. அப்படி வந்தால், நமக்குச் சாதகமாக இருக்குமா, மாநில உரிமையைப் பாதிக்காத

அளவுக்கு உரிமையை நிலைநாட்டத் தக்க அளவுக்கு இருக்குமா என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து பார்த்து முடிவை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

(முற்பகல் 10–40)

திரு. ஆ. நல்லசிவன் : நகராட்சி மன்றங்களின் தேர்தல்களை நடத்தும் அதிகாரம் அரசியல் சட்டத்தின் அடிப்படையில் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடமையை நம்முடைய அரசு சரிவரச் செய்ய முடியாததால், அதையும் மத்திய அரசுக்குக் கொடுக்கும் நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. அதை அரசு தவிர்க்குமா? 'நீங்கள் நடத்தாவிட்டால், உங்களால் நடத்த முடியாவிட்டால், நாங்கள் நடத்துகிறோம்' என்ற அளவுக்கு இன்றைக்கு அபாயம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இவற்றைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்த முடியாததால் அல்ல, அதற்குரிய சூழ்நிலை ஏற்படாமல் தான் ஒத்திப் போடப்பட்டு வருகின்றன. இந்த நிலைமை நம்முடைய மாநிலத்திலேதான் என்றல்ல. இந்தியாவிலே உள்ள பல மாநிலங்களிலேயும் 10, 12, 15 ஆண்டுகள் என்ற அளவுக்குத் தேர்தல்கள் நடைபெறாமல் இருக்கின்றன. அந்தக் கருத்துக்களை அடிப்படையாக வைத்துத்தான் இப்படிப்பட்ட கருத்துக்களைப் பேசியிருக்கிறார்கள். வெகுவிரைவில் இந்தத் தேர்தலை நடத்தலாம் என்ற நிலை இருப்பதால், இந்தக் குறைபாடுகள் போக்கப்படுவதற்கு வழியிருக்கின்றது.

குற்றவியல் தலைமை உதவியாளர் பதவி.

*133. வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியாளரின் அலுவலகத்தில் உள்ள குற்றவியல் தலைமை உதவியாளர் பதவியை, பிற மாவட்டங்களில் உள்ளது போல் துணைத் தாசில்தார் நிலைக்கு உயர்த்துகின்ற செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு காலத்திற்குள் இது அமுல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் ஆணை வெளியிடப்படும்.



**திரு. ம. சங்கரலிங்கம் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் குற்றவியல் தலைமை உதவியாளர் பதவி என்று வைக்கப்பட்டு, பிற மாவட்டங்களில் எல்லாம் அந்தப் பதவி துணைத் தாசில்தார் நிலையில் வைத்துக்கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன ? இந்த நிலை அங்கு இருப்பது அரசுக்கு எப்போது தெரிய வந்தது ? அதைப் போக்க அரசு என்னென்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** நீண்ட நாட்களாக, 5 ஆண்டுகள், 10 ஆண்டுகளாக இந்த நிலைமை இருந்து வந்திருக்கிறது. இந்த ஆட்சி வந்த பிறகுதான், இந்த நிலைமை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதுபற்றி விரைவிலே இந்த அரசு முடிவெடுக்கும்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: இந்த அரசு வந்ததற்குப் பிறகு, துணைத் தாசில்தார்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா ? நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால், எவ்வளவு பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாவட்டங்களில் இருக்கும் வேலைப் பளுவை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு பகுதிகளில் 200–க்கும் மேற்பட்ட துணைத் தாசில்தார்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ம. சங்கரலிங்கம் : இந்தப் பதவி அண்மையில்தான் எல்லா மாவட்டங்களிலேயும் உயர்த்தப்பட்டது. குற்றவியல் தலைமை உதவியாளர் பதவி அண்மையில்தான், அதாவது 2 ஆண்டுகளுக்கு முன்னால்தான் உயர்த்தப்பட்டது. ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும்தான் உயர்த்தப்படவில்லை. அதற்குரிய காரணம், அது சிறிய மாவட்டம் என்பதுதான். ஆனால், இதுபோல சிறிய மாவட்டமாக இருக்கிற நீலகிரி மாவட்டத்திற்கு அந்த நிலை இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சிறிய மாவட்டம்; பெரிய மாவட்டம் என்ற பிரச்சினைக்கு இடமில்லை. மாவட்டங்களில் இருக்கும் வேலைப் பளுவைக் கவனத்தில் கொண்டுதான் கொடுக்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விரைவிலே அந்த மாவட்டத்திற்குக் கொடுக்கப்படும்.

## சென்னை வனவிலங்கு காட்சி சாலை.

* 134. வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை வனவிலங்கு காட்சி சாலையில் இருக்கும் வன விலங்குகள், நல்ல முறையில் பராமரிக்கப்படவில்லை என்று அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) சென்னை மாநகராட்சி மிருகக் காட்சிச்சாலையில் உள்ள வன விலங்குகள் சரிவர உணவு அளிக்கப்பட்டு, தக்க மருத்துவ வசதியுடன் செவ்வனே பராமரிக்கப்படுகின்றன.

(இ) வினா எழவில்லை.

திரு. ம. சங்கரலிங்கம்: நமது நாட்டிற்கு அண்மையில் வந்த ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மிஸிஸ் டபிள்யூ ஜோன்ஸ் என்ற அம்மையார் 4—9—1980-ல் ‘இந்து’ பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் அவர் இந்தியாவில் பல பகுதிகளுக்குச் சென்றதாகவும், திருவனந்தபுரம், ஹைதராபாத் போன்ற பகுதிகளுக்குச் சென்றுவிட்டு, சென்னைக்கு வந்தபோது தான் அதிர்ச்சியுறும் விதத்தில் வனவிலங்குக் காட்சிச்சாலை இங்கே இருப்பதாகவும், வீட்டில் ஒரு பூனைக்கு இருக்கும் அளவுக்குக் கூட வசதியில்லாமல் அங்கே சிங்கங்கள் இருக்கின்றன என்றும் சிறுவர்கள் பார்த்து மகிழ்ச்சியுறும் விதத்தில் அந்த விலங்குகள் இல்லையென்றும் சொல்லி அவைகளை வேறு இடத்திற்கு அனுப்பலாமே என்று அந்த அம்மையார் ஆலோசனை வழங்கியிருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ? அதுபற்றி எந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: 16—2—1979 ஆணையின்படி இந்த மிருகக் காட்சிசாலையை சென்னையிலே இருந்து வண்டலூருக்கு மாற்ற வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே இருக்கக்கூடிய 103 மிருகங்களும், 96 பறவைகளும் மற்றும் ஊர்வன ஜந்துக்களும் வனத் துறையின் மூலமாக எவ்வளவு சீக்கிரமாக வண்டலூருக்கு மாற்ற முடியுமோ அவ்வளவு சீக்கிரம் மாற்றப்படும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.





திரு. ம. சங்கரலிங்கம்: இப்போது இந்த மிருகக் காட்சி சாலையை வண்டலூருக்கு மாற்றுவது மிகவும் இன்றியமையாதது. அதை விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, சிங்கங்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கூண்டில் ஒரு சிங்கத்திற்கு எவ்வளவு சதுர அடி இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, ஒரு சிங்கத்திற்கு உணவுக்காக ஒரு நாளைக்கு எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: எவ்வளவு சதுர அடி இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. மனிதர்களுக்கே பல இடங்களிலே போதுமான இடமில்லை என்ற நிலைதான் இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: இந்த மிருகக்காட்சி சாலை வண்டலூருக்கு மாற்றப்படும் என்ற செய்தி பல ஆண்டுக் காலமாக காதிலே விழுந்துகொண்டிருக்கிறது. வண்டலூரிலே இதுதொடர்பாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, இதற்குத் தேவையான நில ஆர்ஜிதங்கள், மற்றும் அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுவிட்டனவா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: 16—2—1979 லே ஆணையிடப்பட்டு வண்டலூரிலே அதற்குத் தேவையான இடம் எடுக்கப்பட்டது. மிருகக் காட்சி சாலை அமைக்க வேண்டும் என்ற நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது மிருகக் காட்சி சாலை இருக்கும் இடம் இரயில்வேக்குத் தேவைப்படுவதால், இன்னும் துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

THIRU J. M. MIAKHAN: It is learnt that the smoke from the railway engines in the Central Station affects the health of the animals there and it is said that they are suffering from T.B. Is the Hon. Minister aware of this and will he kindly take steps to rectify the situation and see that the animals are healthy ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அதுபற்றி குறிப்புகள் இப்போது என்னிடத்திலே இல்லை. வண்டலூருக்கு மாற்றப்படுவதன் மூலம் இவைகள் எல்லாம் தவிர்க்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வன விலங்குகளின் கணக்கைச் சொன்னார்கள். அந்த மிருகங்களில் நம்மைப் பார்த்து பயப்படும் மிருகங்கள் எத்தனை, நம்மை பயமுறுத்தும் மிருகங்கள் எத்தனை? எவை அதிகம்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இரண்டுவகை மிருகங்களும் அங்கே உண்டு. ஆனால், இப்போது மனிதர்களைக் கண்டுதான் மிருகங்கள் பயப்படுகின்றன.

திரு. ம. சங்கரலிங்கம் : கல்வி சம்பந்தப்பட்டவரையில், சிறுவர்கள் கல்வி பயில்வதற்கு, அவர்களுடைய ஒருசில பாடப் பளுவைப் போக்குவதற்கு மிருகக்காட்சிசாலை இன்றியமையாததாக இருக்கிறது. வண்டலூரிலே அமைக்கப்படும் இந்த மிருகக்காட்சி சாலை திறந்த வெளியாக மிருகங்களை வைக்க வசதியோடு இருக்கிறதா ? இல்லை அங்கும் அடைக்கப்பட்டு வைக்கும் நிலைதான் இருக்கிறதா ? திருவனந்தபுரம் மற்றும் ஹைதராபாத்தில் இருப்பதுபோன்று மிருகங்கள் திறந்த வெளியில் போய்வரும் வசதியோடு அங்கே அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இது வனத் துறைக்கு சம்பந்தப் பட்ட விஷயமானதால், இதுபற்றி வனத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. எப்படிப்பட்ட மிருகக்காட்சி சாலை அமைக்கப்போகிறார்கள் என்ற குறிப்புகள் எல்லாம் அந்தத் துறையிலே இருக்கின்றன.

## சேலம் நகராட்சி அலுவலகக் கோப்புகள்.

* 135. வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சேலம் நகராட்சி அலுவலகத்திலுள்ள சில முக்கியமான கோப்பு கள் திருடப்பட்டு, விற்கப்பட்டதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) சம்பந்தப்பட்ட சேலம் நகராட்சியின் அலுவலர்களும் மற்றும் அதி காரிகளும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. களவாடப்பட்ட கோப்புகளில் பல கைப்பற்றப்பட்டன. கிடைக்கப்பெறாத கோப்புகள் புதுப்பிக்கப்பட்டு வரு கின்றன.

திரு. ம. சங்கரலிங்கம் : சேலம் நகராட்சியிலிருந்து முக்கியமான ஃபைல்கள் எல்லாம் களவு செய்யப்பட்டு விற்கப்பட்டன என்ற செய்தி அரசின் கவனத்திற்கு எப்போது வந்தது ? எவ்வளவு ஃபைல்கள் களவு



போயிருக்கும் ? அரசாங்க ரெக்கார்டில் என்னென்ன காணப்படவில்லை என்ற பட்டியல் தயார் செய்யப்பட்டதா ? இவ்வாறு செய்யப்பட்டதற்கு உயர்தர அதிகாரிகள் யாராவது உடந்தையாக இருந்தார்களா ? இப்போது இது சம்பந்தமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பவர்கள் காவலாளர், பியூன் என்று தெரியவருகிறது. இதற்கு மேல்மட்ட அதிகாரிகள் யாராவது உடந்தை யாக இருந்தார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : செப்டம்பர் மாதம் 24 ஆம் தேதி இது நடந்ததாகச் சொல்லப்படுகிறது. இதைக் குறிப்பிட்டு 29—6—1980-லே 'இந்து' பத்திரிகை இதழிலே சேலம் நகராட்சி அலுவலகத்திலே சில கோப்பு கள் களவாடப்பட்டிருக்கின்றன என்று செய்திகள் வந்தவுடனேயே நடவடிக் கைகள் எடுக்கப்பட்டன. நானே அங்கே திடீர்ச் சோதனையிட்டு எந்தெந்த அலுவலர்கள் சரியாகத் தங்களுடைய பணியைச் செய்யவில்லையோ, யார் அதற்குக் காரணமாக இருந்தார்களோ அவர்களெல்லாம் தாற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். தனி அலுவலர், ஆணையாளர் போன்றவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு அந்தப் பணியிலே அவர்கள் இன்றைக்கு இல்லை.

திரு. சோ. ஆறுமுகம் : சேலம் நகராட்சியிலே கோப்புகள் காணாமல் போனது என்று சொல்லப்படுவது சாதாரணமாக ஒரு நகராட்சியினுடைய கூட்ட நிகழ்ச்சி நிரல்தான். முதல்நாள் டேபிளிலே ஆணையாளர் வைத்து விட்டுப் போயிருக்கிறார். மறுநாள் காலையிலே அறையைக் கூட்டி சுத்தம் செய்யும் பெண்மணி அது சாதாரண 'வேஸ்ட் பேப்பர்' என்று நினைத்து அதை 'வேஸ்ட் பேப்பர்' விற்பதைப் போல விற்றிருக்கிறார். இது தெரிய வந்தவுடனேயே கமிஷனர் அவர்கள் இதை விசாரித்து—அந்தப் பேப்பரை யார் எடுத்தார்கள் என்று விசாரித்து—அறிந்து இடைப்பாடி என்ற இடத்திலே போய் அதைக் கண்டுபிடித்தார்கள். அதற்குப் பிறகு சம்பந்தப்பட்ட ஊழி யர்கள்மீது ஆணையாளரே நடவடிக்கை எடுத்திருக்கிறார். ஆணையாளர் அவர்கள் நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்டவர்களை வேலை நீக்கம் செய் திருக்கிறார் என்று சொன்னால், அதற்குப் பிறகு அந்த ஆணையாளரையே வேலை நீக்கம் செய்தது என்பது எப்படி சரியாகும் ?

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நகராட்சியின் நிர்வாகத்தைக் கவனிக்க வேண்டியவர் அங்குள்ள ஆணையாளர். எனவே அவருக்குத் தெரி யாமல் கோப்புகள் வெளியே போகின்றன என்றால், It is purely negligence of duty ". ஆகவே ஆணையாளர் இதன் காரணமாக தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நகராட்சி அலுவலகத்தின்

கோப்புகள் பழைய பேப்பர் கடைக்குச் செல்கிற அளவுக்கு மோசமான நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. எனவே அலுவலகக் கோப்புகளும் சரிவர வைக்கப்படவில்லை என்ற குற்றத்திற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் அலுவலகக் கோப்புகளை இன்மும் அலமாரியில் வைத்துத்தான் பூட்டி விட்டுப் போக வேண்டும் என்ற ஆணையிருந்தும்கூட ஆணையாளர் இதனைக் கவனிக்காமல் இருந்தார் என்ற காரணத்திற்காகவும் அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இதுபோன்ற வேறு எந்த நகராட்சிகளிலோ அன்றி ஊராட்சி ஒன்றியங்களிலோ கோப்புகள் திருடப்பட்டதாகவோ, வெளியே கொண்டு செல்லப்பட்டு விற்கப்பட்டதாகவோ, பக்கங்கள் கிழித்து நீக்கப்பட்டதாகவோ புகார்கள் ஏதேனும் அரசுக்கு வந்ததுண்டா? அப்படிப்பட்ட புகார் வந்திருந்தால், அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இதைப்போன்ற சம்பவம் தூத்துக்குடி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றதாக அரசுக்குத் தகவல் வந்ததன் அடிப்படையில் உடனடியாக நான் தூத்துக்குடி சென்றிருந்தேன். அங்கேயும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அங்கே எத்தனை கோப்புகள் காணாமல் போயிருக்கின்றன, இதற்கு யார் காரணம், அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதெல்லாம் அரசின் கவனத்தில் இருந்து வருகின்றன.

திரு. சோ. ஆறுமுகம்: இப்படிப்பட்ட முறையில் நகராட்சிகளின் அலுவலகக் கோப்புகள் சமீபத்தில்தான் காணாமல் போயிருக்கின்றன என்று தெரிகிறது. எனவே அந்துறையின் அமைச்சர் அவர்கள் இதற்குப் பொறுப் பேற்றுக்கொள்ள முன்வருவாரா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இத்தகைய கோப்புகள் எந்த ஆண்டிலிருந்து காணாமல் போயிருக்கின்றன என்பதையும் அரசு பரிசீலித்துக் கொண்டுதான் இருக்கிறது. ஏறத்தாழ ஐந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பல கோப்புகள் காணாமல் போயிருக்கின்றன. ஆனால், அப்போதிருந்த அமைச்சர்கள் அதையெல்லாம் கவனிக்கவில்லை. இப்போது வந்திருக்கிற அமைச்சர்தான் இவைகளையெல்லாம் கவனித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





(ஈ) இவைகள் முறையாகக் கிடைக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) & (இ): குறைந்த ஒதுக்கீடு, மின்சார வெட்டு, போக்குவரத்து தாமதம் ஆகிய காரணங்களினால் இரும்பு, நிலக்கரி, கல்கரி ஆகிய மூலப்பொருட்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டு அதனால் மாநிலத்தில் பல தொழில் பிரிவுகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

(உ) மாநிலத்திற்கு தேவையான அளவு மூலப்பொருள்களும் அவைகளை எடுத்துச்செல்ல தேவையான அளவு இரயில் சரக்குப்பெட்டிகளும் ஒதுக்குமாறு, மைய அரசு, இந்திய நிலக்கரி நிறுவனம் மற்றும் கல்கத்தாவிலுள்ள இரயில் இயக்க இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

திரு. ம. சங்காலிங்கம்: நமது தமிழகத்திலுள்ள பெரிய ஆலைகளுக்கு மூலப் பொருளாக எவ்வளவு இரும்பு உருக்கு தேவைப்படுகிறது? அதைப் போலவே சிறிய ஆலைகளுக்கு எவ்வளவு தேவைப்படுகிறது? கடந்த 1—1—1979 முதல் 15—6—1980 வரை, இவைகளில் எத்தனை சதவிகிதம் நமக்குக் கிடைத்தது? மேலும், இவைகளை மத்திய அரசு ஒதுக்கீடு செய்வதில் காலதாமதம் ஏற்பட்டதா அல்லது இம்மூலப்பொருள்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்பு ஆலைகளைக் கொண்டுவருவதில் நமக்குக் காலதாமதம் ஏற்பட்டதா? நிலக்கரி தமிழகத்திற்குக் கிடைப்பதில் எவ்வளவு சதவிகிதம் குறைந்திருக்கிறது? இந்த நிலைமைகளைப் போக்க மத்திய அரசின் சம்பந்தப்பட்ட இலாக்கா அமைச்சர்களோடு தொடர்பு கொண்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். அவ்வாறு மத்திய அமைச்சர்களோடு தொடர்பு கொண்டதால் ஏதேனும் வெற்றி ஏற்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: நிலக்கரியைப் பொறுத்தவரையில், தமிழகத்திலுள்ள சிறிய தொழில் பிரிவுகளின் தேவை மாதம் ஒன்றுக்கு 2,000 சரக்குப் பெட்டிகள். 1978-79 ஆம் ஆண்டு மாநிலத்தின் ஒதுக்கீடு 550 சரக்குப் பெட்டிகள்தான். 1979-80 ஆம் ஆண்டில் மாநிலத்தின் ஒதுக்கீடு 500 சரக்குப் பெட்டிகள். 1980-81 ஆம் ஆண்டில் மாநிலத்தின் ஒதுக்கீடு 500 சரக்குப் பெட்டிகள். ஆனால் 1979-80 ஆம் ஆண்டு நமக்குக் கிடைத்தது 230 சரக்குப் பெட்டிகள்தான். ஒதுக்கீடு 500 சரக்குப் பெட்டிகளானாலும், நமக்குக் கிடைத்தது 230 சரக்குப் பெட்டிகள்தான்.

தற்போதைய நிலக்கரி ஒதுக்கீடான 500 சரக்குப் பெட்டிகளை, 1,000 சரக்குப் பெட்டிகளாக உயர்த்துமாறு மத்திய அரசைத் தமிழக அரசு இப்போது கேட்டுக்கொண்டிருக்கிறது.

## Irrigation Channel for Viraganur and Nedungulam Villages

136 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Irrigation be pleased to state:

(a) whether there is any proposal to construct an irrigation channel from the Vaigai River, connecting Viraganur and Nedungulam Villages which are backward areas; and

(b) if not, whether such a project will be formulated and implemented soon?

மாண்புமிகு திரு. க. இராசா முகமது: (அ) மேல் நெடுங்குளம் கிராமத்தில், நெடுங்குளம் குளம் பயனுறும் வகையில் சித்தணையிலுள்ள வைகை வெள்ள நீரை, திலையூர் வாய்க்கால் வரை திருப்பிவிடுவதற்காக ஒரு கால்வாய் வெட்டும் திட்டம் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் பரிசீலனையில் உள்ளது என்றும் தற்போதுள்ள முன்னுரிமை திட்டங்கள் முடிவடைந்தவுடன் இவ்வேலைக்கான ஆய்வு மேற்கொள்ளப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

(ஆ) வைகையிலிருந்து கால்வாய் வெட்டி அதன்மூலம் விராகனூர் மற்றும் நெடுங்குளம் கிராமங்களை இணைக்கும் செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை, எனினும் இத்திட்டத்தின் சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு நடத்தும்படி தல அதிகாரிகளை தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 9—3—1981 தேதி வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்ட வினா 103.

### மூலப்பொருட்கள் பற்றாக்குறை.

@* 103 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) உருக்கு, இரும்பு ஆகிய மூலப்பொருட்கள் பற்றாக்குறையால் 1—1—1979 முதல் 15—6—1980 வரை, தமிழ் நாட்டில் பாதிக்கப்பட்ட (i) பெரிய (ii) சிறிய தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) நிலக்கரி கிடைக்காததால் பாதிக்கப்பட்ட தொழிற்சாலைகள் எத்தனை?

---

@ 9—3—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.



தமிழக அரசைப் பொறுத்தவரையில் நிலக்கரிப் பற்றாக்குறையைப் போக்குவதற்காகத் தன்னாலான எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது. 10—9—1980 அன்று தமிழக முதல்வர் சிறுதொழில் கூடங்களுக்கு, உடனடியாகத் தேவைப்படும் நிலக்கரி, கல்கரி ஆகியவற்றைச் சரிக்கட்ட குறைந்தது 10,000 மெட்ரிக் டன் நிலக்கரியை ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசின் இரயில்வே அமைச்சரவர்களையும் எரி சக்தி, நிலக்கரித் துறை அமைச்சர் அவர்களையும் டெலக்ஸ் மூலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

மாதம் ஒன்றுக்கு 500-லிருந்து 1,000 வேகன் நிலக்கரி அனுப்பவேண்டும் என்றும், மாதம் ஒன்றுக்கு 150 வேகன் கல்கரி அனுப்ப வேண்டும் என்றும் தமிழக அரசின் கோரிக்கையை இரயில்வே அமைச்சகம் பரிசீலிக்கும் என்று தான் நம்புவதாக, மத்திய அரசின் எரி சக்தி நிலக்கரித் துறை அமைச்சர் அவர்கள் தமிழக அரசுக்குக் கருத்து தெரிவித்திருக்கிறார்.

அதுமட்டுமல்லாமல், தமிழக அரசு பின்வரும் செயற்குறிப்புகளை இரயில்வே அமைச்சகத்திற்கு, இது சம்பந்தமாக எழுதியுள்ளது :—

(1) இங்கு ஒன்றுக்கு ஒதுக்கப்படும் நிலக்கரியின் அளவை 500 வேகனிலிருந்து 1,000 ஆக உயர்த்த வேண்டும்.

(2) மாதம் ஒன்றுக்கு ஒதுக்கப்படும் கல்கரி (கோக்) அளவை 50 வேகனிலிருந்து 150 வேகனாக உயர்த்த வேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

(3) தமிழ்நாடு சிறுதொழில் கூடங்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் 10,000 மெட்ரிக் டன் நிலக்கரியைத் தற்காலிகமாக ஒதுக்கீடு செய்து அதனை ரயில் மூலம் அனுப்ப இயலாதாயின் மத்திய நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து சாலைகள் மூலமாக அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கின்றது.

(4) நெய்வேலியிலும் அதைச் சுற்றியுள்ள சுற்றுப்புறங்களிலும் உள்ள தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் சிங்கரேணிச் சுரங்கங்களிலிருந்து 5,500 மெட்ரிக் டன் நீராவிக் கரியை (ஸ்டீம் கோல்) ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறது.

(5) 10 நாட்களுக்கு முன் ஆந்திர முதல்வர் மாண்புமிகு திரு. அஞ்சையா அவர்களுக்கு, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் எழுதிய கடிதத்தில் 10,000 டன் நீராவிக் கரியை "அட் ஹாக்" முறையில் அலாட் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார். இந்த நடவடிக்கைகளின் காரணமாக, நிலக்கரி ஒதுக்கீட்டில் சற்று மாறுதல் ஏற்படும் என்று கருதுகிறேன்.

[1981 மார்ச் 10

(முற்பகல் 11-00)

அடுத்து, இரும்பு உருக்குப் பொருளைப்பற்றி சில விவரங்களை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) மூலம் பதிவு செய்துள்ள, இரும்பு உருக்குப் பொருளை மூலப்பொருளாகக் கொண்டு உள்ள 1,800 சிறுதொழில் கூடங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 81,000 டன்கள் இரும்பு உருக்குப் பொருள் தேவைப் படுகிறது. ஆனால் இந்த மாநிலத்திற்கு, 1980-81 ஆம் ஆண்டுக்கு 29,600 டன்கள் மட்டுமே மத்திய அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய தேவை 81,900 டன்கள். ஆனால் ஒதுக்கப்பட்டிருப்பது 29,600 டன்கள் மட்டுமே. இந்த மாநிலத்திற்குக் குறைந்தது 40,000 மெட்ரிக் டன் இரும்பு உருக்குப் பொருளையாவது வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் 21—7—1980 அன்று தன்னுடைய நேர்முகக் கடிதத்தில் மத்திய அரசினுடைய வணிக உருக்குத் துறை அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு, மாண்புமிகு உருக்குத் துறை அமைச்சர் தன்னுடைய பதிலில் தமிழ் நாட்டுக்கு 1978-79 ஆம் ஆண்டு 12,300 டன்களும், 1979-80 ஆம் ஆண்டிற்கு 26,000 டன்களும் ஒதுக்கப்பட்டன என்றும் 1980-81 ஆம் ஆண்டில் 29,600 டன்களாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார். இதிலிருந்து தனிச் சலுகை காட்டப்பட்டுள்ளதைக் காணலாம் என்றும் மேலும் தற்போது ஏற்பட்டுள்ள உற்பத்திக் குறைவால் மாநிலத்திற்குச் செய்யும் ஒதுக்கீட்டை உயர்த்துவதற்கில்லை என்றும், உற்பத்தியில் முன்னேற்றம் காணும்போது நிச்சயமாகக் கூடுதல் ஒதுக்கீடு செய்வதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

1980-81 ஆம் ஆண்டுக்கு நமது மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட 29,600 டன்களில் இதுவரை சிட்கோவின் மூலமாகக் கிடைத்த இரும்பு உருக்குப் பொருளின் அளவு 22,000 டன்கள்தான். நமக்கு ஒதுக்கப்பட்ட உருக்கின் அளவு அதிகரித்திருந்தபோதிலும், போதுமான இரயில் சரக்குப் பெட்டிகள் கிடைக்காமையால், மூவ்மெண்ட் பாட்டில்நெக்ஸ் இருந்த காரணத்தால், நமக்கு ஒதுக்கப்பட்டது 29,600 டன்களாக இருந்தபோதிலும் 22,000 டன்கள்தான் நமக்குக் கிடைத்திருக்கிறது. போதுமான இரயில் சரக்குப் பெட்டிகள் கிடைக்காமையால் இரும்பு உருக்குப் பொருள் வந்து சேரவில்லை என்பதால், போதுமான இரயில் சரக்குப் பெட்டிகளை ஒதுக்குமாறு மைய அரசின் இரயில்வே அமைச்சரை டெலக்ஸ் செய்தி மூலம் தமிழக அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல் 1981-82 ஆம் ஆண்டுக்கு தமிழகத்தினுடைய தேவைக்கு ஒரு இலட்சத்து ஏழு ஆயிரம் டன் இரும்பு உருக்குப் பொருளை ஒதுக்குமாறு மைய அரசை தமிழக அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.



1981 மார்ச் 10]

திரு. ம. சங்கரலிங்கம் : நிலக்கரியைப் பொறுத்த வரையில், நமக்கு எந்த அளவு தேவையோ அதில் 25 சதவீதத்தை ஒதுக்கீடு செய்து மத்திய அரசு நமக்குக் கொடுக்கிறது. ஒதுக்கீடு செய்வதில் கூட சிரமம் இல்லை. ஒதுக்கீடு செய்ததைக் கொண்டு வருவதில்தான் சிரமங்கள் இருப்பதாகத் தெரிகிறது. எனவே, இரயில் மார்க்கம் இல்லாமல், கப்பல் வழியாக, தரை வழியாகக் கொண்டுவர அரசு பரிசீலனை செய்து மாற்று ஏற்பாடுகளைச் செய்ய முன்வருமா ?

உருக்கைப் பொறுத்த வரையில், அவர்கள் உற்பத்தி செய்வதிலிருந்து ஆண்டுதோறும் ஒரு பகுதியைக் கொடுக்கிறார்கள். அது நம்முடைய தேவையில் 50 சதவீதத்திற்குப் போதுமானதாக இருப்பதால், தமிழகத்தினுடைய சேலம் உருக்காலையை விரைவுபடுத்தி உற்பத்தி செய்வதன் மூலமாக, இந்த இழப்பை ஈடு செய்யலாம். இது குறித்து அரசு தகுந்த நடவடிக்கையை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. எ. கிருஷ்ணசாமி : நிலக்கரியை இரயில் மார்க்கம் இல்லாமல் சாலை வழியாகப் பெறுவதற்கு, முதலில் சிறு தொழில் கூடங்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் பத்தாயிரம் மெட்ரிக் டன்களை சாலை வழியாக அனுப்புவதற்கு அனுமதி கேட்டிருக்கிறோம். 1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மூவாயிரம் மெட்ரிக் டன் கல்கரியைச் சாலை வழியாகக் கொண்டுவர, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதி, உரிமம் பெற்று சாலை வழியாகப் பெறப்பட்டு வருகிறது. மாதந்தோறும் ஆயிரம் டன்கள் சாலை வழியாக வருகிற காரணத்தால், சென்ற இரண்டு மாதங்களாக பற்றாக் குறை இல்லாமல், போதுமான அளவிற்கு கல்கரி இருப்பில் இருக்கிறது.

நிலக்கரியைப் பொறுத்த வரையில், மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். மீண்டும் வற்புறுத்தி, சாலை வழியாகப் பெறுவதற்கு முயற்சி செய்வோம்.

திரு. ம. சங்கரலிங்கம் : இரும்பைப் பொறுத்த வரையில், மத்திய அரசு, அவர்களுடைய உற்பத்திக்கேற்ப, இத்தனை சதவீதம் என்று ஆண்டுதோறும் கொடுத்து வருகிறார்கள். எனவே அவர்களை நம்பிக் கொண்டிருப்பதால் பயன் இல்லை. ஆகவே, சேலம் உருக்காலையை விரைவுபடுத்த தக்க நடவடிக்கை எடுத்து உற்பத்தி செய்வதன் மூலம், நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. எ. கிருஷ்ணசாமி : அதுபற்றி விவரம் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் தருகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** நம்முடைய தேவைக்கேற்ப ஈடு செய்ய முடியாத வகையில் நம்முடைய நாட்டில் மொத்த உற்பத்தி இருப்பதால், நம்மால் முடிந்த அளவிற்கு, நம்முடைய திறமைக்கேற்ப வாங்கக் கூடிய நிலைமையிலே இருக்கிறோம். இருந்தாலும், அப்படி ஒதுக்குவதைக் கூட எடுத்து வருவதிலே சங்கடங்கள் இருக்கின்றன. இரயில் வேகன்கள், போக்குவரத்து வசதிகள் சரியாக இல்லாததால், சங்கடங்கள் இருக்கின்றன. இதைத் தவிர்க்கிற வகையிலே, அப்போதைக்கப்போது வேகன்களைக் கேட்டுப் பெறுகிற வகையிலே தொடர் நடவடிக்கைகளை எடுக்க, தகுதி வாய்ந்த அதிகாரிகளையோ அதிகாரச் சார்பற்றவர்களையோ நியமித்து அனுப்ப அரசு முன்வருமா? இதுபோன்று, மற்ற மாநிலங்களிலும் நடைபெற்று வருகின்றன. நம்முடைய மாநிலத்திலும் நம்முடைய தேவையைக் கருதி, இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** இதுபோன்ற மூலப் பொருள்களை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்காக சிட்கோ போன்ற நிறுவனங்களும், அரசு சார்பாக இருக்கின்ற அதிகாரிகளும் முயற்சி செய்வதோடு மட்டுமல்லாமல், முதலமைச்சரே இதிலே தனி அக்கறை எடுத்துக் கொண்டு, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, ஆந்திர முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். "கோல் இந்தியா" மூலமாகத்தான் எல்லா மாநிலங்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், ஆந்திர மாநிலத்தில் இருக்கின்ற சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து பத்தாயிரம் டன்களையாவது பிரத்தியேகமான முறையில் (அட்ஹாக் பேசிஸ்) கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் பத்து நாட்களுக்கு முன்பு ஆந்திர முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். வழக்கமாக அதிகாரிகள்தான் கடிதம் எழுதுவார்கள். இந்தப் பிரச்சினையின் தேவையைக் கருதி மாண்புமிகு முதல்வர் அவர்களே நேரிடையாக ஆந்திர முதலமைச்சருக்கு எழுதியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன உணர்வுகளையும் மனதிலே வைத்துக் கொண்டு, அந்தத் தொழிற்சாலையை விரைவுபடுத்த தமிழக அரசு ஆவன செய்யும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** கோவை மாவட்டத்திலே இருக்கின்ற வார்படத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான தேனிரும்பு, சுட்ட கரி எந்த அளவிற்குப் பூர்த்தி செய்யப்படுகிறது?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மூலக் கேள்விக்கு இது பொருந்தி வருகிறதா?



**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மூலப் பொருளுக்குப் பொருந்துகிறது. மாண்புமிகு தலைவர் அவர்கள் அனுமதித்தால் பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் விரும்பினால் பதில் சொல்லலாம். தலைவர் தலையில் பழி போட வேண்டாம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தமிழகத்தைப் பொறுத்த வரையில், கல் கரியை உபயோகப்படுத்துகிற 400 வார்ப்படத் தொழிற்சாலைகள் கோவை மாவட்டத்திலே மட்டும் இன்றைக்கு இருக்கின்றன. அதற்குத் தேவையான பொருட்களைக் கொண்டுவர 1,800 சரக்குப் பெட்டிகள் தேவைப்படுகின்றன. ஆனால், 1980 ஆம் ஆண்டு மாதந்திற்கு 600 சரக்குப் பெட்டிகள் கிடைத்தன. மீண்டும் 1,800 சரக்குப் பெட்டிகளை அனுமதிக்குமாறு மத்திய அரசுக்கு தமிழக அரசு எழுதியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதைப் போலவே, 14,000 டன் தேனிரும்பு ஒரு மாதத்திற்குத் தேவைப்படுகிறது. அதை நம்பி 400 வார்ப்படத் தொழிற்சாலைகள் கோவை நகரிலே இருக்கின்றன. இதை இந்திய உருக்கு நிறுவனம் நேரிடையாக நமக்கு வழங்குகிறது. கோவைக்கு மாதத்திற்கு 4 வேகன்களும், சென்னைக்கு ஒரு வேகனும் வழங்குகிறது. குறைந்தது மாதத்திற்கு 10 முதல் 11 வேகன்கள் வரை வழங்கும்படி மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 11-10)

**திரு. ஆ. நல்லசிவன்:** இரும்பு உருக்குப் பொருள்கள் போதிய அளவுக்கு நம் மாநிலத்திற்குக் கிடைக்கவில்லை. அதன் உற்பத்தி அதிகரித்தால் கிடைக்கும் என்ற நிலைமை இருக்கிறது. இப்போது குறைவு என்று காரணம் கூறப்பட்டிருக்கிறது. அங்கிருந்து பொருள்களைக் கொண்டு வருவதற்கு வாகன்கள் இல்லை என்றும் காரணம் சொல்கின்றார்கள். இந்த இரும்பு உருக்குப் பொருள்களைக் கொண்டுவர வாகன்கள் ஒதுக்குவதிலே அரசியல் பாரபட்சம் இருப்பதாக அரசு கருதுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட மூலப்பொருள்களை ஒதுக்குவதிலே எந்தவிதமான அரசியல் பாரபட்சங்களும் இல்லை. 'நேஷனல் பெனோமினன்' என்பார்களே அது போல, தேசிய நிலைமைகள் இருக்கின்றன. அங்கு பற்றாக்குறை இருக்கிற காரணத்தாலும், ஏற்கெனவே சொன்னதுபோல, மின்சார வெட்டுகள், அங்கேயிருக்கிற வேலை நிறுத்தங்கள், இப்படிப் பல காரணங்கள் இருப்பதால் எல்லா மாநிலங்களுக்கும் இந்தப் பிரச்சினை இருக்கின்றது. இப்படிப்பட்ட

பிரச்சினைகளால்தான் வெகுவாகப் பாதிப்பு இருக்கின்றது. இதில் அரசியல் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு தேசிய நிலைமை, 'நேஷனல் பெனோமினன்' என்ற அளவில் நிலக்கரி தேவையாக இருக்கின்றது. அப்படி உற்பத்தியாகி வருகின்ற நேரத்தில் மாநிலத்திற்கு மத்திய அரசு ஒதுக்கும் என்று நான் மனமார நம்புகிறேன்.

THIRU J. M. MIAKHAN: Sir, from the reply given by the Hon. Minister regarding the suggestion made by the hon. Member Thiru Ramamoorthy, it is seen that our Hon. Chief Minister has made representations. Though our Hon. Chief Minister as well as our Hon. Minister might have made representations and though our SIDCO might have written, it would have been only once or twice. What our hon. Member Thiru Ramamoorthy suggested was that there should be a liaison committee to follow up the letters, to ascertain the stage at which the proposal stands and where the bottle-neck is and whether there is delay on the part of this Government or the Central Government. In that respect, the suggestion of the hon. Member is really worth consideration. May I request the Hon. Minister to bestow some attention on it ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழில் பிரச்சினை சம்பந்தமாக மட்டுமல்ல, அரசு சம்பந்தப்பட்ட எல்லா விவரத்தையும், மத்திய அரசு செயல்படுகின்ற நேரத்தில், விரைவுபடுத்துவதற்காக என்று தனிப் பிரதிநிதி, ஸ்பெஷல் ரெப்ரசன்டேடிவ் ஆஃப் தமிழ் நாடு ஒருவரை வைத்திருக்கின்றோம். ஒரு பொறுப்பு மிக்க, அனுபவமிக்க முதிய நண்பர் ஒருவரை டெல்லியில் பிரதிநிதியாக வைத்திருக்கிறோம். அவர் மூலமாக அவ்வப்போது அந்தப் பிரச்சினையைப் பற்றி அணுகிக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி * அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)



## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**சேலம் மாவட்டம் பரமத்தி வேலூர் பக்கம் உள்ள பாண்டமங்கலத்தைச் சேர்ந்த திருமணக் கோஷ்டியினர் வந்த படகு கவிழ்ந்து 15 பேர் உயிர் இழந்தது குறித்து.**

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அங்கத்தினர் திரு. சோ. ஆறுமுகம் அவர்கள் சேலம் மாவட்டம் பரமத்தி வேலூர் பக்கம் உள்ள பாண்டமங்கலத்தைச் சேர்ந்த திருமணக் கோஷ்டியினர் வந்த படகு கவிழ்ந்து 15 பேர்கள் உயிர் இழந்ததைப் பற்றி ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அது எவ்வாறு ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான விதிகளின் கீழ் வருகிறது என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 8-3-1981 அன்று பாண்டமங்கலத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் பரசுறையைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கும் திருமணம் கொடுமுடியிலே நடைபெற்று அவர்கள் திருமணம் முடிந்து மணமகனுடைய வீட்டிற்குத் திரும்பி வருகிறபோது, சோழசிராமணி என்ற படகுத் துறையில் ஒரு நாட்டுப்படகிலே ஏறியிருக்கிறார்கள். சாதாரணமாக அந்தப் படகு ஆற்றைக் கடந்து செல்வதற்கு மாலை ஏழு மணிக்குமேல் செல்லக்கூடாது என்று விதிமுறை இருக்கிறது. அப்படி வகுக்கப்பட்டு இருந்தும், அதை மீறியும் அந்தப் படகிலே 15 பேர்களுக்குமேல் செல்லக்கூடாது என்று இருந்தும், அதிலே 32 பேர்களை ஏற்றிக் கொண்டும் வந்த காரணத்தினாலேயே, 15 பேர்களுக்கு மேல் இறந்திருக்கிறார்கள். இதிலே பெரும்பான்மையாக பெண்கள், சிறுவர்கள் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. அந்தபடகுப் போக்கு வரத்தை நடத்தக்கூடிய உரிமையாளர் திரு. சின்னசாமி என்பவர் அதைக் காண்ட்ராக்ட்-க்கு விட்டிருக்கிறார்கள். அந்த காண்ட்ராக்ட் எடுத்தவர் திரு. ராமசாமி என்பவர். அவர் ஆரம்பப் பள்ளியிலே படிக்கக்கூடிய ஒரு மாணவனை, திரு. தமிழ்செல்வன் என்ற ஒரு மாணவனை விட்டுப் படகை ஓட்டியிருக்கின்றார். அது விதிமுறைக்குப் புறம்பான ஒன்று. அப்படி அனுமதித்ததன் காரணமாகத்தான இப்படிப்பட்ட ஒரு கோர சம்பவம் நடந்திருக்கிறது. நம்முடைய நெஞ்சத்தை உலுக்குகின்ற வகையிலே இந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. இதைப்பற்றி விசாரித்து எதிர்காலத்தில் இப்படிப்பட்ட ஒரு சோக சம்பவம் நிகழாத வகையில் நாம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த அவையினுடைய இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிப்பதற்கு என்னுடைய இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்று சொன்னால், வாணியம்பாடியிலேகூட ரெயில் விபத்து நடைபெற்றது. அதைக் கருத்திலே கொண்டு இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து நம்முடைய அனுதாபத்தைத் தெரிவித்திருக்கிறோம். அதைவிட நெஞ்சத்தை உலுக்குகின்ற வகையிலே, இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கின்ற காரணத்தினாலே, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்ற இந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டு மேறை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 8-3-1981 அன்று கொடுமுடி மகுடேஸ்வரர் கோயிலில் திரு. சந்திரசேகரன் என்பவருக்கும் சுசிலா என்கிற சுலோசனா என்கிறவருக்கும் திருமணம் நடைபெற்று, திருமணக் கோஷ்டி, பெரியார் மாவட்டம் பாசூரிலுள்ள பெண் வீட்டிற்குச் சென்றனர். அன்று பிற்பகல் பாண்டமங்கலத்திலுள்ள மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்றனர். பிறகு அவர்கள் காவேரி ஆற்றைக் கடந்து படகில் செல்லுவதற்காகச் சோழசிராமணி என்ற இடத்திற்குச் சென்றனர். அங்கு படகில் 32 பேர் ஏறினர். படகு ஓட்டுநருடன் மொத்தம் 33 பேர் காவேரி ஆற்றைக் கடக்க சிறிது தூரம் ஆற்றில் சென்றனர். சிறிதுதூரம் சென்றதும் படகு கவிழ்ந்தது. இவர்களில் 18 பேர் உயிர் தப்பிச் சென்றனர். மீதியுள்ள 15 பேர்களில் 8 பெண்கள், ஒரு ஆண், 4 குழந்தைகள் ஆகியோரின் இறந்த சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 2 குழந்தைகளின் சடலங்கள் கண்டு பிடிக்கப்படவில்லை. இது சம்பந்தமாக, சேலம் மாவட்டம் ஜேடர் பாளையம் காவல்நிலையத்தில் (33/81 என்.எஸ். 394-எ.ஐ.பி.சி.) 3 பேர்களின் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணையிலுள்ளது. படகு ஓட்டிச் சென்ற தமிழ்ச் செல்வன் என்ற 12 வயது பையனும் கட்டணம் வசூலித்த சின்னச்சாமியும் படகு ஒப்பந்தக்காரர் திரு. இராமசாமிக் கவுண்டர் ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது. இறந்தவர்களின் குடும்பத்திற்குத் தலா ரூ. 1,000 முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து அளிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர், கபிலர் மலைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வேலப்பன் அவர்களும் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்று, சவ அடக்கத்திற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்து, வேண்டிய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஏற்கனவே இந்தச் செய்தியை கேள்விப்பட்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தங்களுடைய அதிர்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள். இறந்தவர்களின் குடும்பத்திற்கு அரசின் சார்பில் அவர்களின்





அனுதாபத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். நாமும் நம்முடைய அனுதாபத்தையும் அஞ்சலியையும் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். தக்க நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கின்றதாலும், சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குப் போடப்பட்டு அது புலன் விசாரணையில் இருப்பதாலும், அது குறித்து மேலும் இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி என் அனுமதியை மறுக்கிறேன்.

(முற்பகல் 11-20)

## 3. அறிவிப்புகள்.

### பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறை வேற்றப்பட்டு, அரசியலமைப்பு சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்தச்) சட்ட முன வடிவினை பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

பேரவையால் நிறைவேற்றப்பட்டு, மேலவையின் இசைவிற்காக பேரவைத் தலைவரின் கையொப்பத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகள் பேரவைத் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன :

1. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1981).

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப் பெற்ற பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1981).

3. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1981).

## 4. கவன ஈர்ப்பு.

### (1) தென் ஆர்க்காடு மாவட்டத் தலைநகரான கடலூரில் கொசுக்களின் தொல்லை பெருகி வருவது குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

'தென் ஆர்க்காடு மாவட்டத் தலைநகரான கடலூரில் இரவு பகல் எந்நேரத்திலும் மனிதர்களைக் கடிக்கும் பெரிய கொசுக்களின் தொல்லை பெருகி வருவதால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லைகள், அவதிகள் குறித்தும், வரி கொடுப்போர் சங்கத்தின் நேரடி நடவடிக்கை குறித்தும்".

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, விவர அறிக்கை@ அவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, கொசுத் தொல்லை என்பது பரவலாகப் பல இடங்களில் இருந்தாலும், கடலூரில் இருக்கின்ற கொசுத் தொல்லை மிகவும் அதிகமாக இருக்கிறது. அந்தக் கொசுக்களைக் கொண்டுவர வேண்டுமென்று ஆசைப்பட்டேன். ஆனால் கொண்டுவரவில்லை. (சிரிப்பு) பகல் நேரங்களில்கூட கடிக்கின்ற அளவிற்கு பெரிய, விசேஷமான கொசுக்கள் அங்கே உற்பத்தியாகின்றன. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் ஏற்கெனவே மேலவையில் பேசும்போது, தென் ஆர்க்காடு மாவட்டத்திலே கடலூரிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மூளைக் காய்ச்சல் நோய் பரவி, பல குழந்தைகள் இறந்ததற்கான காரணத்தைப் பற்றி விவாதித்தபோது, கொசுக்கள்தான் மூல காரணமாக இருக்கின்றன என்று சொன்னார்கள். மேலும் 'ஃபைலேரியா' என்று சொல்லக்கூடிய வியாதி இன்னமும் ஒழிக்கப்படாத பகுதியாக அது இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே, இந்த அறிக்கை ஏனோ தானோ என்ற முறையில், திருப்திகரமான பதிலைக் கொடுக்காத அறிக்கையாக இருக்கிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூரில் பாதாளக் கழிவு நீர்த் திட்டத்தை அமுல்படுத்தினால்தான் ஓரளவிற்கு இந்தத் தொல்லைகளைக் குறைக்க சாத்தியக்கூறுகள் உண்டாகும். ஆகவே, பாதாளக் கழிவு நீர்த் திட்டத்தை அமுல்படுத்த—இன்னமும் அந்தத் திட்டம்

@ 559 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.





அங்கே ஆரம்பிக்கப்படவில்லை—மக்கள் நல்வாழ்வுத் துறை சம்பந்தப்பட்ட துறையை அணுகி நடவடிக்கை எடுக்கவும், அதற்கு அரசு உதவி செய்யவும் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: கடலூரிலே இப்போது பாதாளக் கழிவு நீர்த் திட்டமில்லை. There is also no pucca and open drainage in Cuddalore. In the areas covered by masonry exits, the drains terminate blindly resulting in stagnation of slush leading to mosquito breeding. Most of the drains have no gradient. கிரேடியன்ட்ஸ் கிடையாது. அவைகளைச் சரிப்படுத்த நாமும், சம்பந்தப்பட்ட துறை அமைச்சரவர்களும் சேர்ந்து, அதற்குரிய திட்டங்களைச் செய்துகொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு மன நிறைவு தரும் செய்தியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல அங்கே, There is one control unit at Cuddalore under the National Malaria Control Project. National Malaria Control என்ற அமைப்பு இருக்கிறது. இவைகளெல்லாம் anti-laval operation larvae-ஐ ஒழிப்பதற்காகத் திட்டங்களை மேற்கொண்டு 19,500 ரூபாய் அதற்காகச் செலவு செய்திருக்கிறோம். அதில் மூன்றில் ஒரு பங்கினை அரசாங்கம் கொடுக்க இருக்கிறது. மூன்றில் இரண்டு பங்கினை உள்ளாட்சித் துறை கொடுக்க இருக்கிறது. இரண்டு இலாக்காக்களும் சேர்ந்து, ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுக்க இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குப் பதிலாகச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டதுபோல, உள்ளாட்சித் துறையும், மக்கள் நல்வாழ்வுத் துறையும் இணைந்து இந்தப் பிரச்சினைக்கு ஒரு பரிகாரம் காண்பதற்கான வேகமான, விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே கழிவு நீரை அகற்றும் பணி சிறப்பாக நடைபெறவில்லை. இப்போது இயந்திரங்கள் பொருத்தப்பட்ட வாகனங்கள் மூலமாக கழிவு நீரை அகற்றும் பணி ஒழுங்காக நடைபெறவில்லை. 10 நாட்களுக்கு ஒரு முறை அல்லது 2 வாரங்களுக்கு ஒரு முறை அகற்றுவது என்ற அளவில்கூடச் செயல்படவில்லை. அந்தத் தண்ணீர் கொசுக்களை உற்பத்தி செய்வதற்கான உடனடி காரணமாக இருக்கிறது. எனவே நிலத்தோறும் தேங்கியிருக்கும் கழிவுநீரை அகற்ற மக்கள் நல்வாழ்வுத் துறையும் உள்ளாட்சித் துறையும் நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த உடனேயே, அதை நான் பார்த்துத் தெரிந்து கொண்டதிலே, நடவடிக்கைகளை எல்லாம் எடுத்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது மாதிரி, நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டுமென்பதில் ஐயப்பாடு இல்லை, கருத்து வேறுபாடு இல்லை. அவைகளைச் செய்யத் தயாராக இருக்கிறோமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) கன்னியாகுமரி மாவட்ட நீர்த் தேக்க அணைகளில் தண்ணீர் குறைவாக இருப்பதால், கடைவரம்பு நிலங்களிலுள்ள பயிர்கள் தண்ணீரின்றி வாடுவதால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"கன்னியாகுமரி மாவட்ட நீர்த்தேக்க அணைகளில் தண்ணீர் குறைவாக இருப்பதால் சானல்களில் தண்ணீர் வராமல் தோவாளைச் சானல், என். பி. சானல் போன்ற சானல்களில் கடைவரம்பு நிலங்களிலுள்ள பயிர்கள் தண்ணீரின்றி வாடுவதால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்து".

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: தலைவரவர்களே, விவர அறிக்கை @ அவையின் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவரவர்களே, விவர அறிக்கையில், தென் மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்தால், பேச்சிப் பாறை, பெருஞ்சாணி அணைகளில் 58 சதவிகிதம்தான் தண்ணீர் வந்து சேர்ந்தது, இதனால்தான் இத்தகைய சூழ்நிலை இருக்கிறதென்று சொல்லப் பட்டிருக்கிறது. அதில் கருத்து வேறுபாடில்லை. ஆனால் தோவாளை சேனல், என்.பி. சேனல் போன்ற சானல்களின் கடைவரம்பு நிலங்களிலெல்லாம் கடந்த 2, 3 வருடங்களாக, ஒவ்வொரு ஆண்டும் இரண்டாம் போகத்தில் 10,000 ஏக்கர்களுக்குமேல் பயிர்கள் வாடி அழிந்து வந்திருக்கிறது. இந்த வருடமும் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. இந்த நிலையில் பங்கீட்டு முறையில் கொடுக்கும் தண்ணீர் பற்றாமல் இருந்தால், கோதையாறு மின்சார

@ 559-560 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



அணையிலிருந்து தண்ணீர் எடுக்கும் வழக்கம் உண்டு. அங்கே போதுமான அளவிற்குத் தண்ணீர் இல்லை என்று சொல்லி, தண்ணீர் கொடுக்க மறுக்கப் படுகிறது. இந்த அணையை 7 ஆம் தேதி அடைப்பதாக இருந்தது. அதைக் கொஞ்சம் நீட்டித்து, கொஞ்சம் நிலங்களைப் பாதுகாக்க ஏற்பாடு செய்வதோடு, வருடந்தோறும் கடைவரம்பு நிலங்களுக்கு இந்த நிலை ஏற்படுவதால், அங்கே நிலத்தடி நீரைப் பயன்படுத்த கம்யூனிட்டி வெல்ஸ் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: பாசன வசதிகளை முழுமையாகச் செய்து கொடுக்க முடியாததற்கான காரணங்களை விவர அறிக்கையிலே விளக்கியிருக்கிறோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அதை நன்கு உணர்ந்து, வேறு வகையிலே செய்ய முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். அது குறித்து உடனடியாகத் தலைமை பொறியாளரை வரவழைத்து இன்றைக்கே விவாதித்து, உடனடியாகச் செய்ய முடியுமா என்பது குறித்து அரசுத் தரப்பிலே நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

### (1) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1981)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1981 ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

@ 560-561 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

* திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவிலே
என்ன பேசுவது என்று எங்களுக்குத் தெரியவில்லை. அமைச்சர் இந்தச்
சட்ட முன்வடிவுபற்றி எந்த விளக்கமும் சொல்லவில்லை. சில நகரங்களின்
'ஸ்டேடஸ்' உயர்ந்திருக்கிறது, அதனால் அங்கே இருக்கும் திரைப்படக்
காட்சிக்கூடங்களுக்கு வரி உயர்த்த வேண்டிய அளவிற்கு இந்தச் சட்ட முன்
வடிவு வந்திருக்கிறது. எந்தக் காரணத்திற்காக இந்தச் சட்ட முன்வடிவு
கொண்டு வரப்பட்டிருக்கிறதென்பதை விளக்கமாக எங்களுக்கு அறிவித்தால்
தான், இந்த விவாதத்திலே பங்கு கொள்ள முடியும். அப்போதுதான் சட்ட
முன்வடிவை முழுமனதோடு நிறைவேற்றிக்கொடுக்க முடியும். They are
keeping us in the dark. இந்தத் தகவல்களெல்லாம் இல்லாத நிலையில்,
அமைச்சரவர்களை நம்பி சட்ட முன்வடிவை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டி
யிருக்கிறது. இருந்தாலும் எங்களையும் நம்பி சில விவரங்களை அமைச்ச
ரவர்கள் சொல்ல வேண்டும். விவரங்களைச் சொன்ன பிறகு, சட்ட முன்
வடிவை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** இப்படிப்பட்ட சட்ட முன்
வடிவுகளை அவையிலே கொண்டு வருகிறபோது, விளக்கமாக அதற்குரிய
விளக்கங்களைத் தந்துதான் அவையிலே வைக்கப்பட்டிருக்கின்றன. அதை
வைக்கவில்லையென்று சொல்ல முடியாது. காரணம் இதற்கு முன்னாலே
கூட இப்படிப்பட்ட சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வந்தபோதெல்லாம்
எப்படி இந்த அவையிலே உறுப்பினர்களுடைய தேவைகளை எல்லாம் தயார்
செய்து கொடுத்தார்களோ அதுபோல்தான் இங்கே இப்போதும் கொடுக்கப்
பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு முன்
னாலே என்னென்ன நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கிறதோ அதுதான்
இப்போதும் இங்கே பின்பற்றப்பட்டிருக்கிறது. எந்த இடத்திலே மாண்புமிகு
உறுப்பினருக்குப் புரியவில்லையென்று சொன்னால், அந்த இடத்தை மட்டும்
நான் விளக்கிச் சொல்ல முடியும். அப்படியும் நான் சொல்ல முடியாது.
காரணம் அப்படி நான் சொன்னால் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குத்
தெரியவில்லை, ஆகவே அதைப்பற்றி நான் விளக்கம் சொல்கிறேன் என்றும்
யாரும் நினைக்கக் கூடாது. அதிலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம
மூர்த்தி போன்றவர்கள் நீண்டகாலம் இந்த அவையிலும், அரசியலிலும், போத
ஈடுபட்டிருப்பவர்கள், அதோடு மாத்திரமல்லாமல் சட்டத்துறை
வாய்விலும் ...





படித்தவர்கள், இங்கேகூட சட்ட முன்வடிவுகள் வருகிறபோதெல்லாம், பல சட்ட முன்வடிவுகளின் மீது விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள். இதிலேயும் விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. தேவையான விளக்கங்கள் இருக்கின்றன. இதற்கு முன்பு இந்த அவைக்கு சட்ட முன்வடிவுகள் வரும்போதெல்லாம் இந்த அரசும், முந்தைய அரசும் எப்படிச் செய்ததோ அதைத்தான் இப்போதும் செய்திருக்கிறோம். அதிலே ஒன்றும் தவறில்லை.

இந்தக் குறிப்பிட்ட சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையிலும், இதற்கு முன்பெல்லாம் கேளிக்கை வரிகளை வசூலிக்கும்போது, டிக்கெட்டுகளுக்கு மேல் கேளிக்கை வரி போட்டார்கள். தற்போது கம்பவுண்டிங் சிஸ்டம் வந்திருக்கிறது. பஞ்சாயத்து ஒன்றியம் என்றால் இவ்வளவு வரி, பர்ஸ்ட் கிரேட் முனிசிபாலிட்டி என்றால் இவ்வளவு வரி, தேர்ட் கிரேட் முனிசிபாலிட்டி என்றால் இவ்வளவு வரி, செகன்ட் கிரேட் முனிசிபாலிட்டி என்றால் இவ்வளவு வரி, நகராட்சி அல்லது மாநகராட்சி என்றால் இவ்வளவு வரி என்று ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமாக வரி வசூல் செய்யப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் உள்ளாட்சித் துறையிலுள்ள சில ஊர்கள், சில கிராமங்கள், நகரங்கள் இப்படிப்பட்டவைகளின் கிரேடுகள் மாறும்போது, உடனே வரி வசூலிலும் மாற்றம் செய்யப்பட வேண்டியிருக்கிறது. அதற்கேற்பத்தான் இந்தச் சட்ட முன்வடிவு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. செகன்ட் கிரேட் பர்ஸ்ட் கிரேட் ஆகும்போது, தேர்ட் கிரேட் செகன்ட் கிரேட் ஆகும்போது, அதற்கேற்ப வரி வசூலிலும் மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. இதற்கு முன்னாலே ஒரு உத்தரவு மூலம் இது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இன்றைக்கு உத்தரவு கூடாது என்ற அளவில் இங்கே சட்ட முன்வடிவாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: துணைத் தலைவரவர்களே, இந்தக் கேளிக்கை வரி திருத்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையிலும், சில நகரங்களில் அல்லது சில ஊர்களில் அதனுடைய நிலை உயர்த்தப்படும்போது, அதனுடைய தன்மை உயருவதால், அங்குள்ள சினிமா தியேட்டர்களில் கொடுக்கப்படுகின்ற டிக்கெட்டுகளுக்குப் புது வரி விதிக்கின்ற நிலை குறித்து இந்தச் சட்ட முன்வடிவின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே நாம் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு ஒன்றுமில்லை. கேளிக்கை வரி விதிப்பதன் மூலம், கேளிக்கை நிகழ்ச்சிகள் நடைபெறுவதன் மூலம் அரசுக்கு வருவாய் வருகிறது. சினிமா தியேட்டரில் கேளிக்கை வரி விதிக்கிறோம். அமைச்சரவர்கள் சொன்னதுபோல், முன்பெல்லாம் டிக்கெட்டுகளுக்கு வரி இருந்தது. இப்போது கம்பவுண்டிங் வரி என்று ஆக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துக்களில், நகரங்

களில் எல்லாம் இவ்வளவு இவ்வளவு என்று வரி விதிப்பு இருக்கிறது. எல்லா நகரங்களிலும் இன்றையதினம் தியேட்டர்களை எடுத்துப் பார்த்தால், பொது மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையில் இல்லை. ஏதோ வரி வருகிறது என்கிற அடிப்படையில் இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறாக மற்ற வர்கள் பயன்படுத்தி பொதுமக்களுக்குப் பாதுகாப்பற்ற நிலையை உருவாக்க அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது. ஏதோ அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளைச் செலுத்துகிறோம் என்கிற முறையில் வருவாயை அதிகமாக்கி பல ஆபத்துக்களை ஏற்படுத்தி, மக்கள் துயருறும்படி செய்கிறார்கள். அதேபோல் இப்பொழுதெல்லாம் காலையிலிருந்தே சினிமா தியேட்டர்களில் மாட்னி ஷோ நடைபெறுகிறது. சென்னை நகர் உட்பட எல்லா நகரங்களிலும் மாட்னி ஷோ தியேட்டர்களில் நடைபெறுகிறது என்று சொல்வதைவிட காலேஜ் ஷோ நடைபெறுகிறது என்றுதான் நான் சொல்வேன். உயர் நிலைப் பள்ளியி லிருந்து, காலேஜ் படிக்கின்ற மாணவர்கள் வரை எல்லோரும் அங்கே போய் விடுகிறார்கள். அரசாங்கத்துக்குக் கேளிக்கை வரி வருகிறது என்கிற காரணத் துக்காக ஷோக்களின் எண்ணிக்கையைக் கூட்டக்கூடாது. இரண்டு ஷோக் களுக்கு மேல் தியேட்டர்களில் நடைபெற அனுமதிக்கக்கூடாது. அதுவும் மாலை 6 மணிக்கு மேல் நடைபெறக்கூடாது. இந்த விஷயத்தில் கேளிக்கை வரி, அரசுக்கு வருவாய் என்கிற கண்ணோட்டத்தில் பார்க்கக்கூடாது. பகல் பூராவும் மாணவர்கள் பள்ளிக்கூடங்களில், கல்லூரிகளில் படிக்கத்தான் வேண்டும். வேலை செய்து கடுமையாகப் பகல் வேளைகளில் உழைக்க வேண்டும். அத்தகைய ஒரு உணர்வை நாட்டு மக்களிடத்தில் ஏற்படுத்த வேண்டும். சமுதாயத்திலுள்ள மக்களை காலையிலும் பகலிலும், மாலை யிலும், இரவிலும் சினிமா பார்க்கின்ற அளவில் அனுமதித்து அத்தகைய ஒரு உணர்வை எந்தக் காரணத்தைக் கொண்டும் வளர்க்கவிடக்கூடாது. சில வயதுக்கு உள்ளே உள்ளவர்கள் பார்க்கக்கூடாது என்று அனுமதிக்கப்படாத ஒன்று வருகிறது என்றால், அதைப் பார்க்காமல் விடவே மாட்டார்கள். (சிரிப்பு) அப்படிப்பட்ட ஒரு நிலை இன்றையதினம் இருக்கிறது. ஆகவே இந்தச் சட்ட முன்வடிவின் மூலம் நாம் ஒவ்வொரு பகுதியின் நிலையும் உயரும்போதும் அதற்கேற்ப கேளிக்கை வரியை உயர்த்திப் பெற்றாலும்கூட, பொதுவாகத் தியேட்டர்களில் எல்லாம் இரண்டு ஷோக்களுக்கு மேல் அனுமதிக்கக்கூடாது. மாட்னி ஷோ எங்கும் நடக்கக்கூடாது. அப்படியே மாட்னி ஷோ நடைபெறுவதாக இருந்தால்கூட, ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும்தான், அதுவும் அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் நடைபெற வேண்டும். மற்ற நாட்களில் மாட்னி ஷோ நடைபெற அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது என்று தெரிவித்து அமருகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** துணைத் தலைவரவர்களே, இதைப்பற்றி நீண்ட விளக்கம் தேவையில்லையென்று மாண்புமிகு உறுப்பி னர்கள் கருதுகிறார்கள் என்று நினைக்கிறேன். முதலிலேயே நான் தேவை யான விளக்கத்தைச் சொல்லிவிட்டேன். ஆகவே அதைப்பற்றி மீண்டும் எதுவும் சொல்லுவதற்கில்லை. கேளிக்கை வரி மூலம் அரசுக்கு வரக்கூடிய வசூல் ஒன்றையே கண்ணாகக் கொண்டு அரசாங்கம் இதில் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்கிற யோசனையை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொன்னார்கள். பொதுவாக இன்றைக்குத் தனியார்கள் என்றால் எவ்வளவு வருவாய் வருகிறது, எப்படி வருவாயை உயர்த்த வேண்டும், எப்படிச் செலவினங்களைக் குறைக்க வேண்டும், வருவாயை மட்டும் எப்படி எப்படி எல்லாம் உயர்த்தலாம் என்பதையொட்டியே முடிவுகளை எடுப்பார்கள். ஆனால், அரசு என்பது தனியாரைப்போல் அல்ல. அரசு ஒரு முடிவெடுக்கிறபோது மக்களுடைய நலனைக் கருதித்தான் முடிவெடுக்கும். அரசாங்கம் வரி வசூல் செய்தாலும் அந்த வரியை, பணத்தை யாரும் எடுத்துக் கொண்டு போய்விட முடியாது. அது மறுபடியும் மக்களிடத்தில்தான் சென் றடைகிறது. மக்களுடைய நலனைக் கருதித்தான் வரி வசூலிக்கப்படுகிறது. ஆகவே இந்த அரசு எந்த நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும், அது மக்க ளுடைய நலன் பற்றியதாகத்தான் இருக்கும். மாட்னி ஷோ போடக்கூடாது என்றுதான் இந்த அரசு வந்த பிறகு உத்தரவு போட்டது. லீவ் நாட்களில் போடுவதாக இருந்தால்கூட, தனியாக உத்தரவு வாங்கித்தான் போட வேண்டு மென்று இருக்கிறது. அதுவும் பகல் 12 மணிக்குப் பிறகுதான் போட வேண்டும். டூரிங் தியேட்டர்களைப் பொறுத்தவரையில், 2 ஷோக்களுக்கு மேல் போடக்கூடாது. அதற்கும் உத்தரவு போட்டிருக்கிறோம். ஆகவே தனிப்பட்ட இடத்தில் எங்காவது தவறு நடைபெறுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டினால், நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக் கிறது என்பதைச் சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு உறுப்பி னர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

“சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1981) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்”

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை எதுமில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 2/1981) திருப்பியனுப்பப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என். 2/1981) திருப்பியனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(2) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1981).**

**திரு. க. இராமமூர்த்தி:** Sir, I rise on a point of order. இந்தச் சட்ட முன்வடிவை இந்த அவையிலே வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லாத நிலையில் எங்களையெல்லாம் அவசியமின்றி உட்கார வைக்கும் அவசியத்தை உருவாக்கியிருக்கிறது. இதற்கான காரணத்தைச் சொல்கிறேன்.

"The time-limit specified under the said Tamil Nadu Act 15 of
1980 for paying the first instalment of the rent for the fasli year
ending with the 30th June 1972 and for the fasli year ending with
the 30th June 1973 and the first instalment of the reduced rent
up to the 31st December 1980 under the said amendment, namely
Tamil Nadu Act 37 of 1980 by which the time-limit for paying the
said first instalment of the rent has been given up to the 31st
December 1980 has been published in the Tamil Nadu Govern-
ment Gazette only on the 5th November 1980 and as the cultivating
tenants would be able to pay the arrears of rent as soon as the
harvest in January and February 1981 is over, the Government
have decided to extend the time-limit by another 3-1|2 months
i.e., up to the 15th April 1981."



(திரு. க. இராமமூர்த்தி)

(முற்பகல் 11-40)

இந்த அவையிலே உரிய காலத்தில்—ஏற்கெனவே ஒரு சட்டத் திருத்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அரசு நடவடிக்கை எடுத்து—அந்தச் சட்ட முன் வடிவு உரிய நேரத்திலே இந்த அவையால் நிறைவேற்றப்பட்டு சட்டமாகி இருக்கிறது. அதற்குப் பிறகு அனுமதி கிடைத்தபோது, அசென்ட் கிடைத்தபோது அதைக் கெசட்டிலே விளம்பரப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. சட்ட முன்வடிவு நிறைவேறிய பிறகு அதை விளம்பரப்படுத்தி மக்களுக்குத் தெரியப்படுத்தி அதன் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்க அரசுக்குக் கடமையிருக்கிறது. இந்த அவை ஏற்கெனவே நிறைவேற்றிக் கொடுத்த ஒரு சட்ட முன்வடிவு, ஆளுநர் அளவிலே, ஜனாதிபதி அளவிலே அவர்களுடைய அனுமதி கிடைத்த பிறகு, உரிய நேரத்திலே கெசட்டிலே விளம்பரப்படுத்தப்படாததால், அதன் விளைவாகக் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. யாருக்கு இந்தச் சட்ட முன்வடிவால் நன்மை வேண்டும் என்று கொண்டு வரப்பட்டதோ, அவர்களுக்கு இப்போது சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மீண்டும் ஒருமுறை ஒரு சட்ட முன்வடிவை நிறைவேற்றிக் கொடுங்கள் என்று சொல்லுவது எங்களுடைய பணியை அதிகப்படுத்துவது என்பது மட்டுமல்ல, ஏற்கெனவே நிறைவேற்றிவிட்ட சட்ட முன்வடிவை உரிய காலத்திலே நிறைவேற்றவில்லை, செயல்படுத்தவில்லை என்ற அளவிலே அவையை அவமதிப்பதாகவும் இது உள்ளது. ஒரே சட்ட முன்வடிவை இரண்டு முறை நிறைவேற்றுவது என்பது நியாயமற்றது. அரசாங்க இயந்திரம் உரிய நேரத்திலே இதன் மீது நடவடிக்கைகளை, காரியங்களை ஆற்றவில்லை என்பதால், இப்படி இரண்டு முறை, மூன்று முறை சட்ட முன் வடிவு இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை அனுமதிக்கக் கூடாது. இது, அரசாங்கத்தின் தொடர் நடவடிக்கை இல்லாததால், ஒரு follow up இல்லாததால் ஏற்பட்டிருக்கின்ற சங்கடம் என்று சொல்லி, இந்தச் சட்டத்தை இப்போது கொண்டு வருவதாலே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம், நியாயம் இருக்கிறது என்று இருந்தாலும் கூட, இப்படிக் கொண்டு வருவது தவறு என்பதால், இதை இப்போது இந்த அவை விவாதிக்கக் கூடாது, இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளக்கூடாது என்ற அளவிலே இந்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்மொழியாமல் தாங்கள் தடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு Point or order raise பண்ணியிருக்கிறார்கள். அதன்மீது தீர்ப்பு அளிக்க வேண்டும்.

[1981 மார்ச் 10

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஒப்புக்கொள்வதையும், ஒப்புக் கொள்ளாததையும், இந்தத் தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு விடுகிறபோது தெரிவிக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வாய்ப்பு இருப்பதால், சட்ட முன்வடிவைக் கொண்டுவரக்கூடாது என்று சொல்வது மரபாக இருக்காது என்று கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது சட்ட முன்வடிவை முன்மொழிவார்கள் என்று சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 6/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 6/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு ஏற்கெனவே இந்த அவையில் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவுகளின் அடிப்படையிலே பார்த்தால், அரசாங்கத் தரப்பிலே இருப்பவர்களில் பல பேர் மீது நடவடிக்கை எடுத்து கைது செய்யப்படவேண்டிய ஒரு சட்ட முன்வடிவாக இது இருக்கிறது. அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய வரி பாக்கியை அல்லது கடன் தொகையை அரசாங்கம் சட்டபூர்வமாக எப்படி வசூலிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறதோ, அதைச் செலுத்த வேண்டாம் என்று யாராவது நேரடியாகவோ மறைமுகமாகவோ தடுத்தாலும், தூண்டிவிட்டாலும் கூட, அதுவே பெருங்குற்றம் என்றுதான் இந்த அவையிலே அண்ணா தி.மு.க. அரசு ஏற்கெனவே ஒரு சட்ட முன்வடிவையே நிறைவேற்றியிருக்கிறது. ஆனால் இங்கு இருக்கின்ற . . .

---

@ 561–563 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1981 மார்ச் 10]

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் எங்களைப் பயமுறுத்தும் அளவிலே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் கொண்டு வந்தாலும்கூட, நிறைவேற்றியதற்குப் பிறகு இதில் தண்டனை வந்தால், எனக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கும் சேர்த்து தண்டனை தரவேண்டுமே தவிர, எங்களுக்கு மட்டுமல்ல.

திரு. க. இராமமூர்த்தி: என்னையும்—அவர்களுடைய தலைவர் அவர்களிடத்திலே சொல்லி—அவர்களுடைய அமைச்சரவையிலே ஏற்றுக் கொண்ட பிறகு அந்தப் பங்கைத் தந்தால், அப்படி ஒரு அரசியல் சூழ்நிலை ஏற்பட்டால், நியாயம். மற்றபடி, இதுபோல இருந்தால் முடியாது. எந்த நிலுவையையும் பாக்கியையும், கடனையும் திரும்பத் தரவேண்டாம் என்று நேரடியாகவோ மறைமுகமாகவோ, வார்த்தைகள் மூலமாகவோ, அல்லது செயல் மூலமாகவோ தடுத்தால், அது தவறு என்றும், தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் என்றும், ஏற்கெனவே சட்ட முன்வடிவு கொண்டு வந்து நிறைவேற்றிச் சட்டம் ஆக்கியிருக்கிறார்கள். இந்தத் தேதிக்கு உள்ளாக குத்தகைப் பாக்கியை கொடுத்து விட வேண்டும் என்ற அளவிலே சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆனால், அரசாங்கமே ஒரு செயலின் மூலமாக அவ்வாறு தடை செய்திருக்கிறது. கெசட்டில் பப்ளிஷ் செய்வதிலே காலதாமதம் ஆக்கியிருக்கிறார்கள். மறைமுகமாக கடனைச் செலுத்த வேண்டாம், பாக்கியையும் கட்டாதே என்று சொல்லும் ஒரு காரியமாக இது இருக்கிறது. ஆகவே, இந்த அரசாங்கத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களாகவே முன்வந்து இந்த நடவடிக்கைகளுக்கு ஆளாக வேண்டும். இந்தக் குத்தகைச் சட்டத்தைப் பொறுத்தவரையில், மேலும் மேலும், ஏற்கெனவே குத்தகைதாரர் பட்ட சிரமங்கள் காரணமாக—இயற்கையின் விபரீத விளைவுகள் காரணமாக—உரிய நேரத்தில் அவர்களுடைய பாக்கியைச் செலுத்த இயலாததால் இப்படி நீண்டுகொண்டு போயிற்று. சாதாரணமாக அந்தக் கொடுமைகளையெல்லாம் பார்த்து அவர்களுடைய சங்கடங்களை, அவல நிலையை எல்லாம் நாம் கலந்து பேசி அதன் அடிப்படையிலே இப்படி ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆனால், நாம் அத்தனை பேரும் சம்பந்தப்படாத ஒரு காரணத்தின் அடிப்படையிலே அந்த முடிவை நிறைவேற்ற இவ்வளவு கால தாமதம் ஆகியிருக்கிறது. இப்போது கெசட் நோட்டிபிகேஷன் செய்யவில்லை. ஆகவே, மீண்டும் 6 மாதம் தள்ளிப் போட வேண்டும் என்று வருகிறபோது, இப்போது பஞ்சம்—வறட்சி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, காரணம் இல்லாமல், பலவிதமான சங்கடங்களுக்கு ஆளாகி, கடனைத் திரும்பச் செலுத்த

முடியாமல் இருப்பவர்கள் நிரந்தர கடன்காரர்கள் என்ற உணர்வின் அடிப் படையிலே வைக்கப்படுகிறார்கள். தங்களுக்கே தெரியும், "கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்பதெல்லாம். கடனி லிருந்து அவர்கள் விடுபட நாம் நடவடிக்கை எடுக்கிறோம். ஆனால் . . . .

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: 'கடன் பட்டார் நெஞ்சம் போல கலங்கினான் இலங்கை வேந்தன்" என்று இருப்பது, 'கடன் கொடுத்தவன் நெஞ்சம் போல, கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று இருந்தால் நல்லது.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அனுபவம் வேறுவிதமாக இருக்கிறது. கடனைத் திருப்பிச் செலுத்தும் போக்குகளுக்கு இது விரோதமாக இருக்கிறது. தமிழகத்தில் கடன் பட்டவர்கள் அனைவரும் இராவணர்கள் அல்ல என்றாலும்கூட, இராவணனே அந்த அளவுக்கு அவதிப் பட்டான் என்று இருப்பதால், விவசாயிகளை இந்த அளவுக்கு அவதிக்கு ஆளாக்கக்கூடாது என்றுதான் சொல்கிறேன். அப்படிச் செய்வது நல்லதல்ல.

(முற்பகல் 11-50)

நம்மைப் பொறுத்தவரையில், கடன்காரன் என்ற உணர்வு இல்லாமல் இருக்க வேண்டும் என்றுதான் இதைச் செய்கிறோம். இப்படி நாமாக சில முயற்சிகளை மேற்கொள்ளும்போதும்கூட, இடையில் ஏற்படும் இயற்கையின் உற்பாதங்களால் இந்தக் கால கெடுவை நீட்டிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அடுத்து, அமைச்சர் அவர்களோ மற்றவர்களோ அதற்குக் காரணம் என்று நான் சொல்லவில்லை. அரசாங்கத்திலிருந்து ஒரு கெசட் நோட்டிபிகேஷன் செய்யப்படவில்லை என்ற காரணத்தால், இந்தச் சட்டம் செயல்படாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு இந்த மாநிலத்தில் சட்டம் செயல்படாத நிலை உருவாகியிருக்கிறது என்பதை இந்த அவையில் மிகுந்த வேதனையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்போது 6 மாத காலத்திற்கு மட்டுமே நீட்டிப்பு கோரப்பட்டிருக்கிறது. இதற்கு யாரும் குறுக்கே நிற்கவில்லை. அது தேவையுமில்லை. தாராள மாக 6 மாத காலத்திற்கு நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்றுதான் சொல்லு கிறோம். ஆனால், இன்றையதினம் தமிழகம் வறட்சி காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறது. தஞ்சை மாவட்டம் உட்பட இப்போது அனைத்து மாவட்டங்களும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றன.





காலத்தை 6 மாதத்திற்கு நீட்டிக்கும்போது, அடுத்த தவணையை எப்போது செலுத்த வேண்டும் என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். வறட்சி காரண மாக அப்போதும் இத்தகைய கால நீட்டிப்பு தேவைப்படும். அதற்கான வகையில் அமைச்சர் அவர்கள் தாமாகவே ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அல்லது விரைவிலேயே அப்படி ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவேன் என்ற உறுதியை யாவது அமைச்சர் அவர்கள் தர வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னுள்ள இரண்டு சட்ட முன்வடிவுகளையும் நான் வரவேற் கிறேன். என்னுடைய கட்சியும் இவைகளை ஆதரிக்கின்றது. ஒரு சட்ட முன்வடிவுக்குக் காரணம் உரிய நேரத்தில் கெசட் நோட்டிபிகேஷன் போடப் படாததுதான் என்று கூறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, இதைப்பற்றிக் கண்டித்தார்கள். எனக்கு நினைவு சரியாக இருக்குமானால், இந்தச் சட்ட முன்வடிவுகள் இரண்டுமே 1980 ஆம் ஆண்டு ஜனவரி-பிப்ரவரியில்தான் நிறைவேற்றப்பட்டன. ஆனால், அதற்குப் பிறகு இங்கே ஆளுநர் ஆட்சி ஏற்பட்டது. மத்திய அரசின் பொறுப்பில் இந்த மாநிலம் இருந்தது. அப்படி 4, 5 மாதங்கள் இந்த மாநிலம் ஆளுநர் ஆட்சியில் இருந்தபோதும்கூட, இத்தகைய கெசட் நோட்டிபிகேஷன் செய்யப்படவில்லை என்பதையும் நான் இங்கே நினைவுபடுத்த விரும்பு கிறேன். எனவே இவைகளைப்பற்றி விமர்சிக்கும்போது, இதையும் சேர்த்துக் சொல்லி இரண்டு ஆட்சிகளைப்பற்றியும் விமர்சித்து இருந்தால் நன்றாக இருந் திருக்கும்.

* திரு. க. இராமமூர்த்தி: Sir, I am accusing the Government only. அதில் தடுமாற்றம் எதுமில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத்தான் அதில் தடுமாற்றம் இருக்கிறது. இராமமூர்த்தி இதை ஏன் சொல்லவில்லை, அதை ஏன் சொன்னார் என்று அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார். அப்படி ஆட்க்கடி மாற்றிக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் அவர்தான் இருக்கிறார். என்னைப் பொறுத்தவரை, நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். I am accusing the Government alone.

திரு. ஆ. நல்லசிவன்: 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் மே மாதம் வரை சுமார் 5 மாத காலம் தமிழ்நாட்டில் ஆளுநர் ஆட்சி நடைபெற்றிருக் கிறது. அப்போது இந்த கெசட் நோட்டிபிகேஷன் செய்யப்பட்டிருந்தால், விவசாயிகளுக்கு அது நன்றாக இருந்திருக்கும், தமிழ்நாடு விவசாயிகளுக்கு

(திரு. ஆ. நல்லசிவன்) [1981 மார்ச் 10

11 மாத காலம் அவகாசம் இருந்திருக்கும். ஆளுநர் ஆட்சி என்றாலும், அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கட்சி ஆட்சிதான். எனவே அதையும் சேர்த்துச் சொல்லியிருக்கலாம். அப்போதுதான் அது பாரபட்சமற்றதாக இருந்திருக்கும்.

* திரு. க. இராமமூர்த்தி: It is a charge against me நான் பாரபட்சத்தோடு விமரிசனம் செய்யவில்லை. நான் தெளிவாகச் சொல்கிறேன். அரசாங்கம்தான் இதற்குப் பொறுப்பு என்று நான் தெரிவித்தேன். இதைச் செய்திருக்க வேண்டியது அரசாங்கம்தான். அது தனது கடமையிலிருந்து தவறியது என்றுதான் நான் தெரிவித்தேன். இது கூட்டணிக் கட்சி என்றோ, தோழமைக் கட்சி என்றோ நான் பார்த்துப் பேசவில்லை. இதை யார் செய்தாலும் தவறு தவறுதான். சட்டத்தை நிறைவேற்றும்வரை இந்த அவையின் பொறுப்பு. சட்டத்தை நிறைவேற்றிய பிறகு செயல்பட வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. அரசாங்கத்துறை முறையாகச் செயல்பட்டு, இந்த நோட்டிபிகேஷனைச் செய்யவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அதைத்தான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அதில் இப்போதும்கூட மாற்றமில்லை. எப்போது இந்தத் தவறு நடந்திருந்தாலும், உரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, நான் தெளிவாகச் சொல்கிறேன், நான் தெளிவாகச் சொல்கிறேன் என்று கூறினார். அதைத் தொடர்ந்து பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பிப்ரவரி முதல் மே மாதம் வரை 1980 ஆம் ஆண்டில் தமிழகத்தில் ஆளுநர் ஆட்சி நடைபெற்றதே அப்போது ஏன் இந்த கெசட் நோட்டிபிகேஷன் செய்யப்படவில்லை என்று கேட்டார். இதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி என்ன பதிலைத் தெளிவாகத் தருவதற்கு இருக்கிறார்?

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் எந்த அளவுக்குத் தெளிவில்லாமல் இருக்கிறார் என்பதைத்தான் இது காட்டுகிறது. இன்னும் சொல்லப் போனால், அவர் குறிப்பிடும் அந்தக் காலத்தில்கூட நான் செய்ய முடியாது. ஜனாதிபதி ஆட்சி நடைபெற்றதைக் குறித்து என்னிடம் கேட்பது சரியில்லை. ஜனாதிபதியைத்தான் கேட்க வேண்டும். நான் கேட்டது அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்னாலே உரிய காலத்தில் ஏன் செய்யவில்லை என்பதுதான்.



1981 மார்ச் 10]

திரு. ஆ. நல்லசிவன்: ஜனாதிபதி ஆட்சியின்போதும், ஜனாதிபதி அமைச்சரவையின் ஆலோசனையின்பேரில்தான் செயல்படுகிறார். சம்பிரதாயத்திற்குத்தான் அவர் ஆட்சி நடைபெறுகிறது. உண்மையில் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டு செயல்படுத்துவது மத்திய அமைச்சரவைத்தான். அப்படி மத்திய ஆட்சி நடைபெற்ற அந்த 5 மாத காலத்திலே கெசட் நோட்டிபிகேஷன் செய்யவில்லை என்பதற்கான பொறுப்பை அவர்கள் ஏற்கத்தான் வேண்டும்.

* திரு. க. இராமமூர்த்தி: இரண்டு கட்சிகளின் சார்பிலும் பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் செய்ய வேண்டியதை இங்கே இருப்பவர்கள் தங்கள் தலையின் மேல் ஏன் சுமந்து கொண்டிருக்கிறார்கள் என்றுதான் எனக்குப் புரியவில்லை. தங்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலையில் சுமத்துவதுதான் சரியாக இருக்கும்.

திரு. ஆ. நல்லசிவன்: இது ஒரு நான்-சப்ஸ்டான்சியல் சமாச்சாரம் என்பதால் இதன் மீதான விவாதத்தை நான் இன்னும் அதிகமாகத் தொடர விரும்பாமல் விட்டுவிடுகிறேன். சப்-ஸ்டான்ஷியலாகப் பேசுவதற்கு இந்த நேரத்தைப் பயன்படுத்தலாம் என்ற வகையில் இந்தப் பேச்சை இதோடு முடிவுக்குக் கொண்டு வருகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவில் சொல்லப்பட்டிருக்கிற காலக் கெடுவை இன்னும் நீட்டிப்பதற்கு நிறைய காரணங்கள் இருக்கின்றன. எங்கள் கட்சியால் நடத்தப்படும் விவசாயச் சங்க அமைப்புகளிலிருந்து, மற்றுமுள்ள பல்வேறு விவசாயச் சங்கங்களின் சார்பாக இந்தக் காலக் கெடுவை நீட்டிக்க வேண்டும் என்ற மனு ஏற்கெனவே அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் தற்போது குறிப்பிட்டிருக்கும் காலக்கெடு போதாது என்பது தெளிவு படுத்தப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே விவசாயிகளைப் பொறுத்தவரை, கட்டுபடியாகக் கூடிய விலை இல்லாத காரணத்தால் தங்களின் கடன்களை ஒத்தி வைக்க வேண்டும், கடன் பாக்கிகளைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்போது தமிழகம் எங்கும் வறட்சியும் சேர்ந்து விட்டது. தற்போது 6 மாதத்திற்கு கால நீட்டிப்புச் செய்யப்படுவது போதாது. 7 மாதத்திற்குப் பிறகு, மீண்டும் இந்தக் காலக்கெடுவை நீட்டிக்கத் தான் வேண்டும். அரசாங்கத்தின் சார்பில் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களைத் தள்ளி வைக்க வேண்டுமென்று 6 மாதத்திற்கு ஒரு முறை இங்கே வருவதைப்போல் நாமும் கேட்டுக்கொண்டே இருப்போம். மக்கள் சார்பில் இதைத் தள்ளி வைக்க வேண்டும் என்று கேட்பதற்கு நமக்கு உரிமை

இருக்கிறது. அரசாங்கத்தில் இருப்பவர்களும் ஒப்புக்கொள்வார்கள். எனவே அந்த அடிப்படையில் தற்போது 6 மாத காலத்திற்கு காலக் கெடுவை நீட்டிப்பதை நான் வரவேற்கிறேன். தற்போது ஜூன் மாதம் வரை தள்ளி வைத்திருக்கிறார்கள். அதை நான் முழு மனதோடு வரவேற்பதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னொரு தள்ளி வைப்புக்கும் தயாராக இருக்க வேண்டும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் திருத்தச் சட்ட முன்வடிவும், புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவும் அமைச்சர் அவர்களால் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதி வரை கால நீட்டிப்பு கோரியிருப்பதை நான் வரவேற்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் இதை வரவேற்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவுகளை வரவேற்றுப் பேசும் அதே நேரத்தில் இன்னொரு கருத்தையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1972 ஆம் ஆண்டு பசலிக்கான பாக்கியை மேலும் மேலும் ஒத்தி வைத்துக் கொண்டேயிருப்பதை விடுத்து, அதை முழுமையாகவே தள்ளுபடி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதுதான் சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே இந்தக் கால நீட்டிப்பு கேட்கக் கூடிய நேரத்திலும் இதே அடிப்படையில் நாங்கள் எங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறோம். அறுவடைக் காலம் சாதாரணமாக ஜனவரியில்தான் தொடங்குகிறது. டிசம்பர் மாதம் வரை கால நீட்டிப்பு கொடுப்பதன் மூலம் குத்தகை பாக்கியைச் செலுத்துவதற்கு விவசாயிகளுக்கு வாய்ப்பு இருக்காது என்பதால், அரசாங்கத்தில் இது குறித்து யோசித்து 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை கேட்பதையேகூட அதிகரித்துக் கேட்கலாம் என்ற வகையில் நாங்கள் கருத்துத் தெரிவித்தோம். அப்போது அரசாங்கத்தின் சார்பில் அதைக் கேட்கத் தயாராக இல்லை. 1980 ஆம் ஆண்டு டிசம்பர் வரை கால நீட்டிப்புக் கேட்டார்கள். இப்போது அது போதாது என்று 1981 ஆம் ஆண்டு ஜூன் 15 வரை கால நீட்டிப்பு கேட்டிருக்கிறார்கள். இன்றையதினம் மாநிலம் எங்கும் கடுமையான வறட்சி நிலைமை இருக்கிற காரணத்தால், இதை ஓராண்டுக் காலத்திற்குத் தள்ளி வைக்க இந்த மசோதா



விலேயே வழி வகை செய்திருக்கலாம். இப்போதுகூட அமைச்சர் அவர்கள் இது குறித்து யோசித்து ஒரு அறிவிப்பை வெளியிடலாம். அப்படிச் செய்தால், அது பாராட்டத்தக்க அம்சமாக இருக்கும்.

(நண்பகல் 12-00)

மேலும் வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட மக்களுடைய நிலைமைகளை நன்கு பரிசீலித்து, அவர்கள் செலுத்தக்கூடிய குத்தகை பாக்கி அல்லது வேறு சில அரசாங்கக் கடன்கள் ஆகியவைகளை வசூல் செய்வதைத் தள்ளிப்போட்டு கெடுவை நீட்டிப்பதைவிட, சிறு விவசாயிகளுக்கு முழுமையாகத் தள்ளுபடி செய்கிறோம் என்ற ஓர் அறிவிப்பைச் செய்தால், அது நிரந்தரமான பரிகாரத்தைத் தமிழகத்தில் இருக்கின்ற விவசாயிகளுக்கு ஏற்படுத்தியதாக அமையும். அந்த அடிப்படையிலே இந்தப் பிரச்சினையைப் பரிசீலிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குத்தகைப் பாக்கியைப் பொறுத்த வரையிலே, தஞ்சை மாவட்டத்தின் பெரும் பகுதியிலே இந்தப் பிரச்சினை இன்றைக்கும் இருந்து வருகிறது. தஞ்சை மாவட்டத்திலே கூட, கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு, குத்தகைதாரர்கள் உற்பத்தி இல்லாமல் தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் கவனத்திலே எடுத்துக் கொண்டு 1972-ம் ஆண்டு பசலிக்கான குத்தகை பாக்கிகள் அனைத்தையும் ரத்து செய்கிறோம் என்ற அறிவிப்பைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். சேலம் மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம் எப்படி வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறதோ அதற்கொப்பவே தஞ்சையிலே பல பகுதிகள் இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள்.

விவசாயிகளுக்கு நாம் நிவாரணம் கொடுக்க வேண்டும் என்ற முறையில் காலக் கெடுவை நீட்டித்துக்கொண்டே போவதைவிட அவர்களுடைய பளுவைக் குறைக்க நாம் முடிவு எடுக்க வேண்டும். என்றைக்காவது ஒரு நாளைக்குக் கட்டித்தான் தீர வேண்டும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே இதையெல்லாம் யோசித்து 72 ஆம் ஆண்டு பசலிக்கான குத்தகை பாக்கி முழுவதையும் தள்ளுபடி செய்யக்கூடிய வகையிலே அமைய வேண்டும் என்று சொல்லி, அப்படி இல்லாவிட்டால், "எப்ரல் 15 ஆம் நாள் வரை" என்பதற்குப் பதிலாக ஓராண்டுக் காலத்திற்காவது கால நீட்டிப்பைத் தர வேண்டுமென்று சொல்லி, பொதுவாக இந்த இரண்டு மசோதாக்களையும் வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். வரவேற்றுப் பேசிய அத்தனை பேர்களும் காலக் கெடு அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்களே தவிர, காலக் கெடு கொடுக்கக்கூடாது என்று யாரும் சொல்லவில்லை. தமிழகத்தின் பல பகுதிகளில், தஞ்சை மாவட்டத்திலேகூட சில பகுதிகளில், இயற்கைக் கோளாறால், வறட்சியால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சொன்னார்கள். அதேபோல மற்ற உறுப்பினர்களும் சொன்னார்கள். ஆகவே வறட்சி இருக்கிற காலத்திலே இப்படி ஆறு மாதங்கள் தள்ளி வைத்தால் போதாது, ஒரு வருடத்திற்குத் தள்ளி வைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற நிலைமை என்னவென்றால், இப்படித் தள்ளப்படுகிறபோது எங்கெங்கே விளையவில்லை, எங்கெங்கே கஷ்டப்படுகிறார்கள் என்பதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி, முதல் தவணையைத் தள்ளிவிட்டால் அடுத்த தவணைக்கும் நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டிருக்கிறார். மூன்று தவணைகளுக்கு மேல் எந்தெந்தக் காலம் என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. மூன்று தவணைகளில் கடைசி தவணை அப்படியே இருக்கிறது. முதல் இரண்டு தவணைகள்தாம் தள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள், சனவரி மாதம் அல்லது டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி வரைக்கும் தவணை கொடுத்தது சரியில்லை, அப்போதுதான் அறுவடை நடந்து கொண்டிருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். சில இடங்களில் நவம்பர் மாதம் ஆரம்பித்து சனவரி மாதத்திற்குள் அறுவடை முடிந்துவிடுகிற காரணத்தாலே, இதையெல்லாம் யோசித்து எங்கெங்கே எந்தெந்த மாதங்கள் என்பதை யோசித்துப் போட்டிருக்கிறோம்.

காலக் கெடு கொடுத்து நோட்டிஃபிகேஷன் வெளியிடுவதிலே காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். யோசித்துத்தான் காலக்கெடு கொடுக்கப்பட்டிருக்கிறது. எப்படி மாற்றப்பட்டிருக்கிறதென்றால், 31—12—1980ல் முதல் தவணை என்பது 30—6—1981 என்று மாற்றப்பட்டிருக்கிறது. 6 மாதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த தவணையின் காலக் கெடுவைத் தள்ளிப் போட வேண்டுமென்று திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். 30—6—1981 என்பதை



31—3—1982 என்று அதற்கும் 9 மாதங்கள் கொடுக்கப்பட்டு தள்ளிப் போடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்றாவது தவணை 30—6—1982 என்பது அப்படியே இருக்கிறது. எல்லா பசலிகளுக்கும் தனித் தனியாக எந்தெந்தக் காலம் என்பது விளக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே இருக்கின்ற அரசினுடைய அச்சகத்திலேயிருந்து வெளி வருவதில், ஆளுநருடைய, குடியரசுத் தலைவருடைய ஒப்புதல் வந்து வெளியிடுவதில், கால தாமதம் ஆகிவிட்டது என்று சொன்னார்கள். இந்த ஒரு சட்ட முன்வடிவு மட்டுமல்லாமல், வரிசையாக இந்த அரசு வந்ததற்குப் பிறகு எத்தனையோ சட்ட முன்வடிவுகள் ஆளுநரின் அனுமதி பெற்று நோட்டிஃபிகேஷன் செய்யப்பட்டிருக்கிறதென்றால், இசைவு பெற்ற மறுநாளே நோட்டிஃபிகேஷன் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கேயிருந்து வந்த பிறகு உடனடியாக இது நடைபெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் குடியரசுத் தலைவரிடத்திலே இரண்டு மாதங்களுக்கு மேலாக இருந்துவிட்டது. எல்லாச் சட்டங்களும் எப்போது சட்டப் பேரவையிலே நிறைவேற்றப்பட்டன, எப்போது மேலவையிலே நிறைவேற்றப்பட்டன, எப்போது இசைவுக்கு அனுப்பப்பட்டன, எப்போது அவைகள் திருப்பியனுப்பப்பட்டன, எப்போது நோட்டிஃபிகேஷன் வெளியிடப்பட்டது என்பதையெல்லாம் வரிசையாக வைத்திருக்கிறேன். இதையெல்லாம் திரு. இராமமூர்த்தி போன்றவர்கள் கேட்பார்கள் என்று முன்கூட்டியே எனக்குத் தெரியும். ஆனால் இங்கே எந்தவிதமான கால தாமதமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலவையிலே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட தேதி, 11—8—1980. குடியரசுத் தலைவர் இரண்டு மாதங்கள் கழித்து இங்கே அனுப்பியிருக்கிறார்கள். குடியரசுத் தலைவருடைய இசைவு பெற்று இங்கே வந்த தேதி 1—11—1980. இரண்டு மாதக் காலதாமதம் அங்கே ஆகியிருக்கிறது. 1—11—1980-ல் திரும்பி வந்ததை, நான்கு நாள் கழித்து 5 ஆம் தேதி வெளியிட்டிருக்கிறோம். வெளியிடப்பட்ட தேதிக்கும், வந்த தேதிக்கும் இடையிலே இருக்கிற நாட்கள் 3 நாட்கள்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எப்போது சட்டமன்றம் கூடுகிறதோ அப்போது உடனே நிறைவேற்றுகிறோம். அதைத் தொடர்ந்து குத்தகை தள்ளி வைக்கப்பட்டது. குத்தகை தள்ளி வைக்கப்பட்ட நாளை மட்டும் பார்க்கக் கூடாது. 1972 ஆம் ஆண்டு,

(திரு. எஸ். டி. சோமசுந்தரம்) [1981 மார்ச் 10

1381-வது பசலிக்கு நாங்கள் கொண்டு வந்த சட்டம் இருக்கிறதே, என்றைக்கு இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதோ அதிலிருந்து தொடர்ந்து சங்கிலித் தொடர் போலப் பார்த்தால் எந்தெந்தத் தேதி எப்படி வந்தது என்பது தெரியும். என்றைக்கு நிறைவேற்றப்பட்டது, குடியரசுத் தலைவருக்கு எப்போது போனது என்பதையெல்லாம் பார்த்தால், இந்த அரசைப் பொறுத்த வரையில், எந்தவிதமான தவறும் இல்லாமல் நடைபெற்று வந்திருக்கிறது என்பது தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் காலக் கெடு கொடுத்திருப்பதற்குக் காரணம், குடியரசுத் தலைவரிடமிருந்து தாமத மாக வந்தது மட்டுமல்ல. இன்றைக்குள்ள நிலைமையையும் யோசித்து இந்த அரசு இந்த முடிவை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1981) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.



1981 மார்ச் 10]

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1981) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 12-10)

(3) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப் பெற்ற பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1981).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

---

@ 563–565 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1981 மார்ச் 10

பிரிவு 2 முதல் 5 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1981) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(4) தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1981).**

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

எனறு முன்மொழிகிறேன்.

---

@ 566–572 ஆம் பக்கங்களில் இணைப்பு VI-ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1981 மார்ச் 10]

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் மனப்பூர்வமாக இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்கிறேன். இது ஒரு நல்ல முயற்சி என்பதோடு மட்டுமல்ல. தொழில் துறையிலே உள்ள தொழிலாளர்களுக்கு ஒரு நல்ல பாதுகாப்பு கொடுக்கின்ற வகையிலே இது அமைந்திருக்கிறது. அதற்கான நல்ல முயற்சியாக இருக்கிறது. சட்டபூர்வமாக இப்படி ஒரு பாதுகாப்பு தொழிலாளர்களுக்குத் தேவை என்பது பல காலமாக உணரப்பட்டு, கருத்து தெரிவிக்கப்பட்டு வந்திருக்கிறது. இருந்தாலும்கூட, முதன் முறையாக அது எழுத்து ரூபமாக, சட்ட ரூபமாக உருவெடுக்கிறது என்ற அளவிலே இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதிலே எடுத்துக்கொண்ட முயற்சிக்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஒன்று சொல்ல விரும்புகிறேன். இதனுடைய "சில பிரிவுகள் வழக்கத்தின் காரணமாக கன்வென்ஷனலாக conventional ) அமைந்திருக்கின்றன. அரசாங்கம் கொண்டு வருகின்ற சட்ட முன்வடிவிலே வழக்கமான சில பிரிவுகள் இருப்பதால், இப்படியே வழக்கமாக இருக்கும் என்ற அடிப்படையிலேயே, 'பை கன்வென்ஷன்' என்ற அளவிலே இருக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள் என்று கருதுகிறேன். அப்படிச் சில பிரிவுகள் அமைந்திருக்கின்றன. ஆனால் பொதுவாக இது தொழிலாளர்களுக்கு நன்மை செய்கின்ற சட்ட முன்வடிவாக இருக்கின்றது. கன்வென்ஷன் என்ற அளவிலே சில பிரிவுகள் அதில் இருக்கும்போது, அதைத் தவறாக அரசு பயன்படுத்தாது என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம். இந்தச் சட்ட முன்வடிவிலே இடம் பெறச் செய்திருப்பதால், சட்டமாக்கிய பிறகு, சில நேரங்களில், அதனைத் தவறாகப் பயன்படுத்துகின்ற சூழ்நிலைகள் ஏற்பட்டாலும் ஏற்பட்டு விடலாம். அதற்குக்கூட நாம் இடம் கொடுக்கக்கூடாது. காரணம் அதனாலே பாதிக்கப்படுகின்றவர்கள் தொழிலாளர்கள் என்பதுதான். ஆகவே இந்தச் சட்ட முன்வடிவை, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்றதாக இருப்பதால், நான் வரவேற்கிறேன். பல்வேறு பிரிவுகளில் சிற்சில மாறுபாடு செய்வது குறித்து, பரிசீலனை செய்திருக்கலாம். இனியாவது நடைமுறையிலே, அனுபவத்தின் அடிப்படையிலே, அவ்வப்போது மாற்றிக்கொள்ள வேண்டும். அதற்கு அரசுக்கும் அதிகாரம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை முழுமையாக செயல்படுத்துவதிலே அக்கறை

காட்ட வேண்டும். நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இந்த அரசும்,
இந்தச் சட்ட முன்வடிவு சட்டமாக ஆகிய பிறகு, இதனை வெற்றிகரமாக
அமுல்படுத்துவதிலே அக்கறை காட்ட வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.
இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை
நான் வரவேற்கிறேன். இதில் குறிப்பாக இருக்கிறது. இந்த நாட்டிலே
இருக்கின்ற நிர்வாகங்கள், தொழிற் சங்க இயக்கங்களில் இருப்பவர்களுக்கு
ஒரு நிர்ப்பந்தத்தை, ஒரு பயத்தை உண்டாக்குகின்ற ஆயுதமாக தற்காலிக
வேலை நீக்கத்தைப் பயன்படுத்தி வருகின்றன. தற்காலிக வேலை நீக்கம்
செய்து, விசாரணை என்று சொல்லி பல காலம், பல மாதங்கள், பல ஆண்டுகள்
ஒத்திப் போட்டுவிடுகின்றார்கள். அந்தக் கால கட்டத்திலே அந்தத் தொழி
லாளர்களுக்கு வாழ்க்கைப்படி இல்லாமல் செய்கின்றார்கள். அப்படிச்
செய்வதன்மூலம் அந்தப் பணியாளர்களைத் தந்திரமாகத் துன்பப்படுத்த
வேண்டுமென்ற அளவில் இருக்கிறார்கள். இந்த முறையை அவர்கள் நீண்ட
காலமாகவே கடைப்பிடித்து வருகிறார்கள். கால நீடிப்புச் செய்கின்றார்கள்.
அதிலேயிருந்து இந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் தருகின்ற வகை
யிலே, தற்காலிக வேலை நீக்கம் செய்யும் காலத்திலே அவர்களுக்கு வாழ்க்கைப்
படி வழங்குவதற்காக இந்த மசோதாவைக் கொண்டு வருகிறார்கள். அதை
நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

அதோடு தொடர்ந்து நான் சில விஷயங்கள் கூற விரும்புகிறேன். தமிழ்
நாட்டிலே இது காலம் கடந்துதான் வந்திருக்கிறது. ஏனென்றால் குறிப்பிட்
டிருக்கின்ற 1675 தொழில் நிறுவனங்களில் 1631 நிறுவனங்களில் இன்றைக்கும்
இந்த மாதிரி சப்சிஸ்டென்ஸ் அலவன்ஸ் கொடுப்பதில்லை என்று குறிப்பிடப்
பட்டிருக்கிறது. மத்திய அரசு விதித்திருக்கின்ற மாடல் ஸ்டாண்டிங்
ஆர்டர் என்பதிலே இப்படி 90 நாட்கள் வரை வேலையில்லாமல் இருந்தால்,
அவர்களுக்கு 50 சதவிகிதம் சம்பளமும், 180 நாட்கள் வரை இருந்தால் 75
சதவிகிதம் சம்பளமும், அதற்கு மேல் போனால் முழுச் சம்பளமும் கொடுக்க
வேண்டும் என்று இருக்கின்றது. அப்படி இருந்தபோதிலும் ஒரு நிர்வாகம்
லேபர் கமிஷனருக்கு 'அப்ளை' பண்ணி, தொழிலாளர் சம்மதம் கேட்டுச்
செய்ய வேண்டும். அப்படிச் செய்துதான் வரவேண்டுமென்று சட்ட
மிருப்பதன் காரணமாக, இந்தக் கோர்ஸுக்குள் நடைபெறுகின்ற காலதாமதம்
காரணமாக அவர்கள் துன்பப்படுகிறார்கள். இன்றைக்கு 44 நிறுவனங்களில்
தான் இந்த முறை அமுலில் இருந்து வருகிறது. 1631 நிறுவனங்களில் அமுல்





நடத்தப்படவில்லை என்பது ஒரு வருந்தத்தக்க விஷயம். நானும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும்கூட தொழிற்சங்க இயக்கத்திலே அவர்கள் எதிர்க் கட்சியிலே தலைவராக இருந்த காலத்தில், இதைச் சட்டமாக இயற்ற வேண்டுமென்று அன்றைக்கு இருந்த அரசாங்கத்தைக் கேட்டோம். இரண்டு பேரும் சேர்ந்து கேட்டிருக்கிறோம். இந்த 'மாடல் ஸ்டாண்டிங் ஆர்டர்' மத்திய அரசில் அமுல்படுத்தப்பட்டு 15 வருடங்கள் ஆகிவிட்டன. அப்படி இருந்தும் கூட, இன்றும் தொழிற் சங்கமும், நிர்வாகமும் சேர்ந்து எடுக்கின்ற முடிவின் அடிப்படையிலே செய்ய வேண்டும் என்ற காரணத்தினால், கால தாமதம் ஏற்படுகின்றது. அந்தக் காலதாமதத்தைப் போக்க வேண்டுமென்று இந்தச் சட்ட முன்வடிவு கால தாமதமாக வருகிறது. Better late than never என்று சொல்வார்கள். அந்த அளவில் இந்தச் சட்ட முன்வடிவு காலத் தாழ்ந்து வந்தாலும், நல்லது என்பதால் வரவேற்கிறேன். அதிலே தொழிலாளர்களுக்குச் சாதகமான சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக செக்ஷன் 2-ல், உப பிரிவு இரண்டிலே . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவில் திருத்தங்கள் என்று வரும்போது, எடுத்துச் சொல்லலாம். இப்போது வேண்டாம்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்கின்றபோது அவர்களுக்கு நிவாரணமாக வாழ்க்கைப்படி அளிக்கின்ற ஒரு சட்ட முன்வடிவு என்ற அளவில் நான் இதை வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்ட நாட்கள் ஒரு தொழிலாளியாக இல்லாவிட்டாலும் கூட . . . ஒரு ரெயில்வே தொழிலாளியாக இருந்திருக்கிறார்கள்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: அவர் ஒரு ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தார். ஒரு ஆபீசராக இருந்திருக்கிறார்.

திரு. ம. சங்கரலிங்கம்: ஒரு ரெயில்வே அதிகாரியாக இருந்து பிறகு தொழிலாளர்கள் இயக்கத்திலே தன்னைத் தொடர்புபடுத்திக் கொண்டிருந்தவர். இன்று தொழிலாளர்களுடைய நலனைக் காக்கின்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வருகின்ற பெயரை, வாய்ப்பைப் பெற்றதற்கு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

தலைவர் அவர்கள்
நமது மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் ஸ்டாண்டிங்
பேசுகின்றபோது சொன்னார்கள். மத்திய அரசு ஒரு மாடல் நிறுவனங்
ஆர்டரை, உத்தரவைப் பிறப்பித்தும்கூட, ஆயிரத்திற்கு மேற்பட்ட என்று
களில் 44 நிறுவனங்கள் மட்டுமே அந்த விதிகளைக் கடைப்பிடித்தன முடியாது,
சொல்லும்போது, மனமாற்றத்தால் பல நன்மைகளைச் செய்ய என்ற
இந்த நாட்டில் சட்டத்தால்தான் சில நன்மைகளைச் செய்ய முடியும் சட்ட
நிலையை நாடு அறிந்துகொண்டிருக்கிறது என்ற நிலையில் இந்தச் பணி
முன்வடிவை அரசினர் கொண்டு வந்திருக்கிறார்கள். உண்மையில் ஒரு
யாளர் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்தால், அவருக்கு வாழ்க்கைப்படி
கொடுக்காமல் போனால், அவரின் குடும்பம் எவ்வாறு தத்தளித்துக்கொண்டி
ருக்கும் என்பதை நாம் பார்த்திருக்கிறோம். அரசுத் துறையில் இருப்பவர்
களுக்குக்கூட இப்படி வாழ்க்கைப்படி கொடுக்க வாய்ப்பு இருந்தாலும், அதற்கு
உத்தரவு பிறப்பித்திருந்தாலும்கூட, சில காலதாமதங்கள் ஏற்படுகின்றன.
சில அதிகாரிகள் எடுக்கின்ற நடவடிக்கைகள் காரணமாக, அத்தகைய கால
தாமதம் ஏற்படுகின்றது. அப்போது அந்த ஊழியர்கள் எங்களுக்கு
உணர்த்துகின்றார்கள். நாங்களும் அந்த நிலைமைகளைக் குறித்து
சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கண்டு பேசுகிறோம். அந்தக் கால கட்டத்
திலே அவர்கள் வாழ்க்கைப்படி இல்லாமல் தத்தளித்துக்கொண்டிருப்பதைப்
பார்க்கிறோம். அவர்களுக்கு அது ஒரு ஹாரஸ்மெண்ட்டாக இருக்கிறது.
அவர்களுக்கு இருக்கும் மனத்தொல்லைகளுக்கு இடையிலே இந்தத்
தொல்லையும் சேர்ந்துகொண்டு அவர்களை அதிகத் தொல்லைகளுக்கும்,
துன்பத்திற்கும் உள்ளாக்குகின்றது. இந்த விதியிலே 90 நாட்கள்வரை
வேலையில்லாமல் இருந்தால், அவர்களுக்கு 50 சதவிகிதம் சம்பளம் கொடுக்க
லாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை அப்படியே
நிறைவேற்றினாலும்கூட, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில்
விரைவில் மேலும் பல முக்கியமான சீர்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டு

(பிற்பகல் 12-20)

சார்ஜ்-ஷீட் கொடுக்காமல் இருந்தால்,
மென்று கேட்டுக்கொள்கிறேன். ஆட்டமேட்டிக்காக நீங்குகிற
2 மாதங்களுக்குள் அவர்களுடைய சஸ்பென்ஷன் அப்படிப்
அளவில் இருக்க வேண்டும். ஒருவரைப் பணி நீக்கம் செய்கிறோம். இருக்
பணி நீக்கம் செய்வது தண்டனையல்ல என்று நீதி மன்றத் தீர்ப்பு நீதி
கிறது. Suspension is not to be a punishment என்று நீதி தெவ்படு
மன்றத் தீர்ப்பு இருக்கிறது. ஒருவர்மீது சில குற்றச்சாட்டுகள் பணியிடத்திற்கு
கின்றன. அவற்றை விசாரிக்கும்போது, அவர் அந்தப்



வராமல் தடுக்கத்தான் அந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது, அது தண்டனையல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. ஒருவரை வேலையிலிருந்து தாற்காலிகமாகப் பணி நீக்கம் செய்துவிட்டு, 60 நாட்களுக்கு முன்னதாகக் குற்றச்சாட்டு இன்னதென்று நிர்வாகம் சொல்லாவிட்டால், தாற்காலிக வேலை நீக்கம் செல்லத்தக்கதல்ல என்ற சூழ்நிலை இதில் இடம் பெற வேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன். நீதிமன்றங்களில் இந்த உணர்வை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது 3 மாதங்கள் என்று இருக்கின்றன. அதை மாற்றி, 2 மாதங்களுக்குள் சார்ஜ்-ஷீட் கொடுக்க வேண்டுமென்று விதிகளில் இடம் பெற வேண்டுமென்று கருதுகிறேன்.

180 நாட்கள் வரை 75 சதவிகித ஊதியம்; அதற்குப் பிறகு முழுச் சம்பளம் என்று சொல்லாமல், முழுச் சம்பளத்திற்கு நிகரான தொகை என்று சொல்லப்பட்டிருக்கிறது. முழுச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற நிலை இருக்கும்போது, பணி நீக்கம் ஆட்டமேட்டிக்காக நீங்குகிறதென்ற நிலை உருவாகும். 6 மாதங்களுக்குள் விசாரணை செய்வதில் கால தாமதம் ஏற்படுத்தப்பட்டு, நிர்வாகத்தின் தரப்பில் இந்தக் கால நீட்டிப்பு இருந்தால், சம்பளம் பெறுவது என்ற நிலையும், தொழிலாளர் தரப்பில் இந்தக் கால நீட்டிப்பு இருந்தால் வேறு மாதிரி என்ற சொல்லும் இருக்க வேண்டுமென்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். இன்னும் பல நிறுவனங்களில் இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதின் மூலம் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தை நடத்துபவர்களுக்குமிடையே சீரான மன நிலை உருவாகுமென்று நம்புகிறேன். இந்த நிலையில் இதை வரவேற்கிறேன்.

***மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் இதை வரவேற்றதற்காக இந்த அரசின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும் போது, சில திருத்தங்கள் வேண்டுமென்று சொன்னார்கள். சில திருத்தங்களையும் கொடுத்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. இராமமூர்த்தி அவர்களும், திரு. சங்கரலிங்கம் அவர்களும் சொன்னதுபோல, இந்தச் சட்டத்தை இப்போது செயல்படுத்தி, அதற்குப் பின்னால் ஏற்படக்கூடிய விளைவுகள், தொழிலாளர்களுக்கு இதனால் சங்கடங்கள் ஏற்படுமென்ற நிலைமை ஏற்பட்டால், அதற்கேற்றாற்போல் திருத்தங்கள் செய்து கொள்ளலாமென்று இந்த நோக்கில் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல திருத்தங்களை எந்த நோக்கில் சொன்னாலும் அரசு அவற்றை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'ஸ்டாண்டிங் ஆர்டர் ஆக்ட்' என்ற சட்டத்தில் 'சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ்' என்பது கிடையாது. அந்த ஆக்டில் ஒருவரை சஸ்பென்ஷனில் வைத்தால், சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்க வேண்டும், ஊதியம் கொடுக்க வேண்டுமென்று இல்லை. மாடல் ஸ்டாண்டிங் ஆர்டரில் முதல் 90 நாட்களுக்கு 50 சதவிகிதம் ஊதியம் என்றும், 90 நாட்களுக்கு மேலாகிவிட்டால் 75 சதவிகிதமென்றும்தான் இருக்கிறது. 180 நாட்களுக்கு மேலானால் என்ன என்று இல்லை. இதைத் தானாக அமல் நடத்திவிட முடியாது. ஒரு துறையில் ஸ்டாண்டிங் ஆர்டர் கொண்டுவந்து, அதாவது மாடல் ஸ்டாண்டிங் ஆர்டரில் இருப்பதை எழுதி, சர்ட்டிபையிங் ஆபீசர்-டி.சி.எல்.-அவர்களுக்கு அனுப்பி, அவர்கள் சர்ட்டிபை பண்ணிய பிறகுதான் அது அமலுக்கு வரும். அப்படி 1,675 நிறுவனங்களுக்கு சர்ட்டிபை செய்திருக்கிறார்கள். 44 முதலாளிகள் தவிர வேறு யாரும் இதை 'இன்கார்ப்பரேட்' செய்யவில்லை. திருத்தம் கொண்டு வராத தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஒன்றுமே பெறாமல் இருக்கிறார்கள். 44 இடங்களில்கூட, கொடுக்க வேண்டுமென்று 'இன்கார்ப்பரேட்' செய்திருந்தாலும், 90 நாட்களுக்குப் பிறகு 75 சதவிகிதம் என்று இருக்கிறதே தவிர, 180 நாட்களுக்கு மேலே என்ன என்று சொல்லவில்லை. எனவே 44 தொழில் நிறுவனங்களில் மாடல் ஸ்டேண்டிங் ஆர்டரில் இருப்பதை 'இன்கார்ப்பரேட்' செய்திருக்கிறார்கள். எஞ்சிய நிறுவனங்களில் 'இன்கார்ப்பரேட்' செய்யவில்லை. இந்த 44 நிறுவனங்களில் இருப்பவர்களும் 90 நாட்கள் வரை 50 சதவிகிதம், அதற்கு மேலே 75 சதவிகிதம் என்ற அளவிற்குத்தான் பெறுகிறார்கள். எல்லாத் தொழிலாளர்களும் இதைப் பெற வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடுதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். 'பெட்டர் லேட் தேன் நெவர்' என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரையில் 'லேட்' இல்லை. இதைத் தயார் செய்து, கொண்டுவர வேண்டுமென்று நினைத்தபோது, எங்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். மறுபடியும் நாங்கள் வந்து, ஆலோசனை செய்து கொண்டு வந்திருக்கிறோம்

* **திரு. க. இராமமூர்த்தி:** 'பெட்டர் லேட் தேன் நெவர்' என்று நான் சொல்லவில்லை. அப்படிச் சொன்னது உங்கள் தோழமைக் கட்சியின் தலைவர்தான்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** எங்களைப் பொறுத்தவரையில், காலதாமதம் செய்யவில்லை. தயார் செய்து டெல்லிக்கு அனுப்பி, அவர்கள் அனுமதி பெற்று, விரைவாகக் கொண்டு வந்திருக்கிறோம். We all know that it is a concurrent subject. இந்தச் சட்டத்திலுள்ள சிறப்பு அம்சம்



என்னவென்றால், 90 நாட்கள் வரையில் 50 சதவிகிதம், 180 நாட்கள் வரையில் 75 சதவிகிதம், அதைத் தாண்டினால் முழு ஊதியத்திற்கு ஈடான தொகை கொடுத்தாக வேண்டும் என்பதுதான். அதிலிருந்து யாரும் தப்பித்துக்கொள்ள முடியாது. ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின் மூலம் அதை வசூல் செய்யலாமென்று விதி இருக்கிறது. இதைத் தமிழகத்தில் முதன் முதலாகக் கொண்டு வருவது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில்தான் என்பதில் நான் பெருமை கொள்கிறேன். உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப்போல் 4 1/4 ஆண்டுகளுக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருக்கவிட்டால் பல்வேறு புதிய சட்டங்களை, எல்லோரும் பாராட்டும் வகையில் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பான சட்டங்களைக் கொண்டு வருவோமென்று சொல்லி, அப்படிப்பட்ட அமைதியைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

## பிரிவு 2.

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு தலைவரவர்களே. கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்—

"In clause 2, sub-clause (*a*) (ii) for the words "five hundred rupees, substitute the words' one thousand and six hundred rupees'

In clause 2, sub-clause (*c*), delete item (i) "

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** சூப்பர்வைசர் வேலை பார்ப்பவர்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தாதென்று இருக்கிறது. ஏனென்றால், 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் வருகிறது, அதனால் சூப்பர்வைசர் கேடருக்குப் பொருந்தாதென்று

இருக்கிறது. அது விளக்கப்பட வேண்டும். 500 ரூபாய் சம்பளம் என்பது 1947 ஆம் ஆண்டு இன்டஸ்டிரியல் டிஸ்பியூட் ஆக்ட் கொண்டு வரும்போது—34 வருடங்களுக்கு முன்பு—சம்பளம் அவர்களுக்கு எவ்வளவு என்று தீர்மானித்து 500 ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. இப்போது ஒரு ரூபாய் என்பது 25 பைசா வேல்யூ உடையதுதான் என்று சொல்லும் நேரத்தில், அதே 500 ரூபாய் என்று இருப்பது எந்தவிதத்திலும் பொருத்தமாக இல்லை. அதை 1,500 ரூபாய் என்று மாற்ற வேண்டும். இதனால் தொழிலாளர்களை வேலை வாங்கும் மேஸ்திரிகூட பாதிக்கப்படலாம். எனவே 500 என்று இருப்பதை 1,500 என்று மாற்ற வேண்டும். மத்திய, மாநில அரசுகளின் சார்பிலே செயல்படும் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு 'இது அப்ளை' ஆகாதென்று சொல்லப்படுகிறது. மத்திய அரசின் சார்பான நிறுவனங்களில், தமிழ் நாட்டிலுள்ள நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தொழிற் தகராறு ஏற்பட்டால், தமிழ் நாட்டு லேபர் டிப்பார்ட்மென்ட் அதிகாரிகள் தலையிடலாம். எனவே தமிழ் நாட்டிலுள்ள மத்திய அரசு நிறுவனங்கள், தமிழக அரசின் சார்பான நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது என்று சொல்லுவது நியாயமல்ல. எனவே இது குறித்து 2 திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, தொழிற் தகராறு சட்டத்தில் 'ஒர்க்மென்' என்பதற்கு என்ன சொல்லப்பட்டு இருக்கிறதோ அதைத்தான் இதில் எழுதியிருக்கிறோம். மத்திய அரசு நடத்திய தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் இந்த ஊதிய விகிதத்தை அதிகமாக்க வேண்டும், 500 ரூபாய் என்று இருக்கக்கூடாது, 1,200 என்று உயர்த்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். மத்திய அரசு விரைவிலே அந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருமென்று நம்புகிறோம். மத்திய அரசு விரைவாகக் கொண்டுவர, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்வார்கள். இங்கே நம்மை 'goad' செய்து கொண்டிருப்பவர், டெல்லி அரசு விரைவிலே சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்பதில் அவர் பின் தங்க மாட்டார் என்று கருதுகிறேன். அப்படித் திருத்தம் வரும்போது, இங்கேயும் அந்தத் திருத்தத்தைச் செய்யலாம்.



(பிற்பகல் 12-30)

அடுத்து, மத்திய அரசைப்பற்றிச் சொன்னார். இது மத்திய அரசுக்கு அனுப்பி 'கன்கரன்ஸ்' வாங்கிய ஒன்று. மத்திய அரசு திருத்தம் கொண்டு வருவதாக என்று அறிவித்த காரணத்தால் நாங்கள் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வந்துள்ள திருத்தத்தை எதிர்க்கிறேன் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தம்முடைய திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறாரா அல்லது வலியுறுத்த விரும்புகிறாரா என்று தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : நான் என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"In clause 2, sub-clause (a) (ii) for the words "five hundred rupees" *substitute* the words 'one thousand and six hundred rupees'

In clause 2, sub-clause (c), delete item (i)"

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பிரிவு மூன்றுக்கான திருத்தத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் முன்மொழிவார்.

திரு. ஆ. நல்லசிவன் : கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்—

"In clause 3, sub-clause (1), *delete* the third proviso. In clause 3, delete *sub-clause* (2".

திரு. க. இராமமூர்த்தி திருத்தத்தை வழிமொழிந்தார்.

திரு. ஆ. நல்லசிவன் : 90 நாட்களுக்கு மேல் விசாரணையில் இருக்கிறது என்றால், அது தொழிலாளியின் தாமதத்தின் காரணமாக இருக்குமானால் 75 சதவிகிதம் சம்பளம் தர வேண்டாம். 50 சதவிகிதம் சம்பளம் தந்தால் போதும்

என்று இருக்கிறது. இப்படி நாம் வைத்திருந்தால், எந்த ஒரு முதலாளியும் தாமதம் தன்னுடையது என்று சொல்ல மாட்டார். தாமதம் தொழிலாளியால்தான் வந்தது என்று சொல்லி, பொறுப்பை தொழிலாளியின்மேல் போட்டு தப்பித்து விடுவார். ஆகவே தான் இந்த ஷரத்து வேண்டாமென்று சொல்கிறேன். இந்த ஷரத்திலுள்ள இன்னொன்றைப் பற்றியும் சொல்கிறேன். சஸ்பென்ஷனில் இருக்கிற ஒரு தொழிலாளி வேறு எங்காவது வேலை செய்தால், அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூடாது என்று இருக்கிறது. ஒரு தொழிலாளி சஸ்பென்ட் செய்யப்பட்டு, காலா காலத்தில் நிர்வாகத்தால் விசாரணை செய்யப்படாமல் தாமதம் செய்யப்பட்டு, சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கும் சமயத்தில், அந்தத் தொழிலாளி வேறு எங்காவது போய் வேலை செய்தால், அவருக்கு அப்படிப்பட்ட சமயத்தில் சஸ்பென்ட் செய்யப்பட்ட பேக்டரியிலிருந்து சம்பளம் கொடுக்க வேண்டிய அவசியமில்லையென்று, தொழிலாளிக்குப் பாதுகாப்பற்ற நிலையில் இது இருப்பதால், இதிலும் நான் திருத்தம் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, நாம் கொண்டு வந்துள்ள சட்ட முன்வடிவின் உண்மையான நோக்கமே தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான். அதே நேரத்தில் தொழிற்சாலையும் நல்ல முறையில் நடக்க வேண்டும். யாருக்கும் மிக அதிகமான சலுகையைக் கொடுக்கக் கூடாது. எனவேதான், 90 நாட்களுக்கு மேல் போனால், தொழிலாளர் ஒத்துழைப்பு இல்லையென்றால் 50 சதவிகிதம் என்று வைத்திருக்கிறோம். எந்தச் சூழ்நிலையிலும் முழு ஊதியம் 180 நாட்களுக்கு மேல் என்று வைப்போமானால் தொழிலாளர்கள் விசாரணைக்கு வராமல் தாமதப்படுத்திக்கொண்டே போகலாம், சம்பளம் முழுதும் கிடைக்கிறதே என்று சொல்லி நிர்வாகத்தினருக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்காமல் போகலாம். அப்படிப்பட்ட ஒரு நிலை இதன் மூலம் ஏற்பட வாய்ப்பில்லை.

(திரு. நல்லசிவன் இருக்கையிலிருந்து எழுந்தார்).

மாண்புமிகு உறுப்பினர் நான் பேசி முடித்த பிறகு பேச வாய்ப்பு இருக்கிறது. 1-30 மணி வரை பேசிக்கொண்டேயிருப்போம். நான் உட்கார்ந்த பிறகு பேசலாம். அந்தமாதிரி ஒரு நிலை வரக்கூடாது என்பதற்காகத்தான் 90 நாட்களுக்கு மேல் கால தாமதமாவதற்குக் காரணம் தொழிலாளி என்றால் 50 சதவிகிதச் சம்பளம் என்று கொண்டு வந்திருக்கிறோம்.



இரண்டாவது இன்னொரு கருத்தையும் மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொன்னார். சஸ்பென்ஷன் காலத்தில் தொழிலாளி வேறு ஓரிடத்தில் பணியாற்றினால் அவருக்குச் சம்பளம் பெறுகின்ற உரிமை கிடையாது என்று சொல்வதில் நியாயம் இருக்கிறது. சப்சிஸ்டென்ஸ் அலவன்ஸ் தருவதை நாம் 50 சதவிகிதம் என்றும் பிறகு 75 சதவிகிதம் என்றும் அதன் பிறகு முழுச் சம்பளம் என்றும் வகுத்திருக்கிறோம். நிர்வாகத்தினுடைய கால தாமதத்தினால் விசாரணை முடிவுறாத நிலை ஏற்பட்டால் இந்த விதத்தில் தொழிலாளர்கள் ஊதியம் பெறுவார்கள். அப்படி இருக்கும்போது ஒரு தொழிலாளி வேறோர் இடத்திலும் வேலை செய்தால் அது நியாயமில்லை. ஆகவே இதையும் மாண்புமிகு உறுப்பினர் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தம்முடைய திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறாரா அல்லது வலியுறுத்த விரும்புகிறாரா என்று தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல் சப்சிஸ்டென்ஸ் அலவன்ஸ் முதலில் 90 நாட்கள் வரை 50 சதவிகிதச் சம்பளம் என்றும் 180 நாட்கள் வரை 75 சதவிகிதச் சம்பளம் என்றும் அதற்கு மேல் போனால் முழுச் சம்பளம் என்றும் இருக்கும்போது நிர்வாகத்துடன் எந்த தொழிலாளியாவது ஒத்துழைக்காமல் இருப்பானா? முதலாளிதான் காலம் கடத்தி தொழிலாளி மீது பழியை போட்டு தப்பிக்கப் பார்ப்பார்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** என்ன கேட்கப் போகிறார்கள்! அதைக் கேட்கலாம்.

***மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** ஒரு சட்டம் கொண்டு வரப்படும்போது எல்லா நிலைகளையும் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. அந்த முறையில் இதுவும் பரிசீலிக்கப்பட்டுதான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்த பிறகு, இதன் மூலம் தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படுமேயானால், மீண்டும் இதைப்பற்றி அரசு மறுபரிசிலனை செய்யும் என்பதைத் தெரிவித்து இப்போதைக்கு மாண்புமிகு உறுப்பினர் இரண்டு திருத்தங்களையும் வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தம்முடைய திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறாரா அல்லது யுறுத்த விரும்புகிறாரா என்று தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன் : நான் என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"In clause 3, sub-clause (*i*), *delete* the third proviso. In clause 3, *delete* sub-clause (2)"

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 3, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 4.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பிரிவு நான்குக்கான திருத்தத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் முன்மொழிவார்.

திரு. ஆ. நல்லசிவன் : கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்—

"In clause 4, in line ii, *after* the word 'proceed' and *before* the words 'to recover' *insert* the words 'within three months from the date of filing of the application by an employee."

திரு. க. இராமமூர்த்தி திருத்தத்தை வழி மொழிந்தார்.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, இதிலே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து கோர்ட்டுக்கு விவகாரம் போய், தீர்ப்பு வந்த பிறகு அதைத் தொழிற்சாலை நிர்வாகம் நிறைவேற்ற முன்வராவிட்டால், தொழிலாளர்களுக்கு 'சப்சிஸ்டென்ஸ் அலவன்ஸ்' காலா காலத்தில் கொடுக்கப்படாவிட்டால், தொழிற்சாலை நிர்வாகிகள் தொழிலாளர்களை ஏமாற்றாமல் இருக்கும் பொருட்டு, ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின்படி நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களுக்கு நிவாரணம் கொடுக்க கலெக்டர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இவ்வளவு காலத்திற்குள் அதைச் செய்ய வேண்டுமென்று 'டைம்' நிர்ணயிக்கப்படவில்லை. இப்பொழுதே நாம் பார்க்கிறோம், கோர்ட்டுகளுக்கு வழக்குகள் போய் தீர்ப்புகள் வந்த பிறகு, ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின்படி நடவடிக்கை எடுக்க வருடக் கணக்கில் ஆகிறது. சஸ்பெண்டு செய்யப்பட்ட தொழிலாளிக்கும் அதேமாதிரி இந்த ஆக்டின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டால், அவன் எப்படி நிவாரணம் பெற முடியும்? ஆகவே அப்படி தொழிலாளி பெற வேண்டிய தன்மையை 3 மாதங்களுக்குள் பெற வகை செய்யக்கூடிய திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் திருத்தத்தைச் சட்ட ரீதியாகக் கொண்டு வந்தால், பலவித சிக்கல்கள் ஏற்படும். சில சமயங்களில் 3½ மாதங்களில் முடியக்கூடிய சூழ்நிலை உண்டாகும். இதுபற்றி 'எக்சிகியூட்டிவ் இன்ஸ்ட்ரக்ஷன்' என்கிற முறையில் கலெக்டர்களுக்கு அறிவுறுத்தி கூடுமானவரை 3 மாதங்களுக்குள் முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டு ஆவன செய்யலாம்.

திரு. ஆ. நல்லசிவன் : எக்சிகியூட்டிவ் இன்ஸ்ட்ரக்ஷனைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தம்முடைய திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறாரா, அல்லது வலியுறுத்த விரும்புகிறாரா என்று தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. நல்லசிவன்: நான் என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"In clause 4, in line ii, *after* the word 'proceed' and *before* the words 'to recover' *insert* the words 'within three months from the date of filing of the application by an employee."

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவுகள் 4, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 5, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 6.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் இராமமூர்த்தியும், நல்லசிவனும் இந்தப் பிரிவு முழுவதையும் அப்படியே நீக்க வேண்டுமென்று கோருவதால், திருத்தத்தை அனுமதிப்பதற்கில்லை. இருந்தாலும் அவர்கள் திருத்தத்தின் மீது பேசலாம்.

திரு. ஆ. நல்லசிவன்: 6-வது பிரிவு முழுவதையும் அப்படியே நீக்க வேண்டுமென்று நான் கூறியிருக்கிறேன். இதிலே எம்பிளாயர் என்றால் யார், நிறுவனம் என்றால் எது என்பதைப்பற்றியெல்லாம் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திருத்தம் நிராகரிக்கப்பட்டது. கருத்தை மட்டும் சொல்லலாம்.

திரு. ஆ. நல்லசிவன்: இந்தக் குறிப்பிட்ட பிரிவை ஏற்படுத்தியிருப்பதன் மூலம் அரசு விரும்புகின்ற சில நிறுவனங்களுக்கும், நிர்வாகத்துக்கும், சட்டத் திலிருந்து விதிவிலக்கு அளிக்க முடியும். நிர்வாகி என்றால் யார் என்பது பற்றியும், நிறுவனங்கள் என்றால் எவை என்பதுபற்றியும் தெளிவாக இருப்ப தால். இது தேவையே இல்லை. நிறுவனம் என்ற வார்த்தை முதலாளி என்று இருப்பவர்கள் அனைவரையுமே கட்டுப்படுத்துவதுதான் தொழிலாளிக்கு நியாயம் என்பதால், நான் கொடுத்திருக்கிற திருத்தப்படி இந்தப் பிரிவை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு எந்த நோக்கத்திற்காகக் கொண்டு வரப்படுகிறதோ அந்த நோக்கத்திற்கே எதிரான விளைவுகளை ஏற்படுத்துகின்ற சக்தி வாய்ந்தது இந்தப் பிரிவு. தனியார் தொழிற்சாலை நிர்வாகிகள் தொழிலாளர்களுக்கு வாழ்க்கைப்படி வழங்கு கின்ற அளவிலே இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படி வாழ்க்கைப் படி வழங்குகின்ற சூழ்நிலை தொழிற்சாலைகளுக்கு, அதன் நிர்வாகிகளுக்கு வரும்போது, சில தொழிற்சாலைகளுக்கு மட்டும் இதிலேயிருந்து. நடைமுறை விதிகளிலேயிருந்து விதிவிலக்கு தரலாம் என்கின்ற சூழ்நிலையை, இந்தப் பிரிவு உருவாக்குகிறது. அந்தத் தொழிற்சாலைக்கு எந்தச் சூழ்நிலையில் அப்படிப்பட்ட விதிவிலக்கைத் தருகி றோம் என்பதல்ல பிரச்சினை. ஒரு சங்கடம், சிக்கல் ஏற்படும்போது, முதலில் தொழிற்சாலையிலுள்ள தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தும்போதுகூட, முதலில் தொழி லாளர்களுக்குரிய வாய்ப்பினை, வசதியினை ஏற்படுத்தித் தந்த பிறகுதான், அந்தத் தொழிற்சாலை இயங்க அல்லது நடைமுறைப்படுத்த உருவான நடவ டிக்கைகளை எடுக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. ஆனால். தொழிற்

(பிற்பகல் 12-40)

சாலை மூடப்படும்போது, இதிலே சங்கடம் வந்துவிட்டது, நஷ்டம் வந்து விட்டது, மூடிவிட்டோம். ஆகவே, தொழிலாளர்களுக்கு ஒன்றுமே கொடுக்க வில்லை என்ற முறைக்கு ஆதரவு கொடுப்பதுபோல இது இருக்கிறது. வாதத் திற்கு இதனை சரி என்று ஒத்துக்கொண்டால், அதே தொழிற்சாலை லாபம் சம்பாதிக்கும்போது இதற்காகவென்று தொகை தனியாக ஒதுக்க வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் இப்படி ஒரு விதிவிலக்கு கொடுக்க முடியும் என்று எந்தச் சூழ்நிலையிலும் இந்த மாதிரி விதிவிலக்கு பெற



தொழில் அதிபர்கள் முயற்சிப்பார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்த உயர்ந்த நோக்கங்களோடு இந்தச் சட்ட முன்வடிவை கொண்டு வந்திருக்கிறாரோ, அந்த நோக்கங்களுக்கு எதிரான விளைவுகளை உருவாக்க இந்தப் பிரிவு உதவும் என்பதால், இதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, Standing Order Act -ம் அதாவது நிலையாணைச் சட்டம் Bonus Act, 1965 என்ற இந்த இரண்டும் மத்திய அரசால் கொண்டுவரப்பட்டவை. இந்த இரண்டு சட்டங்களிலும் விதிவிலக்கு இருக்கிறது. Section 14 of Standing Order -லே ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. சட்டத்திலே 36-வது பிரிவிலே விதிவிலக்கு கொடுக்கலாம் என்று இருக்கிறது. அப்படி இருந்தும்—மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி ஏற்பட்டு 3 ஆண்டுகள் முடிந்தும்—சில நிறுவனங்கள் எங்களுக்கு விதிவிலக்கு வேண்டும் என்று கேட்டும், நாங்கள் விதிவிலக்கு கொடுக்கவில்லை. அதிலிருந்து, இந்த அரசு செயல்படும் முறையை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ளலாம். ஆகவே, எல்லாச் சட்டத்திலும் இப்படி இருக்கிறது என்றுதான் நாங்களும் சேர்த்திருக்கிறோம். சட்டத்தை உபயோகப்படுத்தும்போது, நாங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருப்போம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

பிரிவுகள் 6 மற்றும் 7, ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 8.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம மூர்த்தி அவர்கள்தாம் கொடுத்திருக்கும் திருத்தத்தை முன்மொழிவார்கள்.

THIRU K. RAMAMOORTHY : I move the following amendment—

' In-clause 8, delete sub-clause (1) ".

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்ததை நான் வழிமொழிகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன் வடிவின் 8-வது பிரிவிலே, துணைப் பிரிவு 1-ஐப் பொறுத்தவரையில், இது 'In good faith' என்ற அளவிலேதான் இருக்கிறது. சில நடவடிக்கை களை எடுக்கும்போது, இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே, யார் நடவ டிக்கை எடுத்தாலும், இது சரிதான் என்ற உணர்வோடு சில நடவடிக்கைகள்

மேற்கொள்ளும்போது, அவர்களுக்கு மனப்பூர்வமாக தவறு செய்கின்ற எண்ணம் இல்லை என்றாலும்கூட, தவறு அல்ல என்ற எண்ணத்திலே அவர்கள் செயல்பட்டுவிட்டு, பிறகு தாங்கள் செய்தது சட்டபூர்வமாகத் தவறு என்று வரும்போது, விதிவிலக்கு கொடுக்கலாம் என்ற அளவிலே இந்தப் பிரிவு இருக்கிறது. இதனால் பல நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படும். சட்டத்தின் அடிப்படையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்ற கட்டாயம் வரும்போது, அதற்கான முழுமையான காரணங்களை அலசிப் பார்த்துதான் அந்த நடவடிக்கைகளிலே ஈடுபட வேண்டும். சில நடவடிக்கைகளை எடுத்து விட்டு "நாம் வேண்டுமென்றே தவறு செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலே நடவடிக்கை எடுக்கவில்லை, ஆகவே, பாதுகாப்பு வேண்டும்" என்று கேட்டு, அந்தப் பாதுகாப்பு கிடைக்கும் என்ற நிலை சட்டத்திலே இருக்கிறது. ஆகவே இந்தப் பிரிவை நிறைவேற்றுவது இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கத்திற்கு எதிராக இருக்கிறது. Standing Order -லே அப்படி இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லலாம். நாம் சில சட்டங்களை நிறைவேற்றும்போது, நமது மாநிலத்துக்கு ஏற்றவாறு அந்தச் சட்டங்களை அமைக்க வேண்டும். மாற்றங்கள் வேண்டுமென்று சொன்னால் மத்திய அரசிடத்திலே நாம் மாற்ற வேண்டுமென்று கேட்கலாம். சட்டபூர்வமாக்கும்போது சிலவற்றை எங்களுடைய மாநிலத்திற்கு ஏற்றவாறு மாற்ற வேண்டும் என்று நாம் சொல்வதிலே தவறில்லை. இந்த அரசு தைரியமாகச் சொல்லலாம். இந்த அரசு சொன்னால், அவர்கள் கேட்பார்கள். இந்த மாநிலத்தினுடைய நலம் கருதி அப்படிச் செய்ய வேண்டும். இந்தச் சட்டத்தை முழுமையான அளவிலே நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லி, இந்தப் பிரிவுக்கான என்னுடைய திருத்தத்தை ஏற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: Immunity Clause என்று சொல்வார்கள். எல்லாச் சட்டங்களிலும் ஒரு 'பாதுகாப்பு வாய்ப்பு' என்ற அளவிலே இப்படி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். மத்திய அரசு அனுமதி தரும், தரவில்லை என்பதல்ல பிரச்சினை. எல்லாச் சட்டங்களிலும் இப்படி இருக்க வேண்டும் என்ற நியதி இருக்கிறது. அனுபவம் வாய்ந்தவர்கள் அதைச் செய்கிறார்கள். எனவே Immunity Clause இருக்கிறது. எனவே, இந்தத் திருத்தத்தை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்தத்தை திரும்பப் பெறுகிறாரா, வற்புறுத்துகிறாரா?



THIRU K. RAMAMURTHY: I withdraw my amendment.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 8, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 9.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தம் பெயரில் உள்ள திருத்தத்தை முன்மொழிவார்.

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னுடைய பெயரில் இருக்கும் கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:—

"In clause 9, in line 3 *delete* the word 'or' and in line 4, *delete* the words 'or with both'"

THIRU K. RAMAMOORTHY: I second it.

திரு. ஆ. நல்லசிவன்: இந்தப் பிரிவிலே அபராதம் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அபராதம் 1000 ரூபாய் அல்லது 3 மாதம் சிறைத் தண்டனை என்று இருக்கிறது. 10 ஆயிரம் ரூபாய் ஒரு தொழிலதிபர் கொடுக்க வேண்டும் என்றால் அவர் கொடுக்காமல் 1000 ரூபாய் அபராதம் கட்டிவிட்டுப் போய்விடுகிறார். ஆகவே, சிறைத் தண்டனையும் கட்டாயம் என்று ஆக்க வேண்டும். அதற்குத்தான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை ஏற்க வேண்டும்.

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது இரண்டும் என்று இருப்பதை மாற்றி அபராதமும், சிறைத் தண்டனையும் என்று இருக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். இதுபோல Industrial Disputes Act -க்கு இந்த அரசு திருத்தம் கொண்டு வந்து 10-பி என்ற புது Clause introduce செய்து அதை மீறுபவர்களுக்குச் சிறைத் தண்டனை என்று கொண்டு வந்தோம். அப்போது, சட்டத்தை மீறுபவர்கள் இரு சாராரும் இருப்பார்கள். இது தொழிலாளர்களைப் பாதிக்கும், இது கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்தச் சட்டத்தை பின்வாங்கியிருக்கிறோம். இப்போது மறு பரிசீலனை செய்கிறோம். ஆகவே, அன்றைக்கு என்ன சொன்னார்களோ அது இன்றைக்கும் பொருந்தும். That argument will hold good now also. சிறைத் தண்டனை என்று

சொன்னால், இதை மீறுபவர்கள் துர்ப்பாக்கியவசமாகத் தொழிலாளர்களாக இருந்தால், அவர்கள் கம்பி எண்ண வேண்டியிருக்கிறது. அது கூடாது என்பதால்தான் இப்படி கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய திருத்தத்தை வற்புறுத்துகிறாரா? திரும்பப் பெறுகிறாரா?

திரு. ஆ. நல்லசிவன்: நான் திருத்தத்தை வற்புறுத்துகிறேன். சமுதாயத்திலே தொழிலாளர்கள் என்று சொன்னாலே அவர்கள் Weaker section தான். இரு சாராரையும் ஒரே தராசில் வைத்துப் பார்க்கக்கூடாது. விவகாரம் என்று வரும்போது, இரு சாராரும் ஒன்று என்று சொல்லுவது எப்படிப் பொருந்தும்? ஆகவே, என் திருத்தத்தை நான் வற்புறுத்துகிறேன்.

* மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு disparaging remark பாஸ்' பண்ணி இருக்கிறார்கள். அதற்கு நான் பதில் சொல்லியாக வேண்டும். எங்களைப் பொறுத்த வரையில், தொழிலாளர்களை காப்பாற்ற வேண்டும் என்பதிலே நாங்கள் அக்கறை கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் முதலாளிகள் அத்தனை பேரையும் கெட்டவர்கள் என்று பார்ப்பதற்கும் தயாராக இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"In clause 9, in line 3 *delete* the word 'or' and in line 4, *delete* the words 'or with both'."

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 9. அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 10.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு. இராமமூர்த்தி அவர்கள் தம் பெயரில் உள்ள திருத்தத்தை முன்மொழிவார்கள்.

* திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, நான் முன்னறிவிப்புக் கொடுத்த திருத்தத்தின் நோக்கம் இப்போது நிறைவேறியிருக்கிறது. ஆகவே, தங்களின் அனுமதியோடு, நான் என்னுடைய திருத்தத்தை முன்மொழியாமல் விடுகிறேன்.

பிரிவுகள் 10 முதல் 13 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1981) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்படுகிறது.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-50)

6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

212. Notification issued with G.O. Ms. No. 1016, Housing and urban Development, dated the 11th August 1980 in regard to appointment of Thiru K. Ethiraj (Ex-M.L.A.), as non-official member of the Tamil Nadu Slum Clearance Board for a period of one year with effect from the date of this order. [Laid on the table of the House under section 72(2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act II of 1971)].

213. Notification issued with G.O. Ms. No. 1385, Housing and Urban Development, dated the 22nd October 1980 in regard to certain variations to the Nungambakkam Central Area Town Planning Scheme of Madras City sanctioned in G.O. Ms. No. 384, Public Health, dated the 9th February 1944 and published as late Education and Public Health Department No. 142, at page 91 of Part I-A of the *Tamil Nadu Government Gazette*, dated the 4th April 1944. (Tamil & English). [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

**B.** *Reports, Notifications and Other Papers.*

**Nil**

# INDEX TO TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

## FIFTY-NINTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA

VOLUME—CLXXV (Nos. 1 to 6).

*2nd, 5th to 7th, 9th and 10th March* 1981.

## A

PAGES

ADJOURNMENT MOTION—

Taking up of—given notice of by Meenakshisundaram, Thiru K. ... ... ... ... 118

ADJOURNMENT MOTION *re*—

D. M. K. Prisoners in Tiruchirappalli Jail, non-supply of sufficient water and food to ... 397—403

Death of 15 members of marriage party of Pandamangalam in boat tragedy in Salem district ... 513—515

Dr. Ambedkar Arts College, Vyasarpadi, agitation by students of—to press their demands ... ... 314—318

Fast of workers in S. S. M. Processing Unit, Kumarapalayam, Salem district ... 393—395

Spread of Polio disease in Madras City ... 229—233

ADVERSE SEASONAL CONDITIONS—

Statement on—prevailing in Tamil Nadu, discussion on ... ... ... ... ... 125—191

Statement on—prevailing in Tamil Nadu, laid on the table ... ... ... ... 192

AGRICULTURAL PRODUCE MARKETS (AMENDMENT) BILL, 1981—

*See* Bills

A—*cont*.

PAGES

ANANDAM, Thiru V. V. V.—

Resolution *re* Silver Jubilee at the end of 25th year of formation of Tamil Nadu as a separate State, celebration of ... ... ... ... 353

Statement on Adverse Seasonal conditions prevailing in Tamil Nadu, discussion on ... ... 151—153

ANNA ENGINEERING CORPORATION LIMITED—

Fifth Annual Report of—for 1979, laid on the table ... ... ... ... ... ... 192

APARTMENT OWNERSHIP BILL, 1981—

*See* Bills

ARANGANAYAGAM, THE HON. THIRU C.—

Adjournment motion *re* Dr. Ambedkar Arts College, Vyasarpadi, agitation by students of—to press their demands ... ... 316—318

Bharat Scouts Organisation, statement *re* shifting of—from Wenlock Park in Madras South Beach Road ... 324—325

Eighth Standard: statement *re* hardship caused to Middle School teachers by shifting of—from Middle Schools to High Schools as per the steps taken by the Director of School Education ... 119—120, 121, 122, 123

Hardship of students who failed in S. S. L. C. Examination held in October 1980 under XI year School Education Scheme in completing the course and prosecuting their further studies, statement *re* ... ... ... ... ... ... 18—20

Resolution *re*— ... ... ... ...

Elections to Legislative Council, voting rights to Primary School teachers in ... 374, 375

Schools and Colleges run by local bodies and private managements, taking over of—by Government ... ... ... ... 337—344



PAGES

*A—cont.*

ARANGANAYAGAM, The Hon. Thiru C.—*cont.*

T. Nagar Higher Secondary School, T. Nagar, statement *re* teachers' agitation condemning removal of a teacher, Thiru P. T. Arasu in ... ... 320, 321, 322, 323

ARUMUGAM, Thiru S.—

Adjournment motion *re*—

Death of 15 members of marriage party in Pandamangalam in boat tragedy in Salem district ... 513—514

Fast of workers in S. S. M. Processing Unit, Kumarapalayam, Salem district ... ... 393—394

Bills—

Cattle Disease (Amendment) Bill, 1981 ... ... 282—283, 284

Cultivating Tenants Arrears of Rent (Relief) Amendment Bill, 1981 ... ... ... 515, 532—533

Panchayats (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... ... 440, 450—456, 459, 461, 463

Information *re* Adjournment motion given notice of, taking up of ... ... ... ... 318, 319

Statement on Adverse Seasonal conditions prevailing in Tamil Nadu, discussion on ... ... ... 153—157, 157—160, 180, 183

ARUNACHALAM, Thiru K.—

Statement on Adverse Seasonal conditions prevailing in Tamil Nadu, discussion on ... ... 164—167

PAGES

B

BACKWARD CLASS—
Question *re* grant of—concessions to converts to Christianity ... ... ... ... ... 385—387

BHARAT SCOUTS ORGANISATION—
Minister's attention called to shifting of—from Wenlock Park in Madras South Beach Road ... 324—325

BILLS—
Agricultural Produce Markets (Amendment) Bill, 1981—
Considered and passed ... ... ... ... 33—40
Message from the Assembly *re* ... ... 17—18
Apartment Ownership Bill, 1981—
Message from the Assembly *re* ... ... 395—396
Reference to Joint Select Committee ... ... 425—426
Cattle Disease (Amendment) Bill, 1981—
Considered and passed ... ... ... 281—289
Message from the Assembly *re* ... ... ... 233
Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Amendment Bill, 1981—
Considered and passed ... ... ... 471—472
Message from the Assembly *re* ... ... ... 397
Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Bill, 1981—
Considered and passed ... ... ... 23—33
Message from the Assembly *re* ... ... 17—18
Cultivating Tenants Arrears of Rent (Relief) Amendment Bill, 1981—
Considered and passed ... ... ... 524—537
Message from the Assembly *re* ... ... 515
Cyclone and Flood Affected Areas Cultivating Tenants Arrears of Rent (Relief) Amendment Bill, 1981—
Considered and passed ... ... ... ... 537—538
Message from the Assembly *re* ... ... ... 515
Entertainments Tax (Amendment) Bill, 1981—
Considered and returned to Assembly ... 519—524
Message from the Assembly ... ... ... 515



PAGES

*B—cont.*

BILLS—*cont.*
Madras City Municipal Corporation (Amendment) Bill, 1981—
Considered and passed ... ... ... ... 472—475
Message from the Assembly *re* ... ... ... 397
Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1981—
Considered and passed ... ... ... 469—470
Message from the Assembly *re* ... ... 397
Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1981—
Considered and passed ... ... ... 464—467
Message from the Assembly *re* ... ... ... 397
Panchayats (Amendment) Bill, 1981—
Considered and passed ... ... ... 467—469
Message from the Assembly *re* ... ... 397
Panchayats (Appointment of Special Officers) Amendment Bill, 1981—
Considered and passed ... ... ... ... 427—464
Message from the Assembly *re* ... ... 396
Payment of Subsistence Allowance Bill, 1981—
Considered and passed ... ... ... 538—557
Message from the Assembly *re* ... ... 515
Registration (Tamil Nadu Amendment) Bill, 1981—
Considered and passed ... ... ... 249—281
Message from the Assembly *re* ... ... 233
Revenue Recovery (Amendment) Bill, 1981—
Considered and passed ... ... ... 239—249
Message from the Assembly *re* ... ... 233
Sales Tax Laws (Amendment) and Repeal Bill, 1981—
Considered and returned to Assembly ... 60—76

PAGES

*B—cont.*

BILLS—*cont.*

State Housing Board (Amendment) Bill, 1981—
Considered and passed ... ... ... 412—425
Message from the Assembly *re* ... ... ... 233
Tax on Luxuries in Hotels and Lodging Houses Bill, 1981—
Considered and passed ... ... ... ... 41—59

BILLS, AS PASSED BY THE ASSEMBLY, LAID ON THE TABLE—
Abolition of Post of Part-time Village Officers Bill, 1981 ... ... ... ... ... ... 77
Agricultural Produce Markets (Amendment) Bill, 1981 ... ... ... ... ... 77
Cattle Disease (Amendment) Bill, 1981 ... 192
Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Amendment Bill, 1981 ... 378
Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... ... 77
Cultivating Tenants Arrears of Rent (Relief) Amendment Bill, 1981 ... ... ... 476
Cyclone and Flood Affected Areas Cultivating Tenants Arrears of Rent (Relief) Amendment Bill, 1981 ... 476
Entertainments Tax (Amendment) Bill, 1981 ... 476
Madras City Municipal Corporation (Amendment) Bill, 1981 ... ... ... ... 378
Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... ... 478
Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... 377
Panchayats (Amendment) Bill, 1981 ... ... 378
Panchayats (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... ... 377
Payment of Subsistence Allowance Bill, 1981 ... 476
Registration (Tamil Nadu Amendment) Bill, 1981 ... 192
Revenue Recovery (Amendment) Bill, 1981 ... 192
State Housing Board (Amendment) Bill, 1981 ... 192



PAGES

*B—cont.*

BOAT TRAGEDY—
Adjournment motion *re* death of 15 members of marriage party of Pandamangalam in—in Salem district ... ... ... ... ... ... 513—515

BUILDINGS—
Question *re* Kandasamy Committee on fixation of rent for Housing Board and Government Quarters, date of receipt of report and orders issued thereon...493—495

BUSINESS OF THE HOUSE—
Change in the order of ... ... ... ... 22, 238

C

CASUAL LABOURERS—
Question *re* non-absorption of—of Public Works Department with more than ten years' service in regular service till 31st July 1980 ... ... 11—12

CATTLE—
Question *re* number of—treated in Artificial Insemination Centres from 1977 to 1980 ... ... 392

CATTLE DISEASE (AMENDMENT) BILL, 1981—
*See* Bills

CHAIRMAN, Mr.—
Adjournment motion, taking up of—given notice of by Meenakshisundaram, Thiru K. ... ... 118
Adjournment motion re—
D.M.K. Prisoners in Tiruchirappalli Jail, non-supply of sufficient water and food to ... ... 397,401, 403
Death of 15 members of marriage party of Pandamangalam in boat tragedy in Salem district ... 513, 515
Dr. Ambedkar Arts Colleges, Vyasarpadi, agitation by students of—to press their demands ... 314, 318
Fast of workers in S.S.M. Processing Unit, Kumarapalayam, Salem district ... ... 393, 395
Spread of Polio disease in Madras City ... ... 229, 233

PAGES

C—*cont.*

CHAIRMAN, Mr.—*cont.*

Announcement re—

Arrest and remand of Seethapathy, Thiru R.D., M.L.C. ... ... ... ... ... 397

Message from Assembly *re*—

Agricultural Produce Markets (Amendment) Bill, 1981 ... ... ... ... .. ... 17—18

Apartment Ownership Bill, 1981 ... ... 395—396

Cattle Disease (Amendment) Bill, 1981 ... 233

Coimbatore Municipal Council (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... 397

Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... 17—18

Cultivating Tenants Arrears of Rent (Relief) Amendment Bill, 1981 ... ... ... 515

Cyclone and Flood Affected Area Cultivating Tenants Arrears of Rent (Relief) Amendment Bill, 1981 ... ... ... ... ... 515

Entertainments Tax (Amendment) Bill, 1981 ... 515

Madras City Municipal Corporation (Amendment) Bill, 1981 ... ... ... ... 397

Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... 397

Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... 397

Panchayats (Amendment) Bill, 1981 ... ... 397

Panchayats (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... ... 397

Payment of Subsistence Allowance Bill, 1981 ... 515

Registration (Tamil Nadu Amendment) Bill, 1981... 233

Revenue Recovery (Amendment) Bill, 1981 ... 233

State Housing Board (Amendment) Bill, 1981 ... 233



PAGES

C—*cont.*

CHAIRMAN, Mr.—*cont.*

Bills—

Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... 23, 32, 33

Panchayats (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... ... 427, 441, 442, 443, 445, 448, 449, 453

Payment of Subistence Allowance Bill, 1981 ... 541, 547, 549, 551, 554, 555, 556

State Housing Board (Amendment) Bill, 1981 ... 417

Information *re*—

Adjournment motion given notice of, taking up of ... 318, 319

Non-attendance of an elected Member in the House since his election ... ... ... 16—17

Questions, delay in respect of Answers ... ... 319, 320

Obituary Reference *re* death of Sengottu Velappan, Thiru S.C., former Member of the Council ... 101

Privilege issue *re* Orders, dated 31st January 1981 of Superintendent of Police, Special Branch C.I.D., directing his subordinates to watch the proceedings of both Houses of Legislature and submit reports 116—117, 118

Resolution *re*—

Elections to Legislative Council, voting rights of Primary School Teachers in ... ... ... 358, 361

Schools and Colleges run by local bodies and private managements, taking over of—by Government ... ... 325, 349, 350, 351, 353

Statement on Adverse Seasonal conditions prevailing in Tamil Nadu, discussion on ... 125, 129, 144, 146, 147, 148

PAGES

C—cont.

CHERAN ENGINEERING CORPORATION LIMITED—

Seventh Annual Report of—for 1980, laid on the table ... ... ... ... ... 77

CHRISTIANITY—

Question *re* Converts to—, grant of backward class concessions to ... ... ... ... 385—387

CHROME LEATHER COMPANY, CHROMEPET—

Question *re* opening of—and taking over of—by Government ... ... ... ... 310—314

CITY COMPENSATORY ALLOWANCE—

Question *re* stoppage of payment of House Rent Allowance and—to teachers of Tiruppuvanam Panchayat Union Schools ... ... 381—382

COIMBATORE MUNICIPAL COUNCIL (APPOINTMENT OF SPECIAL OFFICER) AMENDMENT BILL, 1981—

*See* Bills

COLACHAL BOAT CLUBS—

Question *re* number of persons retrenched from—in Kanyakumari district. as on 1st October 1980 among those employed under Half-a-Million Job Scheme 227—229

COLLEGE(S)—

Adjournment motion *re* Dr. Ambedkar Arts College, Vyasarpadi, agitation by students of—to press their demands ... ... ... 314—318

Resolution *re* taking over of—and Schools run by local bodies and private—managements by Government. ... ... ... 325—353

COMMERCIAL TAXES DEPARTMENT—

Question *re* appearance of retired officers of—on behalf of assessees before Assessing Officers and Appellate Authorities of ... ... 111—112



PAGES

*C—cont.*

COMMITTEES—

Question *re* Kandaswamy Committee on fixation of rent for Housing Board and Government Quarters, date of receipt of report and orders issued thereon. ... ... ... ... 493—495

CO-OPERATIVE SOCIETIES (APPOINTMENT OF SPECIAL OFFICERS) AMENDMENT BILL, 1981—

*See* Bills

CO-OPERATIVE SOCIETIES RULES, 1963—

Amendments to—, notification laid on the table ... 289

CRIMINAL CASES—

Question *re* adjournment of—pending in Magistrates' Courts consequent on drafting of Reserve Police Escorts for other duties ... ... ... 113—115

CULTIVATING TENANTS ARREARS OF RENT (RELIEF) AMENDMENT BILL, 1981—

*See* Bills

CYCLONE—

Question *re* extent of damage to coconut and plantain groves and number of schools whose roofs were blown off by—in Kanniyakumari District during May 1979 ... ... ... ... 110—111

CYCLONE AND FLOOD AFFECTED AREA CULTIVATING TENANTS ARREARS OF RENT (RELIFE) AMENDMENT BILL, 1981—

*See* Bills

D

DAMODARAN, THIRU A. R.—

Bill(s)—

Cattle Disease (Amendment) Bill, 1931 ... 286

Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... 24—26

PAGES

D—*cont*.

DAMODARAN, Thiru A. R.—*cont*.

Bills, 1981—*cont*. ... ... ... ... 45—49

Registration (Tamil Nadu Amendment) Bill, 1981 ... ... ... ... 255—258, 276, 278—280

Sales Tax Laws (Amendment and Repeal) Bill, 1981 ... ... ... ... 63, 67, 68—72

Tax on Luxuries in Hotels and Lodging Houses Bill, 1981 ... ... ... 45—49

DEPUTY CHAIRMAN, Mr.—

Bill(s)—

Cattle Disease (Amendment) Bill, 1981 ... 284—285, 288, 289

Cultivating Tenants Arrears of Rent (Relief) Amendment Bill, 1981 ... ... ... 526

Revenue Recovery (Amendment) Bill, 1981 ... 246, 247, 248, 249

Sales Tax Laws (Amendment and Repeal) Bill, 1981 ... ... ... ... 60, 76, 77

Tax on Luxuries in Hotels and Lodging Houses Bill, 1981 ... ... ... ... 41, 55, 56, 59, 60

Resolution *re* elections to Legislative Council, voting rights of Primary School Teachers in ... ... 376

Statement on Adverse Seasonal conditions prevailing in Tamil Nadu, discussion on ... ... 180—191

DEPUTY TAHSILDARS—

Question *re* non-sanction of additional posts of—to Taluk Offices in Kanniyakumari District ... 102—103



PAGES

E

EDUCATION BOARD—

Question *re* constitution of ... ... ... 303—306

ELECTIONS—

Question *re* Local Body elections, Election Commission's recommendation to entrust conduct of—to it. ... ... ... ... ... ... 496—498

ELECTRICITY—

Statement under Rule 82 of Council Rules *re* Power Consumption, regulation in respect of certain H. T. Industries. ... ... ... 410—412

ENTERTAINMENTS TAX (AMENDMENT) BILL, 1981—

*See* Bills

ERADHA, THIRU S. R.—

Bill(s)—

Cultivating Tenants Arrears of Rent (Relief) Amendment Bill, 1981 ... ... 527—530

Tax on Luxuries in Hotels and Lodging Houses Bill, 1981 ... ... ... ... 50—52, 53, 54. 55, 56

Resolution *re*—

Elections to Legislative Council, voting rights of Primary School Teachers in ... ... 366—377

EXAMINATIONS—

Hardship of students who failed in S. S. L. C. Examination held in October 1980 under XI-year School Education Scheme in completing the course and prosecuting their further studies, Minister's attention called to ... ... ... 18—20

EXPENSIVE LOCALITY ALLOWANCE—

Minister's attention called to stoppage of—to Government servants and teachers in Mandapam Camp and Rameswaram ... ... ... 407—410

E—*cont.*

EXPLOSION—

Question *re* explosion in Batlagundu during August 1980, number dead and assistance given to families of deceased ... ... ... 102

F

FAMILY PLANNING—

Question *re* grant of incentive increments to teachers of Panchayat Unions who have undergone sterlization, Tubectomy Operations ... ... ... 4—7

FISHING—

Question *re* Chinese-Trawlers, sighting of — near Tuticorin Sea-shore ... ... ... 383—385

FOOD—

Paddy and rice, reported shortage of—from godowns of Chengalpattu district, Minister's attention called to ... ... ... ... 404—406

G

GOMATHI SRINIVASAN, THE HON. THIRUMATHI.—

Bill—Cattle Disase (Amendment) Bill, 1981 ... 281, 283—284, 286, 287—288

GOVERNMENT SERVANTS—

Question *re*—

Motor Car Allowance to—who go on official tours in their own motor cars, rate of ... ... 225—226

Payment of Rs. 10,000 to retiring Government servants, stage of scheme ... ... 224—225

H

HANDE, THE HON. Dr. H. V.—

Adjournment motion *re* spread of Polio disease in Madras City ... ... ... ... 203—233



H—*cont.*

HANDE, The Hon. Dr. H. V.—

Statement on adverse seasonal conditions prevailing in Tamil Nadu, discussion on ... ... ... 129, 156 157

Statement *re* mosquito nuisance in Cuddalore, South Arcot district ... ... ... 516, 517—518

Teaching and non-teaching staff under suspension in schools, statement *re* non-payment of subsistence allowance to ... ... ... ... ... 234, 235 236—238

HEADMASTERS—

*See* Teachers

HEALTH—

Question *re* bifurcation of Medical and—Departments in Revenue districts and appointment of Experts ... ... ... ... 7—11

HOSPITAL(S) AND DISPENSARIES—

Question *re* Taluk Headquarters Hospitals in South Arcot district, number of out-patients treated from January 1978 to March 1979 in ... ... 390

HOUSE RENT ALLOWANCE—

Question *re* stoppage of payment of—and City Compensatory Allowance to teachers of Tiruppuvanam Panchayat Union Schools ... 381—382

HOUSE TAX—

Question *re* assessment of—in Tindivanam Municipality, estimated loss of revenue due to delay in ... ... ... ... ... 222—223

I

INDUSTRIES—

Question *re* Big and Small—in Tamil Nadu affected due to shortage of raw materials such as iron and steel from 1st January 1979 to 15th June 1980, for want of coal, number of ... ... ... ... 505—512

PAGES

I—*cont.*


INFORMATION *re*—
- Adjournment motion given notice of, taking up of ... 318—319
- Non-attendance of an elected Member in the House since his election ... ... ... ... 16—17
- Questions, delay in receipt of answers ... ... 319—320

INSEMINATION CENTRES—
- Question *re* cattle treated in Artificial—from 1977 to 1980, number of ... ... ... ... 392

INTER-CASTE MARRIAGE—
- Question *re* couples of—between 1-1-1967 and 15-6-1980 granted gold medals, destrictwise number of ... ... ... ... ... ... 391—392

IRRIGATION—
- Question *re* construction of—channel from Vaigai river connecting Viraganur and Nedungulam villages ... ... ... ... ... ... 505


J


JANARTHANAM, Dr. T. R.—
- Bills—
  - Payment of Subsistence Allowance Bill, 1981 ... 541
  - Registration (Tamil Nadu Amendment) Bill, 1981 252—254, 262
  - State Housing Board (Amendment) Bill, 1981 ... 414—415, 416
- Statement on adverse seasonal conditions prevailing in Tamil Nadu, discussion on ... ... 147, 157


K


KALIMUTHU, The Hon. Thiru K.—
- Bill—Agricultural Produce Markets (Amendment) Bill, 1981 ... ... ... ... ... 33—34, 36—40
- Tamil Nadu Agricultural staff, statement *re* agitation by ... ... ... ... 21, 22




PAGES

K—*cont.*


KOLANDAIVELU, The Hon. Thiru P.—
- Bills—
  - Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Amendment Bill, 1981 ... 471, 472
  - Madras City Municipal Corporation (Amendment) Bill, 1981 ... ... ... ... 472, 473, 475
  - Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... 469, 470
  - Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... 464, 466, 467
  - Panchayats (Amendment) Bill, 1981 ... ... 467
  - Panchayats (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... ... 427, 456—463

KRISHNASWAMY, The Hon. Thiru K. A.—
- Bill—Registration (Tamil Nadu Amendment) Bill, 1981 ... ... ... ... ... .. 249, 267—271, 272—275, 280—281


L


LAKSHMIKANDHAN, Thiru C. R.—
- Adjournment motion *re* Dr. Ambedkar Arts College, Vysarpadi, agitation by students of—to press their demands ... ... ... ... ... ... 314—315
- Bharat Scouts Organisation, calling Minister's attention to shifting of—from Wenlock Park in Madras South Beach Road ... ... 324, 325
- Bills—
  - Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... 26—27
  - Panchayats (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... ... ... 443—446

PAGES

L—*cont.*

LAKSHMIKANDHAN, Thiru C. R.—*cont.*

Eighth Standard, calling Minister's attention to hardship caused to Middle School teachers by shifting of—from Middle Schools to High Schools as per the steps taken by the Director of School Education ... ... 118—119, 123

Expensive Locality Allowance, calling Minister's attention to stoppage of—to Government servants and teachers in Mandapam Camp and Rameswaram 408—409

Hardship of students who failed in S.S.L.C. Examination held in October 1980 under XI Year School Education Scheme in completing the course and prosecuting their further studies, calling Minister's attention to ... ... ... ... ... 19

Information *re* questions, delay in respect of answers 319

Mosquito nuisance, calling Minister's attention to ... 516, 517

Protected drinking water, calling Minister's attention to scarcity of—in Vellore, North Arcot district ... 123, 124, 125

Resolution *re* Schools and Colleges run by local bodies and private managements, taking over of—by Government ... ... ... ... 344—353

Statement on Adverse seasonal conditions prevailing in Tamil Nadu, discussion on ... ... ... 160—164

T. Nager Higher Secondary School, Madras, calling Minister's attention to teachers' agitation condemning removal of a teacher, Thiru P. T. Arasu in 323—324

Teaching and non-teaching staff under suspension in schools, calling Minister's attention to non-payment of subsistence allowance to ... ... ... 235, 236

LEELAVATHI, Selvi A.—

Expensive Locality Allowance, calling Minister's attention to stoppage of—to Government servants and teachers in Mandapam Camp and Rameswaram ... ... ... ... ... 409



PAGES

L—*cont.*

LEELAVATHI, Selvi A.—*cont.*

Hardship of students who failed in S.S.L.C. Examination held in October 1980 under XI Year School Education Scheme in completing the course, and prosecuting their further studies, calling Minister's attention to ... ... ... ... 20

Resolution *re* Elections to Legislative Council, voting rights of Primary School Teachers in ... ... 358

T. Nagar Higher Secondary School, Madras, calling Minister's attention to teachers' agitation condemning removal of a teacher Thiru P. T. Arasu in ... 322

Teaching and non-teaching staff under suspension in schools, calling Minister's attention to non-payment of subsistence allowance to ... ... ... 237

LEGISLATURE—

Privilege issue *re* Orders, dated 31st January 1981 of Superintendent of Police, Special Branch, C.I.D., directing his subordinates to watch the proceedings of both Houses of Legislature and submit reports 115—117

LOANS AND ADVANCES—

Question *re* Education advance, non-availability of—concession provided for in G.O. Ms. No. 1954, Rural Development and Local Administration Department, dated 13th December 1979 and G.O. Ms. No. 821, Finance (Salaries) Department, dated 13th June 1979 to Panchayat Union Teachers ... ... ... ... ... ... 3—4

M

MADRAS CITY MUNICIPAL CORPORATION (AMENDMENT) BILL, 1981—

*See* **Bills**

MADRAS ZOO—

Question *re* proper care of Wild animals in ... 500—502

PAGES

M—*cont.*

MAGISTERIAL HEAD ASSISTANT—

Question *re* upgradation of post of—in Collectorate of Kanniyakumari district to the cadre of Deputy Tahsildar as in other districts ... ... 498—499

MANDAKINI KRISHNAMOORTHI, Thirumathi—

Bill(s)—

Registration (Tamil Nadu Amendment) Bill, 1981 ... ... ... ... 255

State Housing Board (Amendment) Bill, 1981 ... 414

MANICKAM, THIRU P.—

Bills—

Sales Tax Laws (Amendment and Repeal) Bill, 1981 ... ... ... 63

Tax on Luxuries in Hotels and Lodging Houses Bill, 1981 ... ... ... ... ... 53

Resolution *re* Silver Jubilee at the end of 25th year of formation of Tamil Nadu as a separate State, celebration of ... ... ... ... ... 353—356, 357

Statement on Adverse Seasonal Conditions prevailing in Tamil Nadu, discussion on ... ... 353—356, 177

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—

Bharat Scouts Organisation, calling attention to shifting of—from Wenlock Park in Madras South Beach Road ... ... ... 324—325

Eight Standard, calling attention to hardship caused to Middle School teachers by shifting of—from Middle Schools to High Schools as per the steps taken by the Director of School Education ... ... 118—123



PAGES

M—*cont.*

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—*cont.*

Expensive Locality Allowance, calling attention to stoppage of—to Government servants and teachers in Mandapam camp and Rameswaram ... ... 407—410

Hardship of students who failed in S. S. L. C. Examination held in October 1980 under XI Year School Education Scheme in completing the course and prosecuting their further studies, calling attention to ... ... ... ... ... 18—20

Mosquite nuisance in Cuddalore, South Arcot District calling attention to ... ... ... ... 516—518

Paddy and rice, calling attention to reported shortage of—from godowns of Chengalpattu district .... 404—406

Protected drinking water, calling attention to scarcity of—in Vellore, North Arcot district ... ... 123—125

Tamil Nadu Agricultural staff, calling attention to agitation by ... ... ... 20—22

T. Nagar Higher Secondary School, Madras, calling attention to teachers' agitation condemning removal of a teacher, Thiru P. T. Arasu in ... ... 320—323

Teaching and non-teaching staff under suspension in school, calling attention to non-payment of subsistence allowance to ... ... ... 234—238

Withering of crops in lands situated in tail end of Channels like Thovalai Channel, N. N. Channel due to non-flow of water as a result of low level of water in the reservoirs of Kanyakumari district, calling attention to ... ... ... ... ... 518—519

MEDICAL—

Question *re* bifurcation of—and Health Departments in Revenue districts and appointment of experts ... 7—11

PAGES

M—*cont.*

MEENAKSHISUNDARAM, Thiru K.—
Adjournment motion *re*—
Dr. Ambedkar Arts College, Vyasarpadi, agitation by students of—to press their demands ... 315
Spread of Polio disease in Madras City ... 229—230
Bills—
Panchayats (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... ... 446—450
Eighth standard, calling Minister's attention to hardship caused to Middle School Teachers by shifting of—from Middle Schools to High Schools as per the steps taken by the Director of School Education ... ... ... ... 119—120, 122
Expensive Locality Allowance. calling Minister's attention to stoppage of—to Government servants and teachers in Mandapam Camp and Rameswaram ... ... 410
Resolution *re* elections to Legislative Council, voting rights of Primary School Teacher in ... ... 358—366, 368, 369, 370, 372, 374, 375, 376
Statement on Adverse Seasonal conditions prevailing in Tamil Nadu, discussion on ... ... 167—169
T. Nagar Higher Secondary School, Madras, calling Minister's attention to teachers' agitation condemning removal of a teacher, Thiru P. T. Arasu in 320, 321
Tamil Nadu Agricultural staff, calling Minister's attention to agitation by ... ... ... 20—21
Walk out by ... ... ... 474
MESSAGE FROM THE ASSEMBLY—
*See* Bills
MIAKHAN, Thiru J. M.—
Bill—Registration (Tamil Nadu Amendment) Bill, 1981 ... ... ... 254



PAGES

M—*cont.*

MOSQUITO NUISANCE—
Minister's attention called to—in Cuddalore, South Arcot district ... ... ... ... 516—518
MOTOR CAR ALLOWANCE—
Question *re* rate of—to Government servants who go on official tours in their own motor cars ... 225—220
MUNICIPAL COUNCILS (APPOINTMENT OF SPECIAL OFFICERS) AMENDMENT BILL, 1981—
*See* Bills
MUNICIPAL OFFICE, SALEM—
Question *re* theft and sale of files in ... ... 502—504

N

NALLASIVAN, Thiru A.—
Bills—
Cattle Disease (Amendment) Bill, 1981 ... 282
Cultivating Tenants Arrears of Rent (Relief) Amendment Bill, 1981 ... 529—532
Payment of Subsistence Allowance Bill, 1981 ... 540—541, 545—546, 548, 549, 550, 557, 552, 553, 555, 556
Registration (Tamil Nadu Amendment) Bill, 1981 ... ... ... 258—259
Revenue Recovery (Amendment) Bill, 1981 ... 241—242
Statement on Adverse Seasonal conditions Prevailing in Tamil Nadu, discussion on ... ...137—143
NEDUNCHEZHIYAN, THE HON. Dr.—
Expensive Locality Allowance, statement *re* stoppage of—to Government servants and teachers in Mandapam camp and Rameswaram ... ... 407—410

PAGES

N—*cont*.

NEDUNCHEZHIYAN, The Hon. Dr.—*cont*

Paddy and rice, statement *re* reported shortage of—from godowns of Chengalpattu district ... 404, 405, 406

NEELANARAYANAN, Thiru—

Bill—Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... 27—29

O

OBITUARY REFERENCE *re*—

Death of Sengottu Velappan, Thiru S. C., former Member of the Council ... ... 101

P

PANCHAYAT UNION COUNCILS (APPOINTMENT OF SPECIAL OFFICERS) AMENDMENT BILL, 1981—

*See* Bills

PANCHAYATS (AMENDMENT) BILL, 1981—

*See* Bills

PANCHAYATS (APPOINTMENT OF SPECIAL OFFICERS) AMENDMENT BILL, 1981—

*See* Bills

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—

Anna Engineering Corporation Limited—

Fifth Annual Report for 1979 ... ... 192

Seventh Annual Report of—for 1979 ... ... 192

Bills, as passed by the Assembly—

Abolition of Posts of Part—time Village Officers Bill, 1981 ... ... ... ... 17

Agricultural Produce Markets (Amendment) Bill, 1981 ... ... ... ... 77

Cattle Disease (Amendment) Bill, 1981 ... 192



PAGES

P—*cont*.

Bill, as passed by the Assembly—*cont*.

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont*.

Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Amendment Bill, 1981 ... ... 373

Co—operative Societies (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... ... 77

Cultivating Tenants Arrears of Rent (Relief) Amendment Bill, 1981 ... ... ... 476

Cyclone and Flood Affected Areas Cultivating Tenants Arrears of Rent (Relief) Amendment Bill, 1981 ... ... ... ... ... 476

Entertainments Tax (Amendment) Bill, 1981 ... 476

Madras City Municipal Corporation (Amendment) Bill, 1981 ... ... ... 378

Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... 378

Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... 377

Panchayats (Amendment) Bill, 1981 ... 378

Panchayats (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... 377

Payment of Subsistence allowance Bill, 1981 ... 476

Registration (Tamil Nadu Amendment) Bill, 1981 ... ... ... 192

Revenue Recovery (Amendment) Bill, 1981 ... 192

State Housing Board (Amendment) Bill, 1981 ... 192

Cheran Engineering Corporation Limited—

Seventh Annual Report of—for 1980 ... 77

Co—operative Societies Rules, 1963, amendments to—(G.O. Ms. No. 648 Food and Co—operation, dated 1st December 1980) ... ... 289

Quetions and Answars, Unstarred questions Nos. 9 to 12, answers to ... ... ... ... ... 476

Slum Clearance Board, appointment of Thiru K. Ethiraj (Ex—M.L.A.) as non—official member of—(G.O. Ms. No. 1016, Housing & Urban Development, dated 11th August 1980) ... 557

PAGES

P—*cont*.

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont*.

Statement on Adverse Seasonal Conditions prevailing in Tamil Nadu ... ... ... 192

Tax on Luxuries in Hotels and Lodging Houses Rules, 1980, amendment to—(G.O. Ms. No. 32, Commercial Taxes and Religious Endowments, dated 7th January 1981) ... ... 289

Town and Country Planning Act, 1981—

Certain variations to Nungambakkam Central Area Town Planning Scheme of Madras City (G.O. Ms. No. 1385, Housing and Urban Development, dated 22nd October 1980) ... ... 558

Transport—

Kattabomman Transport Corporation Limited, Fifth Annual Report for 1979 ... ... 192

Tamil Nadu Goods Transport Corporation Limited, Third Annual Report for 1978 ... 192

Thanthai Periyar Transport Corporation Limited, Fourth Annual Report for 1979 ... 192

PAYMENT OF SUBSISTENCE ALLOWANCE BILL, 1981—

*See* Bills

POLICE—

Privilege issue *re*—

Orders dated 31st January 1981 of Superintendent of Police, Special Branch, C.I.D., directing his subordinates to watch the proceedings of both Houses of Legislature and submit reports ... 116—118

POLIO DISEASE—

Adjournment motion re spread of—in Madras City 229—233

PONNAIYAN, The Hon. Thiru C.—

Adjournment motion *re* D.M.K. Prisoners in Tiruchirappalli Jail, non—supply of sufficient water and flood to ... ... ... ... ... 399—403



PAGES

P—*cont*.

PONNAIYAN, The Hon. Thiru C.—*cont*.

Bills—

Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... 23, 29—32

Tax on Luxuries in Hotels and Lodging Houses Bill, 1981 ... ... ... ... 41, 57—59

PRISONERS—

Adjournment motion *re* non-supply of sufficient water and food to D. M. K.—in Tiruchirappalli Jail ... ... ... ... ... 397—403

Question *re* Naxalite—, in Tamil Nadu at the end of July 1980, number belonging to Tamil Nadu and other particulars ... ... ... ... 306—310

PRIVILEGE ISSUE *re*—

Orders, dated 31st January 1981 of Superintendent of Police, Special Branch, C. I. D., directing his subordinates to watch the proceedings of both Houses of Legislature and submit reports ... 116—118

PROHIBITION—

Question *re* number of cases registered against illicit distillers of arrack and alcohol and for transport and consumption of prohibited drinks from 3—10—1979 to 30—6—1980 ... ... 13—16

PROVIDENT FUND—

Question *re* improper maintenance of—accounts of Teachers of Panchayat Union Schools in Dindigul, Athoor and Thoppampatti ... ... ... 389

Q

QUESTIONS AND ANSWERS—

Lakshmikandhan, Thiru C. R.—

Question *re*—

Physical Directors with B.P. Ed. qualification working in High Schools appointment of—in Higher Secondary Schools and number of posts of—creted in Higher Secondary Schools during 1978—79, 1979—80 and 1980—81 ...103—105

PAGES

Q.—*cont*.

QUESTIONS AND ANSWERS—*cont*

Lakshmikandhan, Thiru C. R.—*cont*.

Question *re*—*cont*.

Physical Education Teachers, grant of Washing Allowance to ... ... ... ... 297—298

Leelavathi, Selvi A.—

Question *re* Physical Education Teachers, grant of Washing Allowance to ... ... 297—298

Manickam, Thiru P.—

Question *re* Chrome Leather Company, Chromepet, opening of—and taking over of—by Government ... ... ... ... 310—314

Meenakshisundaram, Thiru K.—

Question *re*—

Casual labourers of Public Works Department with more than ten years service, non-absorption in regular service Bill 31—7—1980 6 11, 12

Education Advance, concession provided for in G.O. Ms. No. 1954, Rural Development and Local Administration Department dated 13th December 1979 and G.O. Ms. No. 821 Finance (Salaries) Department dated 13th June 1979, non-availability of—to Panchayat Union Teachers ... ... ... 3—4

Headmasters of Panchayat Union Middle Schools, seniors getting less pay than juniors 387—389

Inducted Teachers working in Higher Secondary Schools, increase of Special pay from Rs. 25 to Rs. 50 to ... ... ... 107—109

Kandasami Committee on fixation of rent for Housing Board and Government Quarters, date of receipt of report and orders issued thereon ... ... ... ... ... 493—495

Payment of Rs. 10,000 to retiring Government servants, stage of scheme ... ... ... 224—225



PAGES

Q—*cont*.

QUESTIONS AND ANSWERS—*cont*.

Meenakshisundaram Thiru K.—*cont*

Question *re*—*cont*.

Tamil Pandits, employment opportunity for—in Hindu Religious and Charitable Endowments Department ... ... ... ... 1—3

Muthuswamy, Thiru S.—

Question *re* Education Board, constitution of ... 303—306

Ramamoorthy, Thiru K.—

Question *re*—

Artificial Insemination Centres and Cattle treated from 1977 to 1980, number of ... ... 392

House tax in Tindivanam Municipality, estimated loss of revenue due to delay in assessment of 222—223

Prohibition, number of cases registered against illicit distillers of arrack and alcohol and for transport and consumption of prohibited drinks from 3rd October 1978 to 30th June 1980 ... ... ... ... ... 13, 14

Salt manufacture, number of workers engaged in —in Tamil Nadu ... ... ... 390—391

Taluk Headquarters Hospitals in South Arcot district, number of out-patients treated from January 1978 to March 1979 in ... ... 390

Sankaralingam, Thiru M.—

Question *re*—

Big and small industries in Tamil Nadu affected by shortage of raw materials such as iron and steel from 1st January 1979 to 15th June 1980 and for want of coal, number of ... ... 505—512

Chinese fishing trawlers, sighting of—near Tuticorin seashore ... ... ... 383—385

Colachal Boat Clubs in Kanniyakumari district, number of persons retrenched from—as on 1st October 1980 among those employed under Half-a-Million Job Scheme ... 227—229

PAGES

Q—*cont*.

QUESTIONS AND ANSWERS—*cont*.

Sankaralingam, Thiru M—*cont*.

Question *re*—*cont*.

Couples of Inter-caste marriages between 1st January 1967 and 15th June 1980 granted gold medals, districtwise number of ... 391—392

Cyclone havoc in Kanniyakumari district, extent of damage of coconut and plantain groves and number of schools whose roofs were blown off during May 1979 ... ... 110—111

Deputy Tahsildars in Taluk Offices in Kanniyakumari district, non-sanction of additional posts of ... ... ... ... 102—103

Election to local bodies, Election Commission's recommendation to entrust conduct of—to it ... 496—498

Explosion in Batlagundu during August 1980, number dead and assistance given to families of deceased ... ... ... ... 102

Madras Zoo, proper care of wild animals in ... 500—502

Magisterial Head Assistant in Collectorate of Kanniyakumari district, upgradation of post of—to the cadre of Deputy Tahsildar as in other districts ... ... ... ... 498—499

Medical and Health Departments in Revenue districts, bifurcation of—and appointment of experts ... ... ... ... 7

Municipal Office, Salem, theft and sale of files in ... ... ... ... ... 502—504

Naxalite prisoners in Tamil Nadu at the end of July 1980, number belonging to Tamil Nadu and other particulars ... ... ... 306—310

Seasonal Allowance to teachers working at place of tourist importance like Courtallam, payment of ... ... ... ... 218—220



PAGES

Q.—*cont*.

QUESTIONS AND ANSWERS—*cont*.

Santosham, Thiru D.—

Question *re*—

Commerical Taxes Department, appearance of retired officers of—on behalf of assessees before Assessing Officers and Appellate authorities of ... ... ... ... 111—112

Converts to Christianity, grant of Backward Class concessions to ... ... 385—387

Criminal cases pending in Magisrates, Courts, adjournment consequent on drafting of Reserve Police escorts for other duties ... ... 11—112

Irrigation channel from Vaigai river connecting Viraganur and Nedungulam Villages, construction of ... ... ... ... 505

Law University, starting of ... ... ... ... 298—303

Motor Car allowance to Government servants who go on official tours in their own motor cars, rate of ... ... ... ... 225—226

Secondary Schools opened during 1978-79, non-sanction of non-teaching staff and equipment grants to—till 15th June 1980 ... ... 106—107

Sub-way near Central Bus Stand, Madurai for the benefit of pedestrians, construction of ... 221—222

Swaminathan, Thiru G.—

Question *re* Inducted Teachers in Municipal Higher Secondary School, Karur, stoppage of allowance to—for handling Higher Secondary classes ... 7

Thomas, Thiru P. R.—

Question *re*—

Family Planning operations, grant of incentive increments to teachers of Panchayat Unions who have undergone sterilization, tubectomy operations ... ... ... ... ... ... 4—7

Provident Fund acounts of teachers of Panchayat Union schools in Dindigul, Athoor and Thoppampatti, improper maintenance of ... ... 389

PAGES

Q—*cont.*


QUESTIONS AND ANSWERS—*cont.*

Thomas, Thiru P.R.—*cont.*

Question *re*—*cont*

Teachers in Kallar Reclamation Schools in Madurai district appointed under Half-a-Million Job Scheme, regularisation of services of ... 213—217

Teachers of Kallar Reclamation Schools in Madurai district, non-award of Selection Grade scale of of pay to ... ... ... ... ... 217—218

Teachers of Tiruppuvanam Panchayat Union schools, stoppage of payment of House Rent Allowance and City Compensatory Allowance to 381—382

Unstarred Questions Nos. 9 to 12, answers to—, laid on the table ... ... ... ... 476

R

RAGHAVANANDAM, The Hon. Thiru S.—

Adjournment motion *re* fast of workers in S.S.M. Processing Unit, Kumarapalayam, Salem district 394—395

Bills—

Apartment Ownership Bill, 1981 ... ... 425

Payment of Subsistence Allowance Bill, 1981 ... 538, 544, 545, 546, 547, 548, 549, 551, 553, 554, 555, 556, 557

State Housing Board (Amendment) Bill 1981 ... 412, 417, 418, 423—424

Protected drinking water, statement *re* scarcity of—in Vellore, North Arcot district ... ... 124, 125

RAJA MOHAMED, The Hon. Thiru K.—

Adjournment motion *re* death of 15 members of marriage party of Pandamangalam in boat tragedy in Salem District ... ... ... ... 514—515

Business of the House, change in the order of ... 22, 33




PAGES

R—*cont.*


RAJA MOHAMED, The Hon. Thiru K.—*cont.*

Information *re* non-attendance of an elected member in the House since his election ... ... ... 17

Privilege issue *re* orders, dated 31st January 1981 of Superintendent of Police, Special Branch, C.I.D. directing his subordinates to watch the proceedings of both Houses of Legislature and submit reports 116—117

Statement under rule 82 of the Council Rules *re* power consumption, regulation in respect of certain H.T. industries ... ... ... 411—412

Withering of crops in lands situated in taill end of channels like Thovalai channel, N.P. Channel due to non-flow of water as a result of low level of water in the reservoirs of Kanyakumari district, statement *re* ... ... ... 518, 519

RAMALINGAM, Thiru C.—

Bills—

Panchayats (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... ...438—443

Sales Tax Laws (Amendment and Repeal) Bill, 1981 ... ... ... ... 62—63, 64, 65—66

Statement on Adverse Seasonal Conditions prevailing in Tamil Nadu, discussion on ... ... ... 144—148

RAMAMOORTHY, Thiru K.—

Bills—

Agricultural Produce Market (Amendment) Bill, 1981 ... ... ... 34—36

Cattle Disease (Amendment) Bill, 1981 ... 285—286, 287, 288

Coimbaore Municipal Council (Appointment of Special Officer) Amendment Bill, 1981 ... 471

Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... 23—24

Cultivating Tenants Arrears of Rent (Relief) Amhendment Bill, 1981 ... ... ... 524, 525, 526, 529, 530, 531,

PAGES

R—*cont.*

RAMAMOORTHY, Thiru K.—*cont.*

Bills—*cont.*

Entertainments Tax (Amendment) Bill, 1981 ... 520
Madras City Municipal Corporation (Amendment) Bill, 1981 ... ... ... ... 473, 474
Municipal Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... 470
Panchayat Union Councils (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... 465—466
Panchayats (Amendment) Bill, 1981 ... ... 467
468
Panchayats (Appointment of Special Officers) Amendment Bill, 1981 ... ... ... 427—438, 439, 440, 441, 442, 463
Payment of Subsistence Allowance Bill, 1981 .. 539—540, 544, 545, 552, 553, 554, 555, 556
Registration (Tamil Nadu Amendment) Bill, 1981 253, 259 263, 277—278 277—280, 280, 281
Revenue Recovery (Amendment) Bill, 1981 ... 239—241, 246—248, 249
Sales Tax Laws (Amendment and Repeal) Bill, 1981 ... ... ... ... 60—62, 63, 64, 72, 73
State Housing Board (Amndment) Bill, 1981 ... 413, 419, 420—421, 424

Cattle Disease (Amendment) Bill, 1981 ... 192



PAGES

R—*cont.*

RAMAMOORTHY, Thiru K.—*cont.*

Bills—*cont.*

Tax on Luxuries in Hotels and Lodging Houses Bill, 1981 ... ... ... 41—44, 52, 53, 54, 55, 56

Information *re* non-attendance of an elected Member in the House since his election ... 16

Paddy and rice, calling Minister's attention to reported shortage of—from godowns of Chengalpattu district ... ... ... 404, 405—406

Resolution *re* elections to Legislative Council, voting rights of Primary School Teachers in ... 376, 377

Statement on Adverse Seasonal Conditions prevailing in Tamil Nadu, discussion on ... ... ... 126—129, 129—132, 141, 178, 184, 190

Walk-out by protesting against non-acceptance of amendments ... ... 474

REGISTRATION (TAMIL NADU AMENDMENT) BILL, 1981—

*See* Bills.

RESOLUTION *re*—

Elections to Legislative Council, voting rights of Primary School Teachers in .. .. 358—377

Schools and colleges run by local bodies and private managements, taking over of—by Government .. 325—353

Silver Jubilee at the end of 25th year of formation of Tamil Nadu as a separate State, celebration of .. ... ... ... 353—357

REVENUE RECOVERY (AMENDMENT) BILL, 1981—

*See* Bills.

PAGES

R—*cont*.

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—

Adjournment motion re—

Death of 15 persons due to capsizing of boat carrying a marriage party from Pandamangalam near Paramathi—Velur in Salem District—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Irrigation ... ... 513—515

Fast by workers of SSM Processing Unit, Kumarapalayam, Salem District—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Labour ... ... ... 393, 395

Situation arising out of non-availability of adequate water and food to D. M. K. undertrials in Trichy Jail—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Co-operation and Law ... ... ... 397, 403

Spread of Polio in Madras City—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Health ... ... ... ... 229, 233

Strike by students of Dr. Ambedkar Government Arts College pressing their 18 point demand—Consent to raising of the matter withheld after the statement of the Minister for Education ... 314, 318

Bills—

Amendent—Negative amendment disallowed ... 551

Ooath—taking by a Member—

On a point of order regarding a newly elected Member not having taken his oath, the Chairman observed—

''ஒருவர் இந்த அவையில் உறுப்பினராகத் தேர்ந்
தெடுக்கப்பட்டால், இவ்வளவு நாட்களுக்குள்
வந்து பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ள
வேண்டும் என்று விதிமுறை இருக்கிறது. அதற்குள்
அவர் வராவிட்டால் இயற்கையாகவே
அவருடைய பதவி காலாவதியாகிறது, அவ்வளவு
தான், அவைத் தலைவரும், இந்த அவையும்
அக்கறையைச் செலுத்த முடியும். அவர் எத்தனை
நாள் கழித்து வருகிறார் என்பதைப் பற்றி
அவைக்கு அக்கறையில்லை.''







PAGES

R—*cont*.

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIRS—*cont*.

Walk-out—

When some members walked out at the time of voting on a motion, the Chairman observed—

''வெளியேறுவதென்பது உறுப்பினர்களின் உரிமை.
ஆனால், வெளியேறுவதற்கு ஒரு இடத்தைத்
தேர்ந்தெடுக்க வேண்டும். ஏற்கனவே இப்படி
நடந்திருக்கிறதோ, என்னவோ, வாக்கெடுப்பின்
பொது வெளிநடப்பு செய்வது நல்லதொரு
சம்பிரதாயமல்ல என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.'' 474

S.

S. S. M. PROCESSING UNIT, KUMARAPALAYAM—

Adjournment motion *re* fast by workers in ... 393—395

SALES TAX LAWS (AMENDMENT AND REPEAL) BILL, 1981—

*See* Bills.

SALT—

Question *re* manufacture of—in Tamil Nadu, number of workers engaged in ... ... ... ... 390—391

SANKARALINGAM, THIRU M.—

Adjournment motion *re* D. M. K. prisoners in Tiruchirappalli Jail, non-supply of sufficient water and food to ... ... ... 398—399

Bills—

Entertainments Tax (Amendment) Bill, 1981 ... 521—522

Payment of Subsistence Allowance Bill, 1981 ... 541—544

Registration (Tamil Nadu Amendment) Bill, 1981 ... ... ... 263—267

Revenue Recovery (Amendment) Bill, 1981 ... 242—244

State Housing Board (Amendment) Bill, 1981 ... 415—417, 419, 421—423

Information *re* questions, delay in receipt of answers ... ... 319—320

S—*cont*.

PAGES

SANKARALINGAM, THIRU M.—*cont*.

Privilege issue *re* orders, dated 31st January 1981 of Superintendent of Police, Special Branch, C. I. D. directing his subordinates to watch the proceedings of both Houses of Legislature and submit reports ... ... ... ... ... 117, 118

Resolution *re*—

Elections to Legislative Council, voting rights of Primary School Teachers in ... ... 375

Schools and Colleges run by local bodies and private managements, taking over of—by Government ... ... 325—337

Statement on Adverse Seasonal Conditions prevailing in Tamil Nadu, discussion on ... 172—176

Walk-out by—protesting against postponement of election to Panchayat Unions ... 474

Withering of crops in lands situated in tail end of channels like Thovalai Channel, N. P. Channel due to non-flow of water as a result of low level of water in the reservoirs of Kanyakumari district, calling Minister's attention to ... 518, 519

SANTOSHAM, Thiru D.—

Hardship of students who failed in S. S. L. C. Examination held in October 1980 under XI Year School Education Scheme in completing the course and prosecuting their further studies, calling Minister's attention to ... ... ... ... 18

SCHOOLS—

Question *re* secondary schools opened during 1978-79, non-sanction of non-teaching staff and equipment grants to—till 15-6-1980 ... ... ... 106—107

Resolution *re* taking over of Colleges and—run by local bodies and private managements by Government ... ... ... ... ... 325—353

SEASONAL ALLOWANCE—

Question *re* payment of—to teachers working at places of tourist importance like Courtallam ... 218—220



PAGES

S—*cont*.

SEETHAPATHY, Thiru R. D.—

Arrest and detention of—M. L. C. announcement *re* ... ... ... ... ... ... 397

SENGOTTU VELAPPAN, Thiru S. C.—

Obituary reference *re* death of—, former Member of the Council ... ... ... ... 101

SILVER JUBILEE—

Resolution *re* celebration of—at the end of 25th year of formation of Tamil Nadu as a separate State ... ... ... 353—357

SLUM CLEARANCE BOARD—

Appointment of Thiru K. Ethiraj (Ex—M. L. A.) as non-official member of Tamil Nadu—, notification laid on the table ... ... 557

SOMASUNDARAM, The Hon. Thiru S. D.—

Bills—

Cultivating Tenants Arrears of Rent (Relief) Amendment Bill, 1981 ... ... ... 526, 528, 534—536

Cyclone and Flood Affected Areas Cultivating Tenants Arrears of Rent (Relief) Amendment Bill, 1981 ... ... ... 537, 538

Entertainments Tax (Amendment) Bill, 1981 ... 519, 520—521, 523, 524

Revenue Recovery (Amendment) Bill, 1981 ... 239, 244—246, 248, 249

Sales Tax Laws (Amendment and Repeal) Bill, 1981 ... ... 60, 72—76

Business of the House, change in the order of ... 238

Statement on Adverse Seasonal Conditions prevailing in Tamil Nadu, discussion on ... ... ... 169, 176—191

STATE HOUSING BOARD (AMENDMENT) BILL, 1981—

*See* Bills.

PAGES

S—*cont*.

STATEMENT UNDER RULE 82 OF COUNCIL RULES *re*—

Power Consumption, regulation in respect of certain H. T. Industries ... ... 410—412

SUBSISTENCE ALLOWANCE—

Non-payment of—to teaching and non-teaching staff under suspension in schools, Minister's attention called to ... ... 234—238

SUB-WAY—

Question *re* construction of—near Central Bus Stand, Madurai, for the benefit of pedestrians ... 221—222

T

TAMIL NADU AGRICULTURAL STAFF—

Minister's attention called to agitation by ... 20—22

TARA CHERIAN, Thirumathi—

Bill—Tax on Luxuries in Hotels and Lodging Houses Bill, 1981 ... ... ... ... ... 49—50

Statement on Adverse Seasonal Conditions prevailing in Tamil Nadu, discussion on ... ... 148—151, 182

TAX ON LUXURIES IN HOTELS AND LODGING HOUSES BILL, 1981—

Considered and returned to Assembly ... 41—60

*See* Bills.

TAX ON LUXURIES IN HOTELS AND LODGING HOUSES RULES, 1981—

Amendment to—, notification laid on the table ... 289

TEACHERS—

Eighth Standard, Minister's attention called to hardship caused to Middle School Teachers by shifting of—from Middle Schools to High Schools as per the steps taken by the Director of School Education ... ... 118—123

Question *re*—

Headmasters of Panchayat Union Middle Schools, seniors getting less pay than juniors ... 387—389



PAGES

T—*cont*.

TEACHERS—*cont*.

Question *re*—*cont*.

Inducted Teachers working in Higher Secondary Schools, increase of special pay from Rs. 25 to Rs. 50—to ... ... ... ... 107

Inducted—in Municipal Higher Secndary School, Karur stoppage of allowance to—for handling Higher Secondary classes ... 7

Non-availability of Education Advance Concession provided for in G.O. Ms. No. 1954, Rural Development and Local Administration Department, dated 13th December 1979 and G.O. Ms. No. 821, Finance (Salaries) Department, dated 13th June 1979 to Panchayat Union Teachers ... 3—4

Non-award of Selection Grade Scale of Pay to—of Kallar Reclamation Schools in Madurai district ... ... ... ... 217—218

Payment of Seasonal Allowance to—working at places of Tourist importance like Courtallam ... 218—228

Physical Directors with B. P. Ed. qualification working in High Schools, appointment of—in Higher Secondary Schools and number of posts of—created in Higher Secondary Schools during 1978-79, 1979-80, and 1980-81 ... ... 103—105

Physical Eduaction—, grant of washing allowance to ... ... ... ... ... 297—298

Provident Fund Accounts of—of Panchayat Union Schools in Dindigul, Athoor and Thoppampatti, improper maintenance of ... ... ... 389

Regularisation of services of—appointed in Kallar Reclamation Schools in Madurai District under Half-a-Million Job Scheme ... ... 213—217

Stoppage of payment of House Rent Allowance and City Compensatory Allowance to—of Tiruppuvanam Panchayat Union Schools ... ... 381—382

Tamil Pandits, employment opportunity of—in Hindu Religious and Charitable Endowments Department ... ... ... ... 1—3

PAGES

T—*cont*.

TEACHERS—*cont*.

Question *re*—cont.

Resolution *re* Elections to Legislative Council, voting rights of Primary School—in ... ... 358—377

Thiyagaraya Nagar Higher Secondary School, Madras, calling Minister's attention to agitation of—condemning removal of a teacher, Thiru P. T. Arasu in ... ... ... ...320—323

Teaching and non-teaching staff under suspension in schools, Minister's attention called to non-payment of Subsistence Allowance to ... ... 234—238

THOMAS, THIRU P. R.—

Bill—Registration (Tamil Nadu Amendment) Bill, 1981 ... ... ... 250—252, 276—277, 280

Expensive Locality Allowance, calling Minister's attention to stoppage of—to Government servants and teachers in Mandapam Camp and Rameswaram ... ... 407—408

Hardship of students who failed in S. S. L. C. Examination held in October 1980 under XI year School Education Scheme in completing the Course and prosecution their further studies, calling Minister's attention to ... ... ... 18—19

T. Nagar Higher Secondary School, Madras, calling Minister's attention to teacher, Thiru P. T. condemning removal of teacher, Thiru P. T. Arasu in ... ... ... 321—322

Teaching and non-teaching staff under suspension in schools, calling Minister's attention to non-payment of subsistence allowance to ... ... 234

TOWN AND COUNTRY PLANNING ACT, 1971—

Certain variations to Nungambakkam Central Area Twon Planning Scheme of Madras City, notification laid on the table ... ... ... 558

TRANSPORT—

Anna Transport Corporation Limited, Seventh Annual Report for 1979, laid on the table ... 192



PAGES

*T—cont*.

TRANSPORT—*cont*.

Kattabomman Transport Corporation Limited, Fifth Annual Report for 1979, laid on the table ... 192

Tamil Nadu Goods Transport Corporation Limited, Third Annual Report for 1978, laid on the table ... 192

Thanthai Periyar Transport Corporation Limited, Fourth Annual Report for 1979, laid on the table ... ... ... 192

V

UNIVERSITIES—

Question *re* Law University, starting of ... ... 298—303

VEERAPPAN, The Hon. THIRU R. M.—

Resolution *re* Silver Jubilee at the end of 25th year of formation of Tamil Nadu as a separate State, celebration of ... ... 356—357

VICE-CHAIRMAN (Dr. T. R. JANARTHANAM)—

Resolution *re* elections to Legislative Council, voting right of Primary School Teachers in ... ... 363

VICE-CHAIRMAN (THIRU K. RAMAMOORTHY)

Resolution *re* voting rights of Primary School Teachers in Legislative Council Elections ... ... 369, 370

W

WALK-OUT—

Protesting against postponement of elections to local bodies ... ... 474

WATER SUPPLY—

Protected drinking water, Minister's attention called to scarcity of—in Vellore, North Arcot district ... 123—125

WITHERING OF CROPS—

Minister's attention called to—in lands situated in tail end of channels like Thovalai channel N. P. Channel due to non-flow of water as a result of low level of water in the reservoirs of Kanyakumari district ... ... 518—519

122027

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### *In Madras City.*

1. Account Test Institute, Egmore, Madras-8.
2. The City Book Co., Madras-4.
3. Higginbothams (Private) Ltd., Madras-2.
4. P. Varadachary & Co., Madras-1.
5. C. Subbiah Chetty & Co., Madras-5.
6. The Universal Book House, Moore Market, Madras-3.
7. C. Sitaraman & Co., Madras-14.
8. Mohan Pathippagam & Book Depot., Madras-5.
9. C. Venkatesam Chetty & Co., No. 8-C, Pycrofts Road, Madras-5.
10. TheSouth India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelvelly) Ltd., Madras-1.
11. The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12. New Century Book House (Private) Ltd., Madras-2.
13. Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### *In Moffussil of Tamil Nadu.*

1. A. Venkatasubban & Co., Vellore (North Arcot District).
2. Bharathamatha Book Depot., Thanjavur (Thanjavur District).
3. P. V. Nathan & Co., Kumbakonam (Thanjavur District).
4. Appar Book Stall, Thanjavur.
5. Palaniappa Bros., Tiruchirappalli-2.
6. S. R. Subramania Pillai, Tirunelveli Junction
7. B. Aruldass, Villupuram (South Arcot District).
8. Vasantham Stores, Book Sellers, No. 9/31, Cross Cut Road, Coimbatore-12.
9. V. B. Ganesan, Villupuram (South Arcot District).
10. Mercury Book Co., No. 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11. S. M. Jeganathan, Book House, P. S. No. 327, No. 35, Nandhi Koil Street, Tiruchirappalli-2.
12. Ganesh Stores, South Car Street, Sivakasi.
13. Mary Martin, Book Sellers, Kotagiri (The Nilgiris).
14. A. K. Chandriah Chettiar and Sons, Salem.
15. Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem.
16. Meenakshi Pathippagam, Pudukkottai.
17. K. V. Narayana Iyer Sons, Dindigul (Madurai District).
18. Jayakumari Stores, Nagarcoil (Kanyakumari District).
19. Baby Stores, Book Sellers, Villupuram (South Arcot District).
20. Dinamani Stores, No. 8/1, Old Post Office Road, Coimbatore-18.
21. Bharathi Puthaganilayam, Publishers and Book Sellers, No. 1-B, Town Hall Road, Madurai-1.
22. Kumaran Book Depot., Book Sellers, Erode-1.
23. Vela Book Company, No. 4, Annaji Rao Street, Erode-1.
24. Radhamani Stores, No. 6-A, Raja Street, Coimbatore-1.
25. Ajantha Book Centre, Salem.
26. Sri Vidya, No. 63, Tennore High Road, Tiruchirappalli-17.

### *In other States.*

1. Jain Book Agency, New Delhi-1.
2. International Book House, Trivandrum.
3. Firma. K. L. Mukhopadhyay, Calcutta-12.
4. The Book Syndicate, Hyderabad-1.
5. Labour Law Publications, Hyderabad.
6. Puthaghalayam, Pondicherry.
7. Prabhu Book Service, Gurgaon, Haryana.
8. K. P. Bagchi & Company, No. 285, B. B. Ganguli Street, Calcutta-12.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE CHAIRMAN